# இலக்கண வரலாறு

மணிவாசகர் பதிப்பகம்

புலவர் இரா. இளங்குமரன்

# இலக்கண வரலாறு

புலவர் இரா. இளங்குமரன்

மணிவாசகர் பதிப்பகம்
55, லிங்கி தெரு, சென்னை-600 001.

முதற்பதிப்பு : ஜூலை, 1988

பக்கங்கள் 448 + 44

விலை ரூ. 40-00

கிடைக்குமிடம்
மணிவாசகர் நூலகம்
12-B, மேல சன்னதி, சிதம்பரம்-608001
14, சுங்குராம் தெரு, பாரிமுனை, சென்னை-600001
55, லிங்கிச் செட்டித் தெரு, சென்னை-600001
28-A, வடக்கு ஆவணி மூல வீதி, மதுரை-625001
3/4 ராஜ வீதி கோயமுத்தூர்-641001
20, நந்திக்கோயில் தெரு, திருச்சி-620002
சென்னை போன் : 512996, சிதம்பரம் போன் : 2799

அச்சிட்டோர்: கற்பகம் அச்சகம், சென்னை-600 002

# இலக்கணச் செல்வம்

ச. மெய்யப்பன், எம். ஏ.,

அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

மணிவாசகர் பதிப்பகம் நல்ல நூல்களை நாட்டுக்கு வழங்கும் பதிப்பகம் என்பது வரலாறு ஆகிவருகிறது. துறைதோறும் சிறந்த நூல்களைப் பதிப்பித்துப் பலரின் பாராட்டையும் பரிசையும் குவித்து வெற்றிக் கொடி நாட்டி வீறுநடை போடுகிறது. அடிப்படை நூல்கள் பல வெளியிட்டுச் சிறந்த மொழிப்பணி ஆற்றி வருகிறது.

தமிழ்மொழி வரலாறு, நாட்டுப்புற இயல் வரலாறு, திருக்கோயில் வரலாறு, சிற்றிலக்கிய வரலாறு, தமிழகக் கலை வரலாறு, தமிழ் இலக்கிய வரலாறு என வரலாற்று வரிசை வெளியிட்டு மொழிப்பதிவேடுகள் பல பதிப்பித்த பெருமை மணிவாசகர் பதிப்பகத்தின் தனிச் சிறப்பாகும்.

இலக்கிய வரலாற்றுடன் இலக்கண வரலாறும் வெளியிடும் பேறும் பெற்றுத் திகழ்கிறது. தமிழில் இலக்கியவரலாறுகள் பல உள:

| | |
|---|---|
| கா. சுப்பிரமணியபிள்ளை | எம். ஆர். அடைக்கலசாமி |
| சீனிவாச பிள்ளை | சி. பாலசுப்பிரமணியம் |
| பூரணலிங்கம் பிள்ளை | மது. ச. விமலானந்தம் |
| வையாபுரிப் பிள்ளை | தமிழண்ணல் |
| தி. வை. சாதசிவ பண்டாரத்தார் | ஸ்ரீசந்திரன் |
| | மு. கோவிந்தசாமி |
| ஈ. எஸ். வரதராச அய்யர் | ஜேசுதாஸ் |
| ஔவை துரைசாமி பிள்ளை | சாமி முத்து |
| மேயர் ராமசாமி நாயுடு | அருள்சாமி |
| டாக்டர் மு. வ. | பூவண்ணன் |
| மு. அருணாசலம் | சோமடீ இளவரசு |
| சோமசுந்தர தேசிகர் | ரா. சீனிவாசன் |

ஆகியோர் இலக்கிய வரலாறு எழுதியுள்ளனர்.

இலக்கண வரலாறு பேராசிரியர் **கவிஞர் மு. அண்ணாமலை** அவர்கள் வகுத்துக் கொடுத்த திட்டத்தின்படி என் இனிய நண்பர் **சோம. இளவரசு** அவர்கள் முதன் முதலில் 1961-இல் சிறப்பாக எழுதினார்கள். அதனைத் தொடர்ந்து இப்பொழுது நீண்ட நெடிய இடைவெளிக்குப்பின் **அறிஞர் இளங்குமரன்** அவர்கள் மிக விரிவாக இலக்கண வரலாறு எழுதியுள்ளார்கள். அரிய நூல்கள் வெளியிடும் திட்டத்தில் இந்த விரிவான இலக்கண வரலாறு வெளிவருகிறது. ஆராய்ச்சிக்கு அருந்துணையாக அமையும் இவ்வகை நூல்களை வெளியிடுவதன் மூலம்தான் பதிப்பகம் தமிழ் மொழிக்குத் தலையாய தொண்டு செய்ய முடியும் என்று கருதுகிறேன். நல்லாசிரியர் எழுதும் அரிய நூல்களைத் தமிழ் கூறும் நல்லுலகத்திற்கு இடையறாது வழங்கவேண்டும் என்ற இனிய இலட்சிய நோக்கில் இலக்கண வரலாறு வெளியிடப் பெறுகிறது.

இந்நூலில் இலக்கணத்தின் இயல்பும் பயனும் மொழிக் காப்பும் மிக விரிவாக நுட்பமாக விளம்பப்பெற்றுள்ளன. முந்து நூல்களின் அமைப்பும் அழகும் அழகாக எடுத்துரைக்கப் பெற்றுள்ளன. மறைந்த இலக்கணங்களின் மாட்சியும் வழக்கில் இல்லாத இலக்கண நூல்களின் இயல்பும் இலக்கணம் படைத்த ஆசிரியர்களின் பேரறிவும் பேராற்றலும் நன்கு விளக்கப்பெற்றுள்ளன. இலக்கணங்களைத் தம் உரைகள் மூலம் காத்த உரையாசிரியர்களின் உயர்வற உயர்ந்த அறிவு நலன்களையும் ஆசிரியர் தக்க சான்றுகளுடன் நிறுவிய திறன் கற்கும்தோறும் கற்கும் தோறும் களிப்பு நல்குவன. வளமான மொழிக்கு அமைந்த பல்வகை இலக்கணங்களின் வரலாற்றையும் வளமான தமிழில் வகுத்தளித்து வழங்கியுள்ளார். அவற்றின் சீர்மையும் சிறப்பும் விளக்கப் பெற்றுள்ளன. தமிழ் இலக்கணம் வளர்ந்த வரலாறு வரலாற்று நோக்கில் ஆராயப் பெற்றுள்ளது. ஒரு சீரிய இலக்கண வரலாறு எவ்வாறு

அமையவேண்டுமோ அவ்விலக்கணங்களுக்கு ஏற்ப இவ்விலக்கண வரலாறு அமைந்துள்ளது.

அண்ணாமலைப் பல்கலைக் கழகம் இலக்கண வல்லுநர்களின் மொழி இயல் அறிஞர்களின் கூட்டு முயற்சியால் ஆறு இலக்கணக் கருத்தரங்குகளைச் சீரோடும் சிறப்போடும் நடத்தியது. கருத்தரங்கில் பங்குபெறும் போதெல்லாம் விரிவான இலக்கண வரலாற்றின் வளர்ச்சியை நான் உணர்ந்தேன். இலக்கணக் கொள்கை களின் வளர்ச்சியை வரலாற்று முறையில் விளக்கும் நூல் தேவை என்பதையும் நன்கு உணர்ந்தேன்.

பல்கலைக் கழகத் தமிழாசிரியர் மன்றத்தின் வழி இருபதாண்டுகளாக வெளிவரும் ஐம்பத்தாறு ஆய்வுக் கோவைகளிலும் இலக்கணம் உரையாசிரியர் பற்றிய பல நூறு சிந்தனைகள் சிதறிக் கிடப்பதையும் சிந்தித்தேன்.

காலத்தின் வளர்ச்சிக்கேற்ப அறிவியல் அணுகு முறை யில் இலக்கண வரலாறு ஒன்று உருப்பெறுதல் நன்று என்று கருதி அதற்குரியார் யாரெனத்தேடி இளங்குமர னாரே தக்கார் எனத் தேர்ந்து இப்பெரும் பணியினைச் செய்து தரும்படி வேண்டிக்கொண்டேன். இலக்கண வரலாறு காலத்தின் கட்டாயம். இற்றை ஆய்வாளர் களுக்குக் கருத்துச் சுரக்கும் அமுத சுரபியாகும்.

இந்நூலை எழுதிய அறிஞர் இளங்குமரன் அவர்கள் இலக்கணப் புலவர். இலக்கியச் செல்வர். தமிழ் மரபு காக்கும் மரபினர். நுழைபுலம் மிக்க ஆய்வாளர். கற்றது விரித்துரைக்க வல்ல பேராசிரியர். கற்றபடி நிற்கும் சான்றோர். குறள்கூறும் செந்நெறியில் ஒழுகும் செம்மல். பீடு நடையினர். பெருமித வாழ்வினர். தமிழ்ப்பணி யையே தலையாய பணியாகக் கொண்டு வாழும் திருமகனார். மொழி ஞாயிறு பாவாணர் வழியில் வேர்ச் சொல் ஆராயும் வித்தகர். தமிழ்க்கல்வி இயக்கம் கண்ட தலைமைசால் பேராசிரியர் **செம்மல் வ.சுப.மாணிக்கனார்**

வழியில் சொல்லாக்கம் செய்பவர். பேச்சால் எழுத்தால் வாழ்வில் இளைஞர்களுக்கு வழிகாட்டும் ஒளிவிளக்கு. அவர்கள் எழுதிய இலக்கியவகை அகராதி சிற்றிலக்கிய வரலாற்று ஆராய்ச்சிக்குக் கிடைத்த கருவூலம்; கருத்துக் களஞ்சியம்.

பாவாணர் ஆராய்ச்சி நூலகம் நடத்துபவர் இளங் குமரனார். அவரே ஒரு நடமாடும் நூலகம். தொடர்ந்து தமது அரிய ஆய்வு நூல்களை வெளியிட வாய்ப்பளித்து வரும் ஆசிரியப் பெருமகனார்க்கு நெஞ்சார்ந்த நன்றி.

இவ்வாய்வு நூலுக்கு **மூதறிஞர் வ. சுப. மாணிக்கனார்** அவர்கள் மிக நுட்பமான ஆராய்ச்சி முன்னுரை வழங்கி யுள்ளார்கள். இலக்கண வரலாறு பெற்ற தமிழின் சிறப்பினை அவர்கள் எடுத்து விளக்கும் திறன் தனி நூலாக விரியும் தகைமை சான்றது. நாளும் தமிழ் வளர்க்கும் தமிழ்ப்பல்கலைக் கழகத்தில் தொல்காப்பியத் தகைஞராக அவர்கள் விளங்குகிறார்கள். எழுத்ததிகாரத் திற்குத் தெளிவான விளக்கவுரை வரைந்துள்ளார்கள். இலக்கணப் புலமையில் ஒப்பாரும் மிக்காரும் இன்றி, தனிச்சிறப்புடன் விளங்கும் தமிழியக்க ஆளுநர் எங்கள் பேராசிரியர் வ. சுப. மா. அவர்களின் ஆய்வுரை, நூலுக்கு நுழைவாயிலாக, தோரண வாயிலாக அமைந்துள்ளது.

'உரையாசிரியர்' என்னும் பெருநூலைப் படைத்து, பேரும் புகழும் பெற்றுப் பொன்னும் பொருளும் பெற்ற சிந்தனையாளர் **பேராசிரியர் மு. வை. அரவிந்தன்** அவர்கள் ஆராய்ச்சி உரை வழங்கியுள்ளார்கள். மதி நுட்பம் நூலோடு வாய்ந்த அரவிந்தன் நூலின் பன்முக நலன்களை மனம் உவந்து பாராட்டியுள்ளார். நூலின் கட்டமைப்பை, கருத்துகளின் வலிமையைச் சமன்செய்து சீர்தூக்கியுள்ள திறன் வியந்து பாராட்டுதற்குரியது. இது போன்ற பெருநூல்கள் வெளியிடத் தமிழ் மக்களின் தொடர்ந்த நல்லாதரவை வேண்டுகிறோம்.

# அணிந்துரை

மூதறிஞர் செம்மல்

**வ. சுப. மாணிக்கம்** பிஎச்.டி., டி.லிட்டு.,

எல்லா மொழிக்கும் இலக்கிய வரலாறு எழுதமுடியும். ஆனால் இலக்கண வரலாறு எழுதும் தகுதிப்பேறு ஒரு கை விரலினும் குறைந்த மொழிகட்கே யுண்டு. வடமொழியும் தமிழும் இலக்கண வரலாறு எழுதத்தக்க அருட்செல்வ முடையவை. இவ்விரண்டனுள் வடமொழிக்கோ இலக்கண வரலாற்றில் வளர்ச்சியில்லை. வழக்கிலா மொழி வடமொழியாதலின், பழையன கழிதல் புதியன புகுதல் என்ற இலக்கணப்போக்கு வரவிற்கு இடனில்லை. அதன் வரலாறு பல நூற்றாண்டுகட்கு முன்பே நடுகல் போல நின்றுவிட்டது. சில இந்திய மொழிகட்கு இலக்கண வரலாறு கி. பி. பத்தாம் நூற்றாண்டுக்குப் பிந்திய தாகும். ஞால மொழியுள்ளும் இந்திய மொழியுள்ளும் தொன்மை புதுமை இடையறவு படாத்தன்மை எல்லாம் தழுவிய இலக்கண வரலாறு தமிழ்மொழி ஒன்றுக்கே உரியது.

தமிழ் மொழிக்கு இலக்கிய வரலாறு இலக்கண வரலாறு என்ற இரட்டையாறு என்று தோன்றியதெனக் காலக்குறி செய்வதற்கில்லை. இறையனார் அகப்பொரு ளுரையில் வரும் சங்கக் குறிப்புக்கள் மிகையன என்றாலுங் கூட, பொதுப்பட்ட உண்மைகளை ஏற்றுக் கொள்ளத்

தான் வேண்டும். தலைச் சங்கத்துக்கு நூல் அகத்தியம் எனவும், இடைச்சங்கத்துக்கு நூல்கள் அகத்தியம் தொல் காப்பியம் மாபுராணம் இசை நுணுக்கம் பூதபுராணம் எனவும், கடைச்சங்கத்துக்கு நூல்கள் அகத்தியம் தொல் காப்பியம் எனவும் இலக்கண நூல்களைச் சுட்டுவதி லிருந்தே தமிழின் இலக்கணத் தொன்மையும் ஆதிக்கமும் போதரும். மேலும் இன்றுள்ள தொல்பனுவல்களுள் தொல்லிது தொல்காப்பியம் என்பதனால், இலக்கியப் பனுவல்களைக் காட்டிலும் இலக்கண நூலைப் போற்றிக் காத்த புலவோர்தம் உரப்பாடு பெறப்படும். காலத்தால் அழியாது சீரிளமைத் திறங்குன்றாது இன்றும் விளங்கும் கன்னி மொழியாகத் தமிழ் வாழ்வதற்கு, வரம்புடைய இலக்கணக் கரைகளே வேலியாகும். இவ்வுண்மையை உணரமாட்டாத அறிவறைகள் இலக்கணக் கரைகளை உடைத்து ஏனைச் சின்மொழிகளைப்போலச் செந்தமிழை யும் கறைப்படுத்த முயல்வர்; இதுவே முற்போக்கு எனவும் மருட்டுவர். இங்ஙனம் மயங்குவாரை இலக்கணப் பெரும் புலவர் இளங்குமரன் சீர்பட எழுதியிருக்கும் இந்த இலக் கண வரலாறு திருத்தும், உண்மையுணர்த்தும் என நம்பு கின்றேன்.

பல இலக்கியப் பனுவல்கள் அழிந்தன, அழிக்கப் பட்டன போலவே பல இலக்கண நூல்களும் உரைகளும் அழிவுபட்டன. அழிவுற்ற நூல்களுள் பெயர்களும் தெரி யாமற் போயினவும் உண்டு. இவை தகுதியின்மையால் இறந்தன என்று ஊகிப்பதற்கில்லை; படியெடுத்துக் காப்பார் இன்மையாலும் அழியப் பார்ப்பார் இருந்தமை யாலும் புதையுண்டன. இன்றுங் கூட அச்சிட்ட பலதமிழ் நூல்களின் கதி இதுவே.

நல்லூழால் நமக்குக் கிடைத்திருக்கும் இலக்கண நூல்களும் உரைகளும் தஞ்சைப் பெருவுடையார் கோபுரம் கோயில் போலத் தமிழின் இலக்கணச் சிறப் பினைக் காட்டும் சான்றுகளாக உள. இவற்றுள் தொல்

காப்பியத்தை ஒரு தட்டிலும், ஏனைய நூல்களையெல்லாம் மற்றொரு தட்டிலும் வைத்துச் சீர்தூக்கினால், தொல்காப்பியத்தட்டே பொருட்பளுவால் தாழ்ந்து சிறக்கும் என்பது வெளிப்படை. ஆதலின் இவ்விலக்கண வரலாற்றில் தொல்காப்பியம் 130 பக்கங்கள் இடங் கொண்டிருப்பது உரிமையாகும்.

புலவர் இளங்குமரன் ஆழ்ந்த பலதுறைப் புலமையோடு தமிழ்ச்சொற்களின் வேர்களையும் வேரொப்புமைகளையும் கூர்ந்து ஆராயும் நுண்மதி பெற்றவர்; சிதறிக் கிடந்த நூற்பாக்களைத் தேடித்திரட்டிக் காக்கை பாடினியம் என்ற நூலை உருப்படியாக்கி, விரிந்த உரையும் வரைந்த இலக்கணப் பணியாளர். தமிழின் மொழியாற்றலை உறுதிப்படுத்தும் திறம் இவர் எழுத்தாண்மைக்கு உண்டு. உள்ளும் புறமும் ஒத்த தமிழ்த் தொண்டர் இவர். இலக்கண வரலாறு எனப்பெயரிய இந் நூற்கண், முந்துநூல், அகத்தியர், தொல்காப்பியர் சமயம், ஐந்திரம், இளம்பூரணர் சமயம், நச்சினார்க்கினியரின் மாட்டேறு, தெய்வச்சிலையாரின் உரைத்தன்மை, நாவலர் புத்துரை, குழந்தையுரையின் வைப்புக்கேடு என்ற பல அரில்களை எடுத்துக்காட்டி விளக்கியிருக்கக் காண்கின்றோம்.

'பிந்து நூல்களின் முந்து நூல்கள்' என்பது சுவையான அவலமான தலைப்பாகும். பாதி மறைந்தும் பாதி மறையாமலும் உள்ள அவிநயம் முதலான நூல்கள் இவ்வகையைச் சார்ந்தன. தொல்காப்பியத்தை அடுத்து இலக்கணிகளைக் கவர்ந்த நூல் நன்னூல் ஆதலின் இவ்வரலாறு அதற்குச் சிறப்பிடம் அளித்திருப்பது பொருத்தமே. உரைபெற்றது, உரைபெறாதது; பரவியது, பரவாதது; சிறப்பினது, சிறப்பிலது; யாப்பு வடிவினது, உரைவடிவினது; முழுமையது, குறையது என்ற பாகுபாடுபாராமல் எல்லா இலக்கண நூல்களையும் இவ்வரலாற்றில் தழுவியிருப்பது ஆசிரியரின் சமனிலைக்குச் சான்றாகும்.

தமிழிலக்கண வரலாறு எழுதுவோர் அகத்தியம் தொடங்கி எழுதுவது ஒரு மரபாக வந்திருக்கின்றது. இது எனக்கு உடன்பாடன்று. தொல்காப்பியத்துக்கு முன்பு இலக்கண நூல்கள் பலவிருந்தன. இதில் ஐயமில்லை. ஆனால் அகத்தியம் என ஒரு நூல் இருந்தது. அதுவே முந்து நூல் எனப் பனம்பாரனாரால் சுட்டப்பட்டது என்ற வழிவழிக் கருத்துக்கு என்னானும் கரியில்லை. ஒப்பிலா மலடி என்றாங்கு, இல்லை என்று சொல்ல வேண்டிய ஒரு நூலுக்கு மகத்துவம் வாய்ந்த அகத்தியம் என்று பெயர் கூறித் தமிழிலக்கண வரலாற்றைப் புராண மயமாகத் தொடங்குவதைக் காட்டிலும், காலத்தை வென்று வாழும் தொன்மையான தொல்காப்பியத்தை முதலாவதாக வைத்து இவ்வரலாறு தொடங்கப்படுவதே அறிவுமுறை என்பது என் கருத்து.

தமிழிலக்கண நூல்கள் நூற்பாவும் உரையுமாக இருநூற்றுக்கு மேலாக இருந்தாலும், அற நூல்களில் திருக்குறள்போல, சில இலக்கண நூல்கள் தரமிக்கவை, அடிப்படையானவை, களஞ்சியச் செல்வமுடையவை, என்றும் குறிக்கொண்டு போற்றத்தக்கவை. தொல்காப்பியமும் அதன் தொல்லுரைகளும் ஒருபுறம் இருப்ப, நன்னூலும் அதன் உரைகளும் உரை விளக்கங்களும் இன்னொருபுறம் இருப்ப, ஏனையவற்றுள் வீரசோழியமும் யாப்பருங்கலவுரையும் நன்கு மதிக்கத்தக்கவை; ‘வடநூல் மரபும் புகன்று கொண்டே’ என்று வெளிப்படச் சொன்னபடி, வீரசோழியம் சொல்லாலும் பொருளமைதியாலும் வடமொழித் தாக்கம் உடையதாக இருந்தாலும், அதனை இருமொழி ஒப்பிய நூல் என மதிக்கவேண்டும். இந்நோக்கில் அதன் வெற்றியைக் காண்பது நன்றாகும். பிரயோக விவேக நூலார் வன்கண்மையாகச் செய்தது போல், தமிழின் அடிப்படைகளைப் புத்த மித்திரனார் வடமொழிக்கு அடிமைப்படுத்தவில்லை. ‘சார்ந்த வழக் கொடு தப்பா வடவெழுத்தைத் தவிர்ந்து தேர்ந்துணர்

வார்க்கும் இனிமையைத் தந்து' என்ற காரிகையால் வீர சோழியத்தின் தமிழ்க்காப்பு தெளிவாகும்.

தமிழிலக்கணச் செல்வங்களுள் யாப்பருங்கலவுரைக்கு ஈடிணையில்லை. இறையனாரகப்பொருள் நூல் அதன் உரையால் மன்னியதுபோல, யாப்பருங்கலமும் அதன் பேருரையால் மன்னலாயிற்று. எத்துணையோ இலக்கண நூல்கள் மறைந்தொழியினும் அந்த இழப்புக்கெல்லாம் ஈடு செய்யவல்லதாக இக்கலத்தின் உரை விளங்குகின்றது. இவ்வுரை கல்லாதவன் தமிழிலக்கண வாயில் நுழை யாதவன். இந்த உரை நூல் கிடைத்திராவிட்டால் தமிழிலக்கண வரலாறு விரிவாக எழுதமுடியுமா? இலக் கணக் கொள்கைகள் தொடைவிடையாட முடியுமா? மறைந்துபோன இலக்கணங்களேயன்றி இலக்கியப் பெயர் களும் செய்யுட்களும் ஒளிப்பட்டிருக்குமா? எவ்வளவு வரலாற்றுக் குறிப்புக்கள், இசைப்பாடல்கள், யாப்பு வழக்குகள், நாட்டுப்பாடல்கள் இவ்வுரையில் கொட்டிக் கிடக்கின்றன! 'அறிதோறு அறியாமை கண்டற்றால்' என்ற கருத்து இவ்வுரையைக் கற்குங்கால் தெரியவரும். இத்தகைய பெறலரும் உரை பன்னோக்கில் இன்னும் முழுமையாக ஆராயப்படவில்லை. இது நம் ஆய்வுப் போக்கின் நடுக்கத்தையும் நொசிவையும் வெளிப்படுத்து கின்றது.

புதிய தமிழுக்கு ஆக்கமும் நல்ல நூலாளர்க்கு ஊக்க மும் வழங்கி, மொழித் தொண்டாற்றி முன்னணியில் நிற்கும் மணிவாசகர் நூலகம் இலக்கண வரலாறுபோலும் தகுதி வாய்ந்த நூல் வரிசைகளைத் தொடர்ந்து பதிப் பித்துப் பல் புகழ் பெறுக என வழுத்துகின்றேன்.

ந ஆனி உ௲கக }
17-6-1988 }

வ. சுப. மாணிக்கம்

# இலக்கண வரலாறு

## ஆய்வுரை

### பேராசிரியர் மு. வை. அரவிந்தன்

தமிழில் இலக்கிய வரலாற்று நூல்கள் பல தோன்றி யுள்ளன. ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்தே அறிஞர் பலர் தமிழிலக்கிய வரலாற்றுச் சிந்தனைகளை உருவாக்கிக் கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளனர். ஆனால், இன்றுவரை 'இலக்கண வரலாறு' ஒன்று மட்டுமே வெளிவந்துள்ளது. அந்த நூலை 1961ஆம் ஆண்டில் தமிழறிஞர் சோமு. இளவரசு அவர்கள் எழுதி னார்கள். அதனைப் பேராசிரியர் மு. அண்ணாமலை அவர்கள், தமது தொல்காப்பியர் பதிப்பகத்தின் வாயிலாக வெளியிட்டுப் பெருமைப் படுத்தினார்கள்.

புலவர் சோமு. இளவரசு இயற்றிய இலக்கண வரலாறு முதல்நூலாக இருந்தாலும், சிறந்த முறையில் அமைந்தது. அதனை அறிஞர்கள் போற்றினர்; இளைஞர்கள் கற்றுப் பயன்பெற்றனர்; ஆராய்ச்சி யாளர்கள் மேற்கோள் காட்டினர்.

அது தோன்றி 25 ஆண்டுக்கால இடைவெளிக்குப் பின்னர், இப்போது இரண்டாவது நூலாக 'இலக்கண வரலாறு' வெளிவந்துள்ளது. இதனை இயற்றியவர் ஆராய்ச்சி அறிஞர் இளங்குமரன் அவர்கள்.

தமிழ்நாட்டில் ஒரு சிறந்த பல்கலைக்கழகம் போல் செயலாற்றிப் பல நல்ல நூல்களைத் தமிழ் மக்களுக்கு வழங்கி வருகின்ற மணிவாசகர் பதிப்பகம். இதனை

வெளியிட்டுச் சாதனை புரிந்துள்ளது; தமிழ்த் தொண்டில் 'ஒரு மைல் கல்'லைப் பதிய வைத்துள்ளது.

## 1. நூலாசிரியரின் தகுதிகள்

இந்த நூலின் ஆசிரியரான புலவர் இளங்குமரன், முறையாகத் தமிழ் பயின்றவர். தனித் தமிழ்ப்பற்று மிக்கவர். கல்வியைச் செல்வமாக மதித்து, கற்றோரைச் சுற்றமாகக் கொண்டு வாழ்பவர்.

இவர், தமிழ் நூற் பரப்பின் எல்லையைக் கண்டவர்; இலக்கிய இலக்கணச் சிந்தனைகளில் மூழ்கி முத்து எடுத்தவர்; ஆராய்ச்சி உலகில் தமக்கென நெறி முறைகளை அமைத்துக் கொண்டவர்; எதைக் கூறினாலும் தெளிவாகவும் முரண் இன்றியும் கூறுபவர்; கருத்துகளை நிரல்பட உரைப்பவர்.

இவருடைய தமிழ்நடை சிக்கல் இல்லாதது; தெளிந்த நீரோடை போன்றது.

ஆராய்ச்சியில் நடுநிலைமையும், காமஞ் செப்பாது கண்டது மொழியும் நேர்மையும் இவர்க்கு இயல்பாக அமைந்த தனிப் பண்புகளாகும்.

இவர் எழுதிய நூல்கள் பல; ஆராய்ச்சி முன்னுரையுடன் தெளிவாகப் பதிப்பித்த இலக்கண இலக்கிய நூல்கள் பல.

இத்தகைய தகுதிகள் பல வாய்க்கப்பெற்ற புலவர் இளங்குமரன் படைத்துத் தந்துள்ள 'இலக்கண வரலாறு' தமிழுக்குக் கிடைத்த பெருஞ்செல்வமாகும்.

## 2. நூலின் அமைப்பும் அழகும்

இந்த நூல், 'இலக்கண வரலாறு' என்ற முதற் கட்டுரையுடன் தொடங்குகிறது. இந்தக் கட்டுரை இலக்கணம், வரலாறு ஆகிய இருசொற்களைப் பற்றியும் விரிவாக ஆராய்கின்றது. அந்தச் சொற்களின் பொருள், வழக்காறு, முன்னோர் நூல்களில் இடம் பெற்றுள்ள பாங்கு ஆகியவை பற்றிய ஆய்வு நம் சிந்தனையைத் தூண்டுகிறது.

இலக்கண வரலாற்றுச் சிந்தனையுடன் நூலுக்குள் நுழைகின்ற நாம், அடுத்த கட்டுரையில் தொல்காப்பியத்

திற்கு முன் இருந்த நூல்களைப் பற்றி அறிகின்றோம். பின்னர் அகத்தியரையும், அவர் பெயரால் வழங்குகின்ற போலி நூல்களையும் அறிகின்றோம்.

நூலின் ஆசிரியர் தருகின்ற ஒளியின் உதவியால் தொல்காப்பியர், தொல்காப்பியம், தொல்காப்பிய உரையாசிரியர்கள் பற்றித் தெளிவான செய்திகளை அறிகின்றோம்.

இவற்றிற்குப் பின்னர் இறையனார் அகப்பொருளும் அதன் உரையும் அறிமுகப்படுத்தப் படுகின்றன.

அடுத்து, பிற்காலத்து நூல்களில் குறிப்பிடப்படும் முன்னைய நூல்களைப்பற்றி அறிகின்றோம்.

பின்னர், காலமுறைப்படி தமிழில் தோன்றிய இலக்கண நூல்களையும் உரைகளையும் பற்றி அறிகின்றோம்.

மிக அண்மைக் காலத்தில் தோன்றிய நூல்வரை எல்லா நூல்களின் வரலாற்றையும் அறிந்து, தமிழ் இலக்கணத்தின் பரப்பைத் தெரிந்து கொள்கிறோம்.

இந்த நூலில் உள்ள ஒவ்வொரு கட்டுரையும் இலக்கண நூல் ஒன்றை அறிமுகப்படுத்தும் முறை சிறப்பாக உள்ளது. முதலில் நூலாசிரியர் வரலாற்றை ஆய்ந்துரைக்கின்றது. அவரது காலம், வாழ்ந்த இடம், வாழ்க்கைக் குறிப்பு ஆகியவை விளக்கப்படுகின்றன. இவற்றை அடுத்து நூலின் அமைப்பு, நூற்பா எண்ணிக்கை, இலக்கணக் கோட்பாடு ஆகியவை விவரிக்கப் படுகின்றன. பின்னர் உரையாசிரியர் வரலாறும், அவரது உரைத்திறனும் ஆராய்ந்து கூறப்படுகின்றன. உரை நலனும், தனிச்சிறப்பும், உரை தோன்றிய காலத்து மக்களின் பண்பாடும் விளக்கப்படுகின்றன.

பல இலக்கண நூல்களைப் பல நாள் முயன்று படிப்பதால் பெறுகின்ற பயனை இந்த ஒரு நூலாலேயே நாம் பெறுகிறோம். நூலைப் படித்து முடித்தவுடன் ஒரு நல்ல ஆய்வு நூலைக் கற்ற மனநிறைவு ஏற்படுகிறது; நெஞ்சத்தில் தமிழ்ச்சுவை நிரம்பி இன்ப மூட்டுகிறது; சிந்தனையில் தெளிவும், புதிய செய்திகளின் ஒளியும் பரவி மகிழ்விக்கின்றன.

## 3. இலக்கண நூல்களின் அறிமுகம்

இந்த நூலின் ஆசிரியர், ஒவ்வோர் இலக்கண நூலையும் அறிமுகப்படுத்தும் முறை சிறப்பு வாய்ந்த தாகும்.

முந்து நூல்களில் நமக்குக் கிடைத்துள்ள முழு முதல் இலக்கண நூல் தொல்காப்பியமே (பக். 34) என்றும்; அது பழமையான இலக்கண மரபுகளைக் காக்கும் நூல் என்றும் (பக். 34) அது பிற்கால இலக்கணப் பகுப்புகளுக்கும் இடம் தருவதாக அமைந்தது (பக். 54) என்றும் தொல்காப்பியத்தைப் போற்றுகின்றார்.

இவ்வாறே இவர் பின்வருமாறு இலக்கண நூல்களை அறிமுகப்படுத்துகின்றார்:

### இறையனார் அகப்பொருள்

''தொல்காப்பியத்திற்குப் பின்னர் முழுதிலக்கணம் தழுவாத பகுதியிலக்கண நூல்கள் தோன்றத் தொடங்கின. அவ்வகையில் அகப்பொருள் பற்றிக் கூறும் நூலாகத் தோன்றியது இந்நூல்'' (பக். 171).

### புறப்பொருள் வெண்பா மாலை

''இந்நூல், புறப்பொருள் இலக்கண உலகில் தனிச் சிறப்புடையதாகும். ஏனெனில் இதற்குப்பின், புறப் பொருள் கூறும் தனி இலக்கண நூல்கள் எவையும் தோற்றமுற்றில; ஐந்திலக்கணம் கூற வெழுந்த நூல்களும் இத்தகைய விரிவையும் சிறப்பையும் கொண்டில'' (பக். 206).

### யாப்பருங்கலம்

''யாப்பாகிய அரிய அணிகலம் என்றும், யாப்பாகிய கடலைக் கடக்க அமைந்த அரிய கலம் (கப்பல்) என்றும் பொருள் கொள்ள அமைந்த அரிய நூல்'' (பக். 216).

### வீரசோழியம்

''ஐந்திலக்கணம் என்னும் அமைப்பில் வெளிவந்த முதல் நூல் இவ் வீரசோழியமே'' (பக். 240).

### நேமிநாதம்

''தொல்காப்பியத்திற்குப் பின்னர், எழுத்து சொல் இலக்கணச் சுருக்கப் பயிற்சிக்கு இந்நூலே கருவியாக விளங்கியது'' (பக். 263).

### தண்டியலங்காரம்

''அணியிலக்கணம் கூறும் நூல்களுள் முதன்மையும் சிறப்பும் வாய்ந்தது தண்டியலங்காரமாகும்.'' (பக். 269).

### நன்னூல்

''நூல் என்றாலே இலக்கண நூலையே குறித்தல் பழ வழக்கு. நன்னூல் 'நல்ல இலக்கணம்' என்னும் பொருளது'' (பக். 278).

''இளம்பூரணர் உரைவழியே நன்னூலார் பலப்பல நூற்பாக்களை இயற்றியுள்ளார்'' (பக். 76).

### அகப்பொருள் விளக்கம்

''தொல்காப்பியம் அகப்பொருளைக் கூற்றுவகையால் கூறும். இந்நூல் துறை வகையால் கூறுகின்றது'' (பக். 315).

### இலக்கண விளக்கம்

''முற்பட்ட நூல்கள் ஓரிலக்கணமும் ஈரிலக்கணமும் உடையனவாக இருந்தன. ஐந்திலக்கணமுடைய வீர சோழியம் தமிழ் நெறிக்கு மாறுபட்டுச் சென்றது. பிரயோக விவேகம் இன்னும் அப்பாற்சென்றது. உரை களும் முரணியும் மயக்கியும் அமைந்தன. இவற்றை எல்லாம் எண்ணிய பட்டறிவாலும் பாடஞ்சொன்ன முறையாலும் முற்றிலும் புதுநூல் செய்யாமல் முற்றிலும் பழமையையே கொள்ளாமல் ஒராற்றான் ஐந்திலக் கணமும் ஒருங்கு கற்கும் ஒரு நூலைப் படைத்தார்'' (பக். 369).

''ஆசிரியர் கற்பிக்கும் நோக்கில் பன்னூற் பொருளும் இந்நூல் தொகுப்பில் காணுமாறு செய்தற்குப் பேருதவி யாக இருந்திருக்கும்'' (பக்.371).

### தொன்னூல் விளக்கம்

''**நன்னூல்** எனப் பெயர் கொண்ட அது, அதற்கு முன் வந்த நேமிநாதத்தைச் **சின்னூல்** என்று வழங்கத்

தூண்டிற்று. பின்னூலாக வந்த வீரமாமுனிவரின் இலக்கண நூலைத் தொன்னூல் என்று பெயரிடத் தூண்டிற்று'' (பக். 386).

### அறுவகை இலக்கணம்

''மூன்றிலக்கணம் ஐந்திலக்கணமாக வளர்ந்த செய்தி அறிந்ததே. இவண், ஆறாம் இலக்கணமெனப் புலமை இலக்கணம் ஒன்றனையும் சேர்த்து அறுவகை இலக்கண நூல் எழுந்தமை காணலாம்'' (பக்.423).

## உரைத்திறன் அறிவித்தல்

உரையாசிரியர்களிடம் பல வகையான திறன்கள் நிரம்பியுள்ளன. பழந்தமிழ் நூல்களின் அமைப்பு, உட்பிரிப்பு, நூற்பா எண்ணிக்கை, சரியான மூலபாடம் ஆகியவற்றை ஆராய்ந்து கூறிப் பொருத்தமில்லாதவற்றை அகற்றுதல், முன்னைய உரைகளில் உள்ள பொருந்தாத கருத்துகளை மறுத்தல், நூலாசிரியரின் இலக்கணக் கொள்கைகளைத் திட்டவட்டமாக அறிந்து வெளிப் படுத்துதல், பொருத்தமான எடுத்துக்காட்டுகள் தருதல், சொற்பொருள் கூறல், தம் காலத்து மொழி வளர்ச்சியைச் சுட்டிக் காட்டுதல்; ஒப்புமைப் பகுதி தருதல் ஆகியவை உரையாசிரியர்களின் திறன்களாக மதிக்கப்படுகின்றன.

இத்திறன்கள் யாவற்றையும் அறிந்து இந்த நூலின் ஆசிரியர் வெளிப்படுத்தியுள்ளார். அவை கீழே தரப் படுகின்றன.

### இளம்பூரணர்

தொல்காப்பியம் நமக்குக் கிட்டியமை இளம்பூரணர் உரை கொண்ட நலத்தாலேயே (பக்.67).

### சேனாவரையர்

ஆசிரியர் (தொல்காப்பியர் நூற்பா) தொகுக்கும் நயத்தைத் தக்காங்கு எடுத்துரைத்தலில் தனித்திறம் காட்டுகிறார் சேனாவரையர் (பக். 91).

நூலாசிரியர்க்குரிய நெறிகளுள் ஒன்று உய்த்துணர வைத்தல் என்பது. அத்தகைய இடங்கள் சிலவற்றில் சேனாவரையர் நயம்பட உரை வரைகின்றார் (பக். 93).

## பேராசிரியர்

பேராசிரியர் ஓரியலுக்கும் அடுத்துவரும் இயலுக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார். ஒரு நூற்பாவுக்கும் அடுத்துவரும் நூற்பாவுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டுகிறார். ஒரே நூற்பாவில் வரும் செய்திகளின் முறைவைப்பையும் உன்னிப்பாக எண்ணி எழுதுகிறார் (பக். 108).

மறுப்புக் கூறுதல் பேராசிரியர் உரையில் தனிச் சிறப்புடையது. மிக விரிவாக ஆய்ந்து படிப்படியாக விலக்கியும் விளக்கியும் மறுத்து ஆசிரியர் கோளை நிலை நாட்டல் அவர்தம் முறைமை (பக்.111).

## நச்சினார்க்கினியர்

வலிந்தும் நலிந்தும் சில இடங்களில் இவர் கூறியுள்ள உரை, ஆசிரியர் நூலுக்கும் தமிழர் நெறிக்கும் ஒவ்வாது (பக். 124).

## தெய்வச்சிலையார்

(தொல்காப்பியச் சொல்லதிகார) நூற்பாக்களை இடப்பெயர்ச்சி செய்தாருள் முதல்வரெனத் தெய்வச் சிலையார் அமைந்து விடுகின்றார் (பக். 141).

அரிய செய்திகளையும் எடுத்துக்காட்டு நயங்களையும் உடையது, தெய்வச்சிலையார் உரை (பக்.144).

## இறையனார் களவியல் உரை

நூலால் உரையும் உரையால் நூலும் ஒன்றை ஒன்று ஒப்பச் சிறப்புறும் என்பதற்கு இறையனார் களவியல் உரை சீரிய எடுத்துக்காட்டாம் (பக். 180).

## யாப்பருங்கல விருத்தியுரை

விருத்தியுரைகாரர் பல்கலைக்குரிசில்; பேரறிஞர்; நயத்தக்க உரையாளர்; சீரிய நினைவாளர்; நாடு கண்டவர்; வரலாற்றுத் தெளிவாளர்: பட்டறிவால் முதிர்ந்தவர்; சமயப் பொறையாளர்; சால்பாளர். (பக். 2 4).

தமிழ் யாப்பிலக்கணப் பரப்பைக் கடலெனப் பரப்பியும், மலையென உயர்த்தியும் காட்டவல்ல உரை, இவ்விருத்தியே (பக். 224).

### நேமிநாத உரையாசிரியர்

எடுத்துக்காட்டைச் சிறுகதை போலப் படைத்துக் கூறுவதையும் இவர் மேற்கொள்கிறார் (பக். 261).

### நன்னூல் — மயிலைநாதர் உரை

பின்னுரைகள் இவ்வுரையினும் திருத்தமும் தெளிவும் பெற்றுள எனின், இவ்வுரையின் கொடை தந்த வளர்ச்சி என்பதால் இவ்வுரையின் சிறப்பு இனிது விளங்கும் (பக். 291).

### களவியற்காரிகை உரை

எடுத்துக்காட்டும் மேற்கோள் இன்ன நூலைச் சேர்ந்தது என்பதைத் திட்டமாக உரைக்கும் சீர்மையுடையது உரை. அதனால் ஆய்வுலகம் பெற்றுள்ள நலம் அளப்பரிது (பக். 326).

## 5. பதிப்புகளைக் குறிப்பிடுதல்

இந்த நூலின் ஆசிரியர், பெரும்பான்மையான இலக்கண நூல்களின் பதிப்புப் பற்றிய விவரங்களைத் தந்துள்ளார். அந்த விவரங்கள் யாப்பருங்கல விருத்தியுரை முதல் அதன் பின் தோன்றிய நூல்களுக்கு எல்லாம் தரப்பட்டுள்ளன. தொல்காப்பியம் முதல் புறப்பொருள் வெண்பாமாலை ஈறாக உள்ள நூல்களுக்கும் பதிப்புப் பற்றிய விளக்கம் தந்திருப்பின் மிகவும் பயன் ஏற்பட்டிருக்கும்!

தரப்பட்டுள்ள பதிப்பு விவரங்கள் வெறும் பட்டியலாக இல்லாமல், ஒவ்வொன்றையும் நேரில் கண்டு படித்தறிந்து தரப்பட்ட விளக்கங்களாக உள்ளன. முதன்முதலில் மூலமும் உரையுமாக நூல் அச்சிட்ட ஆண்டு, அதன் தகுதி, பின்னர் ஏற்பட்ட மாற்றங்கள், பதிப்புத் தோறும் வேறுபட்ட நிலை ஆகியவை விளக்கப்பட்டுள்ளன.

இத்தகைய விளக்கங்கள் யாவும், இலக்கண ஆய்வில் விரிவாக ஈடுபட விரும்புபவர்க்குச் சிறந்த வழிகாட்டியாக அமையும்; மறு ஆய்வு செய்யத் துணை புரியும்.

பதிப்பு விவரங்களில் நம் சிந்தனையைத் தூண்டும் இடங்களில் சில, அடுத்துத் தரப்படுகின்றன.

1. நம்பி அகப்பொருள் நூலுக்கு, இப்போதுள்ள பாயிரச் செய்யுளே அல்லாமல், 'பூமிசை நடந்த' என்று தொடங்கும் மற்றொரு பாயிரச் செய்யுளும் உண்டு; அது, அ. குமாரசாமிப்பிள்ளை பதிப்பில் உள்ளது (பக். 316).

2. நம்பி அகப்பொருளின் நூலாசிரியரே உரையும் எடுத்துக்காட்டும் செய்த ஏட்டுச் சுவடிகளும், அச்சுவடிகளின் வேறாகப் பழைய உரையுடன் தஞ்சைவாணன் கோவை மட்டுமே எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட சுவடிகளுமாக இருவேறு சுவடிகள் இருந்தன. இரண்டையும் இணைத்துப் பதிப்பாளர்கள் பதிப்பித்து விட்டனர். (பக். 320).

3. ஆறுமுக நாவலரின் நன்னூல் காண்டிகையுரை 1880இல் வெளிவந்தது (பக். 311). 1953இல், 28ஆம் பதிப்பு வெளிவந்தது (பக். 312).

## 6. வழிகாட்டி

இந்த நூலின் ஆசிரியர் வருங்கால ஆய்வுக்கு வழிகாட்டியாக விளங்கும் வகையில், பல இடங்களில் சிறந்த ஆய்வு நுட்பங்களைச் சுட்டிக் காட்டியுள்ளார். அத்தகைய இடங்கள் கீழே தரப்படுகின்றன.

1. மாணிக்கவாசகர் இயற்றியுள்ள குவலயானந்தம் என்னும் அணிநூல், குன்றக்கூறல் முதலிய பத்துக் குற்றங்களையும் குறிப்பிட்டதோடு நில்லாமல், அவை ஒவ்வொன்றையும் தனித்தனி நூற்பாவால் விளக்கியுள்ளார். (பக். 420).

2. முத்துவீரியம் கூறும் அளபெடைகள் எட்டும் புதியவை (பக். 403).

3. 'அறுவகை இலக்கணம்' என்னும் நூல் கூறுகின்ற எழுத்துகளின் உருவமும் ஒலியும் புதுமையானவை (பக்.425). இந்த நூல் கூறும் 'புலமை இலக்கணம்' இன்றும் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டியவை (பக். 428).

4. வீரமாமுனிவர், ஏகாரக்கீழ்க்கோடும், ஓகாரக் கீழ்க்கோடும் அமைத்தார் என்னும் கருத்து மேலாய்வுக்கு உரியது. (பக். 389).

5. குமரகுருபரர் இயற்றிய சிதம்பரச் செய்யுட் கோவை, இலக்கியம் காட்டி (அதற்கு) இலக்கணம் காட்டலாக அமைந்திருப்பது புதியதோர் முறை (பக்.360).

## 7. வரலாற்றுப் புலமை

தமிழ்ப் புலவர்களின் வரலாற்றை அவர்கள் இயற்றிய நூல்களில் உள்ள பாயிரங்கள் கூறும் செய்திகளைக் கொண்டே அறியவேண்டியுள்ளது. இன்னும் சில வரலாற்று நிகழ்ச்சிகளைக் கல்வெட்டுகளும் செப்பேடு களும் அறிவிக்கின்றன.

தமிழ் ஆராய்ச்சியாளர்கள் அவற்றை ஆழ்ந்து கற்றுப் புலமை பெறுகின்றனர். அந்தப் புலமை வளத்தால், பல செய்திகள் விளக்கம் பெறுகின்றன.

இந்த நூலின் ஆசிரியர் நூற்பாயிரம் கூறும் புலவர் வரலாறுகளை மட்டுமே அல்லாமல், கல்வெட்டுகளையும் செப்பேடுகளையும் சிறந்த சான்றுகளாகக் கொண்டு ஆராய்ந்து அரிய செய்திகளை வெளியிட்டுள்ளார். நூலாசிரியர் உரையாசிரியர் ஆகிய இருசாரார் பற்றியும் அறிய அவை துணைபுரிகின்றன. அவர்கள் வாழ்ந்த காலம், இடம், மேற்கொண்ட தொழில், செய்த அறச் செயல், பெற்ற பரிசு ஆகியவை பற்றி விளக்கியுள்ளார்.

இந்த நூலின் தொடக்கத்தில் அகத்தியர் பற்றியும், அவர் பெயரால் வழங்கிவரும் போலி நூல்களைப் பற்றி யும் கூறியுள்ள கருத்துகள் நூலாசிரியரின் வரலாற்றுப் புலமைக்குச் சான்றாக உள்ளன (பக். 19-33).

சேனாவரையர், (பக். 88), யாப்பருங் கலக்காரிகை ஆசிரியர் (பக். 218), நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதர் (பக். 257), நன்னூலை இயற்றிய பவணந்தியார் (பக். 279-282), சிதம்பரப்பாட்டியல் இயற்றிய பரஞ்சோதி யார் (பக். 340), பிரயோக விவேகம் இயற்றிய ஆழ்வார் திருநகரி சுப்பிரமணிய தீட்சிதர் (பக். 362), தொன்னூல் விளக்கத்தின் ஆசிரியர் வீரமாமுனிவர் (பக். 387), அறு வகை இலக்கண நூலின் ஆசிரியர் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார் (பக். 423-424) ஆகியோர் வாழ்ந்த இடமும் காலமும், மற்றச் சிறப்புச் செய்திகளும் மிக விளக்கமாக ஆசிரியரால் ஆய்ந்து கூறப்பட்டுள்ளன.

## 8. புலமைத் திறன்

டாக்டர் உ. வே. சா. அவர்களால் 1937இல் பதிக்கப்பட்ட 'தமிழ் நெறி விளக்கம்' என்னும் அகப்பொருள் இலக்கண நூலில், 'முக்கண் கூட்டம்' (நூற்பா. 21) என்ற தொடர் ஒன்று வருகின்றது. அதனை ஆராய்ந்த உ.வே.சா அவர்கள், ''முக்கட் கூட்டம் இன்னதென்று விளங்கவில்லை'' என்றும் ''மக்கட் கூட்டம் என்று இருத்தல் கூடும்'' என்றும், ''இந்த ஐயமும் வேறு பிறவும் நாளடைவில் தெளிவாகும்'' என்றும் கூறியுள்ளார். (முகவுரை. V, VI).

இதனை ஆராய்ந்த இந்நூலின் ஆசிரியர் பின் வருமாறு விளக்கியுள்ளார்:

''முக்கட் கூட்டம் என்பதே சரியான வடிவம். கண் இடப்பொருளது. முக்கண் மூவிடம். அம்மூவிடங்கள் 1. இயற்கையால் கூடுமிடம்; 2. தோழியால் கூடுமிடம்; 3. தோழனாற் கூடுமிடம் என்பவை'' (பக்.213).

இந்த ஆய்வுரை ஆசிரியரின் புலமைத் திறனுக்குச் சான்றாய் உள்ளது.

''சார்ச்சி வழி ஒழுகுதல்'' என்பதை, ''எங்கோ இருக்கும் ஒரு நூற்பாவின் தொடரை, எங்கோ கொண்டு வந்து இயைத்துப் பொருள் கூறுதல்'' என்று விளக்கியுள்ளார் ஆசிரியர் (பக். 197). இந்த விளக்கம் 'மாட்டேறு' என்பதை நினைவூட்டுகிறது.

## 9. அயரா உழைப்பும் தளரா முயற்சியும்

இந்த நூலாசிரியரின் அயரா உழைப்பிற்கும் தளரா முயற்சிக்கும் சான்றாய் விளங்குகிறது, 'பிரபந்தத் திரட்டு' என்னும் நூலைப் பற்றிய கட்டுரை. அந்த நூல் இன்றுவரை அச்சாகவில்லை. உ. வே. சா. நூலகத்தில் ஏட்டுச் சுவடியாகவே உள்ளது. அதனை அறிந்து தேடிச் சென்று படி எடுத்து முயன்று படித்து ஆய்வுக்கட்டுரை எழுதியுள்ள ஆசிரியரை எவ்வளவு பாராட்டினாலும் தகும்!

## 10. ஆய்வுத் திறன்

நூலாசிரியரின் ஆய்வுத் திறன் வெளிப்படும் இடங்கள் நூலெங்கும் நிரம்பியுள்ளன.

உரையாசிரியர்களைப் பற்றி இவர் கூறும் கருத்து, ஆய்வுத் திறனை வெளிப்படுத்துகிறது.

''பின்னவர் உரைகளால், முன்னவர் விளக்காத பகுதிகள் விளக்கம் பெறுவதும், சிக்கல்கள் அவிழ்க்கப் படுவதும் பட்டறிவால் ஏற்படுவன'' (பக். 139).

சிவஞான முனிவரைப் பற்றிக் கூறும்போது, ''(தொல்காப்பியம்) முழுமைக்கும் உரை எழுதும் நோக்கினர் அல்லர் இவர் என்பதை அதன் (சூத்திர விருத்தி) விரிவே காட்டுகின்றது''. (பக். 151) என்கிறார்.

இறையனார் அகப்பொருள் உரைபற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

''வாய் வழி நடந்து வந்த உரையெனின் இத்துணைப் பேர் வாய் மாற்றங்களில் எத்துணையோ மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும்!'' (பக். 174).

புறப்பொருள் வெண்பாமாலையைப் பின்வருமாறு போற்றுகின்றார்:

''நூற்பாவும், நூற்பாவின் பொருள் விளக்கும் கொளுவும், அக்கொளுவுக்கு எடுத்துக் காட்டும் என முத்திறத்தானும் முந்நூல்போல் ஒரு நூலாகிய சிறப்பும் இந்நூற்கு உண்டு'' (பக். 206).

உரைநெறி பற்றிப் பின்வருமாறு கூறுகின்றார்:

''ஆசிரியர் இயற்றிய நூலுக்கு மாணவர் உரை எழுதும் மரபு நிலை உண்டே அன்றி, மாணவர் யாத்த நூலுக்கு ஆசிரியர் உரையெழுதும் வழக்கம் இல்லை.'' (பக். 234).

நம்பி அகப்பொருள் இலக்கண நூலுக்கு, திருக் கோவையார் வழிகாட்டி இருக்கக்கூடும் என்று ஆசிரியர் கூறுவது, ஆய்வுத் திறனைப் புலப்படுத்தும் (பக். 315).

## 11. ஒப்பிட்டு ஆய்தல்

தண்டியலங்காரத்தின் தொடக்கத்தில் உள்ள நாமகள் துதியும், பன்னிருபடலத்தில் உள்ள நாமகள் துதியும் பெரிதும் ஒத்துள்ளன என்பதை ஆசிரியர் எடுத் துரைக்கின்றார் (பக். 330).

''தமிழ்நெறி விளக்க அகப்பொருட் பகுதிக்கும் பிற நூல்கள் வழியே அறியப்படும் அகப் பொருட் பகுதிக்கும் சில வேறுபாடுகள் உள'' என்று கூறி அவ் வேறுபாடுகளை விளக்கியுள்ளார் (பக். 214).

தண்டியலங்காரம் கூறும் அணிகளின் பெயர்களை வீரசோழியம் கூறும் அணிகளோடு ஒப்பிட்டு ஆராயும் பகுதி சிறப்பாக உள்ளது (பக். 246, 247).

யாப்பருங்கலம், யாப்பருங் கலக்காரிகை ஆகிய இரண்டின் யாப்புக் கோட்பாடுகளை ஒப்பிட்டு நோக்கி வேறுபாடுகளைக் காட்டும் திறன், நூலாசிரியரின் ஆற்றலுக்குச் சான்று பகர்கிறது (பக். 231-233).

## 12. எதிர்ப்புக் குரல்

தமிழ் மரபுக்கு மாறான போலி நூல்களையும் உரைகளையும் கோட்பாடுகளையும் இந்த நூலின் ஆசிரியர் இனம் கண்டு, அவற்றிற்கு எதிர்ப்புத் தெரிவித்துள்ளமை பாராட்டுதற்குரியதாகும்.

அகத்தியர் பெயரால் வழங்கும் போலிச் சூத்திரங்களையும் சில இலக்கண நூல்களையும் ஆசிரியர் விரிவாக ஆராய்ந்து அடையாளம் காட்டியுள்ளார் (பக். 30-33).

தொல்காப்பியப் பொருளதிகாரத்திற்குப் புலவர் குழந்தை எழுதியுள்ள உரையில் நூற்பாக்களை முன் பின்னாக மாற்றி அமைத்து, இயல்களை வேறுபடுத்தியுள்ளார். அவற்றை விரிவாக ஆராய்ந்து நூலாசிரியர்,

''இஃது உரைகாண்பார் மரபன்று. என்ன புதுமை எனினும் நூலைச் சிதறிக் கோலம் தெளிக்கும் உரிமை உரை காண்பார்க்கு இல்லை''

என்று கண்டிக்கின்றார் (பக். 160).

தமிழ் இலக்கண மரபுக்கு மாறான செய்திகளும் வடமொழி இலக்கண மரபைக் கொண்டு வந்து தமிழுடன் கலக்கும் முயற்சியும் வீரசோழியம், பிரயோக விவேகம், இலக்கணக் கொத்து ஆகிய மூன்று நூல்களிலும் மிகுதியாக உள்ளன.

இந்த நூலின் ஆசிரியர் அவற்றைக் கண்டிக்கின்றார்.

வீரசோழிய ஆசிரியர் பற்றி, ''அவர் இம்மண்ணின் மரபையே முற்றாக விடுத்து எங்கோ வட்டமிடுவது புலப் படுகின்றது'' என்று கூறுகின்றார் (பக். 245).

பிரயோக விவேகம் பற்றிப் பின்வருமாறு உரைக் கின்றார்:

''வடமொழியும் தமிழும் தனித்தனி மொழிகள் அல்ல; ஒரு மொழி என்னும் மயக்கவுணர்வுடன், வடமொழியே தமிழ்மொழி மூலம் என்னும் மாறுபட்ட உணர்வும் கொண்டவர்கள் வாழ்ந்த காலத்தில் தோன்றிய நூல்'' (பக். 360).

தமிழுக்கு முற்றிலும் முரணான கருத்துகளைக் கூறும் 'இலக்கணக் கொத்து' நூலாசிரியரை, ''இப்படியா தட்டுக் கெட்டுப் போகும், கட்டுவிடாக் கல்வித் திறம்?'' என்று சுட்டிக் காட்டுகின்றார்.

நன்னூலுக்கு உரை எழுதிய இராமாநுசக் கவிராயர், 'தொல்லை வடிவின எல்லா எழுத்தும்' என்ற நூற்பாவை, சிறிது மாற்றி ''ஆண்டு எய்தும் ஏகாரம் ஓகாரம் மெய் புள்ளி'' என்று திருத்தி விட்டார். இந்த மாற்றத்தை உடன்படாத நூலாசிரியர், ''எத்தகு சிறந்த பாடம் எனினும் மூலத்தில் கை வைத்தல் கூடாது'' என்று கடிந்து உரைக்கின்றார் (பக். 305).

நன்னூல் உரையாசிரியர்களில் ஒருவரான சடகோப ராமாநுசாச்சாரியார், தம் உரையில் ''பவணந்தி முனிவர் பிராமண வருணத்தில் தோன்றினார்'' என்று எவரும் கூறாத புதிய செய்தியைத் தாமே புனைந்து கூறியுள்ளார். இந்த நூலின் ஆசிரியர் அவர் கொள்கையை எதிர்க் கின்றார்! (பக். 313).

## 13. காலச்சூழலைச் சுட்டுதல்

இலக்கண நூலும் உரையும் இயற்றும் புலவர்கள் தாம் வாழும் காலத்தின் இயல்புக்கு ஆட்பட்டுத் தவறு செய்துள்ளனர் என்ற கருத்தை, நூலாசிரியர் குறிப்பிடும் இடங்கள் உள்ளன.

1. பாட்டியல் நூல்கள் நால்வருண வேறுபாடுகளை வற்புறுத்தி இலக்கிய வகைகளுக்கு இலக்கணம் கூறி யுள்ளன. எழுதுகின்ற ஓலைகளின் அளவிலும் நால்

வருணம் புகுந்துவிட்டது! இதனை ஆசிரியர், ''எழுத்துக்கும் வருணம்! ஓலைக்கும் வருணம்! வருணக் கொடுமை கொடி கட்டிப் பறந்த சான்றுகள் இன்னவை!'' (பக். 255) என்று சுட்டிக் காட்டுகின்றார்.

சிவஞான முனிவர் வாழ்ந்த காலத்தை, ''கண்டனமும் மறுப்பும் களித்து ஆடிய காலம்'' என்கிறார் (பக். 377).

16, 17ஆம் நூற்றாண்டுகளில் புறப்பொருள் பற்றிய இலக்கண இலக்கியங்கள் தோன்றாத காலச்சூழல் இருந்தது. அதனை ஆசிரியர் பின்வருமாறு சுட்டிக் காட்டுகின்றார்.

''பிற்காலங்களில் புலவர்களின் நிலை ஒடுங்கியது. அரண்மனையுள்ளும் அரசவையுள்ளும் இருந்து களிப் பூட்டும் பாடல்களை — குறிப்பாக அகத்துறைப் பாடல் களைப் பாடுபவராக அமைந்தனர். அதனால் புறப் பொருள் இலக்கணமும் இலக்கியமும் பெருகுதலின்றி நின்றன'' (பக். 407).

இவையே அன்றி ஆசிரியர் கீழே கூறுகின்ற கருத்தும் காலச்சூழல் பற்றிய ஆய்வில் தோன்றியதாகும்.

''யாப்பியல் நூல் பெருக்கக் காலம் ஒன்றிருந்தமை யாப்பருங்கல விருத்தியால் அறியப் படுவதுபோல, பாட்டியற் பெருக்கக் காலம் ஒன்று இருந்ததைப் பன்னிரு பாட்டியல் காட்டுகிறது'' (பக். 331).

## 14. சேர்க்க வேண்டிய செய்திகள்

இந்த நூலில் சேர்க்க வேண்டிய செய்திகள் சில உள்ளன.

1. ''கூழங்கைத் தம்பிரான் நன்னூலுக்கு இயற்றிய உரை வெளிவந்திலது'' என்று இந்த நூலின் ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார் (பக். 301). ஆனால், ஏழு ஆண்டு களுக்கு முன்னரே அந்த உரைநூல் வெளிவந்துள்ளது.

மேற்கு ஜெர்மனியில் உள்ள ஹைடல்பெர்க் பல்கலைக் கழகம், 1962ஆம் ஆண்டில் தொடங்கிய தெற்காசியக் கழகத்தில் 1980இல் கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் உரை பதிப்பிக்கப்பட்டுள்ளது. அந்தப் பல்கலைக் கழகத்தில், தமிழ்த்துறையில் பணியாற்றி வரும்

தமிழறிஞர் அ. தாமோதரன் அவர்கள் பின்வரும் செய்தியைக் கூறியுள்ளார்கள்:

''தமிழ் இலக்கிய வரலாற்று ஆசிரியர்களால் மறைந்துவிட்டதென உறுதியாக நம்பப்பட்டு வந்த கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் காண்டிகையுரையைக் கண்டு பிடித்து, காலந் தாழ்த்தாது (1980இல்) தமிழுலகிற்கு வழங்கியதை ஒரு பெருமையாகவே தெற்காசியக் கழகம் கருதுகிறது''.*

வெளிவந்துள்ள கூழங்கைத் தம்பிரானின் நன்னூல் உரை பற்றிய செய்திகள், இந்த நூலின் இரண்டாம் பதிப்பில் இடம் பெறும் என்று நாம் எதிர்பார்க்கலாம்.

2. சில இலக்கண நூல்கள், ஆசிரியரின் நினைவுக்கு வராமல் போய்விட்டன! மு. அருணாசலம் பதிப்பித்த **'பிரபந்த மரபியல்'**, டாக்டர் சுந்தரமூர்த்தி பதிப்பித்த **'உவமான சங்கிரகங்கள்—மூன்று'**, திருக்கோயில் இதழில் தொடர்ச்சியாய் வெளிவந்து பின்னர் நூலாக வடிவம் பெற்ற **'வண்ணத்தியல்பு'**, செந்தமிழ் இதழில் (14ஆம் தொகுதியில்) வெளிவந்த **'இலக்கண தீபம்'** முதலிய இலக்கண நூல்கள் இலக்கண வரலாற்றில் இடம் பெற வேண்டும்.

## 15. நிகண்டுகள், இலக்கண நூல்களே!

தமிழில் காலந்தோறும் நிகண்டு நூல்கள் பல தோன்றியுள்ளன. அவை யாவும் இலக்கண வகையைச் சேர்ந்த நூல்களே ஆகும். அவற்றின் தோற்றமும் வளர்ச்சியும் வகையும் இலக்கண வரலாற்றில் இடம் பெறுதல் வேண்டும்.

பழம்பெரும் இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தில் உள்ள எழுத்ததிகாரமும் சொல்லதிகாரமும் பிற்காலத்தில் தனி நூல்களாக வளர்ச்சி பெற்றன. பொரு

* ஐந்தாம் உலகத்தமிழ் மாநாட்டு மலர்—மதுரை—1981; (பக். 218); கட்டுரை—'மேற்கு ஜெர்மனியில்—தமிழ்'; அ. தாமோதரன்.

ளதிகாரத்தில் உள்ள அகத்திணையும் அகப்பொருள் இலக்கணம் கூறும் மற்ற இயல்களும் தனி நூல்களாயின. புறத்திணை தனி இலக்கணமாக வளர்ச்சி பெற்றது. செய்யுளியல், யாப்பிலக்கண நூல்களில் அடங்கியது. உவமவியல், அணி நூல்கள் ஆயிற்று.

சொல்லதிகாரத்தில் உள்ள உரியியலும் இடையியலும், பொருளதிகாரத்தில் உள்ள மரபியலும் சேர்ந்து இடைக்காலத்தில் நிகண்டு நூல்களாயின.

நிகண்டு நூல்கள், இலக்கண நூல்களே என்ற கருத்து நன்னூலார்க்கு உண்டு. நன்னூலார் உரிச் சொற்களைப் பற்றிக் குறிப்பிடும்போது பிங்கல நிகண்டை நினை ஊட்டியுள்ளார். ஆனால், தமிழ் உலகம் நிகண்டு நூல்களை இலக்கண நூல்களாக இன்னும் கருதவே இல்லை! அவற்றை இலக்கண வகைகளுள் ஒன்றாகக் கருதும் கொள்கை தோன்றவே இல்லை. இலக்கண வரலாறு எழுதும் ஆசிரியர்களிடமும் இத்தகைய பார்வை ஏனோ தோன்றவில்லை. இது ஒரு பெருங்குறையாகும். இந்தக் குறை இந்த நூலிலும் உள்ளது. இதன் இரண்டாம் பதிப்பில், நிகண்டு நூல்களை இலக்கண நூல்களாகக் கொண்டு ஆயும் கட்டுரை இடம் பெற வேண்டும்!

## 16. மறு ஆய்வு செய்ய வேண்டிய கருத்துகள்

இந்த நூலில் மறு ஆய்வு செய்ய வேண்டிய கருத்துகள் சில உள்ளன. அவற்றைச் சுட்டிக் காட்டி நூலாசிரியர் கவனத்திற்குக் கொண்டு வருவதால் ஆய்வுலகில் உண்மை ஒளி பரவும்.

### 1. நற்றத்தனார்—நத்தத்தனார்

''தத்தனார் என்னும் பெயருடையார், 'நல்' என்னும் சிறப்புப் பெயர்பெற்று நற்றத்தனார் என வழங்கப்பட்டுப் பின்னர் 'நத்தத்தனார்' என்று ஆகி இருக்கக்கூடும்'' (பக்—193) என்கிறார் ஆசிரியர்.

இவரது கருத்திற்கு மாறான செய்திகளை நச்சினார்க்கினியரும், டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரும் கூறியுள்ளனர்.

### (1) நச்சினார்க்கினியர்

'ந' என்பது சிறப்புப் பொருள் உணர்த்துவதோர் இடைச்சொல்; அது பின்னை, செள்ளை, பாலத்தன், கீரன் முதலிய பெயர்களுடன் சேர்ந்து முறையே நப்பின்னை நச்செள்ளை நப்பாலத்தன் நக்கீரன் என்று ஆகும் என்ற கருத்தைச் சீவக சிந்தாமணிப் பாடல் ஒன்றின் (482) உரை விளக்கத்தில் கூறியுள்ளார்.

### (2) டாக்டர். உ. வே. சா.

நத்தத்தனார் என்னும் சங்கப் புலவரின் பெயரை ஆராய்ந்த டாக்டர் உ. வே. சா. பின்வருமாறு கூறியுள்ளார்.

''தத்தனார் என்பது இவரது இயற்பெயர் என்றும், கல்வி மேம்பாடு பற்றி நத்தத்தனார் என்ற பெயர் இவருக்குப் பிற்காலத்தில் வழங்கலாயிற்று என்றும் தோற்றுகிறது. 'ந' என்பது சிறப்புப்பொருளைத் தருவதோர் இடைச்சொல். நக்கீரர் நப்பாலத்தர் நப்பூதனார் நச்செள்ளையார் முதலிய பெயர்களாலும் இது விளங்கும்'' (பத்துப் பாட்டு உரை—பாடினோர் வரலாறு —பக். 32).

### (3) வேறு சில சான்றுகள்

நப்பசலையார் நக்கண்ணையார் ஆகிய பெயர்களிலும் 'ந' என்பது சிறப்பை உணர்த்தும் இடைச்சொல்லாக வந்துள்ளது.

ஆதலின், ந + தத்தன் + ஆர் ஆகிய சொற்கள் சேர்ந்து 'நத்தத்தனார்' ஆகியுள்ளன என்று கொள்வதே பொருத்தமாக உள்ளது.

## 2. ஐயனாரிதனார்

ஐயனாரிதனார் என்னும் பெயரை, இந்த நூலின் ஆசிரியர், ஐயனார் + இதனார் என்று பிரித்து, 'ஐயனார்க்கு இனியன்' என்று பொருள் கொண்டுள்ளார் (பக். 203).

இதற்கு மாறான கருத்து அறிஞர்களிடம் நிலவி வருகின்றது.

ஐயன் + ஆரிதன் + ஆர் என்று பிரித்து ஆரித கோத்தி ரத்தைச் சேர்ந்தவர் ஆதலின் ஆரிதன் என்ற பெயரைப் பெற்றுள்ளார் என்று அறிஞர்கள் கூறியுள்ளனர்.

இந்த நூலின் ஆசிரியர் இத்தகைய இடங்களை மறு ஆய்வு செய்து அடுத்த பதிப்பில் வெளியிடுவார் என்று எதிர்பார்க்கலாம்.

## 17. ஆசிரியர் நினைவுக்கு

நூலின் தொடக்கத்திலேயே ஆசிரியர் தமிழ் இலக் கணக் கோட்பாடுகளின் வளர்ச்சியைப் பற்றி விரிவாக ஆராய்ந்து ஒரு கட்டுரை எழுதிச் சேர்த்திருந்தால் நூல் மிகவும் சிறப்படைந்திருக்கும்.

தொல்காப்பியர் காலத்தில் எழுத்து சொல் பொருள் என மூன்று பகுதியாக இருந்த இலக்கணம், களவியல் உரை தோன்றிய காலத்தில் யாப்பிலக்கணம் தனியே பிரிந்து நான்கு பகுதிகள் தோன்றின. தண்டியலங்காரம் ஐந்தாவதாகத் தோன்றிய பின்னர், இலக்கண வகை களைக் கூறுகின்ற பாட்டியல்கள் பெருகின. பாவினங் களும், விருத்தப்பா வகைகளும் தோன்றியபின் அவற் றிற்கும் தனித்தனி நூல்கள் தோன்றின. பெண்களை அடிமுதல் முடிவரை வருணிக்கும் முறைப்பற்றிக் கூறும் உவமான சங்கிரகங்கள் சில தோன்றின. இவற்றிற்கும் மேலாகப் புலமை இலக்கணம் தோன்றியது.

இவற்றிற்கு இடையே நிகண்டு நூல்கள் தோன்றின.

இவற்றின் வரலாறு விரிவாக ஆயவேண்டிய பகுதி யாகும்.

இவற்றோடு இலக்கணக் கொள்கைகள் காலத்திற்குக் காலம் எவ்வாறு மாறி அமைந்துள்ளன என்பதை ஆய்ந்து கூறுவது மிகவும் பயன்தரும்.

சார்பு எழுத்துகள் பற்றிய கொள்கை வேறுபாடு, அகத்திணைக் கோட்பாடு, மரபு மாற்றங்கள், புறத் திணை வளர்ச்சி, இலக்கிய வகைகளின் பெருக்கமும்

பாட்டியல் நூல்களும் ஆகியவை பற்றி விளக்குதல் வருங் கால ஆய்வுக்குத் துணை செய்யும்.

தமிழ் இலக்கணத்தின் மீது, வடமொழியின் செல்வாக்குப் பரவியதால் ஏற்பட்ட மாற்றம் குறிப்பிட வேண்டிய செய்தியாகும்.

இத்தகைய செய்திகள் இந்த நூலில் இடம் பெற்றிருந்தால், நூல் இன்னும் சிறந்து விளங்கி இருக்கும்!

'மடாதிபதி' என்னும் தொடரை இந்த நூலாசிரியர், 'திருமடத்தலைவர்' என்று வழங்கியுள்ளார். (பக். 379-380).

மடம்+தலைவர் என்பது 'மடத்தலைவர்' என்று புணருமாயினும், பொருட் சிறப்புக் கருதி

'மடம்+அத்து+தலைவர்'

என்று அத்துச்சாரியை சேர்த்து,

'மடத்துத் தலைவர்'

என்று வழங்குவது சிறப்பாக இருக்கும்!

# இலக்கண வரலாறு

## முகப்பு

''ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்'' என்பது நூல் வழக்கும் உலக வழக்குமாம். ஆனால், அவ்வாற்றுக்குக் கரையில்லாவிடின், ஊரே பாழ் என்பதை உலகம் அறியும்.

ஆற்றங்கரையின் மரமும், வெள்ளப் பெருக்கால் வேரொடு சாய்ந்து வெள்ளத்தொடு போதல் கண்கூடு. கரை மரத்திற்கே அந்நிலையாயின், கரை இலா ஆற்றின் மரத்திற்கு எந்நிலையாகும்?

ஒரு நாள் வெள்ளமன்று; ஓரிடத்து வெள்ளமன்று; பல்கால் பற்பலவிடத்து வெள்ளம் உடையது—மொழி யென்னும் ஆறு! பல்லாயிரம் ஆண்டாகத் தொடரும் கால வெள்ளம்! பொது மக்கள், அரசு, சமயம், கலை, பழக்க வழக்கம், நாடு, இனம், வட்டாரம், போக்கு வரவு இன்னனவெல்லாம் ஓயாமல் ஒழியாமல் தாக்கும் புதுப்புது வெள்ளங்கள்! இவற்றுக்கு எல்லாம் காப்பாகி—வளர்ச்சி யாகி—வாழ்வாகித் திகழ வாய்த்த மொழியாற்றின் கரை — திண்கரை — காலந்தொறும் கண்காணிக்கப் பட்டும் — வலுப்படுத்தப்பட்டும் — சீர்திருத்தப்பட்டும் வரவேண்டிய நலக்கரை — இலக்கணமே!

**'' அளவளாவு இல்லாதான் வாழ்க்கை குளவளா**
**கோடின்றி நீர்நிறைந் தற்று''**

என்பது வள்ளுவம். கோடு (கரை) இன்றி நீர் நிறைந் தால், நன்மை செய்யும் நீரே தீமை செய்தற் சான்று. மொழிக்குக் கரையின்மை, நன்மைக்கு அமைந்த மொழி தீமைக்கு இடமாகிப் போதலாய் முடியும்.

உலகெல்லாம் நோக்கினால் ஆட்டத்திற்குத் தனியிடம் இருத்தல் தெளிவு. ஆட்டம் என்பது விளையாட்டு! எத்தனை எத்தனை ஆயிரம் பேர் என்னும் நிலையில்லை. தொலைக் காட்சி வந்த பின், கோடி கோடிப் பேர் என்னல் வேண்டும்! இருந்த இடத்தில் இருந்து, ஆடற்களத்தை நோக்கிக் களிப்புறுகின்றனர்! அவ்வாடற் களத்திற்கு எத்தனை நிலவரைகள் — கோடுகள் — குறிகள்! அவ்வாடற் கலைக்கு எத்தனை சட்டதிட்டங்கள்! நெஞ்சத்தின் ஆடலாய், நாவின் ஆடலாய், கையின் ஆடலாய், குறிப்பின் ஆடலாய்த் திகழும் மொழிக்கு 'வரைகளும்' 'விதிகளும்' இல்லையேல் என்னாம்? மொழியென ஒன்றுண்டோ? மொழியின் சிறப்பு நாம் உணர வேண்டுமா?

எந்த இடத்திற்கும் பெயரில்லை; எந்தப் பொருளுக்கும் பெயரில்லை; பார்க்கும் எதற்கும் பெயரில்லை; செய்யும் எதற்கும் பெயரில்லை; சொல்லே இல்லாத உலகம்—அந்த உலகத்திலே நாம்! நம் கருத்தை வெளிப்படுத்த வகை என்ன?

கண்டும் கேட்டும் உண்டும் உயிர்த்தும் உற்றறிந்தும் எத்தனை எத்தனை கோடிப் பேர்கள், எத்தனை எத்தனை கால காலங்களாக, உருவாக்கியும் திருவாக்கியும் வைத்தது மொழிவளம்! அவ்வளத்தின் அடிப்படைச் சிறப்பையும் அறியாமையாலேயே — விடுதலையின் விலை மானத்தையும் விழுப்பத்தையும் அறியாமையால் நிகழும் நிகழ்ச்சிக் கேடுகள் எத்துணை! அவற்றைப் போலேயே — மொழிச் சிதைவையும் கேட்டையும் செய்து வரும் சிறுமைச் செயலரும், காலந்தோறும் பல்வேறு பெயரில் வடிவில் வந்துளர்! இவற்றுக்கெல்லாம் ஈடுதந்து வெற்றி கண்டு வாழ்தற்கு அமைந்தது இலக்கணக் கட்டுக் கோப்பே!

சான்றோர் ஒழுகும் ஒழுக்கமும், அவர்களின் சீரிய பண்பாடுகளுமே ஒழுக்க நூலாகவும். சட்டமுறைகளாகவும்

கிளர்ந்துள. அவ்வாறே சான்றோர் கொண்ட மொழித் தேர்ச்சிக் கருத்துகளே, இலக்கண நூலாய் எழுந்தன. இக்குறிப்பை என்றும் போற்ற வேண்டும் என்றே,

**" உலகம் என்ப துயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாக லான"**

என முன்னை நூலோன் மொழிந்தனன் என்க.

இலக்கணம் என்பது முழுமை அல்லது பிண்டப் பெயர். அது கிளர்ந்து வளர்ந்த வரலாறு பெரிது. அதன் பரப்பும் — அழியாமல் காக்கப்பட்ட நூல்களின் எண்ணிக்கை ஒரு பாதிதானும் இல்லையெனினும் — பெரும் பரப்பே! அப்பரப்பைக் கால வரிசையில் பார்ப்பது இலக்கண வரலாறு.

கால வரிசைப் பார்வை, தனிமாந்தர் வரலாற்று நிலையின் போக்குகளைத் தெளிவிக்க உதவும். அது போல் காலவரிசைச் சமுதாயப் பார்வை, ஓரினத்தின் வாழ்ச்சி வீழ்ச்சிக் களங்களைத் தெளிவிக்கும் இவ்வகைப் பார்வை இலக்கணத்திற்கும் பார்க்குங்கால், அதன் வளர்நிலை — தளர்நிலைகளும், செய்தக்கன, செய் தகாதன என்பனவும் தெளிவிக்கும்.

இயல், இசை, நாடகம் என முத்தமிழ்க்கும் இலக்கணம் ஒருமொத்தமாக இருந்தது என்பது உரைக் குறிப்புகளே. தனித்தனி இலக்கணம் இருந்தன என்பதற்கே சான்றுகள் உண்டு. இயற்கையும் அதுவே.

நரம்பின் மறையைச் சுட்டும் தொல்காப்பியர் அதனை, அம்மறையில் கண்டு கொள்ள ஏவினாரே அன்றி விரித்தார் அல்லர். நுவல்வதும் பொருந்தாது எனக் கொண்டார் என்பது அந்நூற்பா நடையால் புலப்படுதலும் ஒருதலை.

**" அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
**உளவென மொழிப இசையொடு சிவணிய**
**நரம்பின் மறைய என்மனார் புலவர்"** (தொல். 33)

"அகத்தெழு வளியிசை அரில்தப நாடி
அளபிற் கோடல் அந்தணர் மறைத்தே
அஃதிவண் நுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை அளவு நுவன் றிசினே"
(தொல். 102)

என்பவற்றை அறிக. தமக்கு முன்னரே 'நரம்பின் மறை' (இசை நூல்) தனித்திருந்தமையும் 'அந்தணர் மறை' தனித்திருந்தமையையும் அவற்றை இவண் கூறவில்லை என்றும் கூறியமையையும் தெளிக.

இனி, வெளிப்படத் தெரிந்த வகையான் தமிழ் இலக்கணம் முக்கூறு பட நடந்தது என்பதே.

தொல்காப்பியம் வழக்கும் செய்யுளும் ஆய்ந்து செய்த நூலாகலின், அந்நூலுக்கு முந்து நூல்களும் அம்முக்கூறு பட நடந்தன என்பதே உண்மையாம்.

பொருளதிகாரம் வாழ்வியல் கூறு மல்கியது. விரிவுக்கு இடனாகியது. செய்யுளியல் பொருளதிகாரப் பரப்பில் மிகப் பெரியது. அச்செய்யுளியலை மட்டும் தனியே வாங்கிக் கொண்டு நூல் செய்யும் வழக்கு, தொல் காப்பியத்திற்கும் யாப்பருங்கலத்திற்கும் இடைப்படப் பெருகியிருந்தமை வெளிப்பட விளங்குகின்றது.

சங்கயாப்பு, பல்காயம், அவிநயம், காக்கைபாடினியம், சிறுகாக்கை பாடினியம், பெரியபம்மம், மயேச்சுரம், நற்றத்தம், பனம்பாரம், பரிமாணம், வாய்ப்பியம், அடிநூல் இன்னவெல்லாம் யாப்பிலக்கண நூல்களே. ஆகலின், செய்யுளியல் தனியே ஓர் இலக்கணமாக — யாப்பாக — வளர்ந்த நிலை இது. ஆதலால், இறையனார் களவியலுரை எழுத்தும் சொல்லும் யாப்பும் வல்லாரைத் தலைப்பட்டும் பொருள் வல்லாரைத் தலைப்படாமை பற்றிக் கூறலாயிற்று. ஆதலால், தொல்காப்பியருக்குப் பின் முதற்கண் யாப்பிலக்கணம் தனியே பிரிந்து நூற்

பெருக்கமும் கொண்டு **தமிழ் இலக்கணம் நான்காக நடத்தலாயிற்று**. இதன் விரியே யாப்பருங்கலம், யாப்பருங் கலக் காரிகை என்பன.

இனி, உவமை தொல்காப்பியத்தில் ஓரியலாக இருந்தது. அதன் வகைகள் நூல் வழியாகவும், உரை வழியாகவும் பலவாக விரிந்தன. மெய்ப்பாட்டியல் கூறுகள் சிலவும், யாப்பியல் கூறுகள் சிலவும், சங்க நூல், திருக்குறள் முதலாகிய இலக்கியக் கொடைகள் சிலவுமாக '**அணியியல்**' என ஓரியல் தனித்துக் கிளர ஏவின. அக்காலத்தை அடுத்தே வடமொழி அணி நூற்செய்திகளும் தமிழ்ப் புலவர்களைக் கவர்ந்தன. அவ்வகையில் தண்டியலங் காரம் தனித்து அணியிலக்கணமெனக் கிளர்ந்தது. அதன் வழியிலே சந்திராலோகம், குவலயானந்தம் என்பனவும் தோன்றின. மாறனலங்காரம் என்பதும் பிறவும் வளர்ந்தன.

இயல்பாக இருந்த பொருள், அகம் புறம் எனத் தொல்காப்பியப் பகுப்புடையதாக விளங்கியது. அப் பகுப்பிலும் அகப்பகுப்பு விரிவுடையது. அகத்திணை யியல், புறத்திணையியல் என்பவை தனித்தனி பகுக்கப் படினும், முன்னொடு களவியல், கற்பியல், மெய்ப் பாட்டியல், செய்யுளியல் என்பனவும் தொடர்புடையன வாக நின்றன. அப்பகுப்பே, **அகப்பொருள் நூல்கள்** தனிவடிவங் கொள்வதற்கு மூலமும் முடிபுமாக நின்றன. அகத்திணை இயல் அப்பெயராலேயும், களவியல் கற்பியல் என்பனவும் அவ்வப்பெயர்களாலேயும் இம்மூவியல்களும் ஒரு நூலாகவும் அமைந்தன. அவ்வகையில் இறையனார் களவியல் ஓராற்றாற் செல்லினும், முற்றாக நம்பியகப் பொருள் செல்வதாயிற்று. திருக்குறள் போலும் இலக்கியமும் களவியல் கற்பியல் பகுப்பைப் போற்றின. அகத்திணைப் பொருள் சார்ந்த ஐந்திணை நூல்களும், ஐந்திணைத் தொகை நூல்களும் எடுத்துக்காட்டாகப் பெருகி விளங்கின. இவற்றால் அகப்பொருள் தனிப்

பிரிவாக விளங்கிற்று. அவ்வகையில் களவியல், அகப் பொருள் விளக்கம், களவியல் காரிகை, மாறன் அகப் பொருள் இன்னவை சுட்டத்தக்கன.

**புறப்பொருள்** பற்றியும் தனி நூல்கள் உண்டாயின. அவை விரிவுடையன அல்ல எனினும், பன்னிரு படலம் என்பதும், புறப்பொருள் வெண்பாமாலை என்பதும் குறிப் பிடத்தக்கன. புறநானூறும் பதிற்றுப்பத்தும் புற இலக்கிய மாக விளங்கின. பாட்டு தொகைப் பரப்பில் இவ்விரண்டே புறப்பொருளாதல் போல, பிற்கால இலக்கணப் பரப்பில் சுட்டிய இரண்டே புறப்பொருள் இலக்கணமாக அமைந்தன. அதன் காரணம் நூலின் அகத்தே ஆயப் படுதலைக் கண்டு கொள்க.

இனி, **பாட்டியல்** என்பது பழையது ஒருபாலும், புதுவது ஒருபாலும் ஆகிய ஒரு வகைப்பட்ட நூல் ஆயிற்று. பழையது என்றது பள்ளு, குறவஞ்சி, பாடாண், செவி யறிவுறூஉ என்பன போன்ற நூல்வகை விரிவு. தொல் காப்பியக் குறிப்பு, திணை, துறை முதலியவற்றைத் தனித் தனி வாங்கிக் கொண்டு விரிந்தவை. அப்பகுதி இலக்கிய வகைப் பெருக்கத்திற்கு உதவின. ஆனால், பொருத் தங்கள் என்று கண்டு, எழுத்துகளுக்கும் வருணச் சாயம் பூசி, அமுதும் நஞ்சும் ஏற்றி, நாளும் கோளும் ஊற்றி, ஆக்கமாவதுபோல் அழிவுக்கு வகை செய்த நூல் வகை அது.

பன்னிரு பாட்டியல், வெண்பாப் பாட்டியல் முதலாகப் பாட்டியல் நூல்கள் பல்கின. யாப்பருங்கலத்திற்கு முன்னே யாப்பு நூல் எத்துணைப் பெருக்கம் கொண்டதோ அதனினும் விஞ்சிய பெருக்கத்தைப் பாட்டியல் நூல்கள் பின்னே கொண்டன. அதனினும் கேடு, அப்பிற்கால நூற்பொருள் கொண்டு, முற்கால நூல்களையும் பார்த்து மதிப்பிடும் ஒரு பார்வை!

பாட்டியல் தனியே வரினும், ஐந்திற்கு மேல் ஆறாம் இலக்கணம் எனப் பெயர் பெற்றிலது. அதனைச்

செய்யுளியலொடு அல்லது யாப்பியலொடு சார்த்தி வைக்கும் அளவிலேயே நின்றது. தனி இலக்கண வடிவு பெற்றும் எண் பெறாத இலக்கணமாக அமைந்தது அது.

**ஆறாம் இலக்கணம்** எனப் புலமை இலக்கணத்தைக் கொண்டார் தண்டபாணி அடிகளார். அதிலுள்ள சில செய்திகள் பாயிரம் பற்றி வருவன (நூலாசிரியன் பற்றியன). எனினும் அடிகளார் பார்வை தனிப் பெரும் பார்வை. அவர்தம் நூலின் பெயர் அறுவகை இலக்கணம் என்பது. ஏழாம் இலக்கணமும் அடிகளார் இயற்றினார் என்பதை,

> " **ஆழா அரிய அனேக விதிநிறீஇ**
> ஏழாம் இலக்கணம் **எனவுமொன் றியம்பினன்**"

என்று பூவை கலியாணசுந்தரர் கூறும் சிறப்புப் பாயிரத்தால் அறியலாம். அதனைப் 'பொதுமை' இலக்கணம் என்பர்.

**இவ்விலக்கண** வரலாறு, தன் பெயர் விளக்கம் முதலாக ஐம்பது பகுப்புகளையுடையது. இப்பகுப்புகளில் இடம் பெறாத **இலக்கண நூற்பட்டி**யினை இணைப்பாகக் கொண்டது. **சிறப்புப் பெயர் அடைவும்** இணைப்பாகக் கொண்டது.

தெரிந்த வகையான் **கால அடைவில்** வருவது. காலம், ஆய்வால் மாறுதலும் கூடும். இலக்கண வரலாறு என்பதை உட்கொண்டு, **நூலாசிரியரைப்** பற்றிய முழு வரலாறும் கொண்டதில்லை. குறிப்பாகச் சில செய்திகளே வரும். இயன்ற வகையால் **உரை நயம், நூல் நயம்** ஆகியனவும் குறிக்கப்படுகின்றன.

**பதிப்பு, பதிப்பாளர்** பற்றிய செய்திகளும் அவ்வப்பகுதியிலேயே இடம் பெறுகின்றன. உரையாசிரியர்கள், உரை நயங்கள் என்றெல்லாம் பல நூல்கள் வெளிவந்துள்ளன. திறனாய்வு நூல்கள், இலக்கணக் கட்டுரைகள், இலக்கண

ஆசிரியர் வரலாறுகள், புலவர் வரலாறுகள், இலக்கிய அகராதி என்பனவெல்லாம் வெளிவந்துள்ளன.

கால அடைவில் இலக்கிய வரலாறுகள் வெளிவந் துள்ளன; வெளிவந்து கொண்டும் உள்ளன. எனினும் **'இலக்கண வரலாறு'** என ஒரோ ஒரு நூல் வந்தமையே அறிய வருகின்றது. அது **பேரா. சோம இளவரசு** அவர் களால் எழுதப்பட்டது. மேலே சுட்டப்பட்ட நூல்கள், இவண் எடுத்துக் கொண்ட இலக்கண நூல்களின் பல்வேறு பதிப்புகள் ஆகியன இவ்வாய்விற்குப் பயன்பட்டுள்ளன. இவற்றைக் குறைத்து எண்ணினும் முந்நூற்றுக்கு மிகைப் படலால், தனிப்பட்டி தந்திலேன். அச்சில் வாராமல் **ஏட்டுச் சுவடி** அளவாற் படியெடுத்து வைக்கப்பட்ட-என் கைப்படிகள்-சிலவும், அச்சிட்டும் மறைந்து விட்ட நூல்கள் சிலவும் இவ்வரலாற்றில் இடம் பெற்றுள.

இந் நூலுக்கு மூதறிஞர் செம்மல் **வ. சுப. மாணிக்க னார்** அணிந்துரை வழங்கியுள்ளனர். 'தொல்காப்பியக் கடலாய்', 'வள்ளுவமாய்', 'தமிழ்க் காத'லாய்த் திகழும் அவர்கள் இந்நூலை, மொழிநலம் காக்கும் நயத்தகு நக்கீரக் காவலர்! இலக்கண வரலாற்றுக்கு அவர்கள் அணிந்துரை வாய்த்துள்ளமை, தனிப்பேறெனஎண்ணி நெஞ்சார்ந்த நேயத்தைப் படைத்து மகிழ்கின்றேன்.

உரையாசிரியர் என்னும் உரைசால் நூலை வழங்கிய நல்லறிஞர் **மு. வை. அரவிந்தனார்** இந்நூலுக்கு ஆய்வுரை வழங்கியுள்ளனர். அவர்கள், இந்நூலினை முற்றாக நுணுகி ஆய்ந்து கூறியுள்ள திறம் வியப்புறுத்துகின்றது. அவர்கள் கூறியவாறு 'சேர்க்க வேண்டிய செய்திகள்', 'மறு ஆய்வுச் செய்திகள்' 'ஆசிரியர் நினைவுக்கு' என்னும் பகுதிகள் என் உள்ளங்கவர்ந்து உவப்புச் செய்வன. அவற்றுள், ஏற்பன மறு பதிப்பில் செய்யப்படும். 'நிகண்டு களின் வரலாறு' இலக்கண வரலாறு போலத் தனி வரலாறு பெறவேண்டிய ஒன்று என்பது என் உட்கோள்.

இலக்கணம் கற்பாரால் முற்பட அறியப்பட வேண்டியது, அது 'வளர்ந்த வரலாறு' எனக் கருதியமையால், 'முகப்பு' ரையிலேயே அதனைச் சுருங்க உரைத்துள்ளேன் எனச் சுட்டி அமைகின்றேன். நூல் மதிப்பீட்டாளர், இத்தகு ''நூனிறை காட்டி நுணங்கரில் உணர்த்தும்'' மரபு மேற் கொண்டால் மொழிநலம் சிறக்குமென மொழிந்து நன்றி கூறுகின்றேன். 'இலக்கண வரலாறு' என்னும் பெயரிய நூலில் அதன் கோட்பாடுகள், ஆய்வுகள் அனைத்தும் இடம் பெறச் செய்வதாயின்''... என்பதும் எண்ணத் தோன்றுகின்றது!

இவ்விலக்கண வரலாற்றை எழுதத் தூண்டியவர் பேரா. **மெய்யப்பனார்.** அவர்தம் ஆர்வம் பெரிது. அவ்வார்வம் போலவே அன்பும் நண்பும் பெரிது. அவற்றைப் போலவே எறும்பும் சுரும்பும் தோற்கும் சுறுசுறுப்பும் பெரிது. இன்னவெல்லாம் வாழ்வியலுக்கு வளக் கொடைகள்.

இக்கொடைகளைப் பெற்ற ஒருவர் தமிழ்கூறு நல்லுலகக் கொடையாக இந்நூலை வழங்குகின்றார். இக் கொடைக்கு எளியேன் ஒரு பொருளாக இருந்தமை, அன்னைத் தமிழின் கொடையே என்பதை நினைந்து உருகுவதல்லால் ஒன்றறியேன். அவர் வாழி! அவர்தம் அருந்தமிழ்த் தொண்டு வாழி!

தமிழ்ச் செல்வம்,
பாவாணர் ஆராய்ச்சி
நூலகம்,
திருநகர், மதுரை-6.

தமிழ்த் தொண்டன்,
**இரா. இளங்குமரன்**

# உள்ளுறை


1. இலக்கண வரலாறு ... 1
2. முந்து நூல் ... 10
3. அகத்தியம் ... 19
4. தொல்காப்பியம் ... 34
5. தொல்காப்பிய உரைகள் ... 63
   (அ) இளம்பூரணம் ... 65
   (ஆ) சேனாவரையம் ... 88
   (இ) பேராசிரியம் ... 101
   (ஈ) நச்சினார்க்கினியம் ... 116
   (உ) கல்லாடம் ... 130
   (ஊ) தெய்வச் சிலையம் ... 134
   (எ) பழைய உரை ... 145
   (ஏ) தொல்காப்பியச் சூத்திர விருத்தி ... 148
   (ஐ) தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முதற்பகுதியாகிய பாயிர விருத்தி ... 151
   (ஒ) நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் பொருட்படலப் புத்துரை ... 154

(ஒ) புலவர் குழந்தையுரை ... 157

(ஔ) தொல்காப்பியத் தொடர் பணிகள் ... 161

6. இறையனார் அகப்பொருள் ... 166

7. பிந்து நூல்களின் முந்து நூல்கள் ... 181

(அ) அவிநயம் ... 182

(ஆ) காக்கை பாடினியம் ... 186

(இ) சங்க யாப்பு ... 190

(ஈ) சிறுகாக்கை பாடினியம் ... 191

(உ) நத்தத்தம் (நற்றத்தம்) ... 193

(ஊ) பல்காயம் ... 196

(எ) பன்னிரு படலம் ... 198

(ஏ) மயேச்சுரம் ... 200

8. புறப்பொருள் வெண்பாமாலை ... 203

(அ) வெண்பாமாலை உரை ... 208

9. தமிழ் நெறி விளக்கம் ... 211

10. யாப்பருங்கலம் ... 216

(அ) விருத்தியுரை ... 221

11. யாப்பருங்கலக் காரிகை ... 229

12. வீரசோழியம் ... 240

13. இந்திர காளியம் ... 254

14. நேமிநாதம் ... 256

15. வெண்பாப் பாட்டியல் ... 264

16. தண்டியலங்காரம் ... 269

17. நன்னூல் ... 278

(அ) மயிலைநாதர் ... 286

(ஆ) ஊற்றங்கால் ஆண்டிப் புலவருரை ... 291

(இ) சங்கர நமச்சிவாயருரை ... 294
(ஈ) சிவஞான முனிவர் புத்தம் புத்துரை ... 299
(உ) கூழங்கைத் தம்பிரான் உரை ... 301
(ஊ) இராமாநுசக் கவிராயர் உரை ... 302
(எ) விசாகப் பெருமாளையர் உரை ... 307
(ஏ) ஆறுமுக நாவலருரை ... 309
(ஐ) சடகோப ராமாநுசாசாரியார் ... 312
(ஒ) நன்னூல் பிற பதிப்புகள் ... 313

18. அகப்பொருள் விளக்கம் ... 315
19. களவியற் காரிகை ... 323
20. பன்னிரு பாட்டியல் ... 328
21. நவநீதப் பாட்டியல் ... 332
22. வரையறுத்த பாட்டியல் ... 336
23. சிதம்பரப் பாட்டியல் ... 339
24. மாறனலங்காரம் ... 342
25. மாறனகப் பொருள் ... 350
26. பாப்பாவினம் ... 354
27. சிதம்பரச் செய்யுட்கோவை ... 358
28. பிரயோக விவேகம் ... 361
29. இலக்கண விளக்கம் ... 366
30. இலக்கண விளக்கச் சூறாவளி ... 374
31. இலக்கணக் கொத்து ... 378
32. தொன்னூல் விளக்கம் ... 386
33. பிரபந்த தீபம் ... 392
34. பிரபந்தத்திரட்டு ... 394
35. இரத்தினச் சுருக்கம் ... 397
36. உவமான சங்கிரகம் ... 400

37. முத்து வீரியம் ... 402

38. சுவாமி நாதம் ... 411

39. சந்திராலோகம் ... 414

40. மாணிக்கவாசகர் குவலயானந்தம் ... 417

41. அப்பைய தீட்சிதர் குவலயானந்தம் ... 421

42. அறுவகை இலக்கணம் ... 423

43. விருத்தப் பாவியல் ... 430

44. மாணவர் தமிழ் இலக்கணம் ... 432

45. தமிழ் இலக்கணக் கும்மி ... 434

46. தமிழ் நூல் (தமிணூல்) ... 436

47. யாப்பு நூல் ... 440

48. திருக்கோவைக் கிளவிக் கொத்து ... 442

49. திருக்கோவைக் கொளு ... 444

50. உரைநடையிலமைந்த சில இலக்கண நூல்கள் ... 446

# 1. இலக்கண வரலாறு

**இலக்கணம்** என்பது பழந்தமிழ்ச் சொல். அது தொல்காப்பியத்தில் பல் கால் இடம் பெற்றுள்ள சொல்.

**“ புறத்திணை இலக்கணம் ”** (1002)

**“ இழைபின் இலக்கணம் ”** (1498)

என இலக்கணச் சொல்லாட்சிகளைச் சுட்டுகிறார் தொல் காப்பியனார்.

**“ செய்யுள் மருங்கின் மெய்பெற நாடி**
**இழைத்த இலக்கணம் ”** (1499)

என்றும்,

**“ ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்**
**வழக்கின் ஆகிய உயர்சொற் கிளவி**
**இலக்கண மருங்கின் சொல்லா றல்ல ”** (510)

என்றும், இலக்கணச் சொல்லாட்சி மேற்கொள்கிறார்.

இலக்கணம் என்பது ‘இலக்கு அண் அம்’ என்னும் முப்பகுப்பு ஒரு சொல். இலக்கு என்பது குறி. “இலக்கம் உடம்பு இடும்பைக்கு” என்பது திருக்குறள் (627). ‘அண்ணுதல்’, நெருங்குதல். ‘அம்’ என்பது பெருமைப் பொருள் ஈறு.

குறி என்பதே இலக்கணப் பொருள் தருவது என்பதும் இவண் எண்ணத் தக்கது.

இலக்கணம் என்பதை விளக்குகிறார் **பாவாணர்:**

"இலக்கு — இலக்கணம் = சிறந்த நடைக்கு எடுத்துக் காட்டாக அல்லது கற்றோர் பின்பற்றும் இலக்காக, கூறப் பெறும் மொழியமைதி (Grammer).

வடமொழியில் குறி, குறிக்கோள், இயல், இயல் விளக்கம் (Definition), விளக்கக்காட்டு (Illustration) என்னும் பொருள்களிலேயே லக்ஷ்ண என்னும் சொல்லை ஆள்வர்.

லக்ஷ் என்னும் சொற்கு லக் (Lag = That which is a attached or fixed) என்பதை மூலமாகக் காட்ட முயல்வது பொருந்தாது" — வடமொழி வரலாறு, பக்கம் 90.

வடமொழியாளர் தம் இலக்கணத்தை 'வியாகரணம்' என்பர்; இலக்கணம் என்னார். இலக்கணம் வடசொல் என்பார் இதனை எண்ணிப் பார்த்தல் வேண்டும். எ-டு: பாணினி வியாகரணம்.

இசை கூத்து முதலிய கலைகளுக்கும் பண்டே இலக்கணம் இருந்தமை,

**" இருவகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து "**

எனவரும் சிலம்பால் (3:12) அறிய வரும். இவ்வடிக்கு வரும் அரும்பதவுரை, அடியார்க்குநல்லாருரை ஆகியவற்றால் அவ்விலக்கண நூற் சான்றுகளையும் விரிய அறியலாம்.

**குறி:** குறி என்பதும் இலக்கணம் என்னும் பொருள் தருவதைக் குறித்தோம். இலக்கணம் வல்லோர் 'குறியறிந்தோர்' எனப்பட்டனர்.

**" உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்**
**கொள்ளும் என்ப குறியறிந் தோரே "**

என்னும் அகத்திணை நூற்பாவால் அப்பொருள் வருதல் தெளிவாம். (தொல். 993.)

**நூல்:** நூல் என்பது பழநாளில் இலக்கணத்தையே குறித்தது.

நூல் என்னும் பெயராலேயே நாடகத் தமிழ் நூல் ஒன்று இருந்ததைக் குறிக்கிறார் அடியார்க்கு நல்லார்; அந்நூற்பாவையும் சுட்டுகிறார் (சிலம்பு; உரைப்பாயிரம்).

குணநூல், கூத்தநூல், மதிவாணர் நாடகத் தமிழ் நூல், நன்னூல், சின்னூல், தொன்னூல் விளக்கம் என்னும் பெயரினவெல்லாம் இலக்கண நூல்களே என்பதும், நூல் யாத்தற்குரிய பாவே 'நூற்பா' எனப் பட்டது என்பதும் எண்ணத் தக்கன. இலக்கணப் புலவர் 'நூல் நவில் புலவர்' எனப்பட்டனர் (தொல். 1411) என்பதும் எண்ணத் தக்கதே.

அடிவரையறை இல்லாத செய்யுள்களை யுரைக்கும் தொல்காப்பியர் 'நூலினான' என்றதும், ''அவற்றுள், நூலெனப் படுவது நுவலுங் காலை'' என அதன் இலக்கணம் நூற்பதும், 'நூற்பா' என்னும் பின்னாட்சிக்கு முன்னோடிகள் (தொல். 1421, 1422).

நூற்பா என்பதைத் திவாகரர் அதன் யாப்பியல் விளங்க 'நூற்பா அகவல்' என்றார்;

**'' நூற்பா அகவல் நுணங்க நாடில்**
**சூத்திரங் குறித்த யாப்பிற் றாகி**
**அடிவரை யின்றி விழுமிதின் நடக்கும் ''**

என அதன் இலக்கணம் கூறினார்.

''நூல் என்பது இடுகுறியால் பெற்ற பெயர்'' என இறையனார் களவியலுரை, நன்னூல் மயிலை நாதருரை ஆகியவை குறிக்கும்.

''இடுகுறியால் பெயர் பெற்றன நிகண்டு, நூல், கலைக் கோட்டுத் தண்டு'' என்பது களவியல் (1). இதனையே மயிலைநாதர் உரையும் குறிப்பிடும். (நன்னூல். 48).

நூல் இன்னதென விளக்கும் இறையனார் களவிய லுரை, ''நூல்போறலின் நூல் என்ப'' என்று தொடங்கி,

"பெரும் புலவன் தனது உணர்வு மாட்சியில் பிண்டம் படலம் ஒத்து சூத்திரம் என்னும் யாப்பு நடை படக் கோத்தல் ஆயிற்று" என விரித்துரைக்கிறது.

தொல்காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர், "வினையின் நீங்கி விளங்கிய அறிவனாலே வழுக்களைந்து எஃகிய இலக்கணங்களை யெல்லாம் முதலும் முடிவும் மாறுகோள் இன்றாகவும் தொகையிலும் வகையிலும் பொருண்மை காட்டியும் உரையும் காண்டிகையும் உள் நின்று அகலவும் ஈரைங் குற்றமும் இன்றி ஈரைந்தழகு பெற முப்பத்திரண்டு தந்திர உத்தியொடு புணரவும் ஒரு பொருள் நுதலிய சூத்திரத்தானும் இனமொழி கிளந்த ஒத்தினானும் பொது மொழி கிளந்த படலத் தானும் மூன்றுறுப் படக்கிய பிண்டத்தானும் ஒரு நெறிப் படப் புணர்க்கப்படூஉம் தன்மை உடைமையின் என்க" என்று மேலும் விரித்தெழுதுவார். இவற்றை நோக்க நூல் என்பது இலக்கணத்தின் குறியீடே என்பது தெளிவுற விளங்கும். 'நூன்முறை' என்பதும் அதுவே. நூலின் இயல்பு நன்னூலில் ஒரு நூற்பாவாகவே இயல் கின்றது (4).

நூல் என்பது இடுகுறியன்று. அது நன்னூலார் முதலாம் பின்னூலார் காலந்தொட்ட வழக்கு.

நுவல்வது யாது, அது 'நூல்' என்க. "நூலே நுவல் வோன் நுவலுந்திறனே", "நூலின் இயல்பே நுவலின்", "நூல் பயில் இயல்பே நுவலின்" என வருவனவற்றால் நூலுக்கும் நுவலுதலுக்கும் உள்ள தொடர்பு புலனாம். நுவலப்பட்டது நூல் என்க. இலக்கணம் கூறுதலே பண்டு நுவலுதல் எனப்பட்டது என்பது இதனால் விளக்கமுறும்.

**புலன் :** புலன் என்பதும் இலக்கணம் என்னும் பொருளதாம். இலக்கண வல்லுநரைப் 'புலன் நன்குணர்ந் தோர்' என்பதும் தொல்காப்பிய நடையே.

**" திணைமயக் குறுதலும் கடிநிலை யிலவே**
**நிலனொருங்கு மயங்குதல் இல்லென மொழிய**
**புலன்நன் குணர்ந்த புல்மை யோரே"**

என்றும்,

**" தெரிந்த மொழியாற் செவ்விதிற் கிளந்து**
**தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றிற்**
**புலனென மொழிப புலனுணர்ந் தோரே"**

என்றும் அவர் நூற்றலால் வலியுறும் (958, 1497). சிறப்புப் பாயிர உரையில், "புலம் என்பது இலக்கணங்களை" என நச்சினார்க்கினியர் வரைவதும் இப்பொருளைத் தெளிவிக்கும்.

**எழுத்து, இயல்பு, முறை, மரபு :**

இனி, **எழுத்து** என்பதும் இலக்கணத்தைக் குறித்தல் அறியப் பெறுகின்றது.

**" எழுத்தறியத் தீரும் இழிதகைமை தீர்ந்தான்**
**மொழித்திறத்தின் முட்டறுப்பான் ஆகும் —**
**மொழித்திறத்தின்**
**முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து**
**கட்டறுத்து வீடு பெறும்"**

என்னும் வெண்பாவை, "எண்ணென்ப ஏனை எழுத்தென்ப" என்னும் குறட்பா விளக்கத்தில் (392) பரிமேலழகர் காட்டுதலால் அது விளங்கும்.

**இயல்பு** என்பது இலக்கணப் பொருள் தருதல், "இயல்பென மொழிப இயல்புணர்ந்தோரே" என வரும் தொல்காப்பியத்தால் (950) தெளிவாம். **முறை** என்பதும் இலக்கணப் பொருளில் வழங்கப் பெற்றமை அறிய வருகின்றது.

**" இறையும் கேள்வி யிலாதவென் புன்கவி**
**முறையில் நூலுணர்ந் தோரும் முனிவரோ"**

என வரும் கம்பர் அவையடக்கப் பாடலும்,

"இறைநிலம் எழுதுமுன் இளைய பாலகன்
முறைவரை வேனெண முயல்வ தொக்குமால்"

என வரும் கச்சியப்பர் அவையடக்கப் பாடலும் அறிக.

"முக்காற் கேட்பின் முறையறிந் துரைக்கும்"

என்பது நன்னூல். **மரபு** எனினும் இலக்கணம் எனினும் எல்லாம் ஒரு பொருட் பன்மொழி என்னும் களவியலுரை (3) மரபு இலக்கணப் பொருளதாதலைக் குறிக்கும்.

**வரலாறு :**

வரலாறு என்பது வரும் வழி, வரும் முறை என்னும் பொருளது. ஆறு வருகின்ற வருகையை, "யாறு வரலாறு" என்கிறது பரிபாடல் (6:42). அதன் பழைய வுரை, "இவ் யாறு வருகின்ற வாறு" என உரை தருகின்றது.

வரலாறு **'வரன்முறை'** என்பதுமாம். வரன்முறை என வரும் தொல்காப்பியத் தொடர்க்கு (எழுத். 137) **'வரலாற்று முறைமை'** என்று உரை விரித்தார் உரையாசிரியர் இளம்பூரணர்.

வரலாற்று வகைகள் மிகப்பல. அவற்றுள் ஒன்று மொழி வரலாறு. மொழி வரலாற்றின் ஒரு சிறப்புக்கூறு இலக்கண வரலாறு; மற்றொரு சிறப்புக்கூறு இலக்கிய வரலாறு.

இலக்கிய வரலாறு முன்னது; விரிவுடையது; இலக்கண வரலாறு பின்னது; அவ்விலக்கிய வரலாற்றினும் அளவால் சுருங்கியது.

"இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பல்"

என்னும் நூற்கொள்கையே இலக்கியத்தின் முற்பாட்டையும் இலக்கணத்தின் பிற்பாட்டையும் விளக்கிவிடும். இதனை உவமையால் விளக்குதலும் நூற்கொள்கையே.

**"இலக்கியம் இன்றி இலக்கணம் இன்றே
எள்ளின் றாகில் எண்ணெயும் இன்றே
எள்ளினின் றெண்ணெய் எடுப்பது போல
இலக்கியத் தினின்றும் எடுபடும் இலக்கணம்"**

என்பது அது.

எண்ணெய் என்னும் பெயரே எள் நெய் என்பதன் வழி வந்தது தானே! அவ்வாறாக எள்ளே இல்லாமல் எண்ணெய்ப் பெயர் தானும் வந்திராதே. எள்ளும் எண்ணெயும் கொண்டுள்ள இயைபு போலவே இலக்கியமும் இலக்கணமும் இயைபுடையவை என்க. எள், எள்நெய் என்பவற்றின் முதனிலை 'எள்' என இருப்பது போலவே, இலக்கியம் இலக்கணம் என்னும் இரண்டன் முதனிலைகளும் 'இலக்கு'டன் இருத்தல் எண்ணி மகிழத் தக்கதே!

"குறிக்கோள் இலாது கெட்டேன்" என்பது நாவுக்கரசர் தேர்ச்சியுரை; உலகோர் தெளிவுறுதற்காக உரைத்த உரை. அவ்வாறே '**இலக்கு**' என்னும் முதனிலை இலக்கிய இலக்கணங்களின் படைப்பு, படிப்பு ஆகியவற்றின் அடிப்படையை அருமையாய் விளக்கி நிற்றல் கண்டு கொள்ளத் தக்கதாம்.

**"பயனில்சொல் பாராட்டு வானை மகனெனல்
மக்கட் பதடி எனல்"**

எனப்படுமாறு உரைத்துப் பயன் வழிகாட்டும் பொய்யா மொழியை உணர்ந்தார், பயனில செய்வரோ? ஆகவே' இலக்கில் தளிர்த்த பயன் மரத்திலிருந்து கனிந்த கனியே இலக்கணம் என்க.

"கோழி முந்தியதா? முட்டை முந்தியதா?" என்பது போலவோ "மரம் முந்தியதா? விதை முந்தியதா?" என்பது போலவோ வினாவி வினாவித் தடுமாறும் நிலையதன்று இலக்கிய இலக்கண முதன்மை ஆய்வு! தெளிவு உடையது அது.

வளி மறையாக, வெயில் மறையாக, மழை மறை யாக, பனி மறையாக, மான மறையாக இருந்தால் போதுமென ஒரு காலத்தில் மாந்தர் தம் வீடுகளை அமைத்துக் கொண்டனர். அமைத்து அமைத்துப் பெற்ற பட்டறிவும், வாழ்க்கையில் நேர்ந்த இயற்கைத் தூண்டல் களும் நேர்ச்சிகளும் படிப்படியே வளர இந்நாள் வள மனைகள் உருவாகி வருகின்றன. முதன்முதன் மாந்தர் வரைபடம் போட்டுக் கொண்டு மனை அமைத்தார் அல்லர். இந்நாள் வரைபடம் போட்டு ஆட்சியர் ஒப்புகை இல்லாமல் நம் உரிமையான மனை இடத்திலும் மனை யெழுப்ப இயலாது. இந்நாள் கட்டட வரைபடம் இலக்கணம் அன்னது. முந்தை மாந்தர் கட்டிய மனைகள் இலக்கியம் ஒப்பது. சிலப்பதிகாரத்தைப் பயின்ற ஒருவர் காப்பிய இலக்கணம் வகுத்தார் எனின் அவர் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பினார் என்க. இதனைத் தண்டியலங்காரம் கூறும் பெருங்காப்பிய இலக்கணத் தொடு ஒப்பிட்டுக் கண்டு கொள்க.

இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பியது ஒரு நிலை. இலக்கணம் கண்டு இலக்கியம் படைத்தல் ஒரு நிலை. இவற்றுள் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்புதலே இயற்கை முறை; வளர்ச்சி முறை. ஆனால் இடைக்கால பிற்காலங்களில் இலக்கணங்கண்டு அதற்கு ஏற்ப இலக்கியம் படைக்கும் முறையை மேற்கொண்டமை யால் ஒரே பொறிவினைப் படைப்புப்போல இலக்கியங்கள் அமைந்தன. புத்திலக்கண நெறிகளும் வளராமல் பெரிதும் கூறியது கூறலாகவே அமைந்தன.

**'' பழையன கழிதலும் புதுவன புகுதலும்**
**வழுவல கால வகையி னாலே''**

என்றிருந்தும்,

**'' கடிசொல் இல்லை காலத்துப் படினே''**

என்றிருந்தும்,

**" வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின்...... நாடி"**

என்றிருந்தும் இலக்கியப் படைப்பாளிகள் அவற்றைப் போற்றிக் கொள்ளாமையால், இலக்கணம் தன் வளர் நிலை காட்டலில் தேக்கமுற்றது. இலக்கணத்தின் முழுக் கட்டுக்கும் ஆட்பட்ட இலக்கியப் படைப்புகள் கட்டளையில் அறுக்கப்பட்ட செங்கலென ஒன்றுபோல் அமைந்து பொலிவு காட்டாவாயின. இலக்கணத்தின் ஊற்றுக் கண்ணாம் இலக்கியத்தின் இவ்வறட்சி, இலக்கணத்தைத் தாக்கி முடக்காமல் விடுமா?

தமிழ் இலக்கண நூல்களெனப் பெயர் அறியப் பெறுவனவற்றுள் ஒரு பாதி தானும் நமக்குக் கிடைத்தில. கிடைத்த அவ்வளவும் குறைந்தது என்பதற்கு இல்லை; விரிவானவையே. அவற்றைப் பற்றிய வரலாற்றுப் பார்வையில் எழுதப்படுவது இவ்விலக்கண வரலாறாகும்.

# 2. முந்து நூல்

நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் பழமையானது தொல்காப்பியம். அந்நூலின் பாயிரம், ''முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணி'', தொல்காப்பியம் செய்யப் பட்டதாகக் கூறுகின்றது. அப்பாயிரம் பாடிய **பனம் பாரனார்** தொல்காப்பியனார்க்கு ஒரு சாலை மாணவர். அவர் கூறிய முந்து நூலைக் காண்பது இப்பகுதி.

பனம்பாரனார் '**முந்து நூல்**' என்றாரே யன்றி, இன்ன நூல் என்றாரல்லர். 'முந்து நூல்' என்பது கால முன்மை சுட்டிய பொதுக் குறிப்பேயன்றி, 'இன்ன இன்ன நூல்' என்னும் சிறப்புக் குறிப்புடைய தன்று. பாயிரம் பொது வகையில் கூறினும், நூலில் யாண்டேனும் முந்து நூல் இன்னதென்னும் குறிப்பு இருப்பின், அதனைக் கொண்டு அறிந்து கொள்ள வாய்க்கும். அவ்வாய்ப்பும் இல்லாக்கால், அறுதியிட்டு உரைப்பது பொருந்துவதாய் அமையாது என்பதே உண்மையாம்.

உரையாசிரியர் என்னும் பெயருடைய **இளம்பூரணரே** தொல்காப்பிய நூலின் முதல் உரையாசிரியர். அதனா லேயே அவர் அப்பெயர் பெற்றார். அவர் ''முந்து நூல்'' என்பதற்கு, ''முதல் நூல்'' என்று பொருளும், ''முந்து நூல் கண்டு எனவே வழியும்'', என்று விளக்கமும் வரைந்தார். ''தமிழ் கூறும் நல்லுலகம்'' என்னும் பாயிரத் தொடர்க்கு, ''தமிழ் கூறும் நல்லாசிரியரது;

என்றவாறு. நல்லாசிரியர்-அகத்தியனார் முதலாயினோர். உலகம் என்பது ஆசிரியரை'' என உரையும் விளக்கமும் வரைந்தார். இதனால் தொல்காப்பியர்க்கு முன்னே இருந்தவர் அகத்தியனார் என்னும் எண்ணம் அவர்க்கு இருந்தது என்பது தெளிவாகின்றது. ஆயின் 'முந்துநூல்' 'அகத்தியம்' எனக் குறித்தாரல்லர் என்பது நினைவுறத் தக்கது.

முந்து நூல் என்பதற்கு, 'முன்னை இலக்கணங்கள்' என உரை வரையும் **நச்சினார்க்கினியர்'**, உரை விளக்கத்தில், ''முந்து நூல் அகத்தியமும் மாபுராணமும் பூதபுராணமும் இசை நுணுக்கமும். அவற்றுட் கூறிய இலக்கணங்களாவன எழுத்துச் சொற் பொருள் யாப்பும் சந்தமும் வழக்கியலும் அரசியலும் அமைச்சியலும் பார்ப்பன இயலும் சோதிடமும் காந்தருவமும் கூத்தும் பிறவுமாம்'' என்கிறார்.

மூலநூல் ஆசிரியரோ, பாயிரம் பாடியவரோ, முதல் உரையாசிரியரோ குறிப்பாகக் கூடச் சுட்டாதவற்றை நச்சினார்க்கினியர் சுட்டுதல் வியப்பும் திகைப்பும் தருவனவாம். அவ்வியப்பு திகைப்புகளை தான் ஏற்றுக்கொண்டு நடையிடுகின்றது இறையனார் களவியல் உரை. ஏனெனில் நச்சினார்க்கினியர் உரைக்கு முற்பட்ட உரை இறையனார் களவியலுரை.

முச்சங்க வரலாற்றை வரையும் அவ்வுரை, தலைச் சங்கத்தார்க்கு ''நூல் அகத்தியம் என்ப'' என்றும், இடைச் சங்கத்தார்க்கு ''நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் மாபுராணமும் இசை நுணுக்கமும் பூதபுராணமும் என இவை'' என்றும், கடைச் சங்கத்தார்க்கு ''நூல் அகத்தியமும் தொல்காப்பியமும் என்ப'' என்றும் கூறுகின்றது.

''இடைச் சங்கமிருந்தார் அகத்தியனாரும் தொல்காப்பியனாரும் இருந்தையூர் கருங்கோழி மோசியும்

வெள்ளூர்க் காப்பியனும் சிறுபாண்டரங்கனும் திரையன் மாறனும் துவரைக் கோமானும் கீரந்தையும் என இத் தொடக்கத்தார் ஐம்பத்தொன்பதின்மர் என்ப'' என அவ்வுரையே கூறுகின்றது. அவ்வுரையை அவ்வாறே வழிமொழிவதென அடியார்க்கு நல்லார் உரையும் அமைந்துள்ளது. (சிலப். உரைப் பாயிரம்). ஆக, நச்சினார்க்கினியர் காலத்துக்கு முன்னரே 'அகத்தியம்' முந்து நூல் என்னும் எண்ணம் பலர்க்கு இருந்ததென்பது தெளிவாகின்றது. இதனைப் பற்றிய செய்தியை 'அகத்தியர்' என்னும் தலைப்பில் காணலாம். இவண் தொல்காப்பியம் கொண்டு 'முந்து நூல்' ஆய்வைத் தொடர்வோம்.

'முந்து நூல்' என்பது ஒருநூல் அன்று; பலநூல்கள்; பலதிறப் பலதுறை நூல்கள். அவை பல்கிக் கிடந்தமையாலும் அவற்றுள் ஒருநூலைக் கொண்டு அல்லது ஒரு நூலைத் தழுவித் தொல்காப்பியம் செய்யப்படாமையாலும் இன்னநூல் என அவர் சுட்டினார் அல்லர். பனம்பாரரும் குறித்தாரல்லர்.

என்ப, என்மனார், என்மனார் புலவர், மொழிப, மொழிமனார், மொழிமனார் புலவர், வரையார் என்பவற்றை மட்டும் ஏறத்தாழ 300 நூற்பாக்களில் கூறுகிறார் தொல்காப்பியர்.

மேலும், உணர்ந்திசினோர், உணருமோர், அறிந்திசினோர், தெரியுமோர், தெளியுமோர், புலமையோர், புலனுணர்ந்தோர், சிறந்திசினோர், இயல்புணர்ந்தோர் குறியறிந்தோர், வகுத்துரைத்தோர், நேரிதின் உணர்ந்தோர், வயங்கியோர், வல்லோர் என்றெல்லாம் முந்து நூலாரைக் குறிக்கிறார்.

நூல்வல்ல அப்புலவர்களை நல்லிசைப் புலவர், உயர்மொழிப்புலவர், தொன்மொழிப் புலவர், நூல் நவில் புலவர், வாய்மொழிப் புலவர், யாப்பறி புலவர், நுனித்

தகு புலவர், நுணங்கு மொழிப்புலவர் என அடை பல தந்து நடைப்படுத்துகிறார்.

யாத்தனர் புலவர், சொல்லினர் புலவர், எண்ணினர், கூறுப, நேர்ந்தனர், நேரார், வகுத்தனர், நுவன்றுரைத்தனர் என்றும் ஆள்கிறார்.

'ஆசிரியர்க்க' என்று ஆணை சுட்டுகிறார். 'புலவராறே' என வழிமை காட்டுகிறார். 'முடிய வந்த அவ் வழக்கு' என நிலைப்படுத்துகிறார். 'கிளப்ப' என்று உடன் பாட்டிலும் 'கிளவார்' என்று எதிர் மறையிலும் தெளிவாக்குகிறார்.

இவற்றையும் எண்ணின் முந்துநூற் குறிப்பு மேலும் நூறாகி ஏறத்தாழ நானூறாகின்றது.

வழக்கும் செய்யுளும் ஆயிரு முதலின் எழுத்தும் சொல்லும் பொருளும் ஆய்ந்து தொல்காப்பியர் நூல் இயற்றிய செய்தியைப் பனம்பாரனார் பாயிரத்தில் குறிக்கிறார். அக்குறிப்பு தொல்காப்பியத்தில் வரும் பலப்பல சான்றுகளையும் கண்டு அவற்றின் பிழிவாகக் கூறிய செய்தியாம்.

'செய்யுளுள்ளே', 'செய்யுளுள் உரித்தே', 'செய்யுளுள் கிளக்கும்', 'செய்யுள் தொடர்வயின் மெய் பெற நிலையும்' எனச் செய்யுளியல் ஒழிந்த இயல்களிலும் பரவலாகக் கூறும் தொல்காப்பியர் கூற்றே செய்யுள் வழக்கை நாடி அவர் நூல் செய்ததை விளக்கும்.

'ஒல்வழி அறிதல் வழக்கத்தான', 'வழக்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுகல்', 'மயங்கல் கூடா வழக்கு வழிப்பட்டன', 'நெறிப்பட வழங்கிய வழிமருங்கென்ப', 'வழக்கியல் மரபே', 'வழக்கொடு சிவணிய வகைமையான', 'வழக்கென வழங்கலும் பழித்தன் றென்ப', 'வழக்கென மொழிப' எனப் பல இடங்களில் வழங்கு

கின்ற வழக்குக் குறிப்புகள் தொல்காப்பியர் உலகியல் வழக்கை நாடி நூல் செய்ததை நிறுவும்.

இனி இருவகை வழக்குகளையும் இணைத்து, 'வழக் காறல்ல செய்யுளாறே', 'வழக்கு வழிப்படுதல் செய் யுட்குக் கடனே', 'முடிய வந்த அவ்வழக்கு' என்கிறார். வழக்கு இன்னது என்பதையும்,

**"வழக்கெனப் படுவ துயர்ந்தோர் மேற்றே**
**நிகழ்ச்சி அவர்கட் டாக லான"**

என்றும் கூறுகிறார். உயர்ந்தோர் ஒழுக்கமே ஒழுக்கம் எனப்படுவதுபோல, உயர்ந்தோர் சொன்னடை வழக்கே வழக்கு எனத் தெளிவுறுத்துகிறார். இவற்றையெல்லாம் மேலோட்டமாக அறிவாரும் 'முந்து நூல்' என்பது ஒரு நூல் என்றோ, அஃதகத்தியம் என்றோ கொள்ளார். நூலில் அகச்சான் றில்லாதிருக்கப் பிற்பட்டோர் கூறும் புறச்சான்றுகள் எத்துணையாயினும் எத்தகையர் கூறி யவையாயினும் அச் சான்றுகள் முதன்மையுடையன வாகா. இனி, அகச்சான்றுக்கு முரணுவ வாயின் அவை தள்ளத் தக்கனவன்றிக் கொள்ளத் தக்கனவாகா.

'தொல்காப்பியம்' என்பது **தொன்மையான மொழி மரபு காக்கும் நூல்** என்னும் பொருளதேயாம். **'தொல் காப்பு இயம்'** என்னும் முப்பகுப்பு ஒரு சொல்லினதே அது. அதற்கு எண்ணற்ற சான்றுகள் உள. அவற்றைத் திரட்டிப் பார்த்தல் ஒரு தனிநூற் பார்வையாம். இவண் எடுத்துக் கொண்ட நூன் முறைக்கு ஏற்பச் சில சுட்டுதல் சாலும்.

தொல்காப்பியர் நமக்கு மிகு தொன்மையர் எனின், அவர்க்குந் தொன்மையர் என்பார், நமக்கு எத்தகு தொன்மையர் என்பதைச் சொல்ல வேண்டுவதில்லை.

'முன்னை மரபின் கூறுங்காலை', தொன்னெறி மரபு'; 'தொன்னெறி மொழிவயின்', 'தொல்லோர்

கிளவி', 'தொன்றியல் மருங்கின் செய்யுளுள்', 'தொன் மொழிப் புலவர்', 'வழக்கியல் மரபு', 'நாட்டியல் மரபு', 'கெடலரும் மரபு', 'மரபு நிலை திரியா மாட்சி' என வரும் தொல்காப்பிய ஆட்சிகளை ஆய்வார் முன்னை யோர் மரபுகளின் விரிவையும், அவற்றையெல்லாம் கண்டு கண்டு தொகுத்துக் கொண்ட தொல்காப்பியர் திறனையும் போற்றத் தவறார்.

இனி நூன்மரபு, மொழிமரபு, தொகைமரபு, விளி மரபு, மரபியல் என்று இயல்களில் வரும் மரபாட்சிச் சிறப்பு தொல்காப்பியம் தொன்மரபு காக்க எழுந்த நூல் என்பதைத் தெளிவுறுத்தும்.

தொல்காப்பியர் தமக்கு முன்னை மூதறிஞர் பலர் முதனூல் செய்தமையும், அவற்றைப் பயன்படுத்திக் கொண்டு தாம் வழிநூல் செய்தமையும் விளங்க,

"மரபு நிலை திரியா மாட்சிய வாகி
உரைபடு நூல்தாம் இருவகை இயல
முதலும் வழியுமென நுதலிய நெறியின"

"வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல்நூல் ஆகும்"

"வழியெனப் படுவது அதன்வழித் தாகும்"

"வழியின் நெறியே நால்வகைத் தாகும்"

"தொகுத்தல் விரித்தல் தொகைவிரி மொழிபெயர்த்
ததர்ப்பட யாத்தலொ டனைமர பினவே"

என மரபியலில் நூற்பாக்கள் அமைத்துள்ளார். தம் நூலைத் தாமே "முதல் நூல்" என்பார் என்றோ, தம்மைத் தாமே "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்பார் என்றோ எவரும் எண்ணார். ஆகலின், முந்து நூல் செய்தாரை இத்துணை மதித்துப் போற்றும் தொல்காப்பியனார் தம் ஆசிரியர் அகத்திய

ணார் எனின், அவர் நூல் வழியே தம் நூலைச் செய்திருந் தார் எனின் அதனைச் சுட்டாமல் இருப்பரோ? 'இருப்பர்' எனின் அவர்மேல் — தொல்காப்பியர்மேல் — அடாப்பழி சுமத்துதலாகவே அமையும் என்பது ஒரு தலை. அவ்வாறு சுட்டத் துணியாமலும் அகத்தியர்க்கு மாணவர் தொல் காப்பியர் என நிலை நாட்டல் வேண்டியும் ஒரு புனைவு செய்தார் நச்சினார்க்கினியர். அல்லது, அவர் காலத்துக் கேட்ட புனைவை அமைத்தார். அதனை அகத்தியர் பகுதியில் காண்போம்.

அகரத்தை முதலாகவும் னகரப் புள்ளியை இறுதி யாகவும் கொண்ட நெடுங்கணக்கு முறை தொல் காப்பியர்க்கு முன்னரே அமைந்தவை. குறில், நெடில், அளபெடை, மாத்திரை, உயிர், மெய், வல்லினம், மெல்லினம், இடையினம் என்னும் குறியீடுகளும் அவற்றின் பகுப்புகளும் அவர்க்கு முன்னரே இருந்தவை.

தனி எழுத்தாயினும் சொல்லுறுப்பாம் எழுத்தாயினும் அதன் இயல்பு திரியாமை, 'தபு' என்பது தன்வினை பிறவினை ஆகிய இரண்டன் நிலையிலும் வருதல், மகர ஈற்றுச் சொற்கள் னகர ஈற்றுச் சொற்களாகத் திரிந்து வருதல் ஆகியனவும் தொல்காப்பியர்க்கு முந்தை நூல்கள் தந்தனவே.

எழுத்தொலிகள் பிறக்கும் முறை, மெய்யும் குற்றிய லுகரமும் புள்ளி பெறுதல், புணர்ச்சித் திரிபுகள், பெயர் களின் முறை, தொகை, சாரியை, சாரியை கெடுதலும் திரிதலும், உடம்படுமெய் என்பவையும் தொல்காப் பியர்க்கு முன்னவர் கொடையே.

யாத்தவும் ஞாத்தவும் வினையில் ஒப்பாதல், உயர்திணைப் பெயர் இயல்பாதல், வேற்றுமைகளின் திரிபுகள், அளவுப் பெயர் நிறைப் பெயர் ஆகியவற்றின் முதலெழுத்துகள், அழன் புழன் ஏழு என்பவற்றின் சாரியை, சாரியை பெறாது முடியும் சொற்கள், உரைப்

பொருட்கிளவி நீளல், மீ என்பதன்முன் மெலி மிகல், அதுமுன் வரும் அன்று 'ஆன்று' ஆதல், பனை அரை ஆகியவை அம்பெறுதல், வேட்கை அவா 'வேணவா' ஆதல் என்பனவும் தொல்காப்பியர்க்குப் பண்டையோர் பாலித்தவையே.

அகம் முன் வரும் கை புணர்வில் 'அங்கை' ஆதல், இலம் முன்வரும் படு 'இலம்பாடு' ஆதல், நாட்பெயர் னகர வீற்றுப் பெயர் ஆகியவற்றின் புணர்ச்சி, தான் யான் என்பவை அல்வழியில் திரியாமை, முன் இல் என்பன 'முன்றில்' ஆதல், ஏழ் என்பதன்முன் அளவு நிறை எண் ஆகியவை வரின் முதல் குறுகுதல் இன்னவையும் தொல் காப்பியர்க்குத் தொன்மையவே.

இடைத்தொடர் ஆய்தத் தொடர் புணர்வில் இயல்பாதல், மென்றொடர் அக்குப்பெறுதல், பெண்டு அன்பெறுதல், முவ்வுழக்கு மூவுழக்கு ஆதல், நூறு என்பதன் முன் அளவும் நிறையும் வருங்கால் நூற்று என ஒற்றுமிகுதல் என்பன தொல்காப்பியர்க்கு முதுவர் வழங்கியவையே.

இவை தொல்காப்பிய எழுத்ததிகார நூற்பாக்களில் என்ப, மொழிப முதலிய குறிப்புகளுடன் கூறப்பட்டுள்ள வற்றின் பொருளடைவாகும். இவ்வாறே, சொல் லதிகாரம் பொருளதிகாரம் என்பவற்றையும் தொகை யிட்டு விரித்துக்காணின் முந்தையோர் கொடைநலம் ஓராற்றான் விளங்கும். அதுவும் ஓராற்றான் அன்றி முற்ற முடிந்த தாகாதாம்.

'என்ப' 'மொழிப' முதலாகத் தொல்காப்பியர் சுட்டாது ஒழிந்தனவெல்லாம், தொல்காப்பியனாரே கண்டுரைத்தன எனலும் முறையன்று. அவர் கண்டனவும், அவர் காலத்து நூலோர் கண்டனவும், வழக்கறி மேலோர் கண்டனவும் பலப்பல இருத்தல் கூடும். அஃதியற்கை. அவர் முந்தையர் நூற்கொள்கைகளை நூற்பா அமைதிக்கு

ஏற்பச் சுட்டாமல் விடுத்திருத்தலும் கூடும். ஆதலால், முந்தையோர் நூல்களில் பரவிக் கிடந்தவற்றையும் மறைந்து கிடந்தவற்றையும் வழக்கிடையில் அறியப் பெற்றவற்றையும் ஒருங்கு திரட்டி ஓர் ஒழுங்குற அமைத்துச் செவ்விய வடிவில் வழங்கியமையே அவர் காலத்தால் செய்த ஞாலத்தின் மேம்பட்ட பணியாகும். இதனைத் தெளிந்த இலக்கணர் ஒருவர்,

> ''தொல்காப்பியப் புலவோர் தோன்ற விரித்துரைத்
> தார்''

எனத் தொல்காப்பியப் பணிப் பிழிவைப் பாகுக் கட்டி யாக்கிக் கையிடைத் தந்தார்.

தொல்காப்பியர் முந்து நூல்களின் வழியே நூல் செய்தார் என்பதும், அதற்கு எண்ணற்ற அகச்சான்றுகளை அள்ளிக் கொள்வார் கொள்ளும் வண்ணம் அவரே வழங்கி யுள்ளார் என்பதும், அவர்க்கு அகத்தியம் முதனூல் என்று உரையாசிரியர்கள் கூறும் புறச்சான்றுக்கு நூலிலோ, பாயிரத்திலோ குறிப்பாகவேனும் செய்தி யில்லை என்பதும், முந்துநூல் ஒரு நூல் அன்று; பல நூல்கள் என்பதும் இவண் அறியப் பெற்றவையாம்.

# 3. அகத்தியம்

அகத்தியரைப் பற்றியோ அவர் இயற்றியதாகச் சொல்லப்படும் அகத்தியத்தைப் பற்றியோ தொல் காப்பியத்திலும் அதன் பாயிரத்திலும் எக்குறிப்பும் இல்லை என்பதை அறிந்தோம். அவ்வாறே **பாட்டு, தொகை** எனப்படும் சங்க நூல்களிலும் எக்குறிப்பும் இல்லை.

**பரிபாடலில்** வரும் ''பொதியின் முனிவன்'' என்பதற்கு அதன் பழைய உரையாசிரியர் பரிமேலழகர் ''அகத்தியன் என்னும் மீன்'' என உரை வகுத்துள்ளார் (11:11). அதனை மூல நூலாட்சியெனக் கொள்ளல் சாலாது.

''அமர முனிவன் அகத்தியன்'' என **மணிமேகலையிலே** தான் அகத்தியன் என்னும் பெயராட்சி, தமிழ் இலக்கண இலக்கியப் பரப்பில் முதன் முதலாகக் கேட்கப்படுவதாம். **சிலம்பிலும்** அப்பெயராட்சி இல்லை. அடியார்க்கு நல்லார் அரும்பத உரைகாரர் நச்சினார்க்கினியர் முதலியோர் உரைகளில், பொதியம், தவமுனி, திருமுனி என வருமிடங்களில் அகத்தியன் என்னும் பெய்ராட்சி வருதல் அன்றி மூலநூலாட்சி இல்லையாம். ஆனால், இதற்கு மறுதலையாக வடமொழி நூல்களில் அகத்தியன் என்னும் பெயராட்சி உண்மை விளங்குகின்றது.

வடமொழி 'ஆதிகாவியம்' எனப்படும் வான்மீகத்தில் அகத்தியர் சுட்டப்படுகிறார். அவரும், விந்தமலை

சார்ந்து ஒருவரும், தென்னாட்டில் ஒருவரும் என இருவர் என்பர். அவலோகிதன் என்பானிடம் தமிழ் கேட்ட அகத்தியர் ஒருவரும் சுட்டப்படுவர். 'ஆகஸ்தம்' என்னும் சொல்லுக்குத் தெற்கு, தென்னாடு, தென்மொழி என்னும் பொருள்களும் உண்டு என்றும், அப்பொருள் அகத்தியர் தொடர்பால் வந்தது என்றும் கூறுவர். ஆனால் அவ்வாறு அகத்தியரைச் சுட்டும் இடத்தும் அவர் தமிழ் வல்லார் என்றோ, இலக்கணம் செய்தார் என்றோ குறிப்பு இல்லை என்றும் கூறுவர். (தமிழ் வரலாறு; முதற்றொகுதி. இரா. இராகவ ஐயங்கார். (பக்: 190-214.)

''இவரை (அகத்தியரை) 'அமரமுனிவன்' என்பது முதலாகக் கூறுவன எல்லாம் வடநூலில் வேதம் இதிகாசம் புராணங்களிற் கேட்கப்படும் அகத்திய சரிதத்தை **நெடுங்காலம் பிந்தியவராகிய இவர்க்கு ஏற்றி வழங்கியனவாக நினைப்பது பொருந்தும்.** ஒன்றோடு ஒன்று ஒவ்வாக் கால வேற்றுமையில் நிகழ்ந்த பல நிகழ்ச்சி களை இப்பொதியின் முனிவர்க்கு ஏற்றுதல் சிறிதும் பொருந்தாமை காண்க.'' (ஷை. பக். 213)

''முதன்முதல் வடநாட்டினின்று தென்னாடு புக்க அகத்தியர் வடபால் விந்தியத்தையடுத்தும் தென்பால் மகேந்திரத்தை யடுத்தும் வதிதல் கூறிய வான்மீகத்தில் அவரைத் **தமிழறிவுடையவராகக் கூறாமை ஈண்டைக்கு நினைக்கத் தகும்.** அநுமானுக்குத் தென்னாட்டு மொழி யுணர்ச்சியும் வடமொழியுணர்ச்சியும் உடன்பட்டுக் கூறும் வான்மீகி முனிவர் **அகத்தியரைச் சிறிதும் தென்மொழி யுணர்ந்தவராகப் புகலாமை பெரிதும் வியப்பைத் தருவ தாகும்.** அவர் தமிழ் நாட்டரசரையும் அவருட் பாண்டியர் தலைநகரையும் கூறுதல் காண்க.'' (ஷை. பக். 214)

''வியாச பாரதம் சபாபருவத்தில் சகதேவன் 'மலயத்தை வலஞ்செய்து தாமிரபர்ணியைக் கடந்து கடற்கரையைச் சேர்ந்து தங்கினன்' என விளக்குதல்

காணலாம். அந்நூலும் அகத்தியரைத் தமிழறிந்தவராகக் கூறாமை நோக்கிக் கொள்க'' (ஷ்டி. பக். 214).

இவை தமிழ் வரலாறுடையார் குறிப்புகள். ஆயினும், நச்சினார்க்கினியர் முதலோர் உரை கண்டு தொல்காப்பியர்க்கு மூலவராகவும் முன்னிலக்கணம் செய்தவராகவும் அகத்தியரை இத் தமிழ் வரலாறுடையார் கூறுவது நம்பத் தக்கதாக இல்லை. ''தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி'' செய்தார் கருத்தும் (மு. இராகவ ஐயங்கார்) நச்சினார்க்கினியர் உரைக்குச் சான்று தேடி நிறுவுதலில் தலைப்படுதலை யன்றித் தொல்காப்பிய மூலநூல் குறிப்பைப் பற்றிக் கருதவே யில்லை! அகத்தியச் சூத்திரங்கள் என்று உரையாசிரியர்களால் காட்டப் பட்டுள்ள நூற்பாக்களின் அமைதி, சொல்லாட்சி ஆகிய வற்றைத் தெளிந்து கூறவல்ல இவ்வறிஞர்களும் பிறர் பிறரும், 'புனைவு' கொண்டு அகத்தியரை 'முனைவராக' நிலை நாட்டப் புகுந்த கருத்துடையவராகவே காட்சி யளிக்கின்றனர்.

அகத்தியரின் மாணவர் பன்னிருவர் என்பதும், அவருள் தொல்காப்பியர் தலைமையானவர் என்பதும் கி.பி. ஒன்பதாம் நூற்றாண்டுக்கு மேம்பட்டுக் கிளர்ந்த புறப்பொருள் வெண்பாமாலை, நம்பியகப் பொருள் விளக்கம், தண்டியலங்காரம் முதலான நூல்களால் அறிய வருகின்றன.

''மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்
தென்மலை இருந்த சீர்சால் முனிவரன்
தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த
துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் ''

என்பது புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரப் பகுதி.

"பூமலி நாவன் மாமலைச் சென்னி
ஈண்டிய இமையோர் வேண்டலிற் போந்து
குடங்கையின் விந்த நெடுங்கிரி மிகைதீர்த்
தலைகடல் அடக்கி மலையத் திருந்த
இருந்தவன் தன்பால் இயற்றமிழ் உணர்ந்த
புலவர்பன் னிருவருள் தலைவன் ஆகிய
தொல்காப்பியன்"

உன்பது நம்பியகப் பொருளின் *பாயிரப் பகுதி*.

"வடதிசை யிருந்து தென்மலைக் கேகி
மதிதவழ் குடுமிப் பொதிய மால்வரை
இருந்தவன் தன்பால் அருந்தமிழ் உணர்ந்த
பன்னிரு புலவரின் முன்னவன் பகர்ந்த
தொல்காப் பியநெறி"

*என்பது* **தண்டியலங்காரப்** *பிரதியில் உள்ளதெனப் பெருந்தொகை காட்டும் பாயிரப் பகுதி* (1564). **யாப்பருங்கலக்காரிகையின்** *அவையடக்கப் பாடலும்*,

*"கானார் மலயத் தருந்தவன் சொன்ன கன்னித் தமிழ் நூல்" எனக் குறிக்கிறது.*

**கம்பர்** *காலத்திலும்*, **திருவிளையாடற்** *புராணத்தார் கால்த்திலும், தலபுராணங்களைப் பாடிக் குவித்தோர் காலத்திலும் வரவரப் பெருகி, அகத்தியரே தமிழின் மூலவர், அவர் செய்ததே அகத்தியப் பேரிலக்கணம் என்னும் கருத்து நிலைபெறுவதாயிற்று. நாட்டியற் பாவலர் பாரதியாரும்*,

"ஆதிசிவன் பெற்று விட்டான்—என்னை
ஆரிய மைந்தன் அகத்தியன் என்றோர்
வேதியன் கண்டு மகிழ்ந்தே—நிறை
மேவும் இலக்கணம் செய்து கொடுத்தான்"

*என்று பாடத் தூண்டியது, அகத்தியரைப் பற்றிப் பரவிக் கிடந்த செய்திகளேயாம். "ஆதியிற்றமிழ் நூல் அகத்தி*

யர்க்குணர்த்திய'' என்பதே அகத்தியர்க்கு முன்னரே தமிழ் நூல் உண்மையை உணர்த்தும் எனத் தெளிவிப்பார் கா. சு. (தமிழ் இலக்கிய வரலாறு- பக். 41).

அகத்தியர் பெயரால் வழங்கப்படும் நூல்களாக இலக்கிய அகராதி வழியே, அறியப்படுவனவற்றின் எண்ணிக்கை 123. 'அகத்தியர்—அம்மை சாத்திரம்' என்பது தொடங்கி 'அகத்தியர் வைத்தியம்—150' என்பது ஈறாக உள்ளன. அவை, 'வைத்தியம்', 'யோகம்', 'நாடி', 'சாலம்', 'ஞானம்', 'தீட்சை', 'மந்திரம்', 'சோதிடம்', 'இரசம்' முதலிய வகைகளைச் சார்ந்தவை. 'புனைசுருட்டு—18' என்று கூட அவர் பெயரால் ஒரு நூலுண்மை அறியப்படுகின்றது. 'அகத்தியர் தேவாரத் திரட்டு' என்னும் நூலுண்மை நாடறிந்தது.

இவற்றை நோக்க இரண்டு குறிப்புகள் தோன்று கின்றன. ஒன்று, அகத்தியர் என்னும் பெயருடையார் பலர் இருந்துள்ளனர் என்பது. மற்றொன்று, பலப்பலர் தாம் இயற்றிய பலப்பல நூல்களை அகத்தியர் தலையில் கட்டி உலவ விட்டுள்ளனர் என்பது.

**கந்தியார்** என்பாரும் **வெள்ளியார்** என்பாரும் பலப் பல பாடல்களை இயற்றி, இடைச் செருகலாக்கியது போல், வேறுசிலர், நூல்களை இயற்றி அகத்தியர் பெயரிலேயே உலவ விட்டு உவகையுற்றனர் என்க.

பெரும்பாலும் மருத்துவம் பற்றிய அகத்தியர் நூல் களைக் குறித்த மதிப்பீடு ஒன்றைச் சாம்பசிவம் பிள்ளை மருத்துவ அகராதி தருகின்றது: ''**இப்பொழுது இவர்** (அகத்தியர்) **பெயரால் வழங்கும் நூல்கள் போலி நூல் களே**'' என்பது அது.

வடமொழி, 'தெய்வ மொழி' என்னும் கருத்தைப் பெருவரவாக வடமொழியாளர் பரப்பிவந்தனர். அதனைக் கேட்ட தமிழர், தம்மொழியும் 'தெய்வ

மொழியே' என்று ஆர்வத்தால் கிளர்ந்து உரைக்கத் தொடங்கினர். அதனால், வடமொழியாளர் கருத்தை வாங்கிக்கொண்டு தம் கருத்தையும் இணைத்துக் கதையாக்கினர்:

**''வடமொழியைப் பாணினிக்கு வகுத்தருளி**
**அதற்கிணையாத்**
**தொடர்புடைய தமிழ்மொழியை உலகமெலாம்**
**தொழுதேத்தும்**
**குடமுனிக்கு வகுத்துரைத்தார் கொல்லேற்றுப் பாகர்''**

என்று சிவஞான முனிவரர் பாடினார். பிறர் பிறரும் தம் நூல்களில் இக்கருத்தை உலவ விட்டனர். மொழியியன் முறை ஈதன்று என்பது ஆய்வுடையார் எவரும் எளிதில் அறிவதே.

மொழி என்பது மாந்தர் படைப்பு என்றும், அப்படைப்பும் ஒருவரால் ஒரு காலத்து ஓரிடத்துப் படைக்கப் படாமல் பலரால் பலகாலத்துப் பலவிடங்களில் உருவாக்க முற்று, ஒழுங்குறுத்தப்பட்டது என்றும் அறிவார் எந்த மொழியையும் 'தெய்வமொழி' என்று சொல்லார். அவ்வாறு சொல்வதை, அறிவுலகம் ஏற்றுக் கொள்வதும் இல்லை என்ற அளவில் அமைந்து மேலே செல்வாம்.

இடைக்கால நூல்களின் பாயிரங்களில் அகத்தியர் பேரிலக்கண ஆசிரியர் என்றும், அவரிடம் பயின்றார் பன்னிருவர் என்றும், அவருள் தொல்காப்பியர் தலை மாணவர் என்றும், பனம்பாரர் அதங்கோட்டாசான் முதலியோர் உடன்மாணவர் என்றும் அறிந்து கொண்ட உரையாசிரியர் சிலர்க்குத் தொல்காப்பியப் பாயிரம் ஒரு திகைப்பாக இருந்தது போலும். அவருள் ஒருவர் நச்சினார்க்கினியர்.

''பாயிரம் பாடியவர் பனம்பாரர்; தலைமை ஏற்று அரங்கேற்றம் நடாத்தியவர் அதங்கோட்டாசிரியர்; அவையமோ, பொதியில் தலைவனாகவும் பாண்டிநாட்டு

வேந்தனாகவும் திகழ்ந்த நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையம். இவ்வாறாகவும், 'அகத்தியர்' அரங்கேற்றத்தில் முகங்காட்டினார் அல்லர்; பாயிரம் பாடினார் அல்லர்; பாயிரத்தில் பாடப்பட்டாரும் அல்லர்; நூலின் அகத்தும் சுட்டிக் காட்டப்பட்டார் அல்லர். இந்நிலை, தொல் காப்பிய உரையாசிரியர் நச்சினார்க்கினியர்க்கு ஒரு பொருந்தாமையைத் தோற்றுவித்தது. பொருத்திக் காட்ட வேண்டும் என்னும் எண்ணம் அவர்க்குக் கிளர்ந்தது. அதற்கு வடமொழி தென்மொழி நூல்களில் ஆங்காங்குக் கிடைத்த குறிப்புகள் துணை செய்திருக்க வேண்டும். அதனால் இடைக்காலப் புலவர்களைப் பற்றிப் பிற்காலப் புலவர்கள் புனைந்துள்ள புனைவுகள் போல, அகத்தியரையும் தொல்காப்பியரையும் குறித்து ஒரு புனைவு வரைந்தார்:

''பாண்டியன் மாகீர்த்தி இருபத்து நாலாயிரம் யாண்டு வீற்றிருந்தானாதலின், அவனும் அவன் அவையிலுள்ளோரும் அறிவு மிக்கிருத்தலின் அவர்கள் கேட்டிருப்ப அதங்கோட்டாசிரியர் கூறிய கடாவிற்கெல்லாம் குற்றம் தீர விடை கூறுதலின் '**அரில்தப**' என்றார்.

''அகத்தியனார் அதங்கோட்டாசிரியரை நோக்கி 'நீ தொல்காப்பியன் செய்த நூலைக் கேளற்க' என்று கூறுதலானும் தொல்காப்பியனாரும் பல்காலும் சென்று 'யான் செய்த நூலை நீர் கேட்டல் வேண்டும்' என்று கூறுதலானும், இவ்விருவரும் வெகுளாமல் இந்நூற்குக் குற்றங் கூறி விடுவலெனக் கருதி அவர் கூறிய கடாவிற் கெல்லாம் விடை கூறுதலின் '**அரில்தபத் தெரிந்து**' என்றார்.

''அவர் கேளன்மின் என்றதற்குக் காரணம் என்னை? எனின், தேவரெல்லாங் கூடி யாம் சேர இருத்தலின் மேருத் தாழ்ந்து தென்றிசை உயர்ந்தது. இதற்கு அகத்தியனாரே ஆண்டு இருத்தற்குரியர் என்று அவரை வேண்டிக்கொள்ள,

அவரும் தென்திசைக்கண் போதுகின்றவர் கங்கை யாருழைச் சென்று காவிரியாரை வாங்கிக் கொண்டு, பின்னர் யமதக்கினியாருழைச் சென்று அவர் மகனார் திரண தூமாக்கினியாரை வாங்கிக் கொண்டு, புலத்திய னாருழைச் சென்று அவருடன் பிறந்த குமரியார் உலோபா முத்திரையாரை அவர் கொடுப்ப நீரேற்று இரீஇ, பெயர்ந்து, துவராபதிப்போந்து நிலங்கடந்த நெடுமுடி யண்ணல் வழிக்கண் அரசர் பதினெண்மரையும் பதினெண் கோடி வேளிருள்ளிட்டாரையும் அருவாளரையும் கொண்டு போந்து, காடு கெடுத்து நாடாக்கிப் பொதியின் கண் இருந்து இராவணனைக் கந்தருவத்தாற் பிணித்து, இராக்கதரை ஆண்டு இயங்காமை விலக்கித் திரண தூமாக்கினியாராகிய தொல்காப்பியனாரை நோக்கி, 'நீ சென்று குமரியாரைக் கொண்டு வருக' எனக் கூற, அவரும் 'எம் பெருமாட்டியை எங்ஙனங் கொண்டு வருவல்?' என்றார்க்கு, 'முன்னாகப் பின்னாக நாற்கோல் நீளம் அகலநின்று கொண்டு வருக' என அவரும் அங்ஙனங் கொண்டு வருவழி, வையை நீர் கடுகிக் குமரியாரை ஈர்த்துக் கொண்டு போகத் தொல்காப்பியனார் கட்டளை யிறந்து சென்று ஓர் வெதிர்ங்கோலை முறித்து நீட்ட அது பற்றி ஏறினார்; அது குற்றமென்று அகத்தியனார் குமரி யாரையும் தொல்காப்பியனாரையும் 'சுவர்க்கம் புகாப்பிர்' எனச் சபித்தார்; 'யாங்கள் ஒரு குற்றமும் செய்யாதிருக்க எங்களைச் சபித்தமையான் எம்பெருமானும் சுவர்க்கம் புகாப்பிர்' என அவர் அகத்தியனாரைச் சபித்தார். அதனான் அவர் வெகுண்டாராதலின் 'அவன் செய்த நூலைக் கேளற்க' என்றார் என்க'' என்பது.

தொல்காப்பியம் **'நிலந்தரு திருவிற் பாண்டியன்'** என்பான் அவையில் அரங்கேறியதாகப் பாயிரம் கூறு கின்றது. 'நிலந்தரு திருவின் நெடியோன்' என ஒரு வேந்தனும் புறப்பாடலில் இடம் பெற்றுள்ளான். நச்சினார்க்கினியரோ **'பாண்டியன் மாகீர்த்தி'** என்கிறார்.

''சீர்த்தி மிகு புகழ்'' என்பது தொல்காப்பியம். 'சீர்த்தி' என்னும் சொல் ஆளப் பெற்றிருத்தலை விலக்கி, அவனே நிலந்தரு திருவிற் பாண்டியன் எனக் கொண்டாலும் அவன் **24 ஆயிரம் ஆண்டு** வீற்றிருந்தான் — ஆட்சி செய்தான் என்பது பொருளொடு கூடியதாகுமா?

இறையனார் களவியலுரை கூறும் முச்சங்கங்களின் முழுக்காலமுமே **ஒன்பதாயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறு ஆண்டுகள்.** அக்காலமும் **புனைவு** என்பதே ஒரு தலை. ஆகவும், அதனை ஏற்பினும், அக்காலத்து ஆட்சி செய்த வேந்தர்கள் நூற்றுத் தொண்ணூற்று எழுவர் என்பார். ஒரு வேந்தன் ஆட்சிக் காலம் ஏறத்தாழ ஐம்பது ஆண்டுகளே! இவ்வாறாக நச்சினார்க்கினியர் கூறும் வேந்தன் தன் ஆட்சியில் சில ஆயிரம் ஆண்டுகள் கழிந்து முதற்சங்கம் தொடங்கி, அதே வேந்தன் ஆட்சி நிறைதற்குச் சில ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே மூன்றாம் சங்கமும் முடிந்திருக்க வேண்டும்! பொருந்தும் செய்தியா இது?

துவராபதியினின்று **பதினெண் கோடி** வேளிருள் ளிட்டாரையும் அருவாளரையும் கொணர்ந்தனராம் அகத்தியனார். கி.பி. 1915இல் இருந்து 1920 ஆம் ஆண்டுக்குள் பாரதியார் பாடிய பாடலில் **இந்தியப் பரப்பெல்லாம் கூட்டி.** ''முப்பதுகோடி முகமுடையாள்'', ''முப்பது கோடி முழுமைக்கும் சுதந்தரம்'' என்று பாடுகிறார். பல்லாயிரம் ஆண்டுகளின் முன்னே தமிழ் நிலத்துக்குப் பதினெண் கோடி வேளிரையும், அவரலா அருவாளரையும் அகத்தியர் கொணர்ந்தனர் என்றால் எத்தகு உண்மையாக இருக்கும்?

இனித் தொல்காப்பியனார் பெயரோ **திரணதூமாக்கினியாம்;** **யமதக்கினியார்** மகனாராம். அஃதுண்மையானால் பரசுராமர் உடன்பிறந்தார் தொல்காப்பியராதல் வேண்டும். அவர் வரலாற்றிலோ யமதக்கினியார்

வரலாற்றிலோ தொல்காப்பியனார் இடம் பெற்ற செய்தி தானும் இலது. தொல்காப்பியரைப் புகழ்ந்து புகழ்ந்து போற்றிய பாயிரத்தார் எவரும் பகராத பெயர்! பகராத பெற்றோர்! பகராத உடன் பிறப்பு!

எஞ்சிய செய்திகள் உள்ளனவே! இவை அகத்தியர்க்குப் பெருமை தருவனவா? தொல்காப்பியனார்க்குப் பெருமை தருவனவா? புலமைக்குத் தான் மதிப்புத் தருவனவா? நூலரங்கேற்றத் தலைவர் அதங்கோட்டார்க்குத்தான் பெருமை சேர்ப்பனவா? இல்லை; புனைந்தவர் எவரேயெனினும் அவர்க்குப் புகழ் கொழிப்பனவா? 'அறில்தபத் தெரிதல்' என்பதை விளக்கும் புனைவில் இத்துணை அறில்களா? முழுதுணர்ந்த சான்றோர் பெருமக்கள் நடைமுறை வாழ்வே இப்படி என்றால் கல்லா மாந்தர் வாழ்வு எத்தகையதாக இருந்திருக்கும், என்று நமக்கு எண்ணம் உண்டாகாதா? இக்கதை, புகழ்தற்கே எழுந்ததெனக் கொண்டாலும் விளைவு பழியேயாம்.

அகத்தியர் மாணவர் பன்னிருவர் பெயர்களும் நூல்களால் அறிய வருகின்றன. அப்பெயர்கள்:

தொல்காப்பியர், அதங்கோட்டாசான், துராலிங்கன், செம்பூட்சேஎய், வையாபிகன், வாய்ப்பியன், பனம்பாரன், கழாரம்பன், அவிநயன், காக்கை பாடினி, நத்தத்தன், வாமனன் என்பன.

இவர்கள் தனித்தனி ஒரு படலமாகச் செய்த பன்னிரு படலம், **புறப்பொருள் வெண்பா மாலைக்கு** உதவிற்று என்று அப்பாயிரம் கூறுகின்றது.

**" ஆனாப் பெருமை அகத்தியன் என்னும்**
**அருந்தவ முனிவன் ஆக்கிய முதனூல்**
**பொருந்தக் கற்றுப் புரைதப உணர்ந்தோர்**
**நல்லிசை நிறுத்த தொல்காப்பியன்"**

என்பது **பன்னிரு படலப்** பாயிரத்தின் பகுதியாகவும் சொல்லப்படுகின்றது.

பன்னிரு படலத்தில் வெட்சிப் படலம் தொல்காப்பியர் செய்தது என்று கூறுவாரை **இளம்பூரணர்** மறுத்துரைக்கின்றார். அகத்தியர் மாணவர் அல்லர் தொல்காப்பியர் என்னும் கருத்துடையார், **பேராசிரியர்** காலத்திலேயே இருந்திருக்கின்றனர் என்பது அறிய வருகின்றது. அகத்தியர்க்கு மாணவர் தொல்காப்பியர் என்று கொள்வார் **"நான்கு வருணத் தொடுபட்ட சான்றோர்"** என்றும் அவ்வாறு கொள்ளார், **"வேத வழக்கொடு மாறுகொள்வார்"** என்றும் அவர் குறிக்கிறார்.

இக்கருத்து உரையாசிரியர்கள் காலத்தில் தோன்றியிருக்க வேண்டுமானால் காரணம் இருக்க வேண்டும் அன்றோ! ஒன்றற்கு ஒன்று ஒவ்வாக் கதைகள் ஒருபால் ஐயத்தைக் கிளப்பியிருக்கும். அகத்தியர் நூற்பாக்களெனக் கூறப்பட்டவற்றின் தகுதியும் ஐயத்தை வளர்த்திருக்கும்.

தொல்காப்பியம் செய்யுளியலில் 'ஆறடி அராகம்' எனவும் 'தரவே எருத்தம்' எனவும் "இருவயினொத்து" எனவும் வரும் அகத்திய நூற்பாக்களை இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். தெய்வச்சிலையார் ஓரிரு நூற்பா காட்டுகிறார் (சொல். வேற். 63).

இவ்வாறிருக்க, நன்னூல் முதலுரையாசிரியர் மயிலைநாதர் ஓரிரு நூற்பாக்களை எடுத்தாள்கிறார். அவர்க்கும் மிகப் பிற்பட்ட சங்கர நமச்சிவாயரோ பதின்மூன்று நூற்பாக்களை எடுத்தாள்கிறார். இதனால் பிற்பட்ட காலத்தே அகத்தியர் பெயரால் இலக்கண நூற்பாக்கள் உருவாக்கம் செய்யப்பட்டு உலாவ விடப்பட்டன என்பது தெளிவாகின்றது. அந்நூற்பாக்களின் அமைதியும் சொல்லாட்சியும் தொல்காப்பியத்தொடு நோக்க எத்தகு பிற்பட்ட காலத்தவை என்பதும், நூற்பாத் தகவும் எத்தகு சீரற்றது என்பதும் விளக்கமாகும்.

இக்கருத்தை உறுதி செய்வதற்குப் பலப் பலவற்றைத் தொகுத்துக் காண வேண்டுவதில்லை. **பேரகத்தியத் திரட்டு** என வெளி வந்துள்ள நூலை மேலோட்டமாகப் பார்த்தாலே தெளிவாகி விடும்.

அந்நூலின் நூற்பாக்களையும் பத்தொன்பதாம் நூற்றாண்டில் தோன்றிய **முத்திவீரியத்தையும்** பக்கம் பக்கம் வைத்து ஒப்பிட்டுப் பார்த்தால் முத்துவீரியத்தை **ஒத்த காலத்தது** அல்லது **அதனைத் தழுவி யாத்தது** என்னும் உறுதிக்கு வரலாம். இவற்றுள்ளும் பிற்கருத்தே கொள்ளற்குரிய தென்பதைச் சொல்லாட்சிகள் மிக நன்றாகக் காட்டிக் கொடுக்கின்றன.

முத்துவீரியர் தாம் அகத்தியத்தின் வழியாக நூல் செய்தமை சுட்டுகின்றார். அப்படிச் சொல்வதிலே ஒரு பெருமையுண்டு என்று கருதிக் கொண்டார் என்பதை யன்றி அவர் காலத்தில் முத்தமிழ் இலக்கணம் கூறும் அகத்திய நூல் இருந்ததில்லை என்பது வெளிப்படையில் வெளிப்படை.

''அகத்திய நூல்வழி, முத்துவீரியமெனத் தற்பெயர் நிறீஇ வகுத்தனன்'' என்பது சிறப்புப் பாயிரம். வீரமா முனிவர்க்குக் காலத்தால் பிற்பட்டவர் முத்துவீரியர். அவர் 'முத்து வீரமா முனிவன்' என்றும் சொல்லப்படுகிறார்.

**'' அச்சாவி சுரம்பூத மாமுயி ரென்ப ''**

**'' அச்சாவி சுரம்பூத மாமுயி ரின்பெயர் ''**

**'' குறுமை இரச்சுவம் குறிலெனப் படுமே ''**

**'' குறிலும் குறுமையும் இரச்சுவமும் குறிற்பெயர் ''**

**'' நெடுமையும் தீர்க்கமும் நெட்டுயி ராகும் ''**

**'' நெடிலும் நெடுமையும் தீர்க்கமும் நெடிற்பெயர் ''**

இவை உயிர், குறில், நெடில் என்பவற்றைக் குறிக்கும் பல சொற்கள். இவற்றுள் முன்னது **முத்துவீரியம்**, பின்னது **பேரகத்தியத்திரட்டு**. இப்படி இரண்டும் ஒத்த சொற்

களைக் காட்டுவதுடன், பேரகத்தியம் மிகுதியான சொற்களைப்பெய்து காட்டுவதைக் காண்க;

**" ஊமையும் ஒற்றும் உடலெனப் படுமே "**

**" உடல்உடம் பொற்றுஅல் ஊமை வியஞ்சனமெய் "**

**" இரேகை வரிபொறி எழுத்தின் பெயரே "**

**" இரேகை வரிபொறி இலேகையக் கரப்பெயர் "**

இவை மெய், எழுத்து இவற்றின் பிற பெயர்கள். இவ்வாறே முன்னதனினும் மிகையான வட சொற்களைக் கொண்டு பேரகத்தியம் இயல்கின்றது.

இரண்டு நூல்களிலும் 141 முதல் 164 முடிய உள்ள நூற்பாக்களைப் பக்கம் பக்கம் வைத்துப் பார்த்தால் முத்துவீரியரைப் பேரகத்தியப் புனைவாளர் முற்படத் தள்ளிவிடுதல் கண்கூடு. அன்றியும் அவர் சொல்லாத வடமொழி எதிர்மறை நிலை இலக்கணமும் பேரகத்தியப் பெரியவர் சொல்லுதலால் 'ஐயப்படாது' உணரக் காட்டிக் கொடுக்கிறார்.

**" நிர் துர் நிகுவி பொருளின்மை நிகழ்த்தும் "**

என்பது முதல்,

**" ஆ ஐ ஔ முத லாகமந் திரிபாம் "**

என்பது இறுதியாக வரும் நான்கு நூற்பாக்களையும் (161—164) காண்க.

இனி உரையாசிரியர்கள் மேற்கோள் காட்டியுள்ள அகத்தியச் சூத்திரங்களும் தாம் எத்தகையவை என்பதை அறிஞர் **மயிலை சீனி. வேங்கடசாமி** உரைக்கிறார்:

''அகத்தியர் பெயரால் அகத்தியம் என்னும் நூலைப் புனைந்தெழுதி வழங்கி வந்தார்கள் என்று கருதுவதற்கு இக்காலத்து வழங்கும் அகத்தியச் சூத்திரங்கள் இடந் தருகின்றன'' என்று 'கன்னித் தென்கரை' என்னும் நூற்பாவை எடுத்துக் காட்டி விளக்குகிறார்.

மேற்கோள் காட்டுகிற அகத்தியச் சூத்திரத்தில் கொங்கணம் துளுவம் குடகம் என்னும் நாடுகள் தமிழ் திரிந்த நிலங்கள் என்று கூறப்படுகின்றன. இந்த நாடுகள் கடைச்சங்க காலத்தில் அதாவது கி. பி. 300க்கு முன்பு தமிழ் நாடுகளாகவும் தமிழ்மொழி வழங்கிய இடங்களாகவும் இருந்தன என்பதைச் சரித்திர ஆராய்ச்சி வல்லார் அறிவர். இந்த நிலங்க்ளில் தமிழ் மொழி திரிந்து வேற்று மொழியானது பிற்காலத்தில் கி. பி. 300-க்குப் பிற்பட்ட காலத்தில். எனவே இந்நிலங்களைத் தமிழ் திரிந்த நிலங்கள் என்று மேற்படி அகத்தியச் சூத்திரம் கூறுகிறபடியால் இந்தச் சூத்திரத்தை எழுதிய அகத்தியர் கடைச்சங்க காலத்திற்குப் பிற்காலத்தில் இருந்த அகத்தியராதல் வேண்டும்; அல்லது அகத்தியர் பெயரால் பிற்காலத்தில் இருந்த ஒருவர் புனைந்துரைத்த சூத்திரமாதல் வேண்டும்.

மயிலைநாதர் மேற்கோள் காட்டுகிற மேற்படி அகத்தியச் சூத்திரத்தில், **பல்லவம்** என்னும் நாடு தமிழ் திரிந்த மொழி வழங்கும் நாடு என்று கூறப்படுகிறது. பல்லவம் என்பது பல்லவநாடு. அதாவது பல்லவ அரசர்கள் அரசாண்ட நாடு. அது தொண்டை நாடு என்றும், தொண்ட மண்டலம் என்றும் அருவாநாடு என்றும் வழங்கப்படும். இந்தச் சூத்திரம் பல்லவ நாட்டைத் தமிழ் திரிந்த நிலம் என்று கூறுவது வியப்பாக இருக்கிறது...இவற்றையெல்லாம் ஆராயும்போது **இந்த அகத்தியச் சூத்திரம் போலி அகத்தியச் சூத்திரம்** என்று கருத வேண்டியிருக்கிறது.

மேலும் கூறுகிறார்: பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் அகத்தியர் செய்யுளில் ஆனந்தக் குற்றம் என்னும் இலக்கணத்தைக் கூறவில்லை என்று எழுதுகிறார்கள். யாப்பருங்கல உரையாசிரியர் அகத்தியர் **'ஆனந்த ஒத்து'** என்னும் இலக்கணம் செய்துள்ளார் என்று கூறி ஒரு சூத்திரத்தையும் மேற்கோள் காட்டு

கிறார். இது குழப்பத்தை உண்டாக்குகிறது. இதனால் பிற்காலத்திலே **அகத்தியர் பெயரினால் சில இலக்கண நூல்கள் இயற்றப்பட்டிருந்தன** என்பது தெரிகிறது.

**சிதம்பரப் பாட்டியல்** வழியே அறியப்படுவது 'அகத்தியர் பாட்டியல்' என்பது.

**'' பாமேவு தமிழ்ப்பொதியக் குறுமுனிவன் கூறும்**
**பாட்டியலைச் சுருக்கமதாய்ப் பகர்ந்திடுவென் யானே''**

என்கிறது அது. பாட்டியல் மிகப் பிற்பட்ட கால நூல் வகையினது. அதன் முதனூலாக அறிவது பன்னிரு பாட்டியல். அப்பாட்டியலில் சொல்லப்படும் புலவர்களுள் சிலர் சங்ககாலத்தவர்களாக அறியப் பெறுவர். அப்பழம் புலவர்கள் பெயரால் கட்டிவிட்டவை போலவே, அகத்தியர் பெயரால் கட்டிவிட்ட பாட்டியல் ஈதென்க. இதனை மெய்ப்பிக்கத் **திருவள்ளுவமாலை** ஒன்று போதாதா? சங்கப் புலவர்கள் பெயரால் பிற்காலத்தில் எவரோ கட்டிவிடவில்லையா?

அகத்தியரைப் பற்றி வழங்குகின்ற கதைகளையும் செய்திகளையும் நோக்க, வடநாட்டில் அகத்தியர் பலர் இருந்தனர் என்றும், அவருள் ஒருவர் தென்னாட்டிற்கு வந்தவர் என்றும், அவ்வொருவர் மேலே வடநாட்டில் வழங்கப்பட்ட அகத்தியர் பற்றிய செய்திகள் எல்லாம் சூட்டப்பட்டன என்றும், அக்கதைகள் தென்னாட்டிலும் பெருவழக்காகி உரையிலும் பாட்டிலும் புகுந்தன என்றும், அவ்வகத்தியர் பெயரால் எவரெவரோ நூல்கள் இயற்றினர் என்றும், அகத்தியத்தின் வழியே நூல் செய்தேம் என்பதை நூலாசிரியர்கள் பெருமையாகக் கருதிக் கொண்டனர் என்றும், அகத்தியர் பெயரால் வழங்கும் பேரகத்தியத் திரட்டு என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டளவில் ஒருவர் இயற்றியது என்றும், நாம் தெளியலாம்.

# 4. தொல்காப்பியம்

முந்து நூல்களின் வழியே நமக்குக் கிடைத்துள்ள முழு முதல் இலக்கண நூல் தொல்காப்பியமே. ஆசிரியர், தொல்காப்பியம் என்னும் நூலை இயற்றியமையால்தான் தொல்காப்பியன் எனத் தம் பெயர் தோன்றச் செய்தார் என்பதைப் பாயிரம் "தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றி'' என்று தெளிவாகக் கூறுகிறது. இதனை முன்னரே அறிந்துளோம்.

தொல்காப்பியம் 'பழமையான இலக்கண மரபுகளைக் காக்கும் நூல்' என்பதற்குப் பலப்பல சான்றுகள் இருப்பவும், 'பழமையான காப்பியக்குடியில் தோன்றியவரால் செய்யப்பட்டது' என்னும் கருத்தால், "பழைய காப்பியக்குடியில் உள்ளான்'' என நச்சினார்க்கினியர் கூறினார்.

பழைய காப்பியக்குடி என்னும் ஆட்சியைக் கண்டு 'விருத்த காவ்யக்குடி' என்பதொரு வடநாட்டுக்குடி என்றும், பிருகு முனிவர் மனைவி 'காவ்ய மாதா' எனப்படுவாள் என்றும் கூறித் தொல்காப்பியரை வடநாட்டுக் குடி வழியாக்க ஆய்வாளர் சிலர் தலைப்படலாயினர். இம்முயற்சிக்கு நச்சினார்கினியர் உரையின் புனைவையன்றி நூற் சான்றின்மை எவரும் அறியத்தக்கதே. இவ்வாய்வுகளையும் இவற்றின் மறுப்புகளையும் தமிழ்

வரலாறு-முதற்றொகுதி[1] (பக். 255-257) தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி[2] (பக். 2, 3) தமிழிலக்கிய வரலாறு—தொல்காப்பியம்[3] (பக். 17-23) என்பவற்றில் கண்டு கொள்க.

### காப்பியர்

தொல்காப்பியர் சிறப்பால் அவர் வழிவந்தவரும், அவரை மதித்துப் போற்றியவரும் அவர் பெயரைத் தம் மக்கட்கு இட்டுப் பெருக வழங்கினராதல் வேண்டும். இதனால் காப்பியாற்றுக் காப்பியன், வெள்ளூர்க் காப்பியன் என ஊரொடு தொடர்ந்தும், காப்பியஞ் சேத்தன், காப்பியன் ஆதித்தன் எனக் காப்பியப் பெயரொடு இயற்பெயர் தொடர்ந்தும் பிற்காலத்தோர் வழங்கலாயினர். இனிப் பல் காப்பியம் என்பதொரு நூல் என்றும் அதனை இயற்றியவர் பல்காப்பியனார் எனப் பட்டார் என்றும் கூறுவார் உளர். அப்பெயர் 'பல்காயம், என்பதும் பல்காயனார் என்பதுமேயாம்; படியெடுத்தோர் அவ்வாறு வழுப்படச் செய்தனர் என்று மறுப்பாரும் உளர்.

### தொல்காப்பியர் தமிழ் நாட்டாரே

''வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகத்து வழக்கும் செய்யுளும்'' ஆய்ந்து, தமிழியற் படி ''எழுத்தும் சொல்லும் பொருளும்'' ஆகிய முப்பகுப்பு இலக்கணம் செய்தவரும்,

> '' போந்தை வேம்பே ஆரென வரூஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவையும்'' (1006)

---

1. இரா. இராகவ ஐயங்கார்
2. மு. இராகவ ஐயங்கார்.
3. க. வெள்ளை வாரணனார்

"வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்பெயரெல்லை அகத்தவர் வழங்கும்
யாப்பின் வழியையும்" (1336)

"தமிழென் கிளவியும் அதனோ ரற்றே" (385)

*எனத் தமிழமைதியையும்,*

"வடசொற் கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே" (884)

*என வடவெழுத்துப் புகாது காத்தலையும் கூறிய தொல் காப்பியரை வலுவான அகச்சான்று வாய்த்தால் அன்றி வடநாட்டவர் என்பது வரிசை இல்லை என்க.*

## தொல்காப்பியப் பழமை

*சங்க நூல்களுக்குத் தொல்காப்பியம் முற்பட்டதா? பிற்பட்டதா? ஆய்தல் இன்றியே வெளிப்பட விளங்குவது முற்பட்டது என்பது. எனினும் பிற்பட்டது என்றும் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு அளவினது என்றும் குறித் தாரும் உளராகலின் இவ்வாய்வும் வேண்டத் தக்க தாயிற்று.*

*தொல்காப்பியர் பரிபாடல் இலக்கணத்தை விரி வாகக் கூறுகிறார். அவ்விலக்கணத்துள் ஒன்று கொச்சகம் அராகம் சுரிதகம் எருத்து என்னும் நான்கு உறுப்புகளை யுடையது அது என்பது. மற்றொன்று, காமப் பொருள் பற்றியதாக அது வரும் என்பது.*

*இப்பொழுது கிடைத்துள்ள பரிபாடல்கள் இருபத் திரண்டனுள் "ஆயிரம் விரித்த" என்னும் ஒரே ஒரு பாடல் மட்டும் பலவுறுப்புகளை யுடையதாக உள்ளது. எஞ்சிய பாடல்கள் இருபத்து ஒன்றும் உறுப்பமைதி பெற்றதாக இல்லை. பரிபாடல் திரட்டிலுள்ள இரண்டு பாடல்களுள் ஒரு பாடல் பலவுறுப்புகளை யுடையதாக உள்ளது. மற்றது உறுப்பற்ற பாட்டு.*

பரிபாடல் காமப் பொருள் பற்றியே வரும் என்பது இலக்கணமாக இருக்கவும் கடவுள் வாழ்த்துப் பொருளி லேயே பதினைந்து பாடல்கள் வந்துள்ளன. பரிபாடல் உயர் எல்லை நானூறடி என்பார். கிடைத்துள்ள பரிபாடல்களில் சான்று இல்லை. இவற்றால் அறியப் படுவது என்ன?

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள இலக்கணங்களை யுடைய பரிபாடல்கள் இவையில்லை. அவ்விலக்கணங் களையுடைய பரிபாடல்கள் இறந்தொழிந்தன. தலைச் சங்கத்தார் பாடியதாக வரும் 'எத்துணையோ பரிபாடல் களின்' அமைதியைக் கொண்டது தொல்காப்பிய இலக்கணம். ஆதலால், பாடலமைதியாலும் பொருள் வகையாலும் இம்மாற்றங்களை யடைய நெடியகாலம் ஆகியிருக்கவேண்டும் என்பதே அது.

தொல்காப்பியர் குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி என்பவற்றை எழுத்தளவையால் சுட்டு கிறார். அவ்வடிவகை கட்டளையடி எனப்படும். அவ் வாறாகவும் சங்கப் பாடல்கள் சீர்வகை அடியைக் கொண்டனவாக உள்ளனவேயன்றிக் கட்டளையடி வழி யமைந்தவையாக இல்லை. முற்றாக இம்மாற்றம் அமைய வேண்டுமானால் நெட்டநெடுங்கால இடைவெளி ஏற்பட்டிருக்கவேண்டும் என்பது தெளிவு.

தொல்காப்பியர் நேர், நிரை அசைகளுடன் நேர்பசை, நிரைபசை என்பவற்றையும் குறிக்கிறார். இந்நேர்பசை நிரைபசையை வேறு எவ்விலக்கண ஆசிரியரும் கொண்டிலர்; நேர் நிரை என்னும் இருவகை அசை களையே கொண்டனர். கட்டளையடி பயிலாமை போலவே, இவ்வசைகளும் பயிலாமை தொல்காப்பியப் பழமையை விளக்குவதேயாம். யாப்பருங்கலத்திற்கு முற்பட்டது காக்கை பாடினியம். அந்நூலிலும் அவிநயம் முதலிய நூல்களிலும் இவ்விருவகை அசைகளும் இடம்

பெறாமையால் இவற்றுக்கு மிகமுற்பட்ட நூல் தொல் காப்பியம் என்பது விளங்கும்.

பாட்டு யாப்பு, உரையாப்பு, நூல்யாப்பு, வாய் மொழியாப்பு, பிசியாப்பு, அங்கதயாப்பு, முதுசொல் யாப்பு என எழுவகை யாப்புகளை எண்ணுகிறார் தொல் காப்பியர் (1336). இவற்றுள் பாட்டுயாப்பு நீங்கிய எஞ்சிய யாப்புகள் எவையும் அறியுமாறு நூல்கள் வாய்த்தில. ஆகலின் அந்நிலை தொல்காப்பிய அறப்பழமை காட்டும்.

பேர்த்தியரைத் தம் கண்ணெனக் காக்கும் பாட்டி யரைச் 'சேமமடநடைப் பாட்டி' என்கிறது பரிபாட்டு (10:36-7). பாட்டி என்பது பாண்குடிப் பெண்டிரைக் குறிப்பதைச் சங்கச் சான்றோர் குறிக்கின்றனர். ஆனால் தொல்காப்பியம் ''பாட்டி என்பது பன்றியும் நாயும்'' என்றும் ''நரியும் அற்றே நாடினர் கொளினே'' என்றும் (1565, 1566) கூறுகின்றது. பாட்டி என்னும் பெயரைப் பன்றி நாய் நரி என்பவை பெறும் என்பது இந்நூற் பாக்களின் பொருள். முறைப்பெயராகவோ, பாடினியர் பெயராகவோ 'பாட்டி' என்பது ஆளப்படாத பழமைக் குச் செல்லும் தொல்காப்பியம், நெட்டிடை வெளி முற்பட்டது என்பதை விளக்கும். இவ்வாறே பிறவும் உள.

சங்கச் சான்றோர் நூல்களில் இருந்து சான்று காட்டக் கிடையாமையால் உரையாசிரியர்கள் ''இலக் கணம் உண்மையால் இலக்கியம் அவர் காலத்திருந்தது; இப்பொழுது வழக்கிறந்தது'' என்னும் நடையில் பல இடங்களில் எழுதுவாராயினர். ஆதலால் சங்கச் சான்றோர் காலத்திற்குப் பன்னூற்றாண்டுகளுக்கு முற்பட்டவர் தொல்காப்பியர் என்பது வெள்ளிடை மலையாம்!

''கள் என்னும் ஈறு அஃறிணைக்கு மட்டுமே தொல் காப்பியர் காலத்தில் வழங்கியது. அது திருக்குறளில்

'பூரியர்கள்' 'மற்றையவர்கள்' எனவும் கலித் தொகையில் 'ஐவர்கள்' எனவும் வழங்குகின்றது. 'அன்'ஈறு ஆண்பாற் படர்க்கைக்கே உரியதாகத் தொல்காப்பியம் கூறுகின்றது. இரப்பன், உடையன், உளன், இலன், அளியன், இழந் தனன், வந்தனன் எனத் தன்மையில் பெருவரவாகச் சங்கநூல்களில் இடம் பெற்றுள்ளன.

''தொல்காப்பியத்தில் வழங்காத ஆல், ஏல், மல், மை, பாக்கு என்னும் இறுதியுடைய வினையெச்சங்கள் சங்கநூல்களில் பயில வழங்குகின்றன.

''தொல்காப்பியத்தில் வினையீறாக வழங்கப்பட்ட 'மார்', 'தோழிமார்' எனப் பெயர்மேல் ஈறாக வழங்கப் பட்டுள்ளது.

வியங்கோள்வினை முன்னிலையிலும் தன்மையிலும் வாராது. என்பது தொல்காப்பிய விதி. அவற்றில் வருதலும் சங்கப் பாடல்களில் காணக் கூடியது.

''கோடி என்னும் எண்பற்றித் தொல்காப்பியத்தில் இல்லை. தாமரை, வெள்ளம், ஆம்பல் என்பனபோல எண்ணுப் பெயர்கள் (ஐ அம் பல் என்னும் இறுதியுடை யவை) வழங்குவதைச் சுட்டும் அவர், கோடியைக் குறித் தார் அல்லர். சங்கப் பாடல்களில் கோடி, 'அடுக்கியகோடி' என ஆளப் பெற்றுள்ளன. ஐ, அம், பல் ஈறுடைய எண்ணுப் பெயர்கள் அருகுதலும் அறிய வருகின்றன.

''சமய விகற்பம் பற்றிய செய்திகள், சமணம் புத்தம் பற்றிய குறிப்புகள் தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் சங்க நூல்களில் இவற்றைப் பற்றிய செய்திகள் காணப்படு கின்றன. எழுத்து சொல் ஆகிய அளவில் நில்லாமல் வாழ்வியலாகிய பொருள் பற்றி விரித்துக் கூறும் தொல் காப்பியர் காலத்தில் இவை வழக்கில் இருந்திருந்தால் கட்டாயம் சுட்டியிருப்பார். ஆகலின் சமண, பௌத்த சமயங்களின் வரவுக்கு முற்பட்டவரே தொல்காப்பியர்.

ஆதலால் தொல்காப்பியர் காலம் கி. மு. ஆறாம் நூற்றாண்டுக்கு முற்பட்டதேயன்றிப் பிற்பட்டதாகாது. இக் கருத்துகளைப் பேரா. க. வெள்ளைவாரணரும் (தமிழிலக்கிய வரலாறு—தொல்காப்பியம், பக். 87-96), பேரா. சி. இலக்குவனாரும் (தொல்காப்பிய ஆராய்ச்சி, பக். 12-14) விரித்துரைக்கின்றனர்.

சிலப்பதிகாரத்தால் இலங்கை வேந்தன் கயவாகு என்பான் அறியப்படுகிறான். அவன் காலம் கி. பி. 2-ஆம் நூற்றாண்டு என்பர். அச்சிலப்பதிகாரத்தில் 'திருக்குறள்' எடுத்தாளப்பட்டுள்ளது. ஆகலின் திருக்குறள் சிலப்பதிகார காலத்திற்கு முற்பட்டது என்பது வெளிப்படை. இளங்கோவடிகள் காலத்து வாழ்ந்தவரும் மணிமேகலை இயற்றியவரும், சேரன் செங்குட்டுவன் இளங்கோவடிகள் ஆகியோருடன் நட்புரிமை பூண்டவரும், தண்டமிழ் ஆசான் சாத்தன் என இளங்கோவடிகளாரால் பாராட்டப்பட்டவருமாகிய கூலவாணிகன் சாத்தனார், திருவள்ளுவரைப் 'பொய்யில் புலவன்' என்றும், திருக்குறளைப் 'பொருளுரை' என்றும் குறித்துக் கூறிப் பாராட்டுகிறார். ஆகலின், சிலப்பதிகார மணிமேகலை நூல்களுக்குச் சில நூற்றாண்டுகளேனும் முற்பட்டது திருக்குறள் எனத் தெளியலாம்.

அத் திருக்குறளுக்கு முப்பால் கொள்கை அருளியது தொல்காப்பியம். 'அறமுதலாகிய மும்முதற் பொருள்' என்பது தொல்காப்பியம். 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு' என வருவதும் தொல்காப்பியம். அது வகுத்தவாறு அறம் பொருள் வழக்காறுகள் திருக்குறளில் இடம் பெற்றுள்ளதுடன், இன்பத்துப்பாலோ, புணர்தல் பிரிதல் இருத்தல் இரங்கல் ஊடல் எனத் தொல்காப்பியர் சொல்லும் உரிப்பொருள் ஐந்தற்கும் முறையே ஐந்தைந்து அதிகாரங்களாக 25 அதிகாரங்கள் கொண்டு முற்றாகத் தொல்காப்பிய வழியில் விளங்க நூல் யாத்தவர் திருவள்ளுவர். ஆகலின் அத்திருக்குறளின் காலத்திற்குப்

பன்னூற்றாண்டு முற்பட்ட பழமையுடையது தொல் காப்பியம் என்பது தெளிவுமிக்க செய்தியாம்.

இனித் தொல்காப்பியத்தில் வரும் 'ஓரை' என்னும் சொல்லைக் கொண்டு தொல்காப்பியர் காலத்தைப் பின்னுக்குத் தள்ள முயன்றவர் உளர். ஓரை அவர் கருதுமாப்போல 'ஹோரா' என்னும் கிரேக்கச் சொல் வழிப்பட்டதன்று. அடிப்பொருள் பாராமல் ஒலி ஒப்புக் கொண்டு ஆய்ந்த ஆய்வின் முடிவே அஃதாம்.

'யவனர் தந்த வினைமாண் நன்கலம்' இவண் வந்ததும், அது 'பொன்னொடு வந்து கறியொடு (மிளகொடு)' பெயர்ந்ததும், 'யவன வீரர் அரண்மனை காத்ததும்' முதலாகிய பல செய்திகள் சங்க நூல்களில் பரவலாக உள. அக்காலத்தில் அவர்கள் 'தோகை' 'அரி' முதலிய சொற்களை அறிந்தது போல அறிந்து கொண்ட சொல் 'ஓரை' என்பது. அச்சொல்லை அவர்கள் ஆங்கு 'ஹோரா' என வழங்கினர்.

ஒரை என்பது ஒருமை பெற்ற-நிறைவு பெற்ற-பொழுது. திருமணத்தை முழுத்தம் என்பதும், திருமண நாள் பார்த்தலை முழுத்தம் பார்த்தல் என்பதும், திருமணக் கால்கோளை 'முழுத்தக்கால்' என்பதும், 'என்ன இந்த ஒட்டம் முழுத்தம் தவறிப்போகுமா?' என்பதும் இன்றும் வழக்கில் உள்ளவை. முழுமதி நாளில் செய்யப்பட்ட திருமணமே முழுத்தம் ஆயிற்று. இன்றும் வளர்பிறை நோக்கியே நாள் பார்த்தலும் அறிக.

ஆராய்ந்து பார்த்து-நாளும் கோளும் ஆராய்ந்து பார்த்து— 'நல்லவையெல்லாம் ஒன்றுபட்டு நிற்கும் பொழுதே நற்பொழுது' என்னும் குறிப்பால் அதனை ஓரை என்றனர்.

**" செஞ்ஞாயிற்றுச் செலவும் அஞ்ஞாயிற்றுப் பரிப்பும்**
**பரிப்புச் சூழ்ந்த மண்டிலமும்**

**வளிதிரிதரு திசையும்**
**வறிது நிலைஇய காயமும்**
**என்றிவை சென்றளந் தறிந்தோர் போல,**
**இனைத்தென்போரும் உளரே''**

என்னும் புறப்பாடலை அறிவோர் ஓரையைப் பிறர்வழியே நம் முன்னோர் அறிந்தனர் என்னார். உண்கலத்தைச் சூழ வைத்திருந்த பக்கக் கலங்களை, ''நாள்மீன் விரவிய கோள்மீனுக்கு'' உவமை சொல்லும் அளவில் தெளிந் திருந்த அவர்கள், ஓரையைப் பிறர் வழியே அறிந்தனர் என்பது பொருந்தாப் புகற்சியாம்.

**தொல்காப்பியர் சமயம்:**

தொல்காப்பியனார் சமயம் பற்றியும் பலவகைக் கருத்துகள் உள. அவர் சைவர் என்பர். சைவம் என்னும் சொல் வடிவம் மணிமேகலையில்தான் முதற்கண் இடம் பெறுகிறது. பாட்டு தொகைகளில் இடம் பெற்றில. சேயோன், சிவன் வழிபாடு உண்டு என்பது வேறு. அது சைவ சமயமென உருப்பெற்றது என்பது வேறு. ஆதலால் சைவரெனல் சாலாது.

தொல்காப்பியரை வேத வழிப்பட்டவர் என்னும் கருத்தும் உண்டு. அஃதுரையாசிரியர்கள் கருத்து. நூலொடுபட்ட செய்தியன்றாம்.

தொல்காப்பியரைச் சமண சமயத்தார் என்பது பெரு வழக்கு. அவ்வழக்கும் ஏற்கத்தக்க தன்று. அதன் சார்பான சான்று தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் அச்சமயம் சார்ந்தார் அல்லர் என்பதற்குச் சான்றுகள் உள்ளன.

சமண சமய நூல்களாக வழங்குவன அருக வணக்கம் சித்த வணக்கம் உடையவை. அவ்வாறு பகுத்துக் கூறா விடினும் கடவுள் வணக்கம் உடையவை. சமண சமய நூல்களாகக் கிடைப்பவற்றை நோக்கவே புலப்படும்.

தொல்காப்பியர் காலத்தில் கடவுள் வாழ்த்து நூன் முகப்பில் பாடும் மரபில்லை எனின், அவர் சமண சமயத்தார் என்பதும் இல்லை என்பதே உண்மை. என்னெனின் சமணர் தம் சமயத்தில் அத்தகு அழுத்தம் உடையவர் ஆதலால்.

சமண சமயத்தார் உயிர்களை ஐயறிவு எல்லை யளவிலேயே பகுத்துக் கொண்டனர். ஆறாம் அறிவு குறித்து அவர்கள் குறிப்பு இல்லை. ''மாவும் மாக்களும் ஐயறிவினவே'' என்னும் தொல்காப்பியர், ''மக்கள் தாமே ஆறறி வுயிரே'' என்றும் கூறினார். நன்னூலார் சமணர் என்பதும் வெளிப்படை. அவர் ஐயறிவு வரம்பு காட்டும் அளவுடன் அமைந்ததும் வெளிப்படை.

சமண சமயத்தார் நிலையாமையை அழுத்தமாக வலியுறுத்துவர். துறவுச் சிறப்புரைத்தலும் அத்தகையதே. ஆகவும் நிலையாமையையே கூறும் காஞ்சித் திணையைப் பாடுங்காலும்,

''நில்லா உலகம் புல்லிய நெறித்தே'' என 'உலகம் நிலையாமை பொருந்தியது' என்ற அளவிலேயே அமைகிறார்.

> **'' காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
> **ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
> **அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
> **சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''** (1138)

என அன்பு வாழ்வே அருள் வாழ்வாம் தவவாழ்வாக வளர்நிலையில் இல்லறத் தவமேற்கும் நிலை சமணம் சார்ந்ததன்று. அது இம்மண்ணில் தோன்றி வளர்ந்து பெருகிய தொல் பழந்தமிழ் நெறி.

தொல்காப்பியர் சமண சமயத்தார் எனின் அகத்திணையியல் களவியல் கற்பியல் பொருளியல் என அகப்பொருளுக்குத் தனியே நான்கு இயல்கள் வகுத்ததுடன்

மெய்ப்பாட்டியல் செய்யுளியல் உவம இயல் என்பன வற்றிலும் அப்பொருள் சிறக்கும் இலக்கணக் குறிப்பு களைப் பயில வழங்கார்.

காமத்தைப் புறைதீர்காமம் என்றும் (1027) காமப் பகுதி கடவுளும் வரையார் என்றும் (1029) கூறார்.

**'' ஏனது சுவைப்பினும் நீகை தொட்டது
தேனது வாகும்''**

என்பது போலும் இன்பியல் யாத்திரார். கிறித்தவத் துறவு நெறிசார் வீரமாமுனிவரின் தொன்னூல் விளக்கப் பொருளதிகாரம் காண்பார் இதனை நன்கு அறிவார். சிந்தாமணியாம் பாவிகத்தை எடுத்துக்காட்டுவார் எனின் நரிவிருத்தத்தையும் கருதுதல்வேண்டும். பாட இயலாது என்பதை இயலுமெனக் காட்ட எழுந்தது அந்நூல் என்பதையும், காமத்தைச் சூடிக் கழித்த பூப்போல் முத்திப் பகுதியில் காட்டுவதையும் கருதுவாராக.

**கடவுள் நம்பிக்கை:**

தொல்காப்பியர் கடவுள் வாழ்த்துக் கூறவில்லை எனினும்

**'' கொடிநிலை கந்தழி வள்ளி என்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே''**

என்றும் (1034), புறநிலை வாழ்த்து,

**'' வழிபடு தெய்வம் நிற்புறம் காப்பப்
பழிதீர் செல்வமொடு வழிவழி சிறந்து
பொலிமின்''**

என்பது என்றும் ஆளும் இடங்களில் தெளிவாகக் கடவுள் வாழ்த்து என்பதையும் 'வழிபடு தெய்வம்' என்பதையும் குறிக்கிறார். மேலும் கருப்பொருள் கூறுங்கால் 'தெய்வம் உணாவே' என உணவுக்கு முற்படத் தெய்வத்தை

வைக்கிறார். உலகெலாம் தழுவிய பொது நெறியாக இந்நாள் வழங்கும் இது, பழந்தமிழர் பயில்நெறி என்பது விளங்கும். ஆதலால் பழந்தமிழர் சமய நெறி எந் நெறியோ அந்நெறியே தொல்காப்பியர் நெறி எனல் சாலும்.

வாகைத் திணையில் வரும், 'கட்டமை ஒழுக்கத்துக் கண்ணுமை', 'அருளொடு புணர்ந்த அகற்சி', 'காமம் நீத்த பால்' என்பனவும், காஞ்சித் திணையில் வரும் தபுதார நிலை, தாபத நிலை, பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்து என்பனவும் பழந்தமிழர் மெய்யுணர்வுக் கோட்பாடுகள் எனக் கொள்ளத்தக்கன.

கொற்றவை நிலை, வேலன் வெறியாட்டு, பூவை நிலை காட்சி கால்கோள் நீர்ப்படை நடுகல் சீர்த்தகு சிறப்பில் பெரும்படை வாழ்த்தல் என வரும் வெட்சிப் பகுதிகள் பழந்தமிழர் வழிபாட்டியலைக் காட்டுவன.

சேயோன் மாயோன் வேந்தன் வண்ணன் என்பார், குறிஞ்சி முதலாம் திணை நிலைத் தெய்வங்களெனப் போற்றி வழிபடப்பட்டவர் என்பதாம்.

ஆசிரியர் திருவள்ளுவர் கடவுள் வாழ்த்துப் பாடினாலும், அவர் இன்ன சமயத்தவர் என்பதற்குரிய திட்டவட்டமான அகச்சான்று இல்லாமை போலத் தொல்காப்பியர்க்கும் இல்லை. ஆகவே சமயக் கணக்கர் மதி வழிச் செல்லாத பொதுவழிக் கொள்கையராம் வள்ளுவரைப் போன்றவரே தொல்காப்பியர் என்க.

**தொல்காப்பியக் கட்டொழுங்கு :**

தொல்காப்பியம் கட்டொழுங்கமைந்த நூல் என்பது மேலோட்டமாகப் பார்ப்பவர்க்கும் நன்கு விளங்கும். இன்ன பொருள் இத்தட்டில் என்று வைக்கப்பட்ட ஐந்தறைப் பெட்டியில் இருந்து வேண்டும் பொருளை

எடுத்துக் கொள்வதுபோல் எடுத்துக் கொள்ள வாய்த்தது தொல்காப்பியம். அதனையே பாயிரம் முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்ததாகக் குறிக்கின்றது.

எழுத்து சொல் பொருள் என்னும் மூன்றதிகாரங் களைக் கொண்ட தொல்காப்பியம் ஒவ்வோர் அதிகாரத் திற்கும் ஒன்பது ஒன்பது இயல்களைக் கொண்டிருத்தல் அதன் கட்டமைதிச் சிறப்புக் காட்டுவதாம்.

**'' ஆயிரத்தின் மேலும் அறுநூற்றுப் பஃதென்ப**
**பாயிரத்தொல் காப்பியங்கற் பார்''**

என்பது தொல்காப்பிய நூற்பா அளவினைக் கூறுவதொரு வெண்பா. ஆனால் உரையாசிரியர்களின் அமைப்புப்படி 1595 முதல் 1611 நூற்பா வரை பல்வேறு எண்ணிக்கை யுடையதாய் அமைந்துள்ளன. இக்கணக்கீடும் தொல் காப்பியர் சொல்லியதோ, பனம்பாரனார் குறித்ததோ அன்று. உரையாசிரியர்களின் காலத்தவரோ அவர்களின் காலத்திற்கு முன்னே இருந்த மூலநூற்பா எல்லையில் கணக்கிட்டறிந்த ஒருவரோ கூறியதாகலாம்.

தொல்காப்பிய அடியளவு 3999 என்று அறிஞர் வ. சுப. மாணிக்கனார் (தொல்காப்பியக்கடல் -பக். 95) எண்ணிக் கூறுவர். ஏறக்குறைய 5630 சொல் வடிவங்கள் தொல்காப்பியத்தில் உள்ளமையையும் கூறுவர். அவர் ''தொல்காப்பிய இலக்கணத்தைக் காண்பதற்குத் தொல் காப்பியத்தையே இலக்கியமாகக் கொள்ளலாம். தன்னைத் தானே விளக்கிக் காட்டுதற்குரிய அவ்வளவு பருமனுடையது தொல்காப்பியம்'' என்று வாய்மொழி கின்றார்.

**முப்பகுப்பு :**

தனியெழுத்துகள், சொல்லில் எழுத்தின் நிலை, எழுத்துப் பிறக்கும் வகை, புணர் நிலையில் எழுத்தமைதி என்பவற்றை விரித்துரைப்பது எழுத்ததிகாரம். நூன்

மரபு, மொழி மரபு, பிறப்பியல், புணரியல், தொகை மரபு, உருபியல், உயிர் மயங்கியல், புள்ளி மயங்கியல், குற்றியலுகரப் புணரியல் என்பன எழுத்ததிகார இயல்கள்.

எழுத்துகள் சொல்லாம் வகை, பெயர்கள் வேற்றுமை யுருபேற்றல், விளிநிலை எய்தல், பெயர் வினை இடை உரி என்னும் சொல் வகைகள் இன்னவற்றைக் கூறுவது சொல்லதிகாரம், கிளவியாக்கம், வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல், விளிமரபு, பெயரியல். வினையியல், இடையியல், உரியியல், எச்சவியல் என்பன சொல்லதிகார இயல்கள்.

இன்ப ஒழுக்க இயல்பு, பொருள் அற ஒழுக்க இயல்பு, களவு கற்பு என்னும் இன்பவியற் கூறுகள், பொருளியல் வாழ்வில் நேரும் மெய்ப்பாடுகள், பொருளியல் நூலுக்கு விளக்காம் உவமை, செய்யுளிலக்கணம், உலக வழக்கு செய்யுள் வழக்கு என்பவற்றின் மரபுகள் ஆகியவற்றைக் கூறுவது பொருளதிகாரம். அகத்திணையியல், புறத் திணையியல், களவியல், கற்பியல், பொருளியல், மெய்ப் பாட்டியல், உவமவியல், செய்யுளியல், மரபியல் என்பன பொருளதிகார இயல்கள்.

எடுத்துக் கொண்ட பொருளின் அடிக்கருத்தை முதற்கண் கூறி பின்னர் வித்தில் இருந்து கிளரும் முளை இலை தண்டு கிள்ளை கவடு பூ காய் கனி என்பவை போலப் பொருளைப் படிப்படியே வளர்த்து நிறைவிப்பது தொல் காப்பியர் நடைமுறை.

எழுத்துகள் இவை, இவ்வெண்ணிக்கையுடையன என்று நூன் மரபைத் தொடங்கும் ஆசிரியர். குறில் நெடில் மாத்திரை உயிர் மெய் வடிவு உயிர்மெய், அவற்றின் ஒலிநிலைப்பகுப்பு, மெய்ம்மயக்கம், சுட்டு வினா எழுத்துகள் என்பவற்றைக் கூறும் அளவில் 33நூற்பாக் களைக் கூறி அமைகிறார். முப்பத்துமூன்றாம் நூற்பாவை,

"அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்
உளவென மொழிப இசையொடு சிவணிய
நரம்பின் மறைய என்மனார் புலவர்"

என்கிறார். இயலிலக்கணம் கூறும் ஆசிரியர் இசையிலக்கணம் பற்றிய நூல்களில் இவ்வெழுத்துகளின் நிலை எவ்வாறாம் என்பதையும் சுட்டிச் செல்லுதல் அருமையுடையதாம். அவ்வாறே ஒவ்வோர் இயலின் நிறைவிலும் அவர் கூறும் புறனடை நூற்பா, மொழிவளர்ச்சியில் தொல்காப்பியனார் கொண்டிருந்த பேரார்வத்தையும் காலந்தோறும் மொழியில் உண்டாகும் வளர்நிலைகளை மரபுநிலை மாறாவண்ணம் அமைத்துக் கொள்வதற்கு வழிசெய்வதையும் காட்டுவனவாம்.

" கிளந்த அல்ல செய்யுளுள் திரிநவும்
வழங்கியல் மருங்கின் மருவொடு திரிநவும்
விளம்பிய இயற்கையின் வேறுபடத் தோன்றின்
வழங்கியல் மருங்கின் உணர்ந்தனர் ஒழுக்கல்
நன்மதி நாட்டத்து என்மனார் புலவர்"

என்பது எழுத்ததிகாரப் புறனடை. தொல்காப்பியர் தொன்மையைக் காக்கும் கடப்பாட்டை மேற்கொண்டிருந்தவர் என்பதுடன் நிகழ்கால எதிர்கால மொழிக் காப்புகளையும் மேற்கொண்டிருந்தவர் என்பது இவ்வாறு வரும் புறனடை நூற்பாக்களால் இனிதின் விளங்கும்.

தொல்காப்பியம் இலக்கணம் எனினும் இலக்கியமென விரும்பிக் கற்கும் வண்ணம் வனப்பு மிக்க உத்திகளைத் தொல்காப்பியர் கையாண்டு நூலை யாத்துள்ளார்.

**இலக்கிய நயங்கள்:**

**எளிமை:** சிக்கல் எதுவும் இல்லாமல் எளிமையாகச் சொல்கிடந்தவாறே பொருள் கொள்ளுமாறு நூற்பா அமைத்தலும், எளிய சொற்களையே பயன்படுத்துதலும் தொல்காப்பியர் வழக்கம்.

"எழுத்தெனப் படுவ,
அகர முதல னகர இறுவாய்
முப்ப∴ தென்ப"

"ஓதல் பகையே தூதிவை பிரிவே"

"வண்ணந் தானே நாலைந் தென்ப"

**ஓரியல் யாப்புரவு:**

'ஒன்றைக் கூறுங்கால் அதன் வகைகளுக்கெல்லாம் ஒரே யாப்புரவை மேற்கொள்ளல்'' என்பது தொல்காப்பியர் வழக்கம்.

"வல்லெழுத் தென்ப கசட தபற

"மெல்லெழுத் தென்ப ஙஞண நமன"

"இடையெழுத் தென்ப யரல வழள"

**சொன்மீட்சியால் இன்பமும் எளிமையும் ஆக்கல்:**

ஓரிலக்கணம் கூறுங்கால் சிக்கல் இல்லாமல் பொருள் காண்பதற்காக வேண்டும் சொல்லைச் சுருக்காமல் மீளவும் அவ்விடத்தே சொல்லிச் செல்லுதல் தொல்காப்பியர் வழக்கம்.

"அவற்றுள்,

நிறுத்த சொல்லின் ஈறா கெழுத்தொடு
குறித்துவரு கிளவி முதலெழுத் தியையப்
பெயரொடு பெயரைப் புணர்க்குங் காலும்
பெயரொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு பெயரைப் புணர்க்குங் காலும்
தொழிலொடு தொழிலைப் புணர்க்குங் காலும்
மூன்றே திரிபிடன் ஒன்றே இயல்பென
ஆங்கந் நான்கே மொழிபுணர் இயல்பே"

என்னும் நூற்பாவைக் காண்க. இவ்வியல்பில் அமைந்த நூற்பாக்கள் மிகப் பல என்பதைக் கண்டு கொள்க.

**நூற்பா மீட்சியால் இயைபுறுத்தல்:**

*ஓரிடத்துச் சொல்லப்பட்ட இலக்கணம் அம்முறையிலேயே சொல்லப் படத்தக்க தாயின் புதிதாக நூற்பா இயற்றாமல், முந்தமைத்த நூற்பாவையே மீளக்காட்டி அவ்வவ் விலக்கணங்களை அவ்வவ்விடங்களில் கொள்ள வைத்தல் தொல்காப்பிய ஆட்சி. இது தம் மொழியைத் தாமே எடுத்தாளலாம்.*

**"அளபெடைப் பெயரே அளபெடை இயல"**

**"தொழிற்பெயரெல்லாம் தொழிற் பெயரியல"**

*என்பவற்றைக் காண்க,*

**எதுகை மோனை நயங்கள்:**

*எடுத்துக் கொண்டது இலக்கணமே எனினும் சுவைமிகு இலக்கியமெனக் கற்குமாறு எதுகை நயம்பட நூற்பா யாத்தலில் வல்லார் தொல்காப்பியர்.*

**"வஞ்சி தானே முல்லையது புறனே**
**எஞ்சா மண்ணசை வேந்தனை வேந்தன்**
**அஞ்சுதகத் தலைச்சென் றடல்குறித் தன்றே"**

**"ஏரோர் களவழி அன்றிக் களவழித்**
**தேரோர் தோற்றிய வென்றியும்"**

*இவை தொடை எதுகைகள். இவ்வாறே ஐந்தாறு அடிகளுக்கு மேலும் தொடையாகப் பயில வருதல் தொல்காப்பியத்துக் கண்டு கொள்க.*

**"மாற்றருங் கூற்றம் சாற்றிய பெருமையும்**
**கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய முதுமையும்"**

*இவை அடி எதுகைகள்.*

**"விறப்பும் உறப்பும் வெறுப்பும் செறிவே"**

**"நொசிவும் நுழைவும் நுணங்கும் நுண்மை"**

*முன்னதில் முழுவதும் எதுகைகளும், பின்னதில் முழுவதும் மோனைகளும் தொடைபடக் கிடந்து நடையழகு காட்டல் அறிக.*

"வயவலி யாகும்"
"வாள்ஒளி யாகும்"
"உயாவே உயங்கல்"
"உசாவே சூழ்ச்சி"

இவை மோனைச் சிறப்பால் அடுத்த தொடரைக் கொண்டு வந்து நிறுத்துகின்றன.

**அடைமொழி நடை:**

மரம்பயில் கூகை, செவ்வாய்க் கிளி, வெவ்வாய் வெருகு, இருள்நிறப் பன்றி, மூவரி அணில், கோடுவாழ் குரங்கு, கடல்வாழ் சுறவு, வார்கோட்டி யானை என அடைமொழிகளால் சுவைப்படுத்துதல் தொல்காப்பியர் உத்திகளுள் ஒன்று.

"இழுமென் மொழியால் விழுமியது பயில்ல்"
"எண்ணு வண்ணம் எண்ணுப் பயிலும்"

இவ்வாறு ஒலி நயத்தால் கவர்ந்து பொருளை அறிந்து கொள்ளச் செய்வதும் தொல்காப்பியர் உத்திகளுள் ஒன்று.

"மாத்திரை முதலா அடிநிலை காறும்
நோக்குதற் காரணம் நோக்கெனப் படுமே"
"ஒரூஉ வண்ணம் ஒரீஇத் தொடுக்கும்"

என எடுத்த இலக்கணத்தை அச்சொல்லாட்சியாலே விளக்கிக் காட்டுவதும் தொல்காப்பிய நெறி. 'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்' என இயலின் பெயர் குறிக்கு மாற்றானே இலக்கணமும் யாத்துக் காட்டியமை நூற்பாவுள் தனி நூற்பாவாகிய பெற்றிமையாம்.

**வரம்பு:**

இளமைப் பெயர், ஆண்மைப் பெயர், பெண்மைப் பெயர் என்பவற்றை முறையே கூறி விளக்கிய ஆசிரியர் ''பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே'' என நிறைவித்தல் நூல் வரம்புச் சான்றாம். செய்யுளியல் தொடக்

கத்தில் செய்யுள் உறுப்புகள் மாத்திரை முதலாக முப்பத்து நான்கனை உரைத்து அவற்றை முறையே விளக்குதலும் பிறவும் திட்டமிட்ட நூற்கொள்கைச் சிறப்பாக அமைவதாம்.

"வகரக் கிளவி நான்மொழி ஈற்றது"

"அம்மூன்றென்ப மன்னைச் சொல்லே"

இன்னவாறு வருவனவும் வரம்பே.

**விளங்க வைத்தல்:**

விளங்கவைத்தல் என்பதொரு நூலழகாகும். அதனைத் தொல்காப்பியனார் போல விளங்க வைத்தவர் அரியர்.

"தாமென் கிளவி பன்மைக் குரித்தே"

"தானென் கிளவி ஒருமைக் குரித்தே"

"ஒருவர் என்னும் பெயர்நிலைக் கிளவி
இருபாற்கும் உரித்தே தெரியுங் காலை"

இவ்வளவு விளங்கச் சொன்னதையும் எத்தனை எமக்தாளர்கள் இந்நாளில் புரிந்து கொண்டுளர்?

**நயத்தகு நாகரிகம்:**

சில எழுத்துகளின் பெயரைத்தானும் சொல்லாமல் உச்சகாரம் (சு), உப்பகாரம் (பு), ஈகார பகரம் (பீ) இடக்கர்ப் பெயர் என்பவற்றை எடுத்துச் சொல்லும் நாகரிகம் எத்தகு உயர்வு உடையது! இஃது உயர்வெனக் கருதும் உணர்வு ஒருவர்க்கு உண்டாகுமானால் அவர் தம் மனம்போன போக்கில் எண்ணிக் கைபோன போக்கில் கிறுக்கிக் கதையெனவோ பாட்டெனவோ நஞ்சை இறக்கி 'இளையர்' உளத்தைக் கெடுத்து எழுத்தால் பொருளீட்டும் சிறுமை உடையராவரோ?

தொல்காப்பிய நூனயம் தனியே ஆய்ந்து வெளிப்படுத்தற்குரிய அளவினது. இவ்வரலாற்றுக்கு அத்துணை விரிவு சாலாது.

**தொல்காப்பியக் கொடை:**

முந்து நூல் வளங்கள் அனைத்தும் ஒருங்கே பெறத் தக்க அரிய நூலாகத் தொல்காப்பியம் விளங்குவதுடன், அவர்கால வழக்குகளையும் அறிந்துகொள்ளும் வண்ணம் தொல்காப்பியர் தம் நூலை இயற்றியுள்ளார். அன்றியும் பின்வந்த இலக்கியப் படைப்பாளிகளுக்கும் இலக்கணப் படைப்பாளிகளுக்கும் அவர் வழங்கியுள்ள கொடைக்கு அளவே இல்லை. தொட்டனைத் தூறும் மணற்கேணி யென அது சுரந்து கொண்டே உள்ளமை ஆய்வாளர் அறிந்ததே.

பொருளதிகார முதல் நூற்பா 'கைக்கிளை முதலா' எனத் தொடங்குகின்றது. அக்கைக்கிளைப் பொருளில் எழுந்த சிற்றிலக்கியம் உண்டு. முத்தொள்ளாயிரப் பாடல்களாகப் புறத்திரட்டு வழி அறியப் பெறுவன அனைத்தும் கைக்கிளைப் பாடல்களே.

''ஏறிய மடல் திறம்'' என்னும் துறைப்பெயர் பெரிய மடல், சிறியமடல் எனத் தனித்தனி நூலாதல் நாலாயிரப் பனுவலில் காணலாம்.

'மறம்' எனப்படும் துறையும் 'கண்ணப்பர் திருமறம்' முதலாகிய நூல் வடிவுற்றது. கலம்பக உறுப்பும் ஆயது.

'உண்டாட்டு' என்னும் புறத்துறை, கம்பரின் உண் டாட்டுப் படலத்திற்கு மூலவூற்று.

'தேரோர் களவழி' களவழி நாற்பது கிளர்வதற்குத் தூண்டல். 'ஏரோர் களவழி' என்பது பள்ளுப்பாட லாகவும், 'குழவி மருங்கினும்' என்பது பிள்ளைத் தமிழாக வும் வளர்ந்தவையே.

**'' காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்**
**சீர்த்த மரபின் பெரும்படை வாழ்த்தலென்**
**றிருமூன்று மரபின்கல்''**

என்னும் புறத்திணை இயல் நூற்பா தானே, சிலப்பதிகார வஞ்சிக்காண்டத்திற்கு வைப்பகம்.

பாடாண் திணைத் துறைகள் சிற்றிலக்கிய வளர்ச்சிக்கு வழங்கியுள்ள கொடை தனிச்சிறப்பினதாம்.

''அறம் முதலாகிய மும்முதற் பொருட்கும்'' என நூற்பாச் செய்து முப்பாலுக்கு மூலவராகத் தொல்காப்பியனார் திகழ்வதைச் சுட்டுவதே அவர்தம் கொடைப் பெருமை நாட்டுவதாகலாம்.

இவை இலக்கியக் கொடை. இலக்கணக் கொடை எத்துணைக் கொடை? எனின் இவ்விலக்கண வரலாறு சுட்டுவனவும் சுட்டாதனவுமாகிய இலக்கண நூல்கள் அனைத்துக்கும் நற்றாயாயும், செவிலித்தாயாயும், நல்லாசானாயும் இருந்து வளர்த்து வந்த-வளர்த்து வருகின்ற சீர்மை தொல்காப்பியத்திற்கு உண்டு. இந்நாளில் வளர்ந்துவரும் 'ஒலியன்' ஆய்வுக்கும் தொல்காப்பியர் வித்திட்டவர் எனின், அவர் வழி வழியே நூல்யாத்தவர்க்கு அவர் பட்டுள்ள பயன்பாட்டுக்கு அளவேது? ''தொல்காப்பியன் ஆணை'' என்பதைத் தலைமேற் கொண்ட இலக்கணர்கள், பின்னைப் பெயர்ச்சியும் முறை திறம்பலுமே மொழிச்சிதைவுக்கும் திரிபுகளுக்கும் இடமாயிற்று என்பதை நுணுகி நோக்குவார் அறிந்து கொள்ளக்கூடும்.

## இலக்கணப் பகுப்பு விரிவு:

இனித் தொல்காப்பியம் பிற்கால இலக்கணப் பகுப்புகளுக்கும் இடந்தருவதாக அமைந்தமையும் எண்ணத் தக்கதே. தமிழ் இலக்கணம் ஐந்திலக்கணமாக அண்மைக் காலம் வரை இயன்றது. அறுவகை இலக்கணமென ஓரிலக்கணமாகவும் இது கால் விரிந்தது. இவ் விரிவுக்குத் தொல்காப்பியம் நாற்றங்காலாக இருப்பது அறிதற்குரியதே.

எழுத்து சொல் பொருள் என முப்பகுப்பால் இயல்வது தொல்காப்பியம் ஆகலின் தமிழிலக்கணம் அவர் காலத்தில் முக் கூறுபட இயங்கியமை வெளி.

அவர் கூறிய பொருளிலக்கணத்தைத் தனித்தனியே வாங்கிக் கொண்டு அகப்பொருள், புறப்பொருள் என இலக்கணங்கூறும் நூல்கள் கிளைத்தன. அது பொருளி லக்கணத்தைப் பகுத்துக் கொண்டதே.

அவர் கூறிய செய்யுளியலை வாங்கிக் கொண்டு, 'யாப்பருங்கலம்' முதலிய யாப்பு இலக்கண நூல்கள் தோன்றித் தமிழ் இலக்கணத்தை நாற்கூறுபடச் செய்தன.

அவர் கூறிய உவமையியலையும் செய்யுளியலில் சில பகுதிகளையும் தழுவிக்கொண்டு வடமொழி இலக்கணத் துணையொடு அணியிலக்கணம் என ஒரு பகுதியுண்டாகித் தமிழ் இலக்கணம் ஐங்கூறுடையதாயிற்று.

இவ்வைந்துடன் ஆறாவது இலக்கணமாகச் சொல்லப் படுவது 'புலமை இலக்கணம்' என்பது. அது தமிழின் மாட்சி தமிழ்ப் புலவர் மாட்சி முதலியவற்றை விரிப்பது.

**'' தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதென**
**வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே''**

என்பது அவ்விலக்கணத்தில் ஒரு பாட்டு.

ஆக மூன்றிலக்கணத்துள் ஆறிலக்கணக் கூறுகளையும் மேலும் உண்டாம் விரிவாக்கங்களையும் கொண்டிருக் கின்ற மொழிக் களஞ்சியம் தொல்காப்பியம் என்க.

தொல்காப்பியரின் சிறப்பாகப் பாயிரம் சொல்வன வற்றுள் ஒன்று, 'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்பது. ஐந்திரம் இந்திரனால் செய்யப்பட்டது என்றும், பாணினீயத்திற்குக் காலத்தால் முற்பட்டது என்றும், வடமொழியில் அமைந்தது என்றும் பாணினீயத்தின் காலம் கி. மு. 450 ஆதலால் அதற்கு முற்பட்ட ஐந்திரக்

காலம் அதனின் முற்பட்டதென்றும், அந் நூற்றேர்ச்சி தொல்காப்பியர் பெற்றிருந்தார் என்றும், அந்நூற் பொருளைத் தம் நூலுக்குப் பயன்படுத்திக் கொண்டார் என்றும் ஆய்வாளர் பலப்பல வகையால் விரிவுறக் கூறினர்.[1]

சிலப்பதிகாரத்தில் வரும் 'விண்ணவர் கோமான்' விழுநூல், 'கப்பத்திந்திரன் காட்டிய நூல்' என்பவற்றை யும் 'இந்திரன் எட்டாம் வேற்றுமை என்றனன்' என்னும் ஒரு நூற்பாவையும் காட்டி அவ்வைந்திர நூலைச் சுட்டு வர். விண்ணவர் கோமான் இந்திரன் வடமொழியில் நூல் செய்தான் எனின், தேவருலக மொழி வடமொழி என்றும், விண்ணுலக மொழியே மண்ணில் வடமொழி யாய் வழங்குகின்றது என்றும் மண்ணவர் மொழியுடை யாரை நம்பவைப்பதற்கு இட்டுக் கட்டப்பட்ட எளிய புனைவேயாம். அப்புனைவுப் பேச்சுக் கேட்டதால்தான் இளங்கோ தம் நூலுள்ளும் புனைந்தார். அவர் கூறும் ''புண்ணிய சரவணத்தில் மூழ்கி எழுந்தால் விண்ணவர் கோமான் விழுநூல் எய்துவர்'' என்பதே நடைமுறைக் கொவ்வாப் புனைவு என்பதை வெளிப்படுத்தும். அகத் திய நூற்பாக்களென உலவ விட்டவர்களுக்கு, இந்திரன் எட்டாம் வேற்றுமை சொன்னதாக உலவவிட முடி யாதா?

இவ்வாறு கூறப்பட்டனவே தொன்மங்களுக்குக் கைம் முதல். இதனைத் தெளிவாகத் தெரிந்தே தொல்காப்பி யனார்,

**'' தொன்மை தானே**
**உரையொடு புணர்ந்த பழமை மேற்றே''**

---

1. தமிழ் இலக்கிய வரலாறு தா. சு; தொல்காப்பிய ஆராய்ச்சி சி. சி; தமிழ் வரலாறு ரா. ரா; தொல்காப் பியம் க. வெ; இலக்கியச் சிந்தனைகள் ச. வை.

என்றார். தொன்மை என்பது வழிவழியாக உரைக்கப் பட்டு வந்த பழஞ்செய்தி பற்றியதாம் என்பது இந்நூற் பாவின் பொருள். இவ்வாறு தொல்காப்பியர் கேட்ட தொன்மச் செய்திகளைப் பனம்பாரனார் கேட்டிரார் என்ன இயலாதே.

'இந்திரனாற் செய்யப்பட்டதொரு நூல் உண்டு காண்; அது வடமொழியில் அமைந்தது காண்; அதன் வழிப்பட்டனவே வடமொழி இலக்கண நூல்கள் காண்'' என்று கூறப்பட்ட செய்தியைப் பனம்பாரர் அறிந்தார். 'அறிந்தார் என்பது இட்டுக் கட்டுவதோ' எனின் அன்று என்பதை அவர்வாக்கே மெய்ப்பிப்பதை மேலே காண்க.

திருவள்ளுவர் காலத்திலும், ''தாமரைக் கண்ணானின் உலக இன்பத்தினும் உயரின்பம் ஒன்று இல்லை'' என்று பேசப்பட்டது. இவ்வாறு பிறர் பிறர் காலத்தும் பிறபிற செய்திகள் பேசப்பட்டன என்பவற்றை விரிப்பின் பெருகுமென்பதால் வள்ளுவர் அளவில் அமைவாம்.

திருவள்ளுவர் கேட்ட செய்தி, அவரை உந்தியது. அதனால் ''தாம்வீழ்வார் மென்றோள் துயிலின் இனிது கொல், தாமரைக் கண்ணான் உலகு?'' என்றோர் வினாவை எழுப்பி இவ்வுலகத்தெய்தும் இன்பங்களுள் தலையாய காதலின்பத்தைச் சுட்டினார். இன்னதோர் வாய்பாட்டால் பனம்பாரனார் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியரைச் சுட்டினார்.

'ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்' என்று வாளா கூறினார் அல்லர் பனம்பாரனார். ''மல்குநீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' என்றார். அவர் கேள்வியுற்றது 'விண்ணுலக ஐந்திரம்!' அவ்விண்ணுலக ஐந்திரத்தினும் இம்மண்ணுலகத்துத் தொல்காப்பியமே சிறந்த ஐந்திரம் என்னும் எண்ணத்தை யூட்டிற்றுப் போலும்! ''ஆகாயப்பூ நாறிற்று என்றுழிச் சூடக்கருது

வாருமின்றி மயங்கக் கூறினான் என்னும் குற்றத்தின் பாற்படும்'' என்பதை அறியாதவர் அல்லரே பனம்பாரர். அதனால் நீர்நிறைந்த கடல் சூழ்ந்த நிலவுலகில் ஐந்திரம் எனத்தக்க தொல்காப்பியத்தை முழுதுற நிரம்பத் தோற்றுவித்தலால் தன் பெயரைத் தொல்காப்பியன் எனத் தோன்றச் செய்தவன் என்று பாராட்டுகிறார்.

இனி 'ஐந்திரம்' என்பது சமண சமயத்து ஐந் தொழுக்கக் கோட்பாடு. அவற்றை நிறைந்தவர் தொல்காப்பியர் என்றும் கூறுவர். ஒழுக்கக் கோட்பாடு 'படிமையோன்' என்பதனுள் அடங்குதலால் மீட்டுக் கூற வேண்டுவதில்லையாம். அன்றியும் தொல்காப்பியர் சமண சமயச் சார்பினர் அல்லர் என்பது மெய்ம்மையால், அவ்வாய்வுக்கே இடமில்லையாம்.

இனி 'ஐந்திறம்' என்றாக்கி ஐங்கூறுபட்ட இலக்கணம் நிறைந்தவர் என்பர். அவர் தமிழ் இலக்கணக் கூறுபாடு அறியார். தமிழ் இலக்கணம் முக்கூறுபட்டது என்பதைத் தொல்காப்பியமே தெளிவிக்கும். பின்னே வளர்ந்த ஐந்திலக்கணக் கொள்கையை முன்னே வாழ்ந்த ஆசிரியர் தலையில் சுமத்துவது அடாது.

'ஐந்திரம்' எனச் சொன்னடை கொண்டு பொரு ளிலாப் புதுநூல் புனைவு ஒன்று இந்நாளில் புகுந்து மயக்க முனைந்து மயங்கிப்போன நிலையைக் கண்ணுறு வார் ஏட்டுக் காலத்தில் எழுதியவர் ஏட்டைக் கெடுத் ததும் படித்தவர் பாட்டைக் கெடுத்ததும் ஆகிய செய்தி களைத் தெளிய அறிவார். எழுதி ஏட்டைக் காத்த— படித்துப் பாட்டைக் காத்த ஏந்தல்களுக்கு எவ்வளவு தலை வணங்குகிறோமோ, அவ்வளவு தலை நாணிப் பிணங்கவேண்டிய செயன்மையரை என் சொல்வது?

தொல்காப்பிய நூற்பாக்கள் இடமாறிக் கிடத்தல் விளங்குகின்றது. தெய்வச் சிலையார் அத்தகையதொரு நூற்பாவைச் சுட்டுதலை அவர் பகுதியில் கண்டு கொள்க.

மரபியலில் ''தவழ்பவை தாமும் அவற்றோ ரன்ன'' என்னும் நூற்பாவை அடுத்துப் ''பறழ் எனப் படினும் உறழாண் டில்லை'' என்னும் நூற்பா அமைந்திருத்தல் வேண்டும். அவ்வாறு அமைந்தால் எடுத்துக்காட்டு இல்லை என்பனவற்றுக்கு இலக்கியம் கிடைத்தல் இயல் பாக அமைகின்றது. ''இக்காலத்து இறந்தன'' என்னும் இடர்ப்பாடும் நீங்குகின்றது. இடப் பெயர்ச்சிக்கு இஃதொரு சான்று.

இடையியலில் ''கொல்லே ஐயம்'' என்பதை அடுத்த நூற்பா ''எல்லே இலக்கம்'' என்பது. இவ்வாறே இருசீர் நடை நூற்பா நூற்கும் இடத்தெல்லாம் அடுத்தும் இருசீர் நடை நூற்பா நூற்றுச் செல்லலும் பெரிதும் எதுகை மோனைத் தொடர்பு இயைத்தலும் தொல்காப்பியர் வழக்காதலைக் கண்டு கொள்க. இத்தகு இருசீர் நடை நூற்பாக்கள் இரண்டனை இயைத்து ஒரு நூற்பா வாக்கலும் தொல்காப்பிய மரபே.

**'' உருவுட் காகும்; புரைஉயர் வாகும்''**

**'' மல்லல் வளனே; ஏபெற் றாகும்''**

**'' உகப்பே உயர்தல் உவப்பே உவகை''**

என்பவற்றைக் காண்க. இவ்விருவகை மரபும் இன்றி

**'' நன்று பெரிதாகும்''**

என்னும் நூற்பா ஒன்றும் தனித்து நிற்றல் விடுபாட்டுச் சான்றாகும்.

அகத்திணையியல் இரண்டாம் நூற்பா, 'அவற்றுள்' என்று சுட்டுதற்குத் தக்க சுட்டு முதற்கண் இன்மை காட்டி ஆங்கு விடுபாடுண்மை குறிப்பர். (தொல். அகத். உரைவளம். மு. அருணாசலம் பிள்ளை.)

இனி இடைச் செருகல் உண்டென்பதற்குத் தக்க சான்றுகளும் உள. அவற்றுள் மிகவாகக் கிடப்பது மரபியலிலேயேயாம்.

தொல்காப்பியரின் மரபியல் கட்டொழுங்கு மரபிய லிலேயே அமைந்து கிடத்தல் திட்டமிட்ட திணிப்பு என்பதை உறுதிப் படுத்துகின்றது.

'மாற்றருஞ் சிறப்பின் மரபியல்' என்று மரபிலக்கணம் கூறி மரபியலைத் தொடுக்கும் அவர் இளமைப் பெயர், ஆண்பாற் பெயர், பெண்பாற் பெயர் ஆகியவற்றைக் குறிக்கிறார். அக்குறிப்பொழுங்குப்படியே இளமைப் பெயர்கள் இவை இவை. இவ்விவற்றுக்குரிய என்பதை விளக்கி முடித்து,

**'' சொல்லிய மரபின் இளமை தானே**
**சொல்லுங் காலை அவையல திலவே''**

என நிறைவிக்கிறார். அடுத்து ஓரறிவு உயிரி முதல் ஆறறிவுடைய மாந்தர் ஈறாக ஆண்பால் பெண்பால் பெயர்களை விளக்க வரும் அவர் ஓரறிவு தொடங்கி வளர் நிலையில் கூறி எடுத்துக்காட்டும் சொல்லி ஆண்பாற் பெயர்களையும் பெண்பாற் பெயர்களையும் இவை இவை இவற்றுக்குரிய என்பதை விளக்கி நிறைவிக்கிறார்.

ஆண்பால் தொகுதி நிறைவுக்கும் பெண்பால் தொகுதித் தொடக்கத்திற்கும் இடையே

**'' ஆண்பா லெல்லாம் ஆணெனற் குரிய**
**பெண்பா லெல்லாம் பெண்ணெனற் குரிய**
**காண்ப அவையவை அப்பா லான''**

என்கிறார். பின்னர்ப் பெண்பாற் பெயர்களைத் தொடுத்து முடித்து,

**'' பெண்ணும் ஆணும் பிள்ளையும் அவையே''**

என்று இயல் தொடக்கத்தில் கூறிய பொருளெல்லாம் நிறைந்த நிறைவைச் சுட்டுகிறார். ஆனால் இயல் நிறை வுறாமல் தொடர்நிலையைக் காண்கிறோம். எப்படி?

**'' நூலே கரகம் முக்கோல் மணையே**
**ஆயுங் காலை அந்தணர்க் குரிய''**

என்பது முதலாக வருணப் பாகுபாடுகளும் அவ்வவர்க் குரியவையும் 15 நூற்பாக்களில் தொடர்கின்றன. கூறப் போவது இவையென்று பகுத்த பகுப்பில் இல்லாத பொருள், கூற வேண்டுவ கூறி முடித்தபின் தொடரும் பொருள் 'மரபியல்' செய்தியொடு தொடர்பிலாப் பொருள் என்பன திகைக்க வைக்கின்றன.

நூலும் கரகமும் முக்கோலும் மணையும் படையும் கொடியும் குடையும் பிறவும் மாற்றருஞ்சிறப்பின் மரபினவோ? எனின் இல்லை என்பதே மறுமொழியாம்.

**'' வைசிகன் பெறுமே வாணிக வாழ்க்கை''**

என்னும் நூற்பா நடை தொல்காப்பியர் வழிப்பட்டதென அவர் நூற்பாவியலில் தோய்ந்தார் கூறார்.

**'' வாணிகன் பெறுமே வாணிக வாழ்க்கை''**

என நூற்கத் தெரியாரோ அவர்? இளமை, ஆண்மை, பெண்மை என்பன மாறா இயலவை. பிறவியொடு வழி வழி வருபவை. நூல், கரகம் முதலியன பிறவியொடு பட்டவை அல்ல. வேண்டுமாயின் கொள்ளவும் வேண் டாக்கால் தள்ளவும் உரியவை. முன்னை மரபுகள் தற் கிழமைப் பொருள; பிரிக்க முடியாதவை. பின்னைக் கூறப்பட்டவை பிறிதின் கிழமைப் பொருளவை. கையாம் தற்கிழமைப் பொருளும், எழுதுகோலாம் பிறிதின் கிழமைப் பொருளும் 'கிழமை' என்னும் வகையால் ஒருமையுடையவை ஆயினும் ஒருமையுடையவை என உணர்வுடையோர் கொள்ளார்.

இவ்வொட்டு நூற்பாக்கள் வெளிப்படாதிருக்க ஒட்டி யிருந்த 'புறக்காழ்' 'அகக்காழ்' 'இலை முறி' 'காய்பழம்' இன்னவை பற்றிய ஐந்து நூற்பாக்களைப் பின்னே பிரித் துத் தள்ளி ஒட்டாஒட்டாய் ஒட்டி வைத்தனர். இதனை மேலோட்டமாகக் காண்பாரும் அறிவர்.

**'' நிலம்தீ நீர்வளி விசும் போடைந்தும்''**

என்னும் நூற்பாவே மரபியல் முடிநிலை நூற்பாக இருத்தல் வேண்டும்.

பின்னுள்ள 'நூலின் மரபு' பொதுப் பாயிரம் எனத் தக்கது. அது சிறப்புப் பாயிரத்தைத் தொடுத்தோ, நூன் முடிவில் தனிப்பட்டோ இருந்திருக்க வேண்டும். அதுவும் நூலாசிரியர் காலத்திற்குப் பிற்பட்டுச் சேர்த்ததாக இருத்தல் வேண்டும். அதிலும் சிதைவுகளும் செறிப்பு களும் பல உள. ''அவற்றுள், சூத்திரந்தானே'' என வரும் செய்யுளியல் நூற்பாவையும் (1425) ''சூத்திரத் தியல்பென யாத்தனர் புலவர்'' என வரும் மரபியல் நூற்பாவையும் (1600) ஒப்பிட்டுக் காண்பார் ஒரு நூலில் ஒருவர் யாத்ததெனக் கொள்ளார். மரபியல் ஆய்வு தனியாய்வு எனக் கூறி அமைதல் சாலும். இவ்வியல் நூற்பாக்கள் அனைத்திற்கும் இளம்பூரணர் உரையும் பேராசிரியர் உரையும் கிடைத்திருத்தலால் அவர்கள் காலத்திற்கு முன்னரே இம்மாற்றங்கள் நிகழ்ந்திருக்க வேண்டும் என்பது தெளிவான செய்தி.

# 5. தொல்காப்பிய உரைகள்

மூலநூல் ஆசிரியர் போலவே போற்றத்தக்க பெருமக்கள் நால் வகையாக உளர். அவர், மூலநூலை வழி வழியே படியெடுத்துப் பாதுகாத்துதவிய பெருமக்கள்; உரையெழுதுதல் வழியாக நூலைக் காத்ததுடன் அதன் செப்பமும் போற்றிக் காத்த உரையாசிரியப் பெருமக்கள்; ஏட்டுச்சுவடிகளை இயற்கை அழிவு செயற்கை அழிவு ஆகிய ஈரழிவுகளுக்கும் ஆட்படாமல் பாதுகாத்த பெருமக்கள்; ஏட்டுச்சுவடிகளை ஆய்ந்து அச்சு நூலாக்கி அழியா வாழ்வு செய்த பதிப்பாசிரியப் பெருமக்கள் என்பார்.

இந்நால்வருள் இரண்டாம் வகையினர் தொண்டு மதிப்புக்குரியது. அம்மதிப்புக்குரிமையை நமக்குக் கிடைத்துள்ள நூல்களின் பரந்த ஆய்வு கொண்டே முடிவு செய்ய வேண்டும். அவ்வாறு ஆய்தலால் கிடைக்கும் முடிவுகள் வருமாறு:

(1) "நமக்குக் கிடைத்துள்ள பழஞ்சுவடிகளுள் மூலச் சுவடியாக இருந்த நூற்சுவடிகளே மிகுதியாக அழிந்துள்ளன.

(2) உரையுடன் கூடிய நூற்சுவடிகளே மிகுதியாக நமக்குக் கிடைத்துள்ளன.

(3) உரையாலேயே மூல பாடத்தைக் கண்டு நூலாக அமைத்துக் கொள்ளவும் நேர்ந்துளது.

(4) உரைகளாலேயே நாம் இழந்து போன தமிழ்ச் செல்வங்களின் பெயர்களையோ பகுதிகளையோ குறிப்புகளையோ அறிந்து கொள்ள முடிகிறது.

இவற்றால், உரைகண்ட பெருமக்கள் மூலநூல் அழிந்து படாமல் பெரிதும் காத்துள்ளார்கள் என்பது விளங்கும். மூலநூலில் இருந்த இருண்ட பகுதிகளை யெல்லாம் ஒளிவிளக்கம் செய்து வெளிப்படுத்தியதுடன் நூலுக்கு அழியா வாழ்வு தந்தவர்களும் உரையாசிரியப் பெருமக்கள் என்பது தகும்'' (சுவடிக்கலை பக்; 6, 7.)

தமிழ் வரலாற்றில் மூல வரலாறு உரை வரலாறு என இரு கூறுகள் உள. பின்னது முன்னதற்கு நிகரானது; தாழ்ந்ததன்று. மூலாசிரியர்கள் ஒப்ப உரையாசிரியர் களையும் போற்றுவது தமிழ் மரபு. மகத்துவம் வாய்ந்த அகத்தியன், ஒல்காப் புலமைத் தொல்காப்பியன், தெய்வப் புலலன் திருவள்ளுவன், பல்கலைக் குரிசில் பவணந்தி என்றாற்போல உளங்கூர் கேள்வி இளம் பூரணர், ஆனாப் பெருமைச் சேனாவரையர், உச்சிமேற் புலவர் நச்சினார்க்கினியர் எனவரும் சிறப்புப் பெயர்க் கிளவிகளே சான்று. இடைக்காலம் என்பது உரைக் காலம் அன்று; தொன்னூல்களை உரையென்னும் கயிற் றால் பிணித்த உயிர்க்காலம்'' என்கிறது தொல்காப்பியக் கடல் (பக். 21).

தொல்காப்பிய நிலைபேற்றுக்கு உரை முறைகள் பெருங் காரணமாக இருத்தலையும் சுட்டுகிறது தொல் காப்பியக்கடல். (பக். 23) அவை:

1. ''நூற்பாவிற்கு ஏற்ற உரையெழுதி அமையும் **இயல்புரை.**
2. உரையாசிரியர்கள் நூலாசிரியனுக்குப் பின் தங்காலம் வரை வந்த வழக்காறுகளை ஏற்ற இடத்தில் தந்து முடிக்கும் **இயைபுரை.**

3. உரையாசிரியர்கள் கால வயப்பட்டுப் புதிய கொள்கைகளை ஏற்றிக் கூறும் **காலவுரை**" என்பன.

**தொல்காப்பிய உரைகள் :**

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் முன்னவரும், முழு நூலுக்கும் உரைகண்டவரும் இளம்பூரணர் என்னும் உரையாசிரியரே. ஆசிரியர் நச்சினார்க்கினியருரை எழுத்து சொல் முழுமைக்கும் பொருளதிகாரத்தில் உவமையியல் மெய்ப்பாட்டியல் மரபியல் ஒழிந்த ஆறு இயல்களுக்கும் கிடைத்துள்ளது. பேராசிரியர் உரை தொல்காப்பியப் பொருளதிகாரப் பின்னான்கு இயல் களுக்கே கிடைத்துள்ளது. சேனாவரையர், தெய்வச் சிலையார் என்பார் உரை சொல்லதிகாரம் ஒன்றற்கே கிடைத்துள்ளது. கல்லாடர் உரையும் பழையவுரை என்னும் மற்றோர் உரையும் சொல்லதிகாரம் முழு மைக்கும் தாமும் வாய்க்காதவை. அவற்றைப் பற்றிய மற்றைச் செய்திகளை அவ்வவ்வுரைப் பகுதிகளில் காண்க.

## அ. இளம்பூரணம்

**உரையாசிரியர் இளம்பூரணர் :**

உரையாசிரியர் என்ற அளவானே, 'இளம்பூரணர்' என அறியப்பெறும் பெருமையுடையவர் இவர். தொல் காப்பியத்திற்கு **முதற்கண்** உரை கண்டவராதலுடன், **முதன்மையான** உரை கண்டவரும் இவரே. மற்றொரு சிறப்பு இவருரையே நூன் முழுமைக்கும் கிடைத் துள்ளமை. உரையாசிரியர் புலமை நலத்தையும், பேரருள் பேருள்ளத்தையும், உரையெழுதுதற்கே தம் தவவாழ்வைச் செலவிட்ட தமிழ்ப்பற்றையும் எத்துணை விரித்துச் சொல்லினும் குறைவுடையதாகவே அமையும். அத்தகும் உயர்வற உயர்ந்த உயர்வர் இவர்.

''சென்னபட்டணத்தில் இற்றைக்கு ஐம்பதறுபது வருஷத்தின் முன்னிருந்த **வரதப்ப முதலியாரின்** பின், எழுத்துஞ் சொல்லுமேயன்றித் தொல்காப்பியப் பொரு ளதிகாரத்தை உரை உதாரணங்களோடு பாடங் கேட்ட வர்கள் மிக அருமை. முற்றாய் இல்லை என்றே சொல்ல லாம். வரதப்ப முதலியார் காலத்திலும் தொல்காப்பியம் கற்றவர்கள் அருமை என்பது, அவர் தந்தையார் **வேங்கடாசலம் முதலியார்** அதனைப் பாடங்கேட்கும் விருப்பமுடையராயின பொழுது பறையூரில் **திருவாரூர் வடுகநாத தேசிகர்** ஒருவரே தொல்காப்பியம் அறிந்தவர் இருக்கிறார் என்று கேள்வியுற்றுத் தமது ஊரைவிட்டு அதிக திரவியச் செலவோடு அவ்விடம் போய் இரண்டு வருஷமிருந்து பாடங்கேட்டு வந்தமையாலும் வரதப்ப முதலியார் ஒருவரே பின்பு அதனைத் தந்தைபாற் கேட்ட றிந்தவர் என்பதனாலும் அது காரணமாக அவருக்குத் **தொல்காப்பியம் வரதப்பமுதலியார்** என்று பெயர் வந்தமையாலும் பின்பு அவர்காலத்திருந்த வித்துவான்கள் தமக்கு யாதாயினும் இலக்கண சமுச்சயம் நிகழ்ந்துழி அவரையே வினவி நிவாரணஞ் செய்தமையாலும் நிச்சயிக் கலாம்.''

—என்பது தொல். பொருள். நச்சினார்க்கினியப் பதிப்பில் (1885) **சி. வை. தாமோதரம்பிள்ளை** எழுதியுள்ள பதிப்புரை. பார்த்திப ஆண்டு ஆவணித் திங்கள் வந்த இப்பதிப்பில் தொல்காப்பியப் பின்னான்கியல் உரைகளே உள. இவை **நச்சினார்க்கினியம் அன்று, பேராசிரியம்** எனச் செந்தமிழ்த் தொகுதி 1. பகுதி 1; தொகுதி 2 பகுதி 11 ஆகியவற்றிலும், தொல். செய்யுளியல் நச்சினார்க்கினியர் உரையுடன் வெளிவந்த தமிழ்ச் சங்கப் பதிப்பிலும் பெரும்புலவர் இரா. இராகவ ஐயங்கார் எழுதினார்.

தொல்காப்பியம் வரதப்பர் வரலாறும், தாமோதர னாரின் நச்சினார்க்கினியர் உரைப்பதிப்புக் குறிப்பும் மேல் ஆய்வும் நமக்கு என்ன சொல்கின்றன? இளம்பூரணரும்

பிறரும் உரை வரைந்து நூலைப் பொருளுடன் காத்த பின்னரும் அஃதறிஞரும் அறியா நிலையில் இருந்தது என்றால், இளம்பூரணர் உரை வரைதலை மேற்கொள்ளா திருந்திருந்தால் தொல்காப்பியத்தின் நிலைமை என்ன ஆகியிருக்கும், என்பதே! தொல். பொருள். இளம் பூரணத்தை 1920 இல் வெளியிட்ட சா. நமச்சிவாய முதலியார் 1924இல் தொல். பொருள். மூலத்தை முதற்கண் வெளியிட்டுள்ளார். **உரையொடு கூடிய மூலத்தில் இருந்து தனியே மூலத்தைப் பெயர்த்துப் பதிப்பித்த பதிப்பே மூலப்புதிப்பு** என்பதை எண்ணிப் பார்த்தால், நாம் இளம்பூரணர்க்குப் பட்டுள்ள நன்றிக் கடனுக்கு அளவுண்டோ? இவர்தம் உரைச்சுவடி இல்லாக்கால், மற்றையர் உரைவரையும் வாய்ப்பும் ஏற்பட்டிராதே! தொல்காப்பியம் நமக்குக் கிட்டியமை இளம்பூரணர் உரைக்கொண்ட நலத்தாலேயே என்பதை எண்ணும் போதே இவர் தொண்டு மலை விளக்கென இலங்குவதாம்.

**இளம்பூரணர்:**

இளம்பூரணர் என்னும் பெயரால், இவர் இளமை யிலேயே முழுதறிவு பெற்றுச் சிறந்தமை கண்ட சான்றோர் இச்சிறப்புப் பெயரால் இவரை வழங்கினர் என்பது விளங்கும். இஃதவர் இயற்பெயராக இருத்தற்கு இயலாது. கண்ணகியார் ‘சிறுமுதுக்குறைவி’ எனப் பட்டதும், நம்மாழ்வார் ‘சிறுப்பெரியார்’ எனப்பட்டதும் அறிவார் இதனைத் தெளிவார்.

‘இளங்கோ வேந்தர்’ ‘இளங்கோவடிகளா’ராகப் பெயர் பெற்றமைபோல் இளம்பூரணரும் தம் துறவினால் ‘இளம்பூரணவடிகளார்’ எனப்பட்டார் என்பது விளங்கு கின்றது.

இவர் துறவோர் என்பதை நமக்கு வெளிப்படக் கூறுபவர் நன்னூல் முதலுரையாசிரியர் மயிலைநாதர்.

அவர் எச்சங்களின் வகையை எடுத்துக் காட்டுங்கால் (359) இளம்பூரணர் உரையை உரைத்து ''இஃது ஒல்காப் புலமைத் தொல்காப்பியத்துள் உளங்கூர் கேள்வி இளம்பூரணரென்னும் ஏதமில் மாதவர் ஓதியவுரையென் றுணர்க'' என்கிறார்.

இதில் இளம்பூரணரை 'ஏதமில் மாதவர்' என்ற செய்தி இவர் துறவோர் என்பதைக் காட்டும் புறச் சான்றாம். அகச்சான்று உண்டோ எனின் உண்டு என்பது மறுமொழியாம்.

> '' கைக்கிளை முதலாப் பெருந்திணை இறுவாய்
> முற்படக் கிளந்த எழுதிணை என்ப''

என்னும் நூற்பா அகத்திணையின் முதற்கண் உள்ளது. இதில் அகத்திணை ஏழும் முறை பெற நிற்கும் வகையைக் கூறுகிறார் ஆசிரியர். இதற்கு உரைவிளக்கம் வரையும் இளம்பூரணர், ''இந்நூலகத்து ஒருவனும் ஒருத்தியும் நுகரும் காமத்திற்குக் குலனும் குணனும் செல்வமும் ஒழுக்கமும் இளமையும் அன்பும் ஒருங்கு உளவழி இன்பம் உளதாம் எனவும், கைக்கிளை ஒருதலை வேட்கை எனவும், பெருந்திணை ஒவ்வாக் கூட்டமாய் இன்பம் பயத்தல் அரிது எனவும் கூறுதலான் **இந்நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு அறிந்து கொள்க**'' என்கிறார்.

'காமம் நீத்தபால்', 'கட்டில் நீத்தபால்', 'தாபத நிலை' 'தபுதாரநிலை', 'சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயன்' எனவரும் இடங்களில் இத்தகு கருத்து உரைக்கப் பெறின் பருந்தும் நிழலுமென நூலாசிரியர் சொல்லொடு பொருள் பொருந்திச் செல்வதாகக் கொள்ள வாய்க்கும். இவ்விடத்தில் அக்குறிப்பு இல்லையாகவும் 'இந் நூலுடையார் காமத்துப் பயனின்மை உய்த்துணர வைத்தவாறு' என்பது இளம்பூரணர் உட்கோளேயாம் என்பது வெளிப்படும்.

இவரையன்றி இப்பகுதிக்கு உரைகண்ட பழைய உரையாசிரியர் நச்சினார்க்கினியரே. அவர் தாமும் இவர்க்குப் பின் உரை கண்டவர். இவரை ஏற்றும் மறுத்தும் உரைப்பவர். அவர் பொருளதிகாரத்தில், ''இல்லறம் உணர்த்திப் பின் துறவறமும் சிறுபான்மை கூறுப'' என்றும், ''அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் என்னும் சூத்திரத்தான் இல்லறமும் துறவறமும் கூறினார். இந்நிலையானும் பிறவாற்றானும் வீட்டிற்குக் காரணங் கூறினார்'' என்றாரே யன்றிக் காமத்துப் பயனின்மை உய்த்துணரவைத்தாரெனக் கூறினாரல்லர். அவ்வாறு ஆசிரியர் கூறக் கருதியிருந்தால் உய்த்துணர்வில்லாமலே வெளிப்பட விளங்க உரைப்பார் என்பது இளம்பூரணரோ அறியார்? இவர் கொண்டிருந்த துறவுநிலை உந்துதலால் வந்த மொழி ஈதெனக் கொள்ளல் தகும். இனி மாறு கொளக் கூறல் என்பதற்குத் ''தவம்நன்று என்றவன் தான்தவம் தீதென்று கூறல்'', என்பதும் (பொ. 654) குறிப்பாகலாம். இவர் துறவர் என்பது 'இளம்பூரண அடிகள்' என அடியார்க்கு நல்லார் குறிப்பாலும் (சிலப். 11: 18-20) புலப்படும்.

மயிலை நாதர் வரைந்த தொடரிலே இளம்பூரணர்க் குரிய தனிப்பெருஞ்சிறப் பொன்றைச் சுட்டுகிறார். அஃது, 'உளங்கூர் கேள்வி' என்பது. ''செவி வாயாக நெஞ்சு களனாகப்'' பாடம் கேட்பதும், கேட்டவற்றை உளத்தமைத்துக் கொள்வதும் பண்டைப் பயின்முறை, அம்முறையில் பல்கால் பலரிடைச் சென்று கேட்டுக் கருவூலமெனத் தேக்கி வைத்துக் கொண்ட முழுதறிவாளர் இளம்பூரணர் என்பதை நாம் அறிய வைக்கிறார் மயிலைநாதர். இதற்கு அகச்சான்று என்னை எனின், பலப்பலவாம், முதல் உரையாசிரியராகிய இவர், பலரிடைக் கேட்ட உரைகளைக் கொண்டே, 'ஒரு சார் ஆசிரியர் உரைப்பர்' என்றும், 'உரையன்றென்பார்' என்றும், 'ஒருவன் சொல்லுவது' என்றும் கூறிச் செல்கிறார் என்பது கொள்ளக் கிடக்கின்றது என்க.

இளம்பூரணர் தொல்காப்பியர்மேல் கொண்டிருந்த பேரன்பும், பெரு மதிப்பும் அவரைத் தொல்காப்பியரெனவே மதிக்கத் தூண்டுகின்றதாம். அகத்திணை ஏழாதல் போலப் புறத்திணையும் ஏழே என்பதை வலியுறுத்திக் கூறும் இளம்பூரணர், புறப்பொருள் பன்னிரண்டு என்பாரை மறுத்து அவ்வாறு கொள்வது, "முனைவன் நூலிற்கும் கலி முதலாகிய சான்றோர் செய்யுட்கும் உயர்ந்தோர் வழக்கிற்கும் பொருந்தாது என்க" என்கிறார். ஆசிரியர் தொல்காப்பியனார், "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் கண்டது முதனூல் ஆகும்" என்றதை உளங்கூர்ந்து, அதனை அவர்க்கே ஆக்கி வழிபட்ட சான்றாண்மை இளம்பூரணர் வழியே புலப்படுதல் கண்டு கொள்க.

> **" அளபிறந் துயிர்த்தலும் ஒற்றிசை நீடலும்**
> **உளவென மொழிப இசையொடு சிவணிய**
> **நரம்பின் மறைய என்மனார் புலவர்"**

என்பதன் விளக்கத்தில் (எழுத். 33), "இசை நூலாசிரியரும் முதனூலாசிரியர் தாமே யெனினும், 'மொழிப' என வேறொருவர் போலக் கூறியது, அதுவும் வேறொரு நூலாகச் செய்யப்படும் நிலைமை நோக்கிப் போலும்" என்று வரைகின்றார். தொல்காப்பியரை இளம்பூரணர் முதனூலாசிரியராகக் கொண்டார் என்பது இதனால் விளங்கும்.

முன்னிலையாக்கல் எனவரும் பொருளதிகார நூற்பா விளக்கத்தில் (98), "உலகத்துள்ளார் இலக்கணமெல்லாம் உரைக்கின்றாராகலின் இவ்வாசிரியர் உரைக்கின்ற வாற்றான் நிகழ்தல் பெரும்பான்மை" எனத் தொடர் கின்றார். தொல்காப்பியர் பற்றி இளம்பூரணர் குறித்த மதிப்பீடு எத்தகு பெருமைக்குரியது!

பொருளதிகாரத் தொடக்கத்திலே, "பிற நூலாசிரியர் விரித்துக் கூறினாற்போல அறமும் பொருளும் விரித்துக் கூறாதது என்னையோ எனின், உலகத்தில் நூல் செய்வார்

செய்கின்றது அறிவிலாதாரை அறிவு கொளுத்த வேண்டி யன்றே; யாதானும் ஒரு நூல் விரித்தோதிய பொருளைத் தாமும் விரித்து ஓதுவாராயின் ஓதுகின்றதனாற் பயன் இன்றாமாதலால் முதனூலாசிரியர் விரித்துக் கூறின பொருளைத் தொகுத்துக் கூறலும் தொகுத்துக் கூறின பொருளை விரித்துக் கூறலும் நூல் செய்வார் செய்யும் மரபு என்றுணர்க. அஃதேல் இந்நூலகத்து விரித்துக் கூறிய பொருள் யாதெனின் காமப்பகுதியும் வீரப்பகுதியும் என்க. இன்பம் காரணமாகப் பொருள் தேடும் ஆக லானும் பொருளானே அறஞ் செய்யும் ஆகலானும் இன்பமும் பொருளும் ஏற்றம் என ஓதினார் என உணர்க'', என்று வரையும் எழுத்தால் தொல்காப்பிய நூலோட்ட நுணுக்கத்தை நுவல்கிறார்.

உழிஞைத் துறையை, ''அதுவே தானும் இரு நால் வகைத்தே'' என்னும் ஆசிரியர் (பொ. 67), அடுத்த நூற் பாவில் அத்துறைகளைக் கூறி ''நாலிரு வகைத்தே'' (பொ. 68) என்றும் கூறுகிறார். இதனைக் கூறியது கூறல் என எவரும் எண்ணி விடுவரோ என்னும் எண்ணம், ''கேளிழுக்கம் கேளாக் கெழுதகைமை'' இளம் பூரணர்க்குத் தோன்றிற்றுப் போலும். அதனால், ''பதினெட்டு இருபத்தொன்பது என்பார் மதம் விலக்கி யமை தோன்றப் பெயர்த்துந் தொகை கூறினார். இது கூறியது கூறலன்று; தொகை'' என்றார்.

'ஆசிரியன் ஓதினான்' என்பது போலக் கூறுதலே பண்டை உரையாசிரியர் மரபு (எழுத். 469) ''குறிப்பு என்றார்'', ''கூறினார்'' (பொருள். 104) என இளம் பூரணத்துள் வருதல் பதிப்பாசிரியர் கருத்துப்போலும்!

மிகைபடக் கூறல் என்னும் நூற்குற்றம் விளக்கும் இளம்பூரணர், ''மிகைபடக் கூறலாவது அதிகாரப் பொரு ளன்றிப் பிறபொருளும் கூறுதல். அஃதாவது **தமிழிலக் கணஞ் சொல்லுவான் எடுத்துக்கொண்டான் வடமொழி**

இலக்கணமும் கூறல்'' என்கிறார். இக்குற்றம் செய்யாத சீருரையாளர் செந்தமிழ் இளம்பூரணர். இக்குற்றம் செய்தார், 'இவர் வடமொழி யறியார்' என்பர். எழுத்து. 42, 45, 75, சொல். 443, பொருள். 30, 151, 656 ஆகிய நூற்பாக்களின் உரைகளைக் காண்போர் இவர் வட மொழி அறியார் எனக் கருதார்.

இளம்பூரணர் சமணர் என்றும் சைவர் என்றும் கூறு வாருளர்.

படிமையோன் என்பதற்குத் 'தவவொழுக்கத்தை யுடையான்' என உரைவரைந்தமையும் (பாயிரம்) படிமை என்பது சமண சமயத் துறவிகளின் தவவொழுக்கத்தைக் குறிக்கும் சொல் என்பதையும் குறித்துச் சமணர் என்பர். படிமை என்பது கட்டமை ஒழுக்கத்தைச் சுட்டுவது என்ப தைப் பதிற்றுப்பத்துள் கண்டு கொள்க (74). படிவம் என்பதும் அப்பாடல் ஆட்சியில் உண்டு என்பதும் அறிக.

''னகரம் வீடுபேற்றிற்குரிய ஆண்பாலை உணர்த்துதற் சிறப்பான் பின்வைக்கப்பட்டது'' (எழுத். 1) என்று இவர் எழுதுவது கொண்டு சமணர் என்பர். முற்பட வைக்கப்பட்ட அகரத்தின் சிறப்புக் கூறியவர் பிற்பட வைக்கப்பட்ட னகரத்தின் சிறப்புக் கூறுவாராய் இது கூறினர். முற்படக் கூறலும் சிறப்பே; பிற்படக் கூறலும் சிறப்பே என்பது நூன்முறை. அம்முறைக்கேற்ப னகரச் சிறப்பாகக் கூற இதனைக் கூறினாரேயன்றி 'மகளிர் வீடு பேறு எய்தார்' என்னும் குறிப்பு அதில் இல்லை எனக் கொள்க.[1]

இனிச் சமணர் அல்லர் என்பதற்கு, ''நிலம் தீ நீர் வளி விசும்போடு ஐந்தும், கலந்த மயக்கம் உலகம்'' எனவரும் தொல்காப்பிய (பொ. 635) நூற்பாவில் விசும்பும் ஒரு பூத மெனக் கொண்டதைக் காட்டுவர். நூற்பாவிற் கிடந்

---

1. உரையாசிரியர்கள் 88-89; இளம்பூரணர் எழுத் துரை (விளக்கமும் குறிப்பும்) 4-6.

தாங்கு உரை விரிக்கும் மரபுடைய இளம்பூரணரை அதனைக் காட்டி ஒரு சார்பிற் கூட்டல் சாலாது.

''குமர கோட்டம் குமரக்கோட்டம், பிரமகோட்டம் பிரமக்கோட்டம்'' என்பவர் ''அருக கோட்டம் அருகக் கோட்டம்'' எனக் காட்டாமையால் சமணச் சார்பினர் அல்லர் என்பர். காட்டாமையால் அச்சார்பினர் அல்லர் என்பது ஏற்காமை போல, காட்டியமையால் அச் சார் பினர் என்பதும் ஆகாதாம். எடுத்துக்கொண்ட பொரு ளுக்கு எடுத்துக்காட்டுப் பொருந்துவதா என்பதே உரை நோக்கு.

குமரகோட்டம் காட்டியதற்கு முற்றொடரிலேயே 'ஆசீவகப்பள்ளி' என்பதைக் காட்டுகிறாரே; அவர் அருகக் கோட்டம் காட்டாமையால் சமணர் அல்லர் என்று கொண்டால், ஆசீவகப் பள்ளியை முற்படக் காட்டல் கொண்டு சமணர் எனக்கொள்ள வேண்டுமன்றோ! ஆகலின் பொருளில என்க.

இனி 'இளம்பூரணர்' என்பது முருகன் பெயர்களுள் ஒன்றாகலின் சைவர் என்பர். 'இளையாய்' என்பதிலும் 'இளம்' என்பதிலும் கண்ட சொல்லொப்புமையன்றிப் பொருளொப்புமை காட்ட முடியாக் குறிப்பு ஈதெனல் தெளிவு.

**'' ஆறு சூடி நீறு பூசி**
**ஏறும் ஏறும் இறைவனைக்**
**கூறு நெஞ்சே குறையிலை நினக்கே''**

என்பதை 'இவர் திருவுள்ளத் தூறிய பெரும் பொருட் சிறு பாடல்' எனக் கூறிச் சைவராக்கினால், அடுத்தாற் போலவே, (தொ. பொ. 359)

**'' போது சாந்தம் பொற்ப வேந்தி**
**ஆதி நாதர்ச் சேர்வோர்**
**சோதி வானந் துன்னு வோரே''**

என்பது கொண்டு சமணரெனக் கொண்டாடல் தவிர்க்க முடியாததாகிவிடும்.

''தன்தோள் நான்கின்'' எனவரும் பாடலை இளம் பூரணர் மேற்கோள் காட்டுகிறார் (தொ. பொ. 50). இதனைச் சேனாவரையர் தம் நூலில் முதற்காப்புப் பாடலாக அமைத்துக் கொள்கிறார். இதனால் இவர் சிவச் சார்பினர் எனின், சேனாவரையர் போலவே தாமும் காப்புச் செய்யுளாக வைத்திருப்பார். சேனாவரையர் சிவநெறியர் என்பதற்கு இது சான்றாமேயன்றி இளம் பூரணரைச் சாராதாம் என்க.

''இசை திரிந்திசைப்பினும்'' என்னும் பொருளியல் முதல் நூற்பா உரையில் மேற்கோளாகக் ''கார்விரி கொன்றை'' என்னும் அகநானூற்றுக் கடவுள் வாழ்த்துப் பாடலைக் காட்டும் இளம்பூரணர், 'சிவானுபூதியிற் பேருலகம் தங்கிற்று' என்று உரையெழுதுவது கொண்டு இவரைச் சிவநெறியர் என உறுதிப்படுத்துவர். அஃதாயின், அப்பாடல் தொடரொடு தொடர்பிலாத அச்செறிப்பும், 'தாவில்தாள் நிழல்' என்பதன் பொருள் விடுப்பும் கொண்டு ஐயுறவு கொள்ளற்கு இடமுண்டு! பாடல் தொடரையே இசைத்துத் தொடர்புறுத்தும் அவ்வுரையில் அஃதொன்று மட்டும் ஒட்டா ஒட்டாக இருத்தலும், தாவில்தாள் நிழல் விடுபாடும் பிறிதொருவர் கைச் சரக்கோ என எண்ணவே வைக்கின்றது.

இளம்பூரணர் வள்ளுவர் வாய்மையில் நெஞ்சம் பறி கொடுத்த தோன்றல் என்பது இவர் எடுத்துக்காட்டும் மேற்கோள் விளக்கப் பெருக்கத்தானே நன்கு புலப்படும். அதிகாரங்கள் பலவற்றை அடுக்கிக் கூறுதலாலும் விளங்கும். இத்தகையர் வள்ளுவரைப்போலச் சமயக் கணக்கர் மதிவழிச் செல்லாத சமனிலைச் சால்பினர் என்பதே தெளிவாம். சமயச் சார்பினர் வெளிப்படக் காட்டும் வலிந்த பொருளாட்சி, மேற்கோள் ஆயவை அவரிடத்துக் காணற்கில்லாமல் எச்சமயமும் ஒப்ப நினைத்துப் போற்றும் ஒரு பெருந்தகைமையே காணப்படுகின்றது என்க.

தொல்காப்பிய உரையாசிரியர் இளம்பூரணரும் திருக்குறள் உரையாசிரியர் மணக்குடவரும் ஒருவரே என்பர். ஒருவர் ஒரு நூற்கு ஒரு பெயரும், மற்றொரு நூற்கு ஒரு பெயரும் கொண்டு உரை வரைந்தனர் என்றல் மரபு நிலைப்படாது. ஒருவர் இருவர் மூவர் பெயர் கொண்டெழுதிப் பிழைக்கும் 'வணிக நோக்கர்' அச்சடிப்புக் காலத்தே காணலாமேயன்றிப் பயில்வார் பயன்பாடு என்னும் ஒன்றே குறியாகக்கொண்ட ஏட்டுக்காலத்துத் தூயரை அக்கூட்டிற் சேர்க்க வேண்டுவதில்லையாம்.

உரையாசிரியர் நச்சினார்க்கினியர் பல நூல்களுக்கு உரை கண்டவர். அவர் தம் பன்னூல் உரையொப்பைச் சுட்டிச் சுட்டிச் செல்கிறார். அத்தகு குறிப்பொன்றும் இளம்பூரணர் உரையில் இன்மை, இக்கருத்தின் அகச் சான்றின்மைச் சான்றே. ஒரு தனிப்பாடல் செய்தி கொண்டு இம்முடிவுக்கு வருதல் சாலாது. 'மணக் குடி புரியான்' என்பது 'மணக்குடவர்' பெயராகலாம். ஆனால் 'மணக்குடி புரியராம் அவரே இளம்பூரணர்' என்பதற்கு அப்பாடல் சான்றாகாது. மற்றும் 'உரை யாசிரியராகிய இளம்பூரண அடிகள்' எனக் கூறும் அடியார்க்கு நல்லார் 'மணக்குடவராகிய இளம்பூரண அடிகள்' என்று கூறத் தவறார். ஏனெனில் உரை யாசிரியர் என்னும் பொதுப் பெயரினும் அவர் குடிப் பெயர் விளக்கமானதன்றோ!

தொல்காப்பிய இளம்பூரணருரை முற்றாகக் கிடைத்துளது. அதில் அச்சிறப்புப் பாயிரம் இல்லை. திருக்குறள் மணக்குடவருரையும் முற்றாக வாய்த்துளது. அதிலும் அச்சிறப்புப் பாயிரம் இல்லை. சிதைவுற்ற நூலாயின் தனித்துக் கிடைக்க — பிறர் உரைக்கண் கண்டெடுக்க— முறையுண்டு. அன்னவகை எதுவும் இல்லாச் சிறப்புப் பாயிரங் கொண்டு முடிவுக்கு வருதல் தகுவது அன்று.

இளம்பூரணர் திருக்குறள் அதிகாரத் தலைப்புக்குத் தரும் பொருளுரை மணக்குடவருரையொடும் பொருந்தி

நிற்பதைக் காட்டி ஈருரையும் அவருரையே என்பர். ஈருரையும் பொருந்தாவுரையும் உண்மையால் வேறுரை யாம் என்பார்க்கு மறுமொழி இல்லாமை கண்கூடு.

துறவாவது தன்னுடைய பொருளைப் பற்றறத் துறத்தல் என்பது தொல்காப்பியம் (பொ. 75).

துறவாவது ஒருவன் தவம் பண்ணாநின்ற காலத்து யாதாயினும் ஒரு தொடர்ப்பாடு உளதாயினும் அதனைப் பற்றறத் துறத்தல் என்பது திருக்குறள் மணக்குடவருரை (அதி. துறவு).

ஒப்பியவுரையை அப்படி அப்படியே ஏற்றுக்கொண்டு போற்றுவதும், ஒப்பா இடத்து மட்டும் தம் உரையும் விளக்கமும் தருதலும் உரை மரபு ஆகலின் இளம் பூரணத்தைக் கற்ற மணக்குடவர் தம் உரையில் அவ் வுரையைப் போற்றிக் கொண்டார் என்பது பொருந்து வதாம்.

இளம்பூரணர் உரையில் காணும் எடுத்துக்காட்டு களைத் தொகையிட்டுக் காண்பவர் திருக்குறள் மணக் குடவர் உரையை இவருரையெனக் கொள்ளார் என்பது தெளிவு.

இளம்பூரணர் உரை வழியே நன்னூலார் பலப்பல நூற்பாக்களை இயற்றியுள்ளார். ஆகுபெயர் என்ற அளவானே குறித்தார் தொல்காப்பியர் (சொ. 110). அதனை ''ஆகுபெயர் என்ற பொருண்மை என்னை யெனின், ஒன்றன்பெயர் ஒன்றற்காய் நிற்றல் என்றவாறு'' என்றார் இளம்பூரணர். அதனையே நன்னூலார் ''ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத் தொன் முறை யுரைப்பன ஆகு பெயரே'' என நூற்பாவாக்கிக் கொண்டார் (பெயர். 33). இவ்வாறு இளம்பூரணக் கொடை மிகக் கொண்டு விளங்கியது நன்னூலாகலின், அந்நூலார் காலத்துக்கு முன்னவர் இளம்பூரணராவர். நன்னூலாரைப் புரந்த சீயகங்கன் காலம் கி. பி. 13 ஆம்

நூற்றாண்டு என்பர். எனவே அக்காலத்திற்கு முற்பட்டவர் இளம்பூரணர் என்க. புறப்பொருள் வெண்பா மாலையில் இருந்து இளம்பூரணர் மேற்கோள் காட்டியுள்ளார். ஆகலின் அம்மாலை தோன்றிய 9 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் ஆகிறார் இளம்பூரணர். மேலும் பரணியாற் கொண்டான், (எழுத். 125, 248) என வருவது கொண்டு[1] கூடல சங்கமத்துப் பரணி கொண்ட வீரராசேந்திரன் காலத்திற்குப் பிற்பட்டவர் எனத் தேர்ந்து 11 ஆம் நூற்றாண்டு என்பர்.

இளம்பூரணர் சோணாட்டைச் சேர்ந்தவர் என்றும், வேளாண் குடியினர் என்றும் கூறுவர். இவர் சோணாட்டைச் சொல்வதுடன் மலாடு மழநாடு முதலிய நாடுகளையும், சேரமான் மலையமான் பாண்டியன் சேரன் செங்குட்டுவன் முதலிய வேந்தர்களையும் குறிக்கிறார். உரையூரைக் கூறும் இவர் கருவூர், மருவூர், குழிப்பாடி, பொதியில் என்பவற்றையும் குறிக்கிறார். இவர் பார்வை தமிழகப் பார்வையாக இருந்தது என்பது மிகத் தெளிவாக உள்ளது.

கைவாய்க்கால் என்பது சோணாட்டு வழக்கு; இன்றும் வழங்குவது என்பர். அது பாண்டிநாட்டும் இன்றும் வழக்கில் உள்ளதே. 'கோடின்று செவியின்று' என்பது கொண்டு இந்நாளிலும் அங்கு அவ்வழக்குண்மையைக் குறிப்பர். ஆனால் அதனைக் கூறுமிடத்தேயே (சொல். 216)

**'கோடின்று செவியின்று'**
**'கோடில செவியில'**
**'கோடுடைய செவியுடைய'**
**'கோடுடைத்து செவியுடைத்து'**

என உண்மையும் இன்மையும் அடுக்கிக் கூறுவர். இவரை உண்மைப் பாற்படுத்துவதும், இன்மைப்பாற்படுத்துவதும்,

---

1. உரை மரபுகள் பக். 94-95.

வேண்டிற்றன்று. தமிழ்நாட்டு வழக்கு முழுதுற அறிந்த இவர்க்கு எவ்வெடுத்துக் காட்டு முந்து நிற்கிறதோ அதனைக் கூறுவர் எனக் கொள்ளலாம்.

'நும் நாடு யாது என்றால் தமிழ்நாடு என்றல்' எனச் செப்பும் வினாவும் வழுவாது வருவதற்குக் கூறுவதும் (சொ. 13) 'தமிழ்நாட்டு மூவேந்தரும் வந்தார்' என்பதும் (சொ. 33) 'தமிழ்நாட்டு மூவரும் வந்தார்' என்பதும் (சொ. 250) 'புலி விற் கெண்டை' என்பதும் (சொ. 411) இளம்பூரணரின் தமிழ் நில முழுதுறு பார்வையையே சுட்டுகின்றன. மேலும், 'நாயை ஞமலி என்ப பூழி நாட்டார்' என்றக் கால் அச்சொல் எல்லா நாட்டாரும் பட்டாங்குணரார்; நாய் என்பதனையாயின் எவ்வெத் திசை நாட்டாரும் உணர்ப என்பது'',என்று கூறும் இவர் உரையால் (சொ. 392) நாடு தழுவிப்பட்டாங்குணரச் செய்தலே இவர் பெரும் பார்வை என்க.

தமிழகத்து எக்குடிப் பிறந்தாரும் வேளாண்டொழிற் கூறு அறியாதிரார். வாழ்வும் வளமும் வைப்புமாக இருக்கும் வேளாண்மை உலகுக்குத் தாய்த் தொழில்; தமிழ் மண்ணுக்கோ தலைத் தொழில். அத்தொழிலே

**'' சுழன்றும் ஏர்ப்பின்ன துலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை ''**

என்பது வள்ளுவ வாய்மொழி. உழவர் கூற்றாகலின் அத் தொழில் தொடர்பான செய்திகள் பலவாக எடுத்துக் காட்டப்பட்டிருத்தல் இயற்கை. அது கொண்டு ஒரு குடிப் பாற்படுத்த வேண்டுவதில்லை. இவரொரு 'முழு நிறைமாந்தர்' என்பது சாலும்.

**இளம்பூரணர் உரைநயங்கள்:**

அருஞ்சொல்லுக்குப் பொருள் கூறுதல்:

'குயின் என்பது மேகம்' (எ. 336), 'மீன் என்பது ஓர் தொழிலுமுண்டு பொருளுமுண்டு' (எ. 346), 'அழ

னென்பது பிணம்' (எ. 355) 'மூங்கா என்பது கீரி' (பொ. 550) 'நவ்வி-புள்ளிமான்' (பொ. 556), 'கராக மென்பது கரடி' (பொ. 56) இவ்வாறு அருஞ்சொற் பொருள் வேண்டுமிடத் துரைக்கின்றார்.

கோயில் என்பதா? கோவில் என்பதா? எனின் இரண்டும் சரியே என்பார் உளர். அவற்றுள் 'கோயில்' என்பதே சரியானது என்பதை 'இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்' என்னும் நூற்பாவில் (எ. 294) தெளி வாக்குகிறார்.

'கஃறு' என்பது உருவு. 'சுஃறு' என்பது இசை என்பதைத் தேர்ந்து சொல்கிறார் (எ. 40).

'தபு' என்பது படுத்துச் சொல்ல 'நீ சா' எனத் தன் வினையாம் எனவும், அதனை எடுத்துச் சொல்ல 'நீ ஒன்றனைச் சாவி' எனப் பிறவினையாம் எனவும் அசையழுத்தம் (accent) காட்டி விளக்குகிறார் (எ. 76).

அஃறிணை என்பது அல்திணை. அல்லதும் அதுவே, திணையும் அதுவே எனப் பிரித்துக் காட்டி விளக்குகிறார் (சொ. 2).

சேரி என்பது பலர் இருப்பதுமன். ஆயினும் ஆண்டுச் சில பார்ப்பனக்குடி உளவேல் அதனைப் பார்ப்பனச்சேரி என்பது; இஃது உயர்திணைக்கண் தலைமை பற்றி வந்தது என்கிறார் (சொ. 49).

"பல பொத்தகம் கிடந்த வழி ஒருவன் ஏவலாளனைப் பார்த்து, 'பொத்தகங் கொண்டு வா' என்றால், அவன் ஒரு பொத்தகங் கொண்டு வந்த விடத்துத் தான் கருதிய பொத்தகம் அன்றெனில் 'மற்றையது கொணா' என்னும்; என்றக்கால் இக் கொணர்ந்ததனை ஒழிக்கும் சொல் இக்கொணர்ந்த பொத்தகம் சுட்டிற்றாகலான், கொணர்ந் ததனை ஒழிக்குஞ் சுட்டு நிலை அதனை ஒழித்து ஒழிந்த தென்று அவ்வினத் தல்லது பிறிதொன்று குறித்தது கொல்லோ எனிற்குறியா; மற்று அப் பொத்தகத்துள்

ஒன்றே பின்னுங் குறித்தது எனப்படும்'' என்பதன் வழியாக ஓரிலக்கணம் கூறுவதுடன் புத்தகம் என்பதன் செவ்விய வடிவத்தையும் நிலைப்படுத்துகிறார்.

சங்கத்தார் நாளில் 'உளறுதல்' என்பது கூந்தலை உலர்த்துதல் பொருள் தந்தது. அப்பொருளை இளம்பூரணர் காலத்தில் 'உலறுதல்' என்பது தரலாயிற்று என்பதை, ''உலற்றத் திறமின்றிப் பயின்றார் ஒரு சான்றார் மயிர் நீட்டி உலறி நின்றாரைக் கண்டு ஒருவன், எம்பெருமான் உலறி நின்றீரால் என்றக்கால் வாளாதே உலறினேன் என்னற்க, இது காரணத்தால் உலறினேன் என்க. இது தனக்கு உற்றதுரைத்தது'' என்பதன் வழியாக அறிய வைக்கிறார் (சொ. 56).

பிறரொடு தொடர்பில்லானைக் 'கெழீஇயிலி' என்பதும் (சொ. 57) தொழில் செய்யும் ஏவலாட்டியைத் 'தொழீஇ' என்பதும் (சொ. 122) அரிய சொல்லாட்சியாம்.

'அண்ணாத்தேரி' என்பதை இவர் எடுத்துக்காட்டுவதைத் திருவண்ணாமலையகத்து ஏரி எனக் கருத்துரைத்தார் உளர். அது 'வானம்பார்த்த ஏரி' என்பதாம். ஆறு, கால் ஆயவற்றின் நீர் வரத்தின்றி வானம் பார்த்து இருக்கும் ஏரியே அப்பெரியதாம் (எ. 134). 'அண்ணாத்தல்' 'அண்ணாந்து நீர் குடித்தல்' என்னும் வழக்குகளைக் கொண்டு அறிக. ''அண்ணாத்தல் செய்யாதளறு'' என்றார் வள்ளுவர். திட்டாத்துக்குளம் என்று பிறர் கூறுவது மேடுபட்ட குளம் என்றாதல் கருதுக.

''காமப்புணர்ச்சி எனினும், இயற்கைப் புணர்ச்சி எனினும், முன்னுறு புணர்ச்சி எனினும் தெய்வப்புணர்ச்சி எனினும் ஒக்குமென'' ஒரு பொருட் பலபெயரைச் சுட்டி ஐயமகற்றுகிறார் (களவியல் முன்னுரை).

செங்கடுமொழி என்பதைக் ''கொடிய கடுமொழியேயன்றி மனத்தினால் இனியளாகிக் கூறும் கடுமொழி'' என நயமுற விளக்குகிறார் (பொ. 112).

ஒத்ததெனப் பொதுவில் தோன்றும் இரண்டன் நுண்ணிய வேறுபாட்டையும் அரிதாக விளக்கிச் செல்கிறார்.

''**மடம்** என்பதற்கும் பேதைமை என்பதற்கும் வேறுபாடு என்னை எனின் மடம் என்பது பொருண்மை அறியாது திரியக்கோடல்; **பேதைமை** என்பது கேட்டதனை உய்த்துணராது மெய்யாகக் கோடல்'' (பொ. 248).

'ஐவகை யடியும்' (செய். 48) என்பது **ஆசிரியப்பா**விற்குரிய இலக்கணமுடைத்தாயினும் ஓசையின்மையான் ஆசிரியம் எனப்படாது **நூலெனப்படும்** என்று கொள்க (பொ. 391).

''**கலத்தலாவது** முத்தும் பவளமும் நீலமும் மாணிக்கமும் விரவினாற் போறல். **மயக்கமாவது** பொன்னும் வெள்ளியும் செம்பும் உருக்கி ஒன்றாதல் போறல்'' என்பவற்றைக் காண்க.

எடுத்துக் கொண்ட ஒன்றை உவமையால் விளக்கும் நயத்தையும் அரிதாக மேற்கொள்கிறார் இளம்பூரணர்:

சிறப்புப் பாயிரத்தில் ''பாயிரமென்பது புறவுரை. அது நூற்குப் புறவுரையேல் அது கேட்டு என்னை பயனெனின் கற்று வல்ல கணவற்குக் கற்புடையாள் போல இன்றியமையாச் சிறப்பிற்றாயும் திருவமைந்த மாநகரத்திற்கு உருவமைந்த வாயின் மாடம் போல அலங்காரமாதற் சிறப்பிற்றாயும் வருதலானும் பாயிரம் கேளாதே நூல் கேட்குமேயெனில் குறிச்சி புக்க மான்போல மாணாக்கன் இடர்ப்படுமாகலானும் பாயிரம் கேட்டல் பயனுடைத்தாயிற்று'' என ஓரிடத்தே மூன்றுவமைகள் வைத்து விளக்குகிறார்.

இகர உகரங்களுக்கும் குற்றியலிகர குற்றியலுகரங்களுக்கும் ஒலியளவையால் வேறுபாடு உண்டாயினும்

உயிர் என்னும் பெயரீட்டில் வேறுபாடு இல்லை என்பாராய், ''சந்தனக்கோல் குறுகினவிடத்துப் பிரப்பங் கோல் ஆகாது. அதுபோல இகர உகரங்கள் குறுகின விடத்தும் அவை உயிர் ஆகற்பாலன'' என்கிறார் (எ. 2.).

உயிர்மெய் ஒலிக்கும் வகையை விளக்கும்போது ''மெய்யும் உயிரும் முன்னும் பின்னும் பெற நிற்கும் என்றமையால் அக்கூட்டம் பாலும் நீரும்போல உடன் கலந்ததன்றி விரல் நுனிகள் தலைப்பெய்தாற்போல வேறு நின்று கலந்தன அல்ல என்பது பெறுதும்'' என்கிறார் (எ. 18).

'இதழ் போறலான் வாய் இதழ் எனப்பட்டது' என வாய்க்கு இதழ் எனப் பெயர் வந்த பொருத்தத்தை உவமையால் விளக்குகிறார் (எ. 83).

கலிப்பாவிற்குரிய துள்ளலோசை பற்றிக் கூறும்போது, ''துள்ளுதலாவது ஒழுகுநடைத்தன்றி இடையிடை யுயர்ந்து வருதல்; கன்று துள்ளிற்றென்றாற்போலக் கொள்க'' என்கிறார் (பொ. 387). இவ்வாறே பிறவும் வரும் உவமைகளும் உள.

உவமையின் பயன், ''புலன் அல்லாதன புலனாதலும், அலங்காரமாகிக் கேட்டார்க்கின்பம் பயத்தலும்'', என்று உவமையியல் முகப்பில் கூறும் அவர்தம் உவமைகளால் தம் கருத்தை மெய்ப்பிக்கிறார் என்க.

**உரை வளம்:**

இளம்பூரணர் உரைவளம், வேண்டுமிடத்து வேண்டு மளவான் விளங்கி நலம் சேர்க்கின்றது.

எழுத்தை எட்டுவகையாலும் எட்டிறந்த பலவகை யாலும் உணர்த்தினார் என அவற்றைக் குறிப்பதும் (எ. முகப்பு) செப்புவகை ஆறு என்பதும், வினாவகை ஐந்து என்பதும் (சொ. 13) தகுதி, வழக்கு ஆகியவற்றைப் பற்றிப்

பகுத்துரைப்பதும் (சொ. 17) முதலியவை நன்னூலார் முதலிய பின்னூலோர்க்கு உதவிய உரைவளங்களாம்.

''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே'' என்னும் நூற்பாவுக்கு (சொ. 152) ''பெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் ஆகிய எல்லாச் சொல்லும் பொருள் குறியாது நில்லா'' என உரை கூறுகின்றார். 'பொருள் குறித்து நிற்கும்' என்னாமல், பொருள் குறியாது நில்லா என்று ஈரெதிர் மறைகளால் உடன் பாட்டுக் கருத்தை வலியுறுத்துவது, ''எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே; அவ்வாறு குறியாதது சொல்லன்று'' என்பதை உறுதிப்படக் கூறுவதற்கேயாம்.

முக்காலங்களையும் சுட்டும் இளம்பூரணர், ''இறப்பாவது தொழிலது கழிவு; நிகழ்வாவது தொழில் தொடங்கப்பட்டு முற்றுப் பெறாத நிலைமை; எதிர்வாவது தொழில் பிறவாமை'' என்கிறார். எளிமையும் அருமையும் மிக்க குறிப்புகள் இவை.

கைக்கிளை 'சிறுமை உறவு' என்று கூறவேண்டுமெனக் கருதுகிறார் உரையாசிரியர். அதனை, ''கை என்பது சிறுமை பற்றி வரும்; அது தத்தம் குறிப்பிற் பொருள் செய்வதோர் இடைச்சொல்; கிளை என்பது உறவு; பெருமையில்லாத தலைமக்கள் உறவு என்றவாறு, கைக்குடை, கையேடு, கைவாள், கைஒலியல், கைவாய்க் கால் எனப் பெருமையில்லாதவற்றை வழங்குபவாகலின்'' என விளக்கியமைகிறார். (பொ. 1) கை சிறுமைப் பொருட்டாதலை நிறுவுதற்கு நடைமுறைச் சான்றுகள் பலவற்றை அடுக்குகிறாரே! பொருள் விளக்கம் செய்தலில் அவர்க்கிருந்த பற்றுதலின் விளைவு தானே இது!

பிரிவு என்னும் உரிப்பொருளைக் கூறும் தொல்காப்பியர், 'கொண்டு தலைக் கழிதலும், பிரிந்தவண் இரங்கலும்' என இரண்டாகப் பகுத்துக் கூறுகின்றார்.

இதனை, ''கொண்டு தலைக் கழிதலாவது உடன் கொண்டு பெயர்தல். அது, நிலம் பெயர்தலின் புணர் தலின் அடங்காமையானும், உடன் கொண்டு பெயர் தலின் பிரிதலின் அடங்காமையானும் வேறு ஓதப் பட்டது'' என நூலாசிரியர் கருத்தைத் தெளிவு செய்கிறார் (பொ. 17.)

''இளமை தீர் திறம்'' என ஆசிரியர் கூறினாராயினும் அதனை, ''இளமை தீர் திறமாவது, இளமை நீங்கிய திறத்தின்கண் நிகழ்வது. அது மூவகைப்படும்: தலைமகன் முதியனாகித் தலைமகள் இளையளாதலும், தலைமகள் முதியளாகித் தலைமகன் இளையனாதலும், இவ்விரு வரும் இளமைப் பருவம் நீங்கிய வழி அறத்தின்மேல் மனம் நிகழ்தலின்றிக் காமத்தின் மேல் மனம் நிகழ்தலும் என'' என்கிறார். ''எண்ணி உரைகாரர் ஈவார்'' என்பதை மெய்ப்பிப்பவை இத்தகையவை (பொ. 54). ''கொடுப்போர் ஏத்திக் கொடாஅர்ப் பழித்தல்'' என்பதன் விளக்கமும் காண்க. (பொ.87)

'ஏறிய மடற்றிறம்' முதலாக ஆசிரியர் சொல்லும் உடன்பாடுகளை 'ஏறா மடற்றிறம்' முதலாக எதிர்மறை யாக்கிக் கொண்டு இளம்பூரணர் கூறுவது வியப்பு மிக்கது (பொ. 55.)

''மறுவில் செய்தி மூவகைக் காலமும் நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்'' என்பதற்கு, ''குற்றமற்ற செயலையுடைய மழையும் பனியும் வெயிலுமாகிய மூவகைக் காலத்தினையும் நெறியினாற் பொறுத்த அறிவன் பக்கமும்'' எனப் பொருள் வரைந்து, ''இறந்த காலம் முதலாகிய மூன்று காலத்தினையும் நெறியினால் தோற்றிய அறிவன் பக்கம் என்றாலோ எனின், அது முழு துணர்ந்தோர்க் கல்லது புலப்படாமையின் அது பொருளன்றென்க'' என விளக்குகிறார். தாம் சுட்டிய பொருளே பொருளெனப் பன்னிரு படலச் சான்று காட்டு

கிறார். ''அறிவன் என்றது கணியனை. மூவகைக் காலமும் நெறியினால் ஆற்றுதலாவது பகலும் இரவும் இடைவிடாமல் ஆகாயத்தைப் பார்த்து ஆண்டு நிகழும் வில்லும் மின்னும் ஊர்கோளும் தூமமும் மீன் வீழ்வும் கோள் நிலையும் மழை நிலையும் பிறவும் பார்த்துப் பயன் கூறல்'' என மேல் விளக்கம் செய்கிறார். (பொ. 74) எத்தகு நாகரிகமாக மறுக்கிறார். அவருரை முதலுரை யாகலின் மறுப்புரை மிகக் கூறவேண்டும் நிலையில்லை. எனினும் பல்வேறு பாடங்களும் உரைகளும் பற்பல ரிடத்துக்கேட்டிருக்கக் கூடும். அவற்றை உட்கொண்டு ஒரு விளக்கம் கூறுகிறார்.

''பன்னிரு படலத்துள் கரந்தைக்கண் புண்ணொடு வருதல் முதலாக வேறுபடச் சிலதுறைகள் கூறினா ராதலின், புண்படுதல் மாற்றோர் செய்த மறத்துறை யாகலின் அஃது இவர்க்கு மாறாகக் கூறலும் மயங்கக் கூறலுமாம். ஏனையவும் இவ்வாறு மயங்கக் கூறலும் குன்றக் கூறலும் மிகைபடக் கூறலும் ஆயவாறு எடுத்துக் காட்டின் பெருகுமாதலின் உய்த்துணர்ந்து கண்டு கொள்க'' என அமைதி காட்டுகின்றார். ஆகலின் மறுப்புக் கூறுதலில் இளம்பூரணர் பெரிதும் மனங் கொண்டிலர் என்பதும், கற்பார் தம் 'நுண்மான் நுழை புலத்தால்' கண்டு கொள்வார் என அமைந்தார் என்பதும் விளங்கும்.

தலைவிக்குக் களவில் கூற்று நிகழுமிடங்கள் என்பது குறிக்கும் துறைகளுள் ஒன்று 'கட்டுரை இன்மை' என்பது. அதற்குச் சான்று வேண்டுமோ? 'கட்டுரை இன்மைக்குக் கூற்று நிகழாது' என்பதும் கூறுகின்றார். எவரேனும் அதற்குச் சான்று இல்லையே என ஐயுறுவரோ என்பதைத் உன்னித்த குறிப்பு இது (பொ. 109)

'சிற்றாறு பாய்ந்தாடும்' எனப் பன்னீரடிப் பஃறொடை வெண்பா ஒன்றைக் காட்டுகிறார் இளம்

பூரணர் (பொ. 123). அதில், ''இது பன்னிரண்டடியான் பெருவல்லத்தைக் கூற வந்த இன்னிசைப் பஃறொடை வெண்பா'' என்று குறிப்பு வரைகிறார். 'பெருவல்லம்' என்ற பெயர் இல்லாக்கால் இப்பாடற் பொருள் எவ்வாற் றானும் காணற்கரிது. ஆதலால் 'திறவு' வேண்டுங்கால் தந்து செல்லும் 'திறம்' இளம்பூரணர் உடைமையாக இருந்துளது எனலாம்.

அவரே, 'சூத்திரத்தாற் பொருள் விளங்கும்' எனவும் (பொ. 585)விடுத்துச் செல்கிறார்.

**சில வழக்காறுகள்:**

இளம்பூரணர் காலத்து வழக்காறுகள் சில அவர் உரை வழியே அறிய வாய்க்கின்றன.

எட்டி, காவிதி என்னும் பட்டங்கள் வழங்குவதுபோல் 'நம்பி' என்னும் பட்டம் வழங்குதல் (எ. 155), மகப் பாலுக்காக ஆடு வளர்த்தல் (எ.220) புளிச்சோறு ஆக்குதல் (எ. 247) பேயோட்டுதல் (சொ.312) வெள்ளாடை மகளிர் உடுத்தல் (சொ.412) தைந்நீராடல் (சொ.50) குறித்த தொரு நாளில் கறந்தபால் முழுவதையும் அறத்திற்கென ஆக்குதல் (சொ. 50) ஆடு மாடுகள் தினவுதீரத் தேய்த்துக் கொள்ள 'ஆதீண்டு குற்றி' நடுதல் (சொ.50) சேவற் சண்டை நடத்துதல் (சொ·61) ஒற்றிக்கலம் (ஆவணம்) எழுதுதல் (சொ.76) நெல்லடித்துத் தூற்றும் களத்திற்குத் 'தட்டுப்புடை' எனப்பெயர் வழங்குதல் (சொ. 77) வெற் றிலையும் பூஞ்செடியும் நடுதல் (சொ.1 10) பொழுதின் ஒரு பகுதியைக் கூறு எனக் கூறுதல் (பொ.9) முதலிய வழக் காறுகள் ஆங்காங்கு அறிய வருகின்றன.

**பல்துறைப் புலமை:**

நிறுத்தளத்தல், பெய்தளத்தல், நீட்டியளத்தல், நெறித்தளத்தல் தேங்கமுகந்தளத்தல், சாத்தியளத்தல், எண்ணியளத்தல் என எழுவகை அளவைகளைக் கூறுவதும் (எ.7), ''கடுவும் கை பிழியெண்ணெயும் பெற்றமையான்

மயிர் நல்ல ஆயின'' என்றும், ''எருப்பெய்து இளங்களை கட்டு நீர் கால் யாத்தமையால் பைங்கூழ் நல்ல'' என்றும் கூறுவதும் (சொ. 21, 22) ''விலங்கும் மரனும் புள்ளும் உள்ள நோய் உற்றாற்கு மனக்குறைக்கு மறுதலை மாற்றம் கூறுவன போலும் குறிப்பின'' எனலும் (சொ. 416) வாளானும் தோளானும் வேறலன்றி, ''சொல்லான் வேறலும் பாட்டான் வேறலும் கூத்தான் வேறலும் சூதான் வேறலும் தகர்ப் போர் பூழ்ப் போர் என்பனறவற்றான் வேறலும் எனப் போர்வகை அடுக்குதலும் (பொ. 74) (அடியர்) ''அகத்திணைக்கு உரியரல்லரோ எனின், அகத்திணையாவன அறத்தின் வழாமலும் பொருளின் வழாமலும், இன்பத்தின் வழாமலும், இயலல் வேண்டும்; அவையெல்லாம் பிறர்க்குக் குற்றேவல் செய்வார்க்குச் செய்தல் அரிதாகலானும், அவர் நாணுக் குறைபாடுடையராகலானும், குறிப்பறியாது வேட்கை வழியே சாரக்கருதுவராகலானும், இன்பம் இனிது நடத்துவார் பிறரேவல் செய்யாதார் என்பதனானும் இவர் புறப்பொருட்குரியராயினார் என்க'' என்பதனானும் பிறவற்றாலும் இளம்பூரணர் பல்துறைப் புலமை நன்கறிய வருகின்றது.

''சாத்தன் கையெழுதுமாறு வல்லன்; அதனால் தன் ஆசிரியன் உவக்கும்; தந்தை உவக்கும்'' என்பதால் உரையாசிரியர் கையெழுத்தழகை எவ்வளவு விரும்பினார் என்பது விளங்கும் (சொ.40).

''மனைவியைக் காதலிக்கும்;தாயை உவக்கும்'' என்பவற்றால் வாழ்வியல் நுணுக்கத்தை எவ்வளவு தேர்ந்திருந்தார் இளம்பூரணர் என்பது விளங்கும் (சொ. 72).

உரையாசிரியரை அடுத்துத் தொல்காப்பியச் சொல்லதிகாரத்திற்கு உரை கண்ட சேனாவரையரைத் தொடர்வோம்.

## ஆ. சேனாவரையம்

சேனாவரையர் என்பது பட்டப்பெயர். எட்டி, காவிதி என்னும் பட்டங்கள்போல் படைத்தலைவர் சுளுக்கு அரசால் வழங்கப்பட்ட பட்டப்பெயர் அது. அதனால் சேனாவரையரின் முன்னோருள் ஒருவர் அப் பட்டப்பெயர் பெற்று விளங்கி அது குடிப்பெயராகப் பின்னர் விளங்கியிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம்.

அரையர் = அரசர்; 'சேனை அரையர்' என்பது சேனாவரையர் ஆயது. சேனைமுதலி, தளவாய் முதலி, நாயகர், தலைவர் என்னும் குடிவழிப் பெயர்களின் வரலாற்றை அறிந்தால் சேனாவரையர் என்பதன் பொருள் தெளிவாகும்.

**ஊரும் காலமும்:**

தூத்துக்குடி திருச்செந்தூர்ப் பெருவழியில் ஆற்றூர் என்றோர் ஊர் உள்ளது. அவ்வூர் பொருநையாற்றின் கரையில் அமைந்தது. அவ்வூரிலுள்ள சோமநாதர் கோயிலில் மாறவர்மன் குலசேகரனின் ஏழாம் ஆட்சி யாண்டுக் கல்வெட்டுள்ளது. அதில் ஆற்றூர்ச் சேனா வரையர் தம் முன்னோரிடமிருந்து தமக்குக் கிடைத்த நிலங்களைச் சோமநாதர் கோயிலுக்கு வழங்கிய செய்தி உள்ளது. இக்கல்வெட்டின் காலம் 1276 என்பர். அதனால் சேனாவரையர் பதின்மூன்றாம் நூற்றாண்டினர் என்பது தெளிவாம்.

ஆற்றூர் ஏரல், கொற்கை சார்ந்த ஊர். கொற்கையில் இருந்த வெற்றிவேற் செழியனைச் சிலம்பு பாடுகின்றது. அக்கொற்கையில் நாணயம் அடிக்கும் அக்க சாலை இருந்தது. இன்றும் அவ்விடம் 'அக்கா சாலை' என வழங்குகின்றது. ஆங்கிருந்த கோயில் 'அக்கசாலை ஈசுவரர் கோயில்' என்பதை அக்கோயில் கல்வெட்டுக் கூறுகின்றது. செழிய நங்கை கோயில் என்பதொன்றும்

ஆங்குண்டு. அப்பெயர் நெடுஞ்செழியன், வெற்றிவேற் செழியன் பெயர்களை நினைவூட்டுகின்றது. கொற்கை சூழ்ந்த பகுதியில் படைகள் தங்கியிருந்த சான்று காட்டும் ஊர்ப்பெயர்கள் உள்ளன. ஆதலால் அப்படைத் தலைவர் ஒருவர் குடிவழிப் பெயரே சேனாவரையர் என்பதற்குக் கிட்டும் சான்றுகள் இவை எனக் கொள்ளலாம்.

ஆற்றூர்க் கல்வெட்டு மற்றொன்றில் சேனாவரையர்க்கு 'அழகப்பிரான் இடைக்கரையாழ்வான்' என்றொரு பெயருண்மை கொண்டு அப்பெயரே சேனாவரையரின் இயற்பெயராக இருக்கக் கூடும் என்பர்.

சேனாவரையர் உரையாசிரியர் இளம்பூரணர் உரையைப் பல இடங்களில் குறிப்பிடுகிறார். நேமிநாதம் இயற்றிய குணவீர பண்டிதர் நன்னூல் இயற்றிய பவணந்தி முனிவர் ஆகியோர் கொள்கைகளை மறுத்துரைக்கும் இடங்களும் இவர் நூலில் உள. ஆதலால், அவர்களுக்குக் காலத்தால் பிற்பட்டவர் இவர் என்பது உறுதியாகும்.

'மாறோகம்' என்பது பழமையானதோர் ஊர். அவ்வூர்ப் புலவர் 'மாறோகத்து நப்பசலையார்' என்பார் சங்கச் சான்றோர் வரிசையைச் சார்ந்தவர். அம் மாறோகம் கொற்கை சூழ்ந்த பகுதியாகும். அதன் வழக்கம் ஒன்றைச் சேனாவரையர் தம் உரையுள் எடுத்தாள்கிறார். அதிலும் '**இக்காலத்தும்**' என நிகழ் காலத்தால் சுட்டுகிறார். தம் ஊர்ச்சார்புச் செய்தியாக விளங்குகின்ற அது, ''புறத்துப்போய் விளையாடும் பேதைப் பருவத்துப் பெண் மகளை மாறோகத்தார் இக்காலத்தும் பெண்மகன் என்று வழங்குப'' என்பது (164).

''தென்பாண்டி நாட்டார் ஆ எருமை என்பவற்றைப் பெற்றம் என்றும், தம்மாமி என்பதனைத் தந்துவை என்றும் வழங்குப'' என்றும் (400) நாட்டைச் சுட்டி எடுத்துக்காட்டுக் காட்டும் இப்பகுதியும் இவர்தம் நாட்டுச் சார்புக்குரிய சான்றாகக் கொள்ள வாய்க்கின்றது.

**சமயம்:**

ஆற்றூர்ச் சேனாவரையர் அவ்வூர்ச் சோமநாதர் கோயிலுக்கு நிலம் வழங்கிய செய்தியால் அவர் **சைவ சமயத்தவர்** என்பது தெளிவாம். மேலும் பிறர் உரைகளின் முகப்பில் இறைவணக்கப் பாடல்கள் இல்லாதிருக்கவும் இவருரை முகப்பில் பிள்ளையார், சிவபெருமான், கலைமகள், அகத்தியர் ஆகியோரைப் பற்றிய வாழ்த்துப் பாடல்கள் அமைந்துள்ளமை இவர்தம் சமயச்சார்பை விளக்கும். இளம்பூரணர் தொல். பொருள். ஐம்பதாம் நூற்பாவில் மேற்கோள் காட்டும் ''தன்தோள் நான்கின்'' என்னும் மூத்த பிள்ளையார் பாடலை இவர்தம் உரை நூன் முகப்புப் பாடலாகக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்க ஒன்றாம்.

சேனாவரையர் உரை சொல்லதிகாரம் ஒன்றற்கே கிடைத்துள்ளது. மற்றை அதிகாரங்களுக்கு இவர் உரை எழுதினார் என்பதற்குரிய சான்று இவர் உரையிலோ பிற வகைகளிலோ கிட்டிற்றில்லை. ஆனால் எழுத்து, பொருள் அதிகாரங்களில் இவர் கொண்டிருந்த புலமை நலம் சொல்லதிகார உரையால் விளக்கமாகின்றது.

**நூலாசிரியரைச் சிறப்பித்தல்:**

நூலாசிரியர் இலக்கண நூற்பா யாத்தனர் எனினும், அந் நூற்பா இலக்கிய நயமுடையது என்பதை உட்கொண்டவராய்ச் ''செய்யுளின்பம் நோக்கி அளபெழுந்து நின்றது'' என்றும் (210), ''செய்யுளின்பம் நோக்கி வினையொடும் பெயரொடும் என்றார்'' என்றும் (295), ''தாம் என்பது கட்டுரைச் சுவைபட நின்றது'' என்றும் (398) இன்னவாறு நயம் உரைக்கும் பகுதிகளால் சேனாவரையர் நூலாசிரியரைச் சிறப்பித்தலை நிலைப்படுத்துகிறார்.

''அகத்திய முதலாயின எல்லா இலக்கணமும் கூறலிற் பல்வேறு செய்தியின் நூலென்றார்'' என்று சொல்லதிகார இறுதி நூற்பா விளக்கத்தில் சேனாவரையர் வரையும்

உரை, தொல்காப்பியர் புலமைப் பரப்பை நோக்கிக் கூறியதாம் (463)

விளிவேற்றுமையை எழுவாய் வேற்றுமையுள் அடக்குதலும், தனியே பிரித்து எண்ணலும் என இருமுறைகளும் வடமொழியில் உண்டு என்றும், ஐந்திர நூலார் தனியே பிரித்து எண்ணுபவர் என்றும், தொல்காப்பியர் அம்மதத்தைக் கொண்டவர் ஆகலின் வேற்றுமை எட்டெனக் கொண்டார் என்றும் சேனாவரையர் விளக்கிக் கூறுகிறார். இக்கருத்தை விளக்குதற்கே ''பாயிரத்துள் ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்'' என்று கூறப்பட்டது என்பதையும் சுட்டுகிறார் (74)

பொருள் விளங்கா நிலையில் 'அகப்படச் சூத்திரம் செய்யார் (குன்றக் கூறலாக அமையார்) என்றும், 'பொருள் விளங்க விதந்து கூறுவார்' (விளக்கித் தெளிவுறக் கூறுவார்) என்றும் இவர் கூறுவன நூலாசிரியர் நூற்ற திறத்தை நயமுறக் கூறுவதாய் அமைகின்றன (35, 36).

பலபொருள் ஒருசொல் அமையும் வகைகளைக் கூறி அவ்வகைகளின் இலக்கணத்தைத் தனித்தனியே குறிக்கிறார் தொல்காப்பியர். அந்நூன் முறையை நயக்கும் சேனாவரையர், ''இலக்கணச் சூத்திரங்களே அமையும்; இச்சூத்திரம் வேண்டா பிறவெனின், இருவகைய என்னும் வரையறை யவற்றால் பெறப்படாமையானும், வகுத்துப் பின்னும் இலக்கணம் கூறியவழிப் பொருள் இனிது விளங்குதலானும் இச் சூத்திரம் வேண்டும் என்பது'' என்கிறார். இதனால், தொல்காப்பியர் நூலியற்றிய சிறப்பைச் சுட்டும் அளவுடன் நில்லாமல், இந்நெறியைப் போற்றுதல் சிறப்பு எனப் பின்வருவார்க்கு எடுத்துக்காட்டும் தேர்ச்சியாளராகவும் சேனாவரையர் அமைதல் புலப்படுகின்றது.

ஆசிரியர் தொடுக்கும் நயத்தைத் தக்காங்கு எடுத்துரைத்தலில் தனித்திறம் காட்டுகிறார் சேனாவரையர்:

**''வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்''**

என்னும் நூற்பா விளக்கத்தில் (198), '''வேற்றுமை கொள்ளாது' என்னாது காலமொடு தோன்றுமெனின் தொழில் நிலை ஒட்டும் தொழிற் பெயரும் வினைச் சொல் லாவான் செல்லுமாகலானும், 'காலமொடு தோன்றும்' என்னாது வேற்றுமை கொள்ளாது எனின் இடைச் சொல்லும் உரிச்சொல்லும் வினைச்சொல் லெனப்படும் ஆகலானும் அவ்விரு திறமும் நீக்குதற்கு 'வேற்றுமை கொள்ளாது காலமொடு தோன்றும்' என்றார். வினைச் சொல்லுள் வெளிப்படக் காலம் விளங்காதனவும் உள. அவையும் ஆராயுங்கால் காலமுடைய என்றற்கு 'நினையுங் காலை' என்றார்'' என்பது அத்தகையவற்றுள் ஒன்று.

இடையியலில் 'எல்லே இலக்கம்' என்றொரு நூற்பா அமைந்திருத்தலைக் காண்கிறார் சேனாவரையர். அஃது உரிச்சொல் ஆதலால் உரியியலில் இடம் பெறவேண்டும் என்று நினைகிறார். ஆயின் நூற்பா இடையியலில் அன்றோ கிடக்கின்றது! அதனை மாற்றியமைத்தல் நூன் முறையாகாது என்று எண்ணியவராய், ''எல்லென்பது உரிச்சொல் நீர்மைத்தாயினும் ஆசிரியர் இடைச் சொல் லாக ஓதினமையான் இடைச்சொல் என்று கோடும்'' என் கிறார். இதனால் நூலாசிரியர் நுவற்சியைத் தலைமேல் தாங்கிச் செயற்பட வேண்டும் உரையாசிரிய மரபை உணர்த்திவிடுகிறார் அவர். அதற்கு அவரே சான்றாக விளங்குவதைத் தம் எழுத்தாலேயே புரிவிக்கவும் செய் கிறார் (269). முந்நூற்றுத் தொண்ணூற் றொன்பதாம் நூற்பா விளக்கத்திலும் இக்கருத்தைத் தெளிவிக்கிறார்.

இடைச்சொல், உரிச்சொல் முதலியவற்றை இடைச் சொற்கிளவி, உரிச்சொற் கிளவி என ஆள்கிறார் ஆசிரியர். இவற்றுள் கிளவி என்பது மிகை என்று கருது வார் உளராகலாம் என எண்ணிய சேனாவரையர், ''கிளவி என்பது மிகையெனின்; மிகையாயினும் இன்னோ

ரன்ன அமைவுடைய என்பதுணர்த்துதற்கு அவ்வாறோ தினார் என்பது'' என அமைதி கூறுகின்றார். இன்னவை நூலாசிரியர் ஆணைவழிச் செல்லும் உரைமரபு காட்டுவன என்க.

நூலாசிரியர்க்குரிய நெறிகளுள் ஒன்று 'உய்த்துணர வைத்தல்' என்பது. எனினும், சில இடங்களில் உய்த்துணர வேண்டாமல் வெளிப்பட நூல் இயற்றுவதும் வழக்கே. அத்தகைய இடங்கள் சிலவற்றில் சேனாவரையர் நயம்பட உரை வரைகின்றார். 'வழாஅல் ஓம்பல்' என்று வழுவாமல் காத்த ஆசிரியர் (13),

**''செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு**
**அப்பொருள் ஆகும் உறழ்துணைப் பொருளே''**

என விளக்குகிறார் (16). இந்நூற்பா விளக்கத்தில் சேனாவரையர், ''நுண்ணுணர்வுடையார்க் கல்லது அதனால் உணர்தலாகாமையின் விரித்துக் கூறியவாறு'' என நூலாசிரியர் பேரியலை வெளிப்படுத்துகிறார். இவ்வாறே, ''ஆக்கந் தானே காரண முதற்றே'' என்னும் நூற்பா விளக்கத்திலும் (21) நுண்ணுணர்வுடையார்க்குத் தம்மரபினவே (11) என அடங்குவ ஆயினும் ஏனை உணர்வினார்க்கு இவ்வேறுபாடு உணரலாகாமையின் விரித்துக் கூறினார்'' என்கிறார்.

ஆசிரியர் வெளிப்பட விளக்கும் இடங்களில், வேறொரு வாய்பாட்டானும் சேனாவரையர் கூறுகிறார்:

**''இனச் சுட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை**
**வழக்கா றல்ல செய்யு ளாறே''**

என்னும் நூற்பாவில், ''ஒன்றன தாற்றலான் ஒன்று பெறப் படுதலின் வழக்காறல்ல என்றானும், செய்யுளாறு என்றானும் கூற அமையுமெனின், 'உய்த்துணர்வது சொல் இல்வழி' எனமறுக்க'' என்கிறார். வேண்டும் சொல் இல்லாக்கால்தான் உய்த்துணர வேண்டும் என்னும் நெறியை இவ்வாறே மேலும் கூறுவார் (43, 133).

**வேறுரைகள்:**

சேனாவரையர்க்கு முன்னரே சொல்லதிகாரத்திற்கு இளம்பூரணர் உரையெழுதியிருந்தார். அவருரை சேனாவரையர் உரைத் தெளிவுக்கு மிக உதவியிருக்கும். இளம்பூரணரின் ஆய்வின் மேல் ஆய்வு சேனாவரையர் செய்தலால், உரைச்செப்பங்களும், விளக்கங்களும் கிடைத்தல் இயற்கை. ஆதலால், முதல் நூற்பாவிலேயே உரையாசிரியரைச் சுட்டுகிறார் சேனாவரையர்.

''சொல்லாவது எழுத்தோடு ஒருபுடையான் ஒற்றுமையுடைத்தாய்ப் பொருள் குறித்து வருவது. உரையாசிரியரும் எழுத்தாதல் தன்மையொடு புணர்ந்து என்பார் 'எழுத்தொடு புணர்ந்து' என்றாராகலின், ஒருபுடை ஒற்றுமையே கூறினார். தன்மையொடு புணர்ந்து என்னாக்கால் ஓரெழுத்தொரு மொழிக்கு எழுத்தொடு புணர்தல் இன்மையின் சொல்லாதல் எய்தாதென்க'' என்று கூறி உரையாசிரியரைப் பாராட்டுகிறார்.

உரையாசிரியரை ஐம்பத்திரண்டிடங்களில் சுட்டிச் செல்கிறார் சேனாவரையர். 'அவர்க்கு அது கருத்தன்று என்க' என்னும் வாய்பாட்டால் 27 இடங்களிலும், 'அவ்வுரை போலியுரை என்க' என்னும் வாய்பாட்டால் 18 இடங்களிலும், 'உரையாசிரியர் கருத்து இதுவேயாம்' என ஓரிடத்தும், 'உரையாசிரியர் பிறர் மதம் உணர்த்திய கூறினார்' என மூன்றிடத்தும் 'மறுக்க' என ஓரிடத்தும், 'ஆண்டு அடங்காது' என ஓரிடத்தும் பாராட்டுதல் ஓரிடத்துமாக அவரைச் சுட்டுதல் 52 இடங்களாம்.

இனி உரையாசிரியர் பெயர் சுட்டாமல் 'ஒருரை' என்றும் (249, 428) என்பாரும் உளர் என்றும் (186, 285, 316, 368, 450, 451) ஒரு சாரார் என்றும் (394, 441, 449, 452, 453, 457, 463), 'மற்றொரு சாரார்' என்றும் (412) உரைக்கின்றவற்றை நோக்கச் சொல்லதிகாரத்திற்கு

இளம்பூரணர் உரையையன்றிச் சேனாவரையர் காலத்திற்கு முன்னரே மற்றோர் உரை இருந்ததென்றும், வாய்வழியாக உல்விய உரை மரபுகளும் விளங்கின என்றும் அறியலாம்.

"அடிமறிச் செய்தி அடிநிலை திரிந்து
சீர்நிலை திரியாது தடுமா றும்மே"

என்னும் நூற்பா விளக்கத்தில் (407) "நிரனிறை தானே', 'சுண்ணந் தானே', மொழிமாற் றியற்கை' என்பனபோல ஈண்டும் 'அடிமறிச் செய்தி' என்பதனைக் குறளடியாக்கி, அடிநிலை திரிந்து சீர்நிலை திரியாது தடுமா றும்மே பொருள்தெரி மருங்கின்' என்று சூத்திரமாக அறுப்பாரும் உளர்" என்கிறார் சேனாவரையர். இவ்வாறு இளம்பூரணர் அறுத்தார் அல்லர். சேனாவரையர் கொண்ட பாடமே, அவர் பாடமுமாம். ஆதலால் சேனாவரையரால் சுட்டப் பட்டவர் வேறொருவர் என்பது தெளிவான செய்தி. இவர்க்குப் பின்னர் உரைகண்ட தெய்வச்சிலையார் பாடமும் இளம்பூரணர் கொண்ட பாடமே என்பதும் குறிப்பிடத்தக்கது.

உரையாசிரியர் பெயர் சுட்டிச் சேனாவரையர் மறுக்கும் இடங்கள் சிலவற்றில் அவ்வுரை, உரையாசிரியர் உரையில் காணப்படாமை கொண்டு உரையாசிரியர் இளம்பூரணரின் வேறொருவர் என்று கருதுவாரும் உளர். உரையைப் படியெடுத்தோர் 'விழ எழுதுதல்' உண்டு என்றும், சில இடங்களில் 'இடைச் செறிப்பு' உண்டு என்றும் பட்டாங்கு அறிவோர் ஐம்பத்திரண்டு இடங்களில் ஒரு நான்கு இடங்களில் மட்டும் உரையாசிரியர் உரையின்மை கொண்டு வேறொருவராகக் கருதார். உரையாசிரியரும் இளம்பூரணரும் ஒருவரே என்பதைத் தொல்காப்பியச் சொல்லதிகார இளம்பூரண ஆராய்ச்சி முன்னுரைக்கண் பேரா. திரு. கு. சுந்தரமூர்த்தி தெளிவுறுத்துதல் கண்டு கொள்க. (சை. சி. க. பதிப்பு)

**உரைமரபு :**

இலக்கண உரையாசிரியர்களின் உரைப் போக்கைப் பொதுவகையில் நோக்கினால், அவர்கள் **பயிற்றாசிரியர்களாக** (போதக ஆசிரியர்களாக) இருந்தவர்கள் என்பது விளங்கும். அவ்வகையில் சேனாவரையர் உரையில் 'வினவி' 'விடை' கூறும் பகுதிகள் மிகவுண்மை தெளிவிக்கும்.

'இச்சூத்திரம் என்ன நுதலிற்றோ?' எனின், 'இன்னது நுதலிற்று' என நூற்பாக்கள் தோறும் சொல்லிச் செல்லுதல் **இளம்பூரணர் உரை மரபு.** சேனாவரையர் இம் மரபைக் கொண்டாரல்லர். அது கூறாக்காலும் நூற்பாவுக்குப் பொருள் கொள்ளத் தடையொன்றின்மை கண்டு அவர் விலக்கியிருத்தல் கூடும். அவர்தம் உரைச் செறிவு அவ்வாறு எண்ணத் தோன்றுகின்றது.

ஓ ஓ என வழங்கும் ஒலிக் குறிப்பை அறிவோம். "ஓ ஓ, அப்படியா செய்தி", "ஓ ஓ என்று வாழ்கிறான்" (ஓகோ), "ஓ ஓ என்று கத்தியும் கேட்கவில்லை" இப்படியெல்லாம் இந்நாள் வழங்கும் வழக்கு சேனாவரையர் காலத்திலும் இருந்தமை அவருரையால் அறிய வருகின்றது. அது தொல்காப்பியர் காலத்தில் 'ஔ ஔ' என்று இருந்து மாறியதை அவர் சுட்டுகிறார். 'ஔகாரத்தைச் சுட்டும் அவர், "இதனை இக்காலத்து ஓகாரமாக வழங்குப" என்கிறார். (281).

'கண்டீரே கண்டீரே' என்பன போலவரும் அசைநிலையடுக்கும், 'நின்றை காத்தை' என்பன போலவரும் அசைநிலையும் இக்காலத்து அரிய என்றும், இக்காலத்துப் பயின்று வாரா என்றும் கூறுகிறார். (425, 426).

ஏ என்னும் உரிச்சொல் 'பெற்று' என்னும் பொருளது என்கிறார் தொல்காப்பியர் (304). அதனை விளக்கும் சேனாவரையர் "பெற்று—பெருக்கம். ஈது அக்காலத்துப்

புயின்றது போலும்'' என்கிறார். இத்தகைய குறிப்புகள் மொழி வரலாற்றுக்கு வாய்க்கும் அரிய கருவிகளாம்.

சில சிறப்புப் பெயர்கள், சிறப்புக் குறிப்புகள் ஆகியவற்றைச் சுட்டுவதால் பல்வேறு வரலாற்றுத் துணைகளை வழங்குதல் உரை வல்லார் மரபு. அம்மரபில் தக்க பங்கு பற்றிக் கொள்கிறார் சேனாவரையர்.

அகத்தியனாரால் தமிழுரைக்கப்பட்டது (73)
உலையூர்க்கண் நின்ற சிராப்பள்ளிக்குன்று (82)
சீத்தலைச் சாத்தன் (174)
தெய்வப் புலவன் திருவள்ளுவன் (41)
பட்டிபுத்திரர் கங்கை மாத்திரர் (165)
பரணரது பாட்டியல் (80)
பெருந்தலைச் சாத்தனார் (26)
பெருந்தோட் பல்யாகசாலை முது குடுமிப் பெருவழுதி (26)
முடத் தாமக் கண்ணியார் (270)

இன்னவை இதற்கு எடுத்துக்காட்டுகள்.

'பெண்' என்னும் சொல் 'பெண்டு' என்றும் வழங்கும். 'பெண்டாட்டி' என்றும் வழங்கும். இவ்வழக்கு சேனாவரையரால் பெரிதும் ஆளப்படுகின்றது (24, 25, 161, 163).

பொத்தகம் என்பது பழவடிவம். அதனைப் 'புத்தகம்' என்பது பின்வழக்கு. சாத்தன் புத்தகம், சாத்தனது புத்தகம் என வழங்குகிறார் சேனாவரையர் (413).

நாடகம் அல்லது கலை நிகழ்ச்சி நடத்தும் அரங்கு 'ஆடரங்கு' என வழங்குதலும், செயற்கை மலை உருவாக்கி வைத்தலும் (செய்குன்று) சுட்டுகிறார் (415).

நிலத்தை ஒற்றி வைக்கும் உறுதியோலை 'ஒற்றிக்கலம்' எனவும், விலைக்கு விற்று எழுதிய எழுத்தை 'விலைத் தீட்டு' எனவும் வழங்கும் வழக்கைக் குறிக்கிறார் (80).

நூலின் இடையும் கடையும் தலையும் மங்கலம் அமைய நூலியற்றும் வழக்கைக் குறிப்பிடுகிறார் (82).

கெட்டது என்பது காணாமற் போனது என்னும் பொருள் தருதலை ''நம் மெருது ஐந்தனுள் கெட்ட எருது யாது?' என்பதால் அறிய வைக்கிறார் (32).

''வினை என்பது அறத்தெய்வம். சொல் என்பது நாமகளாகிய தெய்வம்'' என்று இவர் கூறுவது ஆழ்ந்த கருத்தினது (57).

''உருபின் பொருளவாகிய வடிவு, பிழம்பு, பிண்டம் என்னும் தொடக்கத்தன'' என்பதால் ஒரு பொருட் பன்மொழிகளை அமைக்கிறார் (24).

இனியது என்பதைத் 'தீவிது' என்பது நயமாக உள்ளது (78).

தொண்டு தொண்டன் என்பவை மதிப்புப் பொருளாக வழங்காமை அவர் காலத்திருந்தது என்பதை, ''தாம் வந்தார் தொண்டனார் எனப் பன்மைக் கிளவி இழித்தற் கண்ணும் வந்ததால் எனின், ஆண்டு உயர் சொல்தானே குறிப்பு நிலையாய் இழிபு விளக்கிற்றென்பது'' என்பதால் அறியச் செய்கிறார் (27).

''முன்தேற்று — புறத்தின்றித் தெய்வ முதலாயின வற்றின் முன்னின்று தெளித்தல்'' (383).

''எவ்வகையானும் அறியாப் பொருள் வினாவப் படாமையின் ஈண்டு அறியாப் பொருள் என்றது பொது வகையான் அறியப்பட்டுச் சிறப்பு வகையான் அறியப் படாத பொருளையாம்'' (31).

—இன்னவை தெளிவுறுத்த வல்ல தேர்ச்சிச் சான்றுகள்.

''உலக வழக்கு நடை இத்தகைத்து என்பதை அருமை யாகக் குறிக்கிறார் சேனாவரையர் (416).

"உலக வழக்காவது சூத்திர யாப்புப்போல மிகைச் சொற்படாமைச் சொல்லப்படுவதொன்றன்றி, மேற் றொட்டுங் கேட்டார்க்குப் பொருள் இனிது விளங்க வழங்கப்பட்டு வருவது''.

உலக வழக்கை விளக்கும்போதே, சூத்திர யாப்பு இத்தகைத் தெனவும் சொல்லி இரு வழக்கையும் விளக்கும் அருமையது இது.

இரண்டன் வேறுபாடுகளை விளக்கிக் காட்டலிலும் விழிப்போடு இருக்கிறார் சேனாவரையர்.

''இனத்தொடு சார்பிடை வேற்றுமை என்னை எனின் ஒரு சாதிக்கண் அணைந்த சாதி இனமெனப்படும். அணைந்த சாதியன்றி ஒருவாற்றான் இயைபுடையது சார்பெனப்படும் என்பது.'' (53)

''குறிப்பு—மனத்தாற் குறித்துணரப்படுவது;
பண்பு — பொறியான் உணரப்படும் குணம்'' (297)
—இத்தகையவை அவை.

"ஈண்டு இரட்டைக் கிளவி என்றது மக்களிரட்டை விலங்கிரட்டை போல வேற்றுமையுடையவற்றையன்றி இலையிரட்டையும் பூவிரட்டையும் போல ஒற்றுமையும் வேற்றுமையும் உடையனவற்றை'', என்பது போன்ற இடங்களில் இலக்கணத்தை இலக்கியச் சுவைபடச் செய்யும் நேர்த்தியராகச் சேனாவரையர் விளங்கு கின்றார்.

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் சேனாவரை யரை மிக மிகப் போற்றியவர் சிவஞானமுனிவரர். ''வட நூற் கடலை நிலை கண்டுணர்ந்த சேனாவரையர்'' எனப்பாராட்டும் முனிவரர்,''எழுத்ததிகாரத்திற்கு உரை செய்தார் ஆயின் இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்து உரைப்பர்'' என்றும் தொடர்ந்து எழுதுகின்றார் (தொல்காப்பிய சூத்திர விருத்தி).

மொழி என்பதாம் 'பாஷை'யைப் பாடையென வழங்குகிறார் சேனாவரையர் (397); வடபாடை என்றும் சொல்கிறார் (401).

தமிழ்ச் சொல் வடபாடைக்கட் செல்லாது என்னும் கொள்கையுடைய இவர் (401), 'குமரி வடமொழிச் சிதைவு என்றும் (196) நீர் ஆரியச் சிதைவு என்றும் (398) கூறுவது வியப்பாகாது.

செய்யுட்குரிய இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னும் நால்வகைச் சொற்களுள், ''திசைச் சொல்லுள் ஏனைச் சொல்லும் உளவேனும் செய்யுட் குரித்தாய் வருவது பெயர்ச் சொல்லேயாம். வடசொல் லுள்ளும் பெயரல்லது செய்யுட்குரியவாகா. இவ்வா றாதல் சான்றோர் செய்யுள் நோக்கிக் கண்டு கொள்க'' என்னும் செய்தி சங்க நூற் பரப்பை முழு துறக்கண்டு கூறிய முடிவுடையதாம்.

ஞாபகம், அநுவாதம், யோகவிபாகம், நேயம், காரகம், தாது இன்னவற்றை ஆங்காங்குரைத்து விளக்கு கிறார். பதினைந்து இடங்களுக்கு மேல் சேனாவரையரின் வடமொழிப் புலமை அறியும் வண்ணம் உரை விளக்கம் அமைந்துள்ளது.

தொல்காப்பியர் வடநூலொடு மாறு கொள்ளாமல் நூலியற்றியவர் என்பதை முடிந்த முடிவாகக் கொண்டு உரை வரைந்தவர் சேனாவரையர் என்பது, ''வடநூலுள் பொருள் வேற்றுமையான் அல்லது உருபு வேற்றுமையான் ஒரு வேற்றுமையும் ஓதப்படாமையானும் ஈண்டும் எல்லா ஆசிரியரும் ஒரு வேற்றுமையாகவே ஓதினார் என்க. வடநூலொடு மாறு கொள்ளாமைக் கூறல் ஆசிரியர்க்கு மேற்கோளாயின் விளி வேற்றுமையை எழுவாய் வேற்றுமைக்கண் அடக்கற் பாலரானவர். அவ்வாறடக் கிலர் எனின், அற்றன்று; விளிவேற்றுமையை எழுவாய்

'வேற்றுமைக்கண் அடக்கல் ஆண்டு எல்லார்க்கும் ஒப்ப முடிந்த தன்று'' என்பதால் (74) புலப்படும்.

சேனாவரையரின் கல்வி யாழத்தையும் உரைச் செறிவையும் நூன்முழுவதும் கண்டு மகிழ்வார், அவர்தம் பண்புச் செறிவையும் ஓரிடத்தில் அறிய வாய்க்கின்றது. அது,

''வினைச் சொற் காலமுணர்த்துங்காற் சில நெறிப் பாடுடைய வென்பது விளக்கிய, 'நெறிப்படத் தோன்றி' என்றார். நெறிப்பாடாவது அவ்வீற்று மிசை நிற்கும் எழுத்து வேறுபாடு. அவை **முற்ற உணர்த்தலாகாவா யினும்,** அவ்வீறுணர்த்தும் வழிச் **சிறிய சொல்லுதும்''** என்பதாம் (201).

'உரையாசிரியர்க்கு அது கருத்தன்று' என்று கூறும் அளவில் நாம் அமைகின்ற நிலையும், 'போலியுரை' என்று கூறும் இடங்களிலெல்லாம் நாம் அடைகின்ற புண்பாடும், 'முற்ற உணர்த்தலாகாவாயினும், சிறிது சொல்லுதும்' என்பதைக் காணும்போது மாறி ஒரு மயக்க நிலைக்கு ஆட்படுகின்றோம். தாம் காணும் உண்மைப் பொருள் காட்டலில் சேனாவரையர்க்குள்ள தணியா வேட்கையே 'போலிக் காய்வை' உண்டாக்கிற்றுப் போலும் என அமை கின்றோம்!

## இ. பேராசிரியம்

தொல்காப்பியப் பின்னான்கு இயல்களுக்குப் **பேராசிரியர்** உரை கிடைத்துள்ளது. பேராசிரியர் என்பது சிறப்புப் பெயர் என்பது வெளிப்படை. அவர் இயற் பெயர் தெரிந்திலது.

**பேராசிரியர் பலர்:**

சிறப்புப் பெயர் இயற்பெயருக்கு முன்னர் வருதல் வேண்டும் என இலக்கணம் கண்டது தொல்காப்பியம்.

அதன்படி பேராசிரியர் இன்னவர் என்பதில் 'இன்னவர்' என்பது குறியாமல், சிறப்புப் பெயராலேயே உலகு விளங்கும் நிலைமை உண்டாயிற்று எனக் கொள்ளலாம்.

பாலாசிரியர், இளம்பாலாசிரியர், ஆசிரியர், கணக்காயனார் என்னும் சிறப்புப் பெயர்களை அடுத்துள்ள இயற்பெயர்கள் பல, சங்கச் சான்றோர் பெயர் வரிசையில் இடம் பெற்றிருப்பதை அறிவார், இதனைத் தெளிவார்.

பேராசிரியர் என்னும் பெயரால் அறியப் பெறுவார் தமிழ்ப் பரப்பில் பலருளர். ஒருவர், பேராசிரியரால் சுட்டப்படும் **ஆத்திரையன் பேராசிரியர்.** அவரை, ''வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும் என்னும் பொதுப் பாயிரம் செய்தான் ஆத்திரையன் பேராசிரியன்'' என்கிறார் (தொல். மர. 98) தொல். உரை கண்ட பேராசிரியர். இப்பாயிரத்தை முழுமையாகச் சிவஞான முனிவர் தொல்காப்பியப் பாயிர விருத்தியுள் காட்டியுள்ளார். இவ்வாத்திரையன் பேராசிரியரே பேராசிரியப் பெயருடையாருள் பழையர் எனலாம்.

**திருக்கோவையார்க்கு** உரை கண்ட பேராசிரியர் மற்றொருவர். அவர் தொல்காப்பிய உரை கண்ட பேராசிரியரின் வேறானவர் என்பது கோவையைப் பற்றி எழுதுமிடத்தும், திருக்கோவையாரைச் சுட்டாமையாலும், எடுத்துக் காட்டாக எங்கும் காட்டாமையாலும் விளங்கும்.

**மயேச்சுரர்** என்பாரும் பேராசிரியர் என்னும் பெயருடன் விளங்குகின்றார். யாப்பருங்கல விருத்தியாரால் பெரிதும் பாராட்டப்படுபவர் அவர். இவ்வாறே **நேமிதாரும்** பேராசிரியர் எனப்படுவார்.

**குறுந்தொகைக்கு** உரை கண்ட பேராசிரியர் ஒருவர் அறியப்படுகிறார். அவருரை கிடைத்திலது. கிடையாது

உரை கொண்டு ஆய்வு செய்து 'அவர் இவர்' எனல் தீர்வு ஆகாது.

பேராசியர் உரை முதற்கண், நச்சினார்க்கினியர் உரை என்றே தொல்காப்பியப் பதிப்பாளர் **சி. வை. தாமோதரனாரால்** குறிக்கப்பட்டது. நச்சினார்க்கினியர் எழுதிய அகத்திணை, புறத்திணை, களவு, கற்பு, பொருள் இயல்களுடன் இணைத்துப் பதிப்பிக்கவும் பட்டது. அவ்வுரையுள் மெய்ப்பாடு, உவமை, செய்யுள், மரபு ஆகிய நான்கு இயல்களும் பேராசிரியருரை என்பதைச் செந்தமிழ் ஆசிரியர் **இரா. இராகவர்** ஆய்ந்து **செந்தமிழ்** இதழில் வெளிப்படுத்தினார். நச்சினார்க்கினியரின் செய்யுளியலுரைப் பதிப்பிலும் விளக்கினார். இவ்வாறு உரையாசிரியர் பெயரை அறிதலிலும் சிக்கலுண்டாயிற்று.

**பேராசிரியர் உரை:**

பேராசிரியர் பொருளதிகாரம் முழுமைக்கும் உரை கண்டவர் என்பது புலப்படுகின்றது. மெய்ப்பாட்டியல் 18 ஆம் நூற்பா உரையில் **'களவியலுட் கூறினாம்'** என்கிறார். அடுத்த நூற்பா உரையிலும், செய்யுளியல் முதல் நூற்பா உரையிலும் முறையே **'அகத்திணையியலுட் கூறினாம்'** என்றும், 'அகத்திணையியலுட் கூறிவந்தாம்', என்றும் கூறுகிறார். இவ்வாறே **கற்பியல், புறத்திணையியல்** ஆகியவற்றைச் சுட்டிய இடங்களும் உள. இவற்றால் பொருளதிகாரம் முழுமைக்கும் இவர் உரை கண்டார் என்பதை அறிந்து கொள்ள வாய்க்கின்றது.

பேராசிரியர் வரைந்த முதலைந்து இயல்களின் உரையும் கிடையாமல் போகவே, கிடைத்த உரைப் பகுதியின் முகப்பில் உரை கண்டவர் பெயர் இல்லாது போய்விடுதல் இயல்பு. ஆனால், விழிப்புடைய சிலர் ஒவ்வோர் இயல் முகப்பிலும் 'இன்னவர் உரை' என்று வரைவதுண்டு. அவ்வகையில் மெய்ப்பாட்டியல் முகப்

பேட்டில் 'பேராசிரியர் உரை' என்னும் குறிப்பு இருந்தமை நல்வாய்ப்பாக அறிஞர் இரா. இராகவர்க்கு வாய்த்தமை பேரறிய வைத்தது. மற்றொரு குறிப்பும் அவர்க்குத் துணையாயிற்று.

மெய்ப்பாட்டியல் முதலாய நான்கு இயல்களின் தொடக்கத்திலும், **''இவ்வோத்து என்ன பெயர்த்தோ? எனின்?''** என்று உள்ளமை நச்சினார்க்கினியர் உரையிலிருந்து வேறுபடுத்திக் காட்டுதலைக் கண்டு கொண்டார். நச்சினார்க்கினியர் உரை இவ்வாறு இயலாமை அவருரையால் தெளிவாதலைச் சுட்டிக் காட்டி நிறுவினார்.

**காலம்:**

பேராசிரியர் இளம்பூரணர், இறையனார் களவிய லுரைகாரர், யாப்பருங்கல விருத்தியார், தண்டி யலங்காரர் ஆயோர்க்குப் பிற்பட்டவர் என்பதற்கு நூற்சான்றுகள் பலவுள்ளன (மெய்ப். 25; உவம். 37.). நச்சினார்க்கினியர் இவரைச் சுட்டிக் காட்டி வரைத லானும், பரிமேலழகர் பேராசிரியர் உரையை மறுத்து எழுதுதலானும் (திருக்.632) அவர்கட்கு இவர் காலத்தால் முந்தியவர் என்பது தெளிவாம். ஆகலின் **பதின்மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியில்** வாழ்ந்தவர் பேராசிரியர் என்க.

**சமயம்:**

பேராசிரியர் கொண்டிருந்த சமயம் இன்னதென வெளிப்பட அறிய வாய்ப்பில்லை; எனினும், இவர் சிவ வழிபாட்டினர் என்பது அறிய வாய்க்கின்றது. அச் சிவ வழிபாடும் நெகிழ்வுடையதாய் அமைந்துள்ள நிலைமையும் புரிகின்றது.

''வாழ்த்தியல் வகையே'' என்னும் செய்யுளியல் நூற்பாவில் (109) வாழ்த்தப்படும் பொருளாவன,

கடவுளும் முனிவரும் பசுவும் பார்ப்பாரும் அரசரும் மழையும் நாடும் என்பன; அவற்றுட் கடவுளை வாழ்த்தும் செய்யுள் கடவுள் வாழ்த்தெனப்படும்'' என்று கூறி நற்றிணையிலும் அகநானூற்றிலும் அமைந்துள்ள கடவுள் வாழ்த்துப் பாடல்களை எடுத்துக் காட்டுகிறார். இவற்றுள் முன்னது திருமாலைப் பற்றியது; பின்னது சிவனைப் பற்றியது.

அடுத்துவரும் ''வழிபடு தெய்வம்'' என்னும் புறநிலை வாழ்த்து நூற்பாவுரையில் காட்டிய ''இமையா முக்கண்'', ''திங்கள் இளங்கதிர்'' என்பன சிவனைப் பற்றியவை. இவ்விரண்டும் இவர் இயற்றியவை என்று அறியத் தக்கபாடல்கள். மேலும், கொச்சக ஒரு போகில் (செய். 149) இவர் காட்டும் எடுத்துக் காட்டுகள் **பெரும்பாலும்** இவர் பாடியனவே என்று அறியக் கிடக்கின்றன. அவற்றுள் **பலவும்** சிவபெருமான் பற்றியவை. திருமால், மூத்த பிள்ளையார், இளைய பிள்ளையார் பற்றியும் பாடியுள்ளார். இதே நூற்பாவுரையில் இளம்பூரணர் கலித்தொகைப் பாக்களையே எடுத்தாண்டமைகிறார் என்பது ஒப்பிட்டுக் காணற்குரியது.

கடவுளை வாழ்த்துதல், முனிவரை வாழ்த்துதல், ஆவை வாழ்த்துதல், பார்ப்பாரை வாழ்த்துதல், அரசரை வாழ்த்துதல், மழையை வாழ்த்துதல், நாட்டை வாழ்த்துதல் என்பன பழந்தமிழர் வழிவழிக் கொண்டொழுகிய வழிபாட்டியல்பினவே என்பதைச் சங்கச் சான்றோர் நூல்கள், திருக்குறள், சிலப்பதிகாரம் ஆகியவற்றின் வழியே அறிந்து கொள்ளலாம். 'பார்ப்பார் வழிபாடும்' அத்தகைத்தோ எனின், ''பார்ப்பான் என்பான் நன்றும் தீதும் ஆராய்ந்து உறுதி கூறுவான்'' என்னும் பேராசிரியர் உரையே தெளிவிக்கும் (செய். 189). 'அறிவன் தேயம்' (புறத். 16) என்பதில் வரும் 'அறிவன்' என்பதற்குக் 'கணியன்' என உரையாசிரியர் வரைந்ததையும் அறிந்து கொள்க. ஆகலின் அறிவன் வழிபாடு

அஃது என்றும், பார்ப்பான் என்னும் சொல் தூய செந்தமிழ்ச் சொல்லாதலையும், அவ்வாறே 'அந்தணன்' என்னும் சொல் இருத்தலையும் எண்ணின் இவை தமிழ் நெறிய வழிபாடுகளே என்பது விளங்கும். விளங்கவே பேராசிரியர் தமிழ் நெறி வழிபாட்டாளர் என்பது உறுதியாம். ஆரியர் கூறும் தமிழை நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டாக இவர் கூறுதலால் அவரின் பார்ப்பார் வேறாவர் என்பது தெளிவாம்.

மேலும் ''வினையின் நீங்கி'' என்னும் நூற்பாவுரையில் (மர. 94), ''**பெருமானடிகள்** களவியல் செய்தாங்குச் செய்யினும் பிற்காலத்தானும் முதனூலாவ தென்பது'' என்று இவர் வரைவதும், 'சேவற் பெயர்க்கொடை' என்னும் நூற்பா (மர. 48)உரையில், ''மாயிருந்தூவி மயில் என்றதனால் அவை தோகையுடையனவாகிப் பெண்பால் போலும் சாயல ஆகலான் ஆண்பாற்றன்மை இலவென்பது கொள்க; எனவே **செவ்வேள்** ஊர்ந்த மயிற்காயின் அதுவும் நேரவும் படும் என்பது'' என்று வரைவதும் கருதத் தக்கன. இவை கட்டாயமாக நூற்பாப்பொருள் கூறும் வகையிலோ, அந்நூற்பாத் தொடரை விளக்கும் வகையிலோ அமைந்தவை அல்ல; உரையாசிரியர் தம் பற்றுமைச் சான்றாக வெளிப்பட்டு நிற்பனவாம். 'இறையனார்' என்பது நூல்யாத்தவர் பெயராகக் குறிக்கப்பட்டிருக்கவும் 'பெருமானடிகள்' என்றது உணர்வு வெளிப்பாடேயாம். இவையும் பேராசிரியர் சமய உட்கிடைப் பொருளா வனவாம்.

**நூலாசிரியரை மதித்தல்:**

ஆசிரியர் தொல்காப்பியர் குறித்தும் அவர்தம் நூல்வழி குறித்தும் சில குறிப்புகளைப் பேராசிரியர் சுட்டுகிறார்.

'எல்லா ஆசிரியருஞ் செய்த வழிநூற்கு இது (தொல்காப்பியம்) முன்னூலாதலின் இவரோடு (தொல்காப்பியரோடு) மாறுபடுதல் மரபன்றென மறுக்க. இசை

நூலுள்ளும் மாறுபடுதல் அஃது அவர்க்கும் மரபன்று என்பது'' என்னும் உரைப்பகுதி தொல்காப்பியர் ஆணை வழிநிற்கும் இவர்தம் செவ்வியைப் புலப்படுத்தும் (செய். 140). மேலும், ''நண்டிற்கு மூக்குண்டோ எனின், அஃது ஆசிரியன் கூறலான் உண்டென்பது பெற்றாம்'' என்னும் இவருரை (மர. 31) அவர்தம் ஆணையே ஆணையெனக் கொண்டு உரை எழுதியமை காட்டும்.

அகத்தியமே முதனூல் என்றும், அதன் வழிநூல் தொல்காப்பியமே என்றும் அதனை மறுத்துக் கூறுவது வேதவழிப்படாத இக்காலத்தார் கூற்று என்றும், இறந்த காலத்துப் பிற பாசாண்டிகளும் (வேத வழக்கொடு மாறுபட்ட சமயத்தார்) நான்கு வருணத்தொடு பட்ட சங்கச் சான்றோரும் அது கூறார் என்றும் கூறுகிறார். மேலும் இக்கூற்றுக்குச் சான்றானவற்றை விரித்து விளக்கும் பேராசிரியர், ''கடைச் சங்கத்தாருட் களவியற் பொருள் கண்ட கணக்காயனார் மகனார் நக்கீரர் இடைச் சங்கத்தார்க்கும் கடைச்சங்கத்தார்க்கும் நூலாயிற்றுத் தொல்காப்பியம் என்றார் ஆகலானும், பிற்காலத் தார்க்கு உரை யெழுதினோரும் அது கூறிக் கரிபோக்கி னார் (சான்றுரைத்தார்) ஆகலானும், அவர் புலவுத் துறந்த நோன்புடையராகலாற் பொய் கூறார் ஆகலானும் என்பது'' என்கிறார். பல்காப்பியம், பன்னிருபடலம், புறப்பொருள் வெண்பாமாலை முதலியவற்றுச் சான்று களையும் இவ்விடத்தே வரிசைப்படுத்திக் காட்டித் தம் கருத்தை நிறுவுகிறார் (மர. 94).

தொல்காப்பியம் முன்னூல் எனக் கூறும் பேராசிரியர், ''மற்றுப் பல்காப்பியம் முதலியனவோ எனின், அவை வழி நூலே; தொல்காப்பியத்தின்வழித் தோன்றின என்பது'' என்றுரைத்துப் பல்காப்பியம் காக்கைபாடினியம் இவை பற்றியெல்லாம் நிறுத்தி ஆய்ந்து கருத்துரைக்கிறார் (95). இத்தகைய அருமைப்பாடுகளையும், உரைநயங் களையும், தமிழ்நடை நலங்களையும் கண்ட பட்டறிவால்,

''பிறர்தம் உரை நெறிகளிலும் இவர்தம் உரைநெறி சாலச் சிறந்தது. இவர் தொல்காப்பியம் முழுமைக்கும் உரை வகுத்திருப்பரேல் அவ்வுரையே திருக்குறளுக்குப் பரிமேலழகர் உரைபோல் தலைமையெய்தியிருக்கும்'' என முனைவர் **வ. சுப. மாணிக்கனார்** பாராட்டுகிறார் (தொல் காப்பியத்திறன், பக். 23).

**செய்யுளியல் இடமாற்றம்:**

செய்யுளியல், பொருளதிகாரத்தின் எட்டாம் இயல். இறுதியியல் மரபியல். சிலர் செய்யுளியலை இறுதி யியலாகக் கொண்ட முறையும் பேராசிரியர் காலத்தில் இருந்தது என்பதை அவருரையால் அறிய வாய்க்கின்றது.

''இந் நூல் இலக்கணத்தினை இவ்வோத்தின் இறுதிக்கண் வைத்தான் வழக்கும் செய்யுளுமென்று விதந்து புகுந்த இரண்டிலக்கணமும் முடித்தல்லது அவற்றைக் கூறும் இலக்கணம் கூறலாகாமையின் என்பது. இக்கருத் தறியாதார் **செய்யுளியலினை ஒன்பதாம் ஓத்தென்ப''** என்கிறார். (மர. 93). இக்குறிப்பால், செய்யுளியல் ஒன்பதாம் இயலாக இருந்ததென்றும், அதனொடு நூல், நூல்வகை, உரை பற்றிய நூற்பாக்கள் அதன் நிறைவில் இருந்தன என்றும் எண்ணுதற்கு இடனுள்ளது. இதனை மேலாய்வு செய்தல் வேண்டத் தக்கதாம்.

**முறை வைப்பு:**

பேராசிரியர் ஓரியலுக்கும் அடுத்துவரும் இயலுக்கும் உள்ள தொடர்பை விளக்குகிறார். ஒரு நூற்பாவுக்கும் அடுத்துவரும் நூற்பாவுக்கும் உள்ள தொடர்பைச் சுட்டு கிறார். ஒரே நூற்பாவில் வரும் செய்திகளின் முறை வைப்பையும் உன்னிப்பாக எண்ணி எழுதுகிறார்.

'மேலோத்தினோடு இவ்வோத்தினிடை இயைபு என்னையோ எனின்' என்று **மெய்ப்பாட்டியல்** முதல் நூற்பாவில் விளக்குகிறார்.

'நகையே அழுகை' எனத் தொடங்கும் மெய்ப் பாட்டியல் நூற்பா விளக்கத்தில் மேல் வரும் எட்டு வகை மெய்ப்பாடுகளும் முறைமுறையே வைக்கப்படுதலின் அமைதியை விரித்துரைக்கிறார். ஒரு நூற்பாவொடு தொடரும் மஃறொரு நூற்பாவின் தொடர்பு காட்டு வதாக இவை அமைகின்றன.

''பாராட் டெடுத்தல்'' என்னும் நூற்பாவில் (மெய்ப். 16), ''புணர்ச்சிப் பின்னரல்லது பாராட்டுள்ளம் பிறவாமையானும், அதன் பின்னரல்லது பிறரோடு கூற்று நிகழாமையானும், அக் கூற்றுக் கேட்டல்லது தமரான் ஈரமில் கூற்றம் கோடலின்மையானும், அவையெல்லாம் முடிந்தவழித் தலைவன் மேற்சென்ற உள்ளத்தாற் கொடுப்பவை கோடற்குறிப்பினளாம் ஆகலானும் அம் முறையான் வைத்தான் என்பது'' என்கிறார். இவ்வாறு முறைவைப்புக் கூறுதலால், நூற்சிறப்பை நன்கு வெளிப் படுத்துகிறார் பேராசிரியர்.

**வரையறை:**

ஒன்றைப் பற்றிக் கூறுங்கால் வரையறைப்படுத்திக் கூறும் நெறியை மேற்கொள்கிறார் பேராசிரியர்.

அச்சச் சுவையைக் கூறும் பேராசிரியர், ''தன்கட் டோன்றலும் பிறன்கட்டோன்றலும் என்னும் தடுமாற்ற மின்றிப் பிறிது பொருள் பற்றியே வரும்'' என்பதும் (மெய்ப். 7), சமனிலை என்பது, ''உலகியல் நீங்கினார் பெற்றியாகலின் ஈண்டு உலகியல் வழக்கினுட் சொல்லிய திலன்'' என்பதும் போல்வன வரையறைச் சான்றுகள்.

**வகைப் படுத்துதல்:**

வகைப்படுத்திக் கூறுதலும் பேராசிரியர் மேற்கொண்ட நெறிகளுள் ஒன்று. ''நகையென்பது சிரிப்பு; அது

முறுவலித்து நகுதலும், அளவே சிரித்தலும், பெருகச் சிரித்தலுமென மூன்றென்ப'' என்றும் (மெய்ப். 3), ''முன்னம் என்பது உயர்ந்தோரும் இழிந்தோரும் ஒத்தோரும் தத்தம் வகையான் ஒப்பச் சொல்லுதற்குக் கருத்துப்படச் செய்தல்'' என்றும் (செய். 1) வரும் இன்னவை வகைப்படுத்திக் கூறற் சான்றுகள்.

**நூற்பா அமைதி காட்டல்:**

ஒரு நூற்பாவின் யாப்புரவை மற்றொரு நூற்பாவின் யாப்புரவுடன் இயைத்துக் கூறுதலையும் பேராசிரியர் மேற் கொள்கிறார்.

''தெய்வமஞ்சல்'' என்னும் நூற்பாவில் (மெய்ப். 24) ''பதினொன்றனை எண்ணிச் சிறந்த பத்து இவை என்ற தென்னை எனின், அதனை, 'ஒன்பதும் குழவியோ டிளமைப் பெயரே' என்ற மரபியற் சூத்திரம்போல மொழி மாற்றியுரைக்கப்படும்'' என்கிறார்.

**உரை நூற்பா:**

தாமே உரை நூற்பா வகுத்துக் கூறுவதுபோல் கூறும் இடங்களும் பேராசிரியர் உரையில் உள. அவற்றுள் ஒன்று: இருவகை நிலனென்பன, 'உய்ப்போன் செய்தது காண்போர்க் கெய்துதல்' அன்றோ எனின், என்று அமைத்துக் கொண்டு, அதனை விளக்குதலால் அவர் உரை நூற்பா யாத்து விளக்குதல் அறியப் பெறும் (மெய்ப். 1). இவ்வாறே 'நிரனிறுத் தமைத்தல்' என்னும் நூற்பா உரையில் (உவம. 37) 'அகனமர் கேள்வன்' என்றோர் நூற்பா வகுத்து 'அதன்மேல்' என்றோர் சூத்திரஞ் செய்யின் அவையும் அலங்காரம் எனப்படும் என்பது'' என்பார். அதுவும் அது.

**பாடம் கூறுதல்:**

'கூற்று வகை' என்பதற்குக் 'கூற்றிவை' எனப் பாட முண்மையைச் சுட்டும் பேராசிரியர், ''இவை என்பது பாட

மாயின் எண்ணிய மூன்றனையும் தொகுத்தவாறே பிறிதில்லை'' என்கிறார் (செய். 1). இவ்வாறு பாடம் கூறலும் பேராசிரியர் உரைமுறைகளுள் ஒன்றாம்.

**வேற்றுமை கூறுதல்:**

வேற்றுமை கூறுதலையும் ஒரு நெறியாகப் பேராசிரியர் கொண்டுள்ளார். அவற்றுள் ஒன்று: ''குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னை எனின், பிறப்பென்பது குடிப்பிறத்தல்; அதற்குத்தக்க ஒழுக்கம் குடிமை எனப் படும்'' என்கிறார் (மெய்ப். 25).

**மறுப்புரை:**

மறுப்புக் கூறுதல் பேராசிரியர் உரையில் தனிச் சிறப்புடையது. மிக விரிவாக ஆய்ந்து படிப்படியாக விலக்கியும் விளக்கியும் மறுத்து ஆசிரியர் கோளை நிலைநாட்டல் அவர்தம் முறைமை.

**தளை** என்பதோர் உறுப்புக் கொள்வாரை மறுத்துரைத்தல் அதற்கொரு சான்றாம் (செய். 1).

**பிறருரை:**

தாம் உரைக்கும் மரபுவழி உரைக்கு வேறுவகையாலும் உரை கூறுவாரை 'இன்னொரு சாரார் இவ்வாறுரைப்ப' என்பார் பேராசிரியர் (செய். 11). ஆசிரியர் கூறும் இவ்விலக்கணம் பிறரால் இப்பெயரால் கூறப்படும் என்பதையும் சுட்டுதல் பேராசிரியர் உரைமுறைகளுள் ஒன்று. வடநூலாசிரியர் வழிமுறை இன்னதெனக் காட்டலும் உண்டு.

அசையும் சீரும் இசையொடு சேர்த்துதல் என்பதை **வகையுளி** என்று பிறர் கூறுவதைச் சுட்டுதல் முன்னதற்கு எடுத்துக்காட்டாகும் (செய். 11). குரு, இலகு என்பவற்றைச் சுட்டிப் பிரத்தாரம் முதலாக எடுத்துக்காட்டுவது பின்னதற்குச் சான்று (செய். 51).

**சொற்பொருள் விளக்கம்:**

சொற்பொருள் விளக்கம் தருதலில் பேராசிரியர் தனிச் சிறப்புடையவர். இவர் தரும் சொல் விளக்கத் தூண்டல் வழியாகவே ''உரையாசிரியர்கள் கண்ட சொற்பொருள் நுண்மை விளக்கம்'' என்றொரு நூல் என்னால் தொகுக்கப்பட்டது. அதன் முன்னுரையில் ''மெய்ப்பாடு என்னும் சொல் முதலாக அப்பேராசிரியர் தரும் சொற் பொருள் விளக்கம் 'நினைந்து நினைந்து உணர்ந்து உணர்ந்து நெகிழ்ந்து நெகிழ்ந்து' தமிழ்ச் சொற்களின் தனி யுயர் மாண்பில் தோய்ந்து கிடக்கச் செய்தது. அன்றே (ஆண்டு 1951) சொற்பொருள் விளக்கவித்து என் நெஞ்சத்தில் ஊன்றப் பெற்றது'' என்பது அது. அப் பேராசிரியர் உரையால் நாம் முதற்கண் பெறவாய்த்தது **'மெய்ப்பாடு'** என்னும் சொல்லின் விளக்கம்.

''மெய்ப்பாடென்பது பொருட்பாடு; அஃதாவது உலகத்தார் உள்ள நிகழ்ச்சி ஆண்டு நிகழ்ந்தவாறே புறத் தார்க்குப் புலப்படுவதோ ராற்றான் வெளிப்படுதல்'' என்பது (மெய்ப். 1).

**'' கல்வி தறுகண் இசைமை கொடையெனச்**
**சொல்லப் பட்ட பெருமிதம் நான்கே''**

என்னும் நூற்பாவில் (மெய்ப். 9),

''வீரத்தைப் பெருமிதம் என்றெண்ணினான். என்னை? எல்லாரோடும் ஒப்ப நில்லாது பேரெல்லையாக நிற்றல் பெருமிதம் எனப்படும் என்றற்கென்பது.

கல்வி என்பது, தவமுதலாகிய விச்சை.
தறுகண் என்பது, அஞ்சுதக்கன கண்டவிடத்து அஞ்சாமை.

இசைமை என்பது, இன்பமும் பொருளும் இறப்பப் பயப்பினும் பழியொடு வருவன செய்யாமை.

கொடை என்பது, உயிரும் உடம்பும் உறுப்பும் முதலாகிய எல்லாப் பொருளும் கொடுத்தல்''

—இவ்வாறு பன்னூறு சொற்களுக்கு விளக்கம் வரைகிறார் பேராசிரியர்.

## பேராசிரியர் சால்பு

நூலாசிரியர் எண்ணத்தைத் திட்டமாகத் தெளிய முடியாத இடத்தில் தாம் பொருள் கொள்ளும் முறையால் அவர்க்குக் குறை நேர்ந்துவிடக் கூடாதே என்னும் அச்சத்தால், '**நாம் பகுத்து எண்ணிக் கொண்டாம்**' எனத் தம் மேல் அக்கருத்துடைமையை அள்ளிப் போட்டுக் கொள்ளுதல் பேராசிரியர், 'பேராசிரியரே' என்பதை மெய்ப்பிக்கும் சான்றாம்.

'பிறப்பே குடிமை' என்னும் நூற்பா, ஒன்பது பொருள்களை எண்ணுகின்றது. அதனைப் பத்தாக்கிக் கொள்கிறார் பேராசிரியர். அதனால், ''இங்ஙனம் ஓதிய வகையான் இவை ஒன்பதாகலிற் பத்தாமாறு என்னை எனின், காமவாயில் எனப்பட்ட இயற்கை யன்பு, வடிவு பற்றியல்லது தோன்றாமையானும் குணம் பற்றித் தோன்றுவன செயற்கையன்பு ஆகலானும் உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினான் ஆயினும், உருவு சிறப் புடைமையின் அதனை நாம் பகுத்து எண்ணிக் கொண்டாம் என்பது. என்னை?

> **' வன்கண் குடிகாத்தல் கற்றறிதல் ஆள்வினையோ**
> **டைந்துடன் மாண்ட தமைச்சு''**

என்புழி, 'கற்றறிதல்' என்பதனை இரண்டாக்கி ஐந்தென்பவாகலின்'' என்கிறார். (மெய்ப். 24).

## சிறப்புப் பெயர்கள்

பேராசிரியரின் பரந்த புலமை பெரிது. அதனை இவர் சுட்டும் நூற்பெயர்களும் சிறப்புப் பெயர்களும் காட்டும்.

அகத்தியர், அம்மானைப்பாடல், அவ்வையார். ஆனந்தவுவமை, இசைக்கூத்து, எழுகூற்றிருக்கை, ஏகபாதம், ஏழிற்கோவை, ஐயனாரிதனார், கட்டளைக் கலி, கடகண்டு, கடைச்சங்கத்தார், கலம்பகம், கலித்தொகை (நூற்றைம்பது கலி), களவியல், காக்கை பாடினியார், கானப்பேர், குறிஞ்சிப்பாட்டு, கைக்கிளைப் படலம், கொங்குவேளிர், கோவை, சக்கரம், சகரர், சங்கச்சான்றோர், சாய்க்காடு, சிற்றிசை, சிறுகாக்கை பாடினியார், சீத்தலைச்சாத்தனார், சுழிகுளம், தகடூர் யாத்திரை, நக்கீரர், நரிவெரூஉத்தலையார் நாடகச் செய்யுள், பட்டிமண்டபம், பதினெண் கீழ்க்கணக்கு, பரணி, பரிபாடல் (பரிபாடல் எழுபது), பாட்டும் தொகை யும், பாட்டுமடை, பாவைப்பாடல், பெருந்தேவனார் பாரதம், பெருமானடிகள் (இறையனார்) பேரிசை, பொய்கையார், மாலை, மிறைக்கவி, முத்தொள்ளாயிரம், மூவடி முப்பது, மோதிரப்பாட்டு, யாப்பதிகாரம், வஞ்சி, வசைக்கூத்து, வரி விளக்கத்தார் கூத்து என்பனவும் பிறவும் இவர் சுட்டிச் சொல்லும் சிறப்புப் பெயர்கள்.

## உலகியலறிவு

பேராசிரியர் கொண்டிருந்த உலகியலறிவு ஆங்காங்கு அறியக் கிடக்கின்றது. ஆரியர் கூறும் தமிழை நகைச் சுவைக்கு எடுத்துக்காட்டுகிறார்(மெய்ப். 1). சாதித் தருமம் போற்றுதலைக் குறிக்கிறார் (மெய்ப். 12). காடு கெழு செல்வி (காளி) வழிபாட்டைப் பல இடங்களில் கூறுகிறார் (மெய்ப். 12; செய். 149;). நான்கு வருணங்களைக் குறிக் கிறார் (மெய்ப்.25). தமிழில் மந்திரப்பாட்டு இருந்ததைச் சுட்டுகிறார் •(செய். 158; 178). ஆரியம் நன்று தமிழ் தீது' என்றவன் சாவவும், உயிர்த்தெழவும் பாடிய பாட்டுகளை யுரைத்து, இவை ''தெற்கண் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் சாவவும் பாடிய மந்திரம்'' என்று குறிப்பு வரைகிறார்

(செய். 178). சீட்டுக்கவி வரைதல் வழக்கை 'ஓலைப்பாயி (சு)ரம்' என்கிறார் (செய்.149). அவ்விடத்திலேயே களம்பாடு பொருநர் கட்டுரை, தச்சு வினைமாக்கள் சொற்றொடர் என்பவற்றையும் குறிப்பிடுகிறார். "ஓர் யானையும் குரீஇயும் தம்முள் நட்பாடியது", "சிறுகுரிஇ யுரை", "தந்திரவாக்கியம்" என்பவற்றையும் (செய்.173), யானை, கமுகு, நெருப்பு என்னும் பொருள் தரும் விடுகதைகளையும் (செய்.176), குறிப்பு மொழிக்கு 'யானை' என்பதையும் (செய்.179) இவர் எடுத்துக் காட்டுப் பாடல்களால் கூறுதல் அக்காலத்து மக்களிடை வழங்கிய வழக்கின் தொகுப்பு எனற்பாலன. புலவுத் துறந்த துறவோர் பொய் கூறார் என்று கூறுவதால் அக்காலத் துறவோர் சிறப்பும் (மர. 94), புதல்வர்க்குப் பிணி இல்வழியும் எவனாங்கொல் என்று நடுங்குதல் அன்பான் நடுங்குதலாம் என்னும் உளவியல் செய்தியும் (மெய்ப்.12) கூறும் பேராசிரியர் உலகியல் திறம்பெரிதெனு அறியலாம்.

## இலக்கிய வன்மை

'புகுமுகம் புரிதல்' முதலாக வரும் மெய்ப்பாடுகள் அனைத்துக்கும் முறையாய் அமைந்த எடுத்துக் காட்டுப் பாடல்கள் பேராசிரியர் இயற்றியன என்றே கொள்ள வாய்க்கின்றன; இவர்தம் இலக்கியப் படைப்புச் சீர்மையை விளக்குவனவாக அமைகின்றன. அன்றியும் இவர் சில இடங்களில் வரையும் உரையே பாவாக இயலுதல் காணக் கூடியனவாம்.

மெய்ப்பாட்டியல் பன்னிரண்டாம் நூற்பாவில்,

**" பார்ப்பா ராயிற்,**
**குந்தி மிதித்துக் குறுநடை கொண்டு**
**வந்து தோன்றலும்,**

**அரசராயின்,**
**எடுத்த கழுத்தொடும் அடுத்தமார்பொடும்**
**நடந்து சேறலும்,**

**இடைய ராயிற்,**
**கோற்கையும் கொடுமடி யுடையும்**
**விளித்த வீளையும் வெண்பல்லு மாகித்**
**தோன்றலும்''**

என்பதும்,

**'' அடக்கம் என்பது, ... ...**
**பணிந்த மொழியும் தணிந்த நடையும்**
**தானை மடக்கலும் வாய் புதைத்தலும் முதலாயின''**

**'' வரைதல் என்பது,**
**காப்பன காத்துக் கடிவன கடிந்தொழுகும்**
**ஒழுக்கம்''**

என்பதும் ஆகிய இவற்றைப் பார்த்த அளவான் எதுகை மோனைத் தொடை நலம் கெழும நடைபயிலுதல் தெளிவாம்.

## ஈ. நச்சினார்க்கினியம்

### தனிப்பெருஞ்சிறப்பு

தமிழெனும் பெருங்கடற் பரப்பில் ஒரு கலஞ்செலுத்தி உலாக் கொண்டு, உயர்மணித் தொகுதிகளையெல்லாம் தொகுத்துப் பின்னவர்க்குக் கருவூலமென வைத்துச் சென்ற உரையாசிரியர் ஒருவர் உண்டென்றால் அவர் நச்சினார்க்கினியரே! அவரை அடுத்து எண்ணத்தக்க ஒருவர் யாப்பருங்கல விருத்தி உரைகாரரே! எத்தனை நூல்களுக்கு உரை கண்டுள்ளார் நச்சினார்க்கினியர்! எத்தனை நூல்களை மேற்கோள் காட்டியுளார்! பிறப்பெல்லாம் முற்றாக உரை வரைதற்கெனவே பயன் படுத்திய பெருந்தகை நச்சினார்க்கினியரே.

### உரை கண்ட நூல்கள்

**'' பாரத்தொல் காப்பியமும் பத்துப்பாட் டுங்கலியும்**
**ஆரக் குறுந்தொகையுள் ஐஞ்ஞான்கும் — சாரத்**
**திருத்தகு மாமுனிசெய் சிந்தா மணியும்**
**விருத்திநச்சி னார்க்கினிய மே''**

என்னும் வெண்பாவுரைக்குமாறு தொல்காப்பியம், பத்துப்பாட்டு, கலித்தொகை, சிந்தாமணி ஆகியவற்றுக்கு நச்சினார்க்கினியர் வரைந்த உரை நமக்கு வாய்த்துள்ளது. குறுந்தொகைக்குப் பேராசிரியர் வரைந்த உரை அகப்படாமை போலவே நச்சினார்க்கினியர் வரைந்த 20பாடல்களின் உரையும் அகப்பட்டிலது. தொல் காப்பியம் முழுவதற்கும் உரைகண்டிருப்பினும் பொருளதி காரத்திலுள்ள மெய்ப்பாட்டியல், உவமையியல், மரபியல் ஆகிய மூன்றியல்களுக்கும் உரை கிடைத்திலது.

'பாரத்தொல் காப்பியம்' என்னும் வெண்பா நச்சி னார்க்கினியர் உரையை 'விருத்தி' என்று கூறியிருப்பினும் தொல்காப்பியத்தில் காண்டிகை உரை என்னும் குறிப்பே உள்ளது. பத்துப்பாட்டு கலித்தொகை ஆகியவற்றிலும் 'விருத்தி' என்னும் குறிப்பு இல்லை. ஆதலால் இவ் வெண்பாப் பாடியவர் விருத்தி என்று கருதினார் என்று கொள்ளலாம். நச்சினார்க்கினியர் கருத்து அஃதன்று என்றும் கொள்ளலாம்.

### பெயரும் குடிவழியும்

நச்சினார்க்கு (விரும்பினார்க்கு) இனியர் என்பது இறைவன் பெயர்களுள் ஒன்று என்பர்.

**"நச்சுவார்க் கினியர் போலும் நாகவீச் சரவ னாரே"**

என்பது அப்பரடிகள் தேவாரம் (4. 66 : 1). இதில் **பெயராக** வந்திலது. இறைவன் **இயலாகவே** வந்துளது என்பது எண்ணத்தக்கது. அப்பரடிகளுக்குக் காலத்தால் மிகப்பிற்பட்ட சிவஞானமுனிவரர், "நச்சினார்க்கினியாய் போற்றி" என்றதும் இயல்விளிப் பெயரேயாம். பெயரன்று என்பதறிக. இவற்றால் இவர் இயற்பெயர் வேறொன்றாக இருந்து இவர்தம் உரைச் சிறப்பறிந்த வர்கள் இப்பெயரை வழங்கியிருத்தல் வேண்டும். அதுவே இயற்பெயர்போல அமைந்து விட்டது எனலாம்.

'மதுரை ஆசிரியர் பாரத்துவாசி நச்சினார்க்கினியர்" என்று தொல்காப்பியம் பத்துப்பாட்டு ஆகியவற்றின் ஒவ்வொரு பகுதி நிறைவிலும் வருகின்றது. இக்குறிப்பை விளக்குவதுபோல்,

"வண்டிமிர் சோலை மதுரா புரிதனில்
எண்டிசை விளங்க வந்த ஆசான்
பயின்ற கேள்விப் பாரத்து வாசன்
நான்மறை துணிந்த நற்பொருள் ஆகிய
தூய ஞானம் நிறைந்த சிவச்சுடர்
தானே யாகிய தன்மை யாளன்
நவின்ற வாய்மை நச்சினார்க் கினியன்"

என இவரைப் பற்றிய பாயிரப் பகுதி கூறுகின்றது. இவற்றால் இவர் மதுரையார் என்பதும் 'பாரத்துவாச கோத்திரத்தார்' ஆகிய பிராமணர் என்பதும் புலப்படும். "'பாரத்துவாச கோத்திரத்தினர் வைணவர், சுமார்த்தர், மாத்துவர் என முப்பிரிவினர் என்றும் அவருள் இவர் சுமார்த்தர் என்றும் அத்வைதக் கொள்கையர்" என்றும் கூறுவர். (உரையாசிரியர்கள். பக். 141; நச்சினார்க்கினியர் பக். 6,7)

**சமயம்**

இவர் வேத வழிப்பட்ட நெறியினர் எனினும் 'சிவச்சுடர்' எனப் பாயிரம் சொல்லுதலாலும் நூலில் வரும் சில குறிப்புகளாலும் சிவனெறிப் பற்றாளர் என்று கொள்ளலாம். எனினும் இவர்தம் சிந்தாமணி உரையைப் பயின்றாரும், அச் சிந்தாமணி யுரையை அச் சமய நோக்குக்கு முரணா வகையில் உரை வரைய வேண்டும் என்பதற்காகவே அச்சமயம் புகுந்து அழுந்தக் கற்று அதன் முன்னே தாம் எழுதிய உரையை விடுத்துப் புத்துரை செய்தார் என்று கூறப்படும் செய்தி அறிந்தாரும் நச்சினார்க்கினியர் சமயச் சால்பைப் போற்றாமல் இரார்.

ஒரு நூலுரை செய்தற்காகத் தம் வழிவழிச் சமயந் துறந்து வேறொரு சமயத்துப் புகுந்தார் என்பதினும், அக்கொள்கைகளை அழுந்தக் கற்றார் என்பதே சிறக்கும். ஒருகால் அச்சமயத்தார்க்கன்றிப் பிற சமயத்தார்க்குக் கற்பித்தல் இல்லை என்னும் கடுநெறி ஒன்று இருந்திருக்கு மானால் அச் சமயத்திற்கே புகழ் வருவதாக இல்லை அதனை அச்சமயஞ் சார்ந்து பயின்று, பயின்று முடித்த பின்னர் அதனைத் துறந்து தம் சமயம் சார்ந்தார் நச்சினார்க்கினியர் எனின், இவர் சூழ்ச்சியாளர்; பயன் கருதிய இந்நாளைக் கட்சி மாறியர்போல் — சமய மாறியர் — என்ற பழியே இவர்க்கு எய்துவதாம். இவற்றின் இடையேயும் ஒரு பசுமையான செய்தி: ஒரு நூலுக்கு மரபு பிறழாமல் உரை வரைவதற்காக எவ்வளவு அக்கறை எடுத்துக் கொண்டார் என்பதே. இச்செயல் இந்நாளைக்கு மட்டுமன்று எதிர் நாளைக்கும் இனிய வழிகாட்டும் மாண்பினதாம்.

**காலம்**

நச்சினார்க்கினியர் உரை வழியால் இளம் பூரணர், சேனாவரையர், பேராசிரியர் ஆகிய தொல்காப்பிய உரையாசிரியர்களுக்கும், நன்னூல் பவணந்தியார், திருக்குறள் பரிமேலழகர், சிலப்பதிகார அடியார்க்கு நல்லார் ஆகியோர்களுக்கும் பிற்பட்டவர் இவர் என்ப தற்குச்சான்றுகள் உண்மையால் 14 ஆம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியினர் என்பது தெளிவாகும்.

**தமிழ்ம்மை**

''தத்தம் புதுநூல் வழிகளாற் புறநானூற்றிற்குத் துறை கூறினாரேனும் அகத்தியமும் தொல்காப்பியமுமே தொகைகளுக்கு நூலாகலின் அவர் சூத்திரப் பொருளாகத் துறை கூற வேண்டும் என்றுணர்க'' என்றும் (புறத். 35),

''இனித் தேவர்க்குரியவாக உழிஞையிற் றுறைகள் பலருங் கூறுவரால் எனின், அவை உலகியலாகிய அரசிய

லாய் எஞ்ஞான்றும் நிகழ்வின்றி ஒருகால் ஒருவர் வேண்டியவாறு செய்வன வாகலிற் **றமிழ் கூறு நல்லுல கத்தன அல்லவென** மறுக்க'' என்றும் (புறத். 12),

''அகரம் முதலாதல் ஆரியத்திற்கும் ஒக்குமேனும் ஈண்டுத் **தமிழெழுத்தே** கூறுகின்றா ரென்பது உணர்தற்கு னகர இறுவாய் என்றார்'' என்றும் (நூன். 1),

''தானே என்று பிரித்தார், இவை **தமிழ் மந்திரம்** என்றற்கும், மந்திரந்தான் பாட்டாகி அங்கதம் எனப் படுவன வுள, அவை நீக்குதற்கும் என்றுணர்க'' என்றும் (செய். 178) இன்னவாறு கூறுமிடங்களில் தமிழ் வரம்புக் குரிய நூல் தொல்காப்பியம் என்பதை உணர்ந்து கூறு கின்றார். அதனைப் போற்றுதல் கடப்பாட்டையும் வலியுறுத்துகிறார்.

**எதிரிடை**

**'பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப''** (கற். 4)

என்னும் நூற்பாவில், ''ஈண்டு 'என்ப' என்றது முதனூலா சிரியரை யன்று; வடநூலோரைக் கருதியது'' என்கிறார். இவ்வாறு எதிரிடைப் போக்கில் அல்லது வலிந்த நோக்கில் செல்வதால் தாம் சுட்டிய தமிழ் நெறியைத் தாமே சிதைப்பவராக உரை வரையத் துணிந்தார். அதனால், ''அங்கியங் கடவுள் அறிகரியாக மந்திர வகையாற் கற்பிக் கப்படுதலின் அத்தொழிலைக் கற்பென்றார்'' (கற். 1) என்றும் ''முற்காலத்து நான்கு வருணத்தார்க்கும் கரணம் ஒன்றாய் நிகழ்ந்தது'' (கற். 2) என்றும், மூன்று இரவின் முயக்கம் இன்றி ஆன்றோர்க்கு அமைந்த வகையாற் பள்ளி செய்து ஒழுகி; ஆன்றோராவார் மதியும் கந்தரு வரும் அங்கியும்'' என்றும் (கற். 5) கூறுவதும், அறுவகைப் பட்ட பார்ப்பனப் பக்கம் என்பதன் (புறத். 20) உரை விளக்கங்களும், ''வேத முடிபு'' (அகத். 5), ''வேத நெறி அன்மை'' (அகத். 11), ''வேத நூலுள் இழைத்த பொருண்

முடிபு'' (அகத். 28), ''வேதத்தையே'' (அகத். 31), ''வேத விதி'' (புறத். 2), ''வேத முடிபு'' (கள. 8) என நெடுகலும் கூறிச் செல்லுதலும் அவர் எடுத்துக் கொண்ட நூலின் தடத்தை மாற்றி எங்கோ இட்டுச் செல்லுதல் தெளிவாகின்றது. கந்தருவர்க்கும் களவுக்கும் உள்ள வேறுபாட்டை, ''கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும். ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது என்றற்குத் துறையமை என்றார்'' என்று பிறர்க்கு இல்லாத் தெளிவு காட்டும் திறத்தர் நச்சினார்க்கினியர் (கள. 1). என்பதை மறக்க முடியாது.

## அறிந்தே செய்யும் பிழை

காலம் உலகம் என்னும் சொற்களை வடசொற்களாகச் சேனாவரையர் கூற, ''காலம் உலகம் என்பன வடசொல் அன்று. ஆசிரியர் **வடசொற்களை எடுத்தோதி இலக்கணம் கூறாராகலின்**'' (சொல். 58) என்று ஆசிரியர் ஆணை கூறுபவர் நச்சினார்க்கினியர். இவர் ''அகர இகரம் ஐகார மாகும்'', ''அகர உகரம் ஔகார மாகும்'' என்னும் நூற்பாக்களின் உரைகளில் ''அகரமும் இகரமும் கூட்டிச் சொல்ல ஐகாரம்போல இசைக்கும்; அது கொள்ளற்க''; ''அகரமும் உகரமும் கூட்டிச் சொல்ல ஔகாரம் போல இசைக்கும்; அது கொள்ளற்க'' என்று எழுதுதல், நூலாசிரியர் கருத்துக்கு மாறு கொளல் தெளிவாகின்றது. மேலும், ''ஆகும் என்றதனான் இஃதிலக்கணம் அன்றாயிற்று'' என்றும் கூறுகிறார். இஃது இவர் அறியாமையால் செய்வதன்று என்பது விளங்குகின்றது. சில இடங்களில் **வலிந்து** — சூத்திரங்களை **நலிந்து** பொருள் கூறும் வழக்கினை இவர் மேற்கொண்டவர் என்பதை **இவரும் உணர்ந்து கொண்டே செய்தார்** என்பது விளங்குகின்றது.

''அளபிறந் துயிர்த்தலும்'' எனவரும் நூன்மரபு நூற்பா (33) விளக்கத்தில்,

**'' சூத்திரத் துட்பொருள் அன்றியும் யாப்புற**
**இன்றி யமையா தியைபவை எல்லாம்**
**ஒன்ற உரைப்ப துரையெனப் படுமே ''**

என்னும் மரபியற் சூத்திரத்தானே (103) **இவ்வாறே சூத்திரங்களை நலிந்து பொருளுரைப்பன வெல்லாம் கொள்க''** என எழுதுதல் இவர் உட்கோளைத் தெளிவாக்கும்.

''வரகு, கொற்றன் ஈரெழுத்தொரு மொழி; அகத்தியனார் ஐயெழுத்தொரு மொழி; திருச்சிற்றம்பலம் ஆறெழுத்தொரு மொழி; பெரும்பற்றப் புலியூர் ஏழெழுத்தொரு மொழி'' என்று அவர் எழுத்தெண்ணிக் காட்டுதல் (குற்றியலுகரம், மெய்களை நீக்கி எண்ணிக் காட்டுதல்) செய்யுளியற் கோட்பாட்டை உரைநடைக் கோட்பாடாக்கிக் காட்டும் முறையல்லா முறையாகி விடுகின்றது.

கரணம் வடநூல் பற்றியது எனப் பல்கால் கூறும் நச்சினார்க்கினியர் காட்டும் மேற்கோள்களோ அகம் 86, 136 ஆம் பாடல்களாம். அவற்றில் அங்கியங் கடவுள் அறிகரியாக மந்திர வகைக் கரணம் ஒன்றும் இல்லாமை எவர்க்கும் வெளிப்பட விளங்கியும்கூட, **''கரணங்கள் நிகழ்ந்தவாறும் தமர் கொடுத்தவாறும் காண்க''** என்று துணிந்து கூறுகிறார். இந்நிலை நூற்கருத்துக்கோ நூலாசிரியர்க்கோ பெருமை தருவது இல்லை என்பது பற்றிக் கவலை கொண்டார் இல்லை எனலாமா? தம் கொள்கையை நூலாசிரியர் தலையில் கட்டிவிடுதல் எனலாமா?

ழ, ள என்னும் இரண்டு எழுத்துகளும் பிறப்பு செய்கைகளில் ஒவ்வா என்பதை உணரும் நச்சினார்க்கினியர், ''ழகாரமும் ளகாரமும் ஒன்றானும் இயைபில வேனும் 'இடையெழுத் தென்ப யரல வழள (எழு. 21)

என்றாற் சந்தவின்பத்திற்கு இயைபுடைமை கருதிச் சேரவைத்தார் போலும்'' என ஆசிரியர் வைப்பு முறைக்குச் சான்று தேடிக் காட்டிச் சிறப்புச் செய்கின்றாரே! (நூன். 1)

'கண்ணிமை நொடியென' ஆசிரியர் வைப்பு முறை செய்ததை, ''நொடியிற் கண்ணிமை சிறப்புடைத்து, உள்ளத்தான் நினைத்து நிகழாமையின்'' என்று எவ்வளவு கூர்ப்புடன் உரைக்கிறார்! (நூன். 7).

''இவ்வாசிரியர் நூல் செய்கின்ற காலத்து வினைத் தொகைக் கண்ணும் பண்புத் தொகைக் கண்ணும் அன்றி ஒரு மொழிக் கண்ணே மயங்குவனவும் உளவாதலின், அவற்றைக் கண்டு இலக்கணங் கூறினார். அவை பின்னர் இறந்தன வென்று ஒழித்து உதாரணம் இல்லனவற்றிற்கு உதாரணங் காட்டாமல் போதலே நன்றென்று கூறலும் ஒன்று'' என்று எவ்வளவு சால்புடன் கூறுகிறார்! (நூன். 24).

'காரும் மாலையும் முல்லை' என்னும் ஆசிரியர் நூற்பா நடைக்கு, ''முல்லைப் பொருளாகிய மீட்சிக்கும் தலைவி இருத்தற்கும் உபகாரப்படுவது கார் காலமாம்; என்னை? வினைவயிற் பிரிந்து மீள்வோன் விரைபரித் தேரூர்ந்து பாசறையினின்று மாலைக் காலத்து ஊர்வயின் வருஉங்காலம் ஆவணியும் புரட்டாதியும் ஆகலின், அவை வெப்பமும் தட்பமும் மிகாது இடை நிகர்த்தவாகி ஏவல் செய்து வரும் இளையோர்க்கு நீரும் நிழலும் பயத்தலானும் ஆர்பதம் மிக்கு நீரும் நிழலும் பெறுதலின் களி சிறந்து மாவும் புள்ளும் துணையோ டின்புற்று விளையாடுவன கண்டு தலைவற்கும் தலைவிக்கும் காமக் குறிப்பு மிகுதலானும் என்பது. புல்லைமேய்ந்து கொல் லேற்றோடே புனிற்றாக் கன்றை நினைந்து மன்றிற் புகுதரவும் தீங்குழல் இசைப்பவும் பந்தர் முல்லை வந்து மணங் கஞற்றவும் வருகின்ற தலைவற்கும் இருந்த தலை

விக்கும் காமக் குறிப்புச் சிறத்தலின் அக்காலத்து மாலைப் பொழுதும் உரித்தாயிற்று'' என்று எதுகை மோனை இயற்கையழகு கொஞ்சும் உரைப்பாட்டு இலக்கிய நடையில் எழுதுகின்றார் நச்சினார்க்கினார் (அகத். 6). நூலாசிரியரோடு ஒப்ப ஒரு நூலாசிரியராயன்றோ திகழ் கின்றார்!

இவ்வாறாகவும், வலிந்தும் நலிந்தும் சில இடங்களில் இவர் கூறியுள்ள உரை ஆசிரியர் நூலுக்கும் தமிழர் நெறிக்கும் ஒவ்வாது இவர் கூறியுள்ள உரை நடுவுள்ளங் கொண்டு நாடுவாரையும், ''இது போன்ற உரைகளை யெல்லாம் தொல்காப்பியர் காண நேர்ந்தால் எத்துணை நொந்து போவார். இவற்றையெல்லாம் படித்துவிட்டு இத்துணை காலம் தமிழுள்ளம் மரக்கட்டையாகவே இருந்து வந்திருப்பதுதான் வியப்பாகும்'' என்றும் ''நச்சினார்க்கினியர் பிற சமயங்களை வெறுத்துப் பேசாத வராயினும் வேத வைதிகப் பற்று மிக்கவர். ஆனால் வேண்டாத இடங்களிலெல்லாம் 'வேதம் வேதம்' என்று கூறிக் கொண்டே இருப்பதால் அவரது வேதப் பற்றைக் கண்டு நாம் சலிப்படைகிறோம்'' என்றும், ''அவருடைய காலத்தில் தமிழைப் பொறுத்த மட்டில் அவர் ஒரு சர்வாதிகாரியைப் போலவே விளங்கியிருப்பார். இங்கிலாந்து நாட்டில் ஜான்ஸன் காலத்தில் ஜான்ஸன் ஆங்கில மொழியின் சர்வாதிகாரியைப் போல விளங்கி னார் என்று கேள்விப்பட்டிருக்கிறோம். இங்கு நாம் நச்சினார்க்கினியரை அப்படி நினைத்துக் கொள்ளலாம். பாட்டின் சொல்லமைப்பை அவர் எப்படிச் சிதைத் தாலும் பண்டிதர் பரம்பரை வழி வழியாக அவரைப் போற்றி வந்திருக்கின்றமையும் நினைக்கத் தக்கது'' என்றும் வருவன (நச்சினார்க்கினியர் பேரா. மு. அண்ணா மலை) தெளிந்து கூறிய தேர்ச்சி யுரைகளாம். ''உள்ளது சிதைப் போர் உளரெனப் படாஅர்'' என்பது முதுவோர் உரை! அவ்வுள்ளது சிதைப்பதை உணர வாய்த்திருந்தும்,

உணர்த்தக் கேட்டும் — கற்றும் — இருந்தும், இந்நூற்றாண்டின் இடைக்கால ஆய்வுக்கள மேலாண்மையரும் நச்சினார்க்கினியர் சிதைவுக்கு விளக்கங் கூறியே விழுப்பம் எய்தினர் என்னும்போது அக்காலச் சூழலில் நச்சினார்க்கினியர் சில இடங்களில் தடம் மாறி உரை வரைந்தது வியப்பும் இல்லை! பரியதோர் குறையும் இல்லை! நச்சினார்க்கினியர் புலமை, 'ஒருமைக்கண் தான் கற்ற கல்வி எழுமைக்கும் ஏமாப்புடைத்து' என்பதற்குச் சான்றாவது; எத்தனை உவமைகள்! எத்தனை எடுத்துக் காட்டுகள்! எத்தனை வரலாற்றுப் பின்னல்கள்! எத்தனை சிறப்புப் பெயர்கள்.

''ஆய்தம் என்ற ஓசைதான் அடுப்புக் கூட்டுப்போல மூன்று புள்ளி வடிவிற்றென்பது உணர்த்தற்கு 'ஆய்தம் என்ற முப்பாற் புள்ளியும்' என்றார். அதனை இக்காலத்தார் நடுவு வாங்கியிட்டெழுதுப'' (நூன். 2).

''கோட்டு நூறும் மஞ்சளும் கூடிய வழிப் பிறந்த செவ்வண்ணம் போல நெடிலுங் குறிலுங் கூடிய கூட்டத்துப் பிறந்த பின்னர்ப் பிளவுபடா ஓசையை அளபெடை என்று ஆசிரியர் வேண்டினார்'' (நூன். 6).

''அகரந் தனியே நிற்றலானும் பலமெய்க்கண் நின்று அவ்வம் மெய்கட்கு இசைந்த ஓசைகளைப் பயந்தே நிற்றலானும் வேறுபட்டதாகலின் ஒன்றேயாயும் பலவேயாயும் நிற்பதோர் தன்மையை யுடைத்தென்று கோடும். இறைவன் ஒன்றேயாய் நிற்கும் தன்மையும் பல்லுயிர்க்கும் தானேயாய் அவற்றின் அளவாய் நிற்கும் தன்மையும் போல'' (நூன்.8.)

''ஒன்றரை மாத்திரையும் இரண்டரை மாத்திரையும் உடையன (வாகிய உயிர் மெய்கள்) ஒரு மாத்திரையும் இரண்டு மாத்திரையும் ஆயவாறு என்னை எனின், நீர் தனித்து அளந்துழியும் நாழியாய், அரைநாழி யுப்பில் கலந்

துழியும் கூடி ஒன்றரை நாழியாய் மிகாதவாறு போல் வதோர் பொருட்பெற்றி'' (நூன். 10).

இவை நூன்மரபில் நச்சினார்க்கினியர் காட்டும் உவமைகள். நச்சினார்க்கினியர் உரையால் மட்டுமே அறியப்படும் நூல்கள் சில உள. அவற்றுள் சீரிய ஒன்று 'பெரும் பொருள் விளக்கம்' என்பது. அந்நூலைப் புறத் திரட்டு வழியால் பெயரறிந்து கொள்ளவும் ஒப்பிட்டுக் காணவும் வாய்க்கின்றது. புறத் திரட்டில் காணாத பாடல்கள் மிகப் பல புறத்திணை இயலில் இடம் பெற்றுத் தனி நூலாம் அளவிற்கு விரிவுடையனவாக உள்ளன. களவியல் கற்பியல்களிலும் புறத்திணையியலில் காணப் படும் பெரும் பொருள் விளக்க வெண்பாக்களை அன்னவை எடுத்துக்காட்டாக இலங்குகின்றன. அவற்றை நோக்க அகப்பொருள், புறப்பொருள் இரண்டும் கூடிய பொருளின் முழுப்பரப்பும் தழுவிய நூலாக அந்நூல் இருந் திருத்தல் கூடுமென அறிய வாய்க்கின்றது. தகடூர் யாத்திரை, ஆசிரிய மாலை என்பவற்றிலிருந்தும் அரிய பாடல்களைப் பரிசிலென வழங்குகின்றார்.

## வரலாற்றுச் செய்தி

புறத்திணையியலில் நச்சினார்க்கினியர் காட்டும் வரலாற்றுச் செய்திகள் மிகப் பலவாம்.

''ஒருவன் மேற்சென்றுழி ஒருவன் எதிர் செல்லாது தன் மதிற்புறத்து வருந்துணையும் இருப்பின் அஃது உழிஞையின் அடங்கும். அது சேரமான் செல்வுழித் தகடூரிடை அதியமான் இருந்ததாம்'' (புறத். 7).

அதியமானால் சிறப்பெய்திய பெரும்பாக்கனை மதியாது சேரமான் முனைப்படை நின்றானைக் கண்டு அரிசில்கிழார் பொன்முடியார் ஆகியோர் பாடிய தகடூர் யாத்திரைப் பாடல்களைக் குறிக்கிறார் (புறத். 8).

பெருங்கோழி நாய்கன் மகள் ஒருத்தி (நக்கண்ணையார்), ஒத்த அன்பினாற் காமுறாதவழியும் குணச்சிறப்பின்றித் தானே காமுற்றுக் கூறியதை காமப் பகுதி கடவுளும் வரையார் என்னும் நூற்பாவில் (புறத். 28) எடுத்துக் காட்டுகிறார்.

தமிழகத்துச் செய்தியாம் இவையன்றி அக்காலத்தில் தமிழில் வழங்கிய இராமாயண பாரதப் பழநூல்களில் இருந்து (அவை அகவற்பாவால் இயற்றப்பட்டவை) மேற் கோளும் செய்திக் குறிப்பும் காட்டுகிறார்.

கொள்ளார் தேஎங் குறித்த கொற்றத்திற்கு (புறத். 12) ''இராமன் இலங்கை கொள்வதன் முன் வீடணற்குக் கொடுத்த துறையும் அது'' என்கிறார்.

''செருவகத்து இறைவன் வீழ்ந்தெனச் சினைஇ, ஒருவன் மண்டிய நல்லிசை நிலை'' என்பதற்கு (17) ''குருகுல வேந்தனைக் குறங்கறுத்த ஞான்று இரவு ஊரெறிந்து பாஞ்சாலரையும் பஞ்சவர் மக்கள் ஐவரையும் கொன்று வென்றி கொண்ட அச்சுவத்தாமாவின் போர்த் தொழில் போல்வன'' என்கிறார்.

இவ்வாறு இராமாயண பாரதச் செய்திகளை எடுத்துக் காட்டுவதுடன் தொன்ம (புராண)ச் செய்திகளையும் சுட்டுகிறார்.

''இரணியனைப் போல வலியானும் வருத்தத்தானும் கூறுவித்துக் கோடல் வாகையன்றாயிற்று'' என்பது ஒன்று (புறத். 19).

'முழுமுதல் அரணம்' என்பதை விளக்கும் நச்சினார்க் கினியர் (புறத். 10), ''முழு அரணாவது மலையும் காடும் நீருமல்லாத அகநாட்டுட் செய்த அருமதில். அது வஞ்சனை பலவும் வாய்த்துத் தோட்டிமுள் முதலியன பதித்த காவற்காடு புறஞ்சூழ்ந்து அதனுள்ளே இடங்கர் முதலியன உள்ளுடைத்தாகிய கிடங்கு புறஞ்சூழ்ந்து

யவனர் இயற்றிய பல பொறிகளும் ஏனைய பொறிகளும் பதணமு மெய்ப்புழை ஞாயிலும் ஏனைய பிறவும் அமைந்து எழுவும் சீப்பும் முதலியவற்றால் வழுவின்றமைந்த வாயிற் கோபுரமும் பிறவெந்திரங்களும் பொருந்த இயற்றப் பட்டதாம்'' எனச் செறிவு மிகக் கூறுகிறார்.

இனி இதே நூற்பாவில், ''சிறப்புடை அரசியலாவன மடிந்த உள்ளத்தோனையும், மகப்பெறா தோனையும், மயிர் குலைந்தோனையும், அடிபிறக்கிட்டோனையும், பெண்பெயரோனையும், படை இழந்தோனையும், ஒத்த படை எடாதோனையும் பிறவும் இத்தன்மையுடை யோரையும் கொல்லாது விடுதலும் கூறிப் பொருதலும் முதலாயினவுமாம்'' என்பது சொல்ல வேண்டும் என்னும் ஆர்வத்துடிப்பால் இயைத்துக் கூறுகின்றார்.

## தெளிபொருள்

'குற்றியலிகரம்' உயிரா? ஒற்றா? இதனை இந் நாளிலும் ஒற்று என்பார் உளர். ''ஊர்ந்தெனவே குற்றிய லிகரமும் உயிரென்பது பெற்றாம். உயிர்க்கல்லது ஏறுதலின்மையின்'' என்கிறார் (மொழி. 1).

இராக் காக்கை, இராக்கூத்து எனவரின் இராவிடத் துக் காக்கை இராவிடத்துக் கூத்து எனப் பொருள் தரும் என்றும்,

இராஅக் காக்கை இராஅக் கூத்து எனவரின் இராத என்னும் எதிர்மறைப் பெயரெச்சப் பொருள் தரும் என்றும் விளக்குகிறார் (உயிர். 25). இவ்வாறு மயக்கம் அறுக்கும் இடங்கள் பலவாம்.

''இல்லொடு கிளப்பின் இயற்கையாகும்'' என்பதற்குக் 'கோவில்' என்று எடுத்துக்காட்டுக் கூறுகிறார் (உயிர். 91). அது 'கோயில்' என்றே இருந்திருக்கும். 'படியெடுத்தோர் பிழையோ' என எண்ண வேண்டியுளது. இளம்பூரணர்

மரபு நிலை மாற்றாமல் 'கோயில்' என்றே கொண்டார் என்பது அறியத்தக்கது. 'கோவில்' என்பது 19ஆம் நூற்றாண்டு உரைநடைக் காலத்து வந்த தவறான புது வழக்கு.

## வழக்குகள்

'புடோலங்காய்' என்பதைப் புள்ளிமயங்கியல் புறநடையில் (110) எடுத்துரைக்கிறார் நச்சினார்க்கினியர். 'புடலங்காய்' என்பது அவர் காலத்தில் அவ்வாறு வழங்கிற்றுப் போலும்!

''ஊ என்பது தசையை உணர்த்தி நின்ற வழக்கு ஆசிரியர் நூல் செய்த காலத்து வழக்கு. அன்றித் தேய வழக்கேனும் உணர்க'' என்கிறார் (உயிர். 67). இவ்வாறு காலவழக்கு இடவழக்கு ஆகியவற்றைச் சுட்டுதலையும் இவர் வழக்காகக் காணலாம்.

## மாட்டின் விளைவு

'மாட்டு' என்பதோர் இலக்கணத்தைத் தொல்காப்பியர் செய்யுளியலில் கூறுகின்றார். ஊசியின் காதில் ஒட்டகத்தை நுழைப்பார் போல அவ்விலக்கணம் கொண்டு நச்சினார்க்கினியர் மாட்டிச் செல்லும் தனிச் செலவில் அவர்க்கு ஒப்ப ஒருவர் இதுகாறும் இருந்தார் இலர். அம் மாட்டுரையே, முல்லைப்பாட்டு, பட்டினப்பாலை முதலியவற்றுக்கு மறைமலையடிகளாரைப் புத்துரை காண ஏவிற்று. நெடுநல்வாடை, முருகாற்றுப்படை ஆயவற்றுக்குக் கோதண்டபாணியாரை நயவுரை காணத் தூண்டிற்று! இவருரையில் அமைந்துள்ள சில நூற்பாக்களின் பொருட்போக்கே நாவலர் பாரதியாரைத் தொல்காப்பியப் புத்துரை காண அழுத்திற்று. இவையும் நச்சினார்க்கினியர் கொடையெனின் கொள்ளத்தக்கதாம்.

## உ. கல்லாடம்

தொல்காப்பியத்திற்கு உரைகண்டாருள் ஒருவர் கல்லாடனார். இவர் சொல்லதிகாரத்திற்கு உரை கண்டுள்ளார். அவ்வுரையும் இடையியல் பத்தாம் நூற்பா உரை தொட்ட அளவிலேயே கிட்டியுள்ளது. எஞ்சியவை கிட்டிற்றில்லை. இவர் ''ஒல்காப் புலமைத் தொல் காப்பியத்திற்கு உரையிடையிட்ட விரகர் கல்லாடர்'' என்று பாராட்டப்படுகிறார். கல்லாடம் என்பது பாண்டி நாட்டகத்ததோர் ஊர் என்பது மணிவாசகர் வாக்கால் அறிய வாய்க்கின்றது. ''கல்லாடத்தினில் கலந்தினிதருளி'' என்கிறது அது. அக் கல்லாடத்துப் பிறந்ததனாலோ, முந்தையோர் பெயர்வழி வந்தமையாலோ கல்லாடர் என்னும் பெயர் பெற்றார் எனலாம்.

### பெயர்

கல்லாடர் என்னும் பெயரால் அறியப் பெறுவார் நால்வருளர். அவருள், சங்க நூல்களால் அறியப்பெறும் கல்லாடர் ஒருவர். அவரே, யாப்பருங்கலவிருத்தியுடை யாரால் கபிலர் பரணர் கல்லாடர் மாமூலர் என எண்ணப் படும் வரிசையுடையவர். மற்றொருவர், கல்லாடம் எனப்படும் அகப்பொருள் நூல் அருளியவர். இவ்விரு வரினும் வேறொருவரே, தொல்காப்பிய உரையாளர் கல்லாடர். இனித் திருவள்ளுவமாலைக் கல்லாடரோ எனின், பெயர் சூட்டும் அளவில் ஒருவர் இட்டமைத்ததே அப்பெயர் என்க

### காலம்

இக் கல்லாடர் தொல்காப்பிய உரையாசிரியர்களுள் தெய்வச் சிலையார்க்கும் பழைய உரையாசிரியர்க்கும் முற் படவும், மற்றையோர்க்கெல்லாம் பிற்படவும் இருந்தவர் என்பது விளங்குகின்றது. ''பெண்மை அடுத்த மகனென்

கிளவி'' என்பதற்குச் சேனாவரையரைத் தழுவி உரை வரையும் இவர், ''நாணுவரை இறந்தாள் தன்மையளாகிப் புறத்துப் போய் விளையாடும் பெண்மகளைப் பெண்மகன் என்பது முற்காலத்து வழக்கம். அதனை இப்பொழுது மாறோக்கத்தார் வழங்குவர். மாறோக்கம் என்பது கொற்கை சூழ்ந்த நாடு'' என்கிறார் (167).

ஆனால், தெய்வச்சிலையாரோ ''விளையாடும் பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்பது **பண்டையோர் வழக்கு**'' என்கிறார். இதனால் தெய்வச்சிலையார் கல்லாடர்க்குப் பிற்பட்டவராக இருத்தல் வேண்டும் எனக் கொள்ளலாம்.

பிரயோக விவேக நூலார் ''மக்கட் சுட்டு என்பதனைக் கல்லாடனாரும் பின்மொழியாகுபெயராய் நின்ற இரு பெயரொட்டுப் பண்புத் தொகை என்பர்'' என்று கல்லாடர் பெயரைச் சுட்டிக் கூறுகிறார் (பிரயோக. 22 உரை). ஆதலால் அவர்க்கு முன்னரும் நச்சினார்க்கினியர்க்குப் பின்னருமாம் காலத்தில் அதாவது 15ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்தவர் எனக் கொள்ளலாம்.

## காடு

முன்னவர்கள் உரையையே வாங்கிக்கொண்டு எழுதும் இவர் நும்நாடுயாது என்னும் வினாவுக்குப் பாண்டிநாடு என்று விடை கூறுவது கொண்டு பாண்டிநாட்டவர் என உறுதி செய்ய முடியாது எனினும் கல்லாடம் பாண்டி நாட்டகத்ததோர் ஊர் என அறியப்படுதலாலும், மாறோகம் கொற்கைப்பகுதி ஆதலாலும், அதனைச்சுட்டி 'இப்பொழுது மாறோக்கத்தார் வழங்குவர்' என்று பாண்டிநாட்டு ஆற்றூர்ச் சேனாவரையர் வழங்குமாறே வழங்குதலாலும் இவர் பாண்டி நாட்டவர் ஆகலாம்.

**சமயம்**

ஆறாம் வேற்றுமை பற்றிய நூற்பாவில் வரும் (சொல். 81) நிலை என்பதற்குப் பிறரெல்லாம் சாத்தனது நிலை என்றும் அவரவரது நிலைமை என்றும் கூறினாராகவும், பெரிதும் முன்னையோர் உரையைத் தழுவியே உரை வரையும் இவர் இவ்விடத்தில், ''நிலை-**பெண்ணாகத்துப் பெருஞ்சங்கரனாரது நிலை.** இஃது ஒன்றிய தற்கிழமை'' என்று கூறுவது சிவநெறிச் சார்பினர் என்று கொள்ளக் கிடக்கிறது.

**சால்பு**

இவர் 'இரண்டு வகையாக இலக்கணம் கூறி, ''இரண்டனுள் நல்லது தெரிந்துரைக்க'' என்பதும் (210), ஒரு காரணத்தைக் கூறி, ''பிறிது காரணம் உண்டாயினும் அறிந்திலம்'' என்பதும் (222) ஐயமுற்ற இடங்களில் 'வாராது போலும்' எனப்போலும் வாய்பாட்டால் கூறுவதும் இவர்தம் சால்பினைச் சாற்றுவன.

**விருத்தியுரை**

எடுத்த பொருளை நன்கு விளக்கிக் கூறுதலில் இவர் பெரிதும் கருத்துச் செலுத்துகிறார். அதனால் இவ்வுரையை விருத்தியுரை எனக் கொண்டமை வெளிப்படுகின்றது.

''ஓசை எனினும், அரவம் எனினும், இசை எனினும், ஒலி எனினும் எழுத்தானாம் ஓசைக்கும் எழுத்தல் ஓசைக்கும் பொது. கிளவி எனினும் மாற்றம் எனினும் மொழி எனினும் இவையெல்லாம் எழுத்தொடு புணர்ந்து பொருள் அறிவுறுக்கும் ஓசைமேல் நிற்கும்'' என்றும் (1)

''சேரி என்பது பலகுடியும் சேர்ந்திருப்பது. தோட்டம் என்பது பலபொருளும் தொக்கு நின்ற இடம்'' என்றும் (49) கூறுகிறார். முன்னதில் ஒருபொருட் பன்மொழி

களைத் தொகுத்துரைப்பதும், பின்னதில் தோடு (தொகுதி) என்னும் வேர்ப்பொருள் உணர்ந்து கூறுவதும் அவர்தம் பொருள் விளக்கச் சிறப்பைப் புலப்படுத்தும். ''எல்லாச் சொல்லும்'' என்பதற்குத் தமிழ் இலக்கணம் கூறும் நூலாகலின் தமிழ்ச் சொல்லே சுட்டப்படுவது எனத் தெரியப் பெறுமாயினும் நன்கு விளங்குமாறு 'தமிழ்ச்சொல் எல்லாம்' என்று இவர் உரைப்பது (158) குறிப்பிடத்தக்கது.

**உரைநயம்**

முயற்கோடு ஆமை மயிர்க் கம்பலம் என்பவை இன்மைப் பொருள். இவற்றுடன் ''**அம்மிப்பித்தும் துன்னூசிக்குடரும்**'' என இவர் இயைத்துக் கொள்வது(34) சுவை மிக்கது. 'ஏமாளி கோமாளி' என்பவை இன்றும் வழக்கில் உள்ளவை. இவர் 'ஏமாள் கோமாள்' என்கிறார் (148). கன்று என்பது 'பூங்கன்று' என வருதலைச் சுட்டுகிறார் (55).

''கலம்-சாத்தனது கலம்; கலம் என்பதனை ஒற்றிக் கலத்தின் மேற் கொள்க. பிற கலத்தின்மேற் கொள்ளாமைக் காரணம் என்னை எனின் இஃதொரு பொருள் இருவர்க்குடைமையாக நிற்கும் வேறுபட்டதாகலின் என்க. இஃது உரையிற் கோடல்'' என்று இவர் தரும் விளக்கம் புதுவது.

''காடன், நாடன்'' என்பவற்றுக்குக் ''காடி, நாடி'' எனப் பெண்பால் கூறுவதும் (177) ''உழுது கிழுது'' (235) என்பதும் புதுமைய. நன்னூலார் 'இடைப்பிறவரல்' என்பதை இவர் 'இடைக் கிடப்பு' என்பதும் அது.

வினையெச்ச வாய்பாடுகளின் வைப்பு முறையைக் கூறும் இவர் ''செய்து என்பது முதலாகச் செய்தென என்பது ஈறாக அந்நான்கும் இறந்தகாலத்தவாகலான் முன்னே உடன் வைக்கப்பட்டன. அவற்றுள், செய்து

என்பது பெருவழக்கிற்று ஆகலின் அவற்றுள்ளும் முன் வைக்கப்பட்டது (230) என்பது முதலாகக் கூறுவதும் பிறிது பிறிது இடங்களில் இவ்வாறே விரித்துரைப்பதும் ஆசிரியர் வைப்புமுறைச் சிறப்பை வெளிப்படுத்துவனவாம்.

ஒரு சூத்திரப் பொருளை வேறொரு சூத்திரத்தால் பெற வாய்ப்பிருந்தும் ஆசிரியர் மீண்டும் கூறுதலைக் கூறியது கூறலாகக் குறை காணாமல், ''மாணாக்கனை நன்கு தெளிவித்தற் பொருட்டுக் கூறினார்'' என நிறை யாக்குகின்றார் (117).

சில இடங்களில் இவர் உரைக்கும் வேறுபாடுகள் சுவை யானவை. 'பொற்றொடி' என்பதை இரு பெயரொட் டுக்கு எடுத்துக்காட்டும் இவர் ''இஃது அன்மொழித் தொகையன்றோ எனின், படுத்தலோசை பட்டவழி அன்மொழித் தொகையாம்; எடுத்தலோசை பட்டவழி ஆகுபெயராகும்'' என்கிறார்.

காலங்குறித்த பல்லோர் மதங்களைத் திரட்டிக்கூறும் இவர், ''காலம் தன்னை மூன்று என்பாரும் தொழிலாவது பொருளினது புடைபெயர்ச்சியாகலின் அஃது ஒரு கணம் நிற்பதல்லது இரண்டு கணம் நில்லாமையின் நிகழ்ச்சி என்பதொன்று இல்லை; ஆதலின், இறப்பும் எதிர்வும் எனக்காலம் இரண்டே என்பாரும், நிகழ்காலம் என்ற ஒன்றுமே உண்டு என்பாரும் எனப்பல மதம் உண்டு என்பது அறிவிக்கப்பட்டது'' என்பது தம் உரையைக் கற்பார் பல்லோர் உரைகற்ற பயனை அடைய வேண்டும் என்னும் எண்ணத்துடன் எழுதினார் என்பது புலப்படு கின்றது.

## ஊ. தெய்வச்சிலையம்

தொல்காப்பியம் சொல்லதிகாரத்திற்கு உரை கண்டாருள் ஒருவர் தெய்வச் சிலையார். அவருரை சொல்லதிகாரம் முழுமைக்கும் கிடைத்துள்ளது.

## பெயர்

'தெய்வச் சிலையான்', 'தெய்வச் சிலைப் பெருமான்' என்பன கல்வெட்டுகளில் வரும் பெயர்கள். ''அரையன் தெய்வச் சிலையான் எடுத்த கையழகியான்'', ''இளையாழ்வார் தெய்வச் சிலைப் பெருமாள் ஆன விக்கிரம பாண்டிய காலிங்கராயர் என்பன அவை. அவற்றால் 'தெய்வச் சிலையார்' எனப்படும் பெயருடையார் பிறரும் இருந்தமை புலப்படும். கல்வெட்டுக் கூறும் தெய்வச் சிலையார் என்னும் பெயருடையாருள் முன்னவர், பாண்டி மண்டலத்துக் காகூர்க் கூற்றத்து வளமர் ஆன வேம்பு நல்லூரினர். பின்னைக் கல்வெட்டு நெல்லை மாவட்டத்து மன்னார் கோயிலில் உள்ளது. ஆதலால் இப் பெயருடைய இவ்வுரையாசிரியரும் பாண்டி நாட்டைச் சேர்ந்தவர் எனக் கொள்ள இடமுள்ளது.

## காலம்

இவர் இளம்பூரணர் சேனாவரையர் நச்சினார்க்கினியர் ஆகியவர்களைப் பெயர் சுட்டாமல் மறுத்தெழுதிச் செல்கிறார். நச்சினார்க்கினியர் சேனாவரையர் ஆகியோர்க்கு இவர் முற்பட்டவர் எனின் இவர் பெயரை அவர்கள் சுட்டியிருப்பர். அதனால், அவர்களுக்கு இவர் பிற்பட்டவர் என்பது தெளிவாகின்றது. மேலும் ''பெண்மையடுத்த மகனென் கிளவி'' (சொல். 160) என்பதற்கு பெண்மகன் என்று மாறோகத்தார் இக்காலத்தும் கூறுப என்று நிகழ்காலத்தால் சேனாவரையரும் கல்லாடனாரும் கூறினர். ஆனால் இவரோ ''விளையாடும் பருவத்துப் பெண்மகளைப் பெண்மகன் என்றல் பண்டையோர் வழக்கு'' என **இறந்த காலத்து** நிகழ்வாகக் கூறினார். அதனாலும் சேனாவரையர்க்கும் கல்லாடனார்க்கும் பின்னவர் என்பது விளங்கும். இவற்றாலும் முற்காட்டப்பட்ட கல்வெட்டுகள் பதின் மூன்றாம் நூற்றாண்டின் இறுதியும் பதினான்காம்

நூற்றாண்டின் தொடக்கமும் ஆகிய காலத்தன எனப் படுதலாலும் கல்லாடனார் காலம் நச்சினார்க்கினியர்க்கும் பிற்பட்டது ஆகலானும் இவர் 16 ஆம் நூற்றாண்டினர் ஆகலாம்.

**சமயம்**

''**மன்னாப் பொருளும் அன்ன இயற்றே**'' என்னும் நூற்பா விளக்கத்தில் (32) ''வேதாகமத் துணிவு ஒருவர்க்கு உணர்த்துமிடத்து, உலகும் உயிரும் பரமும் அனாதி; பதியும் பாசமும் அனாதி..எனவரும். உலகும் உயிரும் பரமும் பசுவும் பொருந்தும் பொருள் ஆனவாறும் பாசமும் பதியும் இவற்றோடு பொருந்தாத பொருள் ஆனவாறும் காண்க'' என்பதும், ''மந்திரப் பொருள் வயின் ஆஅகுநவும்'' என்பதற்கு (439),

**'' மண்ணைச் சுமந்தவன் தானும் வரதராசன் மகன்றானும்**
**எண்ணிய வரகாலி மூன்றும் இரண்டு மரமும் ஓர்யாறும்**
**திண்ணமறிய வல்லார்க்குச் சிவகதியைப் பெறலாமே''**

என்பதை எடுத்துக்காட்டி ''இதனுள் மண்ணைச் சுமந்தவன்—**ந**, வரதராசன் மகன்-**ம**, வரகாலி மூன்று—**சி**, இரண்டு மரம்—**வா**, ஓர்யாறு—**ய**, எனக்கூற '**நமச்சிவாய**' எனப் பொருளாயிற்று என்று குறிப்பதும் கொண்டு இவர் வைதிகம் சார்ந்த சைவ சமயத்தர் எனக் கருதலாம்.

**உரைநிலை**

இவர், 'கடாவிடை யுள்ளுறுத்து' முதல் நூற்பாவுக்கு உரை விரிக்கிறார். அதன் நிறைவில் ''இனி இச்சூத்திரத் திற்குப் பிறவாற்றானும் கடாவிடை யுள்ளுறுத்து உரைப் பிற் பெருகும்'' என அமைகிறார். எனினும் இவருரை காண்டிகை யுரையினும் **விரிவுரையாகவே** செல்கின்றது.

தமிழ்வழக் காற்றை இவர் '**தமிழ்நடை**' என்கிறார் (2, 243), காலம் உலகம் எனவரும் நூற்பாவில் வரும் (56) ''சொல்'' என்பதற்கு வேதம் எனப் பொருள் செய்கிறார்:

"'சொல் என்பது எழுத்தினான் இயன்று பொருள் உணர்வது. அச்சொல்லினான் இயன்ற மந்திரம், விடம் முதலாயின தீர்த்தலின் தெய்வம் ஆயிற்று. இந்நூல் செய்தான் **வைதிக முனிவன்** ஆதலின் சொல்லென்பது 'வேதம்' என்று கொள்ளப்படும்'' என்கிறார். இவர் தொல்காப்பியரை வைதிக முனிவன் என்று கொண்டதால் அக்கொள்கைக்கு ஏற்ப உரை செய்யத் துணிகிறார்.

**வடசொல்**

''எல்லா நாட்டிற்கும் பொதுவாயினும் வடநாட்டிற் பயில வழங்குதலின் வடசொல் ஆயிற்று. வடசொல் என்றதனால் தேயவழக்காகிய பாகதச் சொல்லாகி வந்தனவும் கொள்க.

வடமொழியாவன: வாரி, மணி, குங்குமம் என்னும் தொடக்கத்தன. வட்டம் நட்டம் பட்டினம் என்பன பாகதம்'' என்கிறார் (397).

ஒருவினை ஒடுச்சொல் என்னும் நூற்பா உரையில் (88), பிற உரையாசிரியர்களின் கருத்துக்கு மாறுபடும் இவர் ''இப்பொருள் பாணினியார்க்கும் ஒக்கும்'' எனத் தமக்குச் சார்பு காட்டுகிறார். ஒரு சார் ஆசிரியர் வேற்றுமை ஏழெனக் கொண்டதையும் குறிக்கிறார் (150).

**ஆசிரியர் சிறப்பு**

'''ஆஅய்' என யகர ஈறு விளி ஏற்றதால் எனின் அவ்வாறு வருவன வழக்குப் பயிற்சியின்மையின் எடுத்தோதிற்றிலர்'' என்று அமைதி காட்டும் இவர் அதிகாரப் புறநடையால் கொள்ள ஏவுகிறார் (150).

இடைச்சொல் உரிச்சொல் ஆகியவை பொருண்மை நிலையில் வரும் வகையை ஆசிரியர் விரித்துரையாமையை எண்ணும் இவர், ''பொருண்மை நிலை வழக்கினும் சான்றோர் செய்யுளகத்தும் பயின்று வருதலானும் இவ்வழக்குத் தமிழ்நாட்டுப் பிறந்து தமிழறி

வாரை நோக்குதலினாலும் இலக்கணம் இன்றியும் பாகம் உணர்வார் ஆகலானும் எடுத்து ஓதாராயினர். அஃது அற்றாதல், 'வெளிப்படு சொல்லே கிளத்தல் வேண்டா, வெளிப்பட வாரா உரிச்சொன் மேன' என ஓதிய அதனானும் கொள்க. சொன்மை நிலை இலக்கணம் இல்வழி உணர்வரிது ஆதலான் எடுத்து ஓதப்பட்டது'' (155) என்கிறார். இத்தகையவை ஆசிரியர் சிறப்பியல் காட்டுவனவாம்.

### உவமை

''வலனாக என்னும் எச்சத்துக்கண் ஆக என்பது செய்யுள் விகாரத்தால் தொக்கு நின்றது. தொக்கு நின்ற காலத்தும் அதற்கு இயல்பு முற்பட்ட நிலைமை என்று கொள்க. என்போலவோ எனின், வாலும் செவியும் இழந்த ஞமலியைப் பின்னும் ஞமலி என்றே வழங்கினாற் போல'' எனச் சுவைமிக்க வகையில் உவமைப் படுத்துகின்றார் (408). பூத்தொடையொடு சொற்றொடையையும் விரிய விளக்குகின்றார் (408).

''எழுத்துப் பிரிந்திசைத்தல் இவணியல் பின்றே'' என்பதன் உரையில் 'இத்தமிழகத்தில் இல்லை" என்கிறார் (391).

### தமிழ்நாடு

செந்தமிழ் நாட்டு எல்லை குறித்து இவர் கூறும் கருத்து பிறரினும் தெளிவும் திருத்தமும் உடையதாம். பிறருரைகள் சோழ நாடே செந்தமிழ்நாடு என்பது சொல்ல இவர், ''செந்தமிழ் நாடாவது வையையாற்றின் வடக்கும் மருதயாற்றின் தெற்கும், கருவூரின் கிழக்கும் மருவூரின் மேற்கும் என்ப. இவ்வாறு உரைத்தற்கு ஓர் இலக்கணம் காணாமையானும் வையையாற்றின் தெற்காகிய கொற்கையும் கருவூரின் மேற்காகிய கொடுங் கோளூரும் மருதயாற்றின் வடக்காகிய காஞ்சியும் தமிழ் திரி நிலமாதல் வேண்டுமாதலானும் அஃது உரையன்று

என்பார் உரைக்குமாறு என்று வரைந்து வடவேங்கடந் தென்குமரி ஆயிடைத் தமிழ் கூறு நல்லுலகமே செந்தமிழ் நிலம்'' என்கிறார் (394).

பழங்கொல்லம் கடல் கொள்ளப் பட்டபின், இப்பொழுதுள்ள கொல்லத்தை ''அப்பெயரானே கொல்ல மெனக் குடியேறினார் போலும்'' என்கிறார் (396).

**உரைநலம்**

சில இடங்களில் இவர் தரும் விளக்கமும் எடுத்துக் காட்டும் நினைதோறும் இன்பம் பயப்பதாம். முன்னவர் உரைகளைத் தழுவியும் சார்ந்தும் பின்னவர் உரை காண்பதும் காட்டுவதும் வழக்கெனினும், அப்பின்னவர் உரைகளால் முன்னவர் விளக்காத பகுதிகள் விளக்கம் பெறுவதும், சிக்கல்கள் அவிழ்க்கப்படுவதும் பட்டறிவால் ஏற்படுவன. அவ்வகையில் தெய்வச்சிலையார் தனிச் சிறப்புக் குரியவராகச் சொல்லத் தக்கவர்.

**'உண்டு'** என்பதைப் பொதுவினை என்றும், சிறப்பு வினை என்றும் இரு வேறு வகையாகக் கொள்வர் உரையாசிரியர்கள். இவர் தக்க எடுத்துக்காட்டுகளின் வழியே பொதுவினை என்பதை நிலைப்படுத்துகிறார். அது முன்னை உரையாசிரியர்களின் தோள்மேல் அமர்ந்து பார்க்கும் பார்வையின் விளைவாம்.

''ஊன் துவை, கறிசோ றுண்டு வருந்து தொழில் அல்லது, பிறிது தொழில் அறியா வாகலின் (புறநா. 14) என்ற வழி உண்டு என ஒரு வினையான் வந்ததால் எனின், அது பொதுவினை என்று கொள்க. என்னை? 'உண்ணு நீர் வேட்டேன் என வந்தாற்கு' (கலி. குறி. 15) எனவும், 'பாலும் உண்ணாள் பழங்கண்கொண்டு' (அகம். 48) எனவும், 'கலைப்புற வல்குல் கழுகு குடைந் துண்டு' (மணிமே. 6: 112) எனவும், 'கள்ளுண்ணாப் போழ்து' (திருக். 930) எனவும், 'உண்ணாமை வேண்டும்

புலாஅல்' (திருக். 257) எனவும் வருதலின்'' என்று எடுத்துக்காட்டி 'உண்டு' என்பது உண்ணல், கறித்தல், குடித்தல், சுவைத்தல் முதலிய பலவற்றுக்கும் வரும் பொது வினையாதலை விளக்குகின்றார் (45).

'குறித்தோன் கூற்றம் தெரித்து மொழி கிளவி' என்பதற்குச் **'சேவலை'** எடுத்துக் காட்டுகிறார் (54). அதில், ''நிவந்தோங் குயர்கொடிச் சேவலோய்' (பரிபா. 3:18) என்ற வழிச் சொல்லுவான் குறிப்பு மாயவனை நோக்கலிற் கருடனாயிற்று. 'சேவலங் கொடியோன் காப்ப' (குறு. க.) என்ற வழிச் சொல்லு வான் குறிப்பு முருகவேளை நோக்குதலிற் கோழி யாயிற்று'' என்கிறார். இத்தகும் இணைப்புச் சான்றுகள் தெய்வச்சிலையார் கொண்டிருந்த இலக்கியப் பயிற்சியின் பரப்பை வெளிப்படக் காட்டுவன.

வேற்றுமைகள் அனைத்தும் முறையே வருமாறு இவர் காட்டும்,

> **'' காதலியைக் கொண்டு கவுந்தியொடு கூடி**
> **மாதரிக்குக் காட்டி மனையின் அகன்றுபோய்க்**
> **கோதில் இறைவனது கூடற்கண் கோவலன் சென்**
> **றேத முறுதல் வினை ''**

என்னும் இன்னிசை வெண்பா எடுத்த இலக்கணத்திற்கு எடுத்துக்காட்டாவதுடன் **சிலப்பதிகாரச்** செய்திச் சுருக்கமாகவும் அமைந்து சுவை பயக்கின்றது.

**பாவம்**

> **'' விழுமம் சீர்மையும் இடும்பையும் செய்யும் ''**

என இளம்பூரணரும்,

> **'' விழுமம் சீர்மையும் சிறப்பும் இடும்பையும் ''**

எனச் சேனாவரையரும் நச்சினார்க்கினியரும் பாடம் கொண்டனர். அதனை இவர்,

**'' வழுமம்,**
**சீர்மையும் சிறப்பும் இடும்பையும் சிறப்பும் ''**

எனப் பாடங்கொள்கிறார். இப்பாடம், இரு சார் கருத்தையும் ஏற்றுக் கொண்டு இவரே அமைத்துக் கொண்டதாகலாம் (349). அத்தகு கருத்துடையர் இவர் என்பது வினைமுற்றைப் பற்றி இவர் கொண்ட கருத்தினால் வலியுறும்.

''வினைச்சொற்கள் முற்றும் பெயரெச்சமும் வினையெச்சமும் என மூவகைப்படும். அவற்றுட் பெயரெச்சம் வினையெச்சம் என்பன இத்தன்மையன என்று எடுத்தோதி முற்றுச் சொல்லாவது இத்தன்மையது என்று ஓதிற்றிலர். அதற்கு இலக்கணம் யாங்குப் பெறுதும் எனின், எச்சவியலுட் பெறுதும். வினைக்கு இன்றியமையாத முற்றினை ஒழிபியல் கூறுகின்றுழிக் கூறிய அதனாற் பெற்ற தென்னை எனின், அஃது **எமக்குப் புலனாயிற்றன்று.** இஃதேல் வினையிலக்கணம் அறிந்தேன் ஆகுங்கால் முற்றிலக்கணமும் அறிதல் வேண்டும் அன்றே. அதனை ஆண்டுக் கூறியவாறு ஈண்டுரைத்தல் வேண்டும் எனின் உரைக்குமாறு'' என்று கூறி வினைமுற்றுப் பற்றிய மூன்று நூற்பாக்களையும் காட்டி உரை வரைகின்றார். இவ்வகையால் **இடப்பெயர்ச்சி செய்தாருள் முதல்வரெனத் தெய்வச் சிலையார்** அமைந்து விடுகின்றார்.

இவ்விடப்பெயர்ச்சியிலும் பெயர்ச்சி வேண்டினார் விளக்கவுரை கண்ட **கு. சுந்தரமூர்த்தியார்**:

''இங்ஙனம் ஆய்ந்து வைத்த அருமை பாராட்டுக்குரியதாம். பிறவுரையாசிரியர்கள் அனைவரும் இது பற்றிச் சிறிதும் நினைந்திலர். இவ்வகையில் இவ்வுரையாசிரியர் பாராட்டிற்குரியரேனும் இம்மூன்று நூற்பாக்களையும் வினையியலின் முதற்கண் வைத்திருப்பின் இன்னும் நலமாக இருக்கும் என்பது கருத்து ஆகும்.

முற்றின் இலக்கணத்தைக் கூறாது முற்றுக்களுக்குரிய ஈறுகளை வினையியலின் முதற்கண் கூறுதல் பொருந்தாது ஆதலான் இவை ஆண்டிருப்பதே இன்னும் பொருத்த முடையதாகும்''.

**விளக்கம்**

உரிச்சொல் திரிசொல் இடைச்சொல் என்பவற்றின் அடையாளத்தை எளிமையாய் அதே பொழுதில் அருமையாய் விளக்குகிறார் தெய்வச்சிலையார்.

''உரிச்சொல்லோடு இதனிடை (திரிசொல்லிடை) வேறுபாடு என்னை எனின், உரிச்சொல் குறைச் சொல்லாகி வரும்; திரிசொல் முழுச்சொல்லாகி வரும்'' என்கிறார் (395).

எல் என்பதை உரிச்சொல்லெனக் கொண்டார் சேனாவரையர். எனினும் உரியியலுக்கு மாற்றாமல், உரிச்சொல்லாகக் கொண்டே ஆசிரியர் வைப்புப் போல இடையியலில் வைத்துத் தம் கருத்தை எழுதியமை அவர் உரையுள் அறியப்பட்டது. அச்சொல் இடைச் சொல்லே உரிச்சொல் அன்று என்று தெளிவிக்கிறார் தெய்வச் சிலையார்.

''இது (எல்) உரிச்சொல் அன்றோ எனின், அது குறைச் சொல்லாகி நிற்கும். இது குறையின்றி நிற்றலின் **இடைச்சொல் ஆயிற்று**'' என்கிறார்.

எவரையும் பெயர் சுட்டி மறாமல் எழுதுதல் தெய்வச் சிலையார் வழக்கு. அவ்வழக்குப்படியே சேனாவரையரை இவண் குறியாதே உரைவரைந்தார்.

முறைவைப்புக் கூறுதலில் மிக நுணுக்கம் காட்டுகிறார் தெய்வச்சிலையார்:

பெயரை முதல் வேற்றுமை என்னாது எட்டு வேற்றுமையுள்ளும் யாதானும் ஒன்றை முதல் வேற்றுமை எனினும் அமையும் எனின், ஒருவன் ஒன்றை ஒன்றானே **இயற்றி ஒருவற்குக் கொடுப்ப அவன் அதனை**

**அவனினின்றும் தனது ஆக்கி ஓரிடத்து வைத்தான் கொற்றா** என்றவழி, செய்கின்றான் முதல் வேற்றுமை யாகி இம்முறையே கிடத்தலின் அமையாது என்க'' என்று இலக்கண மரபினைப் போற்றுகிறார்.

'எல்லாம்' என்பது உயர்திணைப் படர்க்கையிலும் முன்னிலையிலும் வருவனவற்றை எடுத்துக் காட்டி ''அவை இலக்கண வழக்கல்ல'' (182) என்று மறுப்பு வகையாலும் மரபினைக் காக்கிறார்.

அஃறிணைக்கண் தன்மைக்கூற்று நிகழாது என்பதை, ''கிளியும் பூவையும் ஆகிய சாதி எல்லாம் உரையாடும் என்னும் வழக்கின்மையானும், அவை உரைக்குங்கால் ஒருவர் உரைத்ததைக் கொண்டு உரைக்கும் ஆதலானும், ஒருவன் பாடின பாட்டை நரம்புக் கருவியின்கண் ஓசையும் பொருளும்பட இயக்கியவழிக் கருவியும் உரையாடிற்றாதல் வேண்டுமாகலானும் அவ்வாறு வருவன மக்கள் வினை யாதலால் தன்மைவினை அன்றென்க'' என உவமை நயத்துடன் விளக்கி மரபு காக்கிறார் (210).

இத்தகையவர், 'எல்லாச் சொல்லும் பொருள்குறித் தனவே' என்னும் நூற்பாவின் விளக்கத்தில் ஒருரை உரைத்துப் பின்னர், இன்னும் ''எல்லாச் சொல்லும் எல்லாப் பொருளையும் குறித்து நிற்கும் என்றவாறு, எனவே, **இச்சொல் இப்பொருள் உணர்த்தும் என்னும் உரிமை இல** என்றவாறாம். என்னை உரிமை இலவாகிய வாறு எனின், உலகத்துப் பொருள் எல்லாவற்றையும் பாடைதோறும் தாம் அறிகுறியிட்டு ஆண்ட துணையல்லது இவ்வெழுத்தினான் இயன்ற சொல் இப்பொருண்மை உணர்த்தும் என எல்லாப்பாடைக்கும் ஒப்ப முடிந்ததோர் இலக்கணம் இன்மையான் என்க. எனவே பொருள் பற்றி வரும் பெயரெல்லாம் **இடுகுறி** என்பது பெறப்பட்டது'' (151), என்பது வியப்பாக உள்ளது. இது நூலாசிரியர் கருத்தொடு மட்டுமன்றி, தாம் உரைத்த உரைக்கும் முரணாக உண்மை புலப்படுகின்றது!

**சில வழக்குகள்**

தைந்நீராடல், ஈழத்திற்கு ஏற்றின பண்டம், சுக்ரீவன் துணையாக இலங்கை கொண்டான் என் அக்கால வழக்குகள், தொன்மக் குறிப்புகள் ஆகியவற்றை ஆங்காங்குக் காட்டுகிறார்.

'கூப்பிடு தொலைவு' என நீட்டல் அளவும், 'அந்தணி' என அந்தணனுக்குப் பெண்பாலும், நெயவு தொடர்பான பல செய்திகளும் நாண்மீன் கோண்மீன் குறிப்பும் இன்னபிறவும் இவர் உரைக்கண் காண வாய்க்கின்றன.

அரசன் வலத்திருந்தான் அமைச்சன்; அரசன் இடத்திருந்தான் சேனாபதி என அரசிருக்கை காட்டுகிறார்; இந்நாளில் வேளாங்கன்னி என்றும், வேளாங் கண்ணி என்றும் வழங்கப்படுவது **வேளாண்காணி** அல்லது **வேளார் காணி** என்பதோ என்று நினைக்க வைக்கிறார்:

''வேளார்காணி என்பது வேளார் காணியிற் பிறந்த ஆடையை அப்பெயரால் வழங்குதலின் ஆகுபெயராயிற்று'' என்பது அது (111). அடுத்த நூற்பாவுரையிலும் வேளார் காணியைக் குறிக்கிறார் (112). செப்பு வகை நான்கனுள் வாய்வாளா திருத்தலையும் (மறுமொழி கூறாதிருத் தலையும்) ஒன்றாகக் கூறுகிறார். ஆகாயப்பூ நன்றோ தீதோ என்றார்க்கு உரையாடாமை என்கிறார் (13).

**தொல்காப்பியம்** என்பதற்கும் இவர் இலக்கணம் கூறுகிறார்: ''தொல்காப்பியம் என்பதோ எனின் அஃது ஈறு திரிந்து நின்று, அவனால் செய்யப்பட்டது என்னும் பொருளை விளக்குதலின் ஆகுபெயராகாது; காரணப் பெயராம்.'' என்பது அது (111).

அரிய செய்திகளையும் எடுத்துக்காட்டு நயங்களையும் உடையது தெய்வச்சிலையார் உரை.

## எ. பழைய உரை

தொல்காப்பிய உரையாசிரியர்களுள் ஒருவர் பழைய உரையாசிரியர் என்பார். தொல்காப்பிய உரை வரைந்த அவர் பெயரை, அறிய முடியாமையானும் அவ்வுரையின் பழைமையாலும் அதற்கு இடப்பட்ட பெயரே பழைய உரை என்பது.

உரையாசிரியர், பேராசிரியர் என்பார் பெயர்கள், ஏட்டிலே மட்டுமன்றி அவர்களைச் சுட்டும் பின்னை உரையாசிரியர்களாலும் அறியப்படுகின்றன. இப்பழைய உரையாசிரியர் பெயரோ ஏடு தொகுப்பாளர், பதிப்பாளர் ஆயோரால் வழங்கப்பட்ட பெயராகும். இவ்வாறே புறநானூற்றுக்கும் 'பழைய உரையாசிரியர்' என ஒருவர் பெயரைக் குறிக்க நேர்ந்ததும், சிலப்பதிகாரத்திற்கு 'அரும்பத உரையாசிரியர்' என ஒருவர் பெயரைக் குறிக்க நேர்ந்ததும் எண்ணத்தக்கன.

இப்பழைய உரை சொல்லதிகாரத்தில் கிளவியாக்கம்; வேற்றுமையியல், வேற்றுமை மயங்கியல் என்னும் மூன்றியல்களுக்கு மட்டுமேகிடைத்துள்ளது; இறுதியியலின் இறுதி இரண்டு நூற்பாக்களுக்கு உரை கிடைத்திலது.

### காலம்

வேற்றுமையியல் இறுதி நூற்பாவில், ''சேனாவரையர் கருத்தும் உரையாசிரியர் கருத்தும் இருதிறத்தனவாக மேலே கூறுமாறு காண்க'' என்று பெயர்கள் சுட்டு வதாலும், வேறு பலஇடங்களில் உரையாசிரியர் சேனா வரையர் நச்சினார்க்கினியர் தெய்வச்சிலையார் உரை களை ஏற்றுப் போற்றுவதும், மிக அருகலாக மறுப்பதும் மேற்கொள்வதாலும் அவ்வுரையாசிரியர்களுக்குக் காலத் தால் பிற்பட்டவர் இவர் என்பது தெளிவாகின்றது. ஆகவே இவர் காலம் 16ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி எனலாம்.

**உரைநிலை**

அகத்திய நூற்பாவெனப் பிறர்காட்டாத நூற்பா வொன்றைக் காட்டுகிறார் (80) இவர். ''முதலொடு குணம்இரண் டடுக்குதல் வழக்கியல், சினையோ டடுக்குதல் செய்யு ளாறே'' என்றொரு நூற்பாவைக் காட்டி **'இது புறச்சூத்திரம்'** என்கிறார் (26). இஃதிவரே இயற்றியதாகலாம்.

தொல்காப்பியம், கபிலம், கபிலரது பாட்டு, பரணரது பாட்டியல், பாரியது பாட்டு, மாதாநுபங்கி யாவார் திருவள்ளுவதேவர் எனச் சிறப்புப் பெயர்கள் சில ஆள்கின்றார். கருவூர் காவிரிப்பூம்பட்டினம் என ஊர்ப் பெயர்கள் சில குறிக்கின்றார். இவற்றுட் பலவும் பிறர் ஆண்டனவே.

பெற்றம் இருபாற்கும் பொது என்றும், அவ்வாறே எருமையும் பொது என்றும் குறிக்கிறார்.

''நூறு விற்கும் பட்டாடை உளவோ என்றார்க்கு ஐம்பது விற்கும் கோசிகம் அல்லது இல்லை'' என்பது, இவர் காலத்தில் பட்டும் துணியும் கொண்டிருந்த விலை மானக் குறிப்பாகலாம் (35). ''எவன் என்பது இக்காலத்துள் 'என்' என்றும், 'என்னை' என்றும் திரிந்தும் நடக்கும்'' (31) எனக் காலநிலை குறிக்கிறார்.

''ஒரு மக்கட்டலை ஓடு காட்டுள் கிடந்தது கண்டு பெண்தலை ஆண்தலை என்று உணராதான் பெண்டாட்டி தலை கொல்லோ ஆண்மகன் தலை கொல்லோ இஃதோ கிடந்த மக்கட்டலை'' என்று இவர் கூறுவது, மாந்தரின ஆய்வின் மூலமாகத் திகழும் மண்டையோட்டு ஆய்வை நினைக்கத் தூண்டுகின்றது (23).

கூடு, களஞ்சியம், குதிர், புரை, மறிசல், தொம்பை என்பன தவசம் போட்டு வைக்கும் இடத்தை அல்லது செய்பொருளைக் குறிக்கும். இவற்றுடன் 'மச்சு' என்பதும் தவசக் கொட்டிலைக் குறித்தல் பாண்டிநாட்டு

வழக்கு. அதனை இவர், ''சாத்தன் சோற்றைக் குழிசி யாற் பார்ப்பார்க்கு மச்சிநெற் கொண்டு கூரையுள்'' என்று கூறுவதால் அறியவாய்க்கின்றது (113). மச்சு நெல் என்பது பாடமாக இருக்கலாம். அன்றி மச்சு, மச்சி எனத் திரிதலுமாம் (எ-டு) குச்சு-குச்சி.

## நாடு - சமயம்

நும்நாடு யாது என்பதற்குத் 'தமிழ் நாடு' என உரை யாசிரியர் கூறினாராக, இவர் நும் நாடு யாது என்ப தற்குப் 'பாண்டிநாடு' என்பதும்கருதத்தக்கது. இவர்தம் நாட்டுச் சார்பு வெளிப்பாடு இஃதெனக் கருதலாம் (13). ஆனால் தெய்வச்சிலையார், கல்லாடர் ஆகியோரும் இவ்வாறே உரைப்பர்.

''நாற்றம், பூதி நாற்றம் என்பு நாற்றம் முதலாயின'' (79) என்று இவர் கூறுவது கொண்டு சைவஞ் சார்ந்த வரோ எனக்கருதுவர் (பழைய உரை: ஆராய்ச்சி முன்னுரை).

## மறுப்பு

இருபத்தைந்தாம் நூற்பாவுரையில், ''அவர் சொன் முறை அறியார்; ஆதலால் அஃதுரையன்மை அறிக'' என மறுக்கிறார். இம்மறுப்பு தெய்வச் சிலையார் உரையை என்பது தெளிவாகின்றது. ஆனால், இவர் பிற உரை யாசிரியர் பெயர் சொல்லி மறுப்புரை எழுதினார் அல்லர். அவ்வாறே இவ்வுரையாசிரியர் உரையிஃதென உரைத் தாரும் அல்லர். ஓரிடத்தே சேனாவரையரையும் உரை யாசிரியரையும் பெயர் சுட்டியமை முன்னே குறித்தாம்.

## எடுத்துக்காட்டு

பெரும்பாலும் முந்தையோர் உரைவழியிலேயே செல்லும் இவ்வுரைகாரர் நோக்கு எடுத்துக்காட்டுக் காட்டுவதிலேயே பெரிதும் ஈடுபட்டிருந்தது என்பதைப் பிறர் காட்டாத எடுத்துக்காட்டுகள் சிலவற்றை இவர்

காட்டுவது கொண்டும் 'முதலாவது கிளவியாக்க உதாரணம் முற்றும்' 'வேற்றுமையியல் உதாரணம் முற்றும்' என்று வருவது கொண்டும் துணியலாம். சிறப்பினாகிய பெயர் நிலைக்கிளவிக்குப் பதினைந்து எடுத்துக் காட்டுகள் காட்டியுள்ளார் (41).

நூலாசிரியர் நூற்பா நூற்றற் சிறப்பைப் போற்றிக் கொள்வதில் இவ்வுரையாசிரியர் பிறர்க்குக் குறைந்தா ரல்லர் என்பதை, ''அவ்விரண்டு பொருட்கும் (கண், தேவகை) வேறோர் சூத்திரம் செய்யாது இவ்வுருபுகளுடனே ஓதினர் **சூத்திரம் சுருங்குதற்கு**'' என்பதால் உணர்த்துகின்றார் (83).

## தெளிவு

கற்பார் மயக்கம் நீக்கவேண்டும் கருத்துடையர் இவர் என்பதை, 'மும்முழங்கையரைப்போல ஓக்கமும், அதற்குத் தக்க பிழம்பும் மம்மர் மாலைப்பொழுதும் கண்டு ஐயுற்றான், குற்றி கொல்லோ மகன் கொல்லோ தோன்றுகின்ற உரு என்று இருதிணைக்கும் பொதுவாகச் சொல்லுக'' என்பதால் வெளிப்படுத்துகிறார் (24). உயரம், தோற்றம், பொழுது இவற்றைச் சுட்டி மயங்குதற் சூழலை இவர் காட்டுதல்போல் பிறர் காட்டினார் அல்லர் என்க.

எத்துணையோ பேரிழப்புகளுக்கு ஆட்பட்ட தமிழுக்கு இவ்வுரைக் குறையும் ஓரிழப்பு!

## ஏ. தொல்காப்பியச் சூத்திர விருத்தி

இந்நூல் தொல்காப்பியப் பாயிர விருத்தி, முதற் சூத்திர விருத்தி என இரண்டு பகுப்புடையதாய் 86 பக்க அளவில் அமைந்துள்ளது. இதனை இயற்றியவர் **மாதவச் சிவஞான முனிவரர்**. இவர் திருவாவடுதுறைத் திருமட அடியவர். **பதினெட்டாம் நூற்றாண்டினர்.**

நெல்லை மாவட்டம் சார்ந்த விக்கிரம சிங்கபுரத்தில் ஆனந்தக் கூத்தர், மயிலம்மை என்பார் திருமகனாராகப் பிறந்தவர். முக்களாலிங்கர் என்னும் பிள்ளைப் பெயரினர். சுசீந்திரம் ஈசானமடம் வேலப்ப தேசிகரிடம் இளம் பருவத்திலேயே தீக்கை பெற்றுத் துறவு பூண்டவர். சிற்றிலக்கியங்கள் பல இயற்றியவர். சிவஞான போதத்திற்குப் பேருரையும் சிற்றுரையும் தந்தவர். மறுப்பு நூல் எழுதுதலில் அந்நாளில் ஒரு தாமாகக் கொடிகட்டிப் பறந்தவர் எனத்தக்கார்.

''வடவேங்கடம் தென்குமரி'', எனத் தொடங்கும் தொல்காப்பியப் பாயிரத்திற்குப் பொருளும் விளக்கமும் முதற்கண் வரைகின்றார். 'நூலுக்குத் தொல்காப்பியச் சூத்திர விருத்தி' என்றே பெயர் சூட்டியமை தற்சிறப்புப் பாயிரத்தால் விளங்குகின்றது.

**'' வலம்புரி முத்திற் குலம்புரி பிறப்பும்''**

எனத் தொடங்கும் 33 அடி அமைந்த ஆத்திரையன் பேராசிரியன் கூறிய பொதுப்பாயிரத்தை நூன்முகப்பில் வைக்கிறார். தொல்காப்பியப் பாயிரத்திற்குச் சொற்பொருள் எழுதி விளக்கம் செய்கிறார்.

'தமிழ்நாட்டிற்கு வடக்கட் பிறவெல்லையும் உளவாக வேங்கடத்தை எல்லையாகக் கூறினார், அகத்தியனார்க்குத் தமிழைச் செவியறிவுறுத்திய செந்தமிழ்ப் பரமாசாரியனாகிய அறுமுகக் கடவுள் வரைப்பு என்னும் இயைபுபற்றி என்பது'' என வடவேங்கடம் முன்வைத்த முறைமைக்குக் காரணம் காட்டுகிறார்.

நச்சினார்க்கினியர் இளம்பூரணர் பரிமேலழகியார் ஆகியோரை மறுப்பதுடன் சேனாவரையரையும் மறுப்பார். ஏனெனில் சேனாவரையரை, ''வடநூற் கடலை நிலைகண்டறிந்த சேனாவரையர் எழுத்ததிகாரத்திற்கு உரை செய்தாராயின் இன்னோரன்ன பொருளனைத்தும் தோன்ற ஆசிரியர் கருத்துணர்ந்துரைப்பர். அவர் சொல்

லதிகாரம் போலப் பெரும்பயன்படாமை கருதி எழுத்திற் குரை செய்யாது ஒழிந்தமையின், தமிழ் நூல் ஒன்றே வல்ல உரையாசிரியரை யுள்ளிட்டோருரையை ஆசிரியர் கருத்தாகக் கொண்டு பின்னுள்ளுள்ளோரும் மயங்கு வாராயினார்'' என்று பாராட்டுவார் (முதற் சூத்திர விருத்தி).

சேனாவரையர் தென்மொழி வடமொழிப் புலமை யாளர். அவ்வாறே முனிவரும் இருமொழிப் புலமை யாளர். முனிவரோ ''வடநூலுணர்ந்தார்க்கன்றித் தமிழியல்பு விளங்காது'' என்னும் அழுத்த மிக்கவர். அத்தகையர், தமிழின் தனித் தன்மைகளையும் மறந் தாரும் அல்லர்.

''தமிழ்மொழிப் புணர்ச்சிக்கட்படும் செய்கைகளும் குறியீடுகளும் வினைக்குறிப்பு வினைத்தொகை முதலிய சில சொல்லிலக்கணங்களும் உயர்திணை அஃறிணை முதலிய சொற்பாகுபாடுகளும் அகம் புறம் என்னும் பொருட்பாகுபாடுகளும் குறிஞ்சி வெட்சி முதலிய திணைப் பாகுபாடுகளும் அவற்றின் பகுதிகளும் வெண்பா முதலிய செய்யுள் இலக்கணமும் இன்னோரன்ன பிறவும் வட மொழியிற் பெறப்படாமையானும்'' என்கிறார்.

நச்சினார்க்கினியர் தொல்காப்பியரை அகத்தியனா ரோடு மாறுகொண்டார் என்று கூறுவதை, ''அருந்தவக் கொள்கை அகத்தியனாரோடு மாறுகொண்டு நூல் செய்தாராயின் இவ்வாறு நிலைபெற்று வழங்காது'' என ஆணையிட்டு மறுக்கின்றார்.

ஐந்திரம் நிறைந்த என்பதற்கு ''அகத்தியம் நிறைந் தமை எல்லாரானும் தெளியப் பட்டமையின் வடமொழி யினும் வல்லனாயினான் என்பது விளக்கிய அங்ஙனங் கூறினார்'' என்கிறார்.

தொல்காப்பியம் என்னும் பெயரை ஆயும் முனிவர், தொல்காப்பிய முடையான் என்னும் பொருட்கண் 'அம்'

கெட்டு 'அன்'விகுதி புணர்ந்து தொல்காப்பியனென நின்று பின்னர்த் தொல்காப்பியனாற் செய்யப்பட்ட நூலென்னும் பொருட்கண் அன் விகுதி கெட்டு அம் விகுதி புணர்ந்து தொல்காப்பியம் என முடிந்தது'' என்கிறார்.

''எழுத்தெனப்படுப'' எனத்தொடங்கும் தொல் காப்பிய முதல் நூற்பாவை ஆயும் இவர் முதற்கண் நூன் மரபு என்பதைக் கூறுகிறார். ''எழுத்து குறில் நெடில் உயிர் மெய் என்றற் றொடக்கத்துப் பெயர்கள் நூலின்கண் ஆளுதற் பொருட்டு முதனூல் ஆசிரியனாற் செய்து கொள்ளப் பட்டமையின் இவை நூன்மரபு பற்றிய பெய ராயின'' என்கிறார்.

அகரமுதல் னகர இறுவாய் முப்பஃதும் எழுத்தெனப் படுப என்ப என்று ஓதுதல் வேண்டும். அவ்வாறு ஓதாது, எழுத்தெனப்படுப என்றது அது மங்கல மொழியாதலால் என்கிறார்.

நூற்பாவுக்கு உரைவிளக்கம் கூறுவதுடன் சொல் சொல்லாக எடுத்துக்கொண்டு மிகப்பெரும் விரிவுரை நிகழ்த்துகிறார். நூன் முழுமைக்கும் உரை எழுதும் நோக்கினர் அல்லர் இவர் என்பதை அதன் விரிவே காட்டு கின்றது. ஒரு நூலை எவ்வாறு ஆராயவேண்டும் என்ப தற்கு ஒரு வகையான் வழிகாட்டியாக அமைவது இந்நூல் எனலாம்.

## ஐ. தொல்காப்பியச் சண்முக விருத்தியின் முதற்பகுதியாகிய பாயிர விருத்தி

இப்பெயரிய நூல் 1905 ஆம் ஆண்டு வெளிவந்தது. அதன் நிறைவில் ''சோழவந்தானூர் அரசஞ்சண்முகன் உரைத்த சிறப்புப் பாயிர விருத்தி முடிந்தது'' என்னும் குறிப்புளது. வடவேங்கடம் தென்குமரி எனத் தொடங்கும் சிறப்புப் பாயிரத்திற்கு மட்டும் 246 பக்க

அளவில் உரைபெருகிற்று என்றால் விருத்தி என்பதற்கு ஐயமுண்டோ?

இதன் தொடக்கத்தில் உள்ள கடவுள் வாழ்த்துப் பகுதியில் சித்திவிநாயகனார், அறுமுகக் கடவுள், அங்கயற் கண்ணம்மை, ஆலவாய்ப் பெருமானடிகள் வாழ்த்துகள் இருப்பதால் இவர்தம் 'சைவ சமயம்' இனிது விளங்கும்.

இவ்விருத்தியை எழுதுவதற்குரிய காரணத்தை நூலாசிரியரே நன்றி கூறல் பகுதியில் கூறுகிறார். இப் பாயிர விருத்திக்கு முன்னரே 'நுண்பொருட்கோவை' என நூல் எழுதியதையும் ஆங்குக் குறிக்கிறார். நூன்முழுமைக்கும் உரை காணவேண்டும் என்னும் பேரார்வத்தால் ஈடுபட்டார் என்பதும், ஒராற்றான் மூன்று இயல்கள் உரை எழுதி முற்றுப்பெற்றன என்பதும் அறியப் பெறினும் தமிழுலகம் பெறவாய்த்தது இப்பாயிர விருத்தி ஒன்றுமே என்க.

இதனை, ''அந்நூலும் (தொல்காப்பியமும்) அதன் உரையும் பின்னூலும் ஆராய்வான்புக்குச் சிற்சில இடத்து முன்னுரைகள் ஒன்றோடு ஒன்று ஒவ்வாமையில் தொன்னூல் துணிபு இதுவோ அதுவோ எனவும் பிறிதொன்றோ எனவும் ஐயுற்றும், பன்னூறு முறைப்படப் பல்லாற்றான் நாடி என்னறிவிற்கு எட்டிய அளவின் அவற்றுட் சில துணிந்தும் இற்றைக்கு ஐந்து யாண்டின் முன்னர்த் தொல் காப்பியத்துட் சிற்சில சூத்திரங்கட்கே உரையெழுதக் கருதி 'நுண்பொருட் கோவை' எனப் பெயரிய ஒரு நூல் எழுதினேன்.

''பின்னர் ஆயுந்தொறும் முன்னூலாகிய தொல் காப்பியக் கருத்துடன் அந்நூல் உரைகளும் நன்னூல் முதலாய பின்னூல்களும் பெரும்பாலும் முரணாயின எனத்தோன்றலின் முற்றும் எழுதத் துணிந்து சுபகிருது யாண்டு பங்குனித்திங்கள் உத்தரத்தில் தொடங்கி எழுதி வருகின்றேன். இதுகாறும் எழுத்ததிகார மேனும்

முடிதல் வேண்டுமாயினும் இடையிடையுற்றுக் கிடை கொளச் செய்த பிணியினாலும் அணியணியாக வந்து தடை பல செய்த மிடியெனும் படையினாலும் இடையீடு நேர்ந்தமையின் இது பொழுது முடிந்தன பாயிரமும் நூன் மரபும் மொழிமரபும் என மூன்றே. பிறப்பியல் எழுதப் படுகின்றது'' என்பதால் அறிக.

சிவஞான முனிவரின் கொள்கைகள் 32 - ஐயும், நன்னூலார் கொள்கைகள் 15-ஐயும், பிறர் கொள்கைகள் 47-ஐயும் பாயிர விருத்தியுள் மறுத்துள்ளார்.

இவர்தம் உரை விளக்கம் இயலுமாற்றை அறிதற்கு ஒரு சான்று:

''இந்நூல் (தொல்காப்பியம்) இயல்பானே குற்ற மின்மை உடைத்தாயினும் பெரியோர் கேட்டு நன்றென் னாவிடிற் பயன்படாமையின் அறங்கரை நாவின் நான் மறை முற்றிய ஆசானும், அவனும் ஒருவனாய்க் கூறிற் பயன்படாமையான் அவையும், அவையும் பாண்டியனை அன்றிக் கூடாமையிற் பாண்டியனும், பாண்டியனும் திருவின்றி யவையைப் பேணல் அமையாமையால் திருவும், அத்திருவும் ஈகையொடு கூடாவிடிற் பயனின்மையால் தருகையும், அத்தருகையும் ஆற்றலில் வழி மாற்றாரான் அழியுமாகலின் நிலந்தரும் ஆற்றலும், அவ்வனைத்தும் எய்தினும் நூலறிவின்றேற் பயன்படா ஆகலிற் பனுவலும், பனுவலுங் குற்றம் உளதாயிற் கொள்ளப்படாமையாற் குற்றமின்மையும் ஒன்றற்கு ஒன்று தொடர்பாக முடிதலின் அம்முறையே 'போக்கறு பனுவல் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவையத்து அறங்கரை நாவின் நான்மறை முற்றிய அதங்கோட்டாசாற்'குக் காட்டியென்றார்''(184).

தவமுடையாரே நூல் செய்தற்குரியர் என்பதொரு கருத்தை மறுக்கும் சண்முகனார், ''அவ்வாறு விதிப்பின் அகத்தே தவவொழுக்கம் முற்றினமையானே யூழ்வயப் படாது நின்று குற்றமிலவாக நூல் செய்த வள்ளுவர்

முதலாயினார்க்குப் புறத்தே தவவேடம் இன்மையான் அவர் போல்வார் செய்த நூலினும் குற்றம் உளவெனப் படுமாகலானும், அகத்தே தவவொழுக்கம் முற்றாமை யான் ஊழ்வயப்பட்டுக் குற்றமுளவாக நூல் செய்த பவணந்தி முனிவர், சிவஞான முனிவர் முதலாயினார்க்குப் புறத்தே தவவேடம் உண்மையான் அவர் போல்வார் செய்த நூலெல்லாம் குற்றமிலவெனப்படுமாகலானும் அவ்விதி பயினின்றாக முடிதலின் அவர் செய்த நூலா யினும் அறிவுடையார் பலர் கேட்டுக் குற்றமின்மை ஆராய்தலே வேண்டப்பட்டது'' என்கிறார். (191)

அரசஞ்சண்முகனார் தந்தையர் அரசப்பபிள்ளை என்பார். இவர் அழகர்சாமி தேசிகர், சிவப்பிரகாச அடிகள் ஆகியோரிடம் கற்றவர்; சேதுபதி உயர்பள்ளி, மதுரைத் தமிழ்ச் சங்கம் ஆகியவற்றில் பணிசெய்தவர். மறைமலை யடிகளார், மு.ரா. கந்தசாமிக் கவிராயர், பண்டிதமணி, நாவலர் பாரதியார், மதுரைத் தமிழ்ச் சங்கப் புலவர்கள் ஆகியோரிடம் நட்புக் கொண்டவர். மாலைமாற்று மாலை, இன்னிசை இருநூறு, ஏகபாதநூற்றந்தாதி, திருக்குறள் சண்முக விருத்தி, நவமணிக்காரிகை நிகண்டு முதலிய நூல்கள் இயற்றியவர். இவர் காலம் 1868-1915.

இச்சண்முக விருத்திக்கு மறுப்பாகச் செப்பறைச் சிதம்பர சுவாமிகள், தொல்காப்பியச் சண்முக விருத்தி மறுப்பு என்றொரு நூல் எழுதினார். அது, மறுப்பின் மேல் எழுந்த மறுப்பு நூலாகும்.

## ஒ. நாவலர் ச. சோமசுந்தர பாரதியார் பொருட்படலப் புத்துரை

1950 இல் கோவையில் முத்தமிழ் மாநாடு நடந்தது. நாவலர் பாரதியார் மாநாட்டுத் திறப்புரை நிகழ்த்தினார். அவ்வுரையின் இடையே, ''தமிழர்கள் தொல்காப்பியத் தைப் படிக்கும்பொழுது தொல்காப்பியக் கண்கொண்டு

படிக்க வேண்டும். இப்பொழுது தொல்காப்பியத்தைப் படிக்கும் தமிழர்கள் நச்சினார்க்கினியர் கண்கொண்டு படிக்கிறார்கள்'' என்று வருந்திக் கூறினார்.

''தமிழ் நூல்களுக்கு வடநூற் சார்பு கற்பித்துக் கொள்வதே பெருமையெனக் கருதிய இடைக்காலத்தவர், தமிழ்த் தொல்காப்பியரை ஆரியப் பார்ப்பனராக்கிய தோடமையாமல், அவரை இல்லா அகத்தியற்குப் பொல்லா மாணாக்கருமாக்கி முடித்தார். தொல்காப்பியர் என்னும் அவர் தமிழ் நூற்பெயரையும் தொல்காப்பியம் என வடநூல் தத்திதாந்த விதிப்படி திரித்து வழங்கலாயினர். இது இந்நூற் பாயிர வரலாற்றுக்கும் தமிழ் இலக்கண மரபுக்கும் முற்றிலும் முரணும் தவறு. தொல்காப்பியன் என்பதே இந்நூல் இயற்றியார்க்கு இயற் பெயரும், அவர் நூலுக்கு ஆகுபெயருமாம்''. இது தொல்காப்பியம் பற்றியும் தொல்காப்பியர் பற்றியும் நாவலர் கொண்ட கருத்தாகும்.

''நான்கு வருணம் ஆரியர் அறநூல்களே கூறும் வகைகள் ஆதலானும் பண்டைத் தமிழருட் பிறப்பளவில் என்றும் உயர்வு தாழ்வுகளுடன் வேறுபடும் அந்நால்வகை வருணங்கள் உலகியலில் வழங்காமையானும், தொல்காப்பியர் தாம் தமிழ் மரபுகளையே கூறுவதாக வற்புறுத்தலானும், அகத்திணையியலில் தமிழர் நாட்டு நானில மக்கள் குறிக்கப்படுகின்றாரன்றி நான்கு வருணத்தாராய்த் தமிழ் மக்கள் யாண்டும் கூறப்படாமை யானும் அவருரை அமைவுடையதன்று'' எனப் பழையோர் உரைகளை நாவலர் மறுக்கும் வகை (அகத். 27) அவர் புத்துரை செய்ய நேர்ந்த நோக்கினை வெளிப்படுத்தும்.

நாவலர் பாரதியார் அகத்திணையியல், புறத்திணையியல், மெய்ப்பாட்டியல் ஆகிய மூன்றியல்களுக்கு உரை கண்டார். பொருளதிகாரம் என்பதைப் பொருட்படலம் என்றார். கட்டுரைகள் சில தொல்காப்பியம் குறித்து எழுதினார்.

நாவலர் புத்துரை ஏறத்தாழ நானூறு ஆண்டுகள் தொல்காப்பிய உரைகளால் கப்பிக்கிடந்த மாசுகள் சில வற்றை நீக்குவதற்கும், புதிய கண்ணோட்டத்தில் அந் நூலை நோக்குதற்கும் வழிவகுத்தமை குறிப்பிடத்தக்கது. தமிழியல் நோக்கில் தொல்காப்பியரை நோக்குமாறு தம் உரையால் நிலைநாட்டிய நாவலர் பாரதியார் பின்னே வந்த பலர்க்கு வழிகாட்டியாக அமைந்தமை நினைவு கூரத்தக்கது.

பாரதியார் தமிழ்ப் பார்வையைக் கண்டு 'தகும்' எனக் கொள்ளும் நாம், அவர் தக்க நூற்சான்றின்றிப் ''பாடம் இவ்வாறு இருந்திருக்கும்; பின்னே மாறியிருக்க வேண்டும்'' என்று திட்டப்படுத்தி உரைகாணும் நெறி நூன்முறையன்று எனல் முறை. அதற்கு எடுத்துக்காட்டு 'கந்தழி' என்பதைக் 'காந்தள்' எனக் கொண்டதாம்.

நாவலர் பாரதியாரின் அகத்திணையுரை 1942-இல் வெளிவந்தது. மற்றையவை அதன் பின்னர் வெளி வந்தன.

பாரதியார், வ. உ. சிதம்பரனார், அரசஞ் சண்முக னார், பண்டிதமணி ஆகியோரிடம் நாவலர் பாரதியார் தொடர்பும் நெருக்கமும் கொண்டிருந்தவர். எம்.ஏ; எம்.எல்; பட்டங்களைப் பெற்றவர். சிறந்த வழக்கறிஞ ராக விளங்கிய இவர், சிறந்த தமிழாய்வாளராகவும், நாவன்மை மிக்கவராகவும் விளங்கினார். தொல்காப்பிய உரையை அன்றி, சேரர் பேரூர், சேரவேந்தர் தாயமுறை, திருவள்ளுவர், தசரதன் குறையும் கைகேயி நிறையும், மாரிவாயில் முதலிய நூல்களை இயற்றினார்.

எட்டையாபுரத்தினராகிய இவர் மதுரைப் பசுமலை யில் வாழ்ந்தார். தமிழகப் புலவர் குழுவின் முதல் தலைவராக விளங்கினார். அண்ணாமலைப் பல்கலைக் கழக ஆய்வுத்துறைத் தலைவராகச் சிறந்தார். இவர் நாவலர், கணக்காயர், டாக்டர் என்னும் பட்டங்களைப்

பெற்றுச் செல்வமும் புகழும் சேர வாழ்ந்தார். இவர் காலம் 1879—1959.

## ஓ. புலவர் குழந்தையுரை

தொல்காப்பியம்—பொருளதிகாரம்— குழந்தையுரை 1968-இல் வெளிவந்தது. அது, அகத்திணையியல், பொதுவியல், களவியல், கற்பியல் மெய்ப்பாட்டியல் புறத்திணையியல் என்னும் ஆறு பகுதிகளைக் கொண்ட முதற்பாகமாகும்.

இப்புத்துரையின் தோற்றம், வைப்புமுறை, பகுப்பு ஆகியன பற்றி முகவுரையில் உரையாசிரியர் குறித்துள்ளார்:

''(இளம்பூரணர் பேராசிரியர் நச்சினார்க்கினியர் உரைகள்) இக்காலத் தமிழ்மக்கள் யாவரும் எளிதில் புரிந்து கொள்ள முடியாத அத்தகு நிலையில் உள்ளமையால், இக்காலத்திற்கேற்ற முறையில் தொல்காப்பியத்திற்கு ஓர் உரை தேவை என்பது தமிழ்மக்கள் விரும்புவதொன்றாகும். தமிழ்மக்களின் அவ்விருப்பத்திற்கேற்ப அத்தகுமுறையில் எழுநூறு ஆண்டுகட்குப் பின்னர் எழுந்ததேயாகும், குழந்தையுரை என்னும் இவ்வுரை.''

### வைப்புமுறை

தொல்காப்பியச் சூத்திரங்களின் வைப்புமுறை இக்காலத்தினர் எளிதில் இயைபு படுத்திக் கற்றறிய முடியாத அத்தகு நிலையில் உள்ளது. எடுத்துக்காட்டாக இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், தோழியிற் கூட்டம் என்னும் களவின் வகை கூறும் சூத்திரம் செய்யுளியலின் 186-வது சூத்திரமாக உள்ளது. இது களவியலின் முதலில் இருக்கவேண்டும். அப்போதுதான் அவ்வகைகள் பற்றிய இலக்கணங்களைக் கற்றுணர்தற்கு

எளிதாக இருக்கும். ஆனால் அது களவியலின் தொடக்கத்திலிருந்து 406-ஆம் சூத்திரமாக உள்ளது. இது மிகமிகச் சேய்மை நிலையுடையதாகும். இவ்வாறே கற்பின் வகை கூறும் 'மறைவெளிப்படுதலும்' என்னும் சூத்திரம் செய்யுளியலின் 187-ஆம் சூத்திரமாக உள்ளது, இது கற்பியலின் தொடக்கத்திலிருந்து 347-ஆம் சூத்திரங் கட்கு அப்பாலுள்ளதாகும்.

இவ்வாறு இடமாறியும் மிகச் சேய்மை நிலையிலும் உள்ள சூத்திரங்களெல்லாம் அவை இருக்க வேண்டிய இடங்களில் வரிசையாக வைக்கப்பட்டுள்ளன. களவு கற்பியல்களின் வழுவமைக்கும் பொருளியற் சூத்திரங்கள் அவ்வவ்வியல்களில் ஆங்காங்கே சேர்க்கப்பட்டுள்ளன.

பொது வழுவமைக்கும் பொருளியற் சூத்திரங்கள், கற்பியலிலுள்ள கூத்தர் முதலியோர் கூற்றுச் சூத்திரங்கள், செய்யுளியலிலுள்ள களவு கற்புக் கூற்றுச் சூத்திரங்கள், மரபியலிலுள்ள நாற்பான் மரபுச் சூத்திரங்கள் முதலிய வற்றை 1. நாற்பான் மரபு, 2. கூற்று, 3. கேட்போர், 4. வாயில்கள், 5. கூறுதல், 6. வழுவமைதி, 7. வழக்கு, 8. முறைப்பெயர் என்னும் தலைப்புக்களிற் சேர்த்துப் பொதுவியல் என்னும் பெயரில் அகத்திணையியலை அடுத்து வைக்கப்பட்டுள்ளது.

அகத்திணையியலிலுள்ள உள்ளுறை உவமம் கூறும் சூத்திரங்களும் பொருளியலிலுள்ள இறைச்சி கூறும் சூத்திரங்களும் உவமவியலில் சேர்த்து முறை செய்யப் பட்டுள்ளன.

களவியலில் இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம் தோழியிற் கூட்டம் என்னும் பலவிடங் கட்குரிய தலைவன் கூற்றுக்கள் ஒரே சூத்திரத்தில் கூறப் பட்டுள்ளன. இவ்வாறே கற்பியலின் மலிவு, புலவி, ஊடல் உணர்வு, பிரிவுகட்குரிய கூற்றுக்களும் ஒரே சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. இங்ஙனமே பல விடங்கட்குரிய

தலைவி, தோழி, செவிலி முதலியோர் கூற்றுக்களும் ஓரே சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. இவற்றை அவ்வவ் விடத்தின்கண் பகுத்துணர்தல் அவ்வளவு எளிதாக இல்லை. எனவே அக்கூற்றுச் சூத்திரங்களை அவ்வவ் வியல்களில் ஓரிடத்தில் எழுதி அந்தந்த இடங்கட்குரிய கூற்றுக்களை அங்கங்கே எடுத்தெழுதி உரை எழுதப் பட்டுள்ளது.

அகத்திணையியல் 41-ஆம் சூத்திரத்தில் உள்ள தலைவன் கூற்றுக்கள் 17-இல், 6 களவின் உடன் போக்கிற்கும், அடுத்த 11-உம் கற்பின் பிரிவுக்கும் உரியவையாகும். எனவே அச்சூத்திரத்தை இரண்டாக்கி அந்தந்த இடங்களில் வைக்கப்பட்டுள்ளன. இதனாலேயே ஒரு சூத்திரம் மிக்கது.

இப்புதிய உரைக்கேற்ற வைப்பு முறைப்படி இயல்களும் அவற்றின் நூற்பாத் தொகையும் வருமாறு:

**முதற் பகுதி**

| | | |
|---|---|---|
| 1. | அகத்திணையியல் | 45 |
| 2. | பொதுவியல் | 73 |
| 3. | களவியல் | 71 |
| 4. | கற்பியல் | 46 |
| 5. | மெய்ப் பாட்டியல் | 27 |
| 6. | புறத்திணையியல் | 36 |
| | | 298 |

**அடுத்த இயல்கள்**

| | | |
|---|---|---|
| 1. | உவம இயல் | 46 |
| 2. | செய்யுளியல் | 221 |
| 3. | மரபியல் | 101 |
| | | 368 |

ஆக 666

—இவை உரை ஆசிரியர் கூறியவை.

தமிழ் மக்கள் யாவரும் எளிதில் பொருளுணர்ந்து கொள்ளவேண்டும் என்னும் நன்னோக்கில் புத்துரை வரையத் தொடங்கியமை பாராட்டுக்கு உரியதாகும். ஆனால், அப்புத்துரைக்காக நூலாசிரியர் செய்து வைத்த அடைவு முறையை, உரைகாண்பார் எத்தகு செவ்விய

காரணம் உண்டெனக் கண்டாலும், தம் காட்சிக்கு ஏற்ப இடமாற்றியும், பிரித்தும், இயைத்தும் கொள்ளும் ஒரு நெறியை ஏற்பதாயின் எந்நூலாயினும் நூலாசிரியர் படைப்பாக இராமை ஒரு தலை. இஃது உரை காண்பார் மரபன்று. என்ன புதுமை எனினும் நூலைச் சிதறிக் கோலந் தெளிக்கும் உரிமை உரை காண்பார்க்கு இல்லை. பாடவேறுபாடு என்று சுவடிச் சான்று இன்றித் திருத்து தலும் உரை காண்பார்க்கும் பதிப்பிப்பார்க்கும் உரிமை இல்லை எனின்—அவற்றை மேற்கொள்வது முறைமை யன்று எனின்—இவ்வாறு எல்லாச் சிதைவுகளுக்கும் ஒரு மொத்தச் சான்றாக உரை வகுத்தல் அடிப்படை நெறித் தவறாம். அன்றியும் தாமே அடியியைத்துக் காட்டலும் இடம் பெறின் நூல் நூலாமா?

திறனாய்வாளர் எனின் நூற்பாவில் கைவையாமல் இவ்விவ் விடத்து இவ் விந்நூற்பாக்கள் இருத்தல் வேண்டும் எனல் சாலும். உள்ள அமைப்பை மாற்றாமல் எத் தகைய பிரிப்பு, கூட்டு, இயைப்பு கொண்டும் உரை வகுக்கலாம். மாட்டு என்பதைக் கொண்டு உரையில் கைவைத்த நச்சினார்க்கினியரும் பாட்டில் கைவைத் தாரல்லர். இவற்றை எண்ணல் வேண்டும்.

தெய்வச் சிலையார் உரையுள் இத்தகைய தொரு மாற்று முறை செய்யப்பட்டுள்ளது. அதனை அவரைப் பற்றிய பகுதியுள் காண்க. ‘எல்’ என்பது இடையியலில் இருக்கக் கண்டும், அஃது உரியியலில் இருக்க வேண்டும் எனத் தாம் கொண்டும் இடமாற்றுச் செய்யாத சேனா வரையர் நூல்வரம்பை அவர் பகுதியில் காண்க.

ஆசிரியர் குழந்தையின் புத்துரையில் உள்ள நூல் வைப்பு முறை ஏற்கத் தக்கதா? ஏற்பின் நூல்களின் நிலைமை என்னாம்?

‘‘இவ் வைப்புமுறை வன்கண்மையது என்பது மட்டுமன்று. தொல்காப்பிய நூற்பா அமைப்புத் தொடர்ச்சிக்குக் கீழறையுமாம்.’’ என்று கூறும் தேர்ந்த

முடிபு தொல்காப்பியத்தைக் காப்பதற்கு மட்டுமன்று; பல்காப்பியங்களையும் காத்தற் குரியதாம். (தொல் காப்பியக் கடல்- பக். 88; வ.சுப. மாணிக்கனார்.)

புலவர் குழந்தை இராவண காவியம், யாப்பதிகாரம், தொடை யதிகாரம், திருக்குறள் உரை, அரசியல் அரங்கம் முதலாய நூல்களை எழுதியவர். சீர்திருத்த நோக்கினர். ஓலைவலசு என்னும் ஊரினராகிய இவர் பூவானி என்பதும் பவானி என வழங்கப்படுவதும் ஆகிய ஊரில் வாழ்ந்தவர். மொழிப் பற்றில் தலை நின்றவர். இவர் காலம்.

## ஔ. தொல்காப்பியத் தொடர் பணிகள்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இருந்து தொல்காப்பிய உரைப் பதிப்புகள் பல வெளிவரத் தொடங்கின.

பூவிருந்தவல்லி சு. கன்னியப்ப முதலியார் 1868-இல் தொல்காப்பிய எழுத்ததிகார இளம்பூரணருரையை வெளியிட்டார். 1892 முதல் சி. வை. தாமோதரம் பிள்ளை யால் தொல்காப்பியப் பகுதிகள் வெளிவரத் தொடங் கின. ச. பவானந்தம் பிள்ளை, கனகசபைப் பிள்ளை, சி. கணேசையர், இராகவஐயங்கார், வ. உ. சிதம்பரனார், சி. வையாபுரிப் பிள்ளை, கரந்தைக் கவியரசு முதலியோர் இப்பதிப்புப் பணிகளில் ஈடுபட்டனர். பின்னர்த் தொல் காப்பியப் பதிப்புகள் அனைத்தும் திருநெல்வேலி தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக வழியே ஒவ்வொன்றாக 1921 முதல் வெளி வந்தன. அவற்றுக்குக் கந்தசாமியார், தேவநேயப் பாவாணர், கு. சுந்தரமூர்த்தி ஆகியோர் குறிப்புரை ஆய்வுரை ஆகியன எழுதியுள்ளனர்.

உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம் ஆகியவற்றின் வழியே

தொல்காப்பிய உரைவள நூல்கள் ஒவ்வொன்றாய் இப்பொழுது வெளிவந்து கொண்டிருக்கின்றன. இவ்வுரைவளப் பதிப்பின் முன்னோடி ஆபிரகாம் அருளப்பன், வி. ஐ. சுப்பிரமணியர் ஆகிய இருவரும் இணைந்து செய்த தொல்காப்பியச் சொல்லதிகார உரைக் கோவையாகும். இவ்வாறு பல்வேறு பதிப்புகள் வெளிப்படுதலால் தொல்காப்பிய ஆய்வு பெருகிற்று. ஆய்வாளர்கள் தம் ஆய்வுகளைக் கட்டுரைகளாகவும் நூல்களாகவும் வெளிப்படுத்தினர். இவ்வகையில் அண்ணாமலைப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறை தொடர்ந்து நடத்தி வரும் இலக்கணக் கருத்தரங்குகளும், அக்கருத் தரங்க வெளியீடுகளும் குறிப்பிடத் தக்கவையாகும்.

அறிஞர் மு. இராகவஐயங்கார், ''தொல்காப்பியப் பொருளதிகார ஆராய்ச்சி'' என்றொரு நூலை 1912-இல் எழுதினார். இது கொழும்பு சீகாந்தன் தோற்றுவித்த ஒரு போட்டியில் முதற்பரிசு பெற்ற நூலாகும். இந்நூலையன்றி 'ஆராய்ச்சித் தொகுதி' என்னும் பெயரிய நூலிலும் தொல்காப்பியம் தொடர்பான சில கட்டுரைகள் வரைந்துள்ளார். இப்பொருளதிகார ஆய்வில் தலைப்பட்டு நூலெழுதிய மற்றொருவர் முத்துசாமி ஐயர் எம். ஏ., எல். டி., என்பார். அவர் பள்ளிக்கூட ஆய்வாளராகப் பணி செய்தவர் எனினும் தமிழாய்விலும் தலைப்பட்டிருந்தவர் என்பது குறிப்பிடத் தக்கது.

'பழந்தமிழர் வாழ்க்கை அல்லது தொல்காப்பியப் பொருளதிகாரக் கருத்து' என்னும் நூல் கா. சுப்பிரமணிய பிள்ளையால் எழுதப்பட்டது. தொல்காப்பிய அகத்திணையியல், புறத்திணையியல் ஆகியவை இளவழகனார் புத்தாய்வுரை கண்டன. 'தமிழர் இன்பியல் வாழ்க்கை,' 'பொருளியல் வாழ்க்கை' என விளக்க நூல்களும் பின்னர் வெளி வந்தன.

தமிழ் வரலாறு — முதல் தொகுதி — இரா. இராகவ ஐயங்காரால் எழுதப்பட்டது. அதில் தொல்காப்பியம்

பற்றிய ஆய்வும், அதற்கு முந்து நூல் ஆய்வும் விரிவாக மேற்கொள்ளப்பட்டன. அவ்வகையில் க. வெள்ளை வாரணனார் 'தொல்காப்பியம்' என்னும் அரிய ஆய்வு நூல் இயற்றினார். தொல்காப்பிய ஆய்வுடன், அதன் உரைநடையாக்கமாகவும் அந்நூல் விளங்குகின்றது. அவரே தொல்காப்பியம் — நன்னூல் இரண்டையும் ஒப்பிட்டு ஒப்பீட்டு நூலும் செய்தார். பொருளதிகார உரைவளப் பதிப்பும் மேற் கொண்டு நிறைவுறுத்தி வருகின்றார். இவ்வுரை வளத்தின் அகத்திணை இயலை அருமையாகச் செய்தவர் மு. அருணாசலம் பிள்ளை ஆவர்.

ஆ. சிவலிங்கனார் தொல்காப்பிய ஆய்வுக் கட்டுரைகள் பல எழுதி வருகின்றார். அவர் எழுதியுள்ள 'இளம்பூரணர் எழுத்துரை' (விளக்கமும் குறிப்பும்) என்னும் நூலும், 'தொல்காப்பிய உரைவளத் தொகுப்பு' நூல்களும் குறிப்பிடத்தக்கவை. சி. கணேசையர் எழுதிய தொல்காப்பிய உரை விளக்கக் குறிப்புகள் பயன் மிக்கவை. 'தொல்காப்பியச் சொல்லதிகாரக் குறிப்பு' என்னும் பின்னங்குடி சுப்பிரமணிய சாத்திரியாரின் நூல் விரிவு மிக்கது (1930); பல்வேறு மேலாய்வுக்குரியது.

சி. இலக்குவனார் தம் அறிவர் பட்ட ஆய்வுக்குத் தொல்காப்பியத்தை எடுத்துக் கொண்டு அதனை ஆங்கிலத்தில் பெயர்த்து உலகறியச் செய்தார். அதற்கு முன்னுரையாக எழுதிய ஆய்வுப் பகுதி தொல்காப்பியந் தழுவிய முழு ஆய்வாகப் பெருகி விளங்குகிறது. அது 'தொல்காப்பிய ஆராய்ச்சி' என்னும் பெயரில் தனி நூலாகவும் வெளி வந்துள்ளது.

சாமி. சிதம்பரனார் 'தொல்காப்பியத் தமிழர்' என்னும் நூலை இயற்றினார். அது பொருளியல் பற்றிய தமிழர் வாழ்வியல் விளக்கமேயாகும். புலவர் குழந்தை இயற்றிய 'தொல்காப்பியர் காலத் தமிழர்'

என்னும் நூலும் தொல்காப்பியப் பொருளதிகார விளக்கமேயாம்.

மு. வை. அரவிந்தன் இயற்றிய 'உரையாசிரியர்கள்', இரா. மோகன், நெல்லை ந. சொக்கலிங்கம் ஆகிய இருவரும் இணைந்தியற்றிய 'உரை மரபுகள்' இராம. தமிழண்ணல் இயற்றிய நூல் ஆகியவை தொல்காப்பியம், தொல்காப்பிய உரையாசிரியர்கள் பற்றிய திறனாய்வு நூல்களாக விளங்குகின்றன.

தமிழண்ணல் எழுதிய 'இறைச்சி', 'உள்ளுறை' முதலிய தனி நூல்கள் தொல்காப்பியக் குறிப்புகளைத் துலக்கிக் காட்டும் விளக்குகளெனத் திகழ்கின்றன.

வ. சுப. மாணிக்கனார் பல்காலும் பல நிலைகளில் எழுதிய தொல்காப்பியக் கட்டுரைகளின் தொகுப்பாகிய 'தொல்காப்பியக் கடல்', 'தொல்காப்பியத் திறன்' என்னும் நூல்கள் தொல்காப்பியத்தைப் பன்முகக் கண்ணாடி கொண்டு பளிச்சிடக் காட்டும் நுண்ணியல் நூல்களாகத் திகழ்கின்றன. அவர்தம் அறிஞர் ஆய்வுக்கு வரைந்த ஆங்கில நூலின் தமிழாக்கமாகிய 'தமிழ்க் காதல்' பல்லபல மயக்கறுக்கும் நல்லியல் நூலாகும்.

க. ப. அறவாணரின் சைனரின் தமிழிலக்கண நன்கொடையும் தொல்காப்பிய நூலும் அரிய கருவி நூல்கள். அவ்வாறே ச. வே. சுப்பிரமணியனாரின் 'இலக் கணத் தொகை—எழுத்து' எனப்படும் தொகை நூலும் அரிய கருவி நூலே. 'நச்சினார்க்கினியர்' என்னும் பெயரில் சுருங்கிய ஆனால் நயமிக்க நூலை இயற்றிய மு. அண்ணாமலை சுட்டத்தக்க ஒருவர். அவ்வாறு தனித்தனி உரையாசிரியரைப் பற்றிய திறனாய்வு நூல்கள் விரிந்த அளவில் வெளிப்படல் நன்றாம். தொல்காப்பியப் பரப்பில் வெளிவந்த கட்டுரைகள் ஆய்வு நூல்கள் அனைத்தும் தொகுத்துக் காட்டிய அடைவன்று இது. ஓராற்றாற் சுட்டிக் காட்டியவையே. இவ்வளவில் கூறிய

நூல்களைப் பற்றியும் ஆய்வு விளக்கம் தருதல் வேண்டத் தக்கதே. பதிப்பு — வெளியீடுகள் பற்றிய வரலாறும் இடம் பெறத் தக்கதே. இவற்றையெல்லாம் இவ் வரலாற்றில் ஒருங்கு தருவதாயின் வரை கடந்து செல்லும் என்னும் கருத்தால் குறித்துக் காட்டும் அளவில் நிறுத்தினாம் என்க. தொல்காப்பியப் பதிப்புகள் எனவும், தொல்காப்பியத் திறனாய்வுகள் எனவும் தொல்காப்பியக் கட்டுரையாளர்கள் எனவும் தொல்காப்பிய ஆய்வடங்கல் எனவும் தொல்காப்பிய வழக்காறுகள், ஆட்சிகள் எனவும் பிறவாறும் தனித் தனி நூல்கள் வெளிப்படத்தக்கன என்க.

# 6. இறையனார் அகப்பொருள்

இறையனாரால் இயற்றப் பெற்ற அகப் பொருள் இலக்கண நூல் இஃது என்பது பெயரை அறிந்த அளவானே புலப்படும். இதற்குக் களவியல் எனவும், இறையனார் களவியல் எனவும் பெயர்களும் வழங்கும்.

## இறையனார்

நாற்கவிராச நம்பியால் இயற்றப்பட்ட அகப்பொருள் நூல் 'நம்பியகப் பொருள்' எனப்படுவதுபோல் இறையனார் என்னும் புலவர் ஒருவரால் இயற்றப் பெற்ற நூல் இஃது என்பது இயல்பான முறை. ஆனால் **'இறையன்'** என்பதை **'இறைவன்'** எனக் கொண்டு உரையும் வரலாறும் உரைத்து வருதல் நெடுநாள் வழக்காக உள்ளது.

''இந்நூல் செய்தார் யாரோ எனின், 'மால்வரை புரையும் மாடக்கூடல் ஆலவாயிற் பால்புரை பசுங்கதிர்க் குழவித் திங்களைக் குறுங்கண்ணியாக உடைய அழலவிர் சோதி **அருமறைக்கடவுள்** என்பது'' எனவரும் இந்நூல் உரை இதனைக் கூறுதல் அறிக.

## நூல்வகை

இந்நூலைச் செய்தான் இறைவன் எனக் கொண்டமையால், இதனை வழிநூல் என்பதற்குத் தடையுண்டாயிற்று. அதனால், ''இது வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவனாற் செய்யப்பட்டதாகலான்

வழிநூல் என்று சொல்லப்படாது. முதனூல் எனப்படும்,'' என்கிறது உரை. ஏன்?

தொல்காப்பியத்தில்,

**'' வினையின் நீங்கி விளங்கிய அறிவின்**
**முனைவன் கண்டது முதனூல் ஆகும்''**

என இலக்கணம் உள்ளது. அதனை அறிந்த உரையாசிரியர், தொல்காப்பியத்திற்குப் பிற்பட்டது எனினும் அது கூறும் இலக்கணத்துள் ஒரு பகுதியாம் பொருளிலக்கணத்திலும் ஒரு கூற்றை வாங்கிக் கொண்டு செய்யப்பட்டது எனினும், 'இறைவன்' செய்ததாகக் கொண்டமையால் அவற்கு இழுக்காகா வகையில் 'முதனூல்' என்கிறார். ஆனால், அவர் நாளிலேயே இதனை வழி வழிநூல் என்று சொல்வார் இருந்தமையால் வழிநூல் என்று சொல்லப்படாது' என ஆணையிடுகின்றார். எனினும் சிக்கல் தீர்ந்தபாடில்லை.

''இது தொகுத்து யாக்கப்பட்டது; என்னை? உலகத்து நடக்கும் அகப்பொருட் செய்யுளிலக்கணம் எல்லாம் இவ்வறுபது சூத்திரத்துள்ளே **தொகுத்தானாகலின்**'', என்றும் (1),

''ஐந்திணை என்றதல்லது அவற்றது பெயரும் முறையும் இலக்கணமும் அறியச் சொல்லிற்றிலரோ எனின், இது **சுருக்க நூலாகலிற்** சொல்லிற்றிலர்; அவை முடிந்த நூலிற் கொண்டு உரைக்கப்படும்'' என்றும் (1),

''இதனை முதனூல் என்று புகுந்தமையால் 'கந்தருவ வழக்கம்' என்றே மொழியற் பாற்று; 'என்மனார்' என்று சொல்லற் பாற்றன்று; அது வழி நூல் வாய்பாடாகலான் என்பது கடா. அதற்கு விடை, பிற நூலெல்லாம் ஆசிரியப் பகுதிப்படும். இதுவும் அவையே போல ஆசிரியப் பகுதிப் படுங்கொல்லோ எனின், படாது. கந்தருவ வழக்கம் போல்வது களவாதல் மூன்று காலத்துப்

புலவர்க்கும் ஒப்ப முடிந்தமையால் அவ்வகை சொன்னான் என்பது.

''அஃதே எனின், தன்னை ஒத்த புலவர் இல்லை அன்றே! தான் தலைவன் ஆகலான், எல்லாம் உணர்ந் தான் ஆகலான் எனின், அஃதே கருத்து. அறிந்திலை; தன்னானே உரைக்கப்பட்டது எனினும் பிறவற்றை எல்லாம் திரியவும் திரியாமையும் கொண்டார். இதனைத் திரியாமையே கொண்டார். எல்லாரும் என்பதற்கு அவ்வாறு உரைக்கப்பட்டது. தன்மதம் உணர்ந்தாரையும் புலவர் என்றான், அறிபொருளுக்கு ஏனோரும் புலவராகலின்'' என்றும் (1),

''இவன் மென்சுவைமேல் நடந்தானோர் ஆசிரியன் ஆகலின் இப்பிரிவு (பரத்தையிற் பிரிவு) வேண்டினான் என்பது'' (40) என்றும் உரையில் ஆங்காங்கு வரும் பகுதிகளால் முதனூல் என்பதனை நிலைநாட்டுவதற்காக இவர் படும் பாடுகளும், தடைகளும் வெளிப்படுகின்றன.

**பெயர் விளக்கம்**

இறையனார் சங்கச் சான்றோருள் ஒருவர் என்பது 'கொங்கு தேர் வாழ்க்கை'' என்னும் குறுந்தொகைப் பாடலால் வெளிப்பட விளங்கும். **நல்லிறையனார்** என்பார் அவரின் வேறொரு புலவர். அவர் சோழன் குளமுற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் பாடிய பாடல் புறநானூற்றில் உள்ளது (393). அவர் இறையனாரின் வேறொருவர் என்பதை வெளிப்பட அறிதற்கு வாய்ப்பாகச் சங்க நூன் மரபுப்படி 'நல்' அடை பெற்றவர் அப்புலவர். இவ்வாறு கொள்ளத் தொன்ம உலகம் துணியாது எனினும் ஆய்வுலகம் கொள் வதற்குத் தடையொன்றில்லை. அவ்வாறு கொண்ட ஆய்வால் 'கொங்குதேர் வாழ்க்கை' முதலான கட்டுரைகள் சில வந்துள. அமைந்த சமய உலகிற்கும்

இக்கருத்தில் மாறுபாடில்லை என்பதும் அக்கட்டுரைகளால் அறிய வருகின்றன.

**இறை** என்பது உயர்வு, தங்குதல், இறைப்பு, ஏவல், வரி, மறுமொழி எனப் பல பொருள் தரும் ஒரு சொல். **இறை** என்பது அரசன், இறைவன் என்னும் பொருள் தருதலும் பழமையானதே. ஆனால் **இறையன்** என்பது அப்பொருள்களில் வந்திலது; உயர்ந்தோன் என்னும் பொதுப் பொருள்தரும் பெயராய் நிற்கின்றது எனலாம். துறைவன் என்பது கடற்கரைத் தலைவனையும், துணைவன் என்பது கணவனையும் சிறப்பு நிலையில் குறித்தலையும், துறையன், துணையன் என்பவை துறைக்கண் இருப்பான் எவனையும், துணையாக இருப்பான் எவனையும் குறித்தலையும் அறிக.

இனி 'இறை' என்பதற்குரிய ஒரு பொருள் வழக்கில் வீழ்ந்து விட்டதோ என எண்ண வேண்டியுள்ளது. இடைச்சந்தில் தந்து இறுக்கி உயர்த்திக் கட்டும் மான மறையாம் துணியுடை **'குறியிறை'** என வழங்கப் பட்டமை அறிய வருகின்றது. சிறுவர்களைக் குறிக்கும் 'குறியிறைப் புதல்வர்' என்பது பழைய ஆட்சி. அண்மைக் காலம் வரையில் இக்காட்சி காணத் தக்கதாகவே இருந்தது. இப்பொழுதும் நாட்டுப்புறங்களில் உழவு முதலிய தொழில் புரியும் ஆடவர் பயன்படுத்துதல் கண்கூடு. 'நீர்த்துணி' 'குளி சீலை' 'தாய்ச்சீலை'' (கோமணம், கௌசணம், கச்சணம்) என வழங்கப்படும் அது, குளிப்புடையாகப் பயன்பட்டு வருதலும் நடைமுறை. முற்றுந் துறந்த பட்டினத்தார் அடிகளும், பின்னாளை வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளும் குறியிறையராக அவர்கள் படங்களின் வழியே அறிய முடிகின்றது. 'உடை கோவணம்' எனத் துறவோர் உடை சொல்லப்படுதல் வழக்கே. பற்றின்மைச் சான்றொடு, மானமறை நாட்டம் காட்டும் மறை "குறியிறை' எனத் தெளிந்தால், அத்தகு துறவோர்

'இறையனார்' எனப்பட்டு, அவர்தம் பெயர் இயல் செயல் ஆயவற்றால் இறைமைத் தன்மை ஏற்றப் பெற்று, இறைவனாகவே புனைவித்திருக்கக் கூடும் எனக் கொள்ளலாம். ஆய்வுக் குரியது இது என இவ்வளவில் அமைவோம்.

## பாயிரம்

தொல்காப்பியத்தில் பாயிரம் உண்டு. இறையனார் களவியல் உரை, ''ஆயிர முகத்தான் அகன்ற தாயினும், பாயிரம் இல்லது பனுவல் அன்றே'' என்று பெரிது விரித்து விளக்கம் கூறிக் காக்கை பாடினிய — தொல் காப்பியப் பாயிரங்களையும் மேற்கோள் காட்டுகின்றது. ஆனால், இக்களவியலில் பாயிரம் இல்லை. 'அன்பின் ஐந்திணை' என்று நூல் தொடங்கி விடுகின்றது. ஆகலின் பாயிரச் செய்திகளை உரையாசிரியர் வருவித்துரைக்க நேர்ந்துளது. இந்நிலையும் பல்வேறு புனைவுகளுக்கும் இடந்தருவதாயிற்று.

## நூலளவு

தொல்காப்பியத்தில் அகத்திணையியல் (55), களவியல் (50), கற்பியல் (53), பொருளியல் (54) ஆகியவை முற்றாக (212 நூற்பாக்கள்) அகப்பொருள் பற்றியன. மெய்ப்பாட்டியல், உவமையியல், செய்யுளியல் ஆகிய வற்றிலும் அகப்பொருள் செய்தியுண்டு. இவற்றுள் 55 நூற்பாக்களையுடைய அகத்திணையியலில் தனிச் சொல் நீங்கிய முற்றடிகள் மட்டும் 155. இறையனார் களவியல் முழுமையும் 60 நூற்பாக்களில் அடங்கி விடுகின்றது. அந்நூற்பாக்களின் அடிகளுள் முற்றடி 144; சிந்தடி 1. தனிச்சொல் 4. அவ்வளவே. இவற்றுள்ளும் 59 ஆம் நூற்பாவில் உள்ள பின் ஈரடிகள் (கிளந்தவல்ல... கொளலே) தொல்காப்பியத்தில் ஈரிடங்களில் வரும் (602, 781) ஒரு நூற்பா. இதனை நோக்கும்போது களவியலின் அளவுச் சுருக்கம் புலப்படும்.

களவியல் நூற்பாக்கள் அளவால் சுருங்கினும் செறிவு மிக்கவை; இயல்பான ஓட்டம் உடையவை; பொருள் விரிப்புக்கு வேண்டுமளவு இடந் தருபவை. நூற்பா இலக்கணங்கள் முற்றாக அமைந்த சிறப்புடையவை. ஓரோர் அடியால் வரும் நூற்பாக்களே 15 உள்ளன. ஓரோ ஒரு நூற்பா சிந்தடி ஒன்றாலேயே அமைந்துள்ளது (22). 'அம்பலும் அலரும் களவு' என்பது அது. நூற்பாவுள் பேரளவு 10 அடி; அவ்வாறமைந்தது 12-ஆம் நூற்பா. நூற்பாச் சுருக்கமும் அமைதியும் உரைப் பெருக்கத்திற்குப் பெரும் வாய்ப்பாக அமைந்துள்ளன. ஓராற்றான் சிவஞான போதச் செறிவையும் நூற்பாக்கள் நினைவுறுத்துகின்றன.

## பகுதி நூல்

தொல்காப்பியத்திற்குப் பின்னர் முழுதிலக்கணம் தழுவாத பகுதி யிலக்கண நூல்கள் தோன்றத் தொடங்கின. அவ்வகையில் அகப்பொருள் பற்றிக் கூறும் நூலாகத் தோன்றியது இந்நூல்.

களவியல் முதல் நூற்பா,

**'' அன்பின் ஐந்திணைக் களவெனப் படுவது**
**அந்தணர் அருமறை மன்றல் எட்டினுள்**
**கந்தருவ வழக்கம் என்மனார் புலவர் ''**

என்கிறது. தொல்காப்பியத்திலுள்ள களவியல் முதல் நூற்பா,

**'' இன்பமும் பொருளும் அறனும் என்றாங்**
**கன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக் கூட்டம் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே ''**

என்கிறது. இவற்றை ஒப்பிட்டுக் கண்டால் தொல்காப்பியப் பிழிவாகக் களவியல் அமைதல் புலப்படும்.

'கந்தருவம்' என்னும் சொல் வரவு அதன் பிற்பாட்டை விளக்கும். ஆயினும் கோவை நூல்கள் தோன்றுதற்கு முற்பட்ட முற்பாட்டையும் நூலமைதி விளக்கும். இவ் வகையால் இதன் காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டதாகாது எனலாம். இவர் சங்கப் புலவராம் இறையனார் எனினும், இவரல்லாப் பிறரொருவர் எனினும் இக்காலக் குறிப்பு ஏற்கத் தக்கதாகலாம். நூற்பாக்களைக் கருதிய அளவில் சமயச் சார்பு கொள்ள வாய்ப்பு எதுவும் இல்லை. உரை கண்டவர் சமயம் 'சைவம்' என்பது வெளிப்படையான செய்தி.

## களவியலுரை

உரையால் நூலுக்குத் தனிச் சிறப்பு உண்டாதல் உண்டு என்பதற்குத் தலையாய எடுத்துக்காட்டு களவியல் உரை எனலாம். அதன் வளமும் நயமும் தெளிவும் தேர்ச்சியும் தனிப் பேராய்விற்கு உரியது.

## முதல் நூற்பா

முதல் நூற்பாவைக் குறித்த அளவில் நிறுத்திவிட்டுப் பாயிரம், பாயிர வகை, அவற்றின் இன்றியமையாமை, முச்சங்க வரலாறு, களவியல் வரலாறு, களவியல் உரை கண்டமை, உரை நடந்து வந்த முறை, களவு என்றதன் காரணம், களவியல் கற்க நாற்பொருளும் பயத்தல், நூல், நூல் வகை, நூல் நுதலியது, நூற்பா நுதலியது, அன்பு இன்னது என்பது, பொருள்வகை, ஐந்திணை, ஐந்திணை முதல் உரி கருப் பொருள்கள், திணை, ஐந்திணைக் களவு, எண்வகை மணம் ஆகிய இவற்றையெல்லாம் தனி இலக்கணமென இலக்கிய அமைதியில் இருபத்தெட்டுப் பக்க அளவில் விரித்துச் செல்கின்றது உரை.

**'உரை நடந்து வந்த முறை'** என்னும் வகையைத் தொடங்கும் அவரே உரையாசிரியர் குறித்து ஓரையத்தை உரைத்து மறுமொழி தருகின்றார்:

''உப்பூரி குடிகிழார் மகனாவான் உருத்திர சன்மனாவான் செய்தது இந்நூற்கு உரை என்பாரும் உளர். அவர் செய்திலர்; மெய்யுரை கேட்டார் என்க. மதுரை ஆலவாயிற் பெருமானடிகளாற் செய்யப்பட்ட நூற்கு நக்கீரனாரால் உரை கண்டு குமாரசுவாமியாற் கேட்கப் பட்டது என்க'' என்கிறார். உரையாசிரியர் நக்கீரனாராக இருப்பின் அவர் தம்மைத் தாமே இப்படிக் கூறிக் கொள்வரா? கொள்ளார் என்பது கொண்டு உரை நடந்து வந்தவாறு சொல்லுதும் எனத் தொடங்குகிறார்:

''மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் தம் மகனார் கீரங்கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் தேனூர் கிழார்க்கு உரைத்தார்; அவர் படியங் கொற்றனார்க்கு உரைத்தார்; அவர் செல்வத்தாசிரியர் பெருஞ்சுவனார்க்கு உரைத்தார்; அவர் மணலூர் ஆசிரியர் புளிங்காய்ப் பெருஞ்சேந்தனார்க்கு உரைத்தார்; அவர் செல்லூர் ஆசிரியர் ஆண்டைப் பெருங்குமரனார்க்கு உரைத்தார்; அவர் திருக்குன்றத்து ஆசிரியர்க்கு உரைத்தார்; அவர் மாதளவனார் இளநாகனார்க்கு உரைத்தார்; அவர் முசிறியாசிரியர் நீலகண்டனார்க்கு உரைத்தார். இங்ஙனம் வருகின்றது உரை'' என்பது அது.

இதனை அப்படியே ஏற்றுக் கொள்வதாயினும் ஒருவர் செவிவழி ஒருவர் கேட்டு வந்ததாகக் கொள்வதாயினும் முதற்கண் உரைகண்ட மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார் உரையெனக் கொள்வதற்கு இல்லையாம். ஏடு பார்த்து எழுதுவதிலேயே பாட வேறுபாடுகள் எத்துணை? விடுபாடுகள் எத்துணை? சேர்வைகள் எத்

துணை? திருத்துதல்கள் எத்துணை? வாய்வழி நடந்து வந்த உரையெனின் இத்துணைப்பேர் வாய்மாற்றங்களில் எத்துணையோ மாற்றங்கள் நிகழ்ந்திருக்கும் என்பதை எவரறியார்? ஒருகால் நக்கீரர் ஆசிரிய வழிமுறையில் வந்த முசிறியாசிரியர் நீலகண்டர் தம் முந்தை ஆசிரிய வழி முறையை இவ்வாறு கூறினார் என்பது தகும். கீதை யாசிரியன் கண்ணன் அல்லன் என்பது மெய்ம்மையாயினும் அதன் பொருள் நயத்தால் போற்றப்படுதல் கண்கூடு! அவ்வாறே இக்களவியல் உரையாசிரியர் எவரே எனினும், நக்கீரர் அச்சிறப்பைக் கட்டிக் கொள்கிறார் என்க.

## உரையின் காலம்

இந்நூலில் சங்கச் சான்றோர் பாடல்களுடன் பாண்டிக்கோவைப் பாடல்களும் மேற்கோளாகக் காட்டப் பட்டுள்ளன. இக் கோவையுடைய பாண்டியன் நெடுமாறன் கி.பி. 8ஆம் நூற்றாண்டினனாகலின் இவ் வுரை அவன் காலத்திற்குப் பிற்பட்டு எட்டு அல்லது ஒன்பதாம் நூற்றாண்டைச் சார்ந்ததாக இருக்கவேண்டும் எனத் துணியலாம்.

## உரை இயல்

இவ்வுரை அந்தாதியென நடை பயில்கின்றமை சுவை மிக்கது. அக்கால நடையை அடையாளம் காட்டுவது எனினும் அமையும். ''அக்காலத்துப் பாண்டியனாடு பன்னீரியாண்டு வற்கடஞ் **சென்றது. செல்லவே**'' எனத் தொடர்கின்றது, ''என்றான்; என'', ''கழிந்தது; கழிந்த பின்னர்''; ''பெய்தது; பெய்தபின்னர்'' இப்படியே பக்கம் பக்கமாக உரை செல்கின்றது.

களவு நல்லதாம் வகையை உலகியலுடன் பொருத்திக் காட்டுகிறார்: ''ஒரு பெண்டாட்டி தமரொடு கலாய்த்து (சண்டையிட்டு) நஞ்சுண்டு சாவல் என்னும் உள்ளத் தளாய் நஞ்சு கூட்டி வைத்து, விலக்குவாரை இல்லாத

"போழ்து உண்பல் (உண்பேன்) என்று நின்றவிடத்து, அருளுடையான் ஒருவன் அதனைக் கண்டு, இவள் இதனை உண்டு சாவாமல் கொண்டுபோய் உகுப்பல் (கொட்டு வேன்) என்று, அவளைக் காணாமே கொண்டு போய் உகுத்திட்டான். அவளும் சனநீக்கத்துக்கண் (ஆளிலா இடத்து) நஞ்சுண்டு சாவான் சென்றாள்; அது காணாளாய்ச் சாக்காடு நீங்கினாள். அவன் அக் களவினான் அவளை உய்யக்கொண்டமையின் நல்லூழிற் செல்லும் என்பது. மற்றும் இது போல்வன களவாகா, நன்மை பயக்கும் என்பது'' என்கிறார்.

களவின்பங்காட்டிப் பேரின்பம் எய்துதலை உவமை நயம் பெறக் கூறுகிறார்.

**உவமை**

''கடுத் தின்னாதானைக் கட்டி பூசிக் கடுத்தீற்றிய வாறு போலவும், கலங்கற் சின்னீர் தெருளாமையான் உண்பானை அறிவுடையான் ஒருவன் பேய்த் தேரைக் காட்டி உதுக்காணாய் நல்லதொரு நீர் தோன்றுகின்றது. அந்நீர் பருகாய், இச்சேற்று நீர் பருகி என் செய்தி என்று கொண்டுபோய் நன்னீர் காட்டி ஊட்டியது போலவும், தான் ஒழுகா நின்றதோர் இணைவிழைச்சி னுள்ளே மிக்கதோர் ஒழுக்கங் காட்டினான்'' என்கிறார்.

**தடைவிடை**

''இவர் தடை விடைகளால் நயமுற விளக்குதற்கு ஓர் எடுத்துக்காட்டு. இது தலைவன் தலைவியர் காட்சியும் அதனால் உணர்வும் பற்றியது.

ஏனாதி மோதிரம் செறிக்கும் அத்திரு அவன் செறிக் கின்றபொழுதே உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது.

அரசு வீற்றிருந்த திருவுடையான் ஒருவன் அரசு வீற்றிருக்கும் அத்திரு அரசு வீற்றிருக்கின்றபொழுதே

*உண்டாயிற்றன்று; முற்கொண்டு அமைந்து கிடந்தது. அது பின்னை ஒருகாலத்து ஓரிடத்து ஒரு காரணத்தான் எய்துவிக்கும். அதுபோல இன்ன நாள் இன்ன பக்குவத்து இன்னபொழுது இன்ன இடத்து இவள் காரணமாக இவன் தன் உணர்வினன் அல்லனாம் என்பதூஉம், இவன் காரணமாக இவள் தன் உணர்வினள் அல்லளாம் என்பதூஉம் முன்னே முடிந்து கிடந்தன. அது பின்னுங் கொணர்ந்து எய்துவிக்கும். என்னை? 'ஒளிப்பினும் ஊழ்வினை ஊட்டாது கழியாது' என்பதாகலான்''.*

**நடைநயம்**

*இவர் தம் வருணனை நயம் கற்போரைக் கவர்ந்து வயப்படுத்தவல்லது:*

**'' மரகதமணி விளிம்படுத்த**
**மாணிக்கச்சுனை மருங்கினதோர்**
**மாதவிவல்லி மண்டபத்துப்**
**போதுவேய்ந்த பூநாறு கொழு நிழற்கீழ்க்**
**கடிக் குருக்கத்திக் கொடிபிடித்துத்**
**தகடுபடு பசும்பொற் சிகரங்களின்**
**முகடு தொடுத்துவந் திழிதருமருவி**
**பொன்கொழித்து மணிவரன்றி**
**மாணிக்கத்தொடு வயிரமுந்தி**
**அணிகிளரருவி ஆடகப்பாறைமேல்**
**அதிர்குரல் முரசின் கண்ணிரட்ட**
**வண்டும்தேனும் யாழ்முரல**
**வரிக்குயில்கள் இசைபாடத்**
**தண்தாது தவிசுபடப் போர்த்ததோர்**
**பளிக்குப் பாறை மணித்தலத்துமிசை**
**நீலஆலவட்டம் விரித்தாற் போலத்தன்**
**கோலக் கலாவம் கொளவிரித்து**
**முளையிள ஞாயிறிள வெயிலெறிப்ப ஓர்**
**இளமயில் ஆடுவது நோக்கி நின்றாள்''**

தலைவியாம் மயில் நோக்கிய மயிலின் காட்சியை இயற்கைச் சூழலொடு பொங்கித் ததும்பிவரும், அருவி யெனக் கொழிக்கிறார். இஃது உரையா? பாட்டா? உரைப்பாட்டா? 'வஞ்சி' நடை பயின்று வந்த காட்சிக்கு வஞ்சி நடையே தகுவதெனக் கொஞ்சு தமிழ் கொழிக் கிறார். இத்தகு நயங்களை விடக்கூடாது எனின் அந் நூலை விடக்கூடாது என்பதே.

முச்சங்க வரலாறு விளக்க மிக்க வகையில் முதற்கண் அறியப்படுவது இக்களவியல் உரையாலேயே யாம். 'பாண்டிக்கோவை' என்னும் கோவை நூல் நமக்குக் கிடைத்தது இவ்வுரையாலேயாம். இவ்வுரைக்கு முன்னரும் உரைகள் இருந்தன என்பதற்கு அகச்சான்றாக அமைந்ததும் இவ்வுரையே. இவ்வாறு இவ்வுரைச் சிறப்பு பலபடக் கிடப்பதாம்.

'கொங்குதேர் வாழ்க்கை' என்னும் குறுந்தொகைப் பாடலை இயற்றிய இறையனாரை இந்நூல் இயற்றிய இறையனார் என இவ்வுரைகாரர் கொண்டிலர் என்பது அப்பாடலை எடுத்துக்காட்டி 'வாளா' அமைதலால் புலப்படுகின்றது (2).

**உரைநயம்**

உலகியல், பழமொழி, பழக்க வழக்கம், பண்பியல் இன்னவற்றை ஆங்காங்குச் சுட்டிச் செல்கிறார் உரையாசிரியர்:

''உலகத்தோர் இடுக்கண் உற்றால் விதியானே தீரும் என்று இரார். முன்னம் தீர்த்தற்குச் சுற்றத்தாரையும் நட்டாரையும் நினைப்பர்'' (3) என்கிறார். காரணம் ஏதொன்றும் இன்றியும் குழந்தை அழுதலை உவமையாகக் கூறுகிறார் (18). 'போகாக் குமரியை உடையார்போலக் கதுமென நேர்ந்திடார்' என்று மகக்கொடை நிலையைக் குறிக்கிறார் (29). 'யாறு வருகின்ற தென்று ஆடை தலைச் சூடார்' என்பதைச் சுவை மிகக் கூறுகிறார் (50).

பெற்றோர்கள் உறைவிடத்தைத் தெய்வத்தானம் எனச் சிறப்பிக்கிறார் (21). 'அரியன தாங்கல் அன்றே பெரியாரது பெற்றிமை' என வியக்கிறார் (9). தன் நாட்டு வாழும் மக்கள் தன்னைக் கண்டு மகிழ்வதற் கென்றேயும் வேந்தன் செலவு மேற்கொள்ளுதலை நயக் கிறார் (35). இன்னாதது ஒன்று உண்மையான் இனியதன் இன்பம் அறியப்படும் என்பதைச் சுட்டுகிறார் (40). ஒரு கருமம் எடுத்துக்கொண்டு முடிப்பான் புக்கு முடியாது தவிர்வார் சிற்றறிவினார் எனச் சாடுகின்றார் (53). பிறர் குறிப்புப்படி அல்லது கட்டளைப்படி தன் கருத் தின்றிச் செயலாற்றுதலை 'இறப்பவும் இளிவந்ததோர் ஒழுக்கம்' எனப் பழிக்கிறார் (35). மனத்தான் வரும் நோயெல்லாம் உணர்வின்மையான் வருவது எனத் தெளிவிக்கிறார் (31). கெடுத்துத் தேடும் நன்கலம் எடுத்துக் கொண்டால் ஏற்படும் மகிழ்வை விளக்கு கிறார் (3),

மதுரையில் ஆவணி அவிட்டமும், உறையூரில் பங்குனி உத்திரமும், கருவூரில் உள்ளிவிழாவும் இரவெல்லாம் ஊர் உறங்காமல் கொண்டாடுவதை 'ஊர் துஞ்சாமை' என்பதற்கு எடுத்துக் காட்டுகிறார் (16). குறுங்கண்ணி, நெடுங்கோதை, விரவுத்தழை, சூட்டுக் கத்திகை, மோட்டுவலயம் என மாலை வகைகளையும் (3) அட்டில், கொட்டகாரம், பண்டசாலை, கூடகாரம், பள்ளி யம்பலம், உரிமையிடம், கூத்தப்பள்ளி, செங்குன்று, இளமரக்கா, பூம்பந்தர், விளையாடிடம் என இடவகை களையும் (115) தக்கவகையில் பயன்படுத்துகின்றார்.

திங்கள் என்பதைப் பிறைத்திங்கள் மதித்திங்கள் என இரண்டாகக் குறித்துப் பிறைத்திங்கள் முன்னொளியாய்ப் பின்னிருளாம்; மதித்திங்கள் பின்னொளியாய் முன்னிரு ளாம் என்று இவர் விளக்குவது தேர்ச்சிமிக்கது (32).

''பூப்புப் புறப்பட்ட ஞான்று நின்ற கரு வயிற்றிலே அழியும்; இரண்டாம் நாளின் நின்ற கரு வயிற்றிலே சாம்;

மூன்றாம் நாள் நிற்கும் கருக்குறு வாழ்க்கைத்தாம்; வாழினும் திருவின்றாம்; அதனாற் கூடப்படாது'' என்று இவர் கூறும் உரை (43) இவர்தம் உடற்கூற்றியல் அறிவைத் தெளிவிக்கவல்லது. இவ்வாறே பிறபிற துறை யறிவுகளும் உரைக்கண் அறிய வருகின்றன.

சாதவாகனம், இளந்திரையம், நூல், கலைக் கோட்டுத் தண்டு, கூத்த நூல், பெருங்குறிஞ்சி (குறிஞ்சிப் பாட்டு) முதலிய சிறப்புப் பெயர்களை உரிய இடங்களில் நினைவுறுத்துகிறார். தேவரும் அசுரரும் பொருத காலத்துத் தேவரையும் அசுரரையும் 'ஒருவீர் ஒருவீர் மிக்காரை ஓறுப்பல் யான்' எனப் பாண்டியன் மாகீர்த்தி சந்து செய்வித்தானென ஒரு புதுமைச் செய்தியைப் புகல் கிறார் (35). செம்பூட்சேயார் கூற்றியல் என ஒரு நூலை இவர் குறிப்பதும், தொல்காப்பியப் பொருளதிகாரத்தைப் பொருட்பால் என்பதும் (56) புதுமையானவையே.

## மறுப்பு

பிறர் நூற்பாக்கள் சிலவற்றை இவர் எடுத்துக் காட்டு கிறார். அவை மறைந்து போன நூல்களைச் சேர்ந்தவை போலும் (19, 20, 21, 43). பிறர் உரையை எடுத் துரைத்து 'அவரறியார்' என்றும் (30), 'பொருந்து மாற்றின் அறிந்து கொள்க' (23) என்றும், 'நல்லது அறிந்து கொள்க' என்றும் (43) இவர் குறிக்கிறார். 'இச்சூத்திரம் தவளைப் பாய்ச்சல்' என்பது போலக் குறிப்பதையும் (42), இச்சூத்திரம் பருந்தின் வீழ்க்காடாகக் கிடந்ததென்று கூறுவாரை, 'அது பொருத்தமன்று' (49), என்பதுபோல மறுத்துரைப்பதையும் மேற்கொள்கிறார்.

இறுதி நூற்பாவில் வரும் 'ஈண்டையோர்' என்பதற்கு இரட்டுற மொழிதலான் ஈண்டையோர் என்பதை ஒரு பெயராகக் கொள்ளாது, 'ஈண்டை ஓர்' எனக் கொண்டு 'தானே அவளே தமியர்' என்றதனால், தானே அவள், அவளேதான் என இயன்ற ஈருடலின் ஓர் உயிர் போல்வார்

உளத்து என்று கொள்ளினும் அமையும் என்று இவர் கூறுவது வலிந்த ஆட்சி எனினும் இனிய இரட்டுறல் சுவை கண்டு மொழிவதாய் அமைகின்றது.

நூலாசிரியர் 'கந்தருவம்' என ஒரே ஒரு வட சொல்லை மட்டுமே நூலில் ஆட்சி செய்தாராக இவ்வுரை யாசிரியர் சனநீக்கம், சுவர்க்கம், தந்திரம், புனருத்தம், சமவாயம், பிராயச்சித்தம், புத்திரலாபம், அவத்தம், அருத்தாபத்தி, ஆபதம் இன்ன பல வடசொற்களைப் பயிலவழங்குகிறார்.

## சொல்லாட்சி

அடைமுண்டு, முட்டு என்று வழங்குவதை 'வழியடை' என அழகாக வழங்கியுள்ளார். கொத்துமல்லி என்பதை உருளரிசி கொத்த முரி என்கிறார். வெந்நீருடன் கலக்கும் தண்ணீரை 'வளாவு நீர்' என வழக்குணர்ந்து பயன்படுத்து கிறார். ஊடலைச் சிவப்பு என அருமையாய்ப் போற்று கிறார். அன்றன்று, (அன்றையன்றை) என்பதை அற்றைக் கன்று எனப் பயன்படுத்துகிறார். இவர்தம் அம்பல் அலர் விளக்கம் அருமை மிக்கது (22). பொருள் கோள் விளக்கம் தனிச்சிறப்பினது (56).

நூலால் உரையும் உரையால் நூலும் ஒன்றை ஒன்று ஒப்பச் சிறப்புறும் என்பதற்கு இறையனார் களவியல் உரை சீரிய எடுத்துக் காட்டாம்.

# 7 பிந்து நூல்களின் முந்து நூல்கள்

தொல்காப்பியம், களவியல், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை, வீரசோழியம், நன்னூல், களவியல் காரிகை, புறப்பொருள் வெண்பாமாலை, பன்னிருபாட்டியல் முதலியவற்றின் பழைய உரைகளில் மேற்கோளாக ஆளப் பெற்றுள்ள நூல்கள் மிகப்பல. அவற்றுள் பெயரளவான் அறிந்தனவும், பலப்பல நூற்பாக்கள் அளவில் அறிந்தனவும், ஏறத்தாழ நூலுருக் கொள்ளுமாறு கிடைத்தனவும் உள. அவை பிந்திக் கிளர்ந்த நூல்களுக்கு முந்திநின்று உந்துதலாக அமைந்தவை. ஆதலால், பிந்து நூல்களைக் காணுமுன் அவற்றுள் சிலவற்றைப் பற்றி அறிதல் முறையாகும்.

ந.சி. கந்தையா தொகுத்த தமிழ் இலக்கிய அகராதி, மயிலை சீனி வேங்கடசாமி தொகுத்த மறைந்துபோன தமிழ்நூல்கள், யான் தொகுத்த மேற்கோள் நூற்பா அகரவரிசை, க. ப. அறவாணரின் அமுதசாகரம், அவிநயம், இந்திரகாளியம் முதலிய நூல்கள், யான் தொகுத்து உரைகண்டு வெளிவந்த காக்கை பாடினியம் இன்னவையும் இப் பிந்து நூல்களின் முந்து நூல்கள் ஆய்வுக்கு உதவுகின்றன.

இம் முந்து நூல்களின் எண்ணிக்கை மிகப்பல ஆகலானும், சிலவற்றைப் பெயர் அளவான் மட்டுமே அறியப் பெறுதலாலும் சிலவற்றை மட்டும் இப்பகுதியில்

காணலாம். எஞ்சியவற்றையெல்லாம், 'அறியவரும் தமிழ் இலக்கண நூல்கள்' என்னும் **பின்னிணைப்பில்** காணலாம்.

## அ. அவிநயம்

யாப்பருங்கல விருத்தியுரை, யாப்பருங்கலக் காரிகையுரை, வீரசோழியவுரை, பன்னிருபாட்டியலுரை, நன்னூல் மயிலைநாதருரை, தக்கயாகப் பரணியுரை ஆகியவற்றால் அறியப்படும் நூல் 'அவிநயம்' ஆகும். இந்நூலின் நூற்பாக்களாக அறிந்தவை தனி நூலுருப் பெற்றுள்ளன.

சங்க காலத்திற்குப் பிற்பட்டு 5 அல்லது 6-ஆம் நூற்றாண்டளவில் தோன்றி 10-ஆம் நூற்றாண்டு வரை விளங்கிப் பின்னர் மறைந்த நூல் அவிநயம் என்றும், சமணஞ் சார்ந்தவர் அவிநயனார் என்றும் மயிலை சீனி. வேங்கடசாமி கூறுவார் (மறைந்து போன தமிழ் நூல்கள். 243).

அவிநயம் என்னும் சொல்லைத் தக்கயாகப் பரணியுரை, ''நளினத்தையுடையது நளினி; அவிநயத்தால் உடைப்பெயர்ச்சொல் ஈறுதிரிந்தது'' எனக் குறிப்பிடுகிறது (காளிக்குக். 153).

### இலக்கண வகை

எழுத்தொலி உண்டாகுமாற்றை மயிலைநாதர் குறிப்பிடுவதும் (நன். எழுத். 13), சொல்லாய்ந்த வகையை வீரசோழிய உரையாசிரியர் பெருந்தேவனார் குறிப்பிடுவதும், யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை ஆகியவற்றில் யாப்பிலக்கண நூற்பாக்கள் மிகப்பலவாக மேற்கோள் காட்டப்படுவதும் அகத்திணை, புறத்திணை, அகப்புறத்திணை சுட்டப்படுவதும் பன்னிருபாட்டியலில் பாட்டியல் நூற்பாக்கள் பல வருவதும் நோக்க அவிநயனார் ஐந்திலக்கண நூலாகத் தம் நூலைச்

செய்தாரோ அன்றித் தொல்காப்பியனார் போல் எழுத்து சொல் பொருள் இலக்கண நூலைச் செய்தர்ரோ என ஐயம் எழுகின்றது. அன்றித் தனித்தனி நூல் செய் திருத்தலும் கூடுவதே. நாலடி நாற்பது என்பதும் இவர் நூலாகலின்.

**'' திணைபால் மரபு வினாச்செப் பிடஞ்சொல்**
**இணையா வழுத்தொகையோ டெச்சம் — அணையாக்**
**கவினையபார் வேற்றுமையும் காலமயக் குங்கொண்**
**டவினயனார் ஆராய்ந்தார் சொல்''**

எனப் பதின்மூன்றால் ஆய்ந்தார் அவிநயனார். இவற்றுள் தொல்காப்பியனார் ஆராய்ந்தன நீக்கி, மயக்கமும் சொல்லும் செப்பும் வினாவும் எச்சமும் மரபும் ஏற்றமாகச் சொன்னார்'' எனவரும் வீரசோழிய உரையால் இவர் சொல்லிலக்கணங் கூறியமை புலப்படும். (சொல்.கிரியா.)

எழுத்தின் பிறப்பினை, ''ஆற்றலுடையுயிர் முயற்சி யின் அணுவியைந் தேற்றன ஒலியாய்த் தோன்றுதல் பிறப்பே என்றார் ஆசிரியர் அவிநயனாரும் எனக் கொள்க'' என மயிலைநாதர் குறிப்பிடுவதால் எழுத்தாய்ந்த வகை விளங்கும்.

யாப்பருங்கலம், காரிகை ஆகியவற்றின் வழி எழுபதுக்கு மேற்பட்ட நூற்பாக்கள் அறிய வருகின்றன. பாட்டியல் தொடர்பான அவிநயர் நூற்பாக்கள் பதினைந்தனைக் காட்டுகின்றது பன்னிருபாட்டியல்.

### அவிநயவுரை

இனி இவ்வவிநயத்திற்கு இராசபவுத்திரப் பல்லவ தரையன் என்பாரால் உரை காணப்பட்டிருந்த தென்பது, ''இந்தப் பத்தெச்சமும், புவிபுகழ் புலமை அவிநய நூலுள், தண்டலங் கிழவன் தகைவரு நேமி, எண்டிசை புரக்கும் இராசபவுத்திரப் பல்லவ தரையன் பகர்ச்சி யென்றறிக'',

எனவரும் மயிலைநாத ருரையால் அறியப்படும் (நன். பொது. 9).

**அவிநயப்புறனடை**

மயிலைநாதர் உரையாலும் யாப்பருங்கல விருத்தியுரையாலும் 'நாலடி நாற்பது' என்னும் அவிநயப் புறனடை நூல் ஒன்று இருந்ததென அறியவாய்க்கின்றது. அதுவெண்பாயாப்பான் இயன்றது என்பதும் காட்டப் பட்டுள்ள மேற்கோள்களால் அறிய முடிகின்றது.

ஓராசிரியர் இயற்றிய ஒரு நூலின் மேல் நூலாக வரும் ஒரு நூல் 'புறனடை' எனப்படுதல் வழக்கு. யாப்பருங் கலத்திற்குப் பின்னர் அதன் ஆசிரியர் அமித சாகரரால் இயற்றப்பட்ட யாப்பருங்கலக்காரிகை யாப்பருங்கலப் புறனடை என வழங்கப்படுதல் அறியத் தக்கது. அவ்வாறே அவிநயர் இயற்றிய 'நாலடி நாற்பது' அவிநயப் புறனடை என வழங்கப்பட்டதென்க.

**'' நாலசைச்சீர் வெண்பாவில் நண்ணா அயற்பாவில்**
**நாலைச்சீர் நேரீற்று நாலிரண்டாம் — நாலசைச்சீர்**
**ஈறுநிரை சேரின் இருநான்கும் வஞ்சிக்கே**
**கூறினார் தொல்லோர் குறித்து''**

என்பது அவிநயப் புறனடையாக யாப்பருங்கல விருத்தியுள் அறியப்படும் வெண்பாக்களுள் ஒன்று (15).

**சில வேறுபாடுகள்**

யாப்பிலக்கணத்திற்கு அமைந்த எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை, பாவகைஇவற்றைக்கூறும் அவிநயர் தாழிசை துறை விருத்தம் என்னும் பாவினங்களையும் கூறியுள்ளார். வண்ணங்கள் இருபது எனத்தொல் காப்பியனார் கூறினாராக இவர் நூறாகப் பெருக்கிக் கொள்கிறார்.

''அவிநயனார் தூங்கிசை வண்ணம், ஏந்திசை வண்ணம், அடுக்கிசை வண்ணம், பிரிந்திசை வண்ணம், மயங்கிசை வண்ணம் என்ற இவ்வைந்தினையும்,

அகவல் வண்ணம், ஒழுகிசை வண்ணம், வல்லிசை வண்ணம், மெல்லிசை வண்ணம் என்ற இந்நான்கினையும்,

குற்றெழுத்து வண்ணம், நெட்டெழுத்து வண்ணம், வல்லெழுத்து வண்ணம், மெல்லெழுத்து வண்ணம் இடையெழுத்து வண்ணம் என்ற இவ்வைந்தினையும் கூட்டி உறழ நூறுவண்ணம் பிறக்கும் என்றார்'' என்பது யாப்பருங்கலம் (95).

'' ஒன்றும் பலவும் விகற்பாய்த் தனிச்சொல்
இன்றி நடப்ப தின்னிசை வெண்பா '' (யா. வி. 61)

'' தொடைமிகத் தொடுப்பன ப∴றொடை வெண்பா ''
(யா. வி. 62)

என்பன இன்னிசை வெண்பா, பஃறொடை வெண்பா இலக்கணம். இவை யாப்பருங்கலம் தருவன.

**அகவை**

'' பாலன் யாண்டே ஏழென மொழிப ''
'' மீளி யாண்டே பத்தியை காறும் ''
'' மறவோன் யாண்டே பதினான் காகும் ''
'' திறலோன் யாண்டே பதினைந் தாகும் ''
'' பதினா றெல்லை காளைக் கியாண்டே ''
'' அத்திற மிறந்த முப்பதின் காறும்
விடலைக் காகும் மிகினே முதுமகன் ''

'' நீடிய நாற்பத் தெட்டி னளவும்
ஆடவர்க் குலாப்புறம் உரித்தென மொழிப ''

இன்னவை பன்னிரு பாட்டியல் வழி அறியவரும் நூற் பாக்கள். இவை பருவங்களின் அகவை, உலாப்புறங் கொள்வார் அகவை, எல்லை என்பன பற்றியவை.

**கலாவியல்**

நவநீதப் பாட்டியல் வழியே அவிநயனார் இயற்றிய 'கலாவியல்' என்பதொரு நூல் இருந்தமை அறிய வருகின்றது. அதில் அவை புகு நெறி பற்றிய ஒரு நூற்பா (91):

**" அவைபுகு நெறியே ஆயுங் காலை**
**வாயிலின் நிரைத்துக் கூறப்புகுங் காலை**
**இருவரும் புகாஅர் ஒருவர் முன்புகிற்**
**புக்கவன் தொலையும் உய்த்தெனும் உண்மையின்**
**இருவருங் கூடி ஒருங்குடன் பட்ட**
**தெரிவுடன் உணர்ந்தோர் செப்பினர் என்ப "**

என்பது.

**பாவைப்பாடல்**

ஓர் அரிய பாவைப் பாடலை அவிநயனார் காட்டியதைக் காரிகை கூறுகின்றது (43). அது:

**" கோழியும் கூவின குக்கில் குரல்காட்டும்**
**தாழியுள் நீலத் தடங்கண்ணீர் போதுமினோ**
**ஆழிசூழ் வையத் தறிவன் அடியேத்திக்**
**கூழை நனையக் குடைதுங் குரைபுனல்**
**ஊழியு மன்னுவாம் என்றேலோர் எம்பாவாய் "**

என்பது. இஃது ஐந்து அடியான் வந்த தாயினும் ஒருபுடை ஒப்புமை நோக்கிக் கலிவிருத்தத்தின்பாற் படுத்தி வழங்கப்படும் என்கிறது காரிகையுரை.

## ஆ. காக்கை பாடினியம்

காக்கை பாடினியார் பெண்பாற் புலவர் என்பது அவர் பெயரானே விளங்குகின்றது. பாடுவதையே தொழிலாகக் கொண்ட பழந்தமிழ்க் குடியினர் பாணர் எனப்பட்டனர். அப்பாணர் குடிப் பெண்டிர் 'பாடினி' எனப்பட்டனர்.

"பாணன் சூடான் பாடினி அணியாள்" (புறம். 242)

"வாடா மாலை பாடினி அணிய" (புறம். 364)

எனச் சங்கச் சான்றோர் பயில வழங்குகின்றனர்.

காக்கையை நோக்கி'விருந்து வரக் கரைவாய்' என்று பாடிய பெண்பாற் புலவர் ஒருவர் நச்செள்ளையார். அவரைக் காக்கை பாடினியார் நச்செள்ளையார் என்றது சங்கத் தமிழ் உலகு (குறுந். 210). அவர் பெயர் வழிவழி யாகச் சூட்டப் பெற்ற பெருமையால் பெயர் பெற்றவர், இக் காக்கைபாடினியாரும், சிறு காக்கை பாடினியாரும் எனலாம்.

''காக்கையைப் பாடியமையால் 'காக்கை பாடினியார்' எனப்பட்டார்; குடிப்பிறப்புக் குறிப்பதாகாது பாடினியார்'' என்பது எனின், கோடை பாடிய பெரும் பூதனார், நோய்பாடியார், பாலை பாடிய பெருங் கடுங்கோ, பாரதம் பாடிய பெருந்தேவனார், மருதம் பாடிய இளங்கடுங்கோ என்று வரும் பெயர்களை நோக்கித் தெளிக.

காக்கைபாடினிய நூற்பாக்களும் குறிப்புகளும் தொல் காப்பிய உரைகளிலும், நன்னூல் மயிலைநாதருரை, களவியலுரை, வீரசோழியவுரை ஆகியவற்றிலும் அருகிக் காணப்படுகின்றன. யாப்பருங்கலக் காரிகையுரை யாப் பருங்கல விருத்தியுரை ஆகியவற்றில் மிகப் பலவாக எடுத்தாளப்பட்டுள்ளன.

**பாயிரம்**

காக்கைபாடினியச் சிறப்புப் பாயிரம் முற்றாகக் கிடைக்கவில்லை எனினும் நான்கடிகள் களவியலுரை, யாப்பருங்கல விருத்தியுரை ஆயவற்றால் கிடைக்கின்றன:

**"வடக்கும் தெற்கும் குணக்கும் குடக்கும்**
**வேங்கடங் குமரி தீம்புனற் பௌவமென்**
**றந்நான் கெல்லை அகவயிற் கிடந்த**
**நூலதின் உண்மை வாலிதின் விரிப்பின்"**

என்பது அப்பாயிரப்பகுதி. இதனைக் கூறும் யா. வி. உரையாசிரியர் பனம்பாரனார் கூறிய வாற்றானே எல்லை கொண்டார் காக்கை பாடினியார் என்கிறார். மேலும் ஒழிந்த காக்கைபாடினியத்து (சிறுகாக்கை பாடினியத்து),

**'' வடதிசை மருங்கின் வடுகு வரம்பாகத்**
**தென்திசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும் ''**

எனத் தென்திசையும் கடலெல்லையாகக் கூறப்பட்டதாகலான் அவர் குமரியாறுள்ள காலத்தர் அல்லர் என்பதூஉம், குறும்பனை நாடு அவர்க்கு நீக்கல் வேண்டுவதன்று என்பதூஉம் பெற்றாம்'' என்கிறார். இதனால் காக்கை பாடினியார் சிறு காக்கை பாடினியார் ஆகியோர்க்குள்ள முன்பின் கால இடைவெளி புலப்படும்.

## சில வேறுபாடுகள்

ஆசிரியர் தொல்காப்பியனாரைப்போல் காக்கை பாடினியார் தளை என்பதோர் உறுப்பைக் கொண்டிலர்; சிறுகாக்கை பாடினியார் தளை என்பதை உறுப்பாகக் கொண்டார். தொல்காப்பியர் அசைகளை நான்காகக் கொள்ள இவர் 'நேர்' 'நிரை' ஆகிய ஈரசைகளையே கொள்கிறார்; நேர்பும் நிரைபும் கொண்டார் அல்லர். இவர் மதத்தையே பிற்காலத்தார் பலரும் மேற்கொண்டனர். ஆனால் காக்கை பாடினியார் நேர் நிரை என்பவற்றைத் தனி, இணை என்றார். இவ்வழக்கு ஏற்கப்படவில்லை. பாவினம் தொல்காப்பியத்தில் இடம் பெறாதது. அப்பாவினங்களைக் குறிப்பதுடன் தனித் தனி இலக்கணமும் கூறுகிறது காக்கை பாடினியம். ஆதலால் பாவினங்கள் பல்கி வளர்ந்த காலத்தில்தான் காக்கை பாடினியம் முதலிய தொல்காப்பியப் பிந்து நூல்கள் தோன்றியிருக்கவேண்டும்.

எழுத்தளவால் சீர் கணக்கிடல் தொல்காப்பிய மரபு. காக்கை பாடினியம் முதலியன சீர்வகை அடிகளைக்

கொள்கின்றன. தொல்காப்பியனார் நாலசைச்சீர் கொள்ளார். இவர் 'நாலசையானும் நடைபெறும்' என்று வருமிடமும் குறித்தார். தொல்காப்பியர் வண்ணகம் என்றதை 'அராகம்' என ஆண்டார் இவர். இவ்வழக்குப் பின்னே பெருக்கமாயிற்று. யாப்பு மட்டுமே காக்கை பாடினியார் செய்தார் என அவர் நூற்பாக் களைக் கொண்டு அறிய வாய்க்கிறது. இவர் நூலை முதனூலாகக் கொண்டே யாப்பருங்கலம் செய்யப் பட்டது என்பது விருத்தியுரை வழியே மிக எடுத்துக் காட்டப்பட்டுள்ளது.

## முதனூல்

''காக்கை பாடினியார் முதலாகிய தொல்லா சிரியர்'', ''காக்கை பாடினியார் முதலிய மாப்பெரும் புலவர்'', ''காக்கை பாடினியார் முதலாகிய மாக்கவிப் புலவோர்'' என விருத்தியுரை பாராட்டுகின்றது.

> '' **தொல்காப் பியப்புலவோர் தோன்ற விரித்துரைத்தார்**
> **பல்கா யனார்பகுத்துப் பன்னினார்** — நல்யாப்புக்
> கற்றார் மதிக்கும் கலைக்காக்கை பாடினியார்
> சொற்றார்தம் நூலுள் தொகுத்து ''

என்னும் வெண்பா யாப்பருங்கல விருத்தியுள் வருகின்றது. இதனால் காக்கைபாடினியார் தொகை வகையில் நூல் செய்த தகைவகை புலப்படும்.

இக்காக்கை பாடினிய நூற்பாக்கள் பெரும்பாலும் மேற்கோள் வகையால் கிடைத்தமை கொண்டு ஒழுங் குறுத்தி உரை விளக்கம் கண்டு சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழக வழியாக 1974-இல் வெளியிட்டுள்ளேன். அதன் ஆராய்ச்சி முன்னுரை இன்னும் விரிந்த செய்திகளை யுடையதாகும்.

## இ. சங்க யாப்பு

'சங்க யாப்பு' என்னும் பெயருடைய நூலை யாப்பருங்கல விருத்தி எடுத்துக்காட்டிச் சில நூற்பாக்களையும் தருகின்றது. இது யாப்புப் பற்றிய நூல் என்பது பெயராலேயே அறிய முடிகின்றது. ஆனால், பாவினங்களுக்குரிய இலக்கணம் இதில் இடம் பெற்றிருப்பதால் ஐந்தாம் நூற்றாண்டு ஆறாம் நூற்றாண்டு என்று கொள்ளலாம். பாவினங்களுக்குச் சில எடுத்துக்காட்டுக் கூறும் யாப்பருங்கல விருத்தி ''பிறவும் சங்க யாப்பிற் கண்டு கொள்க'' என்கிறது.

### நூலமைதி

யா. வி. காட்டும் நூற்பாக்களில் வரும் உயிர், மெய், குறில், நெடில், வல்லினம், மெல்லினம், இடையினம், மாத்திரை, குற்றியலுகர குற்றியலிகர வடிவு ஆகியவற்றை அறிய யாப்பிலக்கணம் கூறினார் எனினும் எழுத்திலக்கணமும் விளங்க உரைத்தார் சங்க யாப்புடையார் என்று கொள்ள முடிகின்றது.

**'' அகர முதலா ஔகாரம் ஈறா**
**இசையொடு புணர்ந்த ஈராறும் உயிரே''**

**'' ககரம் முதலா னகரம் ஈறா**
**இவையீ ரொன்பதும் மெய்யென மொழிய''**

இவை உயிரெழுத்து, மெய்யெழுத்து பற்றிய நூற்பாக்கள்.

மகடூஉ முன்னிலை அமையும் நூற்பா இயற்றினார் என்பது,

**'' கண்ணிமை கைந்நொடி என்றிவை இரண்டும்**
**மின்னிடை! அளவே எழுத்தின் மாத்திரை''**

என்பதால் விளங்குகிறது.

இவர், குற்றிய லிகரமும் குற்றியலுகரமும் புள்ளி பெறுமென்பதைக் குறிக்கிறார். அரை நொடியின் இலக்கணத்தை,

**'' அரைநொடி யென்ப தியாதென மொழியின்**
**நொடிதரக் கூடிய இருவிரல் இயையே''**

என்பது நயமாக உள்ளது. இதன் வளர்ச்சியே, ''உன்னல் காலே ஊன்றல் அரையே, முறுக்கல் முக்கால் விடுத்தல் ஒன்றே'' என நூற்பா யாக்கத் தூண்டிய தெனலாம்.

தொடை வகைகளையெல்லாம் கூறிப், ''பதின் மூவாயிரத் தறுநூறன்றியும் தொண்ணூற் றொன்பதென் றெண்ணினர் புலவர்'' என்பது

**'' மெய்பெறு மரபின் தொடைவகை தாமே**
**ஐயீ ராயிரத் தாறைஞ் ஞூற்றொடு**
**தொண்டு தலையிட்ட பத்துக்குறை எழுநூற்**
**றொன்பஃ தென்ப உணர்ந்திசி னோரே''**

எனவரும் தொல்காப்பிய நூற்பாவை நினைவூட்டு கின்றது. தொடைகளைப் பற்றிய எண்ணிக்கைச் சிக்கலைத் தீர்த்தற்கு இஃது உதவுவதாக அமைதல் கூடும்.

'சங்க யாப்புடையார்' எனக் கூறப்பட்டதன்றி ஆசிரியர் பெயரையும் கூறாமையால் சங்கயாப்பு இயற்றிய ஆசிரியரைப் பற்றிய செய்தி எதுவும் அறிந்து கொள்ளக் கூடவில்லை.

சங்க யாப்பு நூற்பாக்களாக அறியப்பெறும் 24 நூற் பாக்களைத் தொகுத்துக் காட்டுகிறது மறைந்து போன தமிழ் நூல்கள்.

## ஈ. சிறுகாக்கை பாடினியம்

காக்கை பாடினியார்க்குப் பின்னர் இருந்தவர் சிறு காக்கை பாடினியார். பேராசிரியர் இவரை (காக்கை பாடினியார்க்கு) ''இளையரான சிறுகாக்கை பாடி

ஞியார்'' என்பார் (தொல். செய். 1). யாப்பருங்கல விருத்தியுடையார் காக்கை பாடினியார் நூற்பாவுக்குப் பின்னரே இவர் நூற்பாவை மேற்கோள் காட்டும் வரன் முறை மேற்கொண்டிருத்தலும் எண்ணத் தக்கது. சிறு காக்கை பாடினியார் 'தளை' என்பதோர் உறுப்பைக் கொண்டிலர் என்றும், குமரியாறு கடல் கொள்ளப்பட்ட காலத்தில் இருந்தவர் என்றும் (தொல். மரபு. 95) கூறு கிறார் பேராசிரியர்.

**பாயிரம்**

சிறுகாக்கை பாடினியார் கூறும்,

**'' வடதிசை மருங்கின் வடுகுவரம் பாகத்**
**தென்றிசை யுள்ளிட் டெஞ்சிய மூன்றும்**
**வரைமருள் புணரியொடு கரைபொருது கிடந்த**
**நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண்**
**யாப்பின திலக்கணம் அறைகுவன் முறையே''**

என்னும் தற்சிறப்புப் பாயிரத்தை எடுத்துக் கூறும் பேராசிரியர், காக்கை பாடினியார் போலத் தொல் காப்பியனார்க்குச் சிறுகாக்கை பாடினியார் ஒருசாலை மாணவர் அல்லர்; பிற்காலத்தவர் என்கிறார். இறைய னார் களவியல் உரை கூறுவதுபோல் தமிழ் இலக்கணம், எழுத்து சொல் பொருள் யாப்பு என நான்காக நடை பெற்ற நாளில் இவர் இருந்தவர் என்பது 'நாட்டியல் வழக்கம் நான்மையிற் கடைக்கண் யாப்பின திலக்கணம்' என்று இவர் கூறுமாற்றால் விளங்கும்.

**இனமுறை**

காக்கை பாடினியார் விருத்தம் துறை தாழிசை எனப் பாவினங்களைக் கூறினார். சிறுகாக்கை பாடினி யாரோ தாழிசை துறை விருத்தம் எனக் கொண்டார். இம்முறையே, தம் முறையாகக் கொண்டார் அமித சாகரனார் என்று கூறுகிறார் யாப்பருங்கல விருத்தி யுரைகாரர் (56.).

**சில இலக்கணங்கள்:**

சிறுகாக்கை பாடினியார் ஆசிரியப் பாக்களுள்,

" இறுசீர் அடிமேல் ஒருசீர் குறையடி
பெறுவன நேரிசை யாசிரி யம்மே"

" இடைஇடை சீர்தபின் இணைக்குறள் ஆகும்"

" கொண்ட அடிமுத லாயொத் திறுவது
மண்டில யாப்பென வகுத்தனர் புலவர்"

என நேரிசை யாசிரியப்பா, இணைக்குறள் ஆசிரியப்பா, மண்டில ஆசிரியப்பா ஆகிய மூவகையின் இலக்கணத்தைக் குறிப்பிடுகிறார். மண்டில ஆசிரியத்திலேயே நிலை மண்டிலம், அடிமறி மண்டிலம் ஆகிய இரண்டன் இலக்கணத்தையும் இயைத்துக் கொண்டார் எனக் கருதும்படி உள்ளது. 'கொண்ட அடிமுதலா' என்பதால் அடிமறி மண்டில இலக்கணத்தை அமைத்துக் கொள்ளும் வண்ணம் நூற்பா நூற்றுள்ளார் என்பதை நுணுகிக் கண்டு கொள்ளலாம். அதற்கென உரை காணாமையின், மூவகை ஆசிரியத்திற்கே இலக்கணம் கூறினரோ, யாப்பருங்கல விருத்தியுடையார் அடிமறி மண்டில இலக்கணம் கூறிய நூற்பாவை எடுத்துக் காட்டினர் இலரோ என மயங்க நேர்கின்றதாம்.

மறைந்துபோன தமிழ் நூல்கள் சிறுகாக்கை பாடினியாரின் 31 நூத்பாக்களை ஒழுங்குபடுத்தி வைத்துள்ளது. காக்கை பாடினியார் பெண்பாற் புலவராதல்போல் இவரும் பெண்பாற் புலவர் எனலாம்.

## உ. நத்தத்தம் (நற்றத்தம்)

தத்தனார் என்னும் பெயருடையவர் 'நல்' என்னும் சிறப்புப் பெயர் பெற்று நற்றத்தனார் என வழங்கப் பட்டுப் பின்னர் 'நத்தத்தனார்' என்றாகியிருக்கக் கூடும். 'நற்றத்தனார்' என்றும் இவர் திரிபின்றி வழங்கப் பட்டுள்ளார். 'நற்றத்தனார்' நத்தத்தனார் ஆனமையால் அவரியற்றிய 'நற்றத்தம்' 'நத்தத்தம்' எனப்பட்டிருத்தல் அறியக் கூடியதே.

**நத்தத்தர்**

நல்லூர் நற்றத்தனார் என்னும் சங்கப் புலவர் சிறு பாணாற்றுப்படை இயற்றியவர். இவர் ஓய்மானாட்டு நல்லியக் கோடனைப் பாடியவர். புறநானூற்றில் பிசிராந்தையாரைக் கண்ட நத்தத்தனார் பாடியது எனப் பாட வேறுபாடு காணப்படுகிறது (218). இவர்களின் வேறொருவர் இந்நத்தத்தர் ஆவர். அகத்தியர் மாணவர் ஒருவர் நத்தத்தர் என்பதும், திருவள்ளுவ மாலைப் பாடல் ஒன்று நத்தத்தர் பெயர் கொண்டிருப்பதும் எண்ணத் தக்கன. இனி நத்தத்தர் 'அடிநூல்' ஒன்று செய்தார் என்றும், நத்தத்திற்கே 'அடிநூல்' என்றொரு பெயருண்டு என்றும் கூறுவர். ஆனால் அடிநூல் நக்கீரர் செய்ததாக அறியப்படுதலால் 'நக்கீரர்', 'நத்தத்தர்' என ஏடு பெயர்த்தோர் மயக்கத்தால் நேர்ந்திடுக்கக் கூடுமென எண்ண வேண்டியுளது (யா. வி. 93, 95.)

**மேற்கோள்**

நத்தத்தம் பற்றிய குறிப்பும் மேற்கோள் நூற்பாக் களும் யாப்பருங்கலக்காரிகை உரையிலும் யாப்பருங்கல விருத்தி உரையிலும் இடம் பெற்றுள.

''மாவாழ்சுரம் புலிவாழ்சுரம் என்னும் வஞ்சியுரிச்சீர் இரண்டும் உளவாக வைத்து, ஒருபயனோக்கித் தூஉமணி கெழூஉமணி என்றளபெடுத்து, நேர்நடுவாகிய வஞ்சியுரிச் சீர்க்கு உதாரணம் எடுத்துக் காட்டினார் நத்தத்தனார் முதலாகிய ஒரு சாராசிரியர்'' என்கிறார் குணசாகரர். (யா. கா. 25). யாப்பருங்கல விருத்தியுடையாரும் இதனைக் குறிக்கிறார் (57). நத்தத்தில் இருந்து மேற் கோள் காட்டும் நூற்பாக்களுள்,

**'' யாப்பெனப் படுவது யாதென வினவின்**
**தூக்கும் தொடையும் அடியுமிம் மூன்றும்**
**நோக்கிற் றென்ப நுணங்கி யோரே''**

**" பாவென மொழியினும் தூக்கினது பெயரே"**

என்பவை நத்தத்தர் தாம் கூற எடுத்துக் கொண்ட நூற்பொருள் விளக்கம்போல நூலின் தொடக்கத்தில் இந் நூற்பாக்களை அமைக்கிறார் எனக் கொள்ளலாம்; யாப்பருங்கல விருத்தியும் முதல் நூற்பாவிலேயே இவற்றை மேற்கோள் கொள்கிறது.

**உரைப்பா**

அடிவரையின்றியும் நடப்பவை இவை என்பதை,

**" உரையும் நூலும் அடியின்றி நடப்பினும்**
**வரைவில என்ப வயங்கி யோரே"**

**" வாய்மொழி பிசியே முதுசொல் என்றாங்(கு)**
**ஆமுரை மூன்றும் அன்ன என்ப"** (யா. வி. 95)

என்கிறார். இவை "அடிவரை இல்லன ஆறென மொழிப" (செய். 162). "அவைதாம், நூலினான உரையினான, நொடியொடு புணர்ந்த பிசியினான, ஏது நுதலிய முதுமொழியான, மறைமொழி கிளந்த மந்திரத்தான, கூற்றிடை வைத்த குறிப்பினான" (163) என்று தொல்காப்பியர் கூறியன சுருங்கி வந்த நிலையைக் காட்டுவனவாம்.

**நூற்பா**

தனி நிலை அளபெடையும் இறுதி நிலை அளபெடையும் நேர்நேர், நிரைநேர் என அலகு கொள்வதை,

**" தனிநிலை அளபெடை நேர்நேர் இயற்றே**
**இறுதிநிலை அளபெடை நிரைநேர் இயற்றே"**

என்கிறார் (யா.வி.4).

நத்தத்தர் வெண்பா யாப்பிலும் நூல் செய்தார் என்பதை, "பொது வகையாற் சொற்றனவும்" என்னும் நூற்பா காட்டுகின்றது (யா. வி. 30).

**அந்தாதி**

அந்தாதி வரும் வகையை,

> **"அடியும் சீரும் அசையும் எழுத்தும்**
> **முடிவு முதலாச் செய்யுள் மொழியினஃ**
> **தந்தாதித் தொடையென் றறையல் வேண்டும்"**

என்கிறார் (யா. வி. 52). அந்தாதி பதிற்றுப் பத்திலே இடம் பெற்றிருப்பினும் அதன் இலக்கணம் கூறுமுறை பிற்பட்டதே என்பது அறியத் தக்கது. தொல்காப்பியர் அந்தாதித் தொடை கூறினார் அல்லர் என்பது கருதுக.

## ஊ. பல்காயம்

பல்காயனார் இயற்றிய நூல் பல்காயம். நூற் பெயரையும் ஆசிரியர் பெயரையும் யாப்பருங்கல விருத்தி உரைக்கிறது. தொல்காப்பியர் வெளிப்பட விரித்துரைத்த செய்திகளைப் பல்காயனார் 'பகுத்துப் பன்னினார்' என ஒரு வெண்பா உரைக்கின்றது (யா. வி. 1). காக்கை பாடினியார், சிறுகாக்கைபாடினியார், அவிநயனார் ஆகியோர்க்குப் பல்காயனார் காலத்தால் முற்பட்டவராக இருக்கக் கூடும் என்பது யாப்பருங்கல விருத்தியில் மேற் கோள் காட்டும் வைப்புமுறைப் பெரும்பான்மையால் விளங்குகின்றது. தொல்காப்பியர், நற்றத்தர், பல்காயனார், காக்கைபாடினியார் என்னும் வைப்பு முறையைப் பல இடங்களில் கொள்கிறார். அன்றியும் நூற்சான்றும் அதற்கு ஏற்பக் கிட்டுகின்றது எனலாம்.

**பழைமை**

தொல்காப்பியர்க்குப் பின்னை ஆசிரியர்கள் பெரிதும் நேர்பு, நிரைபு என்னும் அசைகளைக் கொண்டாரல்லர். ஆனால், "நேர், நிரை, நேர்பு, நிரைபு என்னும் நாலசைப் பொதுச் சீரும் வேண்டினார் பல்காயனார் முதலிய ஒரு சாராசிரியர்" என்கிறது (யா. வி. 10).

அடியின்றி நடப்பவை வாய்மொழி, பிசி, முதுசொல் என்னும் மூன்று என்றார் நற்றத்தனார். ஆனால் பல்காயனார் தொல்காப்பியர் கூறியவை கொண்டு, "'அவைதாம், பாட்டுரை நூலே மந்திரம் பிசியே', முது சொல் அங்கதம் வாழ்த்தொடு பிறவும், ஆக்கின என்ப அறிந்திசி னோரே'' என்கிறார் (யா. வி. 95). இவற்றால் பல்காயனார் பழமை புலப்படும்.

**'' இமிழ்கடல் வரைப்பின் எல்லையின் வழாஅத்**
**தமிழியல் வரைப்பில் தானினிது விளங்கி**
**யாப்பியல் தானே யாப்புற விரிப்பின்**
**எழுத்தசை சீர்தளை அடிதொடை தூக்கோ**
**டிழுக்கா மரபின் இவற்றொடு பிறவும்**
**ஒழுக்கல் வேண்டும் உணர்ந்திசி னோரே ''**

என வரும் இவர் நூற்பா நூலின் தொடக்கத்ததாக இருத்தல் கூடும். இதனால் இவர் யாப்பிலக்கணமே கூறினார் என்பது விளங்கும் (யா. வி. 1).

**'' உயிரீ ராறே மெய்மூ வாறே**
**அம்மூ வாறும் உயிரோ டுயிர்ப்ப**
**இருநூற் றொருபத் தாறுயிர் மெய்யே ''**

என இவர் கணக்கிட்டுக் கூறுகிறார் (2). உயிர்மெய் இரட்டு நூற்றெட்டு என்னும் பின்னூலார்க்கு இவர் முன்னூலார் போலும்!

தனிக்குறில் சொல்லின் முதல் நின்று தனியசையாகக் கொள்ளப்படும் இடங்களை, ''தற்சுட் டேவல் குறிப்பிவை அல்வழி முற்றத் தனிக்குறில் முதலசை ஆகா'' என்று கூறி ஐயமறுக்கிறார் (யா. வி. 7).

எங்கோ இருக்கும் ஒரு நூற்பாவின் தொடரை எங்கோ கொண்டு வந்து இயைத்துப் பொருள் கூறுதல் சார்ச்சி வழி ஒழுகுதல் எனப்படும். இதனைப்பல்காயனார் முதலிய ஒருசார் ஆசிரியர் எடுத்து ஓதிற்றிலர் என்கிறார் யாப்பருங்கல விருத்தியுடையார் (23).

" செயிர்தீர் செய்யுள் தெரியுங் காலை
அடியின் ஈட்டத் தழகுபட் டியலும் "

என்று இவர் கூறுவது, "அடியின் சிறப்பே பாட்டெனப் படுமே" என்னும் தொல்காப்பியத்தை நினைவூட்டுவதாக உள்ளது (செய். 34).

**தாண்டகம்**

பன்னிரு பாட்டியலில் பல்காயனார் பெயரால் உள்ள நூற்பாக்கள் தாரகை மாலை, செந்தமிழ் மாலை, தாண்டகம் ஆகியவற்றின் இலக்கணம் கூறுகின்றன.

" அறுசீர் எண்சீர் அடிநான் கொத்தங்
கிறுவது தாண்டகம் இருமுச் சீரடி
குறியது நெடிய திருநாற் சீரே "

எனக் குறுந்தாண்டக நெடுந்தாண்டக இலக்கணம் அமைக்கின்றது. இத்தாண்டகம் கூறும் பாட்டியல் இவருடையதெனின் காலப்பின்மைக்குத் தள்ளும். இல்லையேல் அப்பெயரினர் இயற்றிய பின்னூல் அஃதாதல் வேண்டும். ஏனெனில் இவர்தம் பழமை முற்காட்டப்பட்டதே.

## எ. பன்னிருபடலம்

இப்பெயரிய நூல் தொல்காப்பியம், களவியல், யாப்பருங்கலவிருத்தி முதலிய உரைகளாலும் புறப்பொருள் வெண்பாமாலையாலும் தெரிகின்றது.

அளவினால் பெயர் பெற்றது பன்னிருபடலம் என்பது இறையனார் களவியல். "பன்னிருபடலம் முதல் நூலாக வழிநூல் செய்த வெண்பாமாலை ஐயனாரிதனார்" என்கிறார் பேராசிரியர் (தொல். மர.).

" தொல்காப் பியன்முதல்
பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த
பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன் "

என்பது புறப்பொருள் வெண்பாமாலைப் பாயிரம்.

## வெட்சி

தொல்காப்பியர் பன்னிரு படலத்தின் வெட்சிப்படலம் பாடினார் என்றொரு கருத்து வழங்குகிறது. இளம் பூரணர் அதனை, ''பன்னிருபடலத்துள், தன்னுறு தொழிலே வேந்துறு தொழிலென், றன்ன விருவகைத்தே வெட்சி'' என இரண்டு கூறுபடக் கூறினாராயினும் முன் வருகின்ற வஞ்சி உழிஞை தும்பை முதலாயின எடுத்துச் செலவு எயில் காத்தல் போர் செய்தல் என்பன அரசர் மேல் இயன்று வருதலின் வேந்துறு தொழில் ஒழித்துத் தன்னுறு தொழில் எனத் தன் நாட்டும் பிறர் நாட்டும் களவின் ஆனிரை கோடலின் இவர் அரசனது ஆணையை நீக்கினாராவர். ஆதலால் அவ்வாறு கூறல் மிகைபடக் கூறலாம். அதனால், பன்னிருபடலத்துள் வெட்சிப் படலம் தொல்காப்பியர் கூறினாரென்றல் பொருந்தாது'' என்று கூறிச் சான்றுடன் மறுக்கிறார் (தொல். புறத்.).

## திணை வகை

பன்னிருபடலத்துப் பெருந்திணைப் படலத்து வரும் நூற்பா ஒன்றை யாப்பருங்கல விருத்தி, 'வஞ்சிப்பாவினுள் ஆசிரியம் மயங்கி வருவது அகத்திணை அல்லாத வழியே' என்பதற்கு மேற்கோளாகக் காட்டுகிறது. வாகை, பாடாண், பொதுவியல் ஆய மூன்றையும் புறப்புறமெனக் கொள்வனவற்றுள் பன்னிருபடலமும் ஒன்று என்பதைக் குறிக்கிறது (யா. வி. 96).

கைக்கிளை பெருந்திணை என்பவை அகத்திணைப் புறம் என்று பன்னிருபடலம் கூறுவதையும் வெளிப்படுத்து கிறது யாப்பருங்கல உரை.

'புறப்பொருள்' தானும் அறமும் இன்பமும் அகலாத தாகத் திகழவேண்டும் என்பது பன்னிருபடலக் கருத்து. இதனை,

**" ஆன்ற சிறப்பின் அறம்பொருள் இன்பமென**
**மூன்றுவகை நுதலிய துலக மவற்றுள்**
**அறனும் இன்பமும் அகலா தாகிப்**
**புறனெனப் படுவது பொருள்குறித் தன்றே "**

என்னும் நூற்பாவைக் காட்டி, அது மயங்குமாற்றையும் குறிக்கிறது தொல். புறத்திணையியலுரை.

இவர் கூறிய கணிவன் முல்லை இலக்கணம் தொல். புறத்திணை நச்சினார்க்கினியர் உரையால் அறிய வருகின்றது. இதனை, "சங்க காலத்துக்குப் பிற்பட்ட காலத்திலே சிலர் புதுவகையால் சில சூத்திரங்களைச் செய்து அவற்றைத் தொல்காப்பியர் முதலிய பன்னிருவர் பெயரால் பன்னிருபடலம் என்று பெயரிட்டு அமைத்துக் கொண்ட நூல்" என்கிறது 'மறைந்த தமிழ் நூல்கள்' (314), என்னும் நூல்.

## ஏ. மயேச்சுரர் யாப்பு

யாப்பருங்கல விருத்தியாரால் பெரிதும் போற்றப் படும் ஒருவர் மயேச்சுரர். இவர்க்குப் பேராசிரியர் என்னும் பெயரும் உண்டு என்பது விளங்குகின்றது. அன்றியும் இவரை நல்லாசிரியர் (82, 87) என்றும், தொன்னூற் கவிஞர் (83) என்றும் கூறுகிறார்

### அடை நலம்

மயேச்சுரர் என்னும் பெயரமைந்த பேராசிரியரை, "பிறை நெடுமுடிக் கறைமிடற்றரனார் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் (பக். 53, 133), நீர்மலிந்த வார்சடையோன் பேர் மகிழ்ந்த பேராசிரியர் (117, 263, 268), வாம மேகலை மாதை யோர்பாகனார் நாமம் மகிழ்ந்த நல்லாசிரியர் (136), உயரும் புரம் நகாச்செற்றவன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் (169), திரிபுர மெரித்த விரிசடை நிருத்தர் பேர் மகிழ்ந்த பேராசிரியர் (221), பெண்ணொரு பாகன் பெயர் மகிழ்ந்த பேராசிரியர் (293), காம வேளைக்கறுத்த

புத்தேள் நாமம் தாங்கிய நல்லாசிரியர் (300, 341, 349), திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளின் திருப்பெயர் மகிழ்ந்த தொன்னூற் கவிஞர் (312) என்றெல்லாம் பாராட்டுகிறார். இவ்வாறு பிறர் எவரையும் பாராட்டினார் அல்லர். ஆதலால் மயேச்சுரர்க்கும் யாப்பருங்கல விருத்தியுடையார்க்கும் தனிப்பேருறவு ஒன்று இருந்திருக்க வேண்டும். அவ்வுறவு ஆசிரியர் மாணவர் உறவாக இருக்கலாம். சமய வழிப்பட்ட உறவாக இருக்கலாம் எனின் 'இறையனார்' பெயர் வருமிடத்தும் வாளா கூறிச் செல்லார். 'காரைக்காற் பேயார்' என்ற அளவில் அமையார்.

## இருவகை மொழிவழி

யாப்பருங்கல விருத்தியுடையார் தமிழாசிரியர்களை இருவழிப்படக் காண்கிறார். அவர் தமிழ் வழித் தமிழாசிரியர், வடநூல் வழித் தமிழாசிரியர் என்பார். அவருள் மயேச்சுரர் வடநூல் வழித் தமிழாசிரியர் என்பது அறியக் கிடக்கிறது. ''ஒருசார் வடநூல் வழித் தமிழாசிரியர், நேர் நிரை நேர்பு நிரைபு அசைகள் ர, ட, ரு, டு வடிவாக இடுவாரும் உளர்'' என்கிறார் (5). அவ் வடநூல் வழித் தமிழாசிரியர் மயேச்சுரர் என்னும் பேராசிரியர் என அறிய வருதலாலும், யாப்பருங்கல விருத்தியுடையார் வடமொழிப் புலமையிலும் சிறந் திருந்தவர் என்பது அறியக் கிடத்தலாலும் அவர்தம் வடமொழிப் பேராசிரியர் இம்மயேச்சுரர் ஆக இருக்கக் கூடும். மயேச்சுரர் சிவநெறிச் சிந்தையராகவும் திகழ்ந்தமை இவ்வாறெல்லாம் அடைநயம் தொடை பெறப் பாராட்டப்படும் சீர்மைக்கு இடமாகி இருக்கலாம்.

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவின் இலக்கணத் தைப் பிறரினும் இவர் மிக விரிவாகக் கூறுகின்றார். இவர் வழியிலே எடுத்துக்காட்டுக் காட்டுகிறார் யா. வி. உரை யாசிரியர்.

**இனம்**

தாழிசை துறை விருத்தம் எனப் பாவினத்து இலக்கணமும் இவர் கூறுதலால் இவர் மிக முற்பட்டவர் அல்லர் என்றும், ஐந்தாம் ஆறாம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் ஆதல் கூடும் என்றும் கொள்ளலாம்.

**'' பாவும் இனமும் மேவிய அன்றி**
**வேறுபட நடத்துங் கூறுபட வரினும்**
**ஆறறி புலவர் அறிந்தனர் கொளலே ''**

என்று புறனடை கூறுவதால் பலவகைப் புத்திலக்கணங் களுக்கும் இடந்தருகின்றார்.

வஞ்சிப்பாவிற்கு மூன்றடிச் சிறுமை பிறர் கூற மயேச்சுரர் முதலிய ஒருசார் ஆசிரியர் ஈரடிச் சிறுமை கொண்டதைக் குறிப்பிடுகிறார் யா. வி. உரைகாரர் (93). இவற்றால் சில புதுமைகளுக்கு இவர் இடமாக இருந்தார் என்பது புலப்படும்.

# 8. புறப்பொருள் வெண்பாமாலை

*பொருளிலக்கணத்தின் ஒரு பகுதியாகிய புறப் பொருளைப் பற்றி வெண்பா யாப்பில் ஓர் ஒழுங்குறத் தொடுக்கப்பட்ட நூல், புறப்பொருள் வெண்பாமாலை எனப்பட்டது. 'வெண்பாமாலை' என்பதும் இது.*

*இதனை இயற்றியவர் சேரவேந்தராகிய ஐயனாரி தனார் என்பார்.*

**" ஓங்கிய சிறப்பின் உலகமுழு தாண்ட**
**வாங்குவில் தடக்கை வானவர் மருமான்**
**ஐயனா ரிதனார்"**

*என்று வரும் சிறப்புப்பாயிரப் பகுதியாலும்,*

**" மெய்யி னார்தமிழ் வெண்பா மாலையுள்**
**ஐயனா ரிதனார் அமர்ந்துரைத் தனவே"**

*என்று வரும் ஒழிபியல் நூற்பாப் பகுதியாலும்* (18) *இதனை அறியலாம்.*

**ஐயனாரிதனார்**

*ஐயாரிதனார் என்னும் பெயர் திருவிடைக் கழியைச் சார்ந்த குரோஞ்சேரியிலுள்ள சாத்தாவின் (சாஸ்தா) பெயர் என்பர். சிலப்பதிகாரத்தில் கூறப்படும் பாசண்டச் சாத்தன், சாத்தனார் முதலிய பெயர்கள் எண்ணத் தக்கன. 'ஐயனார்க்கு இனியன்' என்பதே ஐயனாரிதன் என்பதன் பொருளாகும். 'நச்சினார்க்கினியன்' என்னும்*

உரையாசிரியர் பெயரை இப்பொருள் நினைவூட்டுகின்றதென்க.

**சமயம்**

வெண்பாமாலையின் கடவுள் வாழ்த்து மூத்தபிள்ளையாரையும், சிவபெருமானையும் பற்றியிருத்தலால் இவர் சமயம் சிவசமயமாதல் வெளிப்படை. ஆயினும் பிற சமயங்களையும் உரிய சிறப்பால் இவர் போற்றுதல் நூலுள் வரும் சில துறைகளுக்கு இவர் படைத்துக் கூறும் வெண்பாக்களால் இனிது விளங்கும்.

**'' பூவை விரியும் புதுமலரிற் பூங்கழலோய்**
**யாவை விழுமிய யாமுணரேம் — மேவார்**
**மறத்தொடு மல்லர் மறக்கடந்த காளை**
**நிறத்தொடு நேர்தரு தலான்''**

என்பது இவர் பாடும் பூவைநிலை (192).

**காலம்:**

இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பேராசிரியர், நச்சினார்க்கினியர், புறநானூற்று உரைகாரர், பரிமேலழகியார் ஆகியோரால் இந்நூல் எடுத்தாளப்பட்டுள்ளது. இளம்பூரணர் காலத்திற்கு இந்நூல் முற்பட்டது என அறிய வருதலால் இதன் காலம் ஒன்பதாம் நூற்றாண்டு எனலாம்.

**நூல்நிலை**

இந்நூல் 'பன்னிரு படலம்' எனப்படும் நூலுக்கு வழி நூல் எனப் பாயிரத்தாலும் பேராசிரியர் உரையாலும் விளங்குகின்றது.

**'' மன்னிய சிறப்பின் வானோர் வேண்டத்**
**தென்மலை யிருந்த சீர்சான் முனிவரன்**
**தன்பால் தண்டமிழ் தாவின் றுணர்ந்த**
**துன்னருஞ் சீர்த்தித் தொல்காப் பியன்முதற்**

**பன்னிரு புலவரும் பாங்குறப் பகர்ந்த**
**பன்னிரு படலமும் பழிப்பின் றுணர்ந்தோன்''**

என்பது பாயிரம். ''பன்னிருபடலம் முதனூலாக வழி நூல் செய்த வெண்பாமாலை ஐயனாரிதனாரும் இது கூறினார்'' என்பது பேராசிரியருரை (மரபு.94). இந்நூல் பன்னிரு திணைகளைக் கொண்டிருத்தலும் சான்று.

**நூலளவு**

வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை, பாடாண் என்னும் ஒன்பது திணைகளுக்கும் திணை இலக்கணத்தைத்துறை வகையால் தொகுத்துக் கூறும் ஒன்பது நூற்பாக்கள் இந்நூலின் திணைதோறும் முதற்கண் உள்ளன. பத்தாவது பொதுவியல், சிறப்பிற் பொதுவியல் காஞ்சிப் பொதுவியல் முல்லைப் பொதுவியல் என நான்கு நூற்பாக்களையும், கைக்கிளைப் படலம் ஆண்பாற் கூற்று, பெண்பாற் கூற்று என இரண்டு நூற் பாக்களையும் பெருந்திணைப்படலம் பெண்பாற் கூற்று, இருபாற் பெருந்திணை என இரண்டு நூற்பாக்களையும் ஒழிபு ஒரு நூற்பாவையும், புறம், புறப்புறம் என்பவற்றை விளக்கும் ஒரு நூற்பாவையும் கொண்டு 19 நூற்பாக்களை யுடையதாய் நூல் அமைந்துள்ளது. இந்நூற்பாக்களின் துறையை விளக்கும் 'கொளு' என்னும் சிறுவிளக்கம் ஒழிபு நீங்கிய பன்னிரு திணைக்கும் உள்ளது. அவற்றின் எண்ணிக்கை 341. கொளுவின் பொருளை விளக்கும் இலக்கியமெனத் திகழும் வெண்பாக்கள் 341-உம், மருட்பாக்கள் 20-உம் ஆக 361 பாக்கள் உள்ளன.

**நூலமைப்பு:**

அமைப்பு முறை:

1. வெட்சிப்படலம்.
14. பாதீடு

**கொளு**

**"கவர்கணைச் சுற்றம் கவர்ந்த கணநிரை
அவரவர் வினைவயின் அறிந்தீந் தன்று"**

**வெண்பா**

**"ஒள்வாண் மலைந்தார்க்கும் ஒற்றாய்ந் துரைத்தார்க்கும்
புள்வாய்ப்பச் சொன்ன புலவர்க்கும்—விள்வாரை
மாறட்ட வென்றி மறவர்தம் சீறூரிற்
கூறிட்டார் கொண்ட நிரை"**

"கைக்கிளை தானே வெண்பா ஆகி, ஆசிரிய இயலான் முடியவும் பெறுமே" என இலக்கணம் வருதலால், கைக்கிளைப் படலத்திற்கு எடுத்துக்காட்டு வெண்பா முன்னாக வந்து ஆசிரிய நிலையான் முடியும் மருட்பாவில் பாடினார்.

**சிறப்பு**

அகத்திணை ஏழாதல் போல், புறத்திணையும் ஏழே எனத் தொல்காப்பிய உரையாசிரியர்கள் வலியுறுத்தினர். அகங்கை ஏழு என்றால், புறங்கையும் ஏழே எனவும் எடுத்துக் காட்டினர். அதனால், தொகை நூல்களுக்குத் தொல்காப்பிய வழியிலேயே இலக்கணம் கூறினர். 'புதுவன புகுதல்' என்னும் காலவகையால் அமைந்த பன்னிருபடலத்தை முதனூலாகக் கொண்ட இந்நூல் புறப்பொருள் இலக்கண உலகில் தனிச்சிறப்புடையதாம். ஏனெனில் இதற்குப்பின் புறப்பொருள் கூறும் தனி இலக்கண நூல்கள் எவையும் தோற்ற முற்றில; ஐந்திலக்கணங் கூறவெழுந்த நூல்களும் இத்தகைய விரிவையும் சிறப்பையும் கொண்டில. இவை இவ்வெண்பாமாலையின் சிறப்புகள் எனலாம். இன்னொன்று; நூற்பாவும், நூற்பாவின் பொருள் விளக்கும் கொளுவும், அக்கொளுவுக்கு எடுத்துக்காட்டுமென முத்திறத்தானும் முந்நூல் போல் ஒரு நூலாகிய சிறப்பும் இந்நூற்கு உண்டு.

**அமைப்புப் புதுமை**

வெட்சி கரந்தை வஞ்சி காஞ்சி உழிஞை நொச்சி தும்பை ஆகிய ஏழு திணைகளும் புறத்திணைகள் என்றும், வாகை பாடாண் பொதுவியல் ஆகிய மூன்று திணைகளும் புறப்புறத் திணைகள் என்றும் புறப்பொருள் வெண்பா மாலை கூறுகின்றது. தொல்காப்பியர் கரந்தையைத் தனித் திணையாகக் கொள்ளார்; வெட்சியுள் அதனை அடக்குவார், அவ்வாறே நொச்சியை உழிஞையுள் அடக்குவார். பொதுவியல் எனக் கொள்ளார். கைக்கிளை, பெருந்திணை என்பன அகத்திணை சார்ந்தவை யாக வைப்பார். ஆகப் பொருள் வகை பழமைப் பட்டனவே எனினும் அமைப்பு வகை மாறுபட்டன என்க.

**''கன்னின்றான் எந்தை கணவன் களப்பட்டான்
முன்னின்று மொய்யவிந்தார் என்னையர்—பின்னின்று
கைபோய்க் கணையுதைப்பக் காவலன் மேலோடி
எய்போற் கிடந்தான்என் ஏறு''**

என்பது பழம்பாடற்பிழிவு. கதையாய், நாடகமாய், பாவிகமாய்ப் புனைந்து கொள்ளத்தக்க பொருளை யுட் கொண்ட பாடல் (176).

குற்றுழிஞை என்பதனை முக்கொளுக்களால் விளக்கு கிறார் :

**''கருதாதார் மதிற்குமரிமேல்
ஒருதானாகி இகன்மிகுத் தன்று''**

**''வளைஞரல வயிரார்ப்ப
மிளைகடத்தலும் அத்துறையாகும்''**

**''பாடருந்தோற் படைமறவர்
ஆடலொடடையினும் அத்துறையாகும்''** (107—109).

இவ்வைப்பு முறையும் கொளுவமைப்பும் அகத்துறை நூல்கள் சிலவற்றில் அமைந்துள்ள துறை விளக்கக் கொளுக்களுக்கு முன்னோடி எனலாம்.

## அ. வெண்பாமாலை உரை

### உரையாசிரியர்

வெண்பாமாலையின் உரையாசிரியர் சாமுண்டி தேவ நாயகர் என்பவர். இவர், 'சயங்கொண்ட சோழ மண்டலத்து மேற்கானாட்டு மாகறலூர் கிழார்' எனப்படுதலால் (செந்தமிழ் 1 : 45 - 6) நாடும் ஊரும் அறியப்படுகின்றன. பின்னாளிலும் இம் மாகறலூரில் கார்த்திகேய முதலியார் என்பார் இருந்து மொழிநூல் முதலியன செய்தமை அறியத்தக்கது. இவர் 'கிழார்' எனப்படுதலால் உழவர் குடியினர் என்பது விளங்கும். இவர் காலம் கி.பி. 13 அல்லது 14ஆம் நூற்றாண்டு என்பர். அற்றை எருமையூராகிய இற்றை மைசூரில் சாமுண்டி ஈசுவரி கோயிலுண்மை இவர் பெயரை நினைவூட்டுகின்றது.

### உரை

இவருரை பொழிப்புரையாய் அமைந்தது; பாடல் சொற்கிடந்தவாறே உரை செல்வது. பாயிரத்திற்கு உரையெழுதிய இவர் பாயிரம் உரைத்த வெல்லாம் உரைத்துக் கொள்க என்று விடுத்துச் செல்வதால் இவர் தம் சுருக்கவுரை நோக்குப் புலப்படும். எனினும் மிக அரிதாக வேண்டுமிடத்து விரித்தும் எழுதுகிறார் :

''இடரெட்டாவன :

**''விட்டில் கிளிநால்வாய் வேற்றரசு தன்னரசு
நட்டம் பெரும்பெயற்கால் எட்டு''** (205)

''ஆறு ஏழாவன :

**''நாடிய நட்புப் பகைசெலவு நல்லிருக்கை
கூடினரைப் பிரித்தல் கூட்டலா—நீடிலா
வேட்டங் கடுஞ்சொல் மிகுதண்டம் சூதுபொருள்
ஈட்டங்காள் காமமிவை ஏழு''**

ஒன்று, ஆன்மா; இரண்டு, புண்ணியம் பாவம்; மூன்று, காமம் வெகுளி மயக்கம்; உற்சாக சக்தி பிரபுசக்தி மந்திர சக்தி; நான்கு, சாமதான பேத தண்டம்; ஐந்து, சத்தப் பரிச ரூப ரத கந்தம்; ஆறு, படை குடி கூழ் அமைச்சு நட்பு அரண் என்று மாம்'' (225).

வெண்பா 65, 187 உரையும் காண்க.

**உரைமுறை**

இவர் பொழிப்புரை எழுதி, பாடல் தொடர்களை இவ்வாறு 'கூட்டுக' என்றும், 'என்க' என்றும் பெரும்பாலும் இயைபு காட்டுகிறார். ''என்பது சூத்திரம்; எந்நுதலிற்றோ எனின் ... நுதலிற்று'' என நூற்பாக்களுக்கு நுதலுதல் உரைக்கிறார். ஏட்டு வழியிலோ வாய்மொழி வகையிலோ பிறிதுரைகளும் வழங்கப்பட்டன என்பது, 'உரைப் பாரும் உளர்', 'பொருளுரைப்பாரும் உளர்' என்னும் வாய்பாட்டில் இவர் எழுதுவதால் புலனாகும். இவரே ஈருரை எழுதுவதும் காணப்படுகின்றது (2).

பாடமும் உரை வேறுபாடும் காட்டுவதும் அரிதாகக் காணப்படுகின்றது. 'குடக்கணீ கொண்டுவா வென்றான்' என்பதை, ''குடக்கணா கொண்டுவா வென்றான் என்று பாடமோதி மேற்பாற் றொழுவத்திற் பசுவை அடித்துக் கொண்டுவா வென்றான் என்று பொருளுரைப்பாரும் உளர்'' என்கிறார் (4).

ஒரு சார் நெருக்க முடைய துறைகளுள் அமைந்த வேறுபாடுகளை எடுத்துக் காட்டுவதை வழக்கமாகக் கொள்கிறார் (60, 63, 94, 97, 162, 210).

யாரை, யாவை என வினா எழுப்பிக்கொண்டும் விடையிறுக்கிறார் (1).

''வெட்சித் திணைப்பாட்டு இரண்டும் துறைப் பாட்டுப் பத்தொன்பதும் முடிந்தன''; ''கரந்தைப் பாட்டு

ஒன்றும் துறைப்பாட்டுப் பதின்மூன்றும் முடிந்தன'' எனப் பகுதிதோறும் பாடல் அளவை வரையறுத்துக் கூறுகிறார்.

## சொல்லாட்சி

தண்டமிழ் தாவின்றுணர்ந்த என்பதற்கு, ''குளிர்ந்த தமிழை வருத்தமின்றி யறிந்த'' என எளிய இனிய உரை தருகின்றார். கற்பார், கற்பிப்பார் தகவை வெளிப் படுத்தும் உரை இது. 'தமப்பன்' என்னும் முன்மை ஆட்சியைக் கூறுகிறார்; தமக்கை, தமையன் என்பன போலத் தமப்பன் என்றிருந்த பழவழக்கே தகப்பன் ஆயிற்று என்பதை அறிந்துகொள்ளச் செய்கின்றார் (48). உறக்கமிடுதல் என்பது உயிர்போதலென நயமாகக் கூறுகிறார் (78). முனிவரன் என்பதற்கு 'இருடிகளில் வரனாயுள்ளான்' என்று இவர் உரை கூறுவது வரன் என்பதைப் பகுத்துரைத்த உரையாகும்.

'வேந்தன் மனம்' என்பதற்குக் குறிப்பு விளக்கமாக 'வேந்தன் மனம் வெற்றியையே நினையும்' என்று இவர் கூறுவது தெளிவுறுத்துகிறது.

தொல்காப்பியம், திருக்குறள் முதலியவற்றிலிருந்தும் மேற்கோள் காட்டியும் வரைகின்றார். 'வேந்தனும் வேந்து கெடும்' என்பதிலுள்ள வேந்து 'இராச்சியம்' என்கிறார் (68). அரிதாக இலக்கணக் குறிப்பு வரை கின்றார். 'குருகு பெயர்க் குன்றம்' என நூலாசிரியர் உரைத்திருப்பவும், இவர் தம் உரைக்கண் வடசொற்கள் பல பெய்தெழுதுதல் அக்கால நிலையைக் காட்டுகின்றது. சுருங்கிய உரை எனினும் அதனால் பெரிய பயனுண்டாதல் கற்பார் அறியக் கூடியதே.

# 9. தமிழ் நெறி விளக்கம்

விளக்குப் போன்ற நூல் விளக்கம் எனப்படுதல் வழக்கு. 'பெரும் பொருள் விளக்கம்' என்பது, தமிழ் நெறி விளக்கம் போன்றதொரு பழநூல். அது மறைந்த நூல்களுள் ஒன்றாகிவிட்டது. அகப்பொருள் விளக்கம், இலக்கண விளக்கம், தொன்னூல் விளக்கம் என்பவை விளக்கப் பெயரால் இன்றும் விளங்கி வரும் நூல்கள்.

## பதிப்பு

தமிழர் ஒழுகலாறு ஆகிய தமிழ் நெறியை விளக்கு வதாம் இந்நூலை இயற்றியவரின் பெயரைத் தானும் அறிந்து கொள்ள முடியவில்லை. இதன் முற்பகுதி பிற்பகுதி ஆகிய இருபாலும் சிதைந்த நிலையில் கிடைத்த ஓர் ஏட்டைக் கொண்டு 'தள்ளாப் பொருளியல்பிற் றண்டமிழ்' எனப் புலவர்களால் புகழப்படும் அகப் பொருட் பகுதியையேனும் அழிந்து படாமல் காக்க வேண்டுமென்னும் ஆர்வத்தால் பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதரால் 1937-இல் பதிக்கப்பட்டது.

## நூல்

பொருளியல் என்னும் ஒரோ ஒரு பகுதியில் 25 நூற் பாக்கள் அளவில் கிடைத்துள்ளன. அப்பொருளியலில் வரும் முதல் நூற்பா,

> " அகத்ததும் புறத்ததும் ஆயிரு பகுதியின்
> மிகுத்ததும் ஆகி விரிந்தது பொருளே "

என்கிறது. இதனால் **அகப்பொருளும், புறப்பொருளும்,** அவ்விரு பொருளினும் மிகுத்துத் தோன்றியதாம் **அகப்புறப்பொருளும்** என்னும் மூன்று பொருட் கூறுகளும் இப்பொருளியலில் இடம் பெற்றிருந்திருக்க வேண்டுமென உறுதி செய்யலாம். ஆனால், அகப்பொருட் களவினை முதற்கண் கூறும் 21 நூற்பாக்கள் முற்றாகக் கிடைத் துள்ளன. கற்பில் அறத்தொடு நிலை, உடன் செலவு, சேயிடைப்பிரிவு ஆயிடைப்பிரிவு என்றவை உள. இறுதி நூற்பாவுக்குரிய மேற்கோள் விளக்கம் ஒரு பாதியளவுடன் நின்றுவிட்டது.

அகத்திணைக்கு இன்றியமையாத முதல் கரு உரிப் பொருள்களை முதல் 13 நூற்பாக்களில் கூறுகிறார். பின்னர்க் **களவு** பற்றிக்கூறும் இவர், களவு கந்தருவத் துடன் ஒப்பது என்று கூறி இயற்கைப்புணர்ச்சி, பாங்கற் கூட்டம், தோழியற் கூட்டம் — பகற்குறி, தோழியற் கூட்டம் — இரவுக்குறி, வரைவுகடாதல், உடன்போக்கு வலித்தல் என்னும் ஆறு பகுப்பில் கூறுகிறார். இவ் வாறு பகுப்புள்ளும் சுட்டப்படும் துறைகள் 81.

**கற்பு** என்னும் பிரிவில் அமைந்துள்ள நான்கு பகுப்பிலும் இவர் சுட்டும் துறைகள் 54. ஆக 135 துறை விளக்கங்கள் இந்நூலால் அறிய வருகின்றன.

குறிஞ்சி, பாலை, முல்லை, மருதம், நெய்தல் என்னும் முறை வைப்பை இவர் ஆள்கிறார். குறிஞ்சியைக் 'குறுஞ்சி' என்றும், மகிழணனை 'மகுணன்' என்றும் கந்தருவத்தைக் 'கந்திருவம்' என்றும் (3, 8, 14) ஆள்கிறார்.

பிரிவுகளைச் சேயிடைப் பிரிவு, ஆயிடைப்பிரிவு என இரண்டாக்கிக் கூறுதல் தனிப்பகுப்பு முறையாகும். சேயிடைப் பிரிவு, அயலிடப்பிரிவு; ஆயிடைப்பிரிவு, அவ் விடத்துப்பிரிவு. ஓதல், பொருள், தூது, துணை, பகை

ஆய பிரிவுகள் சேயிடைப்பிரிவு; பரத்தையிற் பிரிவு ஊரும் சேரியும் பிரியும் பிரிவாகலின் ஆயிடைப் பிரிவு.

**முக்கட்கூட்டம்**

இனி இவர் கற்பு என்பதை,

> **" முக்கட் கூட்டம் முதலா நான்கும்**
> **தொக்கிய ஒழுக்கம் கற்பெனப் படுமே" (21)**

என்கிறார். இதில் வரும் முக்கட்கூட்டம் என்பதன் ஆட்சி புதுமையது. இதனைக் களவியல் உரை, களவியல் காரிகை உரை, யா. வி. உரை ஆகியவை சுட்டுகின்றன. அவற்றில் 'மக்கட் கூட்டம்' என்ற பாடம் உண்மையையும் உ. வே. சா. குறிக்கிறார். "முக்கட்கூட்டம் இன்ன தென்று இப்பொழுது விளங்கவில்லை. மக்கட் கூட்டம் என்று இருத்தல் கூடுமென்று ஊகிக்கச் செய்கின்றது. சூத்திரத்தை மட்டும் நோக்குகையில் முக்கட்கூட்டம் என்பதற்கு அறத்தொடு நிலை என்னும் பொருள் கொள்ளக் கிடக்கின்றது. இந்த ஐயமும் வேறு பிறவும் நாளடைவில் தெளிவாகுமென்று எண்ணுகிறேன்." என்கிறார் (முகவுரை V, VI).

முக்கட்கூட்டம் என்பதே சரியான வடிவம். கண் இடப்பொருளது. முக்கண் மூவிடம். அம்மூவிடங்கள் இயற்கையால் கூடுமிடம், தோழியால் கூடுமிடம், தோழனாற் கூடுமிடம் என்பவை.

**சொல்லாட்சி**

ஓரிரு வேற்றுச் சொற்களையன்றிப் பிறசொற்கள் விரவாத தனித் தமிழ் நடையில் நூல் செல்கின்றது. அரப்பமைவாரி (3),கொழுங்கார் ஒழிபனி(4), பொருணிலை அந்தி (5),ஒருக்கினம் (ஆடு, ஆ, எருமை ஆகிய ஒன்றுபட்ட இனம்), முதுவாய்க் கட்டுவி (22) என அடைநயம்படத் தொடுப்பதும், இருணிலை, கவைநர், பழவர், கைத்தாய், அழப்பறை என அரிய இலக்கிய ஆட்சிகளை நயமாய்

ஆள்வதும் சிறக்கின்றன. புல்லரிசி கொண்டு ஆக்கிய அவலைத் தருப்பணம் என்கிறார் (10), நெய்தற்பறை அல்லது இரங்கற்பறையை அழப்பறை என்பது புத்தாட்சி.

**வேறுபாடு**

தமிழ்நெறி விளக்க அகப்பொருட் பகுதிக்கும் பிற நூல்கள் வழியே அறியப்படும் அகப்பொருட் பகுதிக்கும் சில வேறுபாடுகள் உள. அவை: களவுக்கு முன் கைக்கிளையைக் கூறாமை; களவின் பகுதியாகப் பெரும்பாலோரால் கூறப்படும் அறத்தொடுநிலை, உடன்போக்கு என்பவற்றைக் கற்பினுள் கூறுதல்; கூற்றுக்கு உரியவராகக் கூறப்படாத நற்றாய் கூற்று இடம் பெறுதல் என்பவை அவை.

**காலம்**

இந்நூலையும் உரையையும் பார்க்கையில் இரண்டும் ஓராசிரியராலேயே இயற்றப்பட்டன என்று தோன்றுகின்றது என்கிறார் உ. வே. சா. பேராசிரியர் உரை, களவியற் காரிகை, பரிமேலழகர் உரை ஆகியவற்றில் இந்நூல் சுட்டப்படுதலால் அவர்கள் காலத்திற்கு முற்பட்டது இந்நூல் என்க. இதன் காலத்தைப் பத்தாம் நூற்றாண்டு என்கிறது இலக்கிய வரலாறு — 13ஆம் நூற்றாண்டு (174).

இவ்வுரை மேற்கோள் பாடல்களில் 'வழுத்தூர் மதிதரன்' என்பான் (6, 32, 52) சிறப்பப் பேசப்படுகின்றான். அவ்வழுத்தூர் தஞ்சை மாவட்ட ஐயம்பேட்டைக்கு வடக்கே குடமுருட்டியாற்றின் தென்கரையில் உள்ளது என்பர். இவனைப் பற்றிய குறிப்புக் கிட்டுமாயின் இவ்வாசிரியரைப் பற்றிய காலமும் தெளிவாகும்.

இந்நூலில் உள்ள மேற்கோள் இலக்கியப் பாடல்களுள் மிகப்பல களவியல் காரிகையிலும் மேற்கோளாக வந்துள. சில பாடல்கள் நம்பியகப் பொருள் விளக்க மேற்

கோளாகவும் வந்துள. சங்கநூற் பாடல்கள் மிக அரிதாகவே ஆளப்பட்டுள்ளன. துறைக்குத் தக்க அளவில் அதன் பொருள் விளக்கமாக அமையுமாறே இம் மேற்கோள் பாடல்கள் இயற்றப்பட்டிருக்க வேண்டும் எனக் கருதுமாறு உள்ளன. அத்தகைய பாடல்கள் 173 உள்ளன.

**" இனையல் வாழி பிரிவொன் றிலனே**
**நனைமலர் நறும்பூங் கோதை**
**அமையேன் நின்னையான் அகன்ற ஞான்றே" (1)**

இது பிரிவச்சம் என்பதற்கு எடுத்துக் காட்டு. இவ்வாறு உரிப்பொருளை விளக்குவதாக மூன்றடி அல்லது நான்கடி அளவாலேயே மேற்கோள்கள் அமைந்துள்ளன.

**" தீயினும் வெய்ய என்குவை யாயின்**
**யாவதும் இனிய கானம்**
**சேயுயர் சிலம்பு நின்னொடு செலினே" (90)**

என்பது பட்டினப் பாலையில் வரும் அகப்பொருட் பிழிவெனத் தகும். சங்கப் பாடற் கருத்துகளை வாங்கிக் கொண்டு யாக்கப் பெற்றமை இவ்வாசிரியர் அகப்பொருட் புலமைப் பரப்பை நன்கு விளக்குகின்றது.

இந்நூல் முற்றாகக் கிடைத்திருந்தால் தமிழ்ப் பொருளியல் சிறப்புக்குத் தக்க சான்றாகத் திகழ்ந்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

# 10. யாப்பருங்கலம்

யாப்பாகிய அரிய அணிகலம் என்றும், யாப்பாகிய கடலைக் கடக்க அமைந்த அரிய கலம் (கப்பல்) என்றும் பொருள் கொள்ள அமைந்த அரிய நூல். இதனை இயற்றிய ஆசிரியர் அமித சாகரனார்.

## பெயர்

இவர் பெயரை யாப்பருங்கலப் பாயிரம்,

**''அளப்பரும் கடற்பெயர் அருந்தவத்தோன்''**

என்கிறது. அளப்பரும் கடற்பெயர் என்பது 'அமித சாகரம்'; அப்பெயரை உடையவன் அமிதசாகரன் என்க.

யாப்பருங்கலக் காரிகையின் உரையாசிரியர், ''இந்நூல் யாவராற் செய்யப் பட்டதோ எனின், ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது'' என்பதும் அறியத் தக்கது. இந்நூலுக்குப் பின்னே, காரிகையையும் இவரே செய்தார் ஆகலின், அந்நூல் உரை அவ்வாறு கூறிற்று என்க.

யாப்பருங்கல விருத்தியின் முதற்பதிப்பு 'அமிர்த சாகரனார் இயற்றிய யாப்பருங்கலம்' என்றே வெளிப் பட்டது. அன்றியும் காரிகை, வீரசோழியம் ஆகியவற்றை எடுத்துக் காட்டி அமிர்தசாகரனார் என்பது ஐயுறவின்றித்

துணியப்படும் என்றும் பதிப்பாசிரியர் பவானந்தர் குறித்தார் (1916). பெரும் பேராசிரியர் உ. வே. சா. நூல்நிலைய வெளியீட்டிலும் அப்பெயரே குறிக்கப் பட்டது. "அமிதசாகரர் என்று இருத்தல் வேண்டும் என்று சிலர் கருதுவர். ஆனால் இந்நூலின் பரிசோதனைக்கு எடுத்துக்கொண்ட எல்லாச் சுவடிகளிலும் இப்பெயர் அமிர்தசாகரர் என்றோ அமுதசாகரர் என்றோ காணப் படுகின்றதே ஒழிய ஒன்றிலும் அமிதசாகரர் என்ற பெயர் இல்லை. கிடைத்த யாப்பருங்கலம் ஏடுகளின் தலைப்பிலும் அமிதசாகரர் என்ற பெயர் இல்லை. வீரசோழிய உரையிலும் அமுதசாகரனார் என்றே எடுத்தாளப்படுகிறது" என்று நூலாசிரியர் பெயர் விளக்கப்பட்டுள்ளது. அமிதசாகரர் என்பதே இவர் பெயர் என்பதை அனவரத விநாயகர் ஆனந்தபோதினி இதழில் (12:1) 1919ஆம் ஆண்டிலேயே எழுதினார். ந. மு. வேங்கடசாமியாரும் செந்தமிழில் எழுதியதுடன் கழகம் வெளியிட்ட காரிகைப் பதிப்பிலும் அமிதசாகரர் என்றே குறித்தார். நிற்க.

**ஆசிரியர்**

தஞ்சைமாவட்டம் மயிலாடுதுறையை (மாயூரத்தை) அடுத்துள்ள நீடூர் சிவன் கோயில் தெற்குத் திருமதிலில் உள்ள கல்வெட்டுப் பாடல்களில் ஒன்றில் **அமுதசாகரர்** என்றும், மற்றொன்றில் **அமிதசாகரர்** என்றும் குறிக்கப் பட்டுள்ளன. அக்கல்வெட்டுகள் முதற்குலோத்துங்க சோழனின் 38ஆம் ஆட்சியாண்டிலும், 46ஆம் ஆட்சியாண் டிலும் எழுதப்பட்டவை. அவன் காலம் கி. பி. 1070—1120.

" **தண்டமிழ்** அமித சாகர முனியைச்
**சயங்கொண்ட சோழ மண்டலத்துத்**
**தண்சிறு குன்ற நாட்டகத் திருத்திச்**
**சந்தநூற் காரிகை அவனால்**

> கண்டவன் மருமான் காரிகைக் குளத்தூர்க்
> காவலன் நிலாவினான் எவர்க்கும்
> கருணையும் நிதியும் காட்டிய மிழலை
> நாட்டுவேள் கண்டன் மாதவனே''

என்பது முதற்பாட்டின் பின்னிரண்டடிகள். அடுத்த பாட்டில்,

> '' அமுத சாகரன் நெடுந்தமிழ் தொகுத்த
> காரிகைக் குளத்தூர் மன்னவன்''

என்னும் குறிப்புளது.

முதற் குலோத்துங்கன் காலத்து வாழ்ந்தவன் கண்டன் மாதவன் என்பான். அவன் சோழன் தலைமையில் குளத்தூர் மன்னனாக — சிற்றரசனாக — விளங்கினான்; அவன் காலத்தில் குளத்தூர் காரிகைக் குளத்தூர் என வழங்கப் பெற்றது. அவன் முன்னோருள் ஒருவன் அமிதசாகர முனிவரைக் குளத்தூர்க்கு அழைத்து இருக்கச் செய்து காரிகை நூல் இயற்றுவித்தான். இச்சிறப்பால் அவ்வூர் காரிகைக் குளத்தூர் எனப்படலாயிற்று. காரிகைக் குளத்தூர் செயங்கொண்ட சோழ மண்டலத்துச் சிறுகுன்ற நாட்டு மிழலைச் சேர்ந்த ஊராக இருந்தது என்பவை முன்னே குறித்த கல்வெட்டுப் பாடல்கள் இரண்டன் முழுமையாலும் அறியப்படுகின்றன.

**காலம்**

செயங்கொண்ட சோழன் என்பவன் முதல் இராசராசன். அவன் பெயராலேயே தொண்டை நாடு செயங்கொண்ட சோழமண்டலம் எனப்பெயர் பெற்றது. ஆதலால் அவ்விராசராசன் காலத்திலேயே அமிதசாகரர் இருந்திருக்க வேண்டும் என்பது தெளிவாம். அவன் ஆட்சிக்காலம் கி. பி. 985 — 1014 என்க. இதனால்

அமிதசாகரர் கி. பி. பத்தாம் நூற்றாண்டினர் என்பது உறுதியாம்.

அமிதசாகரரின் ஆசிரியர் குணசாகரர். அவரை, ''தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த குணக்கடற் பெயரோன்'' என்று பாயிரம் கூறுகின்றது.

முதற் பராந்தகன் (கி. பி. 907 — 958), உத்தம சோழன் (கி. பி. 970 —985) ஆகிய வேந்தர்களின் கல்வெட்டுகள் கழுகு மலையில் உள்ளன. அவற்றில் குணசாகரர் என்னும் சமண ஆசாரியர் தம் கொள்கை களைப் பரப்புதற்காக நிலக்கொடை புரிந்த செய்தி யுள்ளது. அவர் மாணவருள் ஒருவராகிய அமிதசாகரர் ஆங்கிருந்து சயங்கொண்ட சோழமண்டலத்திற்கு வந்த தால் நீடூர்க் கல்வெட்டு, ''அமிதசாகர முனியைச் சயங்கொண்ட சோழமண்டலத்துத் தண் சிறுகுன்ற நாட்டகத்து இருத்தி'' என்று கூறுவதாயிற்று. மற்றொரு குறிப்பும் காரிகையால் அறியப்படுகின்றது. ''தேனார் கமழ் தொங்கல் மீனவன் கேட்ப'' எனப் பாண்டியன் அவை கேட்டதைச் சுட்டுகிறார் என்பது (சாசனத் தமிழ்க் கவி சரிதம் பக். 44). இனி இக்குணசாகரர் காரிகை உரையாசிரியராம் குணசாகரர் எனக் கொள் வாரும் உளர். அவரல்லர் என்பதைக் காரிகைப் பகுதியில் கண்டு கொள்க.

**சமயம்**

> **'' வெறிகமழ் தாமரை மீமிசை ஒதுங்கிய**
> **அறிவனை வணங்கி அறைகுவன் யாப்பே ''**

என்னும் சிறப்புப் பாயிரத்தால் அமித சாகரர் சமணர் என்பது வெளிப்பட விளங்கும். இன்னும் சமணருள்ளும் அருங்கலான் வயம் என்னும் பிரிவைச் சேர்ந்தவர் என்றும் கூறுவர்.

### கலம் — காரிகை

அமித சாகரர் முதற்கண் யாப்பருங்கலத்தை இயற்றி அதன் பின்னரே யாப்பருங்கலக் காரிகையை இயற்றினார் என்பது ''யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையான் யாப்பருங்கலக்காரிகை என்னும் பெயர்த்து'' என வரும் குணசாகரர் உரையால் வெளிப்படும். அன்றியும் காரிகையை 'யாப்பருங்கலப் புறநடை' என யாப்பருங்கல விருத்தி குறிப்பதும் சான்றாம்.

### நூல் அளவு

யாப்பருங்கலம் உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல் என மூன்றியல்களையுடையது. முதலியலில் எழுத்து, அசை, சீர், தளை, அடி, தொடை ஆகியவை கூறப்படு கின்றன. அடுத்த இயலில் நால்வகைப் பாக்களும் இனங் களும் பிறவும் கூறப்படுகின்றன. ஒழிபியலில் உள்ள நூற்பாக்கள் மூன்றே (94 — 96). அவை தனிச்சொல். புறநடை, சித்திரக்கவி முதலியவற்றைக் கூறுவன.

பாயிரமும் கடவுள் வணக்கமும் நீங்கலாக, யாப்பருங் கலத்தின் மொத்த நூற்பாக்கள் 96. அவற்றின் மொத்த அடிகள் 222. அனைத்தும் அளவடிகள்; தனிச்சொல் ஒன்று தானும் இல்லா நூற்பா அகவல் அடிகள்.

அசைக்கு உறுப்புகளை முதற்கண் கூறிய அளவானே (2) ஆய்தம் ஒற்று குறுக்கம் அளபெடை ஆகியவை பற்றிய சிறப்பு விதிக்குள் புகுகிறார் (3, 4). பின்னரே நேரசை நிரையசை முதலியவற்றைத் தொடங்குகிறார் (5). தளையை உறுப்பாகக் கொள்ளலும், இனம் கூறலும் காக்கை பாடினிய வழியில் மேற்கொள்கிறார். பொருள் கோள், வனப்பு, விகாரம், வண்ணம் முதலியவற்றைக் கூறுவதுடன் சொல்லணி, பொருளணி, சித்திரக்கவி ஆகிய அணி இலக்கணச் செய்திகள், பாட்டியற் செய்திகள்

ஆகியவற்றை ஒழிபியலில் சுட்டுகிறார். அவர் சுட்டுவன வற்றையெல்லாம் உறுப்பியல், செய்யுளியல்களில் விரித் துரைக்கும் விருத்தியுடையார், ஒழிபியலில் தமிழ்ப் பரப்பின் விரிவையெல்லாம் கூட்டுண்ணத் திரட்டி வைத்து விடுகிறார். 95, 96ஆம் நூற்பாக்களுக்கு மட்டும் 205 பக்க அளவில் விரிவுரை எழுதப்பட்டுள்ளமை, அந்நாளில் செயற்கருஞ் செயலாகப் பாராட்டப்பட்டிருக்கும் என் பதில் ஐயமில்லை.

**'' சொல்லிற் சுருங்கிப் பொருள்பெருகித் தொன்ஞானம்
எல்லாம் விளக்கி இருளகற்றும் — நல்யாப்(பு)
அருங்கலம் வல்லவர் தாமன்றே கேள்வி
ஒருங்குறிய வல்லார் உணர்ந்து ''**

எனவரும் நூல் நிறைவு வெண்பாவினால் நூற் சுருக்கமும் உரைப்பெருக்கமும் ஒருங்குணர்த்தப்படுதல் அறியலாம்.

## விருத்தியுரை

**உரையாசிரியர்**

யாப்பருங்கல விருத்தி என்னும் பெயருண்மையால், அவ்விருத்தியுரை ஆசிரியர் விருத்தியுடையார் எனப்படு கிறார் அவ்வளவே. இவர் பெயரையும் அறிந்துகொள்ள வாய்க்கவில்லை. காரிகை உரையாசிரியர் ஆகிய குண சாகரரே விருத்தியுரையாசிரியரும் ஆவர் என்று கருது வாரும் உளர். இரண்டு நூல்களின் உரைகளிலும் உரை யாசிரியர் எடுத்தாளும் இலக்கண மேற்கோட் சூத்திரங் களும் உதாரண இலக்கியங்களும் ஒற்றுமையுடையனவாக இருத்தலையும் உரைநடை பல இடங்களில் ஒன்றாகக் காணப்படுதலையும் இதற்குச் சான்றாகக் காட்டுவர் (யாப்பருங்கலக்காரிகை; உ. வே. சா. நூல் நிலைய வெளியீடு; உரையாசிரியர் வரலாறு).

இலக்கண நூல்களில் வரும் எடுத்துக் காட்டுகளும் மேற்கோள்களும் ஒன்றைத் தழுவி ஒன்று வருவது மரபு.

தெரிந்த எடுத்துக்காட்டும் மேற்கோளும் பயில வழங்குமாயின் கற்பார்க்கு இலக்கணம் இடர்ப்பாடு இன்றிப் பதியும் என்பது உரையாசிரியர்கள் உட்கிடை. தொல்காப்பியம் நன்னூல் ஆயவற்றுக்குள்ள உரைகளை ஒப்பிட்டுக் கண்டால் இறந்தது விலக்கல், எதிரது போற்றல், தன்குறி வழக்கம் மிகவெடுத்துரைத்தல், விதப்புக் கிளவியால் வேண்டுவதுரைத்தல் இன்ன சில இடங்களில் சிலச்சில வேறுபாடுகளை யன்றி மற்றவை யெல்லாம் முந்தையுரை வழியே செல்வதாக அமையும். இதனைக் கொண்டு அவற்றின் பெயரறியார் உரையெல்லாம், பெயரறிந்தார் உரையெனக் கொள்ளல் கூடாமை வெளிப்படை.

''ஆரியம் என்னும் பாரிரும் பௌவம்'' என்னும் தொடர் விருத்தியில் உள்ளவாறே, ''ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகையாக்கி'' எனக் காரிகை உரையில் வருதலால் இவ்விரண்டு உரைகளையும் கண்டார் ஒருவராக இருக்கக் கூடும் என்பதைக் குறிப்பர் (உரையாசிரியர்கள் 485). தலைமகனும் தலைமகளும் தமியராய் எதிர்ப்படும் காட்சியை, ''கற்கந்தும் எறிபோத்தும் கடுங்கண் யானையும் தறுகட் பன்றியும் கருவரையும் இரு நிலனும் பெருவிசும்பும் அனையார்'' எனத் தொடங்கி இறையனார் களவியல் கூறுமாறே களவியற் காரிகை ஓரிருபக்க அளவு வேறுபாடறச் சொல்லிச் செல்கிறது. இவ்வொப்புமை கொண்டு மட்டும் ஈருரைகாரரும் ஒருரைகாரர் என்பதற்கு எத்தனை தடைகள் உள?

விருத்தியுரை காரராலும் காரிகை உரைகாரராலும் மேற்கோள் காட்டப்பெறும் இலக்கண ஆசிரியர்களுள் ஒருவர் மயேச்சுரர். அவர் பெயரைக் காரிகை 'மயேச்சுரர்' எனக் கூறுவதையன்றி எத்தகு அடை கூட்டியும் சொல்வதில்லை. ஆனால் விருத்தியுரையோ முற்றும் பற்றால்

மொழியும் அடைகளோ தொடை பலவாக விரிதல் கண்கூடு. இதனை 'மயேச்சுரர்' என்னும் பகுதியில் சுட்டப்பட்டமை காண்க. இவ்வாறாக ஈருரையாசிரியர்களையும் ஒருரையாசிரியராய்க் கொள்ள வாய்க்கவில்லை.

யாப்பருங்கல விருத்திக்குப் பின்னர் எழுந்தது காரிகை உரை. அவ்வுரை விருத்தியைப் பதினோரிடங்களில் குறிக்கின்றது. அவ்விடங்களுள் ஒன்றிலேனும் யாம் உரைத்தாம் என்றோ, ஆண்டுக் கூறினாம் என்றோ வருமாறு இல்லை. ஆனால், சிந்தாமணிக்கு உரைகண்ட நச்சினார்க்கினியர், தொல்காப்பியத்திற்கும் உரை கண்டவர் ஆதலின் சிந்தாமணியுள் யாம் கூறிய உரையான் உணர்க (தொல். செய். 210, 211) என்றும், செலவினும் வரவினும் என்னும் சூத்திரத்துக் கூறினாம் (சிந்தா. 72) ஆண்டுக் கூறிப்போந்தாம் (சிந்தா. 892) என்றும் கூறுவன கொண்டு தெளியலாம்.

கலிவெண்பாவின் இலக்கணம் ஈருரைகளிலும் மாறுபடுதல், எடுத்துக்காட்டுத் தரும் பாடல்களில் உள்ள வேறுபாடுகள் ஆயவற்றாலும் இவ்விரண்டுரைகளின் ஆசிரியரும் ஒருவரே எனக் கொள்ள இடந்தரவில்லை. இவ்வுரையாசிரியர் மயேச்சுரர் எனப்படும் பேராசிரியரின் மாணவராகவோ, அவர்தம் நெருக்க மிக்கவராகவோ இருந்த வேறொருவர் என்றும், குணசாகரர் என்பார் அல்லர் என்றும் உறுதிப்படுத்தலாம்.

**உரையின் காலம்**

நூல் தோன்றிய காலத்திற்கு அணித்தாகவே தோன்றியது விருத்தி. தண்டியலங்கார மேற்கோள்களில் அபயன், அநபாயன் எனப் பெயர் வழங்கிய முதற் குலோத்துங்கனைப் பற்றிய பாடல்கள் பல உள. அவன் பாடுபுகழால் பக்கமெல்லாம் பரவியவன். அவனைப்

பற்றிய பாடல்களுள் ஒன்றும் விருத்தியுரை காரிகையுரை ஆகியவற்றில் இடம் பெறவில்லை. ஆதலால் இவ்வேந்தன் காலத்திற்கு முற்படவே இவ்வுரைகள் தோன்றிவிட்டன எனலாம்.

### யாப்புக் களஞ்சியம்

யாப்பிலக் கணத்திற்கென ஒரு கலைக்களஞ்சியம் உண்டென்றால் அது யாப்பருங்கல விருத்தியுரையே என்பதில் இருகருத்துக்கு இடமில்லை. இவ்வுரை வளமே ஆயிரக்கணக்கான மேற்கோள் நூற்பாக்களைத் திரட்டி 'மேற்கோள் விளக்க நூற்பா அகர வரிசை' என்றொரு நூலை யான் உருவாக்க உந்தியதாகும். தமிழ் யாப்பிலக் கணப் பரப்பைக் கடலெனப் பரப்பியும் மலையென உயர்த்தியும் காட்டவல்ல வுரை இவ்விருத்தியே.

யாப்பருங்கல விருத்தி ஆராய்ச்சி முன்னுரை நிறைவில் கூறியவாறு, ''விருத்தியுரைகாரர் பல்கலைக் குரிசில்; பேரறிஞர்; நயத்தக்க உரையாளர்; சீரிய நினைவாளர்; நாடு கண்டவர்; வரலாற்றுத் தெளிவாளர்; பட்டறிவால் முதிர்ந்தவர்; சமயப் பொறையாளர்; சால்பாளர்; இன்ன பல நலங்களெல்லாம் துன்னிய செல்வர்'' என்க.

### மேற்கோள் நூற்பெயர்கள்

உரையில் காட்டியுள்ள மேற்கோள் நூல்கள் ஒன்றா இரண்டா? அகத்தியம், அகநானூறு, அஞ்சனம், அடிநூல், அணிநூல், அமிர்தபதி, அவிநயம், அறிவுடைநம்பி சிந்தம், ஆதிநாதர்நூல், இடைக்காடர் ஊசிமுறி, இரணமாமஞ்சடை, இராமாயணம், இறையனார் களவியல், இன்மணியாரம், இன்னிலை, உதயணன் கதை, எழுகூற்றிருக்கை, ஐங்குறுநூறு, ஔவையார் பாடல், கடியநன்னியார் கைக்கிளைச் சூத்திரம், கண்ணனார்கவி, கணக்கியல், கபிலர் பாடல், கருடநூல், கருநாடகச் சந்தம் (குணகாங்கியம்), கலித்தொகை, கலியாணகதை,

கல்லாடர் பாடல், காக்கை பாடினியம், காரைக்காற் பேயார் பாடல், காலகேசி, குடமூக்கிற் பகவர் பாடல், குண்டலகேசி, குமரசேனாபதியார் கோவை, குறுந்தொகை, குறுவேட்டுவச் செய்யுள், கையனார் பாடல், கொன்றைவேந்தன், கோவை, சங்க யாப்பு, சந்திரகோடி சந்தம், சந்தோ பிசிதிகள், சாணாச்சிரயம், சிந்தாமணி, சிலப்பதிகாரம், சிறுகாக்கை பாடினியம், சூளாமணி, செயதேயம், செயன்முறை, செயிற்றியம், செய்யுளியல், தக்காணியம், தத்துவதரிசனம், தமிழ் முத்தரையர் கோவை, தாரணை நூல், திணை நூல், திருக்குறள், திருமந்திரம், தேசிகமாலை, தொல்காப்பியம், நக்கீரர் நாலடி, நானூற்று வண்ணம், நல்லாறனார் நூல், நற்றத்தம், நாலடி நாற்பது, நாலடியார், நான்மணிக் கடிகை, நீலகேசி, பட்டினப்பாலை, பத்தினிச் செய்யுள், பரணர் செய்யுள், பரிமாணனார் பாடல், பல்காயம், பனம்பாரம், பன்மணிமாலை, பன்னிருபடலம், பாக்கனார் பாடல், பாடலனார் பாடல், பாட்டியல், பாட்டியல் மரபு, பாரதம், பிங்கலகேசி, பிங்கலம், புட்கரனார் பாடல், புராணசாகரம், புறநானூறு, புறப்பொருள் வெண்பாமாலை, பூதத்தார் பாடல், பெரிய பம்மம், பெருஞ் சித்திரனார் பாடல், பெருந்தலைச் சாத்தனார் பாடல், பெருந்தேவபாணி, பெருவல்ல வெண்பா, பெருவள நல்லூர் பாசண்டம், பொய்கையார் வாக்கு, மதுரைக் காஞ்சி, மந்திர நூல், மயேச்சுரர் யாப்பு, மலைபடு கடாம், மாபிங்கலம், மாபுராணம், மார்க்கண்டேயனார் காஞ்சி, மிச்சாகிருதி, முதுமொழிக் காஞ்சி, முத்தொள்ளாயிரம், மும்மணிக்கோவை, யாப்பருங்கலக் காரிகை, யாப்பியல், லோகவிலாசனி, வடுகச்சந்தம், வளையாபதி, வாசுதேவனார் சிந்தம், வாஞ்சியார் நூல், வாய்ப்பியம், விளக்கத்தனார் பாடல் என்பனவும் பிறவும் அவர் காட்டிய நூல்கள். அவரே இயற்றிய பாடல்களும், நூற்பெயர் சுட்டாதனவும் உள.

**உரை இயலும் வகை**

இவர்தம் உரைப்போக்கு ஓர் ஒழுங்கு பெற்றது. முதற்கண் நூற்பாவைக் குறித்து, என்பது என் நுதலிற்றோ எனின், என வினாவி இன்னது நுதலிற்று என்கிறார். பின்னர் அந்நூற்பாவிற்குப் பொழிப்புரையோ சொற்பொருளோ வரைகின்றார்; இன்றியமையாமை ஏற்பட்டால் உரையின் இடையேயும் அதனை விளக்குகிறார்; உரை முடிந்ததும் அந்நூற்பாவில் அமைந்துள்ள இலக்கண அமைதியை ஆராய்கிறார்; சொல்லாராய்ச்சியையும் மேற்கொள்கிறார். இந்நூற்பா இவ்வாறு அமையினும் கருதிய பொருளைப் பயக்குமே. 'இவ்வாறு சொல்ல வேண்டியது என்னை?' என வினாவி, 'இவற்றைக் கூறுதற்கு இவ்வாறு கூறினார்' என உரைக்கிறார்.

சிற்சில இடங்களில் தடைகளைத் தாமே எழுப்பி விடைகளைக் கூறுகிறார். உடன்பாட்டிற் கூறப்பட்ட நூற்பாவை எதிர்மறையில் அமைத்துக் காட்டியும் அக்கருத்தை வலியுறுத்துகிறார். எடுத்துக்கொண்ட இலக்கணத்தை விளக்க உவமைகளையும் கையாள்கிறார். மேற்கோள், தவறாமல் காட்டுகிறார். மிக அருகியே 'வந்துழிக் காண்க' என்கிறார். இதே இலக்கணக் கருத்தை இவரிவர் இவ்விவ்வாறு கூறியுளர் எனத் தெளிவுறுத்துகிறார். அவ்வாறு கூறுதலிலும் நூற் பெயரையோ ஆசிரியர் பெயரையோ பெரும்பாலும் குறித்து விடுகிறார். சில இடங்களில் 'என்றார் பிறரும்' என்றும், 'கூறினார் ஆகலின்' என்றும், 'ஒரு சார் ஆசிரியர்' என்றும், 'தொல்லாசிரியர்' என்றும், 'வடமொழி வழித் தமிழாசிரியர்' என்றும் குறிக்கின்றார்.

காக்கைபாடினியார், சிறுகாக்கைபாடினியார், அவிநயனார், தொல்காப்பியனார், மயேச்சுரர் ஆகியோர் நூற்பாக்களை மிகுதியும் ஆள்கிறார். ஒரு நூற்பாவின் உரைமுடிவில் அல்லது ஒரு பகுதியின் முடிவில் தாம் மேலே

கூறிய இலக்கணச் செய்திகள் அனைத்தையும் உள்ளடக்கிய சிலபல வெண்பாக்களைக் காட்டி இவற்றை விரித்துரைத்துக் கொள்க என அமைகின்றார். இத்தகைய செவ்விய நெறியில் செல்வது விருத்தியுரை.

**உவமை**

'எழுத்தசை' என்னும் முதல் நூற்பாவில் ''இவ்வேழு உறுப்பினும் தீர்ந்து யாப்பு உண்டோ எனின் இல்லை; என்போலவெனின், முப்பத்திரண்டு உறுப்பொடும் புணர்ந்தது மக்கட் சட்டகம் என்றால் முப்பத்திரண்டு உறுப்பினும் தீர்ந்து மக்கட் சட்டகம் இல்லை அதுபோல எனக்கொள்க'' என்று உவமையால் விளக்குகின்றார்.

வெண்பா முன்னாகவும் ஆசிரியம் பின்னாகவும் வருவது மருட்பா. அதனை, ''கங்கை யமுனைகளது சங்கமம் போலவும், சங்கர நாராயணரது சட்டகக் கலவியே போலவும் வெண்பாவும் ஆசிரியமுமாய் விராய்ப் புறநிலை வாழ்த்து முதலாகிய பொருள்கண்மேல் யாப்புற்று மருட்சி யுடைத்தாகப் பாவி நடத்தலின் மருட்பா என்று வழங்கப்படும்'' என்கிறார்.

வண்ணங்களையெல்லாம் எண்ணற்ற உவமைகளால் சுட்டுகிறார். அவற்றுள் தூங்கிசை வண்ணம்:

> ''முதுபிடி நடந்தாற்போலவும் கோம்பி நடந்தாற்போலவும் நாரை நடந்தாற்போலவும் வரும். அவை ஒருபுடை ஒப்பினால் தூங்கிசை வண்ணம் எனக் கொள்க.''

**அரிய விளக்கங்கள்**

'' 'எனப்படும்' என்பதற்கு, 'என்று சிறப்பித்துச் சொல்லப்படும்' எனப் பொருள் கூறி, 'என' என்னும் அது சிறப்பினைக் கூறுமோ? எனின் கூறும். என்னை?

'நளியிரு முந்நீர் ஏணியாக' என்னும் புறப்பாட்டினுள்,

" முரசு முழங்கு தானை மூவிருள்ளும்
அரசெனப் படுவது நினதே பெரும "

எனவும்,

" ஆடு மழைக் கரும்பின் வெண்பூ நுடங்கும்
நாடெனப் படுவது நினதே அத்தை "

எனவும் சிறப்புப் பற்றிப் புணர்த்தார் சான்றோர் ஆகலானும்,

'நாடெனப் படுவது சோழ நாடு'

'ஊரெனப் படுவது உறையூர்'

என்று பரவை வழக்கினுள்ளும் சிறப்பித்துச் சொல்லுவார் ஆகலானும் எனக் கொள்க" என்று இருவகை வழக்குகளையும் காட்டி விளக்குகிறார். இவ்வாறே நேர் (பக்.233), இசை (234), ஒத்தாழிசை (292,297), கொச்சகம் (292), சுரிதகம் (297), அம்போதரங்கம் (294) முதலாய பல சொற்களை ஆய்ந்து அரிய விளக்கங்களைத் தருகின்றார்.

## பதிப்பு

யாப்பருங்கல விருத்தியின் முதற்பதிப்பு சரவண பவானந்தரால் 1916, 1917ஆம் ஆண்டுகளில் முதற்பாகம் இரண்டாம் பாகமென வெளியிடப்பட்டது. சென்னை அரசுச் சார்பில் பெரும்புலவர் மே.வீ. வேணுகோபாலரால் 1960-இல் இரண்டாம் பதிப்பு வெளிவந்தது. சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக வழியாக என்னால் பதிப்பிக்கப்பட்ட பதிப்பு 1973-இல் வெளிவந்தது.

# 11. யாப்பருங்கலக் காரிகை

''யாப்பருங்கலம் என்னும் யாப்பிற்கு அங்கமாய் அலங்காரம் உடைத்தாகச் செய்யப்பட்டமையான் யாப்பருங்கலக்காரிகை என்னும் பெயர்த்து'' எனக் குணசாகரர் வரைவது (1) இந்நூற் பெயர்ப் பொருளை விளக்கும்.

## பெயர்

காரிகை என்பது 'பெண்' என்னும் பொருள் தருதல் உண்டு. அவ்வகையில் மகடூஉ முன்னிலை உடைய நூலாதலின் இப்பெயர் பெற்றதென்றும், காரிகை என்பது இலக்கணம் இயங்கும் கட்டளைக் கலித்துறைப் பாடல்களைக் குறிப்பதாகலின் அப்பாவகையான் அமைந்த நூல் இப்பெயர் பெற்றதென்றும் கொள்ளவும் இடமுள்ளது.

## ஆசிரியர்

காரிகையை இயற்றிய ஆசிரியர் அமிதசாகரர் என்பவர் என்பதும், அவர் முதற்கண் யாப்பருங்கலத்தை இயற்றிப் பின்னர் இக்காரிகையை இயற்றினார் என்பதும், இந்நூலுக்கு யாப்பருங்கலப் புறநடை என்பதொரு பெயர் என்பதும் பிறவும் யாப்பருங்கலப் பகுதியில் காணப்பட்டவையே. ஆசிரியர் வரலாறும் பிறவும் ஆங்குக் கண்டு கொள்க.

**நூல்**

இந்நூல் காரிகையாப்பு உடையதென்றும், மகடூஉ முன்னிலை யுடையதென்றும் அவையடக்கம் உடையதென்றும், உதாரணம், முதனினைப்பு ஆகியவற்றை உடையதென்றும் யாப்பருங்கலத்திற்கு அங்கமாய் அலங்கார முடையதாய் அமைந்ததென்றும் எடுத்துக் காட்டுத் தந்து உரையாசிரியர் பாயிரவுரை முகப்பிலேயே பகர்ந்து விடுகின்றார்.

காரிகை, உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் என்னும் மூவியல்களையும் மூவியல்களுக்கும் முறையே 20, 15, 9 ஆக 44 காரிகைகளையும் கொண்டுளது.

இவற்றுள் நேரசை முதலாகிய காரிகை 21; நிரையசை முதலாகிய காரிகை 23. நேரசை முதலாகிய காரிகை அடிக்கு ஒற்று நீக்கிய எழுத்து 16. நிரையசை முதலாகிய காரிகை அடிக்கு ஒற்று நீக்கிய எழுத்து 17. ஆக இவ்வகையால் கணக்கிட மொத்த எழுத்துகள் 2908. இதனைக் கிரந்தவகையால் கணக்கிடும் உரையாசிரியர் 90 கிரந்தமும் 28 எழுத்தும் என்கிறார். ஒரு கிரந்தத்திற்கு எழுத்து 32 என்பது அவ்வடமொழிக் கணக்கீடு. ''இந்நூல் எவ்வளவைத்தோ எனின் ஒத்து வகையால் மூன்றும், காரிகை வகையால் நாற்பத்து நான்கும், கிரந்த வகையால் தொண்ணூறு கிரந்தமும் இருபத்தெட்டு எழுத்தும் எனக் கொள்க'' என்பது அவருரை.

**உரைச்சூத்திரம்**

அமிதசாகரர் பெருவாழ்வுடையராக விளங்கினார் என்றும், முதற்கண் யாப்பருங்கலத்தைச் செய்து, அதன் பின்னர் ஏற்பட்ட பட்டறிவால் கட்டொழுங்கும் எளிமையும் இனிமையும் விளங்க எவரும் எளிமையாய்க் கற்றுத் தெளியவேண்டும் என்னும் பெருநோக்கால் நன்முதுமையில் யாப்பருங்கலக் காரிகையை இயற்றினார்

என்றும், அவ்வாறு நூலை இயற்றி நூலுக்கு அமைவான மேற்கோளமைதி நூற்பாக்களுள் சில அமைத்து வருங்கால் முற்று முடிக்குமுன் இயற்கை எய்தினார் என்றும் நூலமைதியால் கொள்ள வாய்க்கின்றது.

'உருவுகண்டு', 'வைகல்துகடீர்', 'நற்கொற்வாயில்', 'கொண்டல் முழங்கின', 'நேரிசையாகும்', 'கன்றுகுணில்', 'வாணெடுங்கண்', 'நின்று விளங்கு', 'குடநிலைத்தண்', 'நொய்தினையாய்', 'மடப்பிடிபேடை', 'தென்றலிடையும்' என்னும் காரிகைகள் 'உரைச்சூத்திரக் காரிகை' எனப்படுதல் அறிக. மற்றையவை, 'என்பது காரிகை' (1). 'இத்தலைக்காரிகை என்னுதலிற்றோ எனின்' (1) இக்காரிகை (2) என்னும் முறையில் வருதல் அறிக. ஆசிரியர் எழுதாது விடுத்த எடுத்துக்காட்டுப் பற்றிய காரிகைகளை உரையாசிரியரே நிறைவித்து உரையமைத்தார் ஆகலின், '**உரைச்சூத்திரக்காரிகை**' என வேறுபாடு காட்டினார் என்று அறிந்து கொள்ளலாம்.

ஓராசிரியர் இயற்றிய நூல்களே எனினும் **சில வேறு பாடுகள்** உண்மை காணலாம்.

| **யாப்பருங்கலம்** | **யாப்பருங்கலக் காரிகை** |
|---|---|
| நூற்பாவான் அமைந்தது. | கட்டளைக் கலித்துறையான் அமைந்தது. |
| அவையடக்கம் இல்லை. | அவையடக்கம் உண்டு (2, 3). |
| ஆசிரியர் பெயரும் ஆசிரியர்க்கு ஆசிரியர் பெயரும் பாயிரத்தில் கூறப்பட்டுள. | இவை கூறப்படவில்லை. |
| அசைக்கு உறுப்பு 15 என்னும் (2). | அசைக்கு உறுப்பு 13 என்னும் (4). |
| இயலின் உட்பிரிவாக ஒத்து என்னும் சிறுபிரிவு உண்டு. | இல்லை. |

| | |
|---|---|
| விதியும் விதிவிலக்கும் அவ்வவ்விடங்களிலேயே கூறப்பட்டுள. | விதி உறுப்பியல் செய்யுளியல்களிலும் விலக்கு ஒழிபியலிலும் கூறப்பட்டுள. |
| மாலை மாற்று முதலிய சித்திரக் கவிகள் ஒழிபியலில் உண்டு (96). | இல்லை. |
| எடுத்துக்காட்டு நூலாசிரியரால் பாடப்படவில்லை. | பாடப்பட்டுள்ளது (9, 11, 13, 15, 18, 20, 22). |
| மகடூஉ முன்னிலை இல்லை. | உண்டு. |
| நூலில் கூறப்பட்ட பொருளும் தொகையும் கூறப்படவில்லை. | கூறப்பட்டுள (44). |
| மருட்பாவுக்கு இலக்கணம் கூறப்படவில்லை. | கூறப்பட்டுளது (35). |
| ஒரு செய்யுளில் பல தொடையும் பல அடியும் வரின் வழங்குமுறை கூறப்பட்டுளது (53). | கூறப்படவில்லை. |
| கழிநெடிலடி 'அறுசீர் முதலா ஐயிரண்டீறா' என்னும் (25). | ஐஞ்சீரின் மிக்கபாதம் என்னும் (12). |
| அகவற்பாவின் ஈறுக்கு விதி உண்டு (69). | விதி இல்லை. |
| ஒன்றினுக்கொன்று சுருங்கும் உறுப்பினது அம்போதரங்கம் என்னும் (83). | நீர்த்திரைபோல் மரபொன்று நேரடி முச்சீர் குறள் நடுவே மடுப்பின் அம்போதரங்கம் என்னும் (30). |

| | |
|---|---|
| காசு பிறப்பு என்னும் வெண்பா வாய்பாடுகள் சுட்டப்பட்டில. | சுட்டப்பட்டுள (25). |
| சிந்தியல் வெண்பா வகைகள் குறிக்கப்பட்டில. | குறிக்கப்பட்டுள (24). |
| ஆசிரியரால் முற்றுப் பெறுவித்த நூல். | உரையாசிரியரும் பாடி முற்றுப் பெறுவித்த நூல். |

இவை போன்ற நுண்ணிய வேறுபாடுகள் இன்னும் சில உள. ஆய்ந்து கொள்க.

## முதனினைப்பு

பாயிரம் தொடங்கி உறுப்பியலை 20 காரிகைகளால் நூலாசிரியர் நிறைவு செய்துள்ளார். அவ்விருபது காரிகைகளையும் முறையே அடைவு செய்து ''கந்தமும் தேனும்'' என்னும் காரிகையால் முதனினைப் பாக்கி வைக்கிறார் உரையாசிரியர். அவ்வாறே செய்யுளியல் ஒழிபியல்களுக்கும் அமைத்துள்ளார். இவற்றால் நூன்முழுமையும் தடையற மனப்பாடம் செய்து ஒப்பிக்க வழிகாட்டியுள்ளார் என்று பாராட்டுப் பெறுகின்றார். இப் பாராட்டின் மூலவர் நூலாசிரியரா? உரையாசிரியரா? எனின் இருவருமேயாம். என்னெனின்,

நூலாசிரியர் எடுத்துக்காட்டுகளைக் ''குன்றக் குறவன் அகவல்'', ''பொன்னாரம் வெண்பாட்டு'' என்பது முதலாக (9) ஆங்காங்கே எடுத்துக்காட்டு முதற் குறிப்புப் பாடி வைத்துள்ளார். அத்தூண்டலால் அவர் பாடாத பகுதிக்குப் பாடி இணைக்கும் உரையாசிரியர், இயன் முழுமைக்கும் ஒவ்வொரு காரிகையாக இயற்றி அப்பணியைத் தொடுத்து முடிக்கின்றார். 'பாம்பின்கால் பாம்பறியும்' என்பது போல் நூலாசிரியர் நோக்கை

உரையாசிரியர் நுணுகியறிந்து செயலாற்றியுள்ளார் என்க.

இலக்கணக் காரிகையாம் கட்டளைக் கலித்துறையை — எழுத்தெண்ணிப் பாடும் பாடலை — எடுத்துக் கொண்டு 44 காரிகைகளுள் 12 காரிகைகளைத் தலையாகு எதுகை அமையப் பாடியுள்ளார் நூலாசிரியர் என்றால் எத்தகு இலக்கியத்திறம் இருந்தது என்பதும் புலனாகும். அவர் கொண்ட யாப்பையே தாமும் கொண்டு தம் குறிப்பால் அன்றிப் பிறவகையால் அறிந்து கொள்ள இயலாவண்ணம் அக்காரிகை யாப்பிலேயே முதனினைப்புப் பாடல்கள் பாடினார் உரையாசிரியர் என்றால் அவரும் நூலாசிரியராம் தகுதி சான்ற சான்றோர் என்பது தானே விளங்கும்.

உரையாசிரியர் பெயர் குணசாகரர் என்பது கொண்டும், யாப்பருங்கலச் சிறப்புப் பாயிரத்தில் அமிதசாகரரின் ஆசிரியர் குணசாகரர் என்று வருவது கொண்டும் அவரே இவர் எனக் கருதினாரும் உளர். ஆசிரியர் இயற்றிய நூலுக்கு மாணவர் உரையெழுதும் மரபுநிலை உண்டேயன்றி மாணவர் யாத்த நூலுக்கு ஆசிரியர் உரையெழுதும் வழக்கம் இல்லை. அன்றியும் ''தனக்கு வரம்பாகிய தவத்தொடு புணர்ந்த குணக்கடற் பெயரோன்'' என்று அமிதசாகரரால் பாராட்டப் பெற்ற குணசாகரர், ''இந்நூல் யாவரால் செய்யப்பட்டதோ எனின் ஆரியம் என்னும் பாரிரும் பௌவத்தைக் காரிகை யாக்கித் தமிழ்ப்படுத்திய அருந்தவத்துப் பெருந்தன்மை அமிதசாகரர் என்னும் ஆசிரியராற் செய்யப்பட்டது'' என்று எழுதினார் என்பது பொருந்துவதாக இல்லை. அமிதசாகரர்மேல் அளவற்ற அன்பும் அவர்தம் புலமையையும் தவநெறியையும் உச்சிமேற் கொண்டு ஒழுகுதலுமுடையவராய் அவர்க்குப் பின்வந்த குணசாகரர் என்னும் ஒருவரால் இயற்றப் பெற்றது காரிகை உரை என்பதே தகும்.

## ஒரு சொற் பல பொருள்

ஒரு பொருள் பல சொற்களைக் கூறுதலில் குண சாகரர் பேரார்வம் காட்டுகிறார். இலக்கண உரை யாசிரியர்கள் பலரும் அம்முறை மேற்கொளல் வழக்கே.

'' ஆவி எனினும் உயிரெனினும் ஒக்கும் ''

'' அஃகேனம் எனினும் ஆய்தம் எனினும் தனிநிலை
எனினும் புள்ளி எனினும் ஒற்றெனினும் ஒக்கும் ''

'' மெய்யெனினும் உடம்பெனினும் உறுப்பெனினும் புள்ளி
எனினும் ஒற்றெனினும் ஒக்கும் ''

இவ்வாறு கூறும் இவர் ''என்னை?'' என்று வினாவி,

'' அஃகேனம் ஆய்தம் தனிநிலை புள்ளி
ஒற்றிப் பால வைந்தும் இதற்கே ''

என்பது போல நூற்பாக்களையும் மேற்கோள் காட்டு கிறார். இவ்வாறு ஒரு பொருட் பன்மொழி காட்டுதல் கொண்டு அக்காலச் சொல் வழக்குகளை அறிவதுடன் பின் வழக்குகளை முடிவு செய்யவும் உதவுதல் கண்கூடு.

## கலித்துறை

யாப்பருங்கலக் காரிகை என நூற் பெயர் இருப்பினும் காரிகையாகிய கட்டளைக் கலித்துறையின் இலக்கணம் நூலில் இடம் பெறவில்லை. ஆனால் உரையாசிரியர் முதற் காரிகை உரையிலேயே,

'' அடியடி தோறும் ஐஞ்சீர் ஆகி
முதற்சீர் நான்கும் வெண்டளை பிழையாக்
கடையொரு சீரும் விளங்காய் ஆகி
நேர்பதி னாறே நிரைபதி னேழென்
றோதினர் கலித்துறை ஓரடிக் கெழுத்தே ''

என ஒரு நூற்பாவைக் காட்டி விளக்குகிறார்.

எடுத்துக் கொண்டதை இனிதின் அதே பொழுதில் தெளிவாக விளக்க விரும்பும் உரையாசிரியர் குணசாகரர் எடுத்துக்காட்டுகளை ஏற்ற வகையால் பயன்படுத்து கிறார்:

**விளக்கம்**

''இரண்டாம் வழுவா எழுத்தொன்றின் எதுகை'' என்றமைகிறார் நூலாசிரியர். அதை விளக்கும் உரை யாசிரியர் இரண்டாம் எழுத்து ஒன்றின் எதுகை என்னாது வழுவா எழுத்து என்று சிறப்பித்த அதனால் இரண்டாம் எழுத்து ஒன்றி வரினும் முதலெழுத்தெல்லாம் தம்முள் ஒத்து அளவினவாய் வந்து, கட்டென்பதற்குப் பட்டென்பது அல்லாது பாட்டென்பது எதுகை யாகாது, காட்டென்பதற்குப் பாட்டென்பது அல்லாது பட் டென்பது எதுகையாகாது எனக்கொள்க'' என்று விளக்கு கிறார்.

யாப்பருங்கல விருத்தியுள் கண்டு கொள்க என்று கூறும் இவர், காக்கை பாடினியம், மயேச்சுரம், அவிநயம், பல்காயம், நத்தத்தம், தொல்காப்பியம் முதலான பல நூல்களிலிருந்து மேற்கோள் காட்டுகிறார். நூலாசிரியர் பெயரையோ நூற் பெயரையோ சுட்டும் வழக்குடைய இவர் 'என்றார் பிறரும்', 'என்றார் ஆகலின்' என்றும் பல இடங்களில் சொல்லிச் செல்கிறார்.

குணசாகரர் சமண சமயம் சார்ந்தவர் என்பது தெளிவாக விளங்கினும் அவர் எல்லாக் குற்றமும் தீர்ந்த செய்யுள் எனத் ''தாமரை புரையும் காமர் சேவடி'' என்னும் குறுந்தொகைக் கடவுள் வாழ்த்துச் செய்யுளை நூல் நிறைவில் வைத்தமை அவர் சால்பின் நிறைவுச் சான்றாகத் திகழ்கின்றது.

**உரைமுறை**

இக்காரிகை இன்ன நுதலிற்று என்று கூறும் போதே நூற்பாவின் பொருள் விளங்குமாறு செய்யும் வழக்கை இவர் மேற்கொள்கிறார்.

இக் காரிகை நிரை நிறைப் பொருள்கோள் வகையான் நேரசையும் நிரையசையும் ஆமாறும் அவற்றுக்கு உதாரணம் ஆமாறும் உணர்த்துதல் நுதலிற்று (5) என்றும், இக்காரிகை பொதுச்சீருக்கு உதாரணம் ஆமாறும் அவற்றது எண்ணும் பொதுச்சீரும் அசைச்சீரும் செய்யுளகத்து வந்தால் தளை வழங்கும் முறைமையும் உணர்த்துதல் நுதலிற்று'' (8) என்றும் வருவன காண்க.

காரிகைக்கு உரை வகுக்குங்கால் ஒரு மொத்தமாக உரை கூறாமல், பொருள் நின்ற வகையாற் பகுத்துப் பகுதி பகுதியாகப் பாடலடியைப் பிரித்துக் காட்டி உரை வரைந்து 'என்றவாறு' என்கிறார். விதப்புக் கிளவி விளக்குதல் எடுத்துக்காட்டுத் தருதல் ஆகியவற்றை அவ்வவ் விடங்களிலேயே நிறைவிக்கிறார்.

எடுத்துக்காட்டைக் கூறுவதுடன் அதனுள் அவ் விலக்கணம் அமைந்துள்ள வகையை எடுத்துக்காட்டு தலையும் மேற்கொள்கிறார்.

பிறர் கொள்கைகள் என வருமிடங்களில் தனியாய்வு வகையை மேற்கொண்டு நூலாசிரியர் கொள்கை இன்னதென வரையறுக்கிறார்; சான்றாக ஒன்று:

''இனி ஒரு சாரார், வெண்பாவினுள் அளவெழுந் தால் நாலசைப் பொதுச்சீர் வருமென்பார் உளராயினும், அவ்வாறு அலகிட்டு உதாரண வாய்பாட்டான் ஓசை யூட்டும் பொழுது செப்பலோசை பிழைக்கும் என்ப தூஉம், ஆண்டுச் சீரும் தளையும் சிதையவாராமையின் அளபெடுப்பனவும் அல்ல அளபெடுப்பினும் அளபெடைகள் அலகு காரியம் பெறுவனவும் அல்ல என்பதூஉம் காக்கை பாடினியார் முதலிய தொல்லாசிரியர் துணிவு; அதுவே இந்நூலுடையார்க்கும் உடன்பாடு'' என்கிறார் (8).

## சிறப்பு

யாப்பிலக்கணம் கற்பார்க்குத் தலையான நூலாகத் திகழ்வது இக்காரிகையே என்பது தமிழ் உலகம் நன்கு

அறிந்தது. ''காரிகை கற்றுக் கவி பாடுவதினும் பேரிகை தட்டிப் பிழைப்பதுமேல்'' எனவரும் வழக்கும், ''காடும் செடியும் என்னோ தமிழ்க் காரிகை கற்கின்றதே'' என்னும் படிக்காசுப் புலவர் தனிப்பாடலும் காரிகைப் பெருமையை நன்கு விளக்கும். காரிகைச் சிறப்பாலே அமித சாகரர்க்குக் கொடையாக வழங்கப்பட்டதென அறியவரும் 'காரிகைக் குளத்தூர்' கலத்துக்கு இல்லாத பெருமையைக் காரிகைக்குத் தருவதாக அமைந்துள்ளதும் எண்ணத்தக்கது.

காரிகையின் காலத்துக்குப் பின்னே அதன் வழி நூல் களாக வந்தனவும், அதனையே இலக்கணமாகக் கொண்டு இலக்கியம் படைத்த நூல்களும், அதன் விளக்க நூல் களாக உரைநடையில் வெளிப்பட்ட நூல்களும் பலப்பல வாம். புத்துரை கண்டதும் வினா விடை அமைப்புக் கொண்டதுமாகிய நூல்களும் உண்டு.

**பதிப்பு**

யாப்பருங்கலக் காரிகை குணசாகரர் உரையுடன் 1851ஆம் ஆண்டு களத்தூர் வேதகிரி முதலியாரால் பதிப்பிக்கப்பட்டது. 1864-இல் நரசிங்கபுரம் வீராசாமி முதலியாரால் ஐந்திலக்கண மூலப்பதிப்பில் காரிகையும் பதிப்பிக்கப்பட்டது. 1870-இல் கொட்டையூர் சி. சாமி நாத தேசிகர் எழுதிய யாப்பிலக்கணச் சுருக்கம் வெளிவந்தது. 1888-இல் முத்துத்தம்பிப் பிள்ளை யாப் பிலக்கண சூசனம் வெளிப் படுத்தினார். 1898-இல் யாப்பிலக்கணச் சுருக்கம் திருச்சி முத்தி சிதம்பரம்பிள்ளை யால் வெளியிடப்பட்டது. யாப்பிலக்கண வினா விடை அமிர்தம்பிள்ளை என்பார் கொணர்ந்தார் (1845—99). யாப்பிலக்கண வினா விடை விசாகப்பெருமாளையராலும் கொண்டு வரப்பட்டது. சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் யாப்பருங்கலக் காரிகைக்குப் புத்துரை எழுதினார் (1899). சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், உ. வே. சாமிநாதையர் நூல் நிலையம், அண்ணாமலைப்

பல்கலைக்கழகம், மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை வெளியீடுகளாகவும், பிறர் வெளியீடுகளாகவும் காரிகை பல பதிப்புகளைக் கண்டுள்ளது. புலவர் குழந்தையின் யாப்பதிகாரம், தொடையதிகாரம், பேராசிரியர் அ. கி. பரந்தாமனாரின் 'கவிஞராக', அறிஞர் கி. வா. சகந்நாதரின் நீங்களும் கவி பாடலாம் முதலியவை யாப்பிலக்கணச் செய்திகளை எளியஉரைநடை வழியாகப் பரப்ப மேற்கொண்ட முயற்சிகள் ஆகும்.

# 12. வீரசோழியம்

வீரராசேந்திர சோழன் என்பானுக்கு ஒருபெயர் **வீரசோழன்** என்பது. அவன் பெயரால் ‘பொன்பற்றி’ யூர்ச் சிற்றரசர் **புத்தமித்திரர்** என்பார் இயற்றிய நூல் வீர சோழியம் ஆகும். இஃது ஐந்திலக்கணங்களையும் கூறும் நூல். ஐந்திலக்கணம் என்னும் அமைப்பில் வெளிவந்த முதல்நூல் இவ்வீரசோழியமே.

**காலம்**

வீரசோழன் பெயர் விளங்க இந்நூல் இயற்றப்பட்டது என்பது,

> **“தேமே வியதொங்கல் தேர்வீர சோழன் திருப்பெயரால்**
> **பூமேல் உரைப்பன்”**

என்றும் (பாயிரம். 3),

> **“செம்பியன் வீரரா சேந்திரன்தன் நாவியல் செந்தமிழ்”**

என்றும் (நூல். 7) வருவனவற்றால் அறியலாம். இவ் வேந்தன் காலம் 11 ஆம் நூற்றாண்டு ஆதலால் அக் காலமே புத்தமித்திரனார் காலமுமாம் என்க.

இஃது ஐந்து அதிகாரமுடைமையும் தமிழொடு வடமொழி மரபும் கூறுவது என்பதும்,

> **“நாமே எழுத்துச்சொல் நற்பொருள் யாப்பலங்**
> **காரமெனும்**
> **பாமேவு பஞ்ச அதிகார மாம்பரப்பைச் சுருக்கி...”**

**"பூமேல் உரைப்பன் வடநூன் மரபும்**
**புகன்றுகொண்டே"**

என்னும் பாயிரத்தால் (3) விளங்கும்.

**சமயம்**

புத்தமித்திரனார் என்னும் பெயர் கொண்டே இவர்தம் சமயம் அறியவரும். அன்றியும், "போதியின் மேதக் கிருந்தவன்...பாதம் தலைமேற் புனைந்து தமிழுரைக்கப் புக்கவன், பைம்பொழிற் பொன்பற்றி மன்புத்த மித்திரனே" என்பதும் நிலைப்படுத்தும் (பாயி. 1). இவரு ராகிய பொன்பற்றி மிழலைக் கூற்றம் சார்ந்ததென அறிய வருதலால் (179 மேற்.) இவர் பாண்டி நாட்டவ ராவர். இவரூர் அறந்தாங்கி வட்டத்தில் பொன்பேத்தி என வழங்குவது என்பர். (கல்வெட்டுகளால் அறியப்படும் உண்மைகள்)

"அவலோகிதன் என்பானிடத்து அகத்தியன் தமிழ் கேட்டு, அதனை உலகுக்கு வழங்கினான்" என்று பாயிரத்தில் வரும் செய்தியால் அவ்வாறு ஒரு கருத்து உலாவியமை அறிய வருகின்றது.

**நூல் அளவு**

வீரசோழியம் கட்டளைக் கலித்துறை என்னும் யாப்பால் அமைந்தது. பெரும் பிரிவு 'அதிகாரம்' எனவும், உட்பிரிவு 'படலம்' எனவும் கூறப்பட்டுள்ளன. எழுத்ததிகாரத்தில் சந்திப்படலம் என ஒரு படலமும், சொல்லதிகாரத்தில் வேற்றுமைப்படலம், உபகாரகப் படலம், தொகைப் படலம், தத்திதப் படலம், தாதுப் படலம், கிரியா பதப்படலம் என ஆறுபடலங்களும், பொருளதிகாரத்தில் பொருட்படலம் என ஒரு படலமும், யாப்பதிகாரம், அலங்காரம் ஆகியவற்றில் முறையே யாப்புப் படலம், அலங்காரம் என ஒவ்வொரு படலமும் ஆக ஐந்ததிகாரங்களும் பத்துப் படலங்களும் உடையதாக

அமைந்துள்ளது. பாயிரம் மூன்று பாடல்களையும் நூல் 18 பாடல்களையும் கொண்டுள்ளன. இறுதியில் 'அந்தச் சிறப்பு' என்றொரு கட்டளைக் கலித்துறைப்பா உள்ளது. அதில் இந்நூல் '**வீரசோழியக் காரிகை**' எனவும் வழங்கப் படும் என்பதும், இதற்குப் பொழிப்புரை வரைந்தவர் '**பெருந்தேவனார்**' என்பதும் அறிய வருகின்றன.

" **தடமார் தருபொழில் பொன்பற்றி காவலன்**
**தான்மொழிந்த**
**படிவீர சோழியக் காரிகை** நூற்றெண்
பஃதொடொன்றின்
**திடமார்** பொழிப்புரை யைப்பெருந் தேவன்
செகம்**பழிச்சக்**
**கடனாக வேநவின் றான்தமிழ் காதலில்**
**கற்பவர்க்கே**"

என்பது அது. கட்டளைக் கலித்துறைக்குக் 'காரிகை, என்றொரு பெயரிருப்பதும் இந்நூலில் பல பாடல்களில் மகடூஉ முன்னிலை அமைந்திருப்பதும் 'காரிகை' என் பதற்குக் காரணங்களும் ஆகலாம்.

## பெருந்தேவனார்

சங்க நூல்களில் கடவுள் வாழ்த்துப் பாடிய 'பாரதம் பாடிய பெருந்தேவனார்', 'பாரத வெண்பாப் பாடிய பெருந்தேவனார்', 'கவிசாகரப் பெருந்தேவனார்' எனப் பெருந்தேவனார் பெயரொடும் சிலர் அறியப் பெறு கின்றனர். அவருள், வீரசோழிய உரைகாரராகிய இப்பெருந்தேவனார் வேறொருவராவர். இவ் உரை யாசிரியர், நூலாசிரியர் காலத்தவர் என்றும், அவர் மாணவர் என்றும் கூறுவாருளர். இவர் காலத்தை விக்கிரம சோழன் காலமாகிய பன்னிரண்டாம் நூற் றாண்டு என்பர். (த. இ. வ. 11 ஆம் நூற்றாண்டு) அவனைப் பற்றிய பாடல்களும் உரையில் உள்ளமை சான்றாகும்.

**நூல்நிலை**

**" திகட சக்கரச் செம்முகம் ஐந்துளான்"**

என்பது கந்த புராணத் தொடக்கப் பாடல். திகட சக்கரம் என்பதன் சொற்பிரிப்பு, திகழ் தசம் கரம் என்பதாம். திகழ் + தசம் = 'திகடசம்'; இவ்வாறு புணரும் புணர்ச்சியைக் கந்தபுராண அரங்கேற்றத்தின் போது புலவர்கள் மறுத்தாராக, கச்சியப்பர் வீரசோழியத்தில், "ஐம்மூன்ற தாமுடல் வன்மைபின் வந்திடில் ஆறொடைந் தாம்" (18) என்பது கொண்டு நிலைநாட்டினார் என்பர். "ழகார ஒற்றீற்று நிலைமொழிப் பதத்தின் பின்னர் வருமொழி முதல் வல்லினம் வந்து புணர்ந்தால், அந்த ழகரமானது ணகரமும் டகரமுமாம்" என்பது பெருந் தேவனார் உரை.

**தனிச்செய்தி**

வேறு நூல்களில் கூறப்படாத இலக்கணங்கள் சில இந்நூலில் கூறப்பட்டதுண்டு. அவை:

ழகர மெய்யானது ளகர மெய்போல வல்லெழுத்து வரின் டகர மெய்யாகவும், மெல்லெழுத்து வரின் ணகர மெய்யாகவும் திரியும்.

குறில் செறியாத ழகரமெய், குறில் செறியாத ளகர மெய் போலத் தகர நகரங்கள் வரின் கெடும்.

ழகர மெய்யின் முன் வரும் நகர தகரங்கள், ளகர மெய்யின் முன் திரிதல் போல் முறையே ணகர மாகவும் டகரமாகவும் திரியும்.

இ, ஈ, ஐ என்னும் உயிர்களுக்குமுன் நகரம் ஞகர மாகத் திரியும். இன்னவை குறிப்பிடத் தக்கவை.

புகழ்ச்சி, இகழ்ச்சி, திகழ்ச்சி என்பவை புகட்சி, இகட்சி, திகட்சி என இவரால் கொள்ளப்படுகின்றன.

"புகட்சி பரவல் குறிப்புக் கொடிநிலை கந்தழி
இகட்சி மலிவள்ளி யென்றிவை ஆறும் நெறிமுறையில்
திகட்சி மலைதரு பாடாண் பகுதிசெப் பாதனவும்
இகட்சியுண்டாகா வகைதேர்ந் தறிதல் இயல்
புடைத்தே"

என எதுகைக்கு இவற்றைப் பயன்படுத்துகின்றது அறிக. இவ்வழியே உரைகாரரும் செந்தமிழ்ச்சொல் என்பதைச் 'செந்தமிட் சொல்' (1, 8) என்றும் புகழ்ச்சி என்பதைப் 'புகட்சி' (86) என்றும் இன்னவாறு உரையில் பயன்படுத்துகிறார்.

"மூன்றொடு நான்கு ஒன்பதாம் உயிர்" (13)

"ஆறாம் உடலின் பின்" (14)

"எண்ணிரண்டாம் ஒற்று" (16)

இவ்வாறு எழுத்துகளை எண்ணிக்கை வகையால் குறித்தலைப் பெரு நடைமுறையாகக் கொண்டுள்ளார்.

## எழுவாய் உருபு

'எழுவாய் வேற்றுமை திரிபில் பெயரே' என்பது தமிழ் வழக்கு. அதற்கும் இவர் உருபு தருகின்றார். உருபுகளுள் ஒன்று 'சு' என்றும், 'அது எங்கும் வாராது' என்றும் கூறுகிறார். இது வடமொழி வழிப்பட்டது என்பதை, "வடமொழியுடையான் வாரி என்னும் சொல்லை வைத்து முதல் வேற்றுமை ஏகவசனத்தைப் பொருள் விளக்குதற் பொருட்டு எவ்வண்ணம் இட்டழித் தான், இவனும் அதுபோல ஆக்கி அழித்தாலல்லது பதமாகாதென்று இட்டழித்தான் என்க" என உரை யாசிரியர் விளக்குகின்றார் (33). தமிழ் வேற்றுமைகளைச் சொல்லும் ஆசிரியர் வடமொழிக் காரகத்தையும் தொடுத்துக் கொண்டே செல்கிறார். தமிழ் மொழியை வடமொழி உணர்வோடு பார்ப்பதே இவர் பார்வையாய் அமைதல் எங்கும் பளிச்சிடுகின்றது. இலக்கியம் கண்ட

தற்கு இலக்கணம் காட்டல் என்னும் நெறியைத் தூக்கி எறிந்துவிட்டு, அவ்விலக்கணத்திற்கு இலக்கியம் படைக்கத் தூண்டும் நெறியே இவர் நெறியாய் அமைகின்றது.

**அகம்**

அகம் புறம் என்னும் தொல்லோர் முறை, அகம், புறம், அகப்புறம், புறப்புறமெனப் பின்னோரால் பாகு படுத்தப்பட்டமை இந்நூல் வழியேயும் அறியலாம். அன்றி அளப்பான் அளவை பிரமேயம் என வேறு பார்வையும் பார்க்கிறார்! களவு கற்புச் செய்திகள் கனிந்தில!

**யாப்பு**

ஈரசைச் சீரை, முற்சீர், முதற்சீர் எனலும், நேரால் முடியும் மூவசைச் சீரை இடைச்சீர் எனலும், நிரையால் முடியும் மூவசைச்சீரைக் கடைச்சீர், பிற்சீர் எனலும் இவர் வழக்கு.

இருசீர் முச்சீர் நாற்சீர் ஐஞ்சீர் அறுசீர் முதலாம் அடிகளை முறையே குறளடி சிந்தடி அளவடி நெடிலடி கழிநெடிலடி எனல் வழிவழித் தமிழ் முறை. கட்டளை அடி (எழுத்தெண்ணிய அடி) இருந்த நாள் தொட்டுச் சீர் வகையடி வந்த காலத்திலும் மாறாத மரபு. அவ்வடிகளை முறையே **அந்தரம், கால், தீ, புனல், மண்** பெயரால் இவர் வழங்குகின்றார். அந்தரம் முதலாகச் சொல்பவற்றையே குறள் முதலியவாகக் கூறுவர் என்று புத்தமித்திரனார் கூறும்போது, அவர் இம்மண்ணின் மரபையே முற்றாக விடுத்து எங்கோ வட்டமிடுவது புலப் படுகின்றது! இதனால் இவர் மரபு மொழி வடமொழி யாய்த் தமிழ்கற்று நூல் செய்தவராக வேண்டும் எனக் கொள்ளலாம்

விண்ணில், ஒலியாம் ஒரு தன்மையும், காற்றில், ஒலி ஊறு ஆகிய இரு தன்மைகளும், தீயில், ஒலி ஊறு ஒளி

ஆகிய மூன்று தன்மைகளும், நீரில், ஒலி ஊறு ஒளி சுவை ஆகிய நான்கு தன்மைகளும், நிலத்தில், ஒலி ஊறு ஒளி சுவை மணம் ஆகிய ஐந்து தன்மைகளும் இருத்தலைக் கொண்டு குறளடி முதலியவற்றுக்குக் குறிப்பு வகையால் இப்பெயராட்சி செய்தார் என்க. இப்பெயராட்சிக்கு, **முதல்வரும், முடிவரும்** இவரே என்பதே தமிழ் நூற் பரப்புச் சான்று!

மோனை எதுகைத் தொடைகளைக் கூறும் இவர் எதுகை, முரண், இயைபுத் தொடைகளை விடுத்தார். அந்தாதி, இரட்டை, செந்தொடை ஆகியனவும் விடுத் தார்; பொழிப்பு, இணை முதலானவற்றையும் விடுத்தார்.

அலங்காரப் படலத் தொடக்கத்தில் (141) ''அலங் காரங்கள் **தண்டி சொன்ன, கரைமலி நூலின்படியே** உரைப்பன்'' என்கிறார். பின்னும் தண்டிகளைப் பேசு கிறார் (147). **விதர்ப்ப நெறி, கவுட நெறி** ஆகியவற்றைக் கூறி விளக்குகிறார் (146—149).

க) தண்டியாசிரியர் வடசொல்லால் கூறும் அணி களை, இவர் தமிழாக்கிக் கூறுகிறார்:

| **தண்டி** | **வீரசோழியம்** |
|---|---|
| அதிசயம் | பெருக்கு |
| தீவகம் | விளக்கு |
| சமாயிதம் | துணைப்பேறு |
| விசேடம் | சிறப்பு |
| விரோதம் | முரண் |
| நிதரிசனம் | சுட்டு |
| சங்கீரணம் | விராவு |
| பரிவருத்தனை | பரிமாற்றம் |

உ) தண்டியாசிரியர் தமிழ்ச்சொல்லால் கூறும் அணி களை இவர் வடசொற்படுத்தும் கூறுகிறார் :

| தண்டி | வீரசோழியம் |
|---|---|
| வேற்றுமை | விதிரேசம் |
| வாழ்த்து | ஆசி |

ஙு) தண்டியாசிரியர் தமிழ்ச் சொல்லால் கூறுவதை இவர் வேறொரு தமிழ்ச் சொல்லாலும் கூறுகிறார் :

| தண்டி | வீரசோழியம் |
|---|---|
| நிரனிறை | அடைவு |
| ஆர்வமொழி | மகிழ்ச்சி |
| தன்மேம்பாட்டுரை | ஊக்கம் |
| புணர்நிலை | ஒருங்கியல் |
| பின்வருநிலை | மீட்சி |
| முன்ன விலக்கு | தடைமொழி |
| வேற்றுப்பொருள் வைப்பு | பிறபொருள் வைப்பு |
| தற்குறிப்பேற்றம் | நோக்கம் |
| ஒப்புமைக் கூட்டம் | உடனிலைச் சொல் |
| மாறுபடு புகழ் நிலை | நுவலாச் சொல் |
| புகழாப் புகழ்ச்சி | புரிவில் புகழ்ச்சி |

ச) மற்றையணிகளின் பெயர்களைத் தண்டியாசிரியர் கூறுமாறே கூறுகிறார். அவர் கூறும் 35 அணிகளையும் கூறுகிறார். இறுதியில் சொல்லணி, சித்திரக்கவி ஆய வற்றையும் கூறுகிறார்.

அலங்காரப் படலத்தின் இரண்டாம் பாடலில் (142) **'வடஎழுத்தைத் தவிர்ந்து'** என்பவர், அதே இயல் இறுவாய்க்கு முதற்பாட்டில் (180),

" இடையே வடவெழுத்து எய்தில் விரவியல்
ஈண்டெதுகை
நடையேதும் இல்லா மணிப்பிர வாளம்நல்
தெய்வச்சொல்லின்
இடையே முடியும் பதமுடைத்தாம் "

என்கிறார். வடவெழுத்தைத் தவிர்ந்து என்பதன் விளக்க மாக உரையாசிரியர்,

"மணிப்பிரவாளத்தினுக்கும் விரவியல் செய்யுட் களுக்கும் வடவெழுத்து வருக என்று சிறப்பிலக்கணம் உண்மையால், அவற்றில் வடவெழுத்து வருவது குற்றமன் றென்க" என்று வரைகின்றார். தமிழை, "அவலோகிதன் மெய்த்தமிழ்" என்றே துணிந்துரைக்கின்றார் (83).

## பெருந்தேவனார் உரை

சொற்பொருளாக உரை செல்கின்றது. வேண்டு மிடங்களிலேயே விளக்கமும் எடுத்துக்காட்டும் காட்டு கின்றார். பல இடங்களில் உரையளவிலேயே அமை கின்றார். எழுத்ததிகாரம் சந்திப்படலம் முற்றவும் விளக்கவுரை எதுவும் இல்லை. யாப்பு அலங்காரப் படலங் களில் சில இடங்களில் விரிவுரையாக எழுதுகின்றார்.

## உரை நிலை

எடுத்துக்காட்டு, உதாரணம் என்று பிறர் கூறுவதை இவர் '**வரலாறு**' என்கிறார்.

" இந்திரன் தாமரையைக் கரத்தாற் கொய்
திறைவனுக்குத்
தந்திருங் குற்றத்தின் நீங்கிவிண் மேல்இருந்
தான்எனலும்
வந்தன காரக மெல்லாம் வகுத்த வழிமுறையே

என்றார் பிறரும்" எனக் காரகங்கள் ஆறும் (வேற்றுமை உருபுகள்) வருமாற்றை எடுத்துக்காட்டுகிறார். தெய்வச்

சிலையாரும் இவ்வாறு வேற்றுமைக்குக் கூறுதல் ஆங்குக் காண்க.

சொற்பழுதாகாமல் பாடலியற்ற வேண்டும் என்பதைத் தடைவிடைகளால் இவர் கூறுமாறு :

''அவைகள் (சொற்பழுதுகள்) அன்றுள்ளானொரு குரிசிலைப் புகழ்ந்து செய்யும் கவியுள் மறந்தேயும் வரப் பெறா எனக் கொள்க. ஆகாமைக்குக் காரணம் யாதெனின், 'தச்சநூலில் இப்படிப்பட்ட மனைதனை எடுக்கிற் குடிபுகல் இன்ன நன்மை தரும்', 'இன்ன தீமை தரும்' என்று சொல்லும் என்பது. மற்றும் 'இப்படிப்பட்ட யானை குதிரை ஆயுதம் உடையானுக்குப் பொல் லாங்கைத் தரும்', 'நன்மையைத் தரும்' என்று நூலுண்மை யான் என்பது. ஆகின், பகைவராய் உள்ளாரைச் சாவவும் கெடவும் பாடல் ஆகாதோ எனின், அற்றன்று. பாடின கவி பாட்டுண்டான் கொள்ளின் அல்லது பயன் கொடாது என்பது என் போலவோ எனின், குதிரை இலக்கணம் அறிவான் குதிரை கொள்ளுமிடத்து இக்குதிரை கொள்ளில் எனக்குப் பொல்லாதென்னும் இலக்கணம் அறியான் பயன் கொள்ளான். பாட்டுண்பானும் இலக்கணம் தான் அறிதலின்றேல் பிறரையிட்டாராய்தல் செய்து கைக்கொள்ளும். அறியாதும் ஆராயாதும் கொள்ளின் பயன் கொடா தென்பது. அற்றன்று; ஆராயாது கைக்கொண்டாருஞ் சாவவும் கெடவும் பழையோர் பாடினாரெனின், அது பாட்டின் பலனால் வந்ததன்று; அவர்கள் சொற் பழுதாகாமையில் எனக் கொள்க'' என்பது (143).

அகலக் கவி செய்வான் வழக்குச் சொல் அல்லாத வற்றையும் நூலில் கூற நேரும் என்கிறார்: ''குண்டல கேசியும் உதயணன் கதையும் முதலாக உடையவற்றில் தெரியாத சொல்லும் பொருளும் வந்தன எனின், அகலக் கவி செய்வானுக்கு அப்படியல்லது ஆகாது என்பது.

அன்றியும் அவை செய்த காலத்து அச்சொற்களும் பொருள்களும் விளங்கி இருக்கும் என்றாலும் அமையு மெனக் கொள்க'' என்பது அது (144).

## சில வழக்குகள்

சில தேயத்து வழக்குகளைக் குறிப்பிட்டு, அவை அறிவிலார் வழங்கும் பிழை வழக்கு எனக் கடிகின்றார்:

''நாளி கோளி மூளை உளக்கு வாளை வளி எனவும், விழக்கு பழிங்கு தழிகை கிழமை எனவும் — பதினாறாம் உடலும் (ள), பதினைந்தாம் உடலும் (ழ) தம்முட்டேற்றக் **கருநிலஞ் சுற்றின தேசத்துச்** சிலர் வழங்குவர்.

''வெச்சிலை, முச்சம், கச்சை எனவும் உற்றியம் போது எனவும் மற்றியம், பிற்றை வாங்கி விற்றான் எனவும் பதினேழாம் உடலும் (ற), மூன்றாம் உடலும் (ச) தம்முட்டேற்றக் **காவிரி பாய்ந்த நிலத்துச்** சிலர் வழங்குவர்.

''நெல்லுக்கா நின்றது, வீட்டுக்கா நின்றது'' என்று **பாலாறு பாய்ந்த நிலத்துச்** சிலர் வழங்குவர்.

''மற்றும் இவனைப் பாக்க, இங்காக்க, அங்காக்க எனவும், இப்படிக் கொற்ற, அப்படிக் கொற்ற எனவும் சேத்து நிலம், ஆத்துக்கால் எனவும் வாயைப்பயம், கோயி முட்டை எனவும் உசிர், மசிர் எனவும் பிறவாற்றானும் **அறிவில்லாதார் தமிழைப் பிழைக்க வழங்குவர்.** இவை யெல்லாம் உலகத்தார்க்கு ஒவ்வா என்று களைக. 'உலகம் என்ப துயர்ந்தோர் மாட்டே' என்றறிக'' என்கிறார். இப்பகுதியால் இவர் பல தேய மக்கள் வழங்கும் வழக்குகளை அறிந்தவர் என்பது விளங்கும். இத்தகு கருத்துடையார் தமிழ் மரபைப் போற்றிக் கொள்ளாமை சிந்திக்க வைக்கின்றது.

நாம் கண்டம், நாங்கள் கண்டம், நாமறிசம், நாங்களறிசம் (80) உண்டியது, உண்கிறியது, உறங்குகிறியது, உண்கிறிது, உறங்குகிறிது, உண்பிது, உறங்குவிது (81) என்று இவர் எடுத்துக்காட்டுக் காட்டுவதும், கோடாலி (40, 41, 43) போல வழுச்சொல் வழங்குவதும் திகைப்பூட்டுகின்றன. வட்டா (வட்டை) முருங்கா (முருங்கை) என்பவை ஆரியச் சொல்லும் சிங்களச் சொல்லுமாகக் காட்டலும் அத்தகைத்தே (59).

கவிழப்பூக்கும் தும்பை கவிழ்தும்பை (51), பூனைக் காலை ஒப்பக் காய்ப்பது பூனைக்காலி (54), தறிக்கப் படுதலால் தறி, முறிக்கப்படுதலால் முறி, பொதியப் படுதலால் பொதி (62) எனப் பொருணிலை விளக்கம் கண்டு இலக்கணம் கூறுதல் மகிழவைக்கின்றது.

சிறுக்கன், தடுக்கு, மெத்தை, வாய்ச்சி ஆகிய (41) வழக்குச் சொல் வளங்களை ஆங்காங்குக் காட்டுகிறார்.

**நடை**

நடையாவது ஒழுக்கம் எனக்கொண்டு குறிஞ்சி நடையியல், நெய்தல் நடையியல், பாலை நடையியல், மருத நடையியல், முல்லை நடையியல் என நெடிய அகவல்களில் துறைகளை விரிய எடுத்துக் கூறுகிறார். குறிஞ்சி நடையியல் 74 அடிகளால் விரிகின்றது. அதில் கூறப்பட்டுள்ள துறைகள் மட்டும் 106 உள்ளன, இவ்வாறே பிற திணைகளின் நடையியலும் கூறப்பட்டுள்ளன. இக் கூறல் கோவை நூல்களுக்கு வகுத்துக் காட்டிய வனப்பாக அமைகின்றது எனலாம்.

**ஓசை**

இவர், ஓசை யூட்டுமாற்றை விளக்கிக் காட்டுவது புதுவகையினது.

**'' அகர முதல எழுத்தெல்லாம் ஆதி**
**பகவன் முதற்றே யுலகு ''**

இதனை,

"புளிமா புளிமா புளிமாங்காய் தேமா
புளிமா புளிமா பிறப்பு"

என்று ஓசையூட்டுக" என்கிறார். இவ்வாறே சில பாடல்களை ஓசையூட்டிக் காட்டுகிறார்.

வண்ணக ஒத்தாழிசைக் கலிப்பாவுக்குரிய எடுத்துக் காட்டின் சுரிதகத்தில்,

"அகலி லாநின் றடியிணை பரவுதும்
வெல்படைத் தொண்டிமான் விறற்சே னாபதி
சிங்களத் துரையன் வெண்குடை யதனொடு
பொங்குபுகழ் வில்லவன்தன் புறக்கொடை கொண்டு
பொலிதரு சேந்தன் பொன்பற்றி காவலன்
மலிதரு பார்மிசை மன்னுவோன் எனவே"

என்பது வாழ்த்தாக அமைவது மட்டுமன்றிப் பொன் பற்றி காவலனின் வரலாற்றுக் குறிப்புகளையும் உள்ளடக்கிய நயமுடையதாக விளங்குகின்றது (115).

## பொருள்கோள்

இலக்கணர் மரபாகக் கூறும் பொருள்கோள் என்பதைப் பொருணடை என்று கூறுவதுடன் வள்ளி, வாழை, கரும்பு, பலவு, அசோகு, விற்பூட்டு, புனலாறு எனப் பொருள்கோள் ஏழு கூறி அதன் இயல்பையும் கூறுகிறார். இது புதுவழக்காகும் (90-94).

"கற்றதனால் ஆய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்"

"கடாஅக் களிற்றின்மேல் கட்படா மாதர்
படாஅ முலைமேல் துகில்"

இவையெல்லாம் குறட்போலி என்பதும்,

"கடாஅ உருவொடு கண்ணஞ்சா தியாண்டும்
உகாஅமை வல்லதே ஒற்று"

என்பது **சிந்துப்போலி** என்பதும் கொடுமைக் காட்சி நமக்கு வழங்குதல் உறுதி. எனினும், ''திருவள்ளுவப் பயனெல் லாங் குறள் வெண்பா என்றமையால் அஃது குற்ற மெனில், அற்றன்று; அவையெல்லாம் ஒரு பெயராலே வழங்க வேண்டாவோ எனின், குண்டலகேசி விருத்தம், கலிவிருத்தம், எலிவிருத்தம், நரிவிருத்தம் முதலாயுள்ள வற்றுட் கலித்துறைகளும் உளவாம் ஆதலால் குற்ற மாகாது'' என்று அமைதி கூறுவது கொடுமையிற் கொடுமையாய் உள்ளது. அரிதுபெற்ற புலமை இப்படி யாயிற்றே என்னும் ஏக்கம் தவிர்க்க முடியாததாக அமைந்து விடுகின்றது. இப்படியே இவ்வழிச் செல்லும் நூல்களும் தமிழிலக்கண மரபினை முற்றாக அழிக்க முயன்றும் முடியாமையை எண்ணிச் சீரிளமைத் திறம் வியந்து போற்றவே முடிகின்றது.

வீரசோழிய முதற்பதிப்பு கி. பி. 1881-இல் சி. வை. தாமோதரம் பிள்ளையால் பதிப்பிக்கப்பட்டது. இரண்டாம் பதிப்பும் அவரால் 1885-இல் கொண்டுவரப் பட்டது. 1886-இல் மூலப்பதிப்பு இராமசுவாமிகள் என்ப வரால் பதிப்பிக்கப்பட்டது. கழகப் பதிப்பாகக் கா. ர. கோவிந்தராச முதலியார் குறிப்புரை விளக்க வுரைகளுடன் வெளிவந்தது.

# 13. இந்திர காளியம்

இந்திர காளியார் என்பவரால் இயற்றப்பட்ட பாட்டியல் நூல் இந்திர காளியம் என்பது. இந்நூல் முற்றாகக் கிடைத்திலது. பன்னிரு பாட்டியல் வெண்பாப் பாட்டியல் நவநீதப் பாட்டியல் என்பவற்றின் வழியே 40 நூற்பாக்கள் கிடைத்துள்ளன. இவற்றைத் தொகுத்து மூலமும் பொழிப்புரையுமாக அறிஞர் க. ப. அறவாணர் 1974-இல் பதிப்பித்துள்ளார். சென்னை சைன இளைஞர் மன்றம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

## காலம்

வெண்பாப் பாட்டியலின் பாயிரம், ''இஃது எந்நூல் வழித்தோ எனின் இந்திர காளி என்னும் பாட்டியன் மரபின் வழித்து'' என்கிறது. அன்றியும் ஒன்பதாம் நூற்பா விளக்கத்தில் இந்திர காளி நூற்பாக்கள் ஐந்தனை யும், பதினெட்டாம் நூற்பா விளக்கத்தில் நூற்பா ஒன்றனையும் காட்டியுள்ளது. இவற்றால் வெண்பாப் பாட்டியலுக்கு முதனூலான இந்திர காளியம், அதற்குக் காலத்தால் முற்பட்டதென்பது வெளிப்படை. குணவீர பண்டிதர் காலத்திய குலோத்துங்க சோழனுக்கு முற்பட்டவர் எனின் பன்னிரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்றும், இராசராசனுக்கு முற்பட்டவர் எனின் பத்தாம் நூற்றாண்டுக்கு முற்பட்டவர் என்றோ கொள்ள வேண்டும்.

அடியார்க்கு நல்லார் உரையில் குறிக்கப்படும் இந்திர காளியம் இசை நூல். அதன் ஆசிரியர் யாமளேந்திரர் எனப்படுதலால் அந்நூல் வேறொன்றாகும்.

**சமயம்**

இந்திர காளியம் எனப்படும் பாட்டியலின் நூலாசிரியர் சமண சமயத்தர் என்பது தெளிவு. வச்சணந்தி மாலையாம் வெண்பாப் பாட்டியலுக்கு முதனூலாதலும் இதனை வலியுறுத்தும்.

**பொருள்**

வருணம், கதி, உண்டி, கன்னல், கணம், நாள், மங்கலம், ஆனந்தம், பிள்ளைப் பாட்டு, குடை மங்கலம், பொருத்தம், ஓலை இலக்கணம் ஆகியவை பற்றிய நூற்பாக்கள் உண்மை இத்தொகுப்பால் அறிய வருகின்றன.

ஓலை இலக்கணம் பற்றி இரண்டு பாடல்கள் நவநீதப் பாட்டியல் வழி அறியப்படுகின்றன (92). ஒன்று அகவல்; மற்றொன்று வெண்பா. ஒரே செய்தியை இருவகைப் பாக்களில் சொல்ல வேண்டியதில்லை. அன்றியும் இந்திர காளியம் அகவல் நடையது; வெண்பாவின் இறுதியில் கல்லாடனார் வெண்பா என்னும் குறிப்பும் உள்ளது. ஆதலால் அவ்வெண்பாவை இந்திர காளியார் பாவினின்று ஒதுக்க வேண்டும். அப்பாடல்கள் நவநீதப் பாட்டியலில் உள்ளபடி : (உரை ii) இந்திர காளியனார் உரைத்தபடி:

**" ஓலைய திலக்கணம் உரைக்கும் காலை**
**நாலாறு விரற்றானம் நான்மறை யோர்க்குப்**
**பார்த்திபர் தமக்குப் பதிற்றிரட்டி விரலே**
**வணிகர்க் கெண்ணிரு விரலே**
**சூத்திரர்க் கீராறு விரலே**
**இப்பரி சேபாட் டெழுதவும் படுமே "**

**" அந்தணர்க்கு நாலா லரசர்க் கிருபதாம்**
**இந்த விரல்வணிகர்க் கெண்ணிரண்டாம்—முந்துவிரல்**
**வேளாளர்க் கீராறாம் வெள்ளோலை வேயனைய**
**தோளாய் அறிநீ தொகுத்து "**

— கல்லாடனார் வெண்பா.

எழுத்துக்கும் வருணம்! ஓலைக்குப் வருணம்! வருணக் கொடுமை கொடி கட்டிப் பறந்த சான்றுகள் இன்னவை!

# 14. நேமிநாதம்

குணவீர பண்டிதர் என்பவரால் செய்யப்பட்ட இலக்கண நூல் நேமிநாதம் ஆகும். நேமிநாதர் என்பவர் சமண சமயத் தீர்த்தங்கரர் இருபத்து நால்வருள் இருபத்து இரண்டாம் தீர்த்தங்கரராக விளங்கியவர். அவர்தம் பெயரால் செய்யப்பட்டமையால் இப்பெயர் பெற்றது.

## பெயர்

இந்நூல் செய்தார் பெயர், நூலின் பெயர் ஆகியவற்றைப் பாயிரவுரை கூறுகின்றது: "இந்நூல் செய்தார் யாரோ எனின், உளமலி பேரருள் உயிர்மிசை வைத்த, வளமலி **களந்தை வச்சணந்தி முனிவரன்** கொள்கையின் வழாஅக் **குணவீரபண்டிதன்** செய்தமைத்தான்."

"இந்நூல் என்ன பெயர்த்தோ எனின், இந்நூல் எய்திய சிறப்பின் எழுத்தையும் சொல்லையும், மெய்தெரி வகையின் விளங்க நாடி, தேனிமிர் பைம்பொழில் தென் **மயிலாபுரி**, நீனிறக் கடவுள் **நேமிநாதர்** தந்திருப் பெயரால் செய்தமையான் நேமிநாதம் என்னும் பெயர்த்து" என்பவவை அவை.

இக்குணவீர பண்டிதர் செய்த மற்றொரு நூல் வெண்பாப் பாட்டியல். அதில் "கற்றவர் புகழும் களந்தையென் பெரும்பதி, குற்றமில் வாய்மைக் குணவீர பண்டிதர்" எனப்படுகின்றார்.

**ஊர்-சமயம்**

குணவீர பண்டிதரின் ஊர் ர்கிய களந்தை என்னும் களத்தூர் தொண்டை மண்டலம் சார்ந்ததென அம் மண்டலச் சதகம் கூறுகின்றது. அக்களத்தூர் தொண்டை மண்டலத்துக் கோட்டங்கள் இருபத்து நான்கனுள் ஒன்று. காஞ்சிக்குத் தென்கிழக்கில் 45 கிலோமீட்டர் தொலைவில் அவ்வூர் உள்ளதென அச் சதகஉரை கூறுகின்றது. குணவீர பண்டிதரின் ஆசிரியர் வச்சணந்தி முனிவர் என்பதும், சமண சமயத்தார் என்பதும் மேற்குறித்த பாயிரப் பகுதியால் விளங்குவனவே.

மேலும் ''பூவின்மேல் வந்தருளும் புங்கவன்'' (1) எனப் பாயிரமும் ''தாதார் மலர்ப்பிண்டித் தத்துவனை வந்தித்து'' எனச் சொல்லதிகாரத் தொடக்கமும் (25) கூறுவதும் அறியத்தக்கன.

**காலம்**

வெண்பாப் பாட்டியல் உரைப்பாயிரத்தில், ''காலம் என்பது இன்னார் காலத்து இந்நூல் செய்த தென்றல். இந்நூல் யார் காலத்துச் செய்ததோ எனின், குருத்தவா மணிமுடிக் கொற்றவர் கோமான், தருத்தகு மணிமுடித் **திரிபுவன தேவன்** என்னும் அரசன் காலத்திற் செய்தது என்று உணர்க'' எனப்பட்டுள்ளது. இவ்வரசனை ஆய்ந்த நேமிநாத முதற்பதிப்பாசிரியர் இரா. இராகவ ஐயங்கார், ''திரிபுவன தேவன் என்னும் பெயருடையவன் குலோத்துங்க சோழன். அவன் காலம் இற்றைக்கு 800 ஆண்டுகளுக்கு முற்பட்டது'' என்பர். இக் குலோத்துங்கன் மூன்றாம் குலோத்துங்கன் ஆவன். இவன் காலம் கி.பி. 1178—1218. ஆதலால் இக்குணவீர பண்டிதர் காலம் பன்னிரண்டாம் நூற்றாண்டின் இறுதியாகவோ, பதின்மூன்றாம் நூற்றாண்டின் தொடக்கமாகவோ இருத்தல் வேண்டும். 'குலோத்துங்கன்' என்னும் பெயரமைதியைச் சுட்டுகிறது உரை (10). இக்

குலோத்துங்கன் முதற்குலோத்துங்கன் என்பாரும் உளர். அவ்வாறாயின் கி.பி. 985—1014 ஆகும்.

**சின்னூல்**

நேமிநாதத்திற்கு ஒரு பெயர் சின்னூல் என்பது. இஃது அளவையால் பெற்ற பெயர். 'சின்னூல் உரைத்த குணவீர பண்டிதன்' என்று தொண்டை மண்டல சதகம் கூறுவதால் அப்பெயரும் நேமிநாதம் போலவே வழக்குடைய பெயராகக் கொள்ளலாம். ''விரித்துரைத்த நூல்களினும் வேண்டுவ கொண்டு, தெரித்துரைப்பன்'' எனச் சொல்லதிகாரத்தில் வரும் செய்தியால் சுருக்க நூல் என்பது கொண்டு சின்னூல் எனப்பட்டது என்பதைத் தெளியலாம். மேலும், ''விரிந்த நூல் உணரா மேதினி யோர்க்குச் சுருங்கச் செய்தான், அந்நூல் தெரிவது காரண மாக'' என வரும் பாயிர உரையும் தெளிவிக்கும் (1).

**நூல்**

நேமிநாதம் எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என ஈரதிகாரங்களை உடையது. எழுத்ததிகாரம் எனப் பெயர் இருப்பினும் அவ்வதிகாரமே இயலாக அமைந்து விடுகின்றது. சொல்லதிகாரம் மொழியாக்க மரபு, வேற்றுமை மரபு, உருபு மயங்கியல், விளிமரபு, பெயர் மரபு, வினைமரபு, இடைச்சொன்மரபு, உரிச்சொன் மரபு, எச்சமரபு என ஒன்பது உட்பிரிவுகளைக் கொண் டுள்ளது. இவ்வொன்பதும் தொல்காப்பியச் சொல்லதி கார இயல்களின் எண்ணிக்கை அளவை மட்டுமன்றிப் பெயரினும் பெரிதும் ஒத்திருத்தல் கருதத்தக்கது. அன்றி யும் எழுத்தில் இன்ன வழியால் நூல் செய்வேன் என்ப தைக் கூறாத ஆசிரியர் சொல்லதிகாரத்தில்,

**'' தொல்காப்பியக் கடலிற் சொற்றீபச் சுற்றளக்கப்<br>
பல்காற்கொண் டோடும் படகென்ப-பல்கோட்டுக்<br>
கோமிகா மற்புலனை வெல்லும் குணவீர<br>
நேமிநா தத்தின் நெறி''**

என்று கூறுதலால் தொல்காப்பியத்தை முன்னூலாகக் கொண்டு சொல்லதிகாரத்தை இயற்றினார் எனக் கருதலாம்.

இந்நூல் வெண்பா யாப்பால் அமைந்துள்ளது. இவ்வாறே இவர் இயற்றிய பாட்டியலும் வெண்பா யாப்பால் அமைந்திருத்தலும், வெண்பாப் பாட்டியல் எனப்பெயர் பெற்றிருத்தலும் ஒப்பு நோக்கத்தக்கது.

எழுத்ததிகார வெண்பா 24; சொல்லதிகார வெண்பா 71; பாயிரச் செய்யுள்கள், அவையடக்கச் செய்யுள்கள், தற்சிறப்புப் பாயிரச் செய்யுள்கள் ஆகியவை 4; ஆக 99 வெண்பாக்கள் உள்ளன.

எழுத்ததிகாரத்தின் வழியே அறியப்படும் பொருள்கள் எண், பெயர், முறை, மாத்திரை, பிறப்பு, வடிவு, புணர்ச்சி ஆகிய ஏழும் ஆகும். சொல்லதிகாரம் மொழியாக்க மரபு முதலாகக் கூறப்பட்ட இயற்பிரிவுகளின் பெயர்களை அறியவே அது கூறும் பொருள் வகை விளங்கும்.

நூற்பா யாப்பு இலக்கணத்திற்கெனவே அமைந்தது. அமைப்பு எளிமையும், பொருளோட்ட இயற்கையும் உடையது. யாப்பியல் இலக்கணம் நோக்கி இடர்களை நோக்க வேண்டாத ஓட்டம் உடையது. ஆயினும் வெண்பா, கட்டளைக் கலித்துறை ஆயனவும் இலக்கண நூற்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆசிரியத்தானும் வெண்பாவானும் சூத்திரம் செய்யப்படும் (மரபு. 100) என்கிறார் பேராசிரியர். புறப்பொருள் வெண்பா மாலையின் 'வெண்பா'வும் முற்றூண்டலாக அமைந்திருக்கவும் கூடும்.

**'' ஒன்றன்பேர் ஒன்றற் குரைப்பதாம் ஆகுபெயர்**
**சென்றவைதாந் தம்முதலிற் சேர்தலோ-டொன்றாத**
**வேறொன்றிற் சேர்தல் எனஇரண்டாம் வேற்கண்ணாய்**
**ஈறு திரிதலுமுண் டண்டு''**

என்பது ஆகுபெயர் பற்றிய வெண்பா. இடர்ப்பாடு இல்லாமல் இவர்க்கு வெண்பா யாப்புக் கைவந்திருத்தல் தெளிவாகும்.

> " ஒன்றன் பெயரான் அதற்கியை பிறிதைத்
> தொன்முறை யுரைப்பன ஆகு பெயரே" (290)

என்னும் நன்னூலார் நடைக்கு இவர்நடை முன்னடையாதல் இவ்வெண்பாவின் முதலடியால் கண்டுகொள்ளக் கூடியதே.

**உரை**

நேமிநாதத்தின் உரையாசிரியர் எவர் என்ற குறிப்பு அறிந்துகொள்ள வாய்ப்பு இல்லை. என்னுதலிற்றோ எனின் என்று தொடங்கி யுரைக்கிறது. பொழிப்புரையாக நடக்கிறது. விளக்கவுரை, எடுத்துக்காட்டு ஆகியனவும் கொண்டுளது. பெரும்பாலும் பேருரையாகவே செல்கின்றது. இலக்கணச்சான்றுகளை மிகுதியாகக் காட்டுகின்றது. எழுத்தின் பிறப்புப்பற்றிக் கூறும் வெண்பாவில் (6) தொல்காப்பியப் பிறப்பியல் 19 நூற்பாக்களையுமே காட்டி விடுகிறார்.

'எழுத்தின் இலக்கணத்தைச் சொல்லால் உரைப்பன்' என்னும் பாயிரத் தொடரை விளக்குகின்றார்.

'சொல்லால் உரைப்பன்' என்றது என்னை? பிறவாற்றானும் உரைக்குமாறு உண்டோ எனின், உண்மை சொல்லுதல் குற்றமன்று; கண்ணாற் பார்த்தான்; வாயாற் சொன்னான்; என்றாற்போல என்க. அன்றியும், எழுத்திலக்கணத்தைச் சொல்லால் உரைப்பது என்னாத பொழுது சொல்லிலக்கணத்தைச் சொல்லால் உணர்த்தி எழுத்திலக்கணத்தை எழுத்தான் உணர்த்துபவோ? என்று கருதுவார்க்குச் சொல்லிலக்கணமுஞ் சொல்லால் உணர்த்துப என்றற்கு இங்ஙனம் சொல்லப்பட்டது. என்போல

எனின், இரும்பினான் மரத்தொடக்கத்தனவற்றை அறுப்பார் அவ்விரும்பு தன்னையும் இரும்பினான் அறுப்பார் அதுபோல எனக் கொள்க'' என்கிறார்.

உவமையாலும் விளக்குகிறார்:

''வல்லினம் கன்மேல் விரல் இட்டாற்போலவும், மெல்லினம் மணன்மேல் விரல் இட்டாற்போலவும் இடையினம் மண்மேல் விரல் இட்டாற்போலவும்'' (உ) என மூவின அமைதியை உவமையால் காட்டுகிறார்.

பழக்கவழக்க எடுத்துக்காட்டும் உண்டு:

''உலற்ற மின்றிப் பயின்றார் ஒரு சான்றார், மயிர் நீட்டி உலறி நின்றாரைக் கண்டு ஒருவன் எம்பெருமான் உலறி நின்றீரால் என்றக்கால் வாளாதே உலறி நின்றேன் என்னற்க. தனக்கு உற்ற துரைத்து இது காரணத்தால் உலறி நின்றேன் என்க'' என்பது அது. உலற்றுதல் முடியைக் காற்றுப்படக் கோதிவிடுதல். உலற்றுதல் சிலர் வழக்கு; உலற்றாமை சிலர் வழக்கு; உலற்றுவார் தாம் உலற்றுதற்குக் காரணம் கூறல் வழக்கு என்கிறார் (35).

சிறப்புப்பெயர் இயற்பெயர் வருமாற்றை எடுத்துக் காட்டுகிறார்:

சோழன் நலங்கிள்ளி, படைத்தலைவன் கொற்றன் என்பவை சிறப்புப் பெயரின் பின் இயற்பெயர் வருவன. இப்பெயர் இயற்பெயர் முன்னாகவும் சிறப்புப்பெயர் பின்னாகவும் வருவதாயின் 'பண்பு ஒட்டி வலித்தல்லது வாராது' என்கிறார். அவை நலங்கிள்ளிச் சோழன், கொற்றப் படைத்தலைவன் எனவரும் என்கிறார். (38)

எடுத்துக்காட்டைச் சிறுகதை போலப் படைத்துக் கூறுவதையும் இவர் மேற்கொள்கிறார்:

''செக்கினுள் எள்பெய்து, ஆட்டுவார் இல்லா மோட்டு முதுகிழவி மன்றத் திருந்த வன்றிறல் இளைஞரைச்

சென்று கைப்பற்றி எந்தை வருக எம்மான் வருக மைந்தன் வருக மணாளன் வருக என்றால் வழுவாகற் பாலதோ எனின், அறியாது சொன்னாய் ஒரு பொருண்மேற் பல பெயர் அல்லாமையால் ஆகாது'' (37).

சொற்றொடரமைதி பொருளொடு பொருந்தி நிற்றல் வேண்டும் என்பதை எடுத்துக்காட்டுத் தந்து நிறுவுகிறார்:

''வல்லம் எறிந்த நல்லிளங்கோசர் மகன் பெருவழுதி என்றால் வல்லம் எறிதல் பெருவழுதிமேற் செல்லாமையின் நல்லிளங் கோசரை இடைநிறுவற்க'' என்பது அது. நல்லிளங்கோசர் மகன் வல்லம் எறிந்த பெருவழுதி என அமையின் வல்லம் எறிந்தவன் வழுதியாதல் தெளிவாம் (70).

விற்பயிற்சி செய்யுமிடம் 'கல்லூரி' என வழங்கப் பெற்றமை இவருரையால் அறிய வருகின்றது. ''யாம் பண்டு வில்லெய்யும் இக்கல்லூரி'' என்பது அது.

தாமே தடைவிடை எழுப்பிக்கொண்டும் விடையளிக் கிறார். முற்கு, வீளை என்பன ஒலியுடையன எனினும் இலக்கணச் சொல்லாகா என்கிறார். இதனைக் கூறும் இடத்து, ''கைகாட்டல், தலையாட்டல் முதலாயின ஆராயாதே முற்கும் வீளையும் ஆராய வேண்டியது என்னை? இவை எழுத்துப்பிறக்கும் தானம் ஆதலாற் கிளவி எனவும் ஆராய வேண்டிற்று; அவை எழுத்து அன்மையிற் சொல்ல முடிந்தன இல்லை'' என்கிறார் (95).

அமித சாகரர் (64) அவிநயனார் (128) அணியியல் (4, 20) இன்ன சில சிறப்புப் பெயர்களை ஆள்கிறார். 'வேளாண்காணி' எனப் பண்டை உரையாசிரியர்களால் வழங்கப்பட்டது இவர் காலத்தில் 'வெள்ளாளர் காணி' என வழங்கப்பட்டமை அறிய வருகின்றது (47).

இவ்வுரையாசிரியர், ''முத்தன் என்கோ முதல் மூர்த்தி என்கோ'' என்னும் திருநூற்றந்தாதிப் பாடலைக் காட்டி அவிரோதி ஆழ்வார் பெயரையும் குறிக்கிறார் (79). ஆதலால் 14 ஆம் நூற்றாண்டவராம் அவரைக் குறித் தலால் இவர் அவர் காலத்திற்குப் பிற்பட்டவர் என்பது விளங்கும்.

தொல்காப்பியத்திற்குப் பின்னர் எழுத்து சொல் இலக்கணச் சுருக்கப்பயிற்சிக்கு இந்நூலே கருவியாக விளங்கியதென்றும், பின்னர் இதனின் விரிந்த 'நன்னூல்' இதனிடத்தைப் பற்றிக்கொண்டதென்றும் கொள்ளலாம்.

இந்நூலின் இரண்டாம் பதிப்பு, கழகத்தின் வழியே 1945 இல் வெளிவந்தது. பதிப்பாசிரியர் கா. உ. கோவிந்த ராச முதலியார்.

# 15. வெண்பாப் பாட்டியல்

வெண்பா யாப்பால் அமைந்த பாட்டியல் ஆதலின் இப்பெயர் பெற்றது. இதனை இயற்றிய ஆசிரியர் நேமிநாதத்தை இயற்றிய குணவீர பண்டிதரே ஆவர். இவர்தம் ஆசிரியர் வச்சணந்தி என்பார். அவர் பெயரைக் கொண்டு 'வச்சணந்தி மாலை'' என்னும் பெயராலும் வழங்குகிறது.

**'' வளங்கெழு மாடத்துக் களந்தையெம் பெருமான்**
**வளர்ந்த கீர்த்தி வச்சணந்தி தேவன்**
**என்னும் மாமுனி செய்வித் ததனால்**
**வச்சணந்தி மாலை என்னும் பெயர்த்து''**

என்னும் பாயிர உரையால் இதனுண்மை விளங்கும். செய்வித்தானால் பெற்ற பெயர் இப்பெயர் என்க. குணவீரபண்டிதர் வரலாற்றை நேமிநாதத்தில் கண்டு கொள்க.

**வழி**

இதன் பாயிர உரையால் இந்நூல் **இந்திர காளி** என்னும் பாட்டியன்மரபின் வழிவந்ததென்றும், தொகுத் தமைக்கப்பட்ட நூலென்றும், திருமலைப் பண்டிதர் என்பார் இந்நூலைக் கேட்டு ஆய்ந்தவர் என்றும், திரிபுவன தேவன் காலத்ததென்றும் அறியவருகின்றன. இந்நூல் கேட்கப்பட்டது 'கடவுண்முதலிய நற்சங்கத்தார் அவைக்களத்து' என்பது 'திருமலைப் பங்கய மலர்த்தாட்

பண்டிதர் என்னும் முனிவர் எனப்பட்டவரது தலைமைக் கண் அமைந்த கழகம் ஆகலாம். கடவுள் என்பது முனிவரைக் குறித்தல் பழவழக்கு.

குணவீர பண்டிதர் சிறப்பு வெண்பாமாலைச் சிறப்புப் பாயிரத்தால் இனிது விளக்கப்படுகிறது:

**'' பண்பார் கவிஞர் வியந்தேத்தப் பாட்டியலாம்**
**வெண்பாவந் தாதி விளம்பினான்—நண்பாரும்**
**கோடாத கீர்த்திக் குணவீர பண்டிதனாம்**
**பீடார் களந்தைப் பிரான் ''**

என்பது அது.

**நூல்**

வெண்பாப் பாட்டியல் என்னும் வச்சணந்தி மாலை அந்தாதி முறையில் அமைந்தது. அதனாலேயே 'மாலை' என்னும் பெயர் பெற்றது. இந்நூல் முதன் மொழியியல், செய்யுளியல், பொதுவியல் என்னும் மூன்றியல்களைக் கொண்டது. மூன்றியல்களிலும் முறையே 22, 48, 30 ஆக 100 வெண்பாக்கள் உள்ளன. பாயிரம் (2), வச்சணந்தியார் பெருமை (1), அவையடக்கம் (1) என்பவை 4 வெண் பாக்கள்.

முதன்மொழியியல் மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உணா, வருணம், நாள், கதி, கணம் எனப் படும் பத்துப் பொருத்தங்களைக் கூறுகின்றது.

செய்யுளியல் நால்வகைக் கவிகள், பிள்ளைக்கவி முதல் அகலக்கவி ஈறாகிய நூல்வகைகள், கமகன், வாதி, வாக்கி, புன்கவிஞர் ஆயோர் தன்மை ஆகியவற்றைக் கூறுகின்றது.

பொதுவியல் நாற்பாக்களின் சாதி, இராசி, தேவதை, பாடும்விதம், உறுப்புச் செய்யுள், அகலக்கவி புனைவோர், நல்லவை, நிறையவை, தீயவை, அந்தணர் முதலியோர் இயல்பு, பாயிரத்திலக்கணம், அகலக் கவி கேட்பிக்கும் முழுத்தம் ஆகியவற்றைக் கூறுகின்றது.

**''என்களங்கம் யாவையும் நீக்கி இனிதருளி**
**நன்களந்தை நூலோடு நாட்டுவரால்—தென்களந்தை**
**மன்பெயரான் வண்புகழான் வச்சணந்தி மாமுனிவன்**
**தன்பெயரான் நாட்டுந் தமிழ்''**

என்பது அவையடக்கம்.

'நாடாளும் வேந்தரும் நல்லடியில் வீழ்ந்து வணங்கப்படும் வச்சணந்தி முனிவன் திருநோக்குப்பட்ட இடத்துத் திருமல்கும்; பகையும் பிணியும் நீங்கும்; அறம் அகலாது' என்னும் பொருளமைந்த வாழ்த்து வெண்பா ஒன்றும் நூலில் உள்ளது. அது முதலியல் இறுதியில் இடம் பெற்றுள்ளது. அஃது ஈற்றில் இருந்திருக்கக் கூடும்.

**உரை**

வெண்பாப் பாட்டியலுக்குப் பொழிப்புரையும் குறிப்புரையுமாக அமைந்த ஒருரை உண்டு. அவ்வுரையாசிரியர் பெயர் தெரிந்திலது. பாயிரத்தின் முதற் பாடல் விரிவுரையுடையதாய்ப் பாயிரச் செய்திகளையெல்லாம் தன்னிடத்துடையதாய் அமைந்துள்ளது. 'மாலை மாற் றாதியா' என்னும் சித்திரக்கவித் தொடர்க்கு மாலை மாற்று முதல் முப்பத்திரண்டு வகைச் சித்திரக் கவிகளைக் குறிக்கிறார் (செய். 4). அகலக் கவி' நூல் பெயர் பெறுமாற்றை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குகிறார். பாண்டிக்கோவை பாடுவித்தானைப் பற்றி வந்தது என்றும் வச்சணந்தி மாலையும் அற்று என்றும் கூறுகிறார் (செய். 45). வாதிக்கு ஆகாதவை விதண்டா வாதம், சர்ப்பவாதம் என்கிறார் (46). விளக்கவுரை வரைந்த கொ. இராமலிங்கத் தம்பிரான் ''காதல் மிரண்டுள்ள தன்கண் வெல்லும் வேட்கையுடையான் கதை சர்ப்பமாம். தன் கோட்பாட்டை நிலைநிறுத்தாத கதை விதண்டையாம்'' என்கிறார். 'விதண்டாவாதம், சந்தர்ப்ப வாதம்' என இந்நாள் வழக்கிலும் உள்ளவற்றை நோக்கச் சர்ப்பவாதம் என்பது 'சந்தர்ப்ப

வாதம்' என்பதன் விடுபாட்டு வடிவோ என எண்ணத் தோன்றுகிறது.

பிள்ளைக்கவி என்பது பிள்ளைத் தமிழ்க்கு ஒரு பெயர். ஆனால் தனக்கென ஒன்றின்றி முன்னோர் மொழிந்த சொன்னடை பொருணடை கண்டு கவி பாடுவோனும் பிள்ளைக் கவி எனப்படுகின்றான். முன்னது நூல் வகை; பின்னது புன்பாவலன் வகை; இவ்விருவகை மயக்கு நீக்குதற்கே 'பிள்ளைத்தமிழ்' எனல் பெருவழக்கென அறிய முடிகின்றது (செய். 48).

ஒருவன் கவியில் வேறொரு செய்யுட் புணர்ப்போன் சார்த்துக்கவி எனப்படுகின்றான். இது கவிஞன் வகை. சாற்றுக் கவி என்பது பாவை. அரங்கேற்று விழாவின் போது பாடப்பட்ட பாராட்டுக் கவிகள் சாற்றுக்கவிகள். சாறு என்பது விழா; இவண் அரங்கேற்று விழா. பிற்காலத்தில் சாற்றுக்கவி, சார்த்துக்கவி வேறுபாடின்றி வழங்கத் தலைப்பட்டுவிட்டன (செய். 48).

பொருள் விளங்கிக் கிடந்தமையின் பொருள் விரித்துக் கொள்க என்று கூறிச் செல்வதும் இவ்வுரையாசிரியர் வழக்கம் (செய். 40-42). பொதுவியலில் பெரும்பாலும் உரைவரையாமல் இவ்வாறு செல்கிறார். அருஞ்சொல் தம் உரைக்கண் வருமாயின் அதற்கு உரையும் வரைகின்றார். எ-டு. எடுத்தேறு சொல்-இடிபோன்ற சொல் (பொது-6); 'வணிகர்' என்னும் சொல் நூலில் கிடந்தும் 'பூவைசியர்' என் இவர் எழுதுதல் காலநிலை.

உறுப்புச் செய்யுள் இலக்கணம் நோக்கத் தக்கதாக உள்ளது. (பொது. 5). அதன் உரை: ''வழக்கினோடும் மரபியலோடும் பொருத்த முடையவாய் வடவெழுத்துக் கலவாது கேட்டோர்க்கு மிகவும் இன்பம் பூரிக்கும் சொல்லாகச் சான்றோர் செய்யுட்களில் எடுத்துக்காட்டுஞ் சொற்களால் புணர்க்கப்படுவன உறுப்புச் செய்யுள்'' என்பது. தனித்தமிழ் என்னும் பின்னை ஆட்சிக்கு முன்னை இலக்கணம் போன்றமைந்தது இது.

இந்திரகாளி என்னும் பாட்டியன் மரபின் வழிநூல் வெண்பாப்பாட்டியல் என்பதைப் பாயிரத்தில் குறிப்பிடும் உரையாசிரியர், உணாப்பொருத்தம் கூறுமிடத்தில் இந்திர காளி நூற்பாக்கள் நான்கனையும் (முன்மொழி. 9), நாட் பொருத்தம் கூறுமிடத்தில் ஒரு நூற்பாவையும் (முன் மொழி. 10) மேற்கோள் காட்டியுள்ளார்.

**காலம்**

பாடப்படும் பொருள்பற்றி நூல் பெயர் பெறுவதற்கு இவர் கூர்மபுராணத்தை எடுத்துக் காட்டுதலால், அதிவீர ராமபாண்டியன் காலத்திற்கு இவ்வுரையாசிரியர் பிற்பட் டவர் எனக் கொள்ளலாம். அதிவீரராம பாண்டியன் காலம் கி.பி. 16 ஆம் நூற்றாண்டு. இதன் முதற்பதிப்பு 1900 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

பழைய பொழிப்புரை குறிப்புரை ஆகிய பழைய உரை யுடன் புதிதாக வரையப்பட்ட விளக்கவுரையும் சேர்த்துக் கழகம் 1936-இல் வெளியிட்டது. இதற்கு விளக்கவுரை வரைந்தவர் கொ. இராமலிங்கத் தம்பிரான் ஆவர்.

# 16. தண்டியலங்காரம்

அணியிலக்கணம் கூறும் நூல்களுள் முதன்மையும் சிறப்பும் வாய்ந்தது தண்டியலங்காரமாகும். தண்டி என்னும் புலவரால் இயற்றப்பட்ட அணி நூலானமையால் தண்டியலங்காரம் எனப்பட்டது.

**தண்டி**

வடமொழியில் 'காவ்யதர்சம்' என்னும் நூலை இயற்றியவர் பெயரும் தண்டி என்றே சொல்லப்படுவார். அதனால் அத்தண்டியாரும் இவரும் ஒருவரே என்றும் கூறுவர். ஆனால் வடமொழித் தண்டியாசிரியர் கி. பி. ஏழாம் நூற்றாண்டினர் என்றும், தமிழ்த் தண்டியாசிரியர் கி.பி. பன்னிரண்டாம் நூற்றாண்டினர் என்றும் அறியப் படுதலால் இருவரும் வேறானவர் என்பது விளங்கும். பெயரொற்றுமையே இம்மயக்கத்திற்குக் காரணம் என்க. தண்டியாசிரியரின் நூலை மொழி பெயர்த்து, 'தண்டி' எனப்பெயரிட்டமை கொண்டு, அவரைத் தண்டியாசிரியர் எனக் கூறினர் என்றும், அவர் இயற்பெயர் மறைந்த தென்றும் கொள்ளுதல் முறையாம். தண்டி என்னும் பெயர் தமிழகமும் கண்டதே என்பதை நாயன்மார் வரிசையில் அறியலாம்.

கம்பரின் மைந்தர் அம்பிகாபதியார் என்பது வரலாறு. அவர்தம் மகனார் தண்டியார் என்பது தண்டியலங்காரச் சிறப்புப் பாயிரத்தால் விளங்குகின்றது.

**" பூவிரி தண்பொழில் காவிரி நாட்டு**
**வம்பவிழ் தெரியல் அம்பி காபதி**
**மேவருந் தவத்தினில் பயந்த**
**தாவருஞ் சீர்த்தித் தண்டியென் பவனே"**

என்பது அது. "ஆடக மன்றத்து நாடகம் நவிற்றும், வடநூல் உணர்ந்த தமிழ் நூற் புலவன்" என்றும் அப் பாயிரம் கூறும். தொல்காப்பிய வழியும் பல்காப்பிய நெறியும் அறிந்து வடநூல் வழிமுறை வழாது நூல் செய்த வகையையும் பாயிரம் குறிப்பிடுகின்றது. ஆனால் தண்டியின் காவிய தர்சத்தின் வழிநூல் என்னும் குறிப்பு அப்பாயிரத்தில் இல்லை.

**காலம்**

தண்டியாசிரியர் காலத்தை வேறொரு வகையால் உறுதி செய்ய வாய்ப்புளது. அநபாய சோழன் எனப்படும் இரண்டாம் குலோத்துங்கனை எடுத்துக்காட்டுப் பாடல்கள் சில சிறப்பிக்கின்றன. அவன் அவைப்புலவர் ஒட்டக்கூத்தரை ஒரு பாடல் ஊர்ப் பெயருடன் குறிக்கின்றது. அப்பாடல்,

**" சென்று செவியளக்குஞ் செம்மையவாய்ச் சிந்தையுளே**
**நின்றளவில் இன்பம் நிறைப்பவற்றுள்—ஒன்று**
**மலரிவரும் கூந்தலார் மாதர்நோக் கொன்று**
**மலரிவரும் கூத்தன்தன் வாக்கு"**

என்பது. மலரி என்பது ஒட்டக்கூத்தர் ஊர். அவர்தம் மாணவர் இவர் என்றும், அவர் ஊரினரே இவர் என்றும் கூறுவர் (பிற்காலச் சோழர் வரலாறு 11: பக்கம் 100). ஆதலால் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் காலமாகிய 12 ஆம் நூற்றாண்டே இவர் காலமுமாம்.

இனி இப்பாடலும் பிறவும் நூலின் எடுத்துக்காட்டாக வருதலால் நூலாசிரியர் இயற்றியதாகுமோ, உரையாசிரியர் இயற்றியதாகுமோ, அது கொண்டன்றோ

காலத்தை உறுதி செய்யலாம் எனின், நூலாசிரியரே எடுத்துக்காட்டும் பாடியவர் என்பது தெளிவாகின்றது.

**பிரயோக விவேக** நூலார், ''தண்டியாசிரியர் மூலோதாரணமுங் காட்டினாற் போல யாமும் உரையெழுதிய தல்லது மூலோதாரணமும் காட்டினாம்'' என்று எழுதியிருத்தலால் தண்டியாசிரியரே மூலமும் எடுத்துக் காட்டும் இயற்றினார் என்பது விளங்கும்.

தண்டியாசிரியர் மிகுதியான எடுத்துக்காட்டுப் பாடல்களில் சிவபெருமானைப் பற்றிப் பாடியிருப்பதும், அவற்றுள் 'எங்கோன்', 'அடியேற்கினிதாம் கச்சிக் கச்சாலைக்கனி', 'எம்பிரான்' என இன்னவாறு உரிமை தோன்றக் கூறியிருப்பதும் இவர்தம் சைவசமயச் சார்பைக் காட்டும் என்பர். தற்சிறப்புப் பாயிரத்திலும், பொருளணியியல் காப்புப் பாடலிலும் இவர் கலைமகளை உளங்கொள வாழ்த்துகின்றார். ஒட்டக்கூத்தரைப் போல் இவரும் கலைமகள் வழிபாட்டில் ஈடுபட்டவர் என்பது விளங்குகின்றது. ''என்னையுடையாள் கலைமடந்தை'' எனவரும் பாட்டு சீரிய எடுத்துக் காட்டாக இலங்குகின்றது.

**நூல்**

தண்டியலங்காரம் பொதுவணியியல், பொருளணியியல், சொல்லணியியல் என மூன்றியல்களையுடையது. நூற்பா யாப்பினைக் கொண்டது. தற்சிறப்பும் காப்பும் நீங்க மூன்றியல்களிலும் 125 நூற்பாக்களையுடையது.

பொதுவணியியலில் செய்யுள் வகை, அவற்றின் இலக்கணம், வைதருப்ப கௌட நெறிகள் ஆகியவை சொல்லப்பட்டுள்ளன.

பொருளணியியலில் தன்மையணி முதல் பாவிக அணி இறுதியாக முப்பத்தைந்து அணிகளின் இலக்கணமும் கூறப்பட்டுள்ளன. அவற்றின் வகைகளும் அவ்வப் பகுதியிலேயே சொல்லப்படுகின்றன.

சொல்லணியியலில் மடக்கின் வகைகள், அவற்றின் இலக்கணம், சித்திரக் கவிகளின் இலக்கணம் வழுக்கள் வழுவமைதிகள் மலைவுகள் ஆகியவை சொல்லப்படுகின்றன.

**நூற்செலவு**

எடுத்த இலக்கணத்தைத் தொகுத்துரைத்துப் பின்னர் விரித்துரைத்துச் செல்லும் வழக்கினை நூல் நெடுகிலும் மேற் கொண்டுளார். பழைய பாடல்களை எடுத்தாளுதல், புதுப்பாடல்கள் இயற்றிச் சேர்த்தல், மூல நூற் செய்தியை மொழியாக்கம் செய்து பாவடிவில் தருதல் என்னும் மூன்று வகைகளிலும் எடுத்துக் காட்டுகளைத் தருகிறார்.

நூற்பாவும், மொழியாக்கப் பாடல்களும் மொழி பெயர்ப்பென்னும் எண்ணத்தையுண்டாக்கா வண்ணம் சுவையும் நயமும் உடையனவாக விளங்குகின்றன.

**'' ஓங்க லிடைவந் துயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலிநீர் ஞாலத் திருளகற்றும்—ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னேர் இலாத தமிழ்''**

என்னும் பாட்டு (49). செந்தமிழைச் செங்கதிருடன் ஒப்பிட்டுக் காட்டிப் பொருள் வேற்றுமைக்கு எடுத்துக் காட்டாகச் செய்த அருமை இவர்தம் தமிழன்பை நன்கு வெளிப்படுத்தும். அதே சுடரை அநபாயனுக்கு ஒப்பாக்கிக் கொண்டு மறுபொருளுவமையாகப் பாடுவது இவர்தம் நன்றிப் பெருக்கை நாட்டுவதாம்.

**'' அன்னைபோல் எவ்வுயிரும் தாங்கும் அநபாயா!**
**நின்னையார் ஒப்பார் நிலவேந்தர்—அன்னதே**
**வாரிபுடைசூழ்ந்த வையகத்திற் கில்லையால்**
**சூரியனே போலுஞ் சுடர் ''**

என்பது அது. (31)

**காப்பியம்**

இவர் கூறும் பெருங்காப்பிய இலக்கணத்தைத் தனித் தனி பகுத்துக் கொண்டு அப்பகுப்புக்குரியவற்றைச் சிலப்பதிகாரத்திலிருந்து தொகுத்துக் கண்டால், அதனைக் கொண்டே காப்பிய இலக்கணம் இயற்றி னாரோ என்று எண்ணத் தூண்டும். ''காவிரி நாடன்ன கழனி நாடு'' என்று கண்ட கம்பன் காட்சியே இத்தண்டி காட்சியாய் அமைந்து தமிழணியாகத் திகழலாயிற்று என்னும் எண்ணத்தை எழுப்புதல் ஒருதலை. எனினும், மொழி பெயர்ப்பு நூலாயிற்றே, அதனால், விபாவனை, இலேசம், பரியாயம், சமாயிதம், உதாத்தம், அவநுதி, சிலேடை, விசேடம், விரோதம், நிதரிசனம், பருவருத்தனை, சங்கீரணம் என அணிப்பெயர்களை ஆட்சி செய்துளார். இவர் எண்ணத்தில் தமிழாக்க வித்துத் தோன்றியிருந்தால் கட்டாயம் செய்திருப்பார் என்பது மட்டும் வெளிப்படை.

**காரணர்**

இதன் விளைவு என்ன ஆயிற்று? ''தண்டியாசிரியரும் சிந்தாமணியாரும் வடமொழியிற் பிறந்த வண்ணமே 'யுக்தமும் அயுக்தமும்' 'ராசமாபுரி' 'ரவிகுல திலகன்' என முறையே கூறுதல் காண்க. நாலடியாரும் தண்டியா சிரியரும் சிந்தாமணியாரும் வடமொழியில் பிறந்த வண்ணம் முறையே 'யோசனை கேட்பார்', 'யுக்தமும் அயுக்தமும்', 'ரவிகுலதிலகன்' எனத் தற்சமமாகக் கூறினாற்போல யாமும் 'உருவபேதம்' என்னாமலே 'ரூபபேதம்' என்றாம்'' என்று பிரயோக விவேக நூலார் தம் கருத்துக்கு இவரைக் காரணராக்கிக் கொண்டமை காண்க.

நூற்புறனடையாகக் கூறும் இறுதி நூற்பாவில் (126) நூலில் கூறியன எல்லாவற்றையும் தொகுத்துக் கூறு கிறார். அதற்குரிய உரைப் பகுதியில் ''இந்நூல்

உரைக்கப்பட்ட இலக்கணம் அனைத்தும் தொகுத்து இவ்வாறன்றிப் பிறவாறு வருவன உளவெனினும் தழீஇக் கொள்க எனப் புறனடை உணர்த்துதல்'' என்கிறது. இதனால் நூற் பொருளும் வைப்பு முறையும் காக்கப் பட்டமை புலப்படுகின்றது.

தண்டியலங்காரத்திற்குப் பழைய உரையொன் றுண்டு. அவ்வுரை சுப்பிரமணியதேசிகர் உரை என்பர். அத்தேசிகர் திருவாவடுதுறைத் திருமடத்தின் 14-ஆம் பட்டத்தில் இருந்தவர் என்றும் கூறுவர். ஆனால் ''தண்டியலங்கார உரை அனபாய சோழன் காலத்தில் இயற்றப்பட்டது என்பது அந்நூலின் உரையில் உள்ள மேற்கோள்களால் தெரிய வருகின்றது. அந்நூலுரை யாசிரியர் பெயர் விளங்கவில்லை என்கிறார் உ. வே. சா.

நூற்பாவும் எடுத்துக்காட்டும் நூலாசிரியர் செய்த தாக அறியப்பட்டமையால் உரை விளக்கம் காட்டுதல் அளவே உரையாசிரியர் பணியாக இருந்தது. அவ் வெடுத்துக்காட்டுகளை உரையாசிரியர் பாடாமையால் வேறு தக்க காரணங்கள் இருந்தால் அன்றி அவர் பெயரை விலக்குதற்கு இடமில்லையாம்.

## அணியியல்

அணியினது இலக்கணம் உணர்த்தினமையின் (இந் நூல்) அணியதிகாரம் என்னும் பெயர்த்து எனத் தற்சிறப்புப்பாயிரத்தில் வரும் உரை கொண்டு தண்டி யலங்காரத்திற்கு அப்படி ஒரு பெயர் உண்டு என்று அறிய லாம். 'அணியியல்' என்றோர் இலக்கண நூலுண்மை சிலப்பதிகார உரை, யாப்பருங்கல விருத்தியுரை, நேமி நாதவுரை, மாறனலங்கார உரை ஆகியவற்றால் அறிய முடிகின்றது. அந்நூற்பாக்கள் சிலவற்றைத் தம் நூலில் முன்னோர் மொழியாக மேற்கொண்டவர் நூலாசிரியர் என்பது உரையாசிரியர் சுட்டும் இப்பெயர்க் குறிப்பால் எண்ணத் தோன்றுகின்றது.

இவ்வுரையாசிரியர்க்கு முன்னரும் இந்நூற்கு உரை கண்டவர் இருந்தனர் என்பது ''இவ்வாறு கூறுவாரும் உளர்'' என இவர் கூறுவது கொண்டு அறியலாம்.

**உரை நிலை**

இவ்வுரை பொழிப்புரையாகவும், குறிப்புரையாகவும் வேண்டும் அளவாற் செல்கின்றது. இயைத்துக் காட்டி இலக்கணத்தையும் எடுத்துக்காட்டையும் நிறுவுதல் அரிதாகவே கொண்டுளது. சிற்சில இடங்களில் விரிவுரை போலச் சென்றாலும் பல இடங்களில் வேண்டுமளவு உரை விளக்கம் இல்லாதும் உள்ளது. காலந்தோறும் பதிப்பு களில் உரை வேறுபாடு அமைந்துள்ளதென்றும், புதிது புதிது சேர்க்கப்பட்டதென்றும் பதிப்புரைகளின் வழியே அறிய முடிகின்றது. எனினும் இவ்வுரை நூற்பொருள் உணர்தற்கு அரிய கருவி என்பதில் ஐயமில்லை.

இன்னாஇசை என்பதை விளக்கும் உரையாசிரியர், ''மென்னடை யொழுக்கத்து வல்லொற்றடுத்து மிக்கது போலவும், அந்நடை யொழுக்கத்து உயிரெழுத் தடுத்துப் பொய்ந்நலப்பட்டு அறுத்திசைப்பதுபோலவும் வரும்'' என்கிறார் (20).

பாவிகம் என்னும் அணியைப் புறநடைப் பகுதியில் வைத்தது குறித்து உரையாசிரியர் எழுதுகின்றார்: முன் அதிகாரச் சூத்திரத்துப் பிற அலங்காரங்களுடன் வைத்த இதனை ஈண்டுப் புறனடையின் பின்னாக வைத்தது என்னை எனின், பிற அலங்காரங்கள் ஒரு பாட்டானே யுணரப் புலப்படும்; இஃது அன்னதன்று; ஆகலான், ஆசிரியன் வாழ்த்தென்னும் அலங்காரத்தின் பின்னரே விரவியல் வைத்தது. முன்னர் அளவே விரவுவன என்பது அறிவித்தற்கு; இஃது அன்னதன்று என்பது என்கிறார்.

வைதருப்ப நெறி கௌட நெறி பற்றிக் கூறிய பின்னர் 'இவ்விலக்கணம் எல்லாம் முன்னையோர் மொழி ந்

நடை பல பயின்ற வடமொழிக்கன்றே; செந்தமிழ் மொழியின் வந்தவாறு என்னை? எனின், இதன் முதனூல் செய்த ஆசிரியர் உலகத்துச் சொல்லையெல்லாம் சமஸ்கிருதம் பிராகிருதம் அபப்பிரஞ்சம் என்று மூன்று வகைப்படுத்தினார். அவற்றுள் சமஸ்கிருதம் புத்தேளிர் மொழியெனவும், அப்பிரபஞ்சம் இதர சாதிகளாகிய இழிசனர் மொழியெனவும் கூறினார். அதனால் பிராகிருதம் எல்லா நாட்டு மொழியெனவும் படும். அல்லதூஉம் பிரகிருதி என்பது இயல்பாகலான் பிராகிருதம் இயல்புமொழி'' என்று விளக்குகிறார். மேலும், ''தமிழ்ச் சொல்லெல்லாம் பிராகிருதம் எனப்படும். அச் சொற் களால் இயற்றப்படும் எல்லாக் கவிக்கும் அவ்வலங்காரம் அனைத்தும் உரியவாகலின் ஈண்டு மொழி பெயர்த்து உரைக்கப் பட்டன'' என்கிறார்.

நூலாசிரியர் கருத்தா, நூலாசிரியர் மேல் உரை யாசிரியர் திணிப்பா இக்கருத்துகள் என்னும் மயக்கத்தை யுண்டாக்குகின்றது இவ்வுரைப் பகுதி.

மடக்கணி முதலிய சொல்லணிகளுக்கு இவ்வுரை மிக இன்றியமையாததாகப் புலப்படுகின்றது. இல்லாக்கால் சில பாடல்களின் பொருளை மிக இடர்ப்பட்டே அறிய நேரும்.

## பதிப்பு

இந்நூலுக்குரிய பதிப்பில் முன்னது, தில்லையம்பூர் சந்திரசேகர கவிராச பண்டிதர் பதிப்பு. அது 1857இல் வந்தது. 1901இல் வை. மு. சடகோப இராமானுசா சாரியார் குறிப்புரையுடன் வெளியிட்டார். 1903இல் மதுரைத் தமிழ்ச் சங்க நிறுவனர் பாண்டித்துரையார் விருப்பத்திற்கு இணங்க சுன்னாகம் அ. குமாரசாமிப் புலவர் இயற்றிய புத்துரை வெளிவந்தது. 1920இல்

செம்பூர் வீ. ஆறுமுகம் சேர்வை பதிப்பு, கா. ர. கோவிந்த ராச முதலியார் துணையுடன் வந்தது. 1938இல் கொ. இராமலிங்கத் தம்பிரான் குறிப்புரையுடன் கழகப் பதிப்பும், 1962இல் சி. செகந்நாதாசாரியார் பதிப்பும், 1967இல் கு. சுந்தரமூர்த்தியார் விளக்கவுரைப் பதிப்பும் வந்தன. நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் மூலப்பதிப் பொன்றும் 1864இல் வெளிவந்தது. அஃது ஐந்திலக்கண மூலமுமுடையது. 1924இல் கழக வழி ஐந்திலக்கண மூலப் பதிப்பு வந்துளது. அணியியல் விளக்கம் என்றொரு நூல் திருத்தணிகை சரவணப் பெருமாளையரால் வெளியிடப் பட்டமை அறிய வருகின்றது (1875).

# 17. நன்னூல்

ஆசிரியர் பவணந்தி முனிவரால் இயற்றப்பட்ட இலக்கண நூல் 'நன்னூல்' ஆகும். 'நூல்' என்றாலே இலக்கண நூலையே குறித்தல் பழவழக்கு. நூலுக்குரிய பா நூற்பா எனப்படுகின்றது. 'நூலினான' எனத் தொல் காப்பியர் நூற்பா யாப்பினைக் குறிப்பார்.

## நூல்

நூல் என்னும் பெயருடன் ஒருநூல் இருந்தமை இறையனார் களவியலுரை, சிலப்பதிகார அடியார்க்கு நல்லாருரை நன்னூல் மயிலை நாதருரை ஆகியவற்றால் விளங்குகின்றது. ''நூலே நுவல்வோன் நுவலும் திறனே, கொள்வோன் கோடற் கூற்றாம் ஐந்தும், எல்லா நூற்கும் இவை பொதுப் பாயிரம்'' என நன்னூல் (3) சுட்டும் தொகை வகை விரிகள் இலக்கணம் சார்ந்தனவே என்பதைக் கற்றார் அனைவரும் அறிவர். இச்செய்திகள் முதற்கட்டுரையில் விரிக்கப்பட்டுள்ளமை அறிந்ததே.

நன்னூல், 'நல்ல இலக்கணம்' என்னும் பொருளது. நன்னூலில் வரும் ''முதனூல் கருத்தன்'' என்னும் நூற்பாவுரையில் ''தன்மையால் பெயர் பெற்றன: சிந்தாமணி நன்னூல் முதலாயின'' என்றனர் (49) உரையாசிரியர்கள்.

நன்னூற் பாயிரத்தில் ''அரும்பொருள் ஐந்தையும் யாவரும் உணரத்'' தருமாறு சீயகங்கன் வேண்டியபடி

பவணந்தியார் இயற்றினார் எனவரும் செய்தியால், ஒருக்கால் ஐந்திலக்கணமும் கொண்டதாக நன்னூல் இருந்திருக்கக் கூடும் எனக் கருதலாம். பிறசில குறிப்பு களும் அவ்வாறு கருதுதற்கு இடந்தருகின்றன. எனினும் எழுத்து, சொல் என்னும் இரண்டன் இலக்கணமே நன்னூலில் கிடைத்துள்ளது. பாயிரந் தொடங்கி நூன் முற்றும் 462 நூற்பாக்களைக் கொண்டுள்ளது. இதனை மேலே காண்பாம்.

### பவணந்தி முனிவர்

நன்னூலை இயற்றிய ஆசிரியர் பவணந்தி முனிவர் என்பார். இவர், ''பொன்மதிற் சனகைச் சன்மதி முனியருள், பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி'' எனச் சிறப்புப் பாயிரத்தில் பகரப்படுகின்றார். இவர் ஊர் 'சனகை' எனப்படும் 'சனகாபுரம்' என்றும், இவர் தந்தை 'சன்மதி முனிவர்' என்றும் இப்பகுதியால் அறியலாம்.

### சனகை

சனகை என்பதைச் **சனநாதபுரம்** என்றார் நன்னூல் முதல் உரைகாரராகிய **மயிலைநாதர்**. அவர் உரையில் பாடமாக சனநாகபுரம், சனகாபுரம் என்பனவும் உள.

பவணந்தியாரின் சனகை தொண்டைமண்டலத்தைச் சார்ந்தது என்கிறது தொண்டை மண்டல சதகம். அது கொங்கு மண்டலம் சார்ந்தது என்கிறது கொங்கு மண்டல சதகம். இவை தத்தம் மண்டலம் சார்ந்த ஊர்களாகக் காட்டுவது கற்பாரை மயக்குதற்காகவா? இல்லை. இரு மண்டலங்களிலும் சனகை என்னும் பெயர் சார்ந்த ஊர்கள் இருப்பதால் அவற்றைக் கொண்டு தத்தம் மண்டலம் சேர்ந்ததாகக் குறித்தன. பவணந்தியார் காலத்திற்கும் சதகங்களின் காலத்திற்கும் இருந்த கால இடைவெளி வரலாற்றுத் தடத்தை மறைப்பித்துப் பெயரொற்றுமை கொண்டு பாடத் தூண்டியது என்க.

தொண்டை மண்டலம், அரக்கோணம் வட்டம், சோழசிங்கபுரத்திற்கு அண்மையில் '**சனகாபுரம்**' என்னும் பெயருடையதோர் ஊர் உள்ளது. அன்றியும் இதனைச் சார்ந்த திருவல்லம் சிவன் கோயிற்கு அருகில் உள்ள வள்ளிமலைக் குகையில் தேவசேன பட்டாரர் என்பார் படிவம் ஒன்றுளது. அதன்கீழ் ''ஸ்வஸ்திஸ்ரீ பாணராயர் குருகளப்ப **பவணந்தி பட்டாரர்** சிஷ்யரப்ப தேவஸேன பட்டாரர் பிரதிமா'' (E.I.Vol.Iv. 142) என்னும் கல் வெட்டுள்ளது. இதில் பவணந்தி பட்டாரர் என்னும் பெயரிருப்பதாலும் சனகாபுரம் என்னும் ஊர் ஆங்கு இருப்பதாலும் இவ்வூரே பவணந்தியார் ஊர் என்பர்.

கொங்குமண்டலத்தின் இருபத்துநான்கு பகுதிகளுள் குறும்புநாடு என்பதொன்று. அதில் '**சீனாபுரம்**' என்றோர் ஊர், அப்பெயராலேயே, இன்றும் வழங்கப்படுகின்றது. ஆங்கு ஆதிநாதர் கோயிலும் உள்ளது. ஆதலால் அவ்வூரே பவணந்தியார் ஊர் ஆகலாம் என்பர்.

இனிப் பவணந்தியாரின் அன்புக்கும் அரவணைப் புக்கும் இடமாக இருந்தவன் **சீயகங்கன்**. அவன் கங்க நாட்டினன். அந்நாட்டைச் சேர்ந்தவரே பவணந்தியார் என்பர். அதற்கு ஏற்ப, மைசூர் நாட்டுத் திருமுக்கூடல் நரசிபுரம் வட்டத்தைச் சேர்ந்ததும் காவிரியின் வட கரைக்கண் உள்ளதும் மாவிலங்கை என்னும் மற்றொரு பெயருடையதுமாகிய **சனநாதபுரமே** பவணந்தியாரின் ஊர் என்பர். இதற்குக் கல்வெட்டுச் சான்றுகள் பலவும், மயிலைநாதர் கூறுவதுபோல் சனநாதபுரம் என வழங்கு தலும் சீயகங்கன் ஆட்சி செய்த பகுதியாக அஃதிருத் தலும் கொண்டு அதுவே பவணந்தியார் ஊர் எனலாம்.

### சன்மதிமுனிவர்

'சன்மதிமுனிவர் பவணந்தியாரின் தந்தையார் அல்லர்; ஆசிரியர்' என்பாருமுளர். தொண்டைமண்டல சதகம் ''சன்மதி மாமுனி **தந்த மைந்தன்** நன்னூல்

உரைத்த பவணந்தி மாமுனி'' என்று தெளிவாகக் கூறுகின்றது. ஆகவே தந்தை என்பதே சரி என்பர். ஆனால் நன்னூல் பாயிரமோ, ''சன்மதிமுனியருள் பன்னருஞ் சிறப்பிற் பவணந்தி'' என்பதால் அறிவுத் தந்தை என்பதைத் திட்டவட்டமாக மறுத்தற்கு வேறு சான்றுகள் வேண்டத் தக்கனவே. சதகத்தார் காலம் நூலாசிரியர் காலத்திற்குப் பிற்பட்டது ஆகலான், அதனை முழுச் சான்றாகக் கொள்ளல் சாலாது.

**சமயம்**

பவணந்தியார் சமயம் சமணம் என்பது வெளிப்படை. **'பவணநந்தி'** என்னும் பெயரே 'பவணந்தி'யாகும். நந்தி என்பார் சமணர்களுள் மிகப் பலர் என்பது,

> **'' கனகநந்தியும் புட்பநந்தியும் பவணநந்தியும் குமணமா**
> **சுனகநந்தியும் குனகநந்தியும் திவணநந்தியும்**
> **மொழிகொளா**
> **அனகநந்தியர் ''**

எனவரும் தேவாரத்தால் அறியலாம். **'நந்தி'** என்பார் துறவோர் என்பதும் அறிந்த செய்தி. அத்துறவோர் மிகுதியாக வாழ்ந்த இடம் நந்திகிரி; அது இந்நாள் **'நந்தி துர்க்கம்'** என வழங்கப்படுகிறது. இப்பகுதி கங்கவேந்தர் களின் தலைநகராகிய குவளாலபுரம் (கோலார்) சார்ந்தது என்பது அறியத் தக்கது.

இனிப் பவணந்தியார் எழுத்ததிகாரத் தொடக்கத் திலும், சொல்லதிகாரத் தொடக்கத்திலும் கூறும் கடவுள் வணக்கப் பாடல்களும், சிறப்புப் பாயிரத்தில் வரும் ''முதல் ஈறு ஒப்பு அளவு ஆசை முனிவு இகந்து உயர்ந்த **அற்புத மூர்த்தி**'' என்னும் தொடரும் இவர்தம் சமண சமயச் சார்பை விளக்கும். ''மொழிமுதற் காரணம் அணுத்திரள் ஒலி'' என்பதும் (58) ''வானவர் மக்கள் நரகர் விலங்குபுள், ஆதி செவியறிவோ டையறிவுயிரே''

என்பதும், இவரைப் புரந்த சீயகங்கன் சமண சமயத்தவன் என்பதும் கருதத் தக்கன.

**காலம்**

பவணந்தியார் காலம் சீயகங்கன் காலம் என அறியப்படுதலால் அவன் காலத்தை அறிதல்வேண்டும். முதற் குலோத்துங்கன் (1070 - 1120) இரண்டாம் குலோத்துங்கன் (1133-1150) மூன்றாம் குலோத்துங்கன் (1178-1218) ஆகிய மூவர் காலத்திலும், சீயகங்கன் என்னும் பெயருடையார் அவர்களின் கீழிருந்து கங்க நாட்டை ஆட்சி செய்தமை கல்வெட்டுகளின் வழியே அறிய வருகின்றன. எனினும் நன்னூல் பாயிரத்தின் வழியே அறியவரும் **அமராபரண சீயகங்கன்** என்பான் மூன்றாம் குலோத்துங்கன் ஆட்சிக் காலத்திலேயே இருந்தமை கல்வெட்டால் அறியப்படுகின்றது (S.I.I. Vol vi. 823). அவன் ''குவளாலபுர பரமேஸ்வரன் கங்க குலோத்பவன் **சீயகங்கன் அமராபரணன்**'' என்று குறிக்கப் படுகின்றான். இவன் மனைவி **அரியபிள்ளை** என்பவளும், இவன் மகளும் அறப்பணி செய்த குறிப்புகளும் கல்வெட்டு களில் இடம் பெற்றுள. (M. E. R. No. 446 of 1912; Ibid 195 of 1892.)

சீயகங்கன் மூன்றாங் குலோத்துங்கன் காலத்தவன் என அறியப்படுவதாலும் அவன் கல்வெட்டுகள் கி.பி. 1212 முதல் கிடைப்பதாலும் பவணந்தியார் காலம் பதின் மூன்றாம் நூற்றாண்டின் முற்பகுதியது ஆகும்.

நன்னூலாரையும் நன்னூலையும்,

> **'' முன்னோர் ஒழியப் பின்னோர் பலரினுள்**
> **நன்னூ லார்தமக் கெந்நூ லாரும்**
> **இணையோ என்னும் துணிவே மன்னுக''**

என்று சாமிநாதேசிகரும் (இலக்கணக் கொத்து. 8 உரை.),

**" புல்கலைக் குருசில் பவணந்தி என்னும்**
**புலவர் பெருமான்"**

என்று சங்கர நமச்சிவாயரும் (நன். 137 உரை), "பன்னூற் புலவர் பழிச்சும் திறத்ததாம், நன்னூல்" என்று உ. வே. சாமிநாதரும் பாராட்டுவர்.

**நூலமைப்பு**

நன்னூலின் **பாயிரம்** 51 நூற்பாக்களும் 4 வெண்பாக்களும் ஆக 55 பாக்களையுடையது. இவை பெரும்பாலும் முன்னையோர் நூலும் உரையும் கொண்டு மேற்கோளாக அமைத்தனவும், அமைத்துக் கொண்டனவுமாம். தொல்காப்பியம், அதன் உரைகள். இறையனார் களவியல் உரை ஆகியவற்றிலும் பிறவற்றிலும் உள்ளவை. தொல்காப்பியத்தின் எழுத்ததிகார ஒன்பது இயல்களை இவர் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல். மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்தனுள் அடக்குகிறார். சொல்லதிகார ஒன்பது இயல்களை, பெயரியல், வினையியல், பொதுவியல், இடையியல், உயிரியல் என ஐந்தனுள் அடக்குகிறார். இவற்றுள் எழுத்ததிகாரத்திலுள்ள **பதவியல்** ஒரு வகையால் தொல்காப்பியத்தின் வளர்ச்சி நிலை எனலாம். சொற்களைப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் எனப் பகுத்துக் காட்டும் இலக்கணமுடையது. அதேபோல் தொல்காப்பியர் காலத்தில் தேவைப்படாததாய் இருந்து, பின்னர் நன்னூலார் காலத்தில் வேண்டியிருந்தனவாகிய வடசொற்கள் தமிழில் புகுங்கால் தமிழியல்புக்கு ஏற்ப எவ்வாறு புகவேண்டும் என்பதை வரம்பு காட்டி (146-150) அமைக்கிறார். ஆயினும் வட எழுத்துப் புகுதலை இவர் ஏற்றார் அல்லர் என்பது கருதத்தக்கது.

தொல்காப்பியர் சார்பு எழுத்துகள் 3 என்றாராக இவர், அதனைப் பத்தாக்கி, அதன் விரியை 369 ஆக்குவதும், பெயரை இடுகுறி காரணம் எனப்பகுப்பதும்,

உயிர்களை ஐயறிவுயிரளவில் நிறுத்துவதும் பிறவும் முதனூலார் கருத்து வழிப்பட்டது அன்றாம்.

தொல்காப்பிய மரபியலில் வரும் ஆறறிவுயிர்களின் செய்தியை உரியியலில் கூறுகிறார். பின்னர் ஒரு குணம் தழுவிய உரிச்சொல், பல குணம் தழுவிய உரிச்சொல் என்பவற்றைக் கூறிய அளவில் ''இவ்வுரிச் சொற்கள் விரிவுடையன ஆகலின் யாம் சொல்லாம்; பிங்கலம் முதலியவற்றைக் கண்டு கொள்க'' என்று அமைகின்றார். இதனை நோக்க, இவ்வியலை முற்றுறச் செய்யவும் முடியா நிலையில் நூலை முற்றுவித்தார் என்று எண்ணு மாறுள்ளது. அவ்வாறாயின் ''அரும்பொருள் ஐந்தையும் தருக'' என்றமை சீயகங்கன் வேண்டுதலாக நிற்குமே யன்றி, ஐந்திலக்கணமும் கூறினார் என்பதற்குச் சான்றா காமல் அமையும். இரண்டதிகாரம் உடைமை கருதி நன்னூலுக்குச் சிற்றதிகாரம் என்றொரு பெயருண்மையும் அறியத்தக்கது.

### நன்னூலியல்

தொல்காப்பியம் தெளிவும் எளிமையும் அமைந்த விரிந்த நூல். நன்னூல் செறிவும் சுருக்கமும் அமைந்த நூல்.

''எண் பெயர் முறைபிறப்பு'' என்னும் எழுத்ததிகார முதல் நூற்பாவில் எழுத்திலக்கணப் பகுப்பை யெல்லாம் மூன்றே அடிகளில் முடித்து விடுகிறார். அவ்வாறு சொல்லதிகாரத்திற்குச் சொன்னார் அல்லர். சொல்லின் இலக்கணமே முதல் நூற்பாவில் சொல்கிறார்.

ஓரெழுத்தால் அமையும் சொற்கள் 42 என்பதை ''உயிர்மவில் ஆறும்'' என்னும் நூற்பாவில் செறிவுடன் கூறுகிறார் (129). உடம்படுமெய் (162), சொல்லின் விகுதி (140), பண்பின் இயல்பு (136), இடப்பொருள் உருபு (302) முதலியவற்றைச் செறிவுற அமைக்கிறார்.

தொல்காப்பியத்தின் வழிவந்தது நன்னூல் என்னும் குறிப்பு சிறப்புப் பாயிரத்தில் இல்லை. 'முன்னோர் நூலின் வழியே' என்றுதான் வழிகாட்டப்பட்டுள்ளது. எனினும், தொல்காப்பியர் நூற்பாக்களை நன்னூலார் அப்படியே போற்றி வைத்துள்ளார். 317, 396, 404, 408 ஆம் நூற்பாக்களைக் காண்க. இளம்பூரணர் உரையைக் கொண்டும் இலக்கணத்தை விரித்துள்ளார். இஃதவர்க்குப் பெருந்துணையாக இருந்தமையை ஒப்பிட்டுக் கண்டு கொள்க.

**''சாவவென் மொழியீற் றுயிர்மெய் சாதலும்விதி''** (169)

என்பதில் 'சாவ' என்பதற்கு ஏற்ப எழுத்துக்கேட்டைச் 'சாதல்' என்றது நூற்பாவைச் சுவையாக்கும் தேர்ச்சியாம்.

**'' நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை''** (208) என்பதில் எதுகை நயங்காட்டி இன்புறுத்துகிறார்.

**'' எப்பொருள் எச்சொலின் எவ்வா றுயர்ந்தோர்**
**செப்பினர் அப்படிச் செப்புதல் மரபே''** (388)

என்பதில் எதுகையும் மோனையும் இனிது சிறக்கச் செய்கிறார்.

**'' இசைகெடின் மொழிமுதல் இடைகடை நிலைநெடில்**
**அளபெழும் அவற்றவற் றினக்குறில் குறியே ''**

என்பதில் இசை கெடுதலால் உண்டாகும் அளபெடையை, ''நிரை நிரை, நிரை நிரை'' அல்லது ''தனதன, தன தன'' என இசை கெழும இசைத்து இன்புறுத்துகிறார்.

**'' னலமுன் றனவும் ணளமுன் டணவும்**
**ஆகும் தநக்கள் ஆயுங் காலே ''** (237)

என்பதில் எழுத்துக் குறிகளையும் சொற்குறிகளைனத் தடையற நடையிடச் செய்கிறார்.

நிறைவாழ்நாள் உடையராய் இருந்து ஐந்திலக்கணத்தையும் யாத்திருந்து நம் கைக்கு வாய்த்திருக்குமெனின் அவர்காலப் பொருளியல் கொள்கைகளைத் தெரிந்திருக்க வாய்த்திருக்கும். அஃதின்மை பேரிழப்பேயாம்.

நன்னூலுக்கு உரைகண்டார் பலர்; அதுவும் அந்நூற் சிறப்புக்கு ஒரு சான்றே. முதலுரைகாரர் சங்கர நமச்சிவாயர், ஊற்றங்கால் ஆண்டிப்புலவர், கூழங்கைத் தம்பிரான், ஆறுமுகநாவலர். இராமாநுசக் கவிராயர், வேதகிரி முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், கா. கோபாலாச்சாரியார், பவானந்தம் பிள்ளை, வை. மு. சடகோப ராமானுசாச்சாரியார், கோ. இராமலிங்கத் தம்பிரான், சர். பொன்னம்பலம் இராமநாதன், கா. நமச்சிவாய முதலியார் முதலியோர் களால் உரையெழுதப்பட்டுள்ளது. மாணவர்க்கு ஏற்பச் சுருக்கியும் எளிமைப்படுத்தியும் உரை நூல்கள் பல வந்துள. தொல்காப்பிய நன்னூல் ஒப்பீட்டு ஆய்வுகளும் நிகழ்ந்துள.

சங்கர நமச்சிவாயர் உரையில் வேண்டுமிடங்களில் திருத்தம் செய்து புதிய விளக்கங்களை விரித்துச் சிவஞான முனிவரால் 'புத்தம் புத்துரை' என்னும் உரையும் உண்டாயிற்று. இலக்கண வினாவிடை என்னும் பெயரால் நன்னூற் பொருளைத் தழுவி ஆறுமுக நாவலரால் ஒரு நூல் செய்யப்பட்டுப் பல பதிப்புகளையும் அடைந்துள்ளது. இவற்றுள் சில உரைகளைப் பற்றிச் சுருக்கமாகக் காணலாம்.

## அ. மயிலை நாதர்

### பெயர்

நன்னூலுக்கு முதன்முதல் உரைகண்டவர் மயிலை நாதர். மயிலை என்பது முன்பு 'மயிலாப்பில்' என்றும் இன்று 'மயிலாப்பூர்' என்று வழங்கப்படுவதாகிய சென்னை

மாநகர்ப் பகுதியாகும். ஆங்குக் கோயில் கொண்டுள்ள சமணத் தீர்த்தங்கரர் நேமிநாதர். அவர் பெயர் மயிலை நாதர் என்பதுமாம். அப்பெயரைப் பெயராகக் கொண்ட சமண சமயப் புலவர் மயிலை நாதர். நூலாசிரியர் போலவே உரையாசிரியரும் சமண சமயத்தினர்.

**முதல் உரை**

மயிலை நாதர் உரை நன்னூல் எழுத்து சொல் இரண்டற்கும் முழுமையாகக் கிடைத்துள்ளது. இவர் காலத்திலோ இவர்க்கு முன்னரோ நன்னூலுக்குப் பிறிதோருரையும் இருந்த தென்பதை இவருரையால் அறிய வாய்க்கின்றது. ஆசிரிய மரபில் சொல்லிவரும் உரையாகவும் அஃதிருந்திருத்தல் கூடும். எவ்வாறாயினும் நன்னூலுக்குக் கிடைத்துள்ள உரைகளுள் முற்பட்டது மயிலை நாதருரையே.

**புரவலன் புகழ்**

சீயகங்கன் சிறப்பை நன்னூற் சிறப்புப் பாயிரம்,

**" கருங்கழல் வெண்குடைக் கார்நிகர் வண்கைத்**
**திருந்திய செங்கோன் சீயகங்கன்**
**அருங்கலை விநோதன் அமரா பரணன் "**

என்று சிறப்பிக்கின்றதெனின் பொலிவுமிக்க பொற்குடத் திற்குப் பூவும் பொட்டும் இட்டு வைத்ததுபோல இவர் வரையும் உரைநயம் உள்ளங்கொள்ளை கொள்கிறது.

"கூடாதாரைக் கொன்று கட்டின குரைகழலினையும்,
பற்றலர் பகரும் பழிமா சறுத்து மற்றுல களிக்கும் மணிமுத்தக் குடையினையும்,

விழைபயன் கருதாது மேதினியவர்க்கு மழைபோலு தவும் மாமலர்க் கையினையும்,

குற்றமற்றுலகில் கொடுங்கலி துரந்து செப்பம் வளர்க்கும் செய்ய கோலினையும் உடையவனான

தங்கலர் குலமாம் வெங்கயமனுங்கும் சிங்கமாகிய கங்கனென்பான்

அரியநூல்களை ஆராய்தலே தனக்கு இன்பமாக வுடையான் பெரும் போரினையே புனைகலனாக வுடையான் என்னும் அழகமை பெயரினை யுடையான்'' என்பது அது.

நூலுக்கு உரைதானா? நூலைப் பெருக்கிக் காட்டி நுண் கலை வளங்களெல்லாம் கூட்டிக் காட்டும் கலை மாளிகையா? கங்கனோ, கங்கன் வழியினரோ மயிலை நாதர் உள்ளமும் உயிரும் தளிர்ப்புற உதவுநராக இருந் தமை இச்சான்றால் மட்டுமன்று; பின்னும்,

**'' கங்கன் அகன்மார்பன் கற்றோர்க் கினிதளிக்கும்**
**செங்கனக வெள்ளைச் செழுமணிகள்—எங்கும்**
**தெறித்தனவே போல்விளங்கு மீன்சூழ்ந்த திங்கள்**
**எறிக்குநிலா அன்றோ இனி''** (267)

என வருவதும் பிறவும் காட்டும். இவர் காலம் கங்கன் காலமே என்பர். கங்கன் காலம் நன்னூலார் காலமுமாத லால் நூலாசிரியரும் உரையாசிரியரும் ஒரே காலத்தவர் என்றாகும்.

மயிலைநாதர் உரையை அரிதின் முயன்று அருமை யாகப் பதிப்பித்த உ. வே. சா. அவர்கள், ''சூத்திரங் களுள் பொருள் விளங்குவனவற்றிற்குச் சுருக்கமாகவும் ஏனையவற்றிற்கு விரிவாகவும் சிலவற்றிற்கு வினாவிடை யாகவும், சிலவற்றிற்கு மோனை எதுகை முதலிய தொடை நயம்படவும் ஒவ்வொன்றைப் பிரித்துப் பிரித்துத் தனித் தனியாகவும் பலவற்றைத் தொகுத்து அவற்றின் இறுதி யில் பிண்டமாகவும் பொருளெழுதிச் செல்லுதல் இவர்க்கு இயல்பு'' என்கிறார் (உரையாசிரியர் வரலாறு).

**அடைநயம்**

நூலாசிரியர்களாம் புலவர்களையும், உரையாசிரியர் களையும் இவர் எதுகை மோனைத் தொடைநயம் படப்

பாராட்டிச் செல்லுதல் இவர்தம் நயத்தகு நெஞ்சத்தை வியத்தகக் காட்டுகின்றன.

"மிகத் தெளி கேள்வி அகத்தியனார்"

"ஒல்காப் பெருமைத் தொல்காப்பியனார்"

"அளவறு புலமை அவிநயனார்"

"புவிபுகழ் பெருமை அவிநயனார்"

"உளங்கூர் கேள்வி இளம்பூரணர் என்னும் ஏதமில் மாதவர்"

"தண்டலங் கிழவன் தகைவரு நேமி
எண்டிசை நிறைபெயர் இராச பவித்திரப்
பல்லவ தரையன்"

என்பவை அவற்றுட் சில.

**விளக்கம்**

முன்னர் விளங்காதிருந்தவை மயிலைநாதர் உரையால் விளங்கியவை இவையெனப் பட்டியலிட்டுக் காட்டுகிறார் உ. வே. சா.

அவிநயர் சமணர் என்பதும், வெண்பாவும் நூற்பாவுமாகிய இருவகைப் பாவாலும் அவர் நூல் அமைந்ததென்பதும், பழமொழியின் அறியப்படாத முதற்செய்யுள் இன்னது என்பதும், எண்ணூல் என ஒன்று இருந்ததென்பதும், பரிமாண நூலைச் சேர்ந்தது "விதந்த மொழியினம்" என்னும் நூற்பா என்பதும், அவிநய உரையாசிரியர் இவரென்பதும், இளம்பூரணர் துறவி என்பதும் உரைநடையாகவுள்ள இலக்கணத் தொடர்களுக்குரிய நூற்பாக்கள் இவை என்பதும் அவை.

**சுருக்கம்**

பாயிரப்பகுதி உரையின் இறுதியில் (54), "இப்பாயிரச் சூத்திரங்களை விரித்தெழுதிற் பரக்கும் என்பதனானும் பெரும்பாலும் தாமே பொருள் விளங்கிக் கிடத்தலானும்

உரைவிரித்தெழுதிற்றிலம்; இவற்றை விரித்துரைத்துக் கொள்க'' என்கிறார். இதனால் வேண்டுமிடத்து விளக்கம் தருதலே தம் உரைநோக்கு என்பதும் வாளா விரித்தலை விரும்பினார் அல்லர் என்பதும் அறியவரும்.

**விரிவு**

வேண்டுமிடத்து விரித்துக் கூறுதலை மேற்கொண்டார் என்பதற்கு ஒரு சான்று. அகர முதலாக நெடுங் கணக்கு அமைவதன் அடிக்களத்தை ஆய்ந்து கூறுகிறார் (72).

''அகரம் தானே நடந்தும் நடவா உடம்பை நண்ணியும் நடத்தலானும், அரன் அரி அயன் அருகன் என்னும் பரமர் திருநாமத்திற்கு ஒருமுதலாயும், அறம் பொருள் இன்பமென்னும் முப்பொருளின் முதற்பொருட்கும், அருள் அன்பு அணி அழகு முதலாயின நற்பொருட்கும் முதலாக வருதலானும் அகரம் முன்வைக்கப்பட்டது'' என்கிறார்.

சகரம் மொழி முதலாதல் தொல்காப்பியத்தில் இல்லை. ஆனால் பாடவேறுபாடு காட்டி உண்டென்பது உண்டு. இவர்,

**'' சரிசமழ்ப்புச் சட்டி சருகு சவடி**
**சளிசகடு சட்டை சவளி—சவிசரடு,**
**சந்து சதங்கை சழக்காதி யீரிடத்தும்**
**வந்தனவாற் சம்முதலும் வை''**

என்னும் வெண்பாவைக் காட்டி சம்முதலாக வருதலை நிறுவுகிறார். அக்காலத் தில்லன இக்காலத்து வழங்கு மென இதனை நூல் இறுதியிலும் எடுத்துக் காட்டுகிறார் (461).

சொல்லதிகாரத் தொடக்கத்தில் 'முச்சக நிழற்றும்' என்னும் வாழ்த்தும், வருபொருளும் அமைந்த நூற்பா உரையில் அதிகாரம் தோறும் இறைவணக்கம் வேண்டத்

த்தகதோ என ஒரு வினாவை எழுப்பிக்கொண்டு விடை யிறுக்கிறார்:

''நூல் ஒன்றே எனினும் அதிகாரங்கள் பொருளான் வேறுபடுதலானும் முன்னை ஒரு சாரார் ஓரோ அதிகாரத்தை ஒரு நூலாக்கிப் பாயிர முழுதும் பகர்த லானும் 'ஆதியு மந்தமும் நடுவும் மங்கலம், ஓதிய முறை மையின் உரைப்பராயிடின், ஏதமில் இருநிலக்கிழத்தி இன்புற, நீதியம் பனுவல்கள் நிலவும் என்பவே' என்பவாக லானும், 'கற்றதனாற் பயன், குற்றமற்று முற்றவுணர்ந்த ஒற்றை நற்றவன் பொற்றாள் இணைமலர் போற்றல்' என்பவாகலானும் சொன்னார் எனக்கொள்க'' என் கிறார் (257).

பின்னுரைகள் இவ்வுரையினும் திருத்தமும் தெளிவும் பெற்றுள எனின், இவ்வுரையின் கொடை தந்த வளர்ச்சி என்பதால் இவ்வுரையின் சிறப்பு இனிது விளங்கும்.

நன்னூல் மூலமும் மயிலைநாதர் உரையும் உ. வே. சாமிநாதையரால் 1918 இல் வெளியிடப்பட்டது.

## ஆ. ஊற்றங்கால் ஆண்டிப் புலவருரை

நன்னூலுக்கு உரைகண்டவருள் இவர் ஒருவர். இவர் கண்ட உரை பாடலால் அமைந்தது. அகநானூற்றுக்குப் பாடற் கருத்தினை பால்வண்ண தேவனான வில்லவ தரையன் என்பான் அகவலால் பாடினான் என்பது இவண் அறியத்தக்கது. இக்காலத்தில் சங்க இலக்கியம், திருக் குறள் நாலடியார் முதலியவற்றுக்குப் பாவினாலேயே உரைவிளக்க நூல்கள் வந்துள்ளன. ஆனால் இலக்கண உரை ஒன்று இவ்வாறு முன்னரே வந்திருத்தல் வியப்புடை யதாம்.

### ஆசிரியர்

ஆண்டிப் புலவர் செஞ்சிப்பகுதியைச் சார்ந்த ஊற்றங் கால் என்னும் ஊரினர். தந்தையார் பெயர் பாவாடை

வாத்தியார். இவர் சங்கறுத்து வளையல் முதலியன செய்யும் குடிவழியினர். அதனால் 'நக்கீரர்' என்றும் சொல்லப்பட்டுளார். ''சங்கறுப்ப தெங்கள் குலம்'' என வரும் நக்கீரர் தனிப்பாடல் நினைவு கொள்ளத்தக்கது.

**சமயம்**

இவர் சைவ சமயத்தவர் என்பதும் சைவத் துறவியாக விளங்கிய ஞானப்பிரகாச குரு என்பவரின் மாணவர் என்பதும் அறியவருகின்றன.

**'' மன்னுசெஞ் சிச்சீமை சூழ்தொண்டை வளநாட்டில்**
**வாய்த்த ஊற்றங்காலில்வாழ்**
**வளையறுப்போர் குலன் பாவாடை வாத்தியார்**
**மைந்தனாம் நற்கீரனே''**

**'' மன்னுளோர் அறியப் பகுத்தனன் கயிலையான்**
**வடிவெழுத் தைந்தெ ழுத்தின்**
**மந்த்ரவுப தேசம் செய்ஞானப்ர காசகுரு**
**வனச மலரடி சூடுவோன்''**

என்னும் பகுதிகளில் மேற்கூறிய செய்திகள் தெளிவாகின்றன.

ஆண்டிப்புலவர் ஆசிரிய நிகண்டு என்னும் நிகண்டை இயற்றியவர். அந்நிகண்டுப் பாயிரத்தில்,

**'' இயம்பிய நிகண்டின் உரையறிநன் னூலினொடு**
**இரண்டுமே செய்து வைத்தான்''**

**'' எழுத்துடன் சொல்லெனும் இலக்கணம் வகுத்துரை**
**இயம்பும் ஆசிரியத்தினால்**
**நன்னூல் என்னும் பெயர் விளங்கவே செய்தான்''**

எனவரும் பகுதிகளால் இவர் நன்னூலுக்கு ஆசிரிய விருத்தத்தால் உரை கூறியமை விளங்கும். அந்நூல் **'நன்னூல் ஆசிரிய விருத்தம்'** என்றும், **'உரையறி நன்னூல்'** என்றும் வழங்கப்பட்ட தென்பர்.

"செம்மை சிறுமை சேய்மை தீமை
வெம்மை புதுமை மென்மை மேன்மை
திண்மை யுண்மை நுண்மை இவற்றெதிர்
இன்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே" (134)

என்னும் நன்னூல் நூற்பாவுக்கு இவர் கூறும் ஆசிரிய விருத்த உரை வருமாறு:

செம்மையும் கருமையும் பசுமையும் வெண்மையும்
திண்மையும் நுண்மையு முடனே
சிறுமையும் பெருமையும் குறுமையும் நெடுமையும்
தீமையும் தூய்மை யுமலால்
வெம்மையும் குளிர்மையும் கொடுமையும் கடுமையும்
மேன்மையும் கீழ்மை யும்பின்
மெய்மையும் வறுமையும் பொய்மையும் வன்மையும்
மென்மையும் நன்மை யும்சொல்
ஐம்மையும் பழமையும் புதுமையும் இனிமையும்
அணிமையும் நிலைமை யும்சேர்
ஆண்மையும் மும்மையும் ஒருமையும் பன்மையும்
அருமையும் இருமையும் மிக்க
கைம்மையும் கூர்மையும் கேண்மையும் சேண்மையும்
கடியவள மையுமி ளமையும்
காணரிய முதுமையும் பண்புப்ப காப்பதம்
காட்டுமின் அனைய மாதே!

நன்னூலார் **பதினொரு** பண்புகளைக் கூற இவர் 'இவற்றெதிர் இன்னவும்' என்பதைக் கொண்டு **நாற்பத்து மூன்று** பண்புகளைக் கூறுகிறார். 'மின் அனைய மாதே' என மகடூஉ முன்னிலை வைத்துப் பாடுகின்றார். இம்மேற்கோள், தமிழ் வரலாற்றில் ச. பூபாலபிள்ளை காட்டுவது என்பர். (இலக்கண வரலாறு பக். 143).

ஆசிரிய நிகண்டில் உரிச்சொல் நிகண்டு, கயாதர நிகண்டு ஆகியவற்றை இவர் குறிப்பிடுவதால் இக் கயாதர நிகண்டின் காலத்திற்கு (கி. பி. 1450) இவர் பிற்பட்டவ

ராவர். அதனால் 15 ஆம் நூற்றாண்டுக்குப் பிற்பட்டவர் இப்புலவர் என்க.

இவர் காலத்தைப் பதினேழாம் நூற்றாண்டு என்றும், இவர் தந்தையார்க்குப் பகதேவன் என்னும் பெயரும் உண்டு என்றும், இவர் நன்னூலின் முதல் இரண்டு இயல்களுக்கும் உரையறி நன்னூல் என்னும் ஆசிரிய விருத்தப் பாவான் அமைந்த உரையும் ஆசிரிய நிகண்டு என்னும் நூலும் செய்தார் என்றும் தமிழ்ப் புலவர் அகராதி கூறும்.

## இ. சங்கர நமச்சிவாயருரை

மயிலை நாதருக்குப்பின் நன்னூலுக்குச் சிறந்த உரைகண்ட பெருமகனார் சங்கர நமச்சிவாயர். இவர் தம் உரைச் சிறப்பை உணர்ந்தே 'தென்சொற் கடந்து வடசொற் கெல்லை தேர்ந்த' சிவஞான முனிவரர் தாமே புத்துரை ஒன்று செய்யாது இவர் புத்துரைக்குமேல் வேண்டும் விளக்கம் வரைந்து புத்தம் புத்துரை கண்டார் என்பதனால் இவ்வுரைப் பெருமை விளங்கும்.

**வரலாறு**

சங்கர நமச்சிவாயர் ஊர் திருநெல்வேலி: தெருதடி வீரையன் கோயில் தெரு; பாண்டி நாட்டு வேளாளராம் சைவக்குடியைச் சேர்ந்தவர். சங்கர நமச்சிவாய பிள்ளை என்றும் வழங்கப்பட்டார். இவர் மைந்தர் முத்துக்குமார பிள்ளை என்பார்.

நெல்லை ஈசானமடத்தில் இருந்த இலக்கணக் கொத்து ஆசிரியர் சாமிநாத தேசிகரிடம் தொல்காப்பியம், சங்க இலக்கியம், வடமொழி ஆகியவற்றை முறையே பயின்றவர். இவர் காலத்தில் இலக்கண விளக்கம் வைத்தியநாத தேசிகரும் திருநெல்வேலியில் இருந்தார்.

சாமிநாத தேசிகர் ''சேற்று நிலத்திற் கவிழ்ந்த பால் தேன் நெய் முதலியனவும் சேறானாற் போல நன்னூற் சூத்திரமும் அவ்வுரையுடனே (மயிலை நாதருரையுடனே) கலந்து குற்றப்பட்டது'' என்னும் கருத்துடையவர். அதனால் நன்னூலுக்குச் சிறந்ததோர் உரை செய்யுமாறு சங்கர நமச்சிவாயரைப் பணித்தார். அதே பொழுதில்,

''பொன்மலை எனவிப் புவிபுகழ் பெருமை
மன்னிய ஊற்று மலைமரு தப்பன்
முத்தமிழ்ப் புலமையும் முறையர சுரிமையும்
இத்தலத் தெய்திய இறைமகன் ஆதலின்
நன்னூற் குரைநீ நவையறச் செய்து
பன்னூற் புலவர்முன் பகர்தியென் றியம்பினார்''

ஆதலால் புத்துரை கண்டார் சங்கர நமச்சிவாயர்.

சங்கர நமச்சிவாயர் ஊற்றுமலைச் சிற்றரசின் புலவர் தலைவராக விளங்கியவர் என்றும், அவர் நன்னூலுக்கு உரைகண்ட நாளில் மாதத்திற்கு நான்கு கோட்டை நெல்லும் (கோட்டை என்பது 96 படி) நாளுக்கு ஒரு படி பாலும் அரண்மனையில் இருந்து அவருக்குக் கொடுக்கப் பட்டு வந்தன என்றும், உரையரங்கேற்றத்தில் தக்க பரிசும், பாராட்டும் வழங்கப்பட்டன என்றும், பின்னர் நெல்லையை வாழ்விடமாகக் கொண்டார் என்றும் தாம் கேட்டதை உ. வே. சா. குறிப்பிடுவார்.

சங்கர நமச்சிவாயர் காலம் 17 ஆம் நூற்றாண்டு. திருவாவடுதுறை மடத்துச் சார்பு மிக்கவர். சைவ சமயம் சார்ந்தவர் என்பது வெளிப்படை. உரைப் பாயிரம்,

'' எந்நூற்கும் எழுத்தொடுசொற் பொருளறிசங்
கரநமச்சி வாய என்னும்
பன்னூற்செந் தமிழ்ப்புலவன் சைவசிகா
மணிநெல்லைப் பதியி னானே ''

என்பதறிக.

" மலர்தலை உலகில் பலநூல் ஆய்ந்து
செய்வதும் தவிர்வதும் பெறுவதும் உறுவதும்
உய்வதும் அறியேன் "

என்று கூறும் இவர் மொழி இவர்தம் அடக்கத்திற்குச் சான்றாம். இவர்தம் குருவரன்பு,

" நன்னெறி பிறழா நற்றவத் தோர்பெறும்
தன்னடித் தாமரை தந்தெனை யாண்ட
கருணையங் கடலைஎன் கண்ணைவிட் டகலாச்
சுவாமி நாத குரவனை அனுதினம்
மனமொழி மெய்களில் தொழுது "

என்பதால் விளங்கும்.

**உரை**

இவருரையை மதிப்பிடும் உ. வே. சா. "இவர் மயிலை நாதருரையைப் பின்பற்றியவராக இருப்பினும் அவராற் புலப்படுத்தப்படாத அரிய விஷயங்கள் பல இவருரையிற் காணப்படுகின்றன. பல இடங்களில் தக்க காரணங்கள் கூறி அவர் உரையை இவர் மறுக்கின்றார். பதசாரம் எழுதிச் செல்லுதலிலும் பொருளை நுட்பமாக அறிந்து தக்க ஆதாரங் காட்டி விளக்குதலிலும் உவமை காட்டலிலும் பிறவற்றிலும் இவருரை அவருரையைக் காட்டிலும் மேற்பட்டதென்று சொல்லலாம். காரணம், அவருடைய காலத்திற்குப் பின்பு பற்பல ஆசிரியர்கள் தோன்றி இயற்றித் தந்த நூல்கள் உரைகள் ஆகியவற்றின் பேருதவிதான் என்று சொல்ல வேண்டும்" என்கிறார்.

தொல்காப்பியம், திருக்குறள், திருக்கோவையார் ஆகியவற்றை மிகச் சிறப்பித்துக் கூறுபவர் சாமிநாத தேசிகர். அவர் மாணவராகிய இவர் இம்மூன்று நூல்களையும் அழுந்தக் கற்றவர் என்பது இவர் காட்டும் எடுத்துக்காட்டுகளாலும் நயங்களாலும் விளங்குகின்றது.

**உவமை**

இலக்கியச் சுவை நயங்களை இலக்கணத்தில் சேர்ப்பது போல இவர் உவமைத் திறங்கள் உரையில் ஆங்காங்குப் பளிச்சிடுகின்றன:

தொகை வகை விரி என்னும் நூல்வகை ஒன்றோடு ஒன்று எழுந்து தொடர்பு பட்டு நிற்றலைப் பராரை (அடி) யினின்றும் கவடு கொம்பு கோடு வளார் பலவாய் ஒன்றோடு ஒன்று தொடர்பு பட்டு நிற்றலுக்கு உவமை காட்டுகிறார் (பாயிரம்).

முதனூல் வழி நூல் சார்பு நூல்களைத் தந்தை, மகன், மருகன் என்பவரொடும் உவமைப்படுத்து கிறார் (8).

முதலெழுத்துகள் முன்னும் பின்னும் நிற்க இடையே எழுந்து ஒலிக்கும் ஆய்தத்தை இரு சிறகு எழும்ப எழும் உடலுக்கு (பறவைக்கு) உவமை காட்டுகிறார் (92). ஆய்தம் தனி எனப்படுதலை 'அலி' போலத் தனி நிற்ற லுக்கு உவமைப்படுத்துகிறார் (60).

ஙகரம் அங்ஙனம், எங்ஙனம் எனச் சுட்டு எழுத்து வினா எழுத்துகளைக் கொண்டு வருதல், முடவன் கோலூன்றி வருதல் போல்வது என்கிறார் (106). இவ்வாறே பலப்பல உவமை நடைகளை மேற் கொள்கிறார்.

**வழக்கியல்**

'கண் தழைப்பான் கதிரவற்றொழுதார்' என்பதும் (345), 'எறும்பு முட்டைகொண்டு திட்டையேறின் மழை பெய்தது' என்பதும் (384), வழக்கியலில் அறிவியலுண்மை அறிந்துரைத்தவையாம்.

'மைந்தன் பிறந்தான்; அதனால், தந்தை உவக்கும்' (394) என்பது போன்றவை உலகியல் தேர்ச்சிச் சான்று.

பிழைசெய்தவர் பிழையுணர்ந்து பகை மறந்து வந்தா ராகவும், அவர்மேல் பகை கொண்டாரை நோக்கி

''இணரெரி தோய்வன்ன இன்னா செயினும், புணரின் வெகுளாமை நன்று'' என்னும் திருக்குறளை அறியீரோ? அதற்குச் சங்கர நமச்சிவாயர் எழுதிய அருமையான உரையை நோக்குங்கள் என்று திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் எடுத்துரைத்த நிகழ்ச்சியை எடுத்துக் காட்டுகிறார் உ. வே. சா; அக்குறளின் விளக்கவுரை காண்க:

''பிற உயிர்க்கு இன்னா செயின் அவை பிழையாது தமக்கு வருதல் கருதித் தம்மாட்டு அன்பும் பிற உயிர்கண் மாட்டு அருளும் இன்னா செய்தலான் மேன்மேல் வளரும் பிறப்பிறப்பின் அச்சமும் நம்மால் இன்னா செய்யப் பட்டாரை நாமடைந்து இரத்தல் கூடினும் கூடும்; அதனால் யார் மாட்டும் இன்னா செய்யக்கடவேம் அல்லம் என்னும் வருங்கால உணர்ச்சியும் இலராய் ஒருவர், தன்னால் ஆற்றல் கூடாத இன்னாதனவற்றைத் தன்கட் செய்தாராயினும் அவர் தமக்கு வேண்டுவதொரு குறை முடித்தல் கருதி நாணாது தன்னை அடைந்தாராயின் அவர் செய்த இன்னாமை கருதி அவரை வெகுளாது அவற்றை மறந்து அவர்வேண்டும் குறைமுடித்து முன் செய்த இன்னாமையால் அவர் கூசி ஒழுகுதல் தவிர் தற்குக் காரணமாகிய மெய்ப்பாடு முதலியன தன்கட் குறிப்பின்றி நிகழ அவர்க்கு இனியனாகி இருத்தல் தன் சால்புக்கு நன்று'' (360).

அறுபத்து மூவர் என்பதற்கு **அறுபதின்மரும் மூவரும்** என்று பகுத்து அறுபது நாயன்மார்களும் மூவர் முதலிகளும் எனப் பொருள் கொள்ளும் வகையில் காட்டுவது இவர்தம் நுண்மாண் நுழைநோக்கை வெளிப்படுத்தும் (368).

## பதிப்பு

நன்னூல் சங்கர நமச்சிவாயருரை 1851 இல் ஆறுமுக நாவலரால் முதற்கண் பதிப்பிக்கப்பட்டது. பின்னர்

1887 இல் இரண்டாம் பதிப்பும் அவரால் கொண்டு வரப் பட்டது. உ. வே. சாமிநாதையர் சங்கர நமச்சிவாயர் உரைப்பதிப்பை 1925, 1935 ஆகிய ஆண்டுகளில் கொண்டு வந்தார்.

## ஈ. சிவஞான முனிவர் புத்தம் புத்துரை

சங்கர நமச்சிவாயர் உரையில் வேண்டுவன விரித்தும், திருத்தியும் அப்புத்துரையின் மேல் புத்துரை செய்தமை யால், சிவஞான முனிவர் உரை புத்தம் புத்துரை எனப் படுவதாயிற்று.

முனிவர் வரலாற்றைத் தொல்காப்பிய உரைப் பகுதியில் கண்டு கொள்க.

### சார்பெழுத்து

தொல்காப்பியர் சார்பெழுத்து மூன்றெனக் கூறினா ராக நன்னூலார் பத்தெனக் கூறுதலின் காரணத்தை விளக்குகிறார்.

''தொல்காப்பியர் செய்கை ஒன்றனையும் நோக்கிச் சார்பெழுத்து மூன்றெனக் கருவி செய்தாராகலின், இவ்வாசிரியர் செய்கையும் செய்யுளியலும் நோக்கிச் சார்பெழுத்துப் பத்தெனக் கருவி செய்தார் என்பதும் உய்த்துணர்க'' என்கிறார் (60).

### முறைவைப்பு

அகர முதலாக நெடுங்கணக்கு வைப்பு முறையை மிக விரிவாக விளக்கியுள்ளார்; அவற்றுள் ஒன்று (73).

''வலியாரை முன்வைத்து மெலியாரைப் பின் வைத்தல் மரபாகலின் அச்சிறப்பு நோக்கி வல்லெழுத் துக்கள் முன்னும் அவ்வவற்றிற்கு இனமொத்த மெல் லெழுத்துக்கள் அவ்வவற்றின் பின்னுமாக வைக்கப் பட்டன. அவ்விரண்டும் நோக்கியல்லது இடை நிகரன வாய் ஒலித்தல் அறியப்படாமையின் அதுபற்றி இடை

யெழுத்துக்கள் அவ்விரு கூற்றிற்கும் பின்வைக்கப்பட்டன'' என்பது மெய்யெழுத்துகளின் வைப்பு முறை பற்றியது.

**சேர்க்கை**

'வேறு இல்லை உண்டு' என்பவை ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாக வருதலை நன்னூலார் கூறுவார். சிவஞான முனிவர் 'மொழிந்த பொருளோடொன்ற அவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்தல்' என்பதனால் 'வேண்டும் தரும் படும்' என்னும் சொற்களையும் அமைத்துக் கொள்கிறார் (339).

**'' மாணாக்கனுக்குக் கசையடி கொடுத்தான் ஆசிரியன்''**

**'' கள்ளனுக்குக் கசையடி கொடுத்தான் அரசன்''**

என்று இவர் காட்டும் எடுத்துக்காட்டுகள் கல்லாரைக் கள்வரெனக் கருதித் தண்டித்த காலநிலைச் சான்று போலும் (298).

**மறுப்பு**

உரையாசிரியர் பலரையும் சுட்டி இவர் மறுத்தல் வழக்கினர் என்பதைப் பல இடங்களில் அறியலாம். ஓர் எடுத்துக்காட்டு: நூற்பா 339. தமிழ் நூற்பயிற்சி ஒன்றுமே யுடையாரை உரையாசிரியர் என இவர் மதியாது தள்ளுதல் பொதுச் செய்தி. இதனை விளக்கும் ஒரு சான்று, ''அம்முன் இகரம் யகரம்'' என்னும் நூற்பா விளக்கம் (125). 'ஆங்கிலம் அறியார் தமிழறியார்' என இக்காலம் எண்ணுவார் போல்வது ஈதாம்.

**ஒரு நூற்பா**

''நடவா மடிசீ'' என்னும் நூற்பா விளக்கத்தில் (137), ''கையறியா மாக்கட்கன்றி நூலியற்றும் அறிவினை யுடைய மக்கட்குப் பல்கலைக்குரிசில் பவணந்தி என்னும் புலவர் பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலான்,

உலக மலையாமை யுள்ளிட்ட பத்தழகோடும் பிறந்து நின்றது இச்சூத்திரம்'' என்பது நூலாசிரியர் மேல் கொண்ட பற்றுமையையும் மதிப்பையும் விளக்கும்.

## உ. கூழங்கைத் தம்பிரான் உரை

### பெயர்

நன்னூலுக்கு உரை கண்டவர்களுள் இவர் ஒருவர். இவர் உரை வெளிவந்திலது. இவர் காஞ்சியில் பிறந்தவர்; திருவாரூர் மடத்தில் சில காலம் தம்பிரானாக இருந்தவர். அக்காலையில் மடத்துத் தலைவர் இவர் மேல் சாட்டிய குற்றச்சாட்டு பொய் என்பதை மெய்ப்பிப்பதற்காகப் பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பியைப் பிடித்தமையால் கை பழுதுற்றது. அதனால், கூழங்கையார் என்றும், கூழங்கைத் தம்பிரான் என்றும் வழங்கப்பட்டார் என்பர். சைவராகிய இவர்க்கு இந் நிகழ்ச்சி துயரைத் தந்ததுபோலும்! அதனால் கிறித்தவம் தழுவினார் என அறிய முடிகின்றது.

### நூலாசிரியர்

இவர் ஈழநாடு சென்று வண்ணை வயித்தியலிங்கம் செட்டியார் உதவியால் யாழ்ப்பாணத்தில் குடியேறினார். தேவப்பிரசையின் திருக்கதை, யோசேப்புராணம் (1023 பாடல்கள்) என்பவை இயற்றினார்.

### இயற்றமிழ் ஆசிரியர்

'புலியூர் யமக அந்தாதி', 'யாழ்ப்பாண வைபவம்' முதலிய நூல்களை இயற்றிய மயில் வாகனப் புலவர் (1779-1816), ஆறுமுக நாவலரின் தந்தையாராகிய கந்தப்பிள்ளை (1786 - 1842), இருபாலை நெல்லை முதலியார் முதலியோருக்கு இலக்கிய இலக்கணம் கற்பித்தார்.

நன்னூலுக்கு உரை வரைந்ததையன்றிச் சித்தி விநாயகர் இரட்டை மணிமாலை முதலிய நூல்களும் இயற்றினார் என்பது அறிய வருகின்றது.

வடமொழி தென்மொழிப் புலமை மிக்கவர் என்றும், சீரிய பாவலரும் மெய்ப்பொருள் வல்லாரும் ஆவர் என்றும் இவரைச் சைமன் காசிச் செட்டி என்பார் கூறுவர்.

**காலம்**

இவர் யாழ்ப்பாணத்தில் உள்ள ''சிவியா தெருவில் வாழ்ந்து காலமானார்'' என்பர். இவர் காலம் 18 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் பத்தொன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியுமாம்.

## ஊ. இராமாநுசக்கவிராயர் உரை

இவர் முகவை இராமாநுசக் கவிராயர் எனப்படுவார். முகவை என்பது இராமநாதபுரம். இயற்றமிழாசிரியர் இராமாநுசக் கவிராயர் என்பது இவர் சிறப்புளுள் ஒன்று.

**கல்வி**

இவர் இளமையிற் படைத்துறையில் பணிசெய்தவர். பின்னர்ச் சிவஞான முனிவரின் மாணவராகியவரும் இராமநாதபுர அரசரின் அவைக்களப் புலவராக இருந்தவருமாகிய சோமசுந்தரம் பிள்ளையிடம் தமிழ் கற்றார். தம் ஆசிரியரையும் தம் மாணவ நிலையையும்,

**'' சோமசுந் தரனெனும் தொன்னூற் குரவன்**
**காமர்செஞ் சேவடி கண்ணிணை யாக் கொண்(டு)**
**இயல்பல உணர்ந்தோர் எண்ணிலர்; அவருழைத்**
**துயல்வரு கீழ்மையில் தொடர்கீழ் நிலையினேன்''**

என்கிறார் (தேசிகர் சேவடி மனக்கு; மாசறு மணிமுடி எனக்கு என்னும் நன்னூல் உரைச் சிறப்புப் பாயிரப்பகுதி).

### பணி - சமயம்

கற்பன கற்ற இவர், ''யாம் சென்னைக்குச் சென்று இலக்கணப் பயிரிடப் போகின்றோம்'' என்று கூறிச் சென்றார். சென்னை வண்ணாரப்பேட்டையில் தங்கினார். அப்பேட்டை வழியே சென்ற ஒரு கட்டை வண்டியின் பாரச் சமநிலைக்காகப் போடப்பட்டிருந்த கல்லைக் கண்டார். அஃது அனுமார் சிலையாக இருக்கக் கண்டு அதனை வாங்கி ஆங்கிருந்த பிள்ளையார் கோயிலில் வைத்தார். அதற்குச் 'சஞ்சீவிராயன்' என்று பெயரும் சூட்டினார். அதனால் அத்தெரு சஞ்சீவிராயன் தெரு என்றும், அப்பேட்டை சஞ்சீவிராயன் பேட்டை என்றும் வழங்கலாயின. இராமாநுசர் மாலிய (வைணவ) சமயத்தார் என்பது கருதத் தக்கது.

### மாணவர்

எண்கவனகர் வீராசாமிச் செட்டியார், களத்தூர் வேதகிரி முதலியார், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், சரவணப் பெருமாளையர், துரு ஐயர் (Rev. W. H. Drew) தாமசன் கிளார்க் (Thomson clarke) இராசசு (Rev. I. B. Rodgers) போப்பையர், இரேனி யூசையர் ஆகியோர் இவரிடம் தமிழ் பயின்றனர்.

### நூல்கள்

இவர் எழுதிய நன்னூற் காண்டிகை 1847இல் அச்சாகியது. ஆத்மபோதம் (1840) இலக்கணச் சுருக்கம் (1848) ஆத்திசூடி, கொன்றை வேந்தன், வெற்றிவேற்கை முதலிய நூல்களுக்கு உரையெழுதினார்; திருக்குறள் 63 அதிகாரங்களுக்கு உரையெழுதி துருஐயர் எழுதிய ஆங்கில மொழி பெயர்ப்புடன் அச்சிட்டார். வின்சுலோ ஆங்கிலத் தமிழ் அகராதி எழுத உதவினார். மேலும் திருவேங்கட அனுபூதி, பார்த்தசாரதி பதம்புனை பாமாலை, வரதராசர் பதிற்றுப்பத்தந்தாதி, பச்சையப்ப வள்ளல்

பஞ்சரத்தினமாலை, குடாரம் என்பனவும் இவரியற்றிய நூல்களாகும். 1852இல் இயற்கை எய்தினார். இவர்தம் விரிந்த வரலாற்றை நன்னூல் விருத்தியுரை முகப்பில் காண்க.

**உரைப்பாயிரம்**

இவர் இயற்றிய நன்னூல் உரைக்கு, வெ. தொல் காப்பியம் வரதராச முதலியார், அட்டாவதானம் வீராசாமிக் கவிராயர், களத்தூர் வேதகிரிப் புலவர், சேமங்கலம் நாராயண வுபாத்தியாயர், சென்னை கேசவ வுபாத்தியாயர் ஆகியோர் உரைச் சிறப்புப்பாயிரம் வழங்கியுள்ளனர். இவருரை ஐங்காண்டிகை யுரை என வழங்கப்பட்டமை அறிய வருகின்றது.

**உரை**

**''அ இ உம்முதல் தனிவரிற் சுட்டே''**

என்பதில் (66) இவர், ''அகரம் தூரப்பொருளையும், இகரம் சமீபப் பொருளையும், உகரம் எதிர்முகமின்றிப் பின்னிற்கும் பொருளையும் சுட்டுமெனக் காண்க. உகரம் அவ்வாறு சுட்டி நிற்பதை, 'ஊழையும் உப்பக்கங் காண்பர்' என்பதற்கு, பின்பக்கமாய் முதுகு காட்டக் காண்பர் எனப் பொருள் கூறுதலாற் காண்பர்'' என விளக்கம் எழுதுதல் இவர்தம் பகுப்பாற்றல் நுணுக்கம் காட்டும்.

**திருத்தம்**

''எயாமுதலும்'' எனப் பிறர் பாடங்கொள்ள இவர் ''எய்யா முதலும்'' எனப்பாடங்கொள்வார் (67).

**'' தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்**
**டெய்தும் எகர ஒகரமெய் புள்ளி''**

என்னும் நூற்பாவை, (98)

**'' தொல்லை வடிவின எல்லா எழுத்தும் ஆண்**
**டெய்தும்எ காரம்ஒ காரமெய் புள்ளி''**

எனத் திருத்திக் கொண்டுளார். இத்திருத்தத்திற்குக் காரணமும் கூறுகின்றார்: ''எகரம் ஒகரம் மெய் புள்ளி' பெறும் என்ற இச்சூத்திரத்தை 'ஏகாரம் ஓகார மெய் புள்ளி' பெறும் எனத் திருப்ப வேண்டிற்று. என்னெனின், இக்காலத்தார் ஏகார ஓகாரங்களுக்கே புள்ளியிட் டெழுதுவது பெருவழக்காயினமையால் என்க'' என் கிறார்.

**பாடம்**

மாத்திரை குறைதற்குறியாக அமைந்ததே புள்ளி எழுத்து. அம்முறைப்படி குறில் எ, ஒ என்பவற்றுக்குப் புள்ளியிடல் (எழுத்தின் மேலே மெய்யெழுத்திற்குப் புள்ளி வைத்தல் போல் வைத்தல்) வழக்கு. அக்காலத்தில் புள்ளியில்லாத எ, ஒ என்பவை இக்காலத்தில் ஏ, ஓ என்பன போல நெடிலாகக் கருதப்பட்டன. இவ்வாறு நெடில் எழுத்தில் மாற்றம் ஏற்பட்டமையால் குறிலுக்குப் புள்ளியிட்டெழுதுதல் வேண்டாமையாயிற்று. இவற்றைக் கொண்டு, ''இறந்தது விலக்கல் எதிரது போற்றல்'' என்னும் முறையான் இவ்வாறு பாடம் திருத்திக் கொண்டதாகக் கூறுகின்றார். பிற்கால மாற்றங்கள் வளர்ச்சிகள் ஆகியவற்றை உரையில் குறித்தலே உரை வழக்கு. மூலபாடத்தில் மாற்றங்களை ஏற்றும் முறைமை ஏற்றுக் கொள்ளப்பட்டால் மூலபாடம் என ஒன்று இல்லாமலே ஒழியும். ஆதலால் எத்தகு சிறந்த பாடம் எனினும் மூலத்தில் கைவைத்தல் கூடாது என்பதே நூற் காப்பாகும்.

**மறுப்பு**

**'' அம்முன் இகரம் யகரம்... ஐயொத் திசைக்கும்''**

என்னும் நூற்பா உரையில் (125), '

**''கைவேல் களிற்றொடு போக்கி''**

என்னும் குறளை, ''கய்வேல் களிற்றொடு போக்கி'' எனக் காட்டுகின்றார். அந்நூற்பாவிலேயே,

"அகர இகர மைகார மாகும்"
"அகர உகர மௌகார மாகும்"
"அகரத் திம்பர் யகரப் புள்ளியும்
ஐயென் நெடுஞ்சினை மெய்பெறத் தோன்றும்"

எனக் கூறியதறிந்தும் (தொல். மொழி. 21-23), "அ ய் இ இந்த மூன்றுங்கூடி ஐகாரமாயிற்றெனவும், அ வ் உ இந்த மூன்றும் கூடி ஔகாரமாயிற்றெனவும் பொருள் கூறுவாரும் உளர். அது போலி இலக்கணம் ஆகாமை உணர்க" என மறுக்கிறார்.

செய்யுட்குரிய பொருள்கோளைச் சொல்லிலக் கணத்தில் கூறுவானேன் என்று எண்ணும் இவர் (460), "செய்யுளுக்குத் தொடர் என்று காரணப் பெயர் வந்தது மொழிகள் தொடர்ந்ததால் அன்றோ! அங்ஙனமாதலால் இதுவும் தொடர்மொழி இலக்கணமேயாம்" என்கிறார்.

### உரைநிலை

ஒவ்வொரு நூற்பாவுக்கும் தலைப்பும், நூற்பாவும், நூற்பா இன்னபொருள் உணர்த்திற்று என்னும் குறிப்பும், சொற்பொருளும் (பதவுரையும்) விளக்கமும் எடுத்துக் காட்டும் நூற்பாக்கிடக்கை முறை முடிப்பும் கூறுதலை இவர் முறையாகக் கொள்கிறார். தொல்காப்பியத்துடன் ஒப்பீடும், வடமொழிக் குறியீடு காட்டலும் இயன்றவிடத் தெல்லாம் மேற்கொள்கிறார். எடுத்துக்காட்டுகள் இயன்ற வரை மிகுதியாகக் காட்டுகிறார். எளிமை, தெளிவு ஆகியவை இவர் மாணவர்க்குக் கற்பிக்கும் கடப்பாட் டினின்று உண்டாகிய பட்டறிவின் விளைவு எனலாம். இவர்க்குப் பின் வந்த உரைகள் இதனினும் எளிமைப் படுவனவாயின.

### பதிப்பு

இராமாநுசக் கவிராயருரை அவராலேயே 1845இல் முதற்பதிப்பாக வெளிவந்தது என்பார் உ. வே. சா,.

1847 என்பார் மயிலை சீனிவேங்கடசாமி (19 நூ. ஆ.). கா. ர. கோவிந்தராச முதலியார் குறிப்புரையுடன் 1940 இல் புதிய பதிப்பு வந்தது.

## எ. விசாகப் பெருமாளையர் உரை

**காலம் - சமயம்**

திருத்தணிகை விசாகப் பெருமாளையர் என்பார் இவர். திருத்தணிகை சரவணப் பெருமாளையர் இவர் இளவலார். இவர்தம் தந்தையார் கந்தப்பையர் என்பார்; வீர சைவர். இராமாநுசக் கவிராயரிடம் கல்வி பயின்றவர். இவர் காலம் 19ஆம் நூற்றாண்டு.

**பணி**

''கனம் பொருந்திய கம்பேனியாரால் நியமிக்கப்பட்ட யூனிவர்ஸிட்டி என்னும் சகலகலா சாஸ்திரி சாலையில்'' தலைமைத் தமிழாசிரியராக இருந்தவர். இலக்கணச் சுருக்க வினாவிடை, பாலபோத இலக்கணம், யாப்பிலக்கண வசனம், அணியிலக்கண வசனம் ஆகிய நூல்களை இயற்றினார். திருக்கோவையாருக்கு உரையெழுதினார். நன்னூலுக்கு இவர் இயற்றிய காண்டிகையுரை 1875 இல் வெளிவந்தது. இதன் இரண்டாம் பதிப்பு 1879 இல் வெளிவந்தது.

**உரை**

இவருரை முக்காண்டிகையுரை எனப்பட்டது. கருத்துரை, சொற்பொருள், எடுத்துக்காட்டு என்னும் மூன்றும் உடைமையால் அப்பெயர் பெற்றது.

1879ஆம் ஆண்டுப் பதிப்பின் முகப்பில் 'மாணவர்க்குக் குறிப்புகள்' (A Hint to Students) உள்ளன. கலை இளைஞர்க்கு (B. A.) நூன் முழுமையும் பயில வேண்டும் என்றும், F. A. என்னும் இடைநிலை வகுப்புக்கும், உயர்

நிலை இறுதி வகுப்புக்கும் இவ்வடையாளமிட்டவை (F;M) பயில வேண்டும் என்றும் குறிப்புகள் உள்ளன.

பாயிர நூற்பாவாகிய ''மலர்தலை உலகின்'' என்பதன் முடிவில், ''இது நூல் செய்தவன் பெயர் முதலாகிய பதினொன்றையும் சொல்கின்றது'' என்று குறிப்பிட்டுச் சொற்பொருள் சொல்லி வேண்டும் சுருங்கிய விளக்கம் தருகின்றது. இம் முறையே நூன் முறையாக அமைகின்றது. மாணவர்க்கென எளிமைப்படுத்தித் தருதலை நோக்கமாகக் கொண்டு இயற்றப்பட்ட உரை என்பது வெளிப்படை.

## பதிப்பு

இவ்வுரை 1875இல் ஆசிரியரால் தனியே வெளிப்பட்டதெனினும், இவ்வாசிரியர் மாணவர் சந்திரசேகர கவிராச பண்டிதரால் 1854இல் சங்கர நமச்சிவாயர் விருத்தியுரையும், இவர் காண்டிகையுரையும் இணைத்துப் பதிப்பிக்கப் பட்டதென்பது அறிய வருகின்றது. பின்னர் 1889இல் விசாகப் பெருமாளையர் காண்டிகை, சங்கர நமச்சிவாயர் உரை, சிவஞானமுனிவர் உரை ஆகிய எல்லாமும் திருமயிலை தெய்வசிகாமணி முதலியார், திருமயிலை சண்முகம் பிள்ளை ஆகியவர்கள் குறிப்புரையுடன் வெளி வந்தது. இப்பதிப்பும் மாணவரை நோக்கியதே என்பது புலப்படுகின்றது:

''சான்றோர் செய்த நூலைச் செய்தபடியே பதிப்பிப்போர் அதனைப் பொன்னேபோற் பொதிந்து அதில் ஓரக்கரமேனும் மாறுபடாது அச்சிடுதல் கடனாகும் என்பது முறையாயினும், இவ்வாறு பிளவுபடுக்கவும், சேர்க்கவும் புக்கது சர்வகலாசாலைகளிலும் வித்தியா சாலைகளிலும் கல்வி கற்கும் மாணாக்கர்கள் தத்தம் சென்னை யூனிவெர்ஸிடி பரீட்சைகளுக்கு வேண்டுவன வற்றை இவையிற்றைக் கொண்டே கற்று அவைகளிற்றேர வேண்டுமென்னும் அவாவின் காரணத்தானும் அவ்வாறு

தேர்வதற்கு இவைகள் பெருந்துணையெனக் கொள்ளப் படும் பொருத்தமுடைமையானும் எனின் அதனை ஓர் தவறெனக் கற்றோர் கொள்ளார்'' என வரும் பதிப்புரை இதனை விளக்கும்.

**உரை நிலை**

இவருரை நிலையை விளக்கும் உரைப்பாயிரத்தின் பகுதி வருமாறு; இதனை இயற்றியவர் சேயூர் முத்தையா முதலியார்:

'' நன்னூற்கு,
நயன்மிகு சங்கர நமச்சி வாயனால்
பயன்மிகச் செய்திடப் பட்ட பின்னர்
தவஞா னந்தனிற் சால்புகூர் துறைசைச்
சிவஞான முனிவனால் திருத்திடப் பட்ட
விருத்தி யுரைதனை வெளிப்படச் சுருக்கிக்
கருத்துப் பதப்பொருள் காட்டுமற் றுஞ்சில
உறுமுறை காண்டிகை யுரையுளங் கொண்டு
சிறுவரும் உணர்தரும் செவ்வியிற் செய்தனன்
தத்துவ முணர்திருத் தணிகை மடாதிபன்
சத்தெனும் வீர சைவமா கேசன்
கற்றுணர்ந் தோங்கிய கந்தப்ப தேசிகன்
பெற்றருள் விசாகப் பெருமாள் ஐயனென்
றுலகு புகழ்தர ஓங்கி
இலகும் இயற்பெயர் எய்துநா வலனே''

## ஏ. ஆறுமுக நாவலருரை

**காலம் - சமயம்**

நாடறிந்த புகழாளர் ஆறுமுக நாவலர்; பெயரைச் சுட்டிக் கூறாமல் நாவலர் என்றாலே இவரைக் குறிக்கும் சிறப்பினர். சைவத் தொண்டுக்கெனவே தம் பிறவியைப் பயன்படுத்தியவர். இவர் காலம் 1823 — 1879.

**வரலாறு**

யாழ்ப்பாணத்து நல்லூரினராகிய இவர் தந்தையார் கந்தப்பிள்ளை. இருபாலைச் சேனாதிராய முதலியார், நல்லூர் சரவணமுத்துப் புலவர் ஆகியோரிடம் இலக்கிய இலக்கணம் கற்றவர். ஒன்பதாம் அகவையிலேயே நூல் எழுதுவதற்கு ஏடும் எழுத்தாணியும் பிடித்தவர் என்பர்.

தமிழ் உரைநடை எழுதுதலில் தேர்ச்சியர். பீற்றர் பெர்சிவல்ஐயர் விருப்பப்படி தமிழில் கிறித்தவ மறையை மொழிபெயர்த்துத் தந்தவர். சொற்பொழிவு வன்மை கண்டு திருவாவடுதுறைத் திருமடத்தினரால் 'நாவலர்' எனச் சிறப்புச் செய்யப்பட்டவர்.

**உரை**

இவர் இயற்றிய நூல்கள், பதிப்பித்த நூல்கள் மிகப் பல. இவர் கண்ட நன்னூல் காண்டிகை எளிமையும் தெளிவும் மிக்கது. தொடக்கக் கல்வியாளரும் ஐயமற இலக்கண நுட்பங்களைத் தெரிந்து கொள்ளவேண்டும் என்னும் நோக்கில் எழுதப்பட்டது. மாணவர்களுக்குப் பாலபாட வரிசை எழுதிய இவர், இலக்கணத் தெளிவு கருதி எழுதியமையால் வினா விடை முறையிலும் நன்னூல் உரை வரைந்தார். இலக்கண வினாவிடை, இலக்கணச் சுருக்கம் என்பவை அவை.

**பயிற்சி**

இலக்கணப் பகுதியைக் கற்றவர் தம்மைத்தாமே ஆய்ந்துகொள்வதற்கு வாய்ப்பாக 'அப்பியாசங்கள்' (பயிற்சிகள்) என்பதைப் பகுதிதோறும் வெளியிட்டுள்ளார். சொல்லைப் பகுதி விகுதி இடைநிலை சாரியை சந்தி விகாரம் என்னும் உறுப்பிலக்கண முறையில் பிரித்துக் காட்டவும் விதிகளைக் கூறவும் இவர் நூலில் அமைந்துள்ள 'பகுபத முடிபு' என்னும் பகுதி சிறந்த வழி காட்டியாக விளங்குகின்றது. 1880இல் நன்னூல்

காண்டிகையுரை வெளிவந்தது. பின்னர்த் தொடர்ந்து இந்நாள் வரை அதன் பதிப்புகள் வந்துகொண்டுள்ளன.

### பதிப்பு

இவர் சங்கர நமச்சிவாயர் உரையை வெளியிட்டதை அறிந்தோம். பிரயோக விவேகம், தொல்காப்பியம் — சேனாவரையருரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, தருக்க சங்கிரகம், இலக்கணக் கொத்து, இலக்கண விளக்கச் சூறாவளி முதலியவற்றையும் பதிப்பித்துள்ளார்.

### தொண்டு

யாழ்ப்பாணத்திலும் சென்னையிலும் இவர் அச்சகம் அமைத்ததும், யாழ்ப்பாணத்து வண்ணார் பண்ணையிலும் சிதம்பரத்திலும் பாடசாலைகள் ஏற்படுத்தியதும், தம் நூல்கள் வழிவழியாக வெளி வருவதற்குரிய அடிப்படைத் திட்டங்களை வகுத்தமைத்ததும் குறிப்பிடத் தக்க செய்திகளாம்.

### உரைநடை

நாவலர் உரைநடைக்குச் சான்றுகள் சில :

(1) ''இலக்கணங் கற்றவர் இலக்கியத்தில் அவ் விலக்கணம் அமைந்து கிடக்கு முறைமையை ஆராய்ந்து விதியோடு கூறப் பயிலல் வேண்டும். அது செய்யப் பயிலா விடத்து, இலக்கண நூற்கல்வியால் ஒருபயனும் இல்லை''.

— நன்னூல்; இலக்கண அமைதி.

(2) உபாத்தியாயருக்கு அறிவித்தல்:

''உபாத்தியாயர் நாடோறும் தாம் மாணாக்கர் களுக்குச் சொல்லும் பாடத்தை, முன்னரே வீட்டிலே அவதானத்தோடு வாசித்துச் செவ்வையாக ஆராய்ந்து, உள்ளத்தில் அமைத்துக் கொள்ளல் வேண்டும்''.

(3) மாணாக்கர்க்கு அறிவித்தல்:

(1) ''மாணாக்கர் நாடோறும் தங்களுக்குக் குறிக்கப் பட்ட பாடத்தை, உபாத்தியாயரிடத்தே கேட்கு முன்னரே வீட்டிலே அவதானத்தோடு பலமுறை வாசித்துச் சூத்திரத்தை நெட்டுருப்பண்ணிக் கொள்ளல் வேண்டும்''.

(10) ''பேசும் பொழுதும் எழுதும் பொழுதும் இலக் கணப் பிழையறப் பேசவும் எழுதவும் பழகல் வேண்டும். பிழைபடப் பேசினும் எழுதினும் இலக்கணக் கல்வியாற் பயன் ஒரு சிறிதும் இல்லை. பேசும்பொழுதும் எழுதும் பொழுதும் எல்லாருக்கும் பொருள் விளங்கத்தக்க இயற் சொற்களை வழங்கல் வேண்டும்''.

(11) ''இலக்கணப் பிழையுடைய வசனங்களையும் செய்யுள்களையும் திருத்தப்பழகல் வேண்டும்''.

இவரியற்றிய இலக்கணச் சுருக்கம் நன்னூல் உரை நடை ஆக்கமாக எழுத்து சொல் இலக்கணங்களை விளக்கு கிறது. 406 தலைப்புகளில் இலக்கணம் அமைந்தது 'பரீக்ஷை வினா' என ஒவ்வொரு பகுதியிலும் அமைந் துளது. இதன் இருபத்திரண்டாம் பதிப்பு 1953 ஆம் ஆண்டில் வெளிவந்தது.

## ஐ. சடகோப ராமானுசாசாரியார்

### வரலாறு

மாணவர் பயிற்சிக்கென நன்னூலுக்கு உரைகண்ட வருள் இவர் ஒருவர். இவர் தந்தையார் அப்பனையங்கார். சென்னைத் திருவல்லிக்கேணியைச் சேர்ந்தவர். சமயம் வைணவம். காலம் 1871-1910.

### நோக்கு

அரசினர் தேர்வுக்குச் செல்லும் மாணவர்கள் இடர்ப் பாடு இல்லாமல் எளிமையாக இலக்கணத்தை அறிந்து கொள்ளும் வகையில் பாட நூலாகவும்—அதே பொழுதில்

சுருங்கிய வகையிலும் நூல் இயற்றியவர். இவ்வுரை குறித்து உரையாசிரியர் கூறுவது (பதிப்பு. 1896):

**உரையமைதி**

''சங்கர நமச்சிவாயப் புலவராற் செய்யப்பட்டுச் சிவஞான முனிவரால் திருத்தப்பட்ட விருத்தியுரையும், விசாகப் பெருமாளையர் செய்த காண்டிகையுரையும் இராமாநுசக் கவிராயர் இயற்றிய காண்டிகை விருத்தி யுரையும் முதலிய உரைகளே இக்காலத்து விசேஷமாய் வழங்கி வருகின்றன.

''யாம் இப்பொழுது அவ்வுரைகள் எல்லாவற்றுள்ளும் பரீக்ஷைக்குப் படிக்கும் மாணாக்கர்களுக்குப் பெரிதும் பயன்படாத பல விஷயங்களை நீக்கியும் மற்றையவற்றை நன்கு விளக்கியும், இன்றியமையாத பல விஷயங்களைப் புதிதாகச் சேர்த்தும் தெளிவாகப் பொருள் விளங்குமாறு மிக எளிய நடையில் எமது சிற்றறிவுக்கு இயன்றவளவு ஒரு காண்டிகையுரை எழுதி உதாரணங்களை ஒழுங்கு படுத்தி அவசியமான வினாக்களையும் இறுதியிற் கூட்டிப் பதிப்பித்திருக்கிறோம்''.

இப்பகுதியில் இவ்வுரை நூல் அமைதி தெளிவாம்.

**ஈதொன்று**

ஒரு புதிய செய்தி நன்னூலாசிரியர் பவணந்தியாரைப் பற்றி எவ்வுரைகாரரும் கூறாத செய்தி: ''பவணந்தி முனிவர் பிராமண வருணத்தில் தோன்றினார்'' என்று இவர் கூறுவது நூலாராக இருந்தால்தான் நூலாசிரியராக இருக்க முடியும் என்னும் முடிவில் எழுதியது போலும்.

சே. கிருட்டிணமாச்சாரியாரும் இவ்வுரைக்கு இணை யாசிரியர் என்பது அறிய வருகின்றது.

## ஒ. நன்னூல் பிறபதிப்புகள்

நன்னூலுக்கு இங்குக் குறிக்கப்பட்ட உரைப்பதிப்பு களையன்றி வேறு சில பதிப்புகளும் கடந்த நூற்றாண்டு

முதலே வெளிவந்துள்ளன. **வேதகிரி முதலியார் உரை, பவானந்தம் பிள்ளை** யுரை ஆகியவை எளிமையும் தெளி வும் உடைய உரைகள். மாணவர் பயிற்சிக்கென அமைந் தவை. **இராசகோபாலப்பிள்ளை** என்பவராலும் ஒரு காண்டிகையுரை வெளியிடப்பட்டுள்ளது (1880). நன்னூல் இலகுபோதம் **ஆ முத்துத்தம்பிப்பிள்ளை** வெளியிட்டது (1905). **சோயசு** என்பாரும் **சாமுவேல்பிள்ளை**யும் எழுதிய நன்னூல் ஆங்கில விளக்கத்துடன் 1848 இல் முதற்பதிப்பும் 1851இல் மறுபதிப்பும் வந்துள்ளது. ஆங்கில விளக்கத் துடன் நன்னூற் பதிப்பு ஒன்று 1858 இல் **போப்பையரால்** வெளியிடப்பட்டுள்ளது. நன்னூல் ஆங்கில மொழி பெயர்ப்பு **இலாசரசு துரை**யால் வெளியிடப்பட்டுள்ளது (1878). அதன் மறுபதிப்பும் (1884) வந்துள்ளது

இலக்கணச் சுருக்கம், இலக்கண வினாவிடை, என்னும் பெயரால் பல நூல்கள் கடந்த நூற்றாண்டிலும், இந்நூற்றாண்டிலும் வெளிவந்துள.

தொல்காப்பியம் நன்னூல் ஆகிய இரண்டையும் ஒப்பிட்ட நூல்களும் வெளிவந்துள்ளன. இக்காலத்துக் கல்லூரிப் பயிற்சிக்கெனவும், புலவர் தேர்வுக்கெனவும் சுருக்க நூல்களும் வினாவிடை நூல்களும் எண்ணற்று வெளிவந்துள்ளன.

பாயிரம்—Preface
சிறப்புப் பாயிரம்—Special Preface
நூல் செய்தவர் பெயர் முதலியன - The name of the Author, etc.,
பொதுப்பாயிரம்—General Preface
நூலின் வரலாறு—Nature of a Classical work.

இவ்வாறு தலைப்புகள் மட்டும் தமிழும் ஆங்கிலமுமாக வரும் சில பதிப்புகளும் வெளிவந்துள்ளன. இவற்றை வரன்முறையே நோக்குவார் 'Notes' எனப்படும் உரை நூல் வளர்ந்த வரலாற்றைத் தனி ஆய்வாகச் செய்ய உதவும்.

# 18. அகப்பொருள் விளக்கம்

நாற்கவிராச நம்பி என்பவரால் இயற்றப்பட்ட அகப் பொருள் இலக்கண நூல் இது. இதனை, நம்பி அகப் பொருள் என்றும் கூறுவர். தொல்காப்பியம் அகப் பொருளைக் கூற்றுவகையால் கூறும். இந்நூல் துறை வகையால் கூறுகின்றது. இத்துறையமைதிக்குத் திருக் கோவையார் உதவியிருக்கக்கூடும். ஆயினும் திருக் கோவையார் தரும் துறைகளையெல்லாம் கூறினாரல்லர். வேண்டுவ கொண்டார் எனலாம். ஆனால், இவர் இலக்கணம் கோவை இலக்கியங்கள் சிலவற்றுக்கு முழுமை யான அமைப்புநூலாக விளங்குவதாயிற்று. அவற்றுள் தலையாய ஒன்று பொய்யா மொழிப் புலவர் இயற்றிய தஞ்சை வாணன் கோவை.

**நம்பி**

நாற்கவிராச நம்பி என்பதில் நம்பி இயற்பெயர் என்பர். முன்னாளில் எட்டி காவிதி என்பவை போல நம்பி என்பது அரசு வழங்கிய சிறப்புப்பட்டப் பெயராக வும் விளங்கியுள்ளது. அறிவுடை நம்பி, நம்பி நெடுஞ் செழியன் முதலிய பெயர்களில் இயற்பெயராக இருத்தல் போல் இப்பெயர் இருக்கவும் கூடும். நால்வகைப் பாக் களிலும் தேர்ச்சியராக இருந்தமையால் இப்பெயர் பெற் றார் என்பதைப் பெயர் கொண்டு அறியலாம். இவர் நாற்கவிப் புலமையர் என்பதைக் காட்டுவதற்குத் தக்க

நூலோ, தனிப் பாடல்களோ அகப்பட்டில. அவை மறைந்திருக்கக்கூடும்.

### பாயிரம்

நம்பியகப் பொருளுக்குச் சிறப்புப் பாயிரங்களாக இரண்டு பாடல்கள் அறியவருகின்றன. ஒன்று எல்லாப் பதிப்புகளிலும் உடைய ''பூமலி நாவன்'' என்னும் பாட்டு; மற்றொன்று ''பூமிசை நடந்த'' என்னும் பாட்டு. அதனைக் காட்டுவது அ. குமாரசாமிப் பிள்ளையும் த. கனகசுந்தரம் பிள்ளையும் வெளியிட்ட புத்துரைப் பதிப்பு.

### சமயம் - வரலாறு

நம்பியார் சமணசமயம் சார்ந்தவர் என்றும், தொல் காப்பியத்தினையும் சான்றோர் இலக்கியங்களையும் கொண்டு நூல் செய்தவர் என்றும், நூல் செய்ததுடன் உரையும் அவரே எழுதினார் என்றும், புளிங்குடி உய்ய வந்தான் என்னும் முத்தமிழ் ஆசிரியன் மைந்தன் என்றும், வடமொழி தென்மொழியாகிய இருமொழி வல்லவர் என்றும், நாற்கவிராச நம்பி என்னும் பெயரினர் என்றும் அச்சிறப்புப் பாயிரங்களால் அறிய வருகின்றன. இவரு ராகிய புளிங்குடி தொண்டைநாட்டதென்றும், நெல்லை நாட்டதென்றும் கூறுவர். பொருநையாற்றின் வட கரையில் உள்ள புளிங்குடியே இவரூர் என்றும் வலியுறுத் துவர்.

### காலம்

சிறப்புப் பாயிர உரை விளக்கத்தில், ''காலம், பாண்டியன் குலசேகரன் காலம்'' என்று வருவது கொண்டு, குலசேகரபாண்டியன் என்பவன் முதல் சடைய வர்மன் குலசேகரனே என்றும், அவன் காலம் கி.பி. 1192-1266 ஆதலால், இவர் காலம் 12 ஆம் நூற்றாண்டின் இறுதியும் 13 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாம் என்றும் கொள்வர்.

**நூல்**

அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழியியல் என ஐந்தியல்களைக் கொண்டது இந்நூல். இவற்றின் நூற்பாக்கள் முறையே 116, 54, 29, 10, 43; ஆக 252.

எனினும் ஒழிபியலில் 43, 42 என இருவகைக் கணக்கீடுகள் அமைந்துள்ளன. அகத்திணையியலில் 117 நூற்பாக்கள் என்றும், ஒழிபியலில் 41 நூற்பாக்கள் என்றும் ஒரு வெண்பாவால் அறிந்து கொள்ள வாய்க்கின்றது. அது,

> ''அகத்திணை நூற்றுப் பதினேழ் அடங்கா
> மிகுந்தகள(வு) ஐம்பதுடன் மேல்நான்(கு)—இகுத்த
> வரை(வு)இருபத் தொன்ப∴து மன்னுங்கற்(பு)
> ஈரைந்(து)
> உரையொழிபு நாற்ப∴தோ(டு) ஒன்று''

என்பது. இவ்வேறுபாடு ஒரு நூற்பாவை இரு நூற்பா ஆக்கல், இரு நூற்பாவை ஒரு நூற்பாவாக்கல் என்பவற்றால் நேரக்கூடுவதே. தொல்காப்பிய நூற்பா எண்ணிக்கையிலும் இச்சிக்கல் உண்மை அறியக் கூடியதே.

**நூலியல்**

நம்பியார் சில இலக்கணங்களை வரைப்படுத்திச் சொல்கிறார். தொல்காப்பியத்தின் மேல் வளர்ச்சி எனத் தக்கவை அவை. சில இலக்கணங்களில் விகற்பம் காட்டியமைக்கிறார். அக்கால இயல், புகுந்த வேற்றுக் கொள்கைகள் இவற்றின் சாயலாக அமைபவை அவை.

'கைக்கிளைக் குறிப்பு', 'பெருந்திணைக் குறிப்பு' எனத் தொல்காப்பியர் கூறுவதை இவர், ''கைக்கிளை யுடைய தொருதலைக்காமம்'' (3), ''பெருந்திணை என்பது பொருந்தாக் காமம்'' (5) என இலக்கணம் வகுத்துக் காட்டுகிறார்.

இவற்றை அகக் கைக்கிளை, அகப் பெருந்திணை என்பதுடன் அகப்புறக் கைக்கிளை, அகப்புறப் பெருந் திணை எனவும் விரித்துக் கொண்டு இலக்கணம் கூறு கிறார். அகப்புறங்களின் இலக்கணத்தை ஒழிபியலில் அமைக்கிறார்.

**'' காமஞ் சாலா இளமையோள்''**

எனக் கைக்கிளைத் தலைவியைத் தொல்காப்பியர் குறிக்க (996) இவர், ''காமஞ் சான்ற இளமையோள்'' என் கிறார் (29). இஃது இவர்க்கு உரித்து என்று கூறாது பொதுவில் அமையவும், இவர்,

**'' மறையோர் மன்னவர் வணிகர்சூத் திரரெனும்**
**இறையோர் தத்தமக் கெய்துமற் றதுவே''**

என்கிறார் (30). வருணப் பாகுபாடு இறையனார் களவியல் உரையில் தலைப்பட்டு, வளர்ந்த நிலை ஈதென்பதைக் காட்டும். பாட்டியல் நூல்களும் பிறவும் வருணப் பெருக்கை விரித்த சாயல் எண்ணத் தக்கது.

தொல்காப்பியர்,

**'' காமஞ் சான்ற கடைக்கோட் காலை**
**ஏமஞ் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே''**

என்று கற்பியல் நிறைவை ஒட்டி உரைக்கிறார். களவு நிறைவு கற்பு என்றும், கற்பு நிறைவு சிறந்தது பயிற்றல் என்றும் சுற்றம் சூழலொடும் அதனைப் புரிதல் என்றும் கூறுகிறார். ஆனால், இவ்வகப் பொருளார்,

**'' மக்களொடு மகிழ்ந்து மனையறம் காத்து**
**மிக்க காம வேட்கை தீர்ந்துழித்**
**தலைவனும் தலைவியும் தம்பதி நீங்கித்**
**தொலைவில் சுற்றமொடு துறவறங் காப்ப''**

என அகத்திணை இயலில் கூறுகிறார். 'தம்பதி நீங்கி' என்பதும் 'துறவறம்' என்பதும் தொல்காப்பியர் கூறாப் புதுநெறி.

''தெய்வம் உணாவே'' எனக் கருப்பொருளைப் பட்டியலிட்டு அமைகிறார் தொல்காப்பியர். களவியல் உரையால் நிறைவு செய்கிறது. வீரசோழியம் உரையில் குறிஞ்சி நடை முதலாக விரித்துச் செய்கிறது. நம்பி யகவலோ குறிஞ்சிக் கருப்பொருள் முதலியவற்றை விரிவான நூற்பாவாகவே வடிக்கின்றது. துறைகளை நாடகப் புனைவு வகையிலும் கொண்டு செல்கின்றது.

இதற்குப் பழமையானதோர் உரையுண்டு. அவ்வுரை நூலாசிரியர் செய்ததே என்பதைச் சிறப்புப் பாயிரத்து வரும்,

**'' தொகுத்து முறைநிரீஇச் சூத்திரம் வகுத்தாங்**
**ககப்பொருள் விளக்கமென் றதற்கொரு நாமம்**
**புலப்படுத் திருளறப் பொருள்விரித் தெழுதினன்...**
**நாற்கவி ராச நம்பியென் பவனே''**

என்பது கொண்டு கூறுவர். தஞ்சைவாணன் கோவை செய்த பொய்யாமொழியார் காலம் பிற்பட்டது. அந்நூலில் இருந்து துறைதோறும் காட்டப்படும் எடுத்துக் காட்டுகளை நோக்கப் பின்னூலில் இருந்து முன்னூலார் எடுத்துக்காட்டியிருக்க இயலாமையால் அவருரையன்று என்பர். இனித் தஞ்சைவாணன் கோவை நூலாசிரியர் உரை செய்த காலத்துச் சேர்க்கப்படவில்லை. பின்னவர் ஒருவர் முன்னர் இருந்த உரையுடன் இயைத்துக் கொண்டார் என்பர். அதனைக் கருதினால் நூலாசிரியரே உரையாசிரியருமாவர் என்னும் பாயிரச் செய்தி மெய்ம்மையாம் என்பர். அதற்கு, ''சான்றோர் செய்யுள் இல்லை ஆகலின் அஃதிலக்கணமன்று'' என்றும் (139), ''சான்றோர் செய்யுள் இல்லாதவற்றிற்குச் சூத்திரந் தன்னையே இலக்கியமாகக் கொள்க'' என்றும் (146)

உரையில் சொல்லியிருந்தும் தஞ்சைவாணன் கோவை, தொல். களா. உரை மேற்கோள் ஆகியவற்றைக் காட்டியிருத்தலால் பின்னர்ச் சேர்த்தது என்பர்.

உரையாசிரியர் 'சான்றோர் செய்யுள்' இல்லை என்றது சங்கப் புலவர் பாடல் இல்லை என்பதேயாம். சங்கச் சான்றோர், சான்றோர்; பிற்காலச் சான்றோர் என்று வழக்குண்மை உரையாசிரியர் பொது நெறியாம். ஆதலால் இக்குறிப்புகளைக் கொண்டு பிற்சேர்ப்பு எனல் இயலாது.

நூலாசிரியரே உரையும் எடுத்துக்காட்டும் காட்டிய சுவடிகளும், அச்சுவடிகளின் வேறாகப் பழைய உரையுடன் தஞ்சைவாணன் கோவை மட்டுமே எடுத்துக்காட்டாகக் காட்டப்பட்ட சுவடிகளுமாக இரு வேறு சுவடிகள் இருந்தமை அறியப்படுவதாலும், இரண்டையும் இணைத்துப் பதிப்பாளர்கள் பதிப்பித்து விட்டமையாலும் இச்சிக்கல் நேர்ந்தது எனலாம்.

**உரையாசிரியர் மரபு**

உரையாசிரியர் இளம்பூரணர் எழுத்ததிகார முகப்பில், "எழுத்து எனைத்து வகையான் உணர்த்தினாரோ எனின்", "உணர்த்தினார்", "இதனுள் உணர்த்தினார்" என்றும் "வேண்டினார்" (2) "குறியிடார்" (3) என நூலாசிரியரைத் தொடர்ந்து குறிப்பிட்டுச் செல்கிறார். இவ்வாறே பிறரும் செல்லுதல் மரபாதல் அறிக. இவ்வுரையாசிரியர், "மேற் பாயிரத்திலக்கணம் உணர்த்திப் போந்தாம்; இனி நூலிலக்கணம் உரைக்கின்றாம்" (1) என்கிறார். பிறர் நூற்பாக்களைச் சுட்டி "என்றாராகலின்" என்கிறார். அகப்பொருள் நூற்பாக்களைக் கூறி விளக்கும்போது "எண்ணப்பட்டது" (6), "கூறப்பட்டது" (13) "கொள்ளப்பட்டன" (137, 149) என்பவற்றைப் போலவே நெடுகிலும் கூறுகிறார். எண்ணினார், கூறினார், கொண்டார் என்றிலர் என்பது

கருதுக. உரைப் போக்கை நோக்க, ''கிழவோன் கூற்றும்'' என்பதிலுள்ள (225) ''என்றார்.'' ஏடு பெயர்த்தோர் கருத்தாகலாம்.

## சொல் - பொருள்

''உரன் எனினும் அறிவெனினும் ஒக்கும். பெருமையென்பது பழியும் பாவமும் அஞ்சுதல். அறிவென்பது தக்கதறிதல்; அச்சமென்பது காணாத தொன்று கண்டால் பெண்டிரிடத்து நிகழ்வது. நாணம் என்பது பெண்டிர்க்கு இயல்பாகிய குணம். மடம் என்பது பேதைமை எனக் கொள்க'' இவ்வாறு சொல்லுக்குப் பொருள் விளக்கம் கூறும் இடங்கள் அரிதாக உரையில் உள்ளன (35).

## சில விளக்கம்

இயற்பெயர் குரவராதியராதியராற் பெற்ற பெயர் என்கிறார் (247). கோவலன் என்பது கோபாலன் என்னும் வடமொழித் திரிபாய் ஆபுரத்தற்றொழின்மேல் நின்றது (247) என்கிறார்.

நற்றாய் கூற்று நூலின் இல்லாமையைக் குறிப்பிடும் இவர், ''நற்றாய் குறிப்பின் அன்றி அறத்தொடு நிற்கப் பெறாள் என்றமையால் செய்யுளில்லை'' என்கிறார் (178).

நூற்பா இன்ன நுதலிற்று என்று கூறிப் பொழிப்புப் பொருள் எழுதி எடுத்துக்காட்டு விளக்கங்களை ஏற்ற அளவான் கொண்டு செல்கிறது உரை. கடின நடை, உரை மிடுக்கு, செறிவு, விரிப்பு ஆகியன இல்லாமல் சிற்றாற்றுச் செலவென உரை செல்கின்றது.

## பதிப்பு

'இலக்கண பஞ்சகம்' என்னும் தொகுப்பில் நம்பியகப் பொருள் மூலம் இடம் பெற்று வெளிவந்தது.

வெளிக் கொணர்ந்தவர் தாண்டவராய முதலியார். 1864 இல் நரசிங்கபுரம் வீராசாமி முதலியார் அத்தகைய தொரு மூலப்பதிப்பு வெளியிட்டார்.

1878, 1879 ஆகிய ஆண்டுகளில் வைத்தியலிங்கம் பிள்ளை பதிப்பும், மற்றொரு பதிப்பும் வந்துள்ளன. இவை உரையொடு கூடிய பதிப்புகள். 1907 இல் தெல்லிப் பாழை சிவாநந்தையர் உரையுடன் பதிப்பித்தார். 1313 இல் மதுரைத் தமிழ்ச் சங்கப் பதிப்பு வந்தது. அதனைச் செப்பஞ் செய்து வெளியிட்டவர் சங்கத் தலைமையாசிரியர் உ. வே. திருநாராயண ஐயங்கார்.

சுன்னாகம் அ. குமாரசாமிப்பிள்ளை, தி. த. கனக சுந்தரம் பிள்ளை ஆகியவர்கள் எழுதிய புத்துரையொன்று பரிதாபி ஆண்டு, கார்த்திகையில் வெளி வந்தது. கழகத்தின் வழியே கா. ர. கோவிந்தராச முதலியார் குறிப்புரையுடன் 1943 இல் வெளிவந்தது.

# 19. களவியற் காரிகை

## நூல் நிலை

முதலும் இடையும் முடிவும் இல்லாத நூல்; நூலாசிரியர் பெயரோ நூற்பெயரோ உரையாசிரியர் பெயரோ அறியவராத நூல்; நூற்பெயர் தெரியாத நூல்களுக்கு நூற்பெயர் தரும் நூல்; ஆசிரியர் பெயர் தெரியாத நூல்களுக்கு ஆசிரியர் பெயர் தரும் நூல். அதற்குத் தகவாக இட்டு வைத்த பெயர் களவியற் காரிகை.

## களவியல்

களவொழுக்கம் பற்றிக் கூறும் நூல் களவியல் ஆகும். இறையனார் அகப்பொருளுக்குக் களவியல் என்றும், இறையனார் களவியல் என்றும் பெயர்கள் உண்மை அறிந்ததே. ஒரு நூலில் களவியல் இலக்கணம் கூறும் பகுதியும் களவியல் எனப்படும். இதற்குத் தொல்காப்பியக் களவியலும், நம்பியகப்பொருள் களவியலும் சான்று. களவொழுக்கத்திற்கு இலக்கியமாக அமைந்த ஒரு பகுதியும் களவியலாம். திருக்குறட் களவியல் இதற்குக் காட்டு.

## காரிகை

களவியல் என்னும் பெயரே சாலுமாகக் காரிகை என்னும் ஒட்டு வேண்டுவதேன்? களவியல் எனின் இறையனார் களவியலையே குறிக்குமாகலின் களவியல் காரிகை என வெளிப்பட விளங்கப் பெயர் வேண்டும்

என்பது. இனிக் காரிகை என்பது எதற்கோ எனின், கட்டளைக் கலித்துறையாம் யாப்பில் அமைந்தமையாலும், காரிகையாகிய மகடூஉ முன்னிலை உடையதாகலானும் என்பது. ஆயின், காரிகை எனவே அமையலாமே எனின் காரிகை எனின் யாப்பருங்கலக் காரிகையையே சுட்டுமாகலின் அதனின் வேறுபடவும் வெளிப்படவும் விளங்குமாறு களவியற் காரிகை எனப்படவேண்டும் என்பது.

## பெயரீடு

அகப்பொருள் இலக்கணமாகிய இச்சிதைவு நூலை முதற்கண் தமிழுலகில் அச்சூர்தி ஏற்றி உலாவரச் செய்த உயர் பெரும் பதிப்பாசிரியர் பேராசிரியர் ச. வையாபுரிப் பிள்ளை சூட்டிய பெயரே இஃதாம். இதன் மூலப்படி குறித்துப் பேராசிரியர் எழுதுகின்றார்:

''இவ்வரிய நூலுக்கு இப்போது கிடைத்துள்ளது ஒரு கையெழுத்துப் பிரதியேயாகும். இது சென்னை அரசாங்கத்தாரது தொன்னூல் நிலையத்திலுள்ளது. இப்பிரதியின் இறுதியில் எழுதப்பெற்றுள்ள ஆங்கிலக் குறிப்பினால் இஃது ஆழ்வார்திருநகரி மலையப்ப பிள்ளைக் கவிராயருக்குரிய ஏட்டுப் பிரதியினின்றும் நாதமுனிப்பிள்ளை என்பார் 12-6-1920 இப்பிரதி செய்ததென அறியக் கிடக்கின்றது'' என்கிறார்.

## பொருளியல்

அவர் பதிப்பித்த காலத்திற்குப் பின்னர்க் கருவி நூல்கள் சில கிடைத்துள்ளன. குறிப்பாகத் தமிழ்நெறி விளக்கப் பொருளியல் கிடைத்தது. அப்பொருளியல் இக் களவியல் காரிகைக்கு அடிக்கள நூல் போல்வது. அதிலிருந்து மட்டும் 91 மேற்கோள்கள் இந்நூலில் காட்டப் பட்டுள்ளன. பாண்டிக்கோவை தனியே அச்சிடப் பட்டுள்ளது. அதிலிருந்து 154 பாடல்கள் மேற்கோளாக வருகின்றன. இன்ன பிறவெல்லாம் இப்பதிப்புத் திருந்தவும், விடுபாடு நிரப்பவும் உதவின. அவ்வகையில் கழக

வழியாக என்னால் களவியல் காரிகையின் பதிப்பு 1973இல் கொண்டுவரப்பட்டது.

''எத்துணை அரிய நூல்களை நாம் இழந்து விட்டோம் என்பதைக் கணக்கிடவும் முடியவில்லை'' என்னும் ஏக்கத்தை இதன் முதற்பதிப்பாசிரியர் வெளியிடுவார். யாப்பருங்கல விருத்தி, புறத்திரட்டு, களவியல் காரிகை என்னும் மூன்று நூல்களும் அவ்வேக்கத்தை உண்டாக்கு பவை என்பதை ஆர்வத்தால் கற்பார் அனைவரும் அறிவர்.

**சில நூற்பெயர்**

அகத்திணை, அரையர் கோவை, இன்னிசைமாலை, ஐந்திணை, கண்டனலங்காரம், காரிகைச் செய்யுள், கிளவித் தெளிவு, கிளவிமாலை, கிளவி விளக்கம், கோயிலந்தாதி, சிற்றெட்டகம், திணைமொழி, வல்சந்த மாலை, மழவை எழுபது, வங்கர் கோவை என்று இந்நூல் காட்டுபவை இன்று நாம் காண வாய்க்காத அரிய நூல் களாயின.

**நூல் அளவு**

இரண்டாம் பதிப்பில் முதற்பகுதிக்கு அகப்பொருள் என்று பெயர் வைக்கப்பட்டது. தமிழ்நெறி விளக்கப் பொருளியல் அத்தலைப்பைக் கொள்ளுதற்கு அடிப்படை யாக இருந்தது. இரண்டாம் பகுதி களவொழுக்கம்; மூன்றாம் பகுதி கற்பொழுக்கம். கற்பொழுக்கம் உடனிலைச் செலவுக்கு மேல் நூற்பா இல்லாமையால் அதன் பின்னிலை அறியக் கூடவில்லை.

இந்நூலில் கிடைத்துள்ள காரிகை 21. நூற்பா 1; மேற்கோள் பாடல்கள் 416. இவையே நூல் வழியில் கிடைத்து முதற்பதிப்பில் இடம் பெற்றவை. இக் காரிகைகள் அந்தாதி யாப்பில் அமைந்தவை.

**உரைமுறை**

இதனுரை காட்சிப் பகுதியில் இறையனாரகப் பொருள் காட்சியை அப்படியே வாங்கிக் கொண்டு நடக்

கின்றது. பின்னர் நூற்பாத் தொடர்க்குரிய பிண்டப் பொருளைத் துறைவாரியாகத் தனித்தனி யுரைத்து, ''அதற்குச் செய்யுள் வருமாறு'' என எடுத்துக்காட்டுக் காட்டுகின்றது. எடுத்துக்காட்டில் திருக்கோவையார்க்கு முன்னுரிமை தருகின்றது. எங்கும் அந்நெறியையே போற்றுகின்றது. பின்னர்ப் பாண்டிக்கோவை சங்கப் பாடல் பொருளியல் முதலியவற்றைக் காட்டுகின்றது. திருக்கோவையார்க்கு இவர் தரும் முன்னுரிமை இவர் தம் சார்பைக் காட்ட வல்லது. சிறப்புப் பாயிரம் கடவுள் வாழ்த்து ஆயன இன்மையால் நூலாசிரியர் சமயம் அறிதற்கு வாய்க்கவில்லை. இந்நூலைப் பதின்மூன்றாம் நூற்றாண்டினது என்பர். இதனுரை பதினான்காம் நூற்றாண்டினதாகலாம் என்பர்.

## உரையின் சிறப்பு

எடுத்துக் காட்டும் மேற்கோள் இன்னநூலைச் சேர்ந்தது என்பதைத் திட்டமாக உரைக்கும் சீர்மை யுடையது உரை. அதனால் ஆய்வுலகம் பெற்றுள்ள நலம் அளப்பரிது என்பது ஆய்வாளர்க்குத் திட்டமாகத் துலங்கும்.

'இடம் வினாதல்' என்பது உளங்கவன்றுரைத்த பாங்கன் ''எவ்விடத்து? எத்தன்மைத்து? நின்னாற் காணப்பட்ட உரு?'' என்று தலைவனை வினாவுதல். அதற்குச் செய்யுள்:

'இடத்தியல் புரைத்தல்' என்பது பாங்கற்குத் தலைமகன் கண்ட இடமும் வடிவும் உரைத்தல். அதற்குச் செய்யுள்:

இவ்வாறு செல்கிறது உரை.

ஒவ்வொரு பகுதிக்கும் உரிய எடுத்துக்காட்டுகளை உரைத்து அவற்றின் நிறைவில், ''இவையெல்லாம் இவ் விலக்கணத்துள் கண்டு கொள்க'' என்று இறையனார் களவியல் நூற்பாக்களைக் காட்டி அப்பகுதியை முற்றுவிக்

கிறது. ஆகலின், அதனை முதனூல் எனக் கொண்டார் இந்நூலாசிரியர் எனக் கொள்ள நேர்கின்றது. எனினும், நம்பியகப் பொருள் போலத் துறை வகையால் கோவைப் படுத்தியே நூலைக் கொண்டு செல்கின்றார். ஒருகால் நூலாசிரியரே உரையாசிரியராகவும் இருந்திருக்கக் கூடும் என நம்புதற்குத் தடையொன்றும் இல்லை.

கையறு கிளவி என்பது தாய் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, ஊர் துஞ்சாமை, காவலர் கடுகுதல், நிலவு வெளிப்படுதல் என இவை முதலாகிய காப்பு மிகுதி சொல்லி வரவு விலக்குதல். அதற்குச் செய்யுள் வருமாறு: என்று கூறித் திருக்கோவையார், பாண்டிக்கோவை, அகநானூறு, பொருளியல் என்பவற்றில் இருந்து ஒன்பது பாடல்களை மேற்கோள் காட்டுகிறார். இவர் எடுத்துக் காட்டும் நெடுந்தொகைப் பாடலில் எண்வகைத் தடைகள் குறிக்கப்படுகின்றன (அகம். 121). அதனால் இவை யெல்லாம் வந்த செய்யுள் என்கிறார். கிளவித் தெளிவில் இருந்து இவர் காட்டும் பாடல் ஐந்து தடைகளைக் காட்டுகின்றது:

**“ஊர்துயிலின் நாய்துயிலா ஒண்டொடி யூர்காக்கும்
பேர்துயிலு மாறொருகால் பெற்றாலும் — நேர்துயிலாள்
அன்னை நெடுநிலா அல்லும் பகலாகும்
என்னை வருவதுநீ இங்கு”**

என்பது அது.

எடுத்துக் காட்டால் சிறப்புறும் நூலுள் சிறந்த இடத்தைப் பெறுவது களவியற் காரிகை எனின் மிகத் தகும்.

**“எங்களூர் இவ்வூர் இதுவொழிந்தால் வில்வேடர்
தங்களூர் வேறில்லை தாமுமூர் — திங்களூர்
நானும் ஒருதுணையா நாளைப்போ தும்இந்த
மானும் நடைமெலிந்தாள் வந்து”**

என்னும் விருந்து விலக்குத் துறை சார்ந்த இக்கிளவித் தெளிவு எத்தகு எளிய இனிய பண்பியல் பாரிக்கும்பா! இப்படி எத்தனை பா இந்நூலில்!

# 20. பன்னிருபாட்டியல்

'அளவையால் பெயர் பெற்றது பன்னிருபடலம்' என்பது பழைய உரை. அவ்வுரை பன்னிரு பாட்டியலுக்கும் பொருந்த வேண்டும்; பெயரைப் பார்க்க அப்படியே தோன்றுகின்றது. பன்னிரண்டு பாட்டியல் நூல்களும் இல்லை. பன்னிரண்டு புலவர்கள் இயற்றிய பாட்டியல் தொகுப்பும் இல்லை. பல பாட்டிலக்கண நூல்களிலிருந்து தொகுத்துக் கோவையாக்கப்பட்ட தொகை நூலாக அது விளங்குகின்றது.

## பாட்டியற் புலவர்கள்

பாட்டியற் புலவர்கள் பதினைவர் பெயர்கள் இதில் இடம் பெற்றுள்ளன. அகத்தியர், அவிநயனார், இந்திர காளியார், கபிலர், கல்லாடர், கோவூர் கிழார், சீத்தலையார், செயிற்றியனார், சேந்தம் பூதனார், நற்றத்தனார், பரணர், பல்காயனார், பெருங்குன்றூர் கிழார், பொய்கையார், மாபூதனார் என்பார் அவர்.

## பெயர்

இனி இதனைப் பன்னிரு பொருத்தங்கள் பேசப் படுதலால் (எழுத்தும் பாட்டியலில் பொருத்தமே) இதற்குப் பன்னிரு பாட்டியல் என்று பெயர் இருக்கலாம் என்பர். அவ்வாறாயின் பன்னிரு பொருத்தப் பாட்டியல் என்றே இருந்திருக்கும்.

**பாட்டியல் வழி**

வெண்பாப் பாட்டியல் இந்திரகாளி செய்த பாட்டியல் வழி வந்தது என்பதை அறிவோம். அதன் காலம் 12ஆம் நூற்றாண்டு. அவர் வழி ஒன்றும் அகத்தியர் வழி ஒன்றுமாக அல்லது சமண வழி ஒன்றும், வைதிக வழி ஒன்றுமாக இருவழிப் பாட்டியல் நூல்கள் கிளர்ந்தன என்பர். இது பொதுமையது போலும்! பாட்டியல் புலவர் பெயர்களுள் பலவும் பழம்புலவர்களின் பெயர்கள். திருவள்ளுவமாலைத் தொகுப்புப் போலப் பழம்புலவர் களின் பெயரால் பாட்டியல்கள் இயற்றி உலவ விட்ட வற்றைத் தொகுத்த தொகுப்பு என்றே இதனைக் கொள்ளலாம். எவ்வாறாயினும் இத் தொகுப்பின் காலம் 14 ஆம் நூற்றாண்டாகலாம் என்பர்.

**நூலளவு**

இந்நூல் எழுத்தியல் சொல்லியல் இனவியல் என மூன்றியல்களை உடையது. இந்நூல், 360 நூற்பாக்களை யுடையது. இவற்றுள் 204ஆம் நூற்பா ஒன்றுமட்டும் வெண்பா. எஞ்சியவை அனைத்தும் நூற்பா யாப்பே.

**பொருள்**

**எழுத்தியல்** எழுத்தின் பிறப்பு, வருணம், கதி, உண்டி, பால், தானம், கன்னல், புள், நாள் என்னும் ஒன்பதனை விரிப்பது.

**சொல்லியல்** சீர்க்கணம், மங்கலச் சொல், பெயர்ப் பொருத்தம் என்பவற்றை விளக்குவது.

**இனவியல்** பாப்பொருத்தம் பாவினம் என்பவற்றைக் கூறுவது. இதனுள் சாதகம் முதல் கையறுநிலை ஈறாய் அறுபத்தாறாகப் பாவினம் கூறப்பட்டுள்ளன. இதனை 96 என்றும், அதற்குமேல் என்றும் கூறுவாரும் உளர். பாட்டு, கணக்கு (மேற் கணக்கு, கீழ்க்கணக்கு) எனத் தொகை நூற்கணக்குகளும் இப்பாட்டியலில் இடம் பெற்றுள.

இதன் பாயிரம்,

**'' சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி**
**சிந்தையின் வைத்து முன்னோர் பொருள் நெறி**
**கூட்டி யுரைப்பன் பாட்டியன் மரபே''**

என்பது. இது,

**'' சொல்லின் கிழத்தி மெல்லியல் இணையடி**
**சிந்தைவைத் தியம்புவன் செய்யுட் கணியே''**

என்னும் தண்டியலங்காரத் தழுவல் என்பது வெளிப்படை.

இவ்வியலில் இன்ன கூறுதும் என மூன்றியல்களிலும் கூறித் தொடங்குகிறார். பிறப்பு வருணம் என முறையே இவர் இவர் நூற்பா இவையென அடுக்கி வைக்கிறார். ஆதலால் இது கூறுவன் என்பது இப்பாட்டியல் தொகுப்பாளர் நூற்பா வெனவும், பிறவெல்லாம் தொகுக்கப்பட்டவை எனவும் கொள்ளக் கிடக்கிறது. அவ்வகையில் பார்த்தால் நூலாசிரியர் தொகுப்பாசிரியர் என்பதே தகும். இனி இப்பாட்டியல் தொகுப்பிலேயே தனித்தும் — இவ்வெண்ணிக்கையில் அடங்காத — நூற்பாக்கள் 159 காட்டப்பட்டுள்ளன. இந்திரகாளியார் பாடல்கள் இவையென ஓரைந்து நூற்பாக்களை ஓரேடு காட்ட, மற்றோர் ஏடு மற்றோரைந்து நூற்பாக்களை அவர் பெயராலேயே காட்டுதலைப் பன்னிருபாட்டியல் பதிப்பாசிரியர் இரா. இராகவ ஐயங்கார் குறிப்பிடுகிறார்.

**பாடம்**

யானைத் தொழில் பற்றிய ஒருநூற்பா:

**''கிரிசரம் வனசரம் நதிசரம் என்றிவை**
**நிலைபெறு நிலனென நிறுத்தினோரே''** (100)

என்பது. இதற்குச் **சங்கச் சுவடியில்** பாடம் (முதலடிக்கு)

**''மலையே யாறே காடே என்றிவை''**

என்று உள்ளமை குறிக்கப்பட்டுள்ளது. அதுவே எதுகை நோக்கி இனிதின் இயைவதாக இருந்தும், இப்பாடம் மேற்கொண்டமை என்னென அறிய முடியவில்லை!

"ஆனை யாயிரம் அமரிடை வென்ற
மாவை னுக்கு வகுப்பது பரணி"

என்பது பரணியுடையான் பற்றியது. இச்செய்தி,

"ஏழ்தலைப் பெய்த நூறுடை இபமே
அடுகளத் தட்டாற் பாடுதல் கடனே"

என்கிறது பன்னிருபாட்டியல். ஆனால் இந்நூற்பா சங்கப் படியில் இல்லை என்பது பதிப்பாசிரியர் அடிக்குறிப்பு. ஆதலால் இவ்வாறு படியுடையார் எண்ணம் போலெல் லாம் பன்னிருபாட்டியலைப் பெருக்கியுள்ளனர் எனலாம். யாப்பியல் நூற்பெருக்கக் காலம் ஒன்றிருந்தமை யாப்பருங்கல விருத்தியால் அறியப்படுவது போல், பாட்டியற் பெருக்கக்காலம் ஒன்று இருந்ததைப் பன்னிரு பாட்டியல் காட்டுகின்றது எனலாம். 'புராணம் இல்லையேல் கோயிலில்லை' என்றொரு நிலை பெரும் புலவர் மீனாட்சி சுந்தரம்பிள்ளை காலத்தில் இருந்தமை எண்ணத் தக்கது.

பாட்டியல் தொகுப்பாளர் கலைமகள் வழி பாட்டாளர் ஆகலாம்.

**பதிப்பு**

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக 1904இல் முதற்பதிப்பும் 1951-இல் இரண்டாம் பதிப்பும் வெளி வந்துள.

## 21. நவநீதப்பாட்டியல்

### காலம்

நவநீத நடனார் என்பவரால் இயற்றப்பட்ட பாட்டியல் இலக்கணம் நவநீதப்பாட்டியல் என வழங்கப் படுகின்றது. இது கட்டளைக் கலித்துறை யாப்பால் இயற்றப்பட்டுள்ளமையால் கலித்துறைப் பாட்டியல் எனவும் வழங்கும். இந் நூலாசிரியர் காலம் 14ஆம் நூற்றாண்டு என்பர்.

### பெயர் - சமயம்

நவநீதன் என்பது கண்ணன் பெயர்களுள் ஒன்று. நவநீதம் வெண்ணெய்; 'நவநீத கிருட்டிணன்' எனப் படுவார் வெண்ணெய்க் கண்ணனார் எனத் தமிழில் பெயராக்கம் செய்து கொண்டமை கருதத்தக்கது. ''பாவையர் மனைதொறும் வெண்ணெய்க் காடினான்'' என்னும் வில்லிபாரதம் (இராச. 119) இப்பொருளை விளக்கும். இவர் பெயரால் திருமாலியர் என அறியப் படுவதையன்றித் தற்சிறப்புப் பாயிரத்தாலும் விளங்கும்.

**'' கார்கொண்ட மேனிக் கறைகொண்ட நேமிக்**
**கமலக்கண்ணன்**
**பார்கொண்ட பாதத்தை ஏந்திப் பகருவன்**
**பாட்டியலை''**

என்கிறது அது.

**வழி**

இந்திரகாளிய வழிப்பாட்டியல் எனவும், 'அகத்தியர் வழிப்பாட்டியல்' எனவும் இருவகை வழிகளில் பாட்டியல்கள் எழுந்துள்ளன என அறிந்தோம். இப்பாட்டியல் அகத்தியர் பாட்டியல் வழிப்பட்டது எனப்படுகின்றது.

''அகத்திய மாமுனி யாக்கிய பாட்டியல் ஆன பௌவம்'' (சி. பா. 2).

''குறுமுனி யாதிகலைஞர் கண்ட, பாட்டியலானவை எல்லாம் தொகுத்து'' (சி. பா. 3).
என்று சிறப்பாயிரம் கூறுவது காண்க.

**மறை-இலக்கணம்**

யாழ் முதலிய இசைக்கலை 'நரம்பின்மறை' எனப்படுதல் பழவழக்கு. இந் நவநீதநடனாரை ''நாட்டிய வேதத்தவன் நவநீதநடன்'' என்கிறது சிறப்புப்பாயிரம் (3). இதனால் சங்கச் சான்றோர் 'மதுரை இளம்பாலாசிரியர் சேந்தங் கூத்தனார்' போல இவரும் கூத்துக்கலையில் வல்லார் எனக் கொள்ளலாம். நாட்டிய வேதத்தவன் என்றிருந்தும், 'வேதத்தவன்' என்பதால் மறையோர் இவர் என்றும் கூறினர்.

இப்பாட்டியல் நூல் சில காரிகைகளில் மகடூஉ முன்னிலையுடையது. காரிகை யாப்பால் வரும் பல நூல்கள் இம்முன்னிலை கொள்ளல் எண்ணத்தக்கது.

**நூலளவு**

பொருத்தவியல், செய்யுள் மொழியியல், பொது மொழியியல் என மூன்றியல்களையுடையது இந்நூல். இவ்வியல்களில் முறையே 25, 43, 37 ஆக 105 பாடல்கள் உள்ளன. சிறப்புப்பாயிரம் 3 பாடல்கள்; ஆக 108. இவற்றுட் சில செய்யுட்கள் இடைச்செருகலாக இருக்கலாம் என இந்நூலைப் பதிப்பித்த உ. வே. சாமிநாதையர்

நூல் நிலையப் பதிப்பாசிரியர்கள் கூறுகின்றனர். பொருத்தவியல் முதன் மொழியியல் என வழங்கப்பட்டமையும் அறிய வருகின்றது (ச. வையாபுரிப்பிள்ளை பதிப்பு).

**பொருள்**

**பொருத்தவியல்:** மங்கலம், சொல், எழுத்து, தானம், பால், உண்டி, வருணம் நாள், கதி, கணம் என்னும் பத்துப் பொருத்தங்களையும் பற்றிக் கூறுகிறது.

**செய்யுள் மொழியியல்:** பிள்ளைத்தமிழ் முதல் இசைச் செய்யுள் ஈறாக 48 வகை நூல்களைப் பற்றிக் கூறுகிறது.

**பொது மொழியியல்:** பாயிரவகை, வருணவகை, பாக்களின் சாதி, உறுப்பழிந்த செய்யுள், உவமை, கவிவகை, அவைவகை, ஓலையிலக்கணம், வாதிடல் முறை, செய்யுள் செய்யத்தக்கவர், தகாதவர், கேட்பிக்கும் நெறி, பரிசில் நல்கார்க்கு வருவது ஆகியன பற்றிக் கூறுகிறது. இவர், நல்லவை நிறையவை தீயவை குறையவை என அவையை நான்காகப் பகுத்தோதுகிறார்.

**உரை**

நவநீதப் பாட்டியலுக்கு இரண்டுரைகள் கிடைத்துள்ளன. உரையியற்றியவர் பெயர் தெரியாமையால் உரை 1, உரை 2 என்றே குறிக்கும் நிலை உண்டாயிற்று.

''ஓர் உரை மிகவும் பழமையானது என்பது அதில் எடுத்தாளப்படும் நூல்களால் விளங்கும். அவற்றில் பெரும்பாலனவற்றைக் காலத்தால் முற்பட்ட வெண்பாப் பாட்டியலின் உரைகாரர் கூட எடுத்தாளவில்லை. இரண்டாவது உரை அத்துணைச் சிறப்பினதன்று'' என்று பதிப்பாசிரியர்கள் முகவுரையில் கூறியுள்ளனர்.

**பழையவுரை**

பழமையான உரையால் அறியப்படும் நூல்கள்: அகத்தியனார் ஆனந்த ஓத்து, அணியியல், அவிநயனார்

கலாவியல், இந்திரகாளியம், கல்லாடம், கல்லாடனார் கலாவியல், கல்லாடனார் வெண்பா, செய்யுள் வகைமை, திருப்பிரவாசிரியர் தூக்கியல், தொல்காப்பியனார் செய்த பாட்டியல், தொல்லாசிரியர் செய்நூல், பருணர் பாட்டியல், பிங்கல சரிகை, பொய்கையார் கலாவியல், பொய்கையார் பாட்டியல், மாமூலம், முந்திரியார் வஞ்சினம், முள்ளியார் கவித்தொகை, வாமன சரிதை என்பவை.

நால் வருணத்தவர்க்கும் விடுக்கும் ஓலைக்கும் கூட அளவு வேறுபாடு; இருக்கும் பலகையிலும் வேறுபாடு என்பவற்றை எண்ணிப் பார்க்க வருணத்தின் வல்லாட்சி விளங்குகிறது.

> **'' ஓலைய திலக்கணம் உரைக்கும் காலை**
> **நாலாறு விரலாம் நான்மறை யோர்க்கே**
> **பாருடை யோர்க்குப் பதிற்றி ரண்டாகும்**
> **வணிகர்க் கீரெண் விரலா கும்மே**
> **சாணென மொழிப சூத்திரர்க் களவே''**

இது பொய்கையார் கலாவியல் என்று கூறப்படுகிறது (92).

## பதிப்பு

பாட்டியற் கொத்து என்னும் நூலில் முதல் 18 கலித்துறைகள் 'நவநீதப் பாட்டியல்' என்னும் பெயருடன் 1908 இல் வெளிவந்தது. ச.வையாபுரிப்பிள்ளை பதிப்பொன்று முழு நூலாக வந்துளது. 1944 இல் உ.வே.சாமிநாதையர் நூல் நிலைய வெளியீடு எண் 2. என்பதாக வெளிவந்துளது.

# 22. வரையறுத்த பாட்டியல்

## பெயர்

'வரையறுத்த பாட்டியல்,' பத்தே பத்துக் கட்டளைக் கலித்துறைகளால் அமைந்தது. அதிலும் மூன்று பாடல்கள் வாழ்த்து அவையடக்கம் வருபொருள் பற்றியன. எஞ்சிய ஏழு பாட்டுகள் மங்கலச் சொல் என்னும் ஒரே ஒரு பொருள் பற்றியனவே. ஆதலால் இவ்வரையறை கருதி வரையறுத்த பாட்டியல் எனப்பட்ட தெனலாம். இனி, இவ்விவ்வெழுத்து முதலாகவுடைய பெயர்களுக்கு இதுவே மங்கலச் சொல் என வரையறுத்த லாலும் பெயர் ஏற்பட்டிருக்கலாம்.

இப்பாட்டியலுக்குச் சம்பந்தப் பாட்டியல் என்ப தொரு பெயருமுண்டு. அது கொண்டு சம்பந்த மாமுனிவர் என்பார் பாடியமையால் இப்பெயர் பெற்றது எனக் கருதினாரும் உளர். ஆனால்,

''சம்பந்த மாமுனி பாதமலர், நேர்கொண் டிறைஞ்சி நிகழ்த்துகின்றேன்'' என நூலின் முதற்பா கூறுதலால் அம்முனிவர் இந்நூலாசிரியர்க்குக் குருவராக இருக்கலாம். அவர் பெயரைத் தாம் இயற்றிய நூலுக்குச் சூட்டினார் எனலாம். இவ்வகைக்கு நேமிநாதம் எடுத்துக் காட்டாதல் அறிக.

## பொருள்

இந்நூல் 'நெடுநூல் சுருக்கி வரையப்பட்டதென்றும்' 'மாமதி (பேரறிவு) இல்லார்க்குத் தெரிவுறக் கூறப்பட்ட

தென்றும்', 'மதியன்மையாற் சொல் மழலைப் புன்சொல் பெரியர் பொறுப்பர்' என்றும், கவிவாணர் வள்ளன்மையரைத் தேடி வருவாய் பெற்று வாழ்தற்கு இந்நூல் துணையாயின், அதுவே வரும் பயன் என்றும் இவர் கூறுவன (1-3), நூலியல், அவையடக்கம், நூற்பயன் ஆயவை கூறுவதாம்.

**நூல்**

நூல் அந்தாதியால் இயல்கின்றது. ஈரிடங்களில் மகடூஉ முன்னிலையுடையதாய் (9,10) அமைகின்றது.

சீர், எழுத்து, பொன், பூ, திரு, திங்கள், மணி, நீர், சொல், கங்கை, வாரணம், குஞ்சரம், உலகு, பார், தேர் என்னும் மங்கலச் சொற்கள் வரப்பாடுதல், இவ்விம் முதலெழுத்துக்களையுடைய பெயருடையார்க்கே என்று கூறுகிறது.

பத்தாம் பாடலாம் இறுதிப் பாடல் வருணம், உண்டி, கதி, கணம் ஆயவற்றை ஆய்ந்து கொள்ளக் கூறுகின்றது.

இவ்வாசிரியர் வண்ணனைத் திறம், 9 ஆம் 10 ஆம் பாடலில் வரும் மகடூஉ முன்னிலை அமைப்பால் புலப்படும்.

எழுத்துகளை ஓர் ஒலிச்சுவை யுண்டாகவும், யாப்பியல் சிறக்கவும் விட்டிசைப்புத் தவிர்க்கவுமாம் வகையில்,

> **" கிக்கீ சொச்சோக்கள் நங்நாவொடு**
> **அடுத்த நிங்நீ"**

என்பன போலக் கூறுகிறார். கி, கீ; சொ, சோ; ந, நா; நீ, நீ; என்னும் எழுத்துகளை அப்படியே கூறாமல் ஒரு சுவை யுண்டாகக் கூறுதல் அறிக. பின்வரும் எழுத்துகளிலும் இம்முறையையே கொண்டுளார்.

**உரை**

இந்நூலுக்கு ஒருரை உள்ளது. இன்ன நுதலிற்று என்று கூறி, இதன் பொருள் எனப் பிண்டப் பொருளைத்

தெளிவாகத் தருகிறது. திரு என்னும் மங்கலச் சொல்லால் திருமகள் திருவளர் திருப்பதி திருமல்கு திருமன்னு எனவும், திங்கள் என்னும் மங்கலச் சொல்லால் திங்களர் திங்களால் எனவும் பாவிற்கு இசைந்தபடி பாடுக எனச் சிறுசிறு விளக்கங்களும் தருகின்றது.

•'இச்செய்யுளுக்குப் பொருள் விளங்கிக் கிடந்தமையின் விரித்துரைத்துக் கொள்க'' என்றும் கூறியமைகிறது.

இந்நூல் கூறும் சம்பந்த மாமுனிவர் எவர் என அறிய வாய்ப்பிருந்தால் காலம், சமயம் முதலியன அறிதற்குக் கூடும். இது பதினாறாம் நூற்றாண்டினதாகலாம் என்பர்.

## பதிப்பு

வெண்பாப் பாட்டியலும் வரையறுத்த பாட்டியலும் இணைத்து 1900 இல் ஒரு பதிப்பு சென்னையில் இருந்து வந்துள்ளது. அவ்வாறே கொ. இராமலிங்கத் தம்பிரான் விளக்கவுரையுடன் கழக வெளியீடாக இது 1936 இல் வெளிவந்தது.

# 23. சிதம்பரப் பாட்டியல்

---

**ஆசிரியர்**

பரஞ்சோதியார் என்பவரால் இயற்றப்பட்டது இப் பாட்டியல் நூல். திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவரின் இவர் வேறொருவர். இவர் சிதம்பரபுராணம், மதுரையுலா என்பவற்றை இயற்றிய புராணத் திருமலை நாதர் என்பாரின் மைந்தர்.

> **" சிதம்பரப் பாட்டியலைச் செய்தான் தமிழால்**
> **சிதம்பரபு ராணமுதல் செய்து—விதம்பெறுசீர்**
> **சேர்ந்த புராணத் திருமலைநா தன்தவத்தால்**
> **சார்ந்தபரஞ் சோதியென்பான் தான்"**

என்னும் இந்நூற் பாயிரத்தால் இச்செய்திகள் விளங்கும்.

**நூல்**

சிதம்பரப் பாட்டியல், உறுப்பியல், செய்யுளியல், ஒழிபியல், பொருத்தவியல், மரபியல் என ஐந்தியல்களை யுடையது. இவற்றைப் பற்றிய மொத்தப் பாடல்கள் 47. இப்பாடல்கள் எல்லாம் எண்சீர்க் கழிநெடில் ஆசிரிய விருத்தங்கள்.

**பொருள்**

இப்பாட்டியல் தனிநிலைச் செய்யுள் தொடர்நிலைச் செய்யுள் இரண்டன் இலக்கணமும் கூறுவது. இதனால் யாப்பிலக்கணமும் பாட்டியல் இலக்கணமுமாகிய இரண்டன் இலக்கணங்களையும் இந்நூலில் கூறினார் என்க.

முன்னியல்கள் மூன்றும் யாப்பிலக்கணம் கூறுவன. பின்னிரண்டு இயல்களும் பாட்டியல் இலக்கணம் கூறுவன.

இப்பாட்டியல் அகத்தியர் வழிமுறையில் வருவது என்பதை ஆசிரியர் கூறுகின்றார். இந்நூலைக் கற்றார் எய்தும் பயன் இன்னதெனவும் கூறுகின்றார்:

**'' பாடலாம் செந்தமிழைப் பாடி அரனருளைக்**
**கூடலாம் இன்பநலம் கொள்ளலாம்—பேடனாய்**
**நாட்டியசீர்ப் பாவினங்கள் நாடும் சிதம்பரப்**
**பாட்டியலைக் கற்றார் பயன்''**

என்பது அது.

**காலம் - சமயம்**

''சகற்கு ஈரேழு நூறுடன் முப்பஃதியைந்த ஆண்டு'' எனச் சிதம்பரபுராணம் கூறுதலால் சகம் 1430 ஆகிய அவ்வாண்டு கி. பி. 1508 ஆகும். அச்சிதம்பர புராணம் இவர் தந்தையார் இயற்றியதாகலின் இவர் காலம் 16-ஆம் நூற்றாண்டு என்க. இவர் சமயம் சைவம் என்பது வெளிப்படை.

**உரை**

இந்நூல் முதல் மூன்று இயல்களுக்கு உரையுள்ளது. எளியது; இனியது. இதனை இயற்றியவர் எவர் என்பது புலப்படவில்லை. பாட்டியற் பகுதிக்கு உரையின்மை, அதன் எளிமை கருதி எழுதாமல் விடப்பட்டிருக்கலாம்.

**பதிப்பு**

தமிழ்ச்சங்க வாயிலாக இதனைப் பதிப்பித்து வெளிப்படுத்தியவர் அறிஞர் மு. இராகவ ஐயங்கார். இவரே சந்திராலோகம் வெளியிட்டவரும் ஆவர்.

**அரங்கேற்றமுறை**

அரங்கேற்றம் பற்றி இந்நூல் கூறுமாறு:

**'' கொள்ளுமிடம் விதானித்துத் தொடையல் நாற்றிக்**
**கொடிகதலி தோரணம்பா லிகைநீர்க் கும்பம்**
**துள்ளுபொரி விளக்கொளிர முரசி யம்பத்**
**தோகையர்பல் லாண்டிசைப்ப மறையோர் வாழ்த்த**

'வெள்ளைமலர்த் துகில்புனைந்து தவிசின் மேவி
வேறுமொரு தவிசிருத்திச் செய்யுள் கேட்டே
உள்ளமகிழ் பொன்புவிபூண் ஆடை மற்றும்
உதவியே ழடிபுலவன் உடன்போய் மீளே.''

'' உடம்படச்செய் யான்செய்யுட் பிறர்பாற் கூறில்
உற்றதிரு அவனிடைப்போய் ஒதுங்கு மன்றித்
திடம்பெறச்செய் யுள்வரைந்து செம்பூச் சூட்டித்
தெருவுமயா னம்புற்றுக் காளி கோட்டத்
திடந்தனில்அங் கவன்றன்னை நினைந்து சுட்டால்
ஈராறு திங்கள்தனில் இறுதி யாவன்
தொடர்ந்துசெயா துளநொந்தால் சுற்றத்தோடும்
தொலைவனிஃ துண்மையகத் தியன்தன்
சொல்லே.''

'' அகத்தியன்சொல் எழுத்துமுதல் குற்றம் செய்யுட்
கமையாமல் தொடைகொண்டால் அடையும்
செல்வம்
அகத்துயர்நோய் அகலும்அக லாது சுற்றம்
வாணாளும் அதிகம்வழி மரபு நீடும்
தொகைக்குற்றம் பாட்டுறிற்செல் வம்போம் நோயாம்
சுற்றமறும் மரணமுறும் சோரும் காலும்
சகத்தவர்க்கீ தன்றியே தேவர்க் காகிற்
றப்பாதிப் பலன்கவிதை சாற்றி னார்க்கே.''

## குறிப்பு

*அரங்கேற்றம் பற்றிய பல செய்திகள் அடங்கி யுள்ளமை அறியத்தக்கன. ''அச்சமே கீழ்களது ஆசாரம்'' என்பதற்கு ஏற்ப அச்சுறுத்தி வழிப்படுத்தும் வகையாக அரங்கேற்றச் செய்திகள் இருந்தமை ஆயத்தக்கன. உள நலமும் கல்வி நலமும் இல்லாரை ஒன்றிப்பாடியும், பாட்டுடைத் தலைவராக்கியும் வாழ்நாளைக் கழித்த புலவர்கள் நிலையும், உதவா ஓட்டைச் செவிச் செல்வர் நிலையும், தமிழரசு வீழ்ச்சியின்பின் புலவர் நிலையும் அறிந்து கொள்ளற்கு இப்பாடல்கள் சான்றாக விளங்குதலால் முற்றாக முப்பாடல்களும் தரப்பட்டனவாம்.*

# 24. மாறனலங்காரம்

பதினாறாம் நூற்றாண்டில் தோன்றிய அணிநூல் மாறன் அலங்காரம்.

## மாறன்

மாறன் என்பது பாண்டியன் பெயர்களுள் ஒன்று. இங்குப் பாண்டி நாட்டு ஆழ்வார்களுள் புகழ் வாய்ந்த நம்மாழ்வாரைக் குறிப்பதாயிற்று. இவர் பாண்டியர் ஆட்சிக்கு உட்பட்டதும், பொருநைக்கரை சார்ந்ததும் ஆகிய திருவழுதி வளநாட்டுச் சிற்றரசர் வழியினர். வேந்தர் பெயரையோ குடிப் பெயரையோ சிற்றரசர் படைத்தலைவர் ஆகியோர் தம் பெயராகச் சூடிக் கொள்ளும் பண்டையோர் மரபுப்படி மாறன் என்னும் பெயரை இவர் முன்னோர் கொண்டனராக இவரும் கொண்டார் என்க. இவர்க்கு மாறன் என்பதை அன்றிக் காரிமாறன், சடகோபன், திருவழுதி வளநாடன் முதலான பெயர்களும் வழங்கின. நம்மாழ்வார் ஆகிய மாறனைத் தலைவனாகக் கொண்ட அணி நூல் 'மாறனலங்காரம்' எனப்பட்டதென்க. இவ்வாறே மாற னகப் பொருள், (மாறன்) பாப்பாவினம் என்பனவற்றை யும் கொள்க.

## ஆசிரியர்

இந்நூலை இயற்றியவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பார். திருக்குருகை என்பது ஆழ்வார்

திருநகரி. திருக்குருகைப் பெருமாள் என்பது ஆழ்வார் திருநகரிக்குத் தலைவரான நம்மாழ்வாரைக் குறிக்கும். இவர் நம்மாழ்வாரின் அரசவைக் கவிஞராக விளங்கியவர் என்றும், இவர் தந்தையார் பெயரும் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்பதேயாகும் என்றும் கூறுவர்.

## வரலாறு

வைணவ சமயத்தாராகிய இவர் வேளாண் குடியினர்; பாயிரம் சீரகத்தார் வணிகன் என்கிறது. இதனால் இவர்தம் மாலையும், செய்து வந்த தொழிலும் விளங்கும். மேலும் ஆழ்வார் திருநகரிக் கோயில் 'சத்தாவரண விழா'வில் 'திருப்பணிமாலை' பாடுபவருக்கு ஏற்பட்ட உரிமைகளைத் தெரிவிக்கும் கோயிற் கணக்கில் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்னும் பெயர் உள்ளதையும், அவ்வுரிமையை 'வத்தராயிருப்பு ஆழ்வாரப்ப பிள்ளை' என்பவர் பெற்று வருவதையும் மாறனலங்கார வரலாறு தெரிவிக்கிறது. ஆதலால் இவர்தம் குடிவழி அறியப்படும். இவரூரும் திருக்குருகையே.

## குரு

திருக்குருகைப் பெருமாள் கவிராயரின் குருவர் 'சீநிவாசசீயர்' என்பார். இவர், ''சிற்குணச் சீநிவாதனின் அருளால், நற்பொருள் மூன்றையும் நலனுற உணர்வோன்'' என்னும் மாறனலங்காரப் பாயிரமும், ''சிற்குணத் திருமலை சீநிவாதன், பொற்புடைத் திருவடி போற்றிய புனிதன்'' என்னும் மாறனகப் பொருட் பாயிரமும் பிறவும் கூறும்.

## நூல்கள்

திருக்குருகைப் பெருமாள் கவிராயர் இயற்றிய நூல்கள் :

மாறனலங்காரம், மாறனகப் பொருளும் அதன் எடுத்துக்காட்டாகிய நூற்றெட்டுத் திருப்பதிக்

கோவையும், திருக்குருகை மான்மியம், நம்பெருமாள் மும்மணிக் கோவை, மாறன் கிளவிமணிமாலை முதலியன.

**காலம்**

இவரியற்றிய திருக்குருகை மான்மியம் அரங்கேற்ற மாகிய காலம், ''அறந்திகழ் ஆண்டவை எழுநூற் றிருபான் மூன்றில் அணிகிளர் கார்த்திகை மாதம் எட்டில்'' என்றுள்ளது. இவ்வாண்டு கொல்லம் 723. அது கி.பி. 1548. ஆதலால், 440 ஆண்டுகளுக்கு முற்பட்டது என்பது அறியவரும்.

**சிறப்பு**

இவர் தம் தந்தையாரிடத்தே கல்வி கற்றார் என்றும், பலர்கரும் பயன்படும் கல்விக் களஞ்சியம் (சுவடி நூலகம்) ஒன்று ஏற்படுத்தினார் என்றும், நாற்பத்தொன்பது என்று எண்ணப்படும் சங்கப் புலவர்களுடன் இவர் ஐம்பதாமவர் என்று எண்ணத் தக்கவர் என்றும் கூறுவர். ''நாற்பத் தொன்பதை ஐம்பதென்று, சாற்றுந் திருக்குருகைப் பெருமாள் நம் சடைக்குட்டியே'' என்பது இவர் பற்றிய தொரு பாடலின் அடி.

**நூலியல்**

மாறனலங்காரம் பாயிரப் பகுதியை விரிவாகக் கொண்டது. சிறப்புப் பாயிரம் நீங்கிய 64 பாடல்களை யுடையது; நூற்பா, அகவல், வெண்பா எனப் பல்வேறு பாவகையுடையது. நூல், பொதுவியல், பொருளணி யியல், சொல்லணியியல், எச்சவியல் என நான்கு இயல் களையுடையது. மொத்தத்தில் சிறப்புப் பாயிரம் நீங்கிய 326 நூற்பாக்களையுடையது.

பொதுப்பாயிரத்தில்,

**'' வெள்ளையின் அகவலின் விளம்புதல் மரபே ''**

என்று இவர் கூறியபடி பொதுவியலை வெண்பாவாலும், மற்றை இயல்களை நூற்பாவாலும் அமைத்துள்ளார்.

தண்டியலங்காரத்திலும், மாறனலங்காரம் மிகவும் விரிவுடையது. நூற்பா அளவை அன்றி எடுத்துக்காட்டு அளவானும் விரிவுடையதே. இந்நூல் ஒரு நூன்மொழி பெயர்ப்பன்று. வழிவழி மரபையும், புதுவது வரவையும் இணைத்து இயற்றப்பட்டது. இது,

**" முதுமொழித் தண்டி முதுநூல் அணியையும்**
**புதுமொழிப் புலவர் புணர்ந்தியல் அணியையும்**
**தனாதுநுண் ணுணர்வால் தருபல அணியையும்**
**மனாதுறத் தொகுத்தும் வகுத்தும் விரித்தும்**
**சதுர்பெற இரண்டிடந் தழீஇச் சார்பென "**

விளங்குவது அறியப்படுகின்றது. இந்நூலில் வடமொழித் தண்டியாரை அரிதாகவும், தமிழ்த் தண்டியாரைப் பெரிதாகவும் சுட்டுகிறார்.

தண்டியலங்காரத்துட் கூறப்பட்ட பொருளணிகளின் தொகை 35. இவர் கூறும் தொகை 64.

**அணி வகை**

பூட்டுவில், இறைச்சிப் பொருள்கோள், பொருண்மொழி என்பவற்றை அணியுள் சேர்த்தார்.

வகைமுதல் அடுக்கு, இணையெதுகை, உபாயம், உறுசுவை, புகழ்வதின் இகழ்தல் என்பவற்றையும் அணியுள் இயைத்தார்.

ஐயம், தெரிதருதேற்றம் ஆகியவற்றையும் தனி அணி வகையுள் அமைத்தார்.

தண்டியாசிரியர் சித்திரக்கவிகள் பன்னிரண்டன் பெயரை ஒரு நூற்பாவில் அமைத்தார். இவர் முப்பத்திரண்டனைக் கூறுவதுடன் அவற்றுக்கு இலக்கணமும் சொல்கிறார்.

## உரையும் எடுத்துக்காட்டும்

நூலாசிரியரே தண்டியாசிரியர் போல எடுத்துக் காட்டும் அமைத்தார் என்பது புலப்படுகின்றது. ''இந் நூலாசிரியர் இவ்வுதாரணம் யாண்டுப் பெற்றார் எனின்'' என்று உரையில் வருவதால் இதனை அறியலாம். இந்நூலில் பரிபாடல், கலித்தொகை, பத்துப்பாட்டு புறநானூறு, குறுந்தொகை, அகநானூறு, திருக்குறள், நாலடியார், சிந்தாமணி, சிலப்பதிகாரம், புறப்பொருள் வெண்பாமாலை, யாப்பருங்கலம், திருவாய்மொழி ஆகிய நூல்களில் இருந்தும், தாமியற்றிய திருக்குருகை மான்மியம், நம்பெருமாள் மும்மணிக்கோவை, மாறன் கிளவிமணிமாலை என்பவற்றிலிருந்தும், இந்நூலின் உரை யாசிரியர் இயற்றியதாக எண்ணப்படும் பாப்பாவினத்தில் இருந்தும், திருப்பதிக் கலம்பகம் என்னும் பெயரியதொரு நூலில் இருந்தும் மேற்கோள்கள் காட்டப்பட்டுள்ளன.

## உரையாசிரியர்

இந்நூலின் உரையாசிரியர் தென் திருப்பேரைக் காரி ரத்தின கவிராயர் என்பவர். இவர் ஊராகிய தென் திருப்பேரை ஆழ்வார்திருநகரிக்குக் கிழக்கே 5 கி.மீ. தொலைவில் உள்ளது. இவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயரை அடுத்துக் கல்வி கற்றார். 'காரி ரத்தினம்' என்பது காரிமாறனாகிய நம்மாழ்வாரின் பெயரேயாகும்.

இவர், எடுத்துக்காட்டுச் செய்யுள்களிலுள்ள உள்ளுறை உவமம், ஏனை உவமம், இறைச்சி ஆகிய வற்றை நன்கனம் விளக்குகிறார். குறிப்புரை, பொழிப் புரை வேண்டுமிடங்களில் தருகின்றார். இஃது இன்னார் மதமெனக் கூறிச் செல்கிறார். எடுத்துக்காட்டினை நூற்பாவின் பொருளொடு பொருத்திக் காட்டுகிறார்.

தொல்காப்பிய நுண்பொருள்மாலை, பரிமேலழகர் நுண்பொருள்மாலை என்பவை இவரியற்றிய பிற

நூல்கள். பாப்பாவினத்திற்குக் குறிப்புரையும் நம்பெரு மாள் மும்மணிக்கோவைக்கு உரையும் கண்டவர் இவர்.

**உரையாசிரியர் சிறப்பு**

உரைப்பாயிரமாக வரும் கலித்துறை இவர்தம் சிறப்பை வலியுறுத்தும்:

**" தருகாள மேகம் கவிராய ராயன் சடையனன்பாற்**
**குருகா புரேசர் புனையலங் காரம் குவலயத்தே**
**கருகாத செஞ்சொ லுரைவிரித் தான்கற்ப**
**காடவிபோல்**
**வருகாரி ரத்ன கவிராயன் பேரை வரோதயனே "**

என்பது அது.

"கவிராச கேசரியான பேரைக் காரி ரத்தின கவிராயர் உரையெழுதினது என்றறிக" என்னும் பொருளணியியலுரை நிறைவுச் செய்தியால் இவர் கவிராசகேசரி எனப்படுதல் அறிக.

நன்மாணவர்க்குப் பளிங்கு, அன்னம், பரவை (கடல்), முகில் ஆகியவற்றையும், மாணவராகார்க்கு ஆடு, பந்து, முகவை, கரையிலாக்குளம் ஆகியவற்றையும் உவமை கூறுகிறார். பெரிதும் புதிய உவமைகள்.

நூல் நுவல்தலைப் பற்றி ஆசிரியர் கூறுவதும், உரை செல்வதும்:

**" ...அஞ்சிறைப் பறவையின் அணைந்துறத் தழுவியும்**
**வெஞ்சிறைப் படுபுனன் மீன்போல் நோக்கியும்**
**அகன்றன னாமெனின் ஆமைபோன் றுன்னியும்**
**புனிற்றா வெனஅவன் புலந்தனின் முன்னியும்... "**

"பறவைபோல் அணைத்துத் தழுவியும் மீன்போல் நோக்கியும் விட்டு நீங்கிய காலத்தும் ஆமைபோன்று உளத்தால் நினைந்தும் ஈன்றணிமைப் போதினில்

ஆபோல் அவனிருக்கும் புலத்துச் சென்றும்...கொடுப்ப தென்றவாறு''

## திருக்குறள்

பாவிகம் என்னும் அணிக்கு 586 முதல் 623 வரையுள்ள திருக்குறள் பாடல்களை வரிசை தப்பாமல் தொடுத்து எடுத்துக் காட்டியுள்ளார், இஃதவர் திருக்குறள் பற்றினை விளக்கும்.

## அரியார்

'' அரியா ரரியார்
அரியா ரரியார்
அரியா ரரியார்
அரியா ரரியார் ''

இஃதொரு சொல்லினான் மடக்கல். இதற்குப் பொருள் கூறுகிறார்:

அரியார் — யாவராலும் அளவிடற் கரியார்

அரி ஆர் — சத்துருக்கள் உயிரைப் பருகும்

அரியார் — சக்கராயுதத்தையுடையார்

அரியார் — பாம்பை மிக்க

அரியார் — சயனமாக உடையவர்

அரியார் — ஏனமாக அவதரித்தவர்

அரியார் — அவர் யாரெனில்

அரியார் — அரி என்னும் திருநாமத்தையுடையார் என்றவாறு.

துறை — கடவுள் வாழ்த்து. பா — குறளடி வஞ்சித் துறை.

''வாக்கு வன்மை வேண்டி வளையாபதியாரை நினைத்தார்'' என்பார் தக்கயாகப் பரணி உரையாசிரியர். இவர் முதலியல் தொடக்கத்தில் திருப்பாவை தந்த திருப்பாவையை நினைத்து வாழ்த்துகிறார். தம் நூல் திருப்பாவையெனத் திகழ வேண்டிப் போலும்!

**'' திருப்பாவை என்னத் திருந்தியற் பாத்தந்த**
**திருப்பாவை வில்லிபுத்தூர்ச் செல்வி—அருட்பார்வை**
**வாய்ந்ததனாற் செய்யுள் வழக்கென் றிரண்டிடத்தால்**
**ஆய்ந்துரைப்பல் செய்யுள் அணி ''**

என்பது அது.

## பதிப்பு

மதுரைத் தமிழ்ச் சங்க வெளியீடாக 1913 இல் முதற் பதிப்பு வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1929 இல் வந்தது. பதிப்பாசிரியர் திருநாராயண ஐயங்கார்.

# 25. மாறனகப் பொருள்

மாறன் அலங்காரம், பாப்பாவினம் ஆகியவற்றை இயற்றிய திருக்குருகைப் பெருமாள் கவிராயரே இதனையும் இயற்றியவராவர். இதுவும் காரி மாறப் பெருமான் ஆகிய நம்மாழ்வார் மேல் செய்யப்பட்ட நூலேயாகும். நூலாசிரியர் வரலாறு, காலம் ஆகியவற்றை மாறனலங்காரத்துக் கண்டு கொள்க.

நம்பியகப் பொருளுக்குத் தஞ்சை வாணன் கோவையும், இறையனார் களவியலுக்குப் பாண்டிக்கோவையும் களவியற் காரிகைக்குத் திருக்கோவையாரும் எடுத்துக் காட்டுகளாக விளங்குவதுபோல இம்மாறனகப் பொருளுக்கு எடுத்துக் காட்டாக விளங்குவது திருப்பதிக் கோவை என்பதாகும்.

**காலம்**

"அடைவாகும் எழுநூறோ டிருபத் தேழாம்
ஆண்டுமதி சித்திரையேழ் சித்ரை யோரை
உடையவரேழ் சந்நிதியில் உரிமை கேள்வி
யுறுசெம்மல் ஆஞ்சீநி வாதன் முன்பு
மடைதிறந்த வெள்ளமெனா மாண்போர் கொள்ள
மாறனகப் பொருளைவகுத் துரைத்தான் ஆய்ந்து
சடையனெனும் இயற்பெயரான் தமிழ்நா வீறன்
சார்குருகைப் பெருமாள்சீர் வணிகன் தானே"

எனவரும் பாயிரத்தால் கொல்லம் 727 சித்திரை நாளில் அரங்கேற்றப் பெற்றதென்றும், சீநிவாசசீயர் என்னும் தம் ஆசிரியர் முன்னிலையில் அரங்கேற்ற மாயதென்றும் அறிந்து கொள்ளலாம். கொல்லம் 727 என்பது கி.பி. 1552 ஆகும். மாறனலங்காரம் இயற்றியபின் நான்கு ஆண்டுகள் கழித்து இந்நூல் இயற்றப்பட்டதென அறியலாம்.

**நூலளவு**

மாறனகப் பொருளிலுள்ள இயல்கள், அவற்றிலுள்ள பாடல்கள் ஆகியவை இரண்டு வெண்பாக்களால் அறிய வருகின்றன.

**'' மன்னும் அகத்திணையே மாண்பார் களவியலே**
**துன்னும் வரைவியலே தூத்தொடியே!—பின்னமறக்**
**கூறத் தகுகற்பே கோதீர் ஒழிபியலே**
**மாறன் அகப்பொருளின் வைப்பு''**

**'' ஐந்திணைசேர் மாறன் அகப்பொருளிற் சேருமியல்**
**ஐந்தாம்நூற் பாவெண் அடைவாகப்—பைந்தொடியே!**
**முந்நூற்று அறுபத்து மூன்றாம் முதல்இறுதி**
**உந்துவட வோர்கடனே ஓர்''**

இயல்கள் ஐந்து: அகத்திணை இயல், களவியல், வரைவியல், கற்பியல், ஒழிபியல்.

பாடல்கள்: ஐந்தியலுக்கும் நூற்பா 363.

நூலின் முதற்சொல் ''வட'' என்பதும் இறுதிச் சொல் ''கடனே'' என்பதுமாம்.

''வடதிசை வேங்கடம் தென்திசைக் குமரி'' என்பது மாறனகப் பொருளின் பாயிரத் தொடக்கமாகும்.

இந்நூலின் அகத்திணையியல் கிடைத்திலது. ஒழிபியலும் கிடைத்திலது. எஞ்சிய மூன்றியல்களே கிடைத்துள. இதனை நோக்க ஒரு குறிப்பு வெளிப்படுகின்றது. இலக்கணமும், இலக்கண ஒழிபும் கூறிய பகுதிகள்

இல்லை. கோவைத்துறை கூறிய மூன்றியல்களும் உள. இதன் காவல், எடுத்துக்காட்டாக அமைந்த திருப்பதிக் கோவையின் காவலே அல்லது கொடையே என்பது விளங்கும்.

**திருப்பதி - அளவு**

திருப்பதி என்பது ஓரிடப் பெயராய் இருப்பினும், திருமால் கோயில் கொண்ட இடங்களையெல்லாம் குறிக்கும் பொதுப் பெயராய் வருகின்றது. அத்திகிரி என்பது முதலாக வைகுந்த விண்ணகர் ஈறாக 93 திருப்பதிகள் கோவையில் இடம் பெற்றுள்ளன. அதனாலேயே அது திருப்பதிக் கோவைப் பெயர் பெற்றது. இதில் 455 துறைகள் உள்ளன. அவற்றுக்குரிய பாடல்கள் 527 எல்லாமும் கட்டளைக் கலித்துறைகளே. இதனை இயற்றியவரும் திருக்குருகைப் பெருமாள் கவிராயரே என்பர்.

**பொருள்**

**“ காட்சி ஐயம் தெளிதல் தேரல்''**

எனக் கைக்கிளைத் துறை கூறப்படும். மாறனகப் பொருள்,

**“ காண்டல் சந்தயம் தெளிதல் கருத்துறலென்**
**றாண்டநால் வகைத்தே அழகுடைக் கைக்கிளை''**

என்பதுடன், இவற்றைத் தனித்தனி நூற்பாவானும் விளக்குகின்றது. ஐயத்திற்குரிய நூற்பா:

**“ எய்திய இருவருள் சிறந்த இறைவன்மேற்**
**றையுறல் என்ப அறிவுடை யோரே''**

என்பது.

**“ ஈன வரம்பரை யேயணு காஅரங் கேசற்கன்பாம்**
**வான வரம்பன் கொடியிட மோபொன்னி வாய்ந்தபுகழ்**
**தான வரம்பன் கொடியிட மோதமிழ் நாட்டுக்கொற்கை**
**மீன வரம்பொற் கொடியிட மோகொடி மேவிடமே''**

என்பது திருப்பதிக் கோவை எடுத்துக் காட்டுப்பாட்டு. மேலும் ஒரு பாடலும் இத்துறைக்குளது.

"வானவரம்பன் சேரன்; அவன் கொடி வில்; அவ்வில் லிடம் வானம்; ஆதலால் தெய்வ மகளோ"

"பொன்னி வரம்பன், சோழன்; அவன் கொடிபுலி; அப்புலி வாழிடம், மலை; ஆதலால் மலைமகளோ."

"மீனவர் அம்பொற்கொடி மீன்; அதன் வாழிடம் கடல்; ஆதலால் திருமகளோ".

" பரல்பரந்த சுரந்தணிவித்தல் "

என்னும் துறைக்கு (86) எடுத்துக்காட்டு:

**" கான்மல்கு கோதைக்கு வண்குரு கூரனன்**
**காவணமாம்**
**வான்மல்கு பொங்கர்த் திருப்புளி நீழலின் வாழியரோ**
**வேன்மல்கு வைந்நுதி வெண்பரல் யாவும்**
**வியன்பொருநைத்**
**தேன்மல்கு மல்லிகை மென்முகை ஆகுக சீறடிக்கே"**

சுரத்துச் சென்ற மகளுக்குக் கூரிய பரல்கள், அப்பொழுது மலர்வுள்ள மல்லிகை முகையாக இருக்கவேண்டுமாம்! பரிவால் உருகிப் பழிச்சுவது இது. இக்கோவைக்கும், நூற்பாவுக்கும் மூலமே உண்டு உரைவிளக்கம் இல்லை. இதன் முதற்பதிப்பு 1932 இல் தமிழ்ச் சங்க வழியாக வெளிவந்தது. பதிப்பாசிரியர் கி. இராமாநுசையங்கார்.

# 26. பாப்பாவினம்

பாவும் பாவினமும் பற்றிக் கூறும் நூல் 'பாப்பா வினம்' எனப்பட்டது. இது மாறன் பாப்பாவினம் எனவும் வழங்கும்.

## ஆசிரியர்

மாறனலங்காரம், மாறனகப் பொருள் ஆகியவற்றை இயற்றிய திருக்குருகைப் பெருமாள் கவிராயரே, காரி மாறராம் நம்மாழ்வாரைப் பாட்டுடைத் தலைவ ராகக் கொண்டு பாடிய நூலாகும். இதனைக் காரி இரத்தின கவிராயர் இயற்றிய தென்பாரும் உளர். ஆனால் முன்னவரே இயற்றினார் என்பது ஆய்வாளர்கள் முடிபு.

நூலாசிரியர், பாட்டுடைத் தலைவர் செய்திகளை மாறன் அலங்காரப் பகுதியில் காண்க.

## ஒரு குறிப்பு

ஆசிரியப்பாவின் நிறைவில், ''இனி, கோயிற் கலம் பகத்துள் கரைபொரு தொழுகும் காவிரியாறே என்னும் அகவல்போல இடை இடை தனிச்சொல் பெற்று முதலே அடி—ரு அந்தாதிப்பதாக ஓரகவல் பாட வேணும். இரண்டாவது இவ்விரண்டடியாய் ஏழும் எட்டுத் தான தானமாகி கூ—ஆந் தானம் ஆறடியாய் நேரிசையாசிரியப் பாவாய்ப் பாட வேணும். ஆசிரியப்பா முற்றும்''

என்று ஏட்டுப் பிரதியில் காணப்படுவது கொண்டு, ''பின்னும் வேண்டுவன கூட்டித் திருத்தி விரித்துச் செம்மை செய்து கொள்ளுமாறு முற்பட வரைந்த வரைவேயாய்ப் பின் அவ்வாறு செம்மை செய்யப்படாத நிலையில்'' உள்ளதால் ''தம் அந்திம தசையில் இந் நூலை இயற்றி இதனைச் செப்பஞ் செய்து முடிக்கு முன் காலகதி அடைந்து விட்டனரோ என்று சங்கித்தற்கும் இடனாகின்றது'' என்பார் பதிப்பாசிரியர் கி. இராமா நுசையங்கார்.

**எடுத்துக்காட்டு**

வெண்பா, வெண்பா இனம்; ஆசிரியப்பா, ஆசிரியப்பா வினம்; கலிப்பா, கலிப்பாவினம், வஞ்சிப்பா, வஞ்சிப்பா இனம்; மருட்பா — ஆகியவற்றுக்கு 135 எடுத்துக்காட்டுப் பாடல்கள் உள்ளன. பரிபாடல்கள் ஐந்தும் இதன் பிற் சேர்க்கையாய் அமைந்துள்ளன.

இலக்கியம் காட்டி இலக்கணம் கூறும் புதிய கல்வி முறைக்கு முன்னோடிபோல் அமைந்தது இப்பாப்பா வினம். இதன் இயலைப் பின்பற்றி, ஏறத்தாழ இதனை அடுத்த காலத்தே வெளிவந்ததே சிதம்பரச் செய்யுட் கோவையாகும்.

இதன் தெய்வ வணக்கம்:

**'' என்றும் திருமாற்கே யாளாவேன் எம்பெருமான்**
**என்றும் எனக்கே பிரானாவான் — என்றும்**
**பிறவாத பேராளன் பேரா யிரமும்**
**மறவாது வாழ்த்துக வாய் ''**

திருவள்ளுவனார் பாடிய குறட்பாவையும் யான் பாடியமையான் என் புன்னூலும் நூலாகிவிடும் என்னும் வகையில் இவர் அவையடக்கம் பாடுதல் நயமிக்கது.

எடுத்துக்காட்டுப் பாடலுக்குப் பின் இஃது இவ் வகைப்பா என்றும், இன்ன பகுதி இன்ன துறை இன்ன

அணி என்றும் பிறவாறும் கூறி இலக்கணந் தெளிவிக்கிறார்.

வெண்பா வகையுள் சவலை வெண்பாவென ஒன்றைக் குறிக்கும் இவர் ''இது சவலை வெண்பாட்டு என்னை?

'' நனியிரு குறளாய் நான்கடி யுடைத்தாய்த்
தனிவர லில்லது சவலைவெண் பாட்டே ''

என இக் காலத்துள்ளோர் பெயரிட்டு வழங்கும் வேறு பாடென உணர்க. அன்றியும் மூதுரையுள்ளும் 'அட்டாலும்...தரும்' என்பதூஉம் இப் பாவென உணர்க'' என்றுள்ளது (28).

சவலை வெண்பா இலக்கணம் இந்நூலாசிரியர் காலத்தே நூற்பாவுடன் கொள்ளப்படுவதாயிற்று என அறியலாம். இதனால் சிதம்பரச் செய்யுட் கோவையும் எடுத்துக்காட்டுத் தரலாயிற்று.

இராம காதையைச் சுருக்கித் தருகிறது ஒரு பாட்டு. அது, எண்சீர்க் கழிநெடிலடியான் வந்தது. அணி, வீரம் பற்றிய பெருமிதம்:

''தேனிலங்கும் பைந்தாம மாலை மார்பிற்
றெச ரதனன் மகவாகித் திண்கான் மேவி
வானிலங்கொள் ஏழுமரா மரமும் வாலி
மார்பகமும் இலங்கேசன் மவுலி பத்தும்
நானிலத்தன் றிழிதரவோர் வாளி தூவி
நன்னுதலா ளுடன்கூடி இளவல் என்போன்
தானிலங்கா புரம்புரப்பக் களித்த வென்றித்
தனுராமன் தனக்கடிமை தழைத்து ளாரே ''

அடிமறி மண்டில ஆசிரியப்பாவுக்கு இவர் தரும் எடுத்துக்காட்டுகளுள் ஒன்று:

**“ பதிகளின் அதிபதி திருமகள் பதியே**
**துதிகளின் அதிபதி தமிழ்மறைத் துதியே**
**மதிகளின் அதிபதி மாறனுண் மதியே**
**நதிகளின் அதிபதி வரசுர நதியே ”**

*திணை — பாடாண். துறை — கடவுள் வாழ்த்து. அலங்காரம்— சாரம்.*

*நூலும் எடுத்துக்காட்டும் தந்தவர் திருக்குருகைப் பெருமாள் கவிராயர் என்றும், இலக்கணமும் குறிப்பும் வரைந்தவர் காரி இரத்தினக் கவிராயரென்றும் கருதுவர்.*

*இவர்தம் மற்றை நூல்களுக்கு அரங்கேற்றக் காலம் குறிப்பிடப்பட்டுள்ளமைபோல் இதற்கு இல்லை.*

**பதிப்பு**

*பாப்பாவினம் 1932 இல் தமிழ்ச் சங்க வழியாக வெளி வந்தது. பதிப்பாசிரியர் கி. இராமாநுசையங்கார்.*

# 27. சிதம்பரச் செய்யுட்கோவை

பாண்டி நாட்டுப் பெரும்புலவர் குமரகுருபரரால் இயற்றப்பட்டது இக்கோவை. இக்கோவை மற்றைக் 'கோவை நூல்' போல்வது அன்று என்பதைச் 'செய்யுட் கோவை' என்னும் பெயர் விளக்கும். செய்யுள் வகை, அதன் இனவகை பற்றி எடுத்துக் காட்டாகச் சொல்லப் பட்ட நூல் இது. 'இலக்கியம்' எனத்தக்க பொருள் அமைதியுடைய இந்நூலின் உரை விளக்கம் இலக்கணச் சிறப்புடையது. இதனை இயற்றியவரும் நூலாசிரியரே.

## நூல் தோற்றம்

பாப்பாவினம் என்பது மாலியச் சமயம் சார்ந்தமை போல இது சிவனியச் சமயம் சார்ந்தது. யாப்பருங்கலம், யாப்பருங்கலக்காரிகை என்பவை அருகபரப் பொருள் அமைந்த எடுத்துக்காட்டுகளை யுடைமையால் தத்தம் சமயச் சார்புக்குத் தக எடுத்துக்காட்டுகளைத் தந்து நிறுவும் எண்ணத்தால் இத்தகு நூல்கள் தோற்றமுற்றன எனக் கொள்ளலாம்.

## வரலாறு

ஆசிரியர் குமரகுருபரர் திருவைகுண்டத்தில் பிறந்த வர். தந்தையார் சண்முக சிகாமணிக் கவிராயர். அன்னை யார் சிவகாம சுந்தரியார். பிறந்து ஐயாண்டளவும் பேசா திருந்து, செந்தில் முருகன் அருளால் பேசுந்திறத்தோடு பாடுந்திறமும் பெற்றுக் கந்தர் கலிவெண்பா முதல் சகல கலாவல்லி மாலை ஈறாகப் பல நூல்களை இயற்றியவர். காசி வேந்தனைக் கண்டு தம் திறத்தால் மடம் நிறுவி யவர். திருமலை நாயக்கர் ஆட்சிக்காலத்தில் மதுரைக்கு வந்து மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ், மதுரைக் கலம் பகம், நீதிநெறி விளக்கம் ஆகியன இயற்றியவர். இவர்

தம் குருவர் மாசிலாமணி தேசிகர். இவர் தருமபுரத் திருமட நான்காம் பட்டத்திலிருந்தவர். குமர குருபர ருக்குப் பின் ஆறாம் பட்டத்தில் இருந்த தில்லை நாயக சுவாமிகள் என்பார் திருப்பனந்தாள் காசி மடத்தை கி. பி. 1720 இல் நிறுவினார். இவற்றால் குமரகுருபரர் 17 ஆம் நூற்றாண்டினர் என்பது விளங்கும், இவர் சைவஞ் சார்ந்தவர் என்பது வெளிப்படை.

சிவபெருமானைப் பாட்டுடைத் தலைவராகக் கொண்டு இயற்றப்பட்ட இக்கோவை குறிப்பாகச் சிதம்பரரைச் சொல்லியும் விளித்தும் பாடுதலால் இப் பெயர் பெற்றது. சிதம்பர மும்மணிக் கோவை என்ப தொரு நூல் இவ்வாசிரியர் இயற்றியதும் எண்ணலாம். ''வாழ்த்துமின்தில்லை'' என்னும் நிறைவுச் செவியறி வுறூஉ மருட்பாவும் பிறவும் இதனை விளக்கும்

**நூற் செய்தி**

இக்கோவையில் வெண்பா விகற்பம், வெண்பாஇனம், ஆசிரியப்பா விகற்பம், ஆசிரியப்பா இனம், கலிப்பா விகற்பம், கலியினம், வஞ்சிப்பா விகற்பம், வஞ்சியினம், மருட்பா என்னும் ஒன்பது பகுப்புகளும் 84 எடுத்துக்காட்டு களும் உள.

**'' பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன்**
**றிறைஞ்சிடுக**
**ஆங்கொன்றைக் கண்ணியவர்''**

என்பது வெண்பா விகற்ப முதற்பாட்டு. இதற்குரிய குறிப்பு:

''இது சீர்முழுதும் எதுகை ஒன்றத் தொடுத்தமையால் தலையாகெதுகை. 'பூங்கொன்றைக் கண்ணியான்' எனவும், 'பொன்மன் றிறைஞ்சிடுக' எனவும் வெண்சீர் வெண்டளையும் இயற்சீர் வெண்டளையும் விரவி வருதலின் இஃது ஒழுகிசைச் செப்பலோசைத்து. இதனானே வெண்பா இரண்டடிச் சிறுமையுடைத் தென் பதூஉம் கொள்க. இதனுள் கண்ணியவர் என்னும் ஒரு

மொழியைக் 'கண்ணி' எனவும் 'அவர்' எனவும் வகையுளி செய்து சீர் கொள்ளப்படுதலின் இது 'மலர்' என்னும் வாய்பாட்டான் முடிந்த ஒரு விகற்பக்குறள் வெண்பா.''

இலக்கியங் கண்டதற்கு இலக்கணம் இயம்பல் என்பது போல, இலக்கியங்காட்டி இலக்கணம் விளக்கலாக இந் நூல் முழுதுற இயலுதல் புதியதோர் நூன்முறை உத்தி யாகக் கொள்ளலாம். இதற்குப் பிறநூல் எடுத்துக்காட்டு களினும் 'பாப்பாவினம்' நேரிடைச் சான்றாக இருந் திருக்கக் கூடும். குருபரரின் பிறந்தகமும், (திருவை குண்டமும்) திருக்குருகைப் பெருமாள் கவிராயர் பிறந் தகமும் (ஆழ்வார் திருநகரி) நெல்லை நாட்டில் அணித் தான ஊர்கள் என்பது அறியத்தக்கது.

## எடுத்துக்காட்டு

இச்சிதம்பரச் செய்யுட் கோவைக்கெனத் தனியே எடுத்துக்காட்டுப் பாடியதன்றித் தாம்பாடிய பிற நூலின் செய்யுளையும் எடுத்துக்காட்டுதல் 'நீரிற்குமிழி இளமை' என்னும் நீதிநெறி விளக்கப்பாடலால் அறியலாம் (9).

**'' பரசிருக்கும் தமிழ்மூவர் பாட்டிருக்கும் திருமன்றில் பரசொன்றேந்தி**
**அரசிருக்கும் பெருமானார்க் காட்செய்யார் என் செய்வார்**
**முரசிருக்கும் படைநமனார் முன்னாகு மந்நாளே''** (35).

என்னும் வெண்டுறையில் தமிழ் மூவர் பாட்டின் மேல் இவர்கொண்ட பற்றுமை புலப்படும்.

**'' அறிவினில் அறிபவர் அறிவதை அலதொரு**
**குறியினில் அறிவுறு குறியினை யலை''**

என்பன முதலாகவரும் அராகங்கள் நான்கும் இறைமையில் பிழிவுகள் (68)

## பதிப்பு

குமரகுருபரர் வாக்கு நயத்தை விரிக்க வேண்டுவ தில்லை. கற்றோர் நன்கு அறிவர். குமரகுருபரர் செய்யுள் திரட்டுத் தொகுதியொடு கூடியமைந்தது சிதம்பரச் செய்யுட்கோவை. கழக வழியாகவும் உ. வே. சா. வழியாகவும் 'திரட்டு' வெளிவந்துள்ளது.

# 28. பிரயோக விவேகம்

குருகூர் என்றும் குருகை என்றும் இலக்கியங்களில் சொல்லப்படும் ஊர் ஆழ்வார் திருநகரி. இவ்வூரினராகிய சுப்பிரமணிய தீட்சிதரால் இயற்றப்பட்ட நூல் பிரயோக விவேகம்.

**நூலும் உரையும்**

இதன் தற்சிறப்புப்பாயிரம் 'ஏர்கொண்ட சொற் பிரயோக விவேகம்' என்று சொல்கின்றது. 'வடமொழிப் பிரயோக விவேகத்திலும் சொல்லிலக்கணமல்லாது எழுத்திலக்கணம் கூறாமையின் சொற்பிரயோக விவேகம் என்றாம்' எனவரும் உரை விளக்கத்தால் நூலாசிரியரே உரையாசிரியரும் ஆவர் என்பது விளங்கும்.

இந்நூலாசிரியரைப் பற்றி இலக்கணக் கொத்து, "ஆழ்வார் திருநகரப்பதி வாழும் சுப்பிரமணிய, வேதியன் தமிழ்ப்பிரயோக விவேகம், உரைத்துரை எழுதினன்" எனக் கூறுதலால் இவரைப் பற்றிய செய்திகளும் இவரே உரை செய்தார் என்பதும் உறுதியாம்.

வடமொழியும் தமிழும் தனித்தனி மொழிகள் அல்ல; ஒருமொழி என்னும் மயக்கவுணர்வுடன், வடமொழியே தமிழ்மொழி மூலம் என்னும் மாறுபட்ட உணர்வும் கொண்டவர்கள் வாழ்ந்த காலத்தில் தோன்றிய நூல் களுள் இப்பிரயோக விவேகம் ஒன்று. இதன் முற்புகவு வீரசோழியம். தொடர்வரவு இலக்கணக் கொத்தும் பிறவும்.

**காலம்**

இவர் வேதியர் என்று சொல்லப்பட்டிருத்தலால் வேத மதத்தர் (வைதிகர்) என்க. இவர் காலத்து வாழ்ந்த பெரும்புலவர்கள் சுவாமிநாத தேசிகர், வைத்தியநாத தேசிகர் முதலியோர். காலம் 17ஆம் நூற்றாண்டு.

**பாயிரம்**

நூலின் நிறைவில் நூல் கேட்டவர், நூலின் அளவு ஆகியவை பற்றி இரண்டு வெண்பாக்கள் உள்ளன:

**' பேர்கொண்டு நின்றபிர யோகவிவேகத்தைச்
சீர்கொண்ட ராமபத்திர தீக்கிதன்தான்—நேர்கொண்டு
கேட்டான் இனிக்கண்ணாற் கேட்கும் பதஞ்சலிதான்
கேட்டாலென் கேளாக்கால் என்''**

**'' உம்பர்க் குரியபிர யோகவிவேகத்தை
ஐம்பத் தொருகவிதை யாலுரைத்தான் — செம்பொற்சீர்
மன்னு மதிற்குருகூர் வாழ்சுப் பிரமணியன்
என்னும் ஒருவே தியன்''**

காரக படலம், சமாச படலம், தத்தித படலம், திங்ஙுப் படலம் என நான்கு படலங்களையும் இவற்றுக்கு முறையே 17. 11, 6, 17 ஆக 51 காரிகைகளையும் கொண்டது இந்நூல்.

இராமபத்திர தீக்கிதர் தஞ்சை மராட்டிய மன்னன் சாகியால் ஆதரிக்கப்பட்டவர் என்றும், வடமொழிப் புலவர் என்றும் அறிய வருதலால் அம்மன்னரின் காலம் (கி.பி. 1684-1712) இவர் காலம் என உறுதி செய்யலாம். இதனால் சுப்பிரமணிய தீட்சிதர் காலமும் உறுதிப்படும்.

**வடமொழி-தமிழ்**

இவர் நூற்சூத்திரம் அன்றி உரைச் சூத்திரமும் இடையிடைச் செய்து வைத்தமையை, ''பிரதிக்கினை மேற்கோளெனப் பெயர் பெறும்'' இஃதுரைச் சூத்திரம். இவ்வாறு கவிதோறும் உரைக்கு முன்னாகப் பின்னாக உரைச் சூத்திரமும் செய்தாம். அதுகண்டு கொள்க.'' என்கிறார். (2).

மேலும் "பண்டு கற்றோர் முன்னூலுள் ஏகதேசம் வடமொழிக் கூறுபாடும் அது தற்சமம் தற்பவமாகப் பொதுவெழுத்தாய்த் திரிவதும் கூறினார். யாம் இந் நூலுட் சொற்களின் பெயரை ஏகதேசம் தமிழாகவும் பிராயிகந் தற்சமந் தற்பவமாகவும் கூறினாம்" என்கிறார்.

**இடுகுறி காரணம்**

தொல்காப்பியர் 'இடுகுறி' என்பதொன்றைக் குறித்திலர். அவர் கொள்கை எல்லாச் சொல்லும் பொருள் குறித்தனவே என்பதும், அப்பொருள் குறித்தல் நுணுகி நோக்குவார்க்குப் புலப்படும் என்பதுமாம். நன்னூலார் காரணப் பெயர், இடுகுறிப் பெயர் என வகுத்ததுடன் சிறப்பு, பொது எனவும் விரித்துக் கொண்டார். இவரோ தொல்காப்பியரையும் தம் கூட்டுக்கு வலிந்து இழுத்து மாட்டுகின்றார்.

தொல்காப்பியனாரும் நன்னூலாரும் "வடமொழி இலக்கணம் பெற்ற தற்சமம் தற்பவமாகத் தத்தம் நூலுள்ளே எழுத்திற்கும் சொல்லிற்கும் காரணக்குறி இடுகுறியாகிய யோகரூட நாமங்களைச் சிறுபான்மை கூறினார். அவ்வாறு சிறுபான்மை கூறாது யாம் இந் நூலுட் பெரும்பான்மையும் தற்சமம் தற்பவங்களாற் கூறினாம். இப்பெரும்பான்மையும் கூறியது யாது பற்றி எனின், **வடமொழிக்கும் தமிழ்மொழிக்கும் இலக்கணம் ஒன்று என்பது அறியாது சம்ஞாபேதத்தாலும் பாடை வேற்றுமையாலும் இகழ்ந்து வேறென்பாரை நோக்கி என்க.** இந்நூல் செய்ததற்கும் இதுவே பயன்" என்கிறார். "யாம் இந்நூலுட் கூறிய வடமொழிக் குறியெல்லாம் தமிழ் மொழிக்குமாம் என்க" என்று முத்தாய்ப்பு வைக்கிறார்.

**முந்து நூல்**

அகத்தியத்திற்கு முந்து நூல் பாணினி என்பதும், தொல்காப்பியத்திற்கு முந்து நூல் ஐந்திரம் என்பதும் இவர் கொள்கை. தொல்காப்பியச் சூத்திரவிருத்தியில்

சிவஞான முனிவர் இதனை மறுத்தார் என்பது அறியத் தக்கது.

**நூலியல்**

தாம் நூல் செய்து பதிகம் இயற்றி உரையும் எடுத்துக் காட்டும் கூறிய வழியை உரைக்கிறார்.

''வடநூலார் தாமே பதிகமும் உரையும் செய்வார். இந்நூலும் வடநூலைத் தற்பவமாகச் செய்தலான் யாமும் பதிகமும் உரையும் செய்து உதாரணமும் காட்டினாம். தண்டியாசிரியர் மூலோதாரணங் காட்டினாற்போல யாமும் உரையெழுதிய தல்லது மூலோதாரணமும் காட்டினாம். இனிச் சம்பந்தர் சடகோபர் முதலாயி னோரும் திவாகரரும் பதினெண் கீழ்க்கணக்குச் செய் தாரும் முன்னாகப் பின்னாகப் பதிகங் கூறுவது காண்க'' என்று தாம் முன்னும் பின்னும் பதிகம் கூறுவதற்கும் காரணம் இயைக்கிறார். வேற்றுமையைப் பற்றிக் கூறுவது காரகபடலம். தொகைச்சொல் பற்றிக் கூறுவது சமாச படலம். தத்திதாந்தச் சொற்களைப் பற்றிச் சொல்வது தத்தித படலம். வினைமுற்றுகளைப் பற்றிச் சொல்வது திங்குப் படலம்.

**தமிழ்**

வடமொழிக்கும் தென்மொழிக்கும் உள்ள வேறுபாடு களை அறியாரும் அல்லர் இவர்:

**'' சாற்றிய தெய்வப் புலவோர் மொழிக்கும் தமிழ்மொழிக்கும்**
**வேற்றுமை கூறில் திணைபால் உணர்த்தும் வினைவிகுதி**
**மாற்றரும் தெய்வ மொழிக்கில்லை பேர்க்கெழு வாய்உருபும்**
**தேற்றிய லிங்கம் ஒருமூன்றும் இல்லை செழுந்தமிழ்க்கே''**

என்று கூறியும் இலக்கணம் ஒன்றென்று நாட்டவே

முழுதுற முயல்கிறார். திரமிளத்தில் இருந்து 'தமிழ்' வந்ததென்று துணிகிறார்.

## சில குறிப்புகள்

வாக்கிய பதீயம், அரிபீடிகை, ஏலாராசீயம் முதலாயின வழங்குங் காலத்து அவ்வுரை நோக்கிச் சேனாவரையர் முதலாயினார் தொற்காப்பியத்திற்குரையெழுதினார் என்கிறார் (திங்ங. 11).

மியா, நுந்தை என்பன ஒரு செய்யுட்கும் பயன்படாது இக்காலத்து நின்றாற்போல அஇ, அஉ என்பனவும் (ஐ, ஔ என ஒலிப்பவை) இக்காலத்துப் பயன்படாமலே நின்றன எனினும் அமையும் என்கிறார்.

வடமொழியார் சையோகம் ஒருமொழியிலும் இருமொழியிலும் கொள்வர். அதனைக் கொள்ளாத நச்சினார்க்கினியரை ''அக்கருத்தறியாத நச்சினார்க்கினியர்'' என மறுக்கிறார் (5).

இத்தகையர், வடமொழி இலக்கணத்தைத் தமிழறிந்தார் கற்பதற்குத் தக்க வகையில் ஆங்கிலம் முதலிய பிறமொழி கற்பதற்கு நூல் செய்வார்போல நூல் செய்திருப்பின் இருமொழித் தொண்டுமாகியிருக்கும். மொழி வெறுப்பும், மொழி எதிர்ப்பும் ஏற்படுதற்கு இடனாகியிராது. இதற்குரிய அடிப்படைக் குறையை இன்றும் மொழிவல்லார் எண்ணாராய்ப் பழவழியைப் பார்ப்பதாலேயே, மொழி எதிரீட்டை இருபாலும் பெருக்கி வளர்ச்சிப் பணிகளைத் தடுத்து வன்பகைக்கு ஏவுகின்றனராம். இலக்கணக் கொத்துடையார் இவர்க்குப் பின்னவர் எனினும், இச்செயலால் முன்னவரும் அவர் ஆகிவிடுதல் மேலேயறியலாம்.

## பதிப்பு

பிரயோக விவேகம் ஆறுமுக நாவலரால் 1882இல் பதிப்பிக்கப்பட்டது. அதற்கு மறுபதிப்பு 1884.

# 29. இலக்கண விளக்கம்

திருவாரூர் வைத்தியநாத தேசிகர் என்பாரால் இயற்றப்பட்ட இலக்கண நூல் இது. இதில் ஐந்திலக்கணங்களும் கூறப்பட்டுள. பின்னாளில் தனி நூலாகச் செய்யப் பட்ட பாட்டியலும் இதன்கண் இடம் பெற்றுளது. இதன் பரப்பையும், இலக்கண முழுமையையும் அறிந்து 'குட்டித் தொல்காப்பியம்' என்று வழங்குவாராயினர்.

## வரலாறு

வைத்தியநாத தேசிகர் திருவாரூரினர் என்பது பெயர்க்கு முன்னுள்ள அடையானே விளங்கும். இவர்தம் தந்தையார் வன்மீகநாத தேசிகர் என்பார். தம் தந்தையாரிடமே முதற்கண் கல்வி கற்றுப் பின்னர்த் தம் தந்தையாரின் மாணவராகிய அகோரமுனிவர் என்பாரிடத்துக் கற்று இருமொழிப் புலமையும் மெய்ப்பொருள் திறமும் மேம்பட்டு விளங்கினார். தேசிகர் தம் தவநிலை, ஒகநெறி என்பவற்றைக் கண்டு வியந்த முனிவர், தாமே அவர்க்கு மாணவராகி அமைந்தார். படிக்காசுப்புலவரும் இவர் மாணவர் என்பர்.

உரிய காலத்தில் வைத்தியநாதருக்குத் திருமணம் நிகழ்ந்தது. துணைவியார் தங்கம் என்பார். குடிநலன் காக்கப் பொருள் தேடும் நோக்கில் அந்நாள் ஆட்சியில் இருந்த திருமலை மன்னரின் செயலராக விளங்கிய கயத் தாற்றுத் திருவேங்கடநாத ஐயர் என்பாரை அடுத்து,

அவர்தம் மக்களுக்குக் கற்பிக்கும் கடனை மேற்கொண்டார். இம் மேற்கோளின் பயனாகத் தொல்காப்பியத்திற்கு நன்னூல் முரணும் இடங்கள் புலப்பட்டன. அவற்றைத் தக்கவாறு திருத்திக் கொண்டார். மயிலைநாதர் உரையிலும் முரண்பட்டதென அறிந்த இடங்களைத் திருத்திக் கொண்டார். எழுத்து சொல் இலக்கணங்ளைத் தாம் கருதுமாறு அமைத்துக் கொண்டபின் பொருளிலக்கணத்தையும் இணைத்தார். தாமே நூலுக்கு உரையும் வரைந்தார்.

**நூல்கள்**

மயிலமலை முருகன் மேல் மயிலம் பிள்ளைத்தமிழும், சிவஞான பாலய சுவாமிகள் மேல் பாசவதைப் பரணியும் இயற்றினார். மேலும் திருவாரூர்ப் பன்மணிமாலை, நல்லூர்ப் புராணம், திருவாட்போக்கிப் புராணம், கமலாலய அம்மை பிள்ளைத்தமிழ் என்பனவும் பாடினார். இவர்தம் பெருமை,

> **'' ஐம்பதின்மர் சங்கத்தார் ஆகிவிடா ரோநாற்பத்**
> **தொன்பதின்மர் என்றே உரைப்பரோ—இம்பர்புகழ்**
> **வன்மீக நாதனருள் வைத்தியநா தன்புடவி**
> **தன்மீதங் நாள்சரித்தக் கால்''**

என்னும் அந்தகக்கவி வீரராகவர் வெண்பாவால் விளங்கும்.

**மக்கள்**

சதாசிவம் தியாகராசன் சிதம்பரநாதன் வடுகநாதன் தன்மீக நாதன் என மைந்தர் ஐவர் பிறந்தனர். தேசிகரின் முன்னோர்கள் புலமைச் செல்வர்களாகத் திகழ்ந்தமை போலவே பின்னோர்களும் விளங்கினர் என்பது அறிய வருகின்றது.

இவர்தம் தந்தையார் ஆகிய வன்மீக நாத தேசிகர் தம் பாடு திறத்தால் பரிசாகப் பெற்ற சூனாம்பேட்டைக்

கொடை நிலமும் உப்பளமும் இந்நாளிலும் இவர்தம் வழியினரிடமே உள்ளது என்று இலக்கண விளக்கப் பதிப்பாசிரியர் சி.வை. தாமோதரனார் தம் பதிப்புரையில் வரைகின்றார்.

இவர்தம் மைந்தர் சதாசிவ நாவலரைக் காணுதற்காகச் செம்மற்பட்டிக் காடு வழியே வந்த படிக்காசுப் புலவர், அச் சதாசிவ தேசிகரிடம் பயிலும் மாணவர்கள் தூதுளங்காய் பறித்துக் கொண்டே காரிகைப் பாடல்களை ஒப்பித்துக் கொண்டிருத்தலை அறிந்து வியந்தனராய்,

**''கூடுஞ் சபையிற் கவிவா ரணங்களைக் கோளரிபோற்**
**சாடுஞ் சதாசிவ சற்குரு வேமுன்னுன் றந்தைதம்மாற்**
**பாடும் புலவர்கள் ஆனோம்இன் றிச்செம்மற்**
**பட்டியெங்கும்**
**காடும் செடியுமென் னோதமிழ்க் காரிகை கற்றதுவே''**

என்று பாராட்டினார்.

இவ்வாறே இவர்தம் மக்களும் மக்களின் மக்களும் பாவன்மையும் நாவன்மையும் மிக்கவராகப் பல்வேறு பரிசுகளும் நிலக்கொடைகளும் பெற்றுள்ளனர். பல்வேறு இலக்கியங்களையும் படைத்துள்ளனர். ஆதலால் வழிவழியாகத் தமிழ் வளர்த்தும் காத்தும் வந்த குடும்பம் வைத்தியநாத தேசிகர் குடும்பம் என்பது விளங்கும்.

**ஐந்திலக்கணம்**

இவர் காலத்திற்கு முற்பட்டதாம் நூல்கள் ஓரிலக்கணமும் ஈரிலக்கணமும் உடையனவாகவும் இருந்தன. ஐந்திலக்கணமுடைய வீரசோழியம் தமிழ்நெறிக்கு மாறுபட்டுச் சென்றது. 'பிரயோக விவேகம்' இன்னும் அப்பாற் சென்றது. உரைகளும் முரணியும் மயக்கியும் அமைந்தன. இவற்றையெல்லாம் எண்ணிய பட்டறிவாலும், பாடஞ்சொன்ன முறையாலும் முற்றிலும் புது

நூல் செய்யாமல், முற்றிலும் பழைமையையே கொள்ளாமல் ஓராற்றான் ஐந்திலக்கணமும் ஒருங்கு கற்கும் ஒரு நூலைப் படைத்தார் எனல் தக்கதாம்.

இனி இலக்கண விளக்கத்தின் பாட்டியலை இவர்தம் மைந்தர் தியாகராச தேசிகர் பாடினார் என்பர். அக் குறிப்பு பாட்டியல் வழியால் அறியக் கூடியதாகவே உள்ளது. சொல்லணி பற்றிய சில நூற்பாக்களைத் தேசிகரின் மற்றொரு மைந்தர் சதாசிவ நாவலர் இயற்றினார் என்பர். அக்கூற்றுக்குத் தக்க சான்றில்லை என்று மறுப்பர்.

### பாயிரம்

இலக்கண விளக்கத்திற்குச் சிறப்புப் பாயிரம் செய்தவர் நூலாசிரியர் மகனாரும் மாணவரும் ஆகிய சதாசிவ நாவலர் ஆவர். அவர் திருவேங்கடநாதன் வேண்டிக் கொண்டவாறு,

**''முன்னோர் நூலின் முடிவு நோக்கிச்**
**சொல்லும் பொருளும் ஒல்வன தழீஇப்**
**பல்சுவைக் கரும்பின் ஒருவட் டேய்ப்ப**
**இலக்கண விளக்கம் என்றொரு பெயர்நிறீஇப்**
**புலப்படுத் தியலுறப் பொருள்விரித் துரைத்தனன்''**

என்கிறார்.

### நூல்

இந்நூலின் முதலாவதாம் எழுத்ததிகாரம் எழுத்தியல், பதவியல், உயிரீற்றுப் புணரியல், மெய்யீற்றுப் புணரியல், உருபு புணரியல் என ஐந்தியல்களையுடையது. இவ்வதிகாரத்தின் மொத்த நூற்பாக்கள் 158.

சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், இடைச்சொல்லியல், உரிச்சொல்லியல், பொதுவியல் என்னும் ஐந்தியல்களையுடையது. இவ்வதிகாரத்தின் மொத்த நூற்பாக்கள் 214.

பொருளதிகாரம் அகத்திணையியல், புறத்திணையியல், அணியியல், செய்யுளியல், பாட்டியல் என்னும் ஐந்தியல்களையுடையது, இவ்வதிகாரத்தின் மொத்த நூற்பாக்கள் 569. ஆக மொத்த நூற்பாக்கள் 941.

**பாடம்**

**" முன்னோர் மொழிபொருளே யன்றி அவர்மொழியும்
பொன்னேபோல் போற்றுவம் "**

என்பதொரு நெறி பண்டு தொட்டே உண்டாயிற்று. அதன் விளைவு இத்துணையாம் என்று அந்நெறியை உண்டாக்கியவரோ, நேர்ந்தவரோ எண்ணியும் இரார். எடுத்துக்கொள்ளப்பட்ட நூற்பாக்கள் மிகையாகவும், புதிதாகப் படைத்துக் கொண்டவை குறைந்தவையாகவும் அமைந்துவிட்ட நூல் இலக்கண விளக்கம். பாடங்களைத் திருத்தியும் புகுத்தியும் திரித்தும் பிறர் நூற்பாக்களைப் பயன் கொள்வது நூன் முறை யன்றாம்.

**நடைநிலை**

தொல்காப்பியனார் நடை, இறையனார் களவியலார் நடை, நன்னூலார் நடை, யாப்பருங்கலத்தார் நடை, புறப்பொருள் வெண்பாமாலையார் நடை, நம்பியகப் பொருளார் நடை, தண்டியலங்காரத்தார் நடை இவற்றுள் அமைந்த ஒரே ஓர் ஒருமைப்பாடு நூற்பா — அகவல் நூற்பா—நடை என்பதே. ஆனால் ஒவ்வொருவர் செறிவும், நெகிழ்வும், ஆட்சியும் அமைப்பும் நேர்ச்சியும் நிலையும் வேறுபட்டவை என்பதை எவரும் வெளிப்பட அறிவர். ஆகவும், பகுதிதோறும் ஒவ்வொரு நூலை அள்ளிக்கொண்டு வைத்தலால் அந்நடை வேற்றுமைகள் நூனடைக்குரிய ஒருமையை ஒழிப்பன என்பதைத் தெளியலாம். பெரிதும் பன்னிலை நடையவாம் தொகுப்பாக நூல் கருதப்படுமே அன்றி ஆக்க நூலாகக் கொள்ளப் படாது.

பழையன கழிதல் புதுவன புகுதல் வழுவல என்பது மெய்ம்மை. அதற்காகப் பழையனவாம் நூல்களைக் காலந்தோறும் திருத்தியும் மாற்றியும் சேர்த்தும் விலக்கியும் படைத்தலை நோக்காகக் கொண்டுவிட்டால் காலங்காட்டும் கண்ணாடியாம் நூலின் தகவு இன்றாய் விடும் என்க.

ஒருக்கால், இலக்கண விளக்க ஆசிரியர் கற்பிக்கும் நோக்கில், பன்னூற் பொருளும் இந்நூற்றொகுப்பில் காணுமாறு செய்தற்குப் பேருதவியாக இருந்திருக்கும் எனலாம். பிற காரணம் ஏதேனும் இருக்குமாயினும் இலக்கண விளக்கச் சூறாவளி கிளம்புதற்கு இதுவும் பெரியதோர் காரணமாக இருந்திருக்கக் கூடும்.

கடந்து போனவை பற்றிய இவ் வாய்வால் பயனென்னை எனின், எதிர்வரும் நூல் செய்வார்க்கு இத்தகும் ஆய்வால் பயனுண்டாம் என்பதே என்க.

**நூற்பா அளவு**

எழுத்ததிகாரத்திலுள்ள மொத்த நூற்பாக்கள் 158 இல் இவர் நூற்பா 43. சொல்லதிகாரத்துள்ள மொத்த நூற்பாக்கள் 214 இல் இவர் நூற்பா 41. மற்றையவை தொல்காப்பியமும் நன்னூலும் சார்ந்தவை.

**‘‘பகாஅப் பதம்பகாஅப் பண்பிற் பயின்று**
**பெயர்வினை யிடையுரி எனநால் வகைத்தே’’**

(எழுத். 40)

**‘‘பகுபதம் பகுக்கும் பண்பிற் றாகி**
**வினையே வினைப்பெயர் எனவிரு பாற்றே’’**

(எழுத். 41)

இவை இவர்தம் நூற்பாக்களுள் இரண்டு.

## வேறுபாடு

சார்பெழுத்து மூன்று என்றார் தொல்காப்பியர். நன்னூலார் பத்து என்றார். இவர் ஒன்பது என்கிறார் (எழுத். 5). இவர்தம் உரையியல் அறிதற்கு அப்பகுதி விளக்கம் வருமாறு:

''எழுத்து எனத் தொகையால் ஒன்றும், முதல் எழுத்து சார்பெழுத்து என வகையான் இரண்டும் அவ்விரண்டன் பகுதியும் கூட்ட விரியான் தமிழ் எழுத்து இருநூற்று எழுபதுமாம் என உய்த்துணர்க.

''மூன்று சார்பெழுத்து என்ற ஆசிரியர் தொல்காப்பியனாரும் ஏனைய ஆறனையும் பின்னர் ஒருவாற்றான் தழுவுதலானும் மூன்றாவது ஒரு பகுதி இன்று ஆதலானும் முதல் எழுத்தாம் தன்மை இவற்றிற்கு இன்மையானும் சார்பில் தோன்றுதலானும் இவ்வாறனையும் அவற்றோடு தலைப்பெய்து ஒன்பதும் சார்பின் பால என்றார் **இவ்வாசிரியர்** என்பது.

''அற்றேல் ஆசிரியர் செய்யுளியலுள் கூறிய ஒற்றளபெடையை இவர் ஈண்டுக் கூறியது என்னை எனின், அவர் எதிரது போற்றி ஐகாரக் குறுக்கம் முதலியவற்றை எழுத்தோத்தினுள் உரைத்தாங்கு உரைத்ததென்க.

''ஆய்தக்குறுக்கம் ஒன்றுளது என்றும் அதனொடு கூடச் சார்பெழுத்துப் பத்தாம் என்றும் அதன் விரித்தொகை முந்நூற்று அறுபத்தொன்பதாம் என்றும் கூறுவாரும் உளராலோ எனின்'' என்று காரணம் காட்டி மறுக்கிறார்.

இதில் சார்பின்பால என்றார் **இவ்வாசிரியர்** என்பது போல உரையில் பல இடங்களில் வருதலால் இவர் மகனார் உரை வரைந்திருப்பாரோ என்றே தோன்று;

கிறது. தந்தையார் உரையை அவரிடமே பாடம் கேட்டு அதனை அவர் வரைந்தார் ஆகலாம். உரை கேட்டிருந்து வரைதலையும் அவருரையாகக் கூறும் ஒரு வழக்குண்மை இறையனார் களவியல் உரையால் அறிய வருவதுதானே. அவ்வாறாயின் நூலுக்குப் பாயிரம் செய்த சதாசிவ நாவலரே உரை வரைந்தவர் ஆகலாம்.

## பதிப்பு

இதன் பதிப்பு தாமோதரனாரால் விரோதி யாண்டு (1889) வெளிவந்தது. பின்னர் ஆய்வுரை குறிப்புரைகளுடன் கழகப் பதிப்பும், பலதிற விளக்கம், ஒப்பீடு, இணைப்பு இன்னவற்றுடன் தஞ்சை சரசுவதிமால் பதிப்பாகவும் வெளிவந்தது. அதன் பதிப்பாசிரியர் தி. வே. கோபாலன் ஆவர்.

# 30. இலக்கண விளக்கச் சூறாவளி

இலக்கண விளக்கம் என்னும் விளக்கைச் சுழற்றி அணைக்க வந்த சூறைக்காற்று (சூறாவளி)ப் போன்றது என்னும் பொருளில் கிளர்ந்த நூல் இது. இதனை இயற்றியவர் இருமொழிக் கடலும் நிலைகண்டுணர்ந்தவர் எனப்படும் சிவஞான முனிவரர். இவர்தம் வரலாறு காலம் முதலியவை தொல்காப்பியப் பாயிரவிருத்தியில் உரைக்கப்பட்டதே. இவர் காலம் 18 ஆம் நூற்றாண்டு.

**கண்டனம்**

இலக்கண விளக்கத்திற் கண்ட குறைகளைக் குறித்து எழுதிக் கண்டிக்கும் கண்டன நூலாகவே இந்நூல் வெளிப்பட்டது. இல்லாக்கால், ஒரோ ஒரு நலங்குறித்தேனும் பாராட்டியிருக்கக்கூடுமே! அதனால் போலும் இதனை 'அநியாய கண்டனம்' என்கிறார் சி. வை. தாமோதரனார் (இ. வி.).

**மறுப்புகள்**

எழுத்ததிகாரம் சொல்லதிகாரம் என இரண்டதிகாரங்களை எடுத்துக் கொண்ட ஆய்வு இது.

பாயிரத்தில் ஒன்றும், எழுத்ததிகாரத்தில் 42-உம், சொல்லதிகாரத்தில் 40-உம் ஆக 83 மறுப்புகள் எழுதியுள்ளார். மறுப்பின் உள்மறுப்புகளும் உண்டு.

**'' மலைமகள் ஒருபான் மணந்துல களித்த**
**தலைவனை வணங்கிச் சாற்றுவன் எழுத்தே''**

என்பது எழுத்ததிகாரத் தொடக்க நூற்பா. இதில் 'மலைமகள்' வெளிப்படையாக விளங்கும் சொல். இதனை, ''மலைமகள் என்பது மலையுமகள் எனவும்

அமங்கலப் பொருள் தந்து'' நிற்பதாகக் கூறுகிறார். நின்று நிலவ வேண்டும் நூல், நின்று நிலவாது இறுதல் வேண்டி எனப்பொருள் தருதலை விளக்குகிறார்.

''உறுபொருள் முதலிய எல்லாவற்றுக்கும் வேந்தனை உல்கு பொருட்குரிய வேந்தன் என்றல், அவன் இறைமைக்கு ஏலாதவாறுபோல ஐந்தொழிற்கும் உரிய தலைவனை உலகளித்த தலைவன் என்பது தலையன்மையில் தலைவன் என்னும் பெயர்க்கு ஏலாமையின் உலகளித்தவன் என்பதும்...வணங்குதல் சிறப்பு வினையாவதல்லது பொதுவினையாகாமையின் வணங்கி என்பதும் அவ்வப் பயன் குறித்து வாராமை அறிக.

இவ்வாறு மேலும் சொற்றொறுமுள்ள குற்றங்களைக் கூறின் விரியுமென்றொழிக'' (1).

''எண்ணுதற்கும் பெயர் கருவியாகலின் அதனை முற்கூறாதது முறையன்று'' (2).

''ஆசிரியர் தொல்காப்பியனார் சார்பெழுத்து மூன்றே என வரையறுத்திருப்பவும் தாம் அவரினும் நுண்ணுணர்வுடையார் போன்று நன்னூலார் கூறிய சொற்பற்றிச் சில முதலெழுத்துக்களையும் அம்மூன்றனோடு கூட்டிச் சார்பெழுத்தெனக் கொண்டார். அது பொருந்தாமை விருத்தியில் விரித்துக் காட்டினாம்; ஆண்டுக் காண்க'' (5).

''நன்னூலார் பதவியல் கூறியதற்கு முதனூல் வடநூலாகலின், அது தோன்ற மொழியியல் என்னாது பதவியலென வடசொல்லான் அதற்குப் பெயரிட்டு, அவ்வோத்துள் வடவெழுத்துத் தமிழில் வருமாறு கூறினார். இவர் தமிழ்மொழி மாத்திரைக்கே இலக்கணம் கூறுதுமெனப் புகுந்தமையால் பதவியலென வடமொழியாற் குறியிடுதல் பழுதாம் என்க''.

''இன்னும் இவ்வியல் முழுநினும் இவர் கூறியவற்றுட் குற்றங்களை விரிக்கப் புகின் **விளையாட்டு மகளிர் அட்ட மணற் சோற்றிற் கல்லாராயப் புகுதலோடு ஒக்குமென்றொழிக''** என்கிறார்.

இலக்கண விளக்கப் பதிப்பாசிரியர் சி. வை. தாமோதரனார் இது குறித்தெழுதுகிறார்:

''மலைமகள் என்பது மலைக்கு மகள் எனப்பொருள் தருமாயின், பூமலி (நன்னூலார் கொள்வது) என்பது இலை நிறைந்த என்றும் இடமகன்ற என்றும் பொருள் தர இடமில்லையா?

''நீடாழியுலகம் (வில்லியார்) என்பது நீள்தாழி உலகம் எனக் குற்றப்படாதா?

''மலைக்கு மகள்'' என்று மறை ஞானசம்பந்த நாயனார் எடுத்தாண்ட மங்கல மொழியை அமங்கலப் படுத்துதல் தன் தாயை வேசி என்று ஏசுதல் போலும்.

''உலகளித்த தலைவன் என்றது குற்றம் என்றார். எழுத்ததிகாரத்தில் 'உலகளித்த தலைவன்' எனவும், சொல்லதிகாரத்தில் 'உலகு புரந்தருளும் அமைவன்' எனவும், பொருளதிகாரத்தில் 'உலகிளைப் பொழிக்கும் இமையவன்' எனவும் ஆசிரியர் இறைவன் முத்தொழிலும் கூறிய புகுந்தாராகலின் ஈண்டுப்பட்ட குற்றமுண்டோ? ஆன்றோர் ஆங்காங்குக் கூறிய கடவுள் வணக்கத்திற் கடவுளின் தலைமையனைத்தும் ஒருங்கு சொல்லாது இரண்டொரு குணமாத்திரையே விதந்து தலைமை கூறுவது பெருவழக்கேயாம். முனிவரர் இஃதுணராத வரா? இதனால் 'குற்றமே தெரிவார் குறுமாமுனி சொற்ற பாவினும் ஓர் குறை சொல்லுவர்' என்பதற்குத் தம்மை இலக்கியமாக்கினாரன்றோ!

''எண்பெயர் முறை பிறப்பு...(இதில்) மூன்று குற்ற மேற்றினார். இஃது இலக்கண விளக்கச் சூறாவளியன்று நன்னூற் கருப்பைப் படையோடு சார்தற் பாலதென்று விடுக்க.

''சிவஞான முனிவரர் தெரித்த குற்றங்களின் இலக்ஷணம் எத்தன்மைய என்பதற்கு மேலே காட்டிய ஐந்து உதாரணமும் போதுமாதலின் இவ்வளவில் நிறுத் துதும்'' என்கிறார்.

சிவஞான முனிவரர் திறத்தை உணர்ந்து கூறுகிறார் சி. வை. தா: ''அவரது பேரறிவு இமயமலை ஒப்பது. எளியேன் சிற்றறிவு அதன்முன் ஒரு பூ தூளி போல்வது. அன்னோர் தப்பை ஒப்பென்று தாபிக்கவும், ஒப்பைத் தப்பென்று வாதிக்கவும் வல்லர். அஃது அவர் காஞ்சி புரத்து வைஷ்ணவ வித்துவான்கள் கொண்ட இறுமாப்பை ஒழித்தற் பொருட்டு, அவர்கள் தலைமேற் கொண்ட இராமாயணத்து நாந்திச் செய்யுளை முதலிற் பங்கப் படுத்திப் பின்னர் அதனையே அவர்கள் தலை வணங்கித் தம்பிழையைப் பொருத்தருள்க என்று வேண்டியபொழுது சரியென்று நாட்டியதனான் விளங்கும்'' என்கிறார். இவர் கூறியது நூலுருவுற்றது. அது இராமாயண சக்கோத்ர விருத்தி என்பது. இவர் பொருள் கூறிய நாந்திச்செய்யுள் ''நாடிய பொருள் கைகூடும்'' என்பது.

## மறுப்புக்கு மறுப்பு

இவர்தம் தொல்காப்பியச் சூத்திர விருத்தியில் சில வற்றைக் கண்டித்து அரசஞ் சண்முகனார் தம் பாயிர விருத்தியில் எழுதினார். இவர்தம் சூறாவளியை மறுத்து இலக்கண விளக்கப் பதிப்புரையில் எழுதினார் சி. வை. தாமோதரனார். கலித்தொகைப் பதிப்பிலும் இதனைக் கருதினார்.

> ''சூறாவளி மாறாய் மோதி என்? சூத்திர விருத்தி வான் ஆர்த் ததிர்த் திடித்தென்? கன்ன துரோண சயித்திரதர் என்ன துரோகம் இயைத்திடினும் தேரொன்று கிடையாத குறையன்றோ களத்தவிந் தான் சிறுவன்? அச்சு வாகனங் கிடையாத குறை யன்றோ இலக்கண விளக்கம் அடங்கியது'',

என்று குறித்திருக்கிறார். இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு ஒன்றும் சபாபதி நாவலரால் வரையப்பட்டது! கண்டனமும் மறுப்பும் களித்தாடிய காலமது.

## பதிப்பு

இலக்கண விளக்கச் சூறாவளி ஆறுமுகநாவலரால் வெளியிடப்பட்டது.

# 31. இலக்கணக் கொத்து

## ஆசிரியர்

சுவாமிநாத தேசிகர் என்பார் இயற்றிய நூல் இது. இவர் பாண்டி நாட்டினர். இளமையிலே திருவாவடு துறைத் திருமடம் சார்ந்தார். திருநெல்வேலியைச் சார்ந்த பெரும்புலவரும் தாண்டவமூர்த்தி என்பார் மைந்தரும் நன்னூற்கு உரைகண்ட சங்கர நமச்சிவா யருக்கு ஆசிரியரும் ஆகிய மயிலேறும் பெருமாள் என்ப வரிடம் பன்னீராண்டுகள் தமிழ் பயின்றார். செப்பறைப் பதியினராகிய சிவச் செல்வர் கனகசபாபதி என்பாரிடம் வடமொழி கற்றார். திருவாவடுதுறையில் தீக்கை பெற்றுப் பொருள் நூற் பயிற்சியிற் சிறந்தார். பின்னர் ஆசாரிய நிலைபெற்றுத் திருநெல்வேலி ஈசான மடத்தில் இருந்தார். அதனால் இவர் **ஈசான தேசிகர்** எனவும் வழங்கப்படுவார்.

இவர் காலம் 300 ஆண்டுகளுக்கு முற்பட்டதாகலின் 17 ஆம் நூற்றாண்டு என்க. இவர் இந்நூலையன்றித் தசகாரியம் முதலிய நூல்களும் செய்துள்ளார்.

## வரலாறு

இவர்தம் புலமைச் சிறப்பை விளக்குவதுபோல் ஒரு நிகழ்ச்சி சொல்லப்படுகிறது: இலக்கண விளக்கம்

இயற்றிய வைத்தியநாத தேசிகர் திருவாவடுதுறைக்கு வந்து திருமடத் தலைவரோடு பந்தியில் இருந்தார். மற்றையோரும் முதுமை இளமை முறைமைப்படி பந்தியில் இருந்தனர் அந்நிலையில் கடைசியில் இருந்தவர் சுவாமிநாத தேசிகர்.

வழிவந்த களைப்பால் வைத்தியநாத தேசிகர் நன்கு உண்ணாதிருத்தலைக் கண்ட திருமடத் தலைவர் 'வந்த விளைப்பால் ஊண் செவ்வையாகச் செய்தற்கு இசையவில்லையோ?' என வினவ, தேசிகர் 'வந்த விளைப்பு' என்னும் தொடர்மொழிக்கு இலக்கணம் கேட்கத் தொடங்கினார். திருமடத் தலைவர் பந்தியின் கடைசியில் இருந்த சுவாமிநாத தேசிகரை நோக்கத் தேசிகரை நோக்கி இலக்கணங்கள் யாவும் விளக்கினார். சிலபல வினாக்களும் தொடுத்தார். அதைக்கேட்ட தேசிகர் ''தொல்காப்பிய முதலிய நூல்களை எழுத்தெண்ணிப் படித்த சுவாமிநாத மூர்த்தியா! தேவர் இவ்விடத்தில் வந்திருப்பது எனக்குத் தெரியாது'' என்றார் என்பது அச்செய்தி.

இத்தேசிகர் நுண்மாண் நுழை புலத்தர்; பாடங் கேட்டல், போற்றல், தொகுத்து வைத்தல், வருவித்தல், பொருத்திக் காட்டல், நிறுவுதல் ஆகிய இலக்கணக் கூறுகள் அனைத்தும் இனிதுற வாய்க்கப் பெற்றவர். நன்றி மீக்கூர்ந்தவர்; பணிவின் தலைவர் இத்தகைய ஆற்றல் தமிழ் நலத்திற்கும் ஆகாமல், தமக்கும் நிலைபேறாம் புலமைச் சிறப்பைத் தாராமல் போயிற்றே என்பதை இலக்கணக் கொத்தினை நேரிய உணர்வுடன் கற்பார் எவரும் கருதுவர்!

## பாயிரம்

இலக்கணக் கொத்தின் சிறப்புப் பாயிரம் ஒரு நெடிய நேரிசை ஆசிரியப்பா. 31 அடிகளையுடையது.

பாயிரம் மூத்த பிள்ளையார் வணக்கம் (1) முக்கணான் வணக்கம், வேலன் வணக்கம் (2), திருவாவடு துறைத் திருமடத் தலைவரும் சமய குருவரும் ஆகிய அம்பலவாண தேசிகர் வணக்கம் (3) வடமொழியாசிரியர் வணக்கம் (4), தமிழாசிரியர் வணக்கம் (5), அவையடக்கம் (6), நூல் பார்த்தற்குக் கருவி (7-9), நூலுணர்த்து வோர்க்குக் கருவி (10), நூல் உணர்வோர்க்குக் கருவி (11), நூலியலும் குறிப்பு (12) என்பவற்றைக் கொண்டுளது. இப்பகுதியின் மொத்த அடிகள் 185. இவற்றின் உரையும் விரிவுடையதே.

நூல், வேற்றுமையியல் (52), வினையியல் (22), ஒழிபியல் (45) என மூவியல்களையுடையது. எல்லாமும் நூற்பாவான் இயன்றன. சிறப்புப் பாயிரம் ஒன்றும் நீங்கப் பாயிரத்துடன் மொத்தம் 131 நூற்பாக்களை யுடையது நூல்.

## தமிழ்க் குருவர்

மயிலேறும் பெருமாள் பிள்ளை சுவாமிநாத தேசிகரைக் கண்ட அளவான் 'இளமைப் பருவத்தே இத்தகு திறம் அமைதல் அருமை' என உணர்ந்து, 'நாம் கற்ற கலைப் பொருளை இவர்க்குக் கற்பித்தல் பெரும் பயனாம்' எனத் தெளிந்து திருமடத் தலைவரிடம் வேண்டிக் கொண்டு தம் இல்லிலே தம்முடன் உடன் வைத்துப் பன்னீரியாண்டு கற்பித்து அதன் பின்னரும் வட மொழியிலும் இவர் திறவோராக வேண்டும் என்று தெளிந்து செப்பறைப்பதிக் கனகசபாபதி சிவாச்சாரியா ரிடத்து ஆற்றுப்படுத்தவரும் அவரே. மேலும் திருமடத் தலைவரிடம் இவர் கலைத் திறத்தைக் காண்பிக்கச் செய்து மெய்ந்நூற் பயிற்சி பெறவும், 'ஞானாசிரிய ராக' ஆக்கவும் தூண்டித் துலக்கியவர் அவரே. அத்தகையரை,

**"திருநெல் வேலி யெனும்சிவ புரத்தன்
தாண்டவ மூர்த்தி தந்தசெந் தமிழ்க்கடல்
வாழ்மயி லேறும் பெருமாண் மகிபதி
இருபத கமலம் என்றலை மேற்கொண்
டிலக்கணக் கொத்தெனும் நூலியம் புவனே"**

என்று பாராட்டுவது 'தகும்' என, இவர்தம் நன்றியுணர் நெஞ்சை மதிக்கிறோம்.

"நிறைந்த கல்வியுடையார் மாட்டுச் செல்வம் வாணாள் அதிகாரம் முதலிய நலங்கள் குறைதல் பெரும்பான்மை. இவனுக்கு ஓர் குறையுமில்லை என்பது தோன்றப் பெயர்க்கு முன்னும் பின்னும் அடை கொடுத்தாம்" என்று இவர் எழுதுவதைக் கண்டு மேலும் மதிக்கிறோம். ஆனால், உட்கிடையாக இவர்க்கு வடமொழியில் தாழ்ந்தது தமிழ் என்னும் கருத்து உண்மையால், வடமொழிக் குருவர்க்குப் பின்னரே தமிழ்க் குருவராம் இவரை வைத்தார் என்பதை நினைக்க அம்மதிப்பெல்லாம் 'சூறையிற் பஞ்சென' ஆகின்றதாம். ஆளுடைய பிள்ளையாரும், ஆளுடைய அரசும், ஆளுடைய தோழருமாகிய மூவர் முதலிகள் பாடிய தேவாரம் — அருச்சனை பாட்டேயாகும் என்ற தேவாரம் — கோயிலுக்குள் தீண்டத்தகாததாக இருக்கும் நிலையை எண்ணும்போது, இம்முறைவைப்பைச் செய்த சுவாமிநாத தேசிகர் மறுதலைச் செயல் நெஞ்சம் வெளிப்பட்டு விடுகின்றது.

## முறைகேடு

எத்துணைப் பேரறிஞர் தேசிகர்! மொழிமாறுபாடு, நூன் மாறுபாடு, இயல்மாறுபாடு, நூற்பாமாறுபாடு, விதி வேறுபாடு, உரை மாறுபாடு இவையெல்லாம் "முக்குண வசத்தால் முறைமறந்தறைவர்" என எவ்வளவு திட்ப நுட்பமாகக் கூறுகிறார் (6).

"சிறப்பா யுள்ளன சிலதே டினனவை
மறப்பெனும் பகைவன் வாரிக் கொண்டனன்
அவன்கையில் அகப்படா தடங்கின வற்றுளும்
சிறிதினைச் சிறியேன் சிறிய சிறார்தமக்
குரைத்தனன் அன்றியீ தொருநூல் அன்றே"

என்பதில் எத்தகு பணிவு (6)! இவரா கூறுகிறார்!

"தமிழ்நூற் களவிலை அவற்றுள்
ஒன்றே யாயினும் தனித்தமிழ் உண்டோ
அன்றியும் ஐந்தெழுத் தாலொரு பாடையென்
றறையவே நாணுவர் அறிவுடை யோரே
ஆகையால் யானும் அதுவே அறிக
வடமொழி தமிழ்மொழி எனுமிரு மொழியினும்
இலக்கணம் ஒன்றே என்றே எண்ணுக"

என்று 'நாணின்றி' இவர் கூறுவதை எண்ணுக. "முக்குண வசத்தால் முறைமறந் தறைவர்" என்பதை இப்படியா அடுத்த நூற்பாவிலேயே (7) மெய்ப்பிக்க வேண்டும். 99 ஆம் நூற்பா உரையிலும் இதனை மெய்ப்பிக்கிறார்.

உரையிலும் தான் என்ன?

"சிந்தாமணி, சிலப்பதிகாரம், மணிமேகலை, சங்கப் பாட்டு, கொங்குவேள் மாக்கதை முதலியவற்றோடு சேர்த்துச் செய்யுட்களோடு (திருக் கோவையாரை) ஒன்றாக்குவர்" என்றும்,

"நன்னூல், சின்னூல், அகப்பொருள், காரிகை, அலங்காரம் முதலிய இலக்கணங்களையும் பத்துப்பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன் கதை, நளன்கதை, அரிச்சந்திரன் கதை முதலிய இலக்கியங் களையும் ஓர் பொருளாக எண்ணி வாணாள் கழிப்பர். அவர், இவைகள் இருக்கவே (தொல்காப்பியம், திருக்குறள், இறையனாரகப் பொருள், தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, பெரிய

புராணம், சிவஞானபோதம், சிவஞான சித்தியார், சிவப் பிரகாசம், பட்டணத்துப் பிள்ளையார் பாடல் அவைகளை விரும்புதல் என்னெனின், பாற்கடலுட் பிறந்து அதனுள் வாழுமீன்கள் அப்பாலை விரும்பாது வேறுபலவற்றை விரும்புவதுபோல அவரது இயற்கை என்க'' என்றும் எழுதுவதை நோக்க, 'பிளவு பட்ட கூரை பிழைக்காது' என்று அமெரிக்க நாட்டுத் தலைவர் ஆபிரகாம் இலிங்கன் கூறியதே நினைவில் எழுகின்றது. இத்தகு தீமைகளே, தமிழ் நாட்டுக்கோயில் மொழி யாகவும், இருவினைச் சடங்கு மொழியாகவும் வட மொழியைக் கண்மூடிப் பின்பற்ற வைத்தன என்பது விளங்கும்.

**'' முன்னூல் ஒழியப் பின்னூல் பலவினுள் நன்னூலார் தமக்கு**
**எந்நூலாரும் இணையோ என்னும் துணிவே மன்னுக'**

என்று அடுத்த நூற்பா உரையில் பாராட்டு எழுதுபவர் (8) இந்நூற்பா உரையுள் (7) நன்னூலை விட்டு வைத்தாரா? இப்படியா தட்டுக் கெட்டுப்போகும், கட்டு விடாக் கல்வித்திறம்?

எண்ணாயிரவரைக் கழுவேற்றுதலை, 'தீவினை நல்வினை'யாதற்கும் கணவன் இழந்தோர்கட்கு இரங்குதலை 'நல்வினை தீவினை'யாதற்கும் இவர் காட்டுதல் **கொடுமையாக** உள்ளது (81).

**சிலகுறிப்புகள்**

தெரிவினையைச் சொல்லால் தெரிவினை, பொருளால் தெரிவினை எனப்பகுத்துக் காட்டி எடுத்துக் காட்டுத் தருகிறார் (73).

மறை மூவகையாதலை முற்று, பெயரெச்சம், வினையெச்சம் மூன்றற்கும் மூவகையால் காட்டுகிறார் (74).

''முதனிலை இன்றியும் தொழிற்பெயர் மொழிகுவர்'' என்னும் நூற்பாவும் பொருளும் மேலாய்விற் குரியவை(70).

தோன்றல் திரிதல் கெடுதல் என்னும் விகாரங்களுடன் நிலைமாறுதல் என்பதைக் கூட்டி 'தசை, சதை' முதலிய எடுத்துக்காட்டுகளைத் தருகிறார் (113).

கணக்கு எழுதுதலால் கணக்கன் என்னும் வழக்கை, 'கணக்கான் முயன்று உண்பவன் கணக்கன்' என்கிறார் (117).

**'' ஒப்பிலா மலடி பெற்ற மகனொரு முயற்கொம் பேறித்**
**தப்பிலா காயப் பூவைப் பறித்தமை சாற்றி னாரே''**

முதலியன பொய்யுரை என்கிறார் (108).

பண்புத் தொகைவிரி என்னும் நூற்பாவில் (98) இவர் 'வெள்ளை' என்னும் பண்பு பற்றி உரைப்பதைக் காட்டி இவர்தம் பட்டறிவுச் சிறப்பை அறிவதுடன் அமைவாம்:

'' வெண் கரும்பென இனம் பற்றியும்,
வெண் திங்கள் என இனம் பற்றாமலும்,
வெண்டாமரை எனத் தனக்குரிய சினையை விட்டு உரிமை இல்லாத முதலைப் பற்றியும்,
வெள்ளாடென வெதிர்வு பற்றியும்,
விலங்கன்னர் வெள்ளறிவினார் என இழிவு பற்றியும்,
வெண்களமர் வெள்ளாளர் எனச் சாதி பற்றியும்,
வெள்ளோட்டம் எனப் புதுமை பற்றியும்,
வெண்டேர் எனப் பொய் பற்றியும்,
வெளிற்று மரமென உள்ளீடின்மை பற்றியும்,
வெளியார் முன்னென இயல்பு பற்றியும்,
இச்சோறு வெண்படியெனக் கலப்பின்மை பற்றியும்,
இவ்வுரு வெண்கலமென ஒரு பெயரே பற்றியும்,
வெள்ளிடை எனத் தனிமை பற்றியும்,

இவ்வணி வெள்ளைப் பொன்னென நிறமின்மை பற்றியும், இவ்வூரில் வெள்ளைப் பிள்ளையார் எனப் பண்புப் போலி பற்றியும் இன்னும் பலவாய் ஒரு பண்பே விரிதலிற் பெருகு மென்றாம்''.

இலக்கணக் கொத்து தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கண விளக்கச் சூறாவளி ஆகியவற்றுடன் இணைத்து ஆறுமுக நாவலரால் பதிப்பிக்கப்பட்டது.

# 32. தொன்னூல் விளக்கம்

சில பெயர்களின் சிறப்பு சில பெயர்களைத் தூண்டித் துலக்குகின்றன. நன்னூல் என்பது அத்தகைய தொன்று. 'நூல்' என்பதே இலக்கணப் பொருட்டதாகவும் நன்னூல் எனப் பெயர் கொண்ட அது, அதற்கு முன் வந்த நேமிநாதத்தைச் 'சின்னூல்' என்று வழங்கத் தூண்டிற்று. பின்னூலாக வந்த வீரமாமுனிவரின் இலக்கண நூலைத் தொன்னூல் என்று பெயரிடத் தூண்டிற்று.

**நூலாசிரியர்**

நூலாசிரியரே உரையும் செய்தாராகலின் 'தொன்னூல் விளக்கம்' என்றே பெயரிட்டார். இன்றேல் 'யாப்பருங்கலம்' வேறாகவும், விருத்தி வேறாகவும் இரண்டும் இணைந்து யாப்பருங்கல விருத்தி என்றானாற் போல ஆகும். 'அகப்பொருள் விளக்கம்' என்னும் பெயரும் எண்ணத் தக்கது.

''மூத்தோர் புதைத்த அரும் பயனாகிய பொருளைக் கண்டு அறிந்து எடுப்பதற்கு இலக்கண நூலே விளக்காம். விளக்குதலால் விளக்கெனப்பட்டது'' என்பது ஆசிரியர் உரை (1). அந்நூற்பா:

**'' சொன்னூல் உடையாத் தொகைக்குணத் தோன்றா**
**முன்னூல் தந்த முதல்வனைப் போற்றி**
**நன்னூல் ஆய்ந்தோர் நவின்ற ஐம்பொருள்**
**தொன்னூல் விளக்கமுன் சொற்றுதும் எழுத்தே ''.**

**வரலாறு**

தொன்னூல் விளக்கு ஏற்றியவர் வீரமாமுனிவர். 1680 ஆம் ஆண்டு நவம்பர் எட்டாம் நாள் இத்தாலி

நாட்டுக் காத்தி கிளியோன் என்னும் ஊரில் பிறந்தார். கான்சுடென்டைன் சோசப்பு பெசுகி என்னும் பெயர் கொண்டார். தம் பதினெட்டாம் அகவையில் 21-10-1698 இல் துறவு மேற்கொண்டு கிறித்தவ அவையில் சேர்ந்தார்.

1700 — 1701 இல் இரவீனா நகரில் இலக்கண ஆசிரியராகப் பணிபுரிந்தார். 1701—1703: மெய்ப்பொருள் பயின்றார். 1703 — 1706: ஆசிரியப் பணியாற்றினார். 1706 — 1710: திருமறை பயின்றார். 1709: குருக்கள் ஆனார். 1710 — 1711: இத்தாலியில் இருந்து இந்தியா வந்தார்.

அம்பலக்காடு, மதுரை காமயநாயக்கன்பட்டி, குருக்கள் பட்டி, இராமநாதபுரம், ஏலாக்குறிச்சி, கோனான்குப்பம், ஆவூர், திருச்சி, மணப்பாடு ஆகிய இடங்களில் திருப்பணி செய்தார்.

ஆங்கிலம், பிரெஞ்சு, இலத்தீனம், முதலான மொழிகளைக் கற்ற இவர் தமிழ், வடமொழி, இந்துத்தானி, தெலுங்கு, கன்னடம் முதலிய மொழிகளையும் கற்றார். தமிழ்த் துறவியரென — பெருமடத் தலைவரென — உடையும் அணியும் மேற் கொண்டார். தைரியநாதர் எனவும், விரமாமுனிவர் எனவும் பெயர் கொண்டார். சதுரகராதி முதலிய சில அகராதிகள் தொகுத்தார். தேம்பாவணியாம் காவியமும் (1726) சிற்றிலக்கியங்களும் படைத்தார். கொடுந்தமிழ் இலக்கணம் (1728), செந் தமிழ் இலக்கணம் (1730), தொன்னூல் விளக்கம் (1730) முதலியவை இயற்றினார். இவர் மறைந்தது 1747. அகவை 67.

### ஒரு நோக்கு

இதுகாறும் இவ்விலக்கண வரலாற்றில் இப்படித் திட்டவட்டமான ஆண்டு, திங்கள், நாள் செய்திகள் எவருக்கேனும் குறிக்க வாய்த்தது உண்டா? ஆண்டேனும் திட்டப்படுத்த இயலவில்லையே! இந்த நூற்றாண்டு

என்று காண்பதற்கும் எவ்வளவு 'துருவுதல்' வேண்டி நேரிட்டது! கணக்கு — எண் — பிறந்த பெருமை மண் இது என்பது வரலாறு! கணியம் பண்டு தொட்டே வழக்கில் இருந்து வெறியாகவே வளர்ந்து விட்ட மண் இம்மண்! ஆண்டேனும் இந்த மண்ணுக்கு உண்டா? அறுபது ஆண்டுகள் இவர்க்குரியவா? திங்கட் பெயர், நாட் பெயர், நாள்மீன் பெயர்கள் என்னவாயின? அறிவியல் — பொறியியல் — வானியல் என்பனவெல்லாம் எப்படிச் சிதைந்தன? இந்த நிலையால் முந்தியவர் பிந்தியவராய் — பிந்தியவர் முந்தியவராய் வரலாற்றில் இரங்கத் தக்க நிலைக்கு ஆட்படுத்தத் தாமே சான்றாகியமை வருங்காலத்தேனும் மாறுமா? இவ்வரலாற்றொடு தொடர்பற்ற வினாக்கள் அல்ல எனினும், இவற்றைக் கடைப்பிடியாகக் கொள்ளாத 'வறுமை'யை வரலாற்றுக் கருத்தும் கண்ணோட்டமும் உடையவர் நினைவு கூராமல் இயலாதே!

**நூலளவு**

தொன்னூலைப் பார்க்கலாம். தொன்னூல் ஐந்திலக்கணம் கூறும் நூல். எழுத்ததிகாரம், சொல்லதிகாரம், பொருளதிகாரம், யாப்பதிகாரம், அணியதிகாரம் என்பன அவை. எழுத்து முதலியவை முறையே 40, 102, 58, 100, 70 ஆக 370 நூற்பாக்களைக் கொண்டது. முதற்கண் சிறப்புப் பாயிரமும், நிறைவில் ஓராசிரியம், ஒருவெண்பா, ஒரு கலித்துறை ஆகியவையும் உள்ளன.

தொன்னூலுக்குத் 'தெருட்குரு' என்றொரு பெயரை அந்நாள் அறிஞர் சூட்டினர் என்பதைக் கலித்துறை கூறுகின்றது.

**"மருட்களை நூக்கிப் பொருட்பயன் சூட்டி**
**வழுத்துதலால்**
**தெருட்குரு நாமம்தொன் னூல்விளக் கிற்குச்**
**சிறந்ததுவே."**

என்பது அது.

### சில வேறுபாடுகள்

எகர ஒகரம் புள்ளி பெறுதல் பழவழக்கு. மெய்யும் அவ்வாறே. ஆனால் மெய்யின் வடிவம் அவ்வாறே இருக்க எ, ஒ வடிவம் புள்ளியிட்டால் குறிலாகவும், இடாக்கால் நெடிலாகவும் வழங்கலாயிற்று. இதற்காக இராமாநுசக் கவிராயர் நன்னூல் பதிப்பில் திருத்தியமை கண்டுள்ளோம். வீரமாமுனிவர்,

**" நீட்டல் சுழித்தல்**
**குறில்மெய்க் கிரு புள்ளி "**

என்கிறார் (12). "எ, ஒ: க், ங், ச், ஞ்" என்பவை அவர் தரும் எடுத்துக்காட்டு. ஏகாரக் கீழ்க்கோடும், ஓகாரச் சுழியும் அவர் தந்தது என்னும் வழக்கு இந்நூற்பாவால் மேலாய்வுக்குரியதாக அமைகின்றது.

இவர் கூறும் அகப்பொருள், புறப்பொருள் புதுமைய.

**" அகத்திணை இயல்பே அறைபடும் வகையே**
**பொதுச்சிறப் புவமை புறநிலை எதிர்நிலை**
**கருவி காரியம் காரகம் முன்னவை**
**பின்னவை எனவாம் பிரிவீ ராறே "** (151).

**" புறத்திணை ஒழுக்கம் நூல்புறக் கரிமூன்றே "**

என அவற்றைக் கூறுகிறார். வழிவழி வரும் அகத்திணை, புறத்திணைகளை ஒரே நூற்பாவில் தொகுத்துரைத்து அதிகாரத்தை நிறைவிக்கிறார். அகத்திணை முதற் பொருள் கருப்பொருள்களைப் பற்றிக் கூறும் இவர், உரிப் பொருளைச் சொல்லவும் இவர் துறவு இடந்தரவில்லை போலும். அணியதிகாரத்தில் சொல்லணிக்கு முன்னுரிமை தருகிறார். இவர் பார்வைப் புதுமை, நூலில் எங்கும் தெரிகின்றது.

அதிகாரத் தொடக்கங்களில் வணக்கமும் வரு பொருளும் அமைத்து அதிகாரப் பொருளை விளக்கு கிறார். நிறைவில் இவ்வதிகாரத்து இன்ன கூறப்பட்ட தென்பதைக் கூறி முடிக்கிறார்.

**உரை**

உரையாசிரியரும் இவரே எனக் கண்டோம். மேற்கோள் பாடல்கள் பழ நூல்களிலிருந்து கொள்வதுடன், தம் நூலில் இருந்தும் கையாள்கிறார். இந் நூற்கெனவும் புதிதமைத்துக் கொள்கிறார்.

''போர்முகத் தணிகளைப் பலவகை யூகமாக வகுத்தது போலக் குறித்த பயனை அடைவதற்கேற்ற ஒழுங்குந் தெளிவுறுமாம்படித் தெரிந்த நியாயங்களைப் பகுத்த பின்னர் ஏற்றிய சுவர்மேற் சித்திரம் எழுதுவார் போலவும், உறையில் கிடந்த நெடும் வாளுருவி வீசுவார் போலவும் தானும் அவற்றைத் தனித்தனி விரித்துக் காட்டுதல் வேண்டும். இதற்கு ஐந்தாம் அதிகாரத்திற் சொல்லப்படும் அலங்காரங்களே வழியாம்'', என்பது ஒரு செய்தியை விளக்குவதற்காக இவர் கையாளும் உவமைகளைக் குறிப்பதாம் (162).

மேலை நாட்டினராகிய இவர்க்கு இந்நாட்டு வருணப் பிரிவு ஒப்பும் தன்மையதன்று. ஆயினும், இவர் காலத்து நூல்களும் உரைகளும் புராணங்களும் நடைமுறைக் காட்சிகளும் அப்பிரிவைக் காட்டின. ஆதலால், ''இந் நாட்டு வழக்கம் பற்றி அவ்வச் சாதிக்குரிய தொழிலை விளக்குதும்'' என வரைவாராயினார் (182). ''வன்னியர் மன்னர் வணிகர் சூத்திரர்'' எனத் தொடங்குகிறார். வன்னி - நெருப்பு; வன்னியர் தீ வளர்த்து வேள்விபுரியும் மறையவர்.

ஒவ்வோர் அதிகாரத்தின் நிறைவிலும் இவ்வதிகாரத்து மேற்கோள் இத்துணை எனச்சுட்டுதலை மரபாகக் கொள்கிறார். எழுத்து (80) சொல் (118) பொருள் (40) யாப்பு (164) அணி (56) என்பன அவை.

**உரைநடை**

இவர்தம் உரைநடை நயமும் செறிவும் சிறப்பும் அறிய ஒரு சான்று:

பிறர் நோய் கண்டு அகத்து இரங்கான் 'ஐயோ' என வாய் பொய்த்த இரக்கங் காட்டல் தயையோ?

நெஞ்சங் கடுத்த சுடும் பகை கொண்டான் முகநக நட்பது நட்போ?

ஒன்றீந்து ஒரு பத்து அடித்துக் கொள்ளத் துணிந்தான் பிறர்க்கு ஈந்து உதவுதல் கொடையோ?

மனை நகர் நாடும் அகல நீக்கியும் பொருளின்பம் அணுகும் ஆசை நீங்கான் மறுதுணையில்லா வனம் புக்குறைதல் துறவோ?

பிணியுறப் பசிமிகப் பகைப்பட மொய்த்த துன்பம் இன்பம் என உணர்ந்து அகங்கலங்காதான் புறத்தும் புலம்பாதிருப்பது பொறையே!

பிறர் அழகாசை மனம்புகாத் தன்னிறை காத்த மகளிர் புறத்துக் காட்டும் ஒடுக்கமும் கற்பே!

தன்மனக் கோட்டங்கண்டு நாணுதல் நாணமே!

மனத்தில் இறைஞ்சிப் பிறரைப் பணிவான் புறத்துப் பொய்யாச் சொல்லின் வணக்கமும் பணிவே!

உளத்திற் கலங்காது எதிர் வெம்போர் முகத்து அஞ்சான் துணிவாய சேவகந்தானும் வீரமே! இவ்வாறு **அனைத்தறன் மனத்துக்கண் மாசிலன் ஆதல்** ஆகுமன்றோ! என்பது. இவையும் இத்தொடக்கத்தன பலவும் வகையகத் திணையாம்.

மனமாசிலா அறவிளக்கம் இப்பகுதியாதல் அறிக. பிற வுரையார் கொள்ளாவகை உரைகொண்டுரைத்த பான்மை விளங்கும்.

## பதிப்பு

1838 இதன் முதற்பதிப்பு புதுவையிலும், 1864 இல் நாகையிலும், 1891 இல் சென்னையிலும் பதிப்பிக்கப் பட்டது.

# 33. பிரபந்த தீபம்

இலக்கிய வகைகளை விளக்கிக் கூறும் நூல்களுள் ஒன்று இத்தீபம். ‘விளக்கம்’ என வழங்கும் தமிழ்ப் பெயருடைய இலக்கண நூல்கள் சில. இது ‘தீபம்’ என்னும் வடசொல்லால் வழங்கும் பெயர். இந் நூலின் ஆசிரியரைப் பற்றிய செய்தி தெரிந்திலது. பெயரும் அறிய முடியாமையால் பிறவற்றை அறிதற்கு வாய்ப்பு இல்லை. சிறப்புப் பாயிரம், தற்சிறப்புப் பாயிரம், கடவுள் வாழ்த்து, நூல் நுவல்வு இன்னவை பற்றியும் எதுவும் இல்லை. நூலைப் பார்த்த அளவான் ஏடுகள் சிதறுண்டு எண்வரிசை பற்றிக் கவலைப் படாமல் தொகுத்து வைக்கப்பட்டது என்பது புலப்படுகின்றது. இதன் நடை நூற்பா நடை.

## நூன்முறை

அகப்பொருட்கோவை, அங்கமாலை, அட்டமங்கலம், அநுராக மாலை, அரசன் விருத்தம், அலங்கார பஞ்சகம், ஆற்றுப்படை, இரட்டை மணிமாலை, இணைமணி மாலை, இருபா இருபது, இயன்மொழி வாழ்த்து, உற்பவ மாலை, உழிஞைமாலை, உலாமடல், உலா, ஊரின் னிசை, ஊர்வெண்பா, ஊர்நேரிசை, ஊசல், எழுகூற் றிருக்கை, எண்செய்யுள், ஐந்திணைச் செய்யுள், வருக்கக் கோவை, மும்மணிக்கோவை, நவமணிமாலை இவ்வாறு தொடர்கின்றது.

அகப்பொருட்கோவை முதல் ஆற்றுப்படை வரை அகர நிரல் மாறவில்லை. இது நூலாசிரியன் அமைப்பைத் தெளிவிக்கும். பின்னர் இகரத்தில் அகர நிரல் மாறிற்று. ஐந்திணைக்கு அப்பால் வருக்கம், மும்மணி நவமணி எனக் குழம்பிற்று. இம்மாறு நிலைக்கு ஏடுகளின் இடமாற்றம் காரணமாகலாம்.

**அளவு**

இத்தீபத்தில் 97 வகை நூல்களுக்கு இலக்கணமுள்ளது. நூல் இறுதியில் உள்ளது சமுத்தி என்பது.

விளக்கு நிலை பற்றிய நூற்பா:

**'' விளக்கு நிலையே வேலும் வேல்தலையும்**
**விலங்கா தோங்கிய வாறு போலக்**
**கோலொடு விளக்கும் ஒன்றுபட் டோங்குமா**
**றோங்குவ தாக உரைத்தல் என்ப ''** (64).

தாண்டக இலக்கணம் கூறுகிறார்:

**'' தாண்டகம் என்பது செய்யுள் ஓரடிக்**
**கிருபத் தேழெழுத் திசைய இயம்புதல்**
**அதுவே அளவியல் தாண்டகம் அவற்றுளோர்**
**அக்கரம் அஃகில் அளவழித் தாண்டகம்''** (79).

நெடுந்தாண்டகம், குறுந்தாண்டகம் என்பவற்றினின்று வேறுபட்ட வகை இவை. எழுத்தெண்ணிப் பாடப்படுவது குறித்தது.

இதன் காலம் முத்துவீரியத்தின் காலத்தோடு தொடர்புடையதாகலாம். நூற்பாவமைதி நுவலுவதிது.

**பதிப்பு**

அறிஞர் ச.வே. சுப்பிரமணியம் இதனை 1980 இல் அச்சேற்றியுள்ளார். ஆய்வும் உரையும் விளக்கமும் உடையது இப்பதிப்பு.

# 34. பிரபந்தத் திரட்டு

இந்நூல் திரட்டியல் என்னும் ஓரியலே கொண்டதாக இருக்கிறது. ஆனால் 'க-வது திரட்டியல்' எனத் தொடக்கத்திலும் 'திரட்டியல் முடிந்தது' என இறுதியிலும் உள்ள குறிப்பை நோக்க வேறு இயலோ இயல்களோ தொடர்ந்திருந்து அழிந்திருக்கக் கூடுமென நம்பலாம்.

**நூல்**

திரட்டியல் முடிந்தபின்,

**"சாதகம் பிள்ளைத் தமிழ்பல் சந்தத்**
**திரட்டுக் கூடல் விசித்திர மதுவே"**

எனத் தொடங்கி இத்திரட்டில், "கூறிய தொண்ணூற் றாறு பிரபந்தமும்" அடைவாகக் கூறிவிடுகின்றது. அம் முறையே முறையாய் நூலும் அமைந்துள்ளது. இந்நூற்பா 49 அடிகளால் ஆகியது.

இந்நூல் வெண்பா யாப்பால் அமைந்தது. இதிலுள்ள வெண்பாக்கள் 71. சில வெண்பாக்கள் விடுபட்டுள்ளன என்பதை அறியமுடிகின்றது.

**தொண்ணூற்றா றான தொகைசேர் பிரபந்தம்**
**பண்ணுறப் பாடுவகை பாடுதற்கு—நண்ணுதுணை**
**தொந்திவயிற் றன்சிவன்சேய் சுப்பிரமண்**
**யன்துணைவன்**
**ஐந்துமுகத் தன்பொன் அடி**

என்பது இதிலுள்ள கடவுள் வாழ்த்து. ஐந்து முகத்தனை வணங்கும் இவர் முறைமை கூறு முகத்தான் சிவனையும் முருகனையும் முன் கொண்டுவந்து நிறுத்துகிறார். இவர்தம் சமயம் இதனால் அறியவரும்.

### சில புதிய நூல் வகைகள்

இப்பிரபந்தத்திரட்டில் புதுமையான பல நூல் வகைகளுக்கு இலக்கணம் இடம் பெற்றுளது. சிலவற்றிற்கு இலக்கியம் உண்மை அருமையேோ எனவும் எண்ணத் தோன்றுகின்றது. ஆசிரியர் புதிது படைக்கும் தேர்ச்சியர் என்பதற்கு இப்பெயர்களும் இலக்கண வரைவும் சீரிய சான்றுகள்; பிற பாட்டியல்களில் காணாதவை.

இலட்சுமி விலாசம், ஆடாமணி, தடாக சிங்காரம், சடானனம், ஏகாங்கிரி, பொய்மொழி அலங்காரம், மெய்மொழி அலங்காரம், தெய்வக்கையுறை, குறியறி சிந்து, பண்ணை விசித்திரம், புறநாட்டுச் செய்கை, ஏடார் தாமரை, வாடாத மலர், மஞ்சரி, மாதிரக்கட்டு, காமச்சிகழிகை, வச்சிராங்கி, சகத்திராங்கி, சிந்து மோகினி, தமிழ்சொரி சிந்தாமணி, உபயசெயம், விடய சந்த்ரோதயம், விசயவித்தாரம், மானதவம், பிரிவுசுரம், வேடர் விநோதம், கன்னிகா மயக்கம், வசன சம்பிர தாயம், திருப்பெயர்ப் பொறி, களவுகன்னி, காதலெதிர் மொழி, வனமாதங்கி, இரவிடையீடு, பலதொகை, இந்திரசாலம், திருவடிச்சுவடு—இவை போல்வன இந் நூலால் அறியப்பெறும் புதிய நூல் வகைகள்.

**'' வாயின் மணிநா அசையாமல் செய்மின்னாள்**
**வாயின் மணிமுற் றுறவசைக்க—வேயிறைவன்**
**பூசலிட்டுப் பின்மேவப் பூட்டி உரைப்பதுவே**
**வாசமிகும் ஆடா மணி '' (9).**

"' கலிப்பாவும் தாழிசையும் நான்மணிமேற் காட்டல்
நலத்துறுச டானன நற்பா—வலிக்காவிற்
காலற்ற லேகாங் கிரி கலிவெண் பாச்சிந்தாய்க்
கோலுற்றார் நொண்டியென்று கொண்டு ''

என்பது சடானனம், ஏகாங்கிரி (நொண்டி) என்பவற்றைப் பற்றியது (13).

ஒலியந்தாதி கூறியபின் காப்பியப் புறநடை என்று திரட்டு முடிவதாய் உள்ளது. இதனால், திருமுகம், சமுகம், காதலெதிர் மொழி, வனமாதங்கி, இரவிடையீடு, ஆன்மநிலை, பலதொகை, இந்திரசாலம், திருவடிச் சுவடு என்னும் ஒன்பதன் இலக்கணப் பகுதி இடையே விடுபட்டுள்ளது.

பெரும் பேராசிரியர் உ. வே. சாமிநாதையர் நூலக ஏட்டுச்சுவடி கண்டு எழுதப்பட்டது இது. இந்நூல் அச்சாயிற்றில்லை.

# 35. இரத்தினச் சுருக்கம்

---

## பெயர்

"புகழேந்திப் புலவர் இயற்றிய இரத்தினச் சுருக்கம்" என நூல் தலைப்பில் உள்ளது. இதுவும், "1871இல் ஊ. புட்பரத செட்டியாரால் தமது சென்னை, கலா ரத்நாகர அச்சுக்கூடத்தில் பதிப்பிக்கப்பட்டது" என்ற குறிப்புடன் உள்ளது. மணிபோன்ற செய்திகளைச் சுருக்கித் தரும் நூல் என்னும் பொருளுடையதாகலாம்.

## நூல்

"பழைய பிரதிகளுள்ளே சிலவற்றுள் 28 பாடல்களும், சிலவற்றுள் 71 பாடல்களும் இருக்கின்றன" என்று நூற் குறிப்புள்ளது. இப்பதிப்பு 71 பாடல்களையுடையதாம்.

பாடல் வகை வெண்பா 38; கட்டளைக் கலித்துறை 28; அறுசீர் விருத்தம் 4; முருகு விருத்தம் 1. ஆக எழுபத் தொன்று.

## செய்தி

பிரிவாற்றாமைக்குரிய குறிகள், பிரிவுப்பகை, பிரிவில் நீங்குவன, துயர்க்கு ஏது, தூது, மன்மதன் மாலை, கணை, கணைச் செயல், கண்ணின் இயல்பு, கண் முதலிய உறுப்பு களுக்கு உவமை (உவமான சங்கிரகம் போல) மகளிர் விளையாட்டிற்குரியன, பாணர் பெறுவன, ஒன்பான் சுவை, ஐவகை மணம், ஐவகைப் படுக்கை, எண்வகை

மணம், முத்துப் பிறப்பிடம், திருமகள் இருப்பிடம், மன்மதன் கணையெய்யும் வகை, வேள் நகர்க்கு அடையாளம், மகளிர் கைவினை, மகளிர் பருவம், மகளிரான் மலரும் மரம், திணையும் திணைக்குரியனவும், எண்போகம், இன்பவகை, செல்வம், விருந்து, பேறு, அறம், தசாங்கம், மங்கலம் ஆகியவற்றின் வகைகள், ஆடவர் மகளிர் சிறப்புவமை, சிவன் பெருமை, பிள்ளையார் பெருமை, முருகன் பெருமை, திருமால் பெருமை, நான்முகன் பெருமை இவற்றை முறையே கூறுகின்றது. நிறைவில் நூற்பயன் கூறப்பட்டுள்ளது. அது:

**" உணரும் படியே உரைத்தவற்றை எல்லாம்**
**இணர்மென் தொடையாம் இயல்பால்—**
**துணையெழுத்தாற்**
**சொல்லாயச் சொல்லின் தொகுதி தனைத்தொடுக்க**
**வல்லார்க் கணிபெறலா மால் "**

இந்நூல் மெய்ப்பாட்டியல், உவமையியல், பாட்டியல், தொகையகராதி இவற்றின் பொருள்களை எடுத்துச் சிலச் சில மொழிவதாக இயல்கின்றது.

**இருவகை நூல்கள்**

28 பாடல்கள் அமைந்த பிரதியும் இருந்ததாக அச்சு நூல் குறிப்புள்ளதும், கட்டளைக் கலித்துறை 28 இருப்பதும் அவற்றை மட்டுமே யுடையதொரு தனி நூல் இருந்திருக்க வேண்டும் என்றும், வெண்பா நூல் ஒன்று தனியே இருந்திருக்க வேண்டும் என்றும் கருதச் செய்கின்றது. நூலின் பாவகை மாற்றத்துடன் பொருள்வகை மாற்றமும் இக்கருத்துக்கு இடமாகவே அமைகின்றது.

**ஆசிரியர்**

புகழேந்தியார் பெயரால் மாலைகள் சில வழங்குகின்றன. சில சிறு நூல்களும் அவர் பெயரால் பிறர் கட்டி-

*விட்டிருக்கக் கூடும். ஏனெனில் வெண்பாவில் புகழேந்தி யாகத் திகழ்ந்து நளவெண்பாப் பாடிய ஒருவரையன்றி வேறு புகழேந்தியார் பெயர் வரலாற்றில் இடம் பெற்றிலது. ஆதலால் அவர் பெயரால் ஒருவர் இயற்றி யிருத்தல் கூடுவதே. கடந்த நூற்றாண்டைச் சேர்ந்த நூலாகலாம்.*

**தூது**

*இந்நூலாசிரியர் ''தூதுரைத்து வாங்கும் தொடை'' எனப் பத்தினைக் குறிக்கிறார்.*

**'' இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை**
**பயம்பெறுமே கம்பூவை பாங்கி—நயந்த குயில்**
**பேதை நெஞ்சம் தென்றல் பிரமரம்ஈ ரைந்துமே**
**தூதுரைத்து வாங்கும் தொடை ''** (7)

*என்பது அது. கண்ணிற்கு இணை :*

**வேல்வாள் கணைவண்டு வேலை விடமமுதம்**
**சேல்பங் கயம்குடங்கை செங்காவி—காலன்**
**வடுமான் கருவிளையை வண்சகோ ரத்தை**
**அடுமாங் குழையை அடர்ந்து** (14)

*உவமான சங்கிரகம் பார்க்க.*

# 36. உவமான சங்கிரகம்

**ஆசிரியர்**

திருவில்லிபுத்தூர் திருவேங்கடஐயர் என்பார் செய்தது உவமான சங்கிரகம் என்றொருநூல். காப்பு ஒரு பாடலும் நூல் 15 பாடலுமாகப் பதினாறு பாடல்களைக் கொண்டது.

**சமயம்**

அனைத்தும் வெண்பாவே. இஃது அந்தாதித் தொடையால் இயல்கின்றது. இவர் மாலிய சமயத்தவர் என்பது 'வேதத் தமிழ் மாறனை'த் தொடக்கமாகக் கொண்டதுடன், 'குருகூ ரனைத் தொழுது' வெண் பாவை முடித்தலால் புலப்படும்.

**நூல்**

மகளிர் முடிதொடங்கி அடிகாறும் உவமைப் பண்பு களைக் கூறுகிறது. இன்னதற்கு இன்னது உவமையாம் என்கிறது. இந்நூல் வழியது இது என்று கூறாமல் 'மூதுரை' யாற் சொல்வதாகக் கூறுகிறார். இவண் மூதுரை என்பது முன்னோர் உரை.

கூந்தல், நெற்றி, புருவம், கண், முகம், காது, கபோலம், மூக்கு, இதழ், வாய், பல், கழுத்து, மொழி, தோள், முன்கை, அங்கை, கைவிரல், கைந்நகம், கொங்கை, கொங்கைக்கண், உதரம், உந்தி, மடிப்பு, உரோமக்கொடி, இடை, அல்குல், குறி, தொடை, முழங்கால், கணைக்கால், பரடு, குதி, புறவடி, கால்விரல், கால்நகம், கால், நடை, சாயல், மேனி, தேமல் என்னும் 40 உறுப்புகளுக்கும் உவமை காட்டுகிறார்.

மொழிக்குப் பதினான்கு உவமையும், மார்புக்கு இருபது உவமையும் சொல்கிறார். இவ்விரண்டுமே மிகுதியாம் உவமைகள் (5,8). மொழிக்குக் கூறும் உவமைகள்:

**நாட்டுங் கதலி நடுக்கரும்பு மாவருக்கை**
**காட்டும் குயில்கிள்ளை கற்கண்டு—வேட்டருந்தும்**
**சீனி சருக்கரைசெந் தேனமுதம் பால்குழல்யாழ்**
**ஆனபதி னான்குமொழிக் காம்.**

மகளிர் உறுப்புக்கு உவமை கூறவே ஒருநூல் எழுந்தமை வியப்பே. 'உவமை' என்பது ஓரணி நூலாக விரிந்தது. அவ்விரிவு இன்னதற்கு இன்னது உவமை எனக் காட்டும் 'பொறிவினை' போல அமைந்தமை அணி வறுமைக்கும் கற்பனை அழிவுக்கும் இடம் தந்தது எனலாம்.

## ஒரு குறிப்பு

ஆடவர் உறுப்புகளுக்கு ஏன் இப்படி உவமைகள் தொடுக்கப் படவோ — தொகுக்கப் படவோ — இல்லை? நூல் இயற்றுதலைத் தம் கைப்பொருளாக வைத்திருந்த ஆடவர்க்கு ஆடவர் உறுப்புகளை உவமைப் புனைவாக்கி உவகை யெய்துதல் இன்பமாக இராமையால், இவ்வகை உவமைகளை எண்ணற்ற சிற்றிலக்கியங்களில் கூறிக் கூறித் தாம் பெற்ற இன்பத்தைப் பாட்டுடைத் தலைவரும் கேட்டு வருவோரும் எய்தச் செய்தனர். உலா, காதல் இன்ன நூல்களின் வண்ணனைப் பெருக்கமே இத்தகைய தொரு நூல்வகையைத் தந்ததென்க.

## பதிப்பு

1871 இல் ஊ. புட்பரத செட்டியாரால் தமது சென்னை கலாரத்நாகர அச்சுக் கூடத்தில் பதிப்பிக்கப் பட்டுளது இவ்வுவமான சங்கிரகம்.

# 37. முத்து வீரியம்

ஐந்திலக்கணமும் கூறும் நூல்களுள் ஒன்று முத்து வீரியம். ஆசிரியர் பெயர் முத்துவீர உபாத்தியாயர். இவர் பெயரால் அமைந்தது இந்நூல்.

## ஆசிரியர்

முத்து வீரரை, 'முத்து வீரமாமுனி' என்று சிறப்புப் பாயிரம் கூறுகின்றது. இவர் திருச்சிராப்பள்ளியைச் சார்ந்த உறையூரினர். அவ்வூரில் வண்டிக்காரத் தெருவில் இருந்தவர். பிறந்த குடிபற்றி அந்நாளில் அவ்வூரார் 'கம்மாள வாத்தியார்' என்று அழைத்தமை அறிய வருகின்றது. இவர் இறுதிக் காலத்தில் சென்னையில் வாழ்ந்தவர் என்றும், திருச்சி அமிர்தம் பிள்ளை, உறையூர் பிச்சை இபுராம் புலவர், சோமசுந்தர நாயகர் ஆகியோர்க்கு ஆசிரியர் என்றும் கூறுவர். இவர் காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு.

## சமயம்

இந்நூலின் ஐந்ததிகாரங்களின் முகப்பிலும் தற் சிறப்புப் பாயிரங்கள் உள்ளன. அவை முழு முதல் இறையின் இயல்புகளை இயம்புகின்றன. பெயர் வகை யான் குறியாமை இவர்தம் பொதுப்பான்மை வெளிப் படுத்தும். ஆனால், ''சங்கரன் மிலைந்த கங்கையில் வந்தோன் சுப்பிர மணியதே சிகன்கவிப் பெருமான்'' வேண்டிக் கொண்டபடி முத்துவீரியம் இயற்றப்பட்ட

தாகச் சிறப்புப் பாயிரம் கூறுவது கொண்டு சைவ சமயத்தவர் எனலுண்டு. தற்சிறப்புப் பாயிரங்களின் பொருணிலை சிவனெறிக் கொள்கை கூறுவதையும் காட்டுவர். அன்றியும் திருக்கோவையார் காட்டும் 400 துறைகளையும் அப்படியே அகப்பொருளில் கொள்வதும் கருதத் தக்கதே.

**நூலளவு**

முத்து வீரியம் நூற்பா யாப்பால் அமைந்தது. எழுத்ததிகாரம் எழுத் தியல், மொழியியல், புணரியல் என மூவியல்களையும் சொல்லதிகாரம் பெயரியல், வினையியல், ஒழிபியல் என மூவியல்களையும் பொருளதிகாரம் அகவொழுக்கவியல், களவொழுக்கவியல், கற்பொழுக்கவியல் என மூவியல்களையும் யாப்பதிகாரம் உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் என மூவியல்களையும் அணியதிகாரம் சொல்லணியியல், பொருளணியியல், செய்யுளணியியல் என மூவியல்களையும் ஓர் ஒழுங்குறக் கொண்டுள்ளன. முதல் தற்சிறப்பு நீங்கிய நூற்பாக்கள் ஐந்ததிகாரங்களுக்குமாக 1288 ஆகும்.

**எழுத்ததிகாரம்**

சார்பெழுத்து மூன்று என்பது தொல்காப்பியம். பத்து என்பது நன்னூல். முத்து வீரியம் உயிர்மெய், ஆய்தம் என்னும் இரண்டை மட்டுமே சார்பென்கிறது. தொல்காப்பியர் சார்பெனக் கூறிய குற்றியலிகரத்தையும் இவர் நீக்கியமை தனியெழுத் தன்மையால் எனலாம். இனிப் புள்ளியுண்மையால் உயிர் மெய்யெனக் கொண்டு நீக்கினார் என்பது ஏற்குமேல் கொள்க.

**'' சார்புயிர் மெய்தனி நிலையிரு பாலன''**

என்பது அந்நூற்பா (22).

அளபெடையை எட்டென்கிறார். அவை: இயற்கை அளபெடை, செயற்கை அளபெடை, இன்னிசை அள

பெடை, சொல்லிசை அளபெடை, நெடிலளபெடை, குறிலளபெடை, ஒற்றளபெடை, எழுத்துப்பேறளபெடை என்பன. உயிரளபெடை, ஒற்றளபெடை என்னும் இரு வகை அளபெடையே கொண்டு, உயிரளபெடையுள் இன்னிசை, சொல்லிசை, செய்யுளிசை என மூவகைப் படுத்துதல் பழவழக்கு. இனி இயற்கை, செயற்கை யளபெடை என்பவும் இவற்றுள் அடங்குவதே. எழுத்துப் பேறளபெடையும் இப்பகுப்பும் புதியவை.

ஆய்த எழுத்தின் பிறப்பிடம் தலை என்றும், மெல்லின எழுத்தின் பிறப்பிடம் மூக்கு என்றும் நன்னூலார் கூறுவார். இவர், மெல்லினம் தலையை இடமாகக் கொண்டு பிறக்கும் என்கிறார் (43). ஆய்தம் உந்தியிடமாகப் பிறக்கும் என்கிறார் (58).

சகரம் அ, ஐ, ஔ என்னும் மூன்றெழுத்துகளுடன் வாராது என்பது தொல்காப்பியம். ஆனால் நன்னூலார் சகரம் பன்னீருயிருடனும் வரும் என்றார். அவ்விதியையே மேற் கொண்டார் இவர் (61).

**"உகர ஊகாரம் நவவொடு நவிலா"**

என்பது தொல்காப்பியம். இதனைப் பாயிர விருத்தியில் ஆயும் அரசஞ் சண்முகனார், உகரம் நகரத்தோடும், ஊகாரம் வகரத்தோடும் வாராது என்று நிரனிறைப் பொருள் கண்டார். முத்து வீரியர்,

**"உ ஊ நகரமோ டுறாவென மொழிப"**

என்கிறார் (87). இது மேலும் ஆய்வுக்குரியதே என முத்து வீரிய விளக்கவுரையாசிரியர் குறிப்பிடுகிறார்.

நன்னூலினும் பன்மடங்கு வடமொழி இலக்கணக் கூறுகள் பெருகியுள்ளமை மொழியியல் பகுதியால் விளங்கும். 125 முதல் 159 முடியவுள்ள நூற்பாக்கள் அவை.

தனிமொழி தொடர்மொழி பொது மொழி எனச் சொல்லப்படும் மொழியின் வகையைத் தனிமொழி, இணைமொழி, துணைமொழி, பொதுமொழி, தண மொழி. கணமொழி, கலப்புறு மொழி என ஏழாக்குதல் பின்னவர் கொள்கை வழியதாம் (123).

''இ ஈ ஐ வழி யவ்வும் ஏனை உயிர்வழி வவ்வும்'' என வரும் உடம்படுமெய் பற்றிய நூற்பாவை அப்படியே மேற் கொள்ளும் இவர்,

**'' கோமா முன்வரின் யகரமும் குதிக்கும்''**

எனக் குறிக்கிறார். முன்விதிப்படி 'கோவில்' என வருத லும் இவ்விதிப்படி 'கோயில்' எனவருதலும் ஏற்றுக் கொண்டார். இவர் இவ்வாறு இருவழக்கும் கொள் வதற்கு வழிசெய்தார் எனினும், 'கோயில்' என்பதே செவ்விய ஆட்சியாம். நூலொடு படாத 'கோவில்' என் பதை நன்னூலார் கொண்டமை போலவே இந்நூலாரும் கொண்டார் என்னும் குறையே உண்டாகின்றது. இந் நாளில் உரைநடை பாடல்களில் கருதாமல் எழுதுவார், நடையிலும் பொதுமக்கள் பேச்சு வழக்கிலும் இருப்பதுமே 'கோவில்'. பண்டையோர் நூலிலோ, உரையிலோ இல்லை. கடந்த நூற்றாண்டு வரை எழுந்த சிற்றிலக்கியங் களிலும் கூட இவ்வாட்சியில்லை. (எ.டு).

**'' வாயில் வந்து கோயில் காட்ட''**—சிலம்பு.

**'' கோயில் நான்மணி மாலை''**—நூற்பெயர்.

**'' கோயிலில்லா ஊரில் குடியிருக்க வேண்டா''**—
நூலும், உரையும்.

**சொல்லதிகாரம்**

தொல்காப்பியத்தில் இடையியல், உரியியல் என ஈரியல்கள் உள. அவ்வாறே அளவில் சுருங்கியேனும் நன் னூலிலும் அவ்வியல்கள் உள. இவர் மும்மூன்றியல் பகுப்பு

என்னும் ஒருமுறையைக் கொண்டமையால் போலும் இடை உரியியல் செய்திகளை ஒழிபியல் படுத்திவிட்டார். ‘சில வரம்புகள் சில குறைகளை’ உண்டாக்கும் என்னும் முறைக்கு ஏற்ப இவ்வியைபு அமைந்து விட்டதெனலாம்.

**உரிச்சொல்,** தொல்காப்பியத்தில் 98 நூற்பாக்களைக் கொண்டுளது. அவற்றுள் ஒரு சிலவற்றை வாங்கி வைக்கும் அளவில் இவர் அமைகிறார். 22 நூற்பா அவ்வகையில் உள்ளன. முத்து வீரிய ஒழிபியல் உரி நன்னூல் உரியியல் செய்தியில் விரிந்ததே. புதுவதொன்றும் இல்லையாம். இடைச்சொல் பற்றிய செய்தி மிகச் சுருங்கிற்று.

**பொருளதிகாரம்**

*சிறுபொழுது ஆறு என்பதும் ஐந்து என்பதும் இருவகை நெறிகள். இவர் பின்னதை மேற்கொள்கிறார். நம்பியார் வழி அது. அப்பொழுதில் நிகழும் நிகழ்ச்சிகளை எடுத் துரைப்பது இவர்தம் புது நெறி. கார்காலம் முதலிய பருவ நிகழ்ச்சிகளையும் எடுத்துரைக்கிறார். சான்றாகக் காரும் மாலையும்:*

> **“ வாடை யடித்தல் மயில்கே கயப்புள்**
> **இந்திர கோபம் எழுந்தக மகிழ்தல்**
> **அன்னம் கிளிமயில் அகன்று வருதல்**
> **காந்தள் கொன்றை காயா மலர்தல்**
> **கமலம் ஏங்கல் கார்காலக் குரித்தே”**

> **“ குவளை மலர்தல் குருகினம் ஒலித்தல்**
> **கன்றை யுள்ளிக் கறவை போதரல்**
> **வனசங் கூம்பல் மாலைக் குரித்தே”**

*அகத்திணைப் பொருள் போலவே, புறத்திணைப் பொருள் காலந்தோறும் இலக்கணரால் போற்றப்படவில்லை என அறியப்படுகின்றது. சங்கச் சான்றோர் போர்க்களம் சென்று அறம் உரைத்தும், அமைதிகாத்தும், தூதுரைத் தும், துணிவுபடுத்தும் பணியாற்றினர். சிறைக்களம்*

புக்கும் செயலாற்றினர். வேந்தர், படைஞர் உடனாய் ஒன்றிப் பணி பூண்டனர். ஆகலின் அவர் காலத்துப் புறத்திணைப் பொருள் சிறப்பப் போற்றப்பட்டதுடன், புறநானூறு பதிற்றுப்பத்துப் போலும் புறத்திணை இலக்கியங்களும் மலர்ந்தன. இடைக்காலப் பிற்காலங்களில் புலவர்கள் நிலை ஒடுங்கியது. அரண்மனையுள்ளும் அரசவையுள்ளும் இருந்து அவரைக் களிப்பூட்டும் பாடல்களை—குறிப்பாக அகத்துறைப் பாடல்களைப் பாடுபவராக அமைந்தனர். அதனால் புறப்பொருள் இலக்கணமும், இலக்கியமும் பெருகுதலின்றி நின்றன. தொல்காப்பியத்தின் பின்னர் ஐயனாரிதனாராம் சேரவரசர் பாடிய புறப்பொருள் வெண்பாமாலையே புறப்பொருள் இலக்கண நூலாயிற்று. இலக்கண விளக்கத்து வரும் புறத்திணை, தொல்காப்பியத் தொகையும் வெண்பா மாலைத் தொகையுமன்றிப் புதுவது அன்றாம். எஞ்சிய வீரசோழியம், தொன்னூல் விளக்கம், முத்து வீரியமாம் ஐந்திலக்கண நூல்களின் புறத்துறைப் பகுதிகளின் அளவைப் பார்க்க இவ்வுண்மை புலனாம். புறத்துறை இடைக்கால—பிற்காலங்களில் நிகழ்ந்தில என எவரும் கூறார். ''தென்னாட்டுப் போர்க்களங்கள்'' என்று வெளி வந்துள்ள நூலில் உள்ள போர்களின் எண்ணிக்கையைக் கண்ட அளவானே போரற்ற அமைதி கொண்டிருந்தது தமிழகம் என எவரும் எண்ணார்! போரிலா நாடு புவிக்கண் ஒருகால் இனிமேல் தோன்றலாமே அன்றித் தோன்றி நின்றதில்லை!

அகவொழுக்க இயலில் வெட்சி, கரந்தை, வஞ்சி, காஞ்சி, நொச்சி, உழிஞை, தும்பை, வாகை எனப் புறத்திணை எட்டெனக் கூறி அவ்வெட்டையும் ஓரடி ஈரடி நூற்பா எட்டனால் கூறிய அளவில் நின்று விடுகிறார் முத்துவீரர்.

### யாப்பதிகாரம்

யாப்பதிகாரச் செய்யுளியலில் இவர் சவலை வெண்பா என ஒன்றனைக் கூறுவார்.

"அட்டாலும் பால்சுவையில் குன்றா தளவளாய்
நட்டாலும் நண்பல்லார் நண்பல்லார்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்க ளேசங்கு
சுட்டாலும் வெண்மை தரும்"

என்றும் பாட்டில் இரண்டாம் அடி இறுதிச் சீர் தனிச் சொல் இன்றி வருதலால் இதனைச் சவலை வெண்பா எனப் பின்னவர் எடுத்துக் காட்டுவதுண்டு. அந்நிலையில் இதற்கு இலக்கணம் வகுத்தற்குத் தூண்டப் பெற்றிருக் கலாம். முன்னரும் இதனை அறிந்துளோம்.

"இருகுறள் சவலை ஒருவிகற் பாகும்"

என்பது இவர் நூற்பா (908). அதற்குச் சிதம்பரச் செய்யுட்கோவையில் இருந்து மேற்கோள் காட்டுகிறார்:

"திருமுடியிற் கண்ணியும் மாலையும் பாம்பு
திருமார்பில் ஆரமும் பாம்பு
திருவரையிற் கட்டிய கச்சையும் பாம்பு
பொருபுயத்திற் கங்கணமும் பாம்பு"

இவர் இவ்வதிகார ஒழிபியலில் பாட்டியல் செய்திகளை யெல்லாம் விரித்துக் காட்டுகிறார். சிற்றிலக்கிய வகைகள் தொண்ணூறு காட்டி இலக்கணமும் கூறுகிறார்.

### அணியதிகாரம்

அணியதிகாரத்தில் சொல்லணிக்கு முதன்மை தருகிறார். சித்திரக்கவி, மடக்கு, திரிபு என்பவை பேராட்சி செய்த காலம் பத்தொன்பதாம் நூற்றாண்டு. போட்டி போட்டுக் கொண்டு சொல்லணியில் புலவர் காலம் தள்ளிய காலம். புரியாத அளவுக்குப் பாட்டுப் பாடப் பாடப் புலமைச் சிறப்பு என்னும் போலிமை தவழ்ந்த காலம். இது வீரமாமுனிவர் காலத்திலேயே நாட்டு நடைமுறையில் இருந்த காரணத்தால்அவர் சொல் லணிக்கே முதன்மை தந்து அணியிலக்கணம் படைத்தார்.

அவர் வழி இவர்க்கு வழிகாட்டியாக இருந்திருக்கக் கூடும். பொருளணிகளாக இவர் கூறுவன 58.

இவற்றுள் தண்டியலங்காரத்தில் கூறப்படாத அணிகள்: பலபடப் புனைவணி, கூடாமை அணி, தகுதியின்மையணி, தகுதியணி, பெருமையணி, சிறுமையணி, ஒன்றற்கொன்றுதவியணி, சிறப்புநிலை யணி, முறையில் படர்ச்சியணி, ஒழித்துக் காட்டணி, கூட்டவணி, இன்பவணி, துன்பவணி, அகமலர்ச்சியணி, இகழ்ச்சியணி, வேண்டலணி, மறையணி, பொதுமையணி, மறையாமையணி, உலகவழக்கு நவிற்சியணி, வல்லோர் நவிற்சியணி என்பன (முத்துவீரியம்; ஆராய்ச்சி முன்னுரை. பக். 22).

## உரை

முத்து வீரியத்தின் உரையாசிரியர் திருப்பாற்கடல் நாதன் கவிராயர் என்பவர். இவர் நெல்லைப் பதியினர். இவர் காலம் நூலாசிரியர் காலமே. சமயம் சைவம். இவர் இரேனியசு ஐயர் என்னும் செருமானியக் கிறித்தவத் தொண்டருக்குத் தமிழ் கற்பித்த ஆசிரியர். அரிய ஏட்டுச் சுவடிகளைத் தம் வீட்டில் வைத்திருந்து பதிப்பிப்பவர்களுக்குப் பரிந்து உதவிய பெருமைக்குரியவர். கவிராச நெல்லையப்பர் ஏடுகளும் இவர்தம் ஏடுகளும் தமிழ் வளம் சேர்த்த ஏடுகளுள் குறிப்பிடத்தக்கவை.

இவருரை பொழிப்புரை; சுருக்கமான உரை; வழக்கமாகப் பிறர்காட்டும் எடுத்துக் காட்டுகளை மட்டுமே காட்டாமல் திருவிளையாடற் புராணம், கலிங்கத்துப் பரணி, பெரியபுராணம், சிதம்பரச் செய்யுட்கோவை ஆகியவற்றில் இருந்து இவர் எடுத்துக் காட்டுத் தருவது குறிப்பிடத் தக்கது.

தொகைவகையால் கூறப்பட்ட அகத்துறைகளுக்கு நல்ல விளக்கம் தருகிறார். அவ்விளக்கம் திருக்கோவையாரை உட்கொண்டு கூறுவதாக அமைகின்றது.

திருக்கோவையார் எடுத்துக் காட்டவும் படுகின்றது.
(எ-டு) குறியிடங் கூறல்

என்பது, உட்கொண்டு வினாவிய தலைமகனுக்கு யாங்கள் சந்தனச் சாந்தணிந்து சுனைக்காவிகள் சூடித் தோகைகள் துயிலும் வேங்கைப் பொழிற்கண் விளையாடுவேம்; அவ்விடத்து நின்வரவறிய மயில் எழுப்புவாயாக எனத் தோழி குறியிடங் கூறல்.

**'' பனைவளர் கைம்மாப் படாத்தும் பலத்தரன் பாதம் விண்ணோர்**
**புனைவளர் சாரற் பொதியின் மலைப்பொலி சந்தணிந்து**
**சுனைவளர் காவிகள் சூடிப்பைந் தோகை துயில்பயிலும்**
**சினைவளர் வேங்கைகள் யாங்கள்நின் றாடும் செழும் பொழிலே''** (திருக். 154).

திருக்கோவையார்க்குப் பொழிப்புரை வரைந்தாற்போல் தொடர்ந்து இவர் வரைந்து செல்கிறார்.

நெல்லைப்பதியினர் நூலியற்ற வேண்டிக் கொண்டமையால், நூலாசிரியர், நூலியற்றத் தூண்டியவர், உரை கண்டவர் ஆகிய மூவரும் நட்புரிமை யுடையவராகத் திகழ்ந்திருக்கக் கூடும்.

## பதிப்பு

இதன் முதற்பதிப்பு 1889 இல் பழனியாண்டி என்பவரால் வெளியிடப்பட்டது. கு. சுந்தரமூர்த்தி அவர்கள் ஆய்வுரையுடன் கழக வழியாக 1972இல் மீண்டும் வெளியிடப்பட்டது.

# 38. சுவாமி நாதம்

---

## ஆசிரியர்

ஐந்திலக்கணமும் உரைக்கும் நூல்களுள் ஒன்று சுவாமிநாதம். இதன் ஆசிரியர் சுவாமி கவிராயர் என்பார். இவர் ஊர் கல்லிடையூர் எனப்படுகின்றது. அது நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த கல்லிடைக்குறிச்சி என்பதாகும்.

திருவாவடுதுறை சுப்பிரமணிய தேசிகர் திருக்குறிப் பின்படி இந்நூல் இயற்றப்பட்ட செய்தி பாயிரத்தால் புலப்படுகின்றது. சுப்பிரமணிய தேசிகர் என்பவர் மேலகரம் என்னும் ஊரினர். அவர் இளமையில் கல்லிடைக்குறிச்சியில் வாழ்ந்தவர். சுவாமி கவிராயரின் இரு மொழிப் புலமையையும் இலக்கண வன்மையையும் அறிந்து அவர் தூண்டுதலால் இவர் இந்நூல் இயற்றினார்.

## வரலாறு

இவர் மகனார் சிவசுப்பிரமணியன் என்பார். அவர் நாமதீப நிகண்டு, தொகை நிகண்டு என்பவற்றை இயற்றியவர். சுவாமி கவிராயரும் ஒரு நிகண்டு இயற்றி னார். அதன் பெயர் பொதிகை நிகண்டு. சுப்பிரமணிய தேசிகர் காலமே சுவாமி கவிராயர் காலம் ஆகின்றமை யால் அது பத்தொன்பதாம் நூற்றாண்டாகும். சமயம் சைவம் என்பது வெளிப்படை. ஒலிக்கு மூலம் 'அணுத்

திரள்' எனல் சமணக் கொள்கை என்பர். நாத காரியமாம் விந்தொலி என்பது சைவக் கொள்கை என்பர். இதற்கு ஏற்ப இவர் ''மூல முகிழ் நாத காரியமாம் விந்தொலி ஓர்ந்து எழுதின் எழுத்து'' என்று கூறுதலால் சைவ சமயம் என்பது மேலும் விளக்க மாம்.

## நூல்

நூலின் ஐந்திலக்கணங்களும் எழுத்ததிகாரம் சொல்லதிகாரமென முறையே பெயர் பெற்றுள்ளன. ஒவ்வோர் அதிகாரமும் மும்மூன்று உட்பிரிவுகளை உடையனவாய் அமைகின்றன. உட்பிரிவுக்கு 'மரபு' என்பது பெயர். அவை:

எழுத்ததிகாரம்: எழுத்தாக்க மரபு, பதமரபு, புணர்ச்சி மரபு.

சொல்லதிகாரம்: பெயர்மரபு, வினைமரபு, எச்ச மரபு.

பொருளதிகாரம்: அகத்திணை மரபு, கைகோண் மரபு, புறத்திணை மரபு.

யாப்பதிகாரம்: உறுப்பு மரபு, பாவின மரபு, பிரபந்த மரபு.

அணியதிகாரம்: பொருளணி மரபு, சொல்லணி மரபு, அமைதி மரபு என்பன.

பிள்ளையார் வணக்க வெண்பா ஒன்று முதலில் உள்ளது. சிறப்புப் பாயிரம் பொதுப் பாயிரம் ஆகியவை 11 எண்சீர் விருத்தங்களைக் கொண்டுள்ளது. இப் பாயிரமும் சேர்த்து 201 எண்சீர் விருத்தங்கள் நூலில் இடம் பெற்றுள்ளன. அமைதி மரபு ஒரே ஒரு பா. அதன் இறுதியில் அமைதி மரபு முற்றும் என்றுளது.

## உரை

இச்சுவாமிநாதத்திற்கு விரிவுரை ஒன்றுளது. அது, நூலில் முதல் 14 நூற்பாக்களுக்கே உள்ளது; விரிவுரையே. கரந்தைத் தமிழ்ச் சங்கப் பொழிலின் வழியே மேலும் சில நூற்பாக்களுக்கும் உரை கிடைத்துள்ளது. ஐந்ததிகாரங்களுக்கும் உரை இருந்திருக்கக் கூடும் என்பதற்குச் சான்றுண்மை கூறுவர். இவ்வுரை இயற்றியவர் பெயர் முதலியன தெரிந்தில.

## பதிப்பு

சுவாமிநாதம் தனி நூலாகவும், சுவாமிநாதம் மூலமும் விருத்தியுரையும் தனி நூலாகவும் அண்ணாமலைப் பல்கலைக்கழக வெளியீடாக வந்துள. முன்னதற்குப் பதிப்பாசிரியரும் உரையாசிரியரும், பின்னதற்குப் பதிப்பாசிரியரும் அறிஞர் செ. வை. சண்முகம் ஆவர். முன்னது வெளி வந்த ஆண்டு 1975 பின்னது வெளி வந்த ஆண்டு 1976.

தமிழ்ப் பொழிலில் சில பகுதிகளை வெளியிட்டவர் இ. கோவிந்தசாமிப்பிள்ளை. ஆண்டு 1924.

# 39. சந்திரா லோகம்

சந்திரா லோகம் என்பது வடமொழியில் அமைந்த அணியிலக்கண நூல்களுள் ஒன்று. அவ்வடமொழி நூல் காளிதாசரால் இயற்றப்பட்டதென்றும் சயதேவன் (கி.பி. 1200-1300) என்பாரால் இயற்றப்பட்டதென்றும் இருவேறு கருத்துகள் உள்ளன.

## ஆசிரியரும் நூலும்

சந்திரா லோகத்தை உரை நடையாகத் திருத் தணிகை விசாகப்பெருமாளையர் மொழி பெயர்த்து, 'அணியிலக்கணம்' எனப் பெயரிட்டு வழங்கினார். எடுத்துக்காட்டுகளைப் பாடலாக ஆக்கினார். இவ் இலக்கணத்தை நூற்பாவடிவில் ஆக்கியவர் முதத்துசாமி ஐயங்கார் என்பார். இவர் இராமநாதபுரம் பெரும் புலவர் மு.இராகவ ஐயங்காரின் தந்தையார் ஆவர். இந் நூலின் மூலம் 1909 இல் மதுரைத் தமிழ்ச் சங்கச் செந்தமிழ்ப் பிரசுரம் இருபத்தெட்டாவதாய் வெளி வந்தது. இவ்விருவரும் பத்தொன்பதாம் நூற்றாண்டினர்.

## வரலாறு

முத்துசாமி ஐயங்கார் நூற்றுக் கவனகர் (சதாவதானி) என்பதும் இராமநாதபுர அரசவைப் புலவர் என்பதும் மு. இராகவ ஐயங்கார்க்கும் அவர்தம் அம்மான் மகனார்

இரா. இராகவ ஐயங்கார்க்கும் ஆசிரியராக இருந்தவர் என்பதும் அறியத்தக்கன.

இவர் மாலிய சமயத்தர் (வைணவர்) ஆகலின்,

"அமிழ்தினும் இனிய தமிழ்மறை அருளிய
வகுளா பரணன் வனசமென் மலரடி
சிந்தைவைத் தியம்புவல் செய்யுட் கணியே"

என வாழ்த்தும் வருபொருளும் கூறுகின்றார். வகுளா பரணர் என்பார் மகிழம்பூவை அணிந்த நம்மாழ்வார்.

நூல்

சந்திராலோகம் 126 நூற்பாக்களைக் கொண்டுள்ளது.

"அணிதான் பொருள்சொல் எனவிரண் டவற்றுள்
பொருளணி ஒன்றே சிறப்பெனப் புகல்வர்"

என்று பொருளணியைச் சிறப்பிப்பது போலவே, அதன் இலக்கணத்தையே கூறினார். சொல்லிலக்கணப் பகுதியைச் சொன்னாரல்லர்.

தாம் கூறப்போகும் அணிகள் நூறு என்பதை மூன்றாம் நூற்பாவில் கூறுவதுடன் அந்நூறு அணிகளின் பெயர்களையும் முறையே கூறுகிறார். அம்முறையே முறையாய் இலக்கணமும் கூறி முடிக்கிறார்.

அணியின் பெயர்களைப் பெரிதும் தமிழ் வடிவிலேயே தந்திருப்பது பாராட்டுக்குரியது. அவ்வாக்கம் இவர்தம் சொல்லாக்கத் திறத்தை நன்கு வெளிப்படுத்துகின்றது. அணிகளைத் தொகுத்துக் கூறிய இடத்தில் தமிழாக்கம் செய்த இவர், இலக்கணம் கூறும் இடத்தில் திரிபு என்பதைப் பரிணாமம் எனவும், ஒன்றற்கொன்று உதவி என்பதை அன்னியோன்னியம் எனவும் சில அணிகளை மாற்றிக் கூறுவது மயக்கத்தை உண்டாக்கும்.

விசாகப் பெருமாளையரின் அணியிலக்கண நூலில் உள்ள சேர்வை அணியும், கலவையணியும் சந்திரா

லோகத் தமிழ் நூலில் இடம் பெறவில்லை. வடமொழிச் சந்திரா லோகத்தில் இவ்வணிகளைக் குறிப்பிடாமை காரணமாக இருக்கலாம் என்பார் பேராசிரியர் ச. வே. சுப்பிரமணியனார் (முந்நூல்களின் அறிமுகம் பக். 52).

## பதிப்பு

வெளிப்பாடு இலாத நூல்களை வெளிப்படுத்திப் பரப்பும் ஆர்வத்தால் 1979இல் ஐதராபாத்தில் நிகழ்ந்த அனைத்திந்தியப் பல்கலைக்கழகத் தமிழாசிரியர் மன்றக் கருத்தரங்கில் முனைவர் ச.வே. சுப்பிரமணியம் அவர்களால் வெளியிடப்பட்ட நூற்றொகுதியில் அடங்கியது சந்திராலோகம். இவ்வகையில் இதனை இரண்டாம் பதிப்பு என்க. நூலில், தமிழில் அணி இலக்கணம் (1-35) முந்நூல்களின் அறிமுகம் (36-62) என்பவை விரிந்த அளவில் இடம் பெற்றுள. குவலயானந்தம் 1, சந்திரா லோகம், குவலயா நந்தம்-2 என்னும் மூன்று நூல்களின் மூலங்களும் இடம் பெற்றுள்ளன. தமிழ் வடமொழி அணிகள், அணி இலக்கணங்கள் கூறும் அணிகள் முதலிய பின்னிணைப்புகளும் கொண்டுள்ளன.

## 40. மாணிக்கவாசகர் குவலயானந்தம்

**வரலாறு**

குவலயானந்தம் என்னும் பெயர் விளங்கும் அணியியல் நூல்கள் இரண்டனுள் ஈதொன்று. இதனை இயற்றியவர், 'மாணிக்க வாசகன் எனும் ஞானதேசிகச் சிவயோகி' என்றும் 'வாதவூரன்' என்றும் சிறப்புப் பாயிரப் பாடல்களால் சொல்லப்படுகிறார். இப் பெயர்களும். 'சிவன் உபதேசம் மனதினில் உணர்ந்தவர்' என்பதும், 'கூடல் வாழும் கொற்றவன் மீனத்துவசக் குரிசில் நண்பாய்த் தண்டமிழால் விளக்கும் என வாதவூரன் சாற்றினன்' என்பதும் நமக்கு மாணிக்கவாசகராம் வாதவூரரையே நினைவூட்டுகின்றன. இவர் வாதவூரராகவும் இருக்கலாம்; மாணிக்கவாசகர் என்னும் பெயரினராகவும் இருக்கலாம்; அவ்வூரும் பெயரும் கொண்டு அவர் தகவெல்லாம் இவர்க்குரைத்ததாகவே கொள்ள வேண்டியுள்ளது. இவர் சமயம் சைவம் என்பது கடவுள் வாழ்த்துகள், இயல் தோறும் வரும் வணக்கப் பாடல்கள் ஆகியவற்றால் தெளிவாக விளங்குகிறது.

'வரகுண பாண்டியன் என்பான் வேண்டிக் கொண்டபடி, வடமொழி அலங்கார நூலாகிய மீமாங்கிசையின் பொருள் உணர்ந்து அகத்தியமுனிவர் இயற்றிய சிவவியாகரணம் என்னும் நூலை முதல் நூலாகக் கொண்டு மாணிக்கவாசக சுவாமிகளால் குவலயானந்தம் என்ற பெயருடன் இலக்கணத்திற்கு இலக்கியமும் உரையுடன்

இயற்றப்பட்டது' எனச் சிறப்புப் பாயிரப் பாடல்களாலும் உரையாலும் அறிய முடிகின்றது. அகத்தியமுனிவரின் சிவவியாகரணம் பற்றி இந்நூல் கூறுவதே கூற்றுப் போலும்!

**நூல்**

இக்குவலயானந்தம் கடவுள் வணக்கமாக மூத்த பிள்ளையார், சிவபெருமான் வாழ்த்துகளை முதற்கண் கொண்டுளது. சிறப்புப் பாயிரமாக அகவல் 1, பதினான்கு சீர்க் கழிநெடிலாசிரிய விருத்தம் 1, எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் 1 ஆக மூன்று பாடல்களைக் கொண்டுளது. நூல் உறுப்பியல், அணியியல், சித்திர இயல் என மூவியல்களைக் கொண்டுளது. நூற்பாவால் அமைந்த இந்நூலில் முறையே 150, 120, 29 என 299 நூற் பாக்கள் உள்ளன.

உறுப்பியல் முதல் நூற்பா, உயர்திணை அஃறிணை முதலாக உயர்ச்சி தாழ்ச்சி சமம் ஈறாகிய உறுப்புகளைத் தொகுத்துக் கூறுகின்றது. அம்முறையே அவற்றின் இலக்கணத்தை விரித்துக் கூறுகின்றது.

அணியியலில் அத்தகு தொகை நூற்பா அணியியலுக்கு இல்லை. சித்திர இயலுக்கு உள்ளது. ஆதலால் அணி யியல் தொகுப்பு நூற்பா விடுபாடாகியிருக்கக் கூடுமெனத் தோன்றுகின்றது.

**'' ஊருதல் பறப்புதல் நடப்புதல் எனவே**
**மூவகை யாகும் உயிர்ப்பொருள் இனமே''**

என்கிறார் (உறுப். 8). நீர்வாழியை ஊருதலுடன் இயைத்துக் கொள்ள நேர்கின்றது. வேற்றுமை ஏழெனக் கொள்கின்றது (உறுப். 33).

**'' அவன்இவன் என்பது தாகும் ஒருமொழி ''**

**'' அவர்இவர் என்பது தாகும் பெருமொழி ''**

**"அவர்கள் இவர்களென் றாவது திரள்மொழி"**

(உறுப். 73-75)

என மூவகை மொழிகளைக் குறிக்கிறார். இவை சொல் லீறுகளைக் கொண்ட வகை என்க.

**"பெயர்ச்சொல் பலவும் காரணச் சொல்லே"**

(உறுப். 105).

என்கிறார்.

**"ஒப்பனை கொள்வது உபமேயப் பொருள்**
**ஒப்பனை ஆவது உபமானப் பொருள்"** (உறுப். 109).

என்பதும்,

**"இலக்கணம் கருத்து இலக்கியம் அதில்நெறி"**

(உறுப். 111).

என்பதும் புதுவகை அமைதிய.

**"நீர்தேயு வாயு மூன்றும் உயிர்ப்பொருள்**
**நிலம்விண் இரண்டும் உயிரிலாப் பொருளே"**

(உறுப். 123)

என்பது வியப்பாக உள்ளது. ஆனால் இவர்,

**"ஊருதல் நீர்;தேயு நடப்புதல்;வாயு**
**பறப்புதல் என்றும் புகர்ந்தனர் புலவர்"** (உறுப். 124)

என்கிறார். உயிர்ப்பொருள் இனமே என்றது எண்ணத் தக்கது. இதனைப்போல் இவர் தரும் இயற்கை, செயற்கை விளக்கமும் புதுமையே (உறுப். 125-127). 'கடம்' குடமாயதாகக் குறிக்கிறார் :

**"கடமெனும் ஒலிசொல் கடம் எனும் ஒலியைக்**
**குடமென அறிவது சொற்பய னாகும்"**

என்பது அது (உறுப். 132).

அணிகளின் பெயர் பெரும்பாலும் வடமொழிப் பெயராலேயே குறிக்கிறார்.

'காவியப் பொருள் ஒழி அணி' என்பதை,

**"மலையது பறக்கின் மாருதம் அதனின்
மரங்கள் இருக்க வழக்கிலை என்பது
காவியப் பொருளொழி யாகக் கருதுவர்"**

என்கிறார் (அணி. 86). காவியங்களில் கூறப்படும் செய்தி களைக் காரணம் கூறி விலக்குவதாகலாம். 'அற்ப மகிட்சி' என்றோர் அணிப்பெயர் கூறுகிறார். வீரசோழிய வழி இது. குன்றக்கூறல் முதலாக ஈரைங் குற்றம் இவை யெனக் கூறும் இவர் தனித்தனி நூற்பாக்களால் அவற்றை விளக்குகிறார் (சித். 18-28).

அறிஞோர் (சித். 19, 29), தின்மை (உறுப். 20) என அரிய ஆட்சிகள் சிலவற்றைக் கொண்டுளார்.

## பதிப்பு

''திருமயிலை அம்மை ஆண்டியப்பக் கிராமணி குமாரர் அண்ணாசாமி உபாத்தியாயர்'' இதனைப் படி எடுத்தவர் என்பதும், கைப்படியை ஏட்டுப்படியுடன் ஒப்பிட்டவர், சாமிநாதையர் நூலகத் துணைப் பாது காவலர் மு. கோ. இராமன் என்பதும் ஆய்வுரையுடன் முதற்கண் அச்சிட்டவர் அறிஞர் ச. வே. சுப்பிரமணியனார் என்பதும் அறியத்தக்கன. வெளிவந்த ஆண்டு 1979.

# 41. அப்பைய தீட்சிதர் குவலயாநந்தம்

காளிதாசரால் இயற்றப்பட்ட வடமொழிச் சந்திரா லோகத்திற்கு உரையெழுதினார் அப்பைய தீட்சிதர் (கி.பி 1520—1593). அவ்வுரை நூலுக்குக் குவலயாநந்தம் எனப் பெயரிட்டு வழங்கினார். அதனை எட்டையபுரம் அரசவை வடமொழிப்புலவர் சங்கர நாராயண சாத்திரியார் 1889இல் தமிழில் மொழி பெயர்த்தார். அப்பெயர்ப்பைத் தமிழ்ச் செய்யுள் வடிவில் அவ்வர சபைக் க்விஞராக விளங்கிய முகவூர் மீனாட்சி சுந்தரக்கவிராயர் செய்தார். இந்நூல் எட்டையபுர மன்னர் சகத்வீர ராமவேங்கடேசுவர எட்டப்பர் சிறிய தந்தையாரும் இளவரசருமாகிய வேங்கடேசுவர எட்டுப் பாண்டியன் வேண்டுதலால் உ. வே. சீனிவாசாசாரியார், ஆனூர் சிங்காரவேலு முதலியார் ஆகியவர்களால் 1895இல் பதிப்பிக்கப்பட்டது. அதன் இரண்டாம் பதிப்பு 1979இல் ச. வே. சுப்பிரமணியரால் கொண்டு வரப்பட்டது.

## நூல்

'சந்திராலோகம்' என்பது மூலநூல் பெயராயினும், அப்பைய தீட்சிதர் கொண்டவாறே 'குவலயாநந்தம்' எனப் பெயர் பெற்றது. ஆதலால் அப்பொருளே பொருளாக உடையது என்பது வெளிப்படை.

இந்நூல் கட்டளைக் கலித்துறை யாப்பால் அமைந்தது. 167 பாடல்களையுடையது. தேவி

வணக்கத்தை முதற்கண் கொண்டுளது. உவமை முதல் ஏதுவணி முடிய இலக்கணமும் எடுத்துக்காட்டும் உள்ளன. சுவை முதல் எடுத்துக்காட்டுப் பிரமாணம் முடியவுள்ள 15 அணிகளுக்குச் சான்று காட்டப்படவில்லை. சேர்வை முதல் ஒரே சொல்லை அணுகி விளங்கும் கலவை முடியவுள்ள 5 அணிகளுக்கு உரைநடையிலேயே இலக்கணம் உள்ளது.

கட்டளைக் கலித்துறை ஒவ்வொன்றும் எட்டையபுரம் மன்னரை முன்னிலைப் படுத்திப் பாடுவதாய் அமைந்துள்ளது.

**'' திருவளர் எட்டபுரம்வாழ் குமரெட்ட சீதரனே''**

என்பது இரண்டாம் பாடல் விளி. ''சிந்தைக்கு இசை எட்டமகேள்'' என்றும் விளித்துப் பாடுகிறார் (12). எடுத்துக்காட்டுகளையும் அவ்வக் காரிகையிலேயே வைக்கும் இவர், அதனை 'இலக்கியம்' என வழங்குகின்றார். உதாரணம் என்பதையும் காட்டு என்பதையும் வழங்குகின்றார்.

# 42. அறுவகை இலக்கணம்

மூன்றிலக்கணம் ஐந்திலக்கணமாக வளர்ந்த செய்தி அறிந்ததே. இவண், ஆறாம் இலக்கணமெனப் புலமை இலக்கணம் ஒன்றனையும் சேர்த்து அறுவகையிலக்கண நூல் எழுந்தமை காணலாம்.

## ஆசிரியர்

இந்நூலை இயற்றியவர் வண்ணச்சரபம் தண்டபாணி அடிகளார். இவர்தம் பிள்ளைப் பெயர், சங்கரலிங்கம் என்பது. நெல்லையைச் சேர்ந்த இவர் வண்ணச் சரபமென (இசைபாடும் எண் கால் புள்ளென)த் தமிழுலாக் கொண்டார். வள்ளலாரொடும் தொடர்பு கொண்டிருந்தார். விழுப்புரத்தை யடுத்த திருவாமாத் தூரில் ஒடுக்கங் கொண்டார். இவர்தம் வழிமுறையர் அனைவரும் இவர் ஏட்டுச்சுவடியைக் காக்குமளவில் நில்லாமல் பாட்டுத் திறத்திலும் ஓங்கி வந்திருத்தல் உவகைக்குரிய செய்தியாம். இவர்தம் பெயரரும் கொள்ளுப் பெயரரும் வாழும் புலவர்கள். முன்னவர் முருகதாச ஐயா; பின்னவர் தி. மு. சங்கரலிங்கம்.

அடிகளார் காலம் நூற்றாண்டாகச் சொல்ல வேண்டிய நிலையில் இல்லை. வீரமாமுனிவர் வரலாற் றைக் கூறித் தமிழ்ப் புலவர் வரலாற்றுக்கென வருந்திய வருத்தம் இல்லாவாறு செய்யும் ஒரு வரலாறுடையார் தண்டபாணி அடிகளார். அவர் காலம் 22-11-1839—

5-7-1898. பட்டினத்தாரெனக் குறியிறைக் கோல வுடையராகத் திகழ்ந்தவர் அடிகளார். இவர் பொழிவ தெல்லாம் பரமே! முத்துக் கோத்தாலென எழுத்துகள்! இலக்கம் பாடல்கள் இருக்கும் போலும் கிடைத்தவை மட்டும். வண்ணம் பாடுதலுக்கென மீள வந்த அண்ணல் அருணகிரி வண்ணச்சரபம்! இலக்கிய வகைகளை எண்ணிக் கொள்க என வாழ்ந்த தமிழ் ஞானசம்பந்தருக்குப் பின்னே புத்திலக்கிய வகைகளைப் பெருக்க வந்த புகழ் ஞானசம்பந்தர்!

இவர் பாடிய புராணத்தில் ஒரு பகுதி கண்கண்ட புலவர் சருக்கம். அதில் இடம் பெறுபவர் வள்ளலார், பெரும்புலவர் திரிசிரபுரம் மீனாட்சி சுந்தரனார், கவி குஞ்சர பாரதி, மாம்பழக் கவிச்சிங்க நாவலர் முதலியோர் எனின் இவர் காலச்சூழல் எத்தகையது?

## நூல்

அறுவகை இலக்கண முதற்பகுதி காப்பும், பாயிர முமாம். 12 பாடல்களையுடையது. இறுதியில் ஒரு கலித்துறைப்பா.

எழுத்திலக்கணம் (165), சொல்லிலக்கணம் (112), பொருளிலக்கணம் (122), யாப்பிலக்கணம் (134), அணி யிலக்கணம் (109), புலமை இலக்கணம் (144), ஆகியவை 786 நூற்பாக்கள். ஆக நூன் முழுமையும் 799 பாடல் களாம். ''நவ நூலொன்று எழுநூற்றெண்பத்தாறு சூத்திரத்தால் நவின்றிட் டேனே'' என்கிறார் ஆசிரியர் (சி. பாயி).

''ஐந்தே இலக்கணமென் றாயிரம்பேர் கூறிடினும்
செந்தேனென் றாறுவிதம் செப்புவிப்ப — தெந்தேகத்
துள்ளும் புறம்பும் ஒளிரும் ஒருபொருட்சீர்
விள்ளும் குருபாத மே''

என்பது காப்புப் பாடல். தம் தனித்தன்மையையும் அது திருவருளால் நிகழ்ந்த தென்பதையும் சுட்டுகிறார். ஆக்கியோன் பெயரும் நூற்பெயரும்:

**" மன்னுபுகழ் நெல்லைநகர் வாழ்முருக தாசனெனப்
பன்னுதண்ட பாணிப் பரதேசி — உன்னும்
குறுமுனிவன் தன்னருளால் கூறுமிந்த நூற்பேர்
அறுவகையி லக்கணமா மே"**

**எழுத்திலக்கணத்தில்** உரு ஓசை இயல்பு, நிலையியல்பு, புணர்ச்சி இயல்பு என மூவியல்பு கொண்டுளார்.

உரு ஓசை இயல்பில் அகர முதல் னகரம் ஈறாம் எழுத்துகளின் உருவத்தையும் ஒலியையும் இவர் கூறுதல் புதுமையாகத் திகழ்வதுடன், எழுத்து வடிவக் காப்பாக என்றும் போற்றிக் கொள்ள வாய்ப்பதுமாம்.

அகர ஆகார உருவும் ஓசையும் பற்றிய நூற்பா:

**" கிளிமுகம் போலச் சுழித்துக் கீழ்க்கொணர்ந்
திடப்பால் நீட்டி மேல்வேளைத் திடைவெளி
அமைதர வலத்தீர்த் தம்முகம் அடங்க
மேலீர்த் தம்முறை கீழும் ஈர்த்தல்
அகரக் குறியாம்' ஆனிளங் கன்றிற்
கிரங்கலில் மூலத் தெழும்காற் றுணைக்கொடு
சிறிது வாய்திறந் தொலிக்கும்; அக்குறியின்
ஈற்றில் வரைநுனி யிலங்க வலந்தொட்
டிடம்வரை சுழித்தல்ஆ காரத் தியல்பாம்
அவணெழுந் திருமடங் காமிதன் தொனியே" (7)**

சுழிபோடுதல், சுழியைக் கீழே கொண்டு வருதல், இடப்பக்கம் நீட்டல், மேல் வளைத்தல், இடைவெளி அமைய வலப்பக்கம் இழுத்தல், இழுத்தகோடு நீளாமல் அடங்குமாறு மேலே இழுத்தல்; அவ்வாறே கீழும் கோடு இழுத்தல் — இவை அகர வடிவாகும். இளங்கன்றுக்கு இரங்கும் ஆவின் உணர்வொடு கூடிய மூலக்காற்று சிறிது வாய் திறந்த அளவான் வெளிப்படுதல் ஒலிவடிவாம்.

முன்னே சொல்லிய அகர வடிவின் இறுதியில் மலையின் சரிவென விளங்குமாறு வலத்திலிருந்து இடம் வரை சுழியிடல் ஆகார வடிவாகும்; அவ்வாவின் ஒலி இரு மடங்காதல் ஒலியாகும்.

எழுத்தை ஓவியமாக்குதல் இங்குப் புலப்படும். இம் முயற்சியில் தொல்காப்பியர் ஊன்றியிருப்பின் வடிவம், அதன் மாற்றம் பற்றிப் பலப்பலரும் பலப்பல பேசும் ஒரு நிலை தோன்றியிருக்கவே முடியாது போயிருக்கும் என்பது தெளிவாம்.

இப்பகுதியிலேயே தமிழ் எண்களைப் பற்றியும் அவற்றின் எழுத்து வடிவம் பற்றியும் விரிவாக வரைகின்றார் (36-58). இனி எழுத்தின் நிலையியல்பு, புணர்ச்சி இயல்பு என்பவற்றுடன் எழுத்திலக்கணத்தை நிறைவு செய்கின்றார்.

**சொல்லிலக்கணத்தில்** பொது இயல்பு, பிரிவு இயல்பு சார்பியல்பு, திரிபியல்பு என நான்கு இயல்புகளைக் கூறுகிறார்.

சொற்களைத் தனிப்பொறி, புணர்பொறி என இரண்டாக்குகிறார். தறை, தரை; உழி, உளி; வனம் வநம் — இவற்றை இருவகையாக எழுதியும் பேசியும் வருதல் பொருந்தாது என்கிறார். எதுகை கருதியும் இதனைப் பயன்படுத்தல் ஆகாது என்பது இவருட்கிடை போலும். ஏனெனில் எதுகைக்கெனப் பெரும் புலவரும் பயன்படுத்தியுள்ளனர் ஆகலின். சில திரிபுச் சொற்கள் உரைநடை, வண்ணம், நாடகம் ஆகியவற்றில் வரினும் செய்யுளில் வாராமை வேண்டும் என்கிறார் (5) மருமகன், மருகன் ஆதலையும் துளவு துழாய் ஆதலையும் திரிபென ஏற்கிறார். வாழ் நனை வாணன் எனத் திரிப்பதைப் பிழை யென்கிறார் (87).

**பொருளிலக்கணம்:** அகப்பொருளில், உறுப்பியல்பு, குறிப்பியல்பு, பழமையியல்பு, துறையியல்பு, என்பனவும்,

புறப்பொருளில், நிலத்தியல்பு, உழியியல்பு, வேற்று யிரியல்பு, கருவியியல்பு, தொகுப்பியல்பு என்பனவும், அகப்புறப் பொருள் நிலையும் கூறப்படுகின்றன.

**'' பூவில் மணமெனப் புனிதத் தமிழினுக்(கு)**
**ஆவி யாகும் அகப்பொருள் இயல்பே ''**

என்கிறார் (4). குழல் முதல் அடிவரை உறுப்புகளை உவமைப்படக் கூறுவது உறுப்பியல்பு. (உவமான சங்கிரகம் காண்க). ஏழ்பருவ இயல் கூறல் குறியியல்பு; மகளிர் வயப்படும் மாந்தரியல் பகர்வது பழமை யியல்பு. காண்டல் ஐயம் முதலியவை கூறல் துறை யியல்பு. நிலத்தியல்பு என்பது குறிஞ்சி முதலியன. உழி என்பது அருந்தவர் அந்தணர் முதலியோர் இருப்பிடம் பற்றியன. வேற்றுயிரி என்பது விலங்கு பறவை பற்றியன.

**யாப்பிலக்கணத்தில்** இயலிசைத் தமிழியல்பு, நாடகத் தமிழியல்பு, வண்ணவியல்பு, மோனை இயல்பு, எதுகை யியல்பு, நாற்கவியியல்பு, பனுவல் இயல்பு என்பவை கூறப்பட்டுள்ளன.

**'' மோனை இல்லா முத்தமிழ்ப் பாட்டு**
**நாண மில்லா நங்கையொப் பாமே ''** (96)

**'' பனுவலின் முகத்துத் திலகம் போல்வது**
**பாயிர மாமெனப் பகரத் தகுமே ''** (120)

இவை மோனையும், பாயிரமும் பற்றியன.

**அணியிலக்கணம்** உவமையியல்பு, உடைமை இயல்பு, கற்பனை இயல்பு, நிகழ்ச்சியியல்பு, ஆக்கவியல்பு என்பவற்றை விரிக்கின்றன.

**புலமையிலககணம்** நூற்காப்பு, தவறியல்பு, மரபு இயல்பு செயல்வகை இயல்பு, நடுநிலை, எதிர்நிலை, அருள்நிலை என்னும் பகுப்புகளைக் கொண்டது.

**'' தமிழ்ச்சுவை அறியாத் தெய்வம் உளதெனில்**
**அஃதுணர் அலகையில் தாழ்வெனல் அறமே ''** (30)

" காசுப் புள்ளென இனத்தொடு கலவாது
ஞாளிபோற் பகைக்கும் நாவலர் பலரே " (38)

" கால வேற்றுமை கருதாப் புலவன்
சீலனே எனினும் சிறுமை யினனே " (51)

" தமிழ்மொழிக் குயர்மொழி தரணியில் உளதெனில்
வெகுளியற் றிருப்போன் வெறும்புல வோனே " (63)

இவை புலமை இலக்கணத்தில் உள்ளவை. இன்றும் என்றும் எண்ணிப் பார்க்க வேண்டியவை. இந்நான்குதாம் இத்தகைய என்பவில்லை. எல்லாமும் சீர்மையவே. புலவரென்பார் அனைவரும் போற்றிப் பயின்று கடைப்பிடியாகக் கொள்ளத்தக்கவை புலமையிலக்கணப் பகுதிகள்.

துறவோர் மெய்ந்நூல் கண்டதுண்டு; புகழ் நூல் யாத்தவையுண்டு; தொன்மம் பாடியதுண்டு. ஆனால் இலக்கண நூல் செய்தார் எவர்? சமணத் துறவோர் இலக்கணம் பலப்பல இயற்றியவை பழஞ்செய்தி. இம் மண்ணின் மணமாய் விளங்கிய சமயத் துறவோர் எவர் செய்தார்? தண்டபாணி அடிகளார் செய்தார். ஈசான தேசிகர் இலக்கணக் கொத்துச் செய்திலரோ என்பார் குரல் கேட்கவே செய்கிறது! ஆனால் தமிழ் வண்ணச் சரபத்தினரைச் சுட்டிக் காட்டும் இடத்தே, தொட்டுக் கூறவும் கூடாத தமிழ்ப் பழி தேடிக் கொண்டாரே அவர்! அன்றியும் இலக்கணக் கொத்தினை நூலெனக் கூறமுடியுமோ?

தமிழை அறியாத் தெய்வம் உண்டு என்று எவரேனும் கூறினால், அத்தெய்வத்தைத் தெய்வம் என்னேன்; அலகை (பேய்) அது என்பேன் என்னும் துறவோர் பிறர் எவர்?

தமிழ்ப் பற்றிற்கு ஓர் அளவுகோல் வைக்கின்றாரே! உலகத்து உயர் மொழி தமிழே; அதனை உணரான் 'புலவன்' அல்லன்; 'புலவோன்' (தசைப் பிண்டம்)

என்கிறாரே! இளங்கோவடிகளுக்குப் பின்னர் வாய்த்த தமிழ்க் காதல் துறவி வண்ணச் சரபம் தண்டபாணி அடிகளார் என்க.

## பதிப்பு

அறுவகை இலக்கணம் அட்டாவதானம் பூவை. கலியாணசுந்தர முதலியாரால் 1893 இல் பதிப்பிக்கப் பட்டது (விசய, கடகரவி). அப் பதிப்பு ஆறாம் இலக்கணத்தின் பின்னே ஏழாம் இலக்கணமொன்றும் உடையது. அது அறுவகை இலக்கணத்தின் ஒழிபும் விரிவுமாம். அடுத்த பதிப்பு சிரவை ஆதீனம் கௌமார மடாலயம் தவத்திரு சுந்தரம் அடிகளார் பொன்விழா வெளியீடாக 1978 இல் வெளி வந்தது. முதற் பதிப்பில் இருந்த சிறப்புப் பாயிரங்கள் (பேராசிரியர் கந்தசாமியார், பூவை. கலியாணசுந்தரர் பாடியவை) இப்பதிப்பிலும் இடம் பெற்றுள்ளன. புதிய குறிப்புரை, ஆய்வுரை ஆகியவை பொருந்தியுள.

# 43. விருத்தப்பாவியல்

*வீரப்ப முதலியார் என்பவரால் இயற்றப்பட்ட நூல் இது. இவர் சென்னை உயர்மன்றத்தில் வழக்குரைஞ ராக விளங்கியவர். 1938 இல் வெளியிட்டுள்ளார்.*

*இவர் தமிழ் விருத்தத்தின் வளர்ச்சியை மிக விரிவாக ஆய்ந்து ஆங்கிலத்தில் எழுதியுள்ளார்* (11—32).

நூல்

**" கன்ன லின்சுவை வேம்பங் கனியினால்**
**தங்ந லங்கள் சிறந்துத யங்கல்போல்**
**என்னின் நாவலர் ஏற்றம் விளங்குமால் "**

*என்பது போல அவையடக்கம் 7 பாடல்கள் பாடுகின்றார். விருத்தப்பாவியல் 12 படலங்களாகப் பகுக்கப்பட்டுள்ளது.*

*அறுசீர்க் கழிநெடில் வகையை முதற் படலத்தில் அவ்வவ் விருத்தப் பாவால் விளக்குகிறார். இவர் இலக்கணம் அமைக்குமாறு:*

**" சீர்வளர் கமலச் செல்வி திகழ்தரு வதனக் கொண்மூக்**
**கார்வள மலிந்த கூந்தல் கன்னலும் கசக்கும்**
**இன்சொல்**
**ஏரிளங் கொங்கை மின்னேர் இடையெழிற் கொடியம்**
**பேதாய்**

சீர்விள மாச்சீர் தேமாச் சீரிணைந் திரட்டு மீங்கே ''
என்று பாடலைக் கூறி இலக்கணம் உரைநடையில் கூறுகிறார். அதனை வேண்டுமளவால் விளக்கி எடுத்துக் காட்டுத் தருகிறார்.

ஒவ்வொரு வகைப் பாவிலும் எத்தனை எத்தனை, எவ்வெவ் வகை யாப்பால் வரும் என்பதை விளக்கிச் செல்கிறார்.

இவர் கூறும் விருத்த வகைகள்: அறுசீர்க்கழிநெடில், கலித்துறை, எழுசீர்க்கழிநெடில், எண்சீர்க்கழிநெடில், கலிவிருத்தம், சந்தவுறுப்பு, சந்தவிருத்தம், சந்தக்கலித் துறை, அறுசீர்ச்சந்தவிருத்தம், எழுசீர்ச்சந்தவிருத்தம், எண்சீர்ச்சந்தவிருத்தம் என்பன. இறுதியில் ஒழிபியலும் கூறுகின்றார்.

காஞ்சிப்புராணமும், கந்தபுராணமும், பாரதம், இராமாயணம், தேவாரம் ஆகியவை மேற்கோளில் பெரிதும் இடம் பெறுகின்றன.

# 44. மாணவர் தமிழ் இலக்கணம்

---

திருமலைவேற் கவிராயர் மைந்தர் சங்குப் புலவர் என்பார் கல்விகற்கும் பள்ளி மாணவர்க்கென 'மாணவர் தமிழ் இலக்கணம்' என்னும் பெயரிய நூலொன்றி யற்றினார். அது 1962 இல் வெளிவந்தது. ஆசிரியர் காலம் 1893-1968 பண்டித வித்துவான் பட்டம் பெற்றவர். பன்னூலாசிரியர்.

**நூல்**

மாணவர் தமிழிலக்கணம் எழுத்து, சொல், பொருள் எனும் முப்பகுப்பில் உள்ளது. மொத்த நூற்பாக்கள் 313.

எழுத்ததிகாரம் எழுத்தியல், நிலையியல், பிறப்பியல் என்னும் மூன்றியல்களையும் சொல்லதிகாரம் பெயரியல், வேற்றுமையியல், வினையியல், உறுப்பியல், இடையியல், பொதுவியல், புணரியல் என்னும் ஏழியல்களையும், பொருளதிகாரம் அகவியல், புறவியல் செய்யுளியல், அணியியல் என்னும் நான்கியல்களையும் உடையது.

**'இளமை மாணவர் இலக்கணம் இயம்ப'**

என்பது ஆசிரியர் நூலியற்றிய நோக்கைப் புலப்படுத்தும். நூன்முகப்பில் பிள்ளையார், கலைமகள் முருகன் வணக்கங்கள் உள்ளன. எல்லாமும் நூற்பாவால் இயன்றனவே.

" இப்பொருள் இவ்வா றிருக்குமென் றறிய
அப்பொருள் இயற்கையை அறைவதே இலக்கணம்"

*என்கிறார்* (2).

" முதனிலை செயலின் பொருள்புலப் படுத்தும்"

" இடைநிலை காலம் இதுவெனக் காட்டும்
எதிர்மறை காட்டும் இடைநிலை யும்உள"

" இறுதிநிலை திணைபால் எண்ணிடங் காட்டும்"

*இவை உறுப்பியலில் இடம் பெற்றவை* (2-4).

" காலங் காட்டும் இடைநிலை யோடு
விகுதியும் மறைந்த பெயரெச்சம் வினைத்தொகை"

*என்பது வினைத்தொகை இலக்கணம் (சொல். பொது. 6).*

" சொல்லே ஆயினும் சொற்றொட ராயினும்
பாவின் முதலிடை கடையெனப் பட்ட
இடங்களில் நின்று மடங்கி வந்து
பலபொருள் தருமெனின் மடக்கெனப் படுமே"

*என்பது மடக்கணி இலக்கணம்.*

*ஆசிரியர் நோக்கு புதுமைகாணல் அன்று. எளிமையாக்கல் அதில் வெற்றி பெற்றுள்ளமை வெளிப்பாடு.*

# 45. தமிழ் இலக்கணக்கும்மி

புலவர் துரை கனகசபை என்பவர் பழைய இலக்கணச் செய்தியைப் புதிய யாப்பு வகையில் கூறிய நூல் இது. 1970இல் இந்நூல் வெளிவந்துளது. நூல் இயற்றப்பட்ட நோக்கம், யாப்பு பற்றி நூன்முகத்தில் குறிப்பிடுகிறார்:

''நூற்பாவினால் ஆக்கப்பட்டுக் கடின நடையில் அமைந்த அதனை (நன்னூலை) அவர்கள் (மாணவர்கள்) கற்கும் போதெல்லாம் குன்று முட்டிய குருவியினைப் போன்று பெரிதும் வருந்தி''யதை உணர்ந்து இந்நூல் செய்ததாகக் குறிக்கிறார்.

''எதுகையும் மோனையுமற்று எளிமையும் இனிமையு மின்றி நூற்பா வடிவிலுள்ள அந்த நன்னூலை அதன் வழி நின்றே கவிதை வடிவில் சிறிது மாற்றி''யமைத்தல் நலமென எண்ணினாராம். அதன் வெளிப்பாடே இலக்கணக் கும்மி என்கிறார்.

நன்னூலின் நூற்பா பற்றிய இவர் மதிப்பீடு இது என அமைதலே சாலும்! எளிமைப்படுத்தித் தரவேண்டும் என்ற இவர் நோக்கு பாராட்டுக்குரியது. இதனை நன்னூலுக்கு வழிநூல் என்கிறார். முருகன் அடிமையென மொழிகின்றார். இதனால் இவர் சமயம் புலப்படும்.

இந்நூல் நன்னூலைப்போல் எழுத்திலக்கணம் சொல் இலக்கணம் என்பவற்றை ஐந்தைந்து இயற்படியே பாடு கிறார். கும்மி என்பது தலைப்பில் இருப்பினும் குறவஞ்சி

விருத்தமும் சில உள. வணக்கமும் அவையடக்கமும் நீங்கலாக 362 பாடல்கள் உள்ளன.

முதற்பாட்டு :

"கற்பவை கசடறக் கற்பதற்குப்—பயன்
படுவதே இலக்கணம் அஃதெழுத்து
சொற்பொருள் யாப்பணி எனக்கிளியே—ஐந்து
வகைப்படும் நமது தமிழகத்து"

கடைசிப் பாட்டு :

நல்லமுனிவர் பவணந்தியார்—தந்த
நன்னூலி லுள்ள இலக்கணத்தை
எல்லோரும் நன்கு தெரிந்துகொள்ள—இந்த
இலக்கணக் கும்மி வழியாமே!

இப்பாடல்களுக்கு ஆசிரியர் பொழிப்புரை எடுத்துக் காட்டு ஆகியவற்றையும் தந்துள்ளார்.

கால வளர்ச்சிக்கு ஏற்பப் புதுவன புகுதல் சிலவேனும் நேர்ந்திருப்பின் எளிமைப்படுத்தியதுடன் தொண்டாகவும் விளங்கியிருக்கும், இதனை முகவுரையில் சுட்டினாரும் உளர்.

# 46. தமிழ் நூல் (தமிணூல்)

இந்நூல் பாவும் உரையும் கொண்டது. முழுத்தமிழ் எழுத்து சொல் தொடர்ப் புதுவிலக்கணம் என்னும் குறிப்புடையது. ''பா நூற்று உரை யியற்றுநன் இலக்கணப் புலவன் த. சரவணத்தமிழன்'' என்னும் பொறிப்புடையது. திருவாரூர் இயற்றமிழ்ப் பயிற்றக வெளியீடாக 1972 இல் வெளிவந்தது. (தி. பி. 2003) வாழும் புலவர் இவர். பெயருக்கு ஏற்பத் தமிழராகவே அமைந்தவர்.

நூன்முகப்பில் படையற்பா, கடமைப்பா, கிழமைப்பா, நன்றிப்பா என நாற்பாவுடையது. நூல் எழுத்தியல், சொல்லியல், உறுப்பியல், புணரியல், பொதுவியல், ஒழிபியல், தொடரியல் என ஏழியல்களையுடையது. மொத்த நூற்பாக்கள் 433. முன்னும் பின்னும் சேர 445 நூற்பா.

**'' பழமை புடைத்துப் புதுமை தூற்றி**
**முழுமை கொள்ளச் சமையல் செய்த**
**தமிழ்நூல் என்னுமிவ் விலக்கண உணாவை**
**உலகம் முழுதும் உறையும்**
**தமிழர்க் கமையப் படையல்செய் வேனே''**

எனப் படைக்கிறார். இது முன்னின் முன்.

**'' பாரையே மயக்கிய மாமொழிப் புரட்டாம்**
**ஆரிய வேரைப் பீறிய அரிமா**
**ஞா.தேவ நேயப் பாவாணர் நூல்கள்**
**ஆவலும் அறிவும் தமிழினில் ஆக்கும்''**

என்பது பின்னின் பின்.

''தமிழ் நூல் எனப்பெயர் தந்தது தமிழ் நூல்களைப் பயிலுதற் காய கருவிநூல் எனற்கே. அன்றியும் தமிணூல் (வாழ்நன்—வாணன்) எனத் திரித்துக் கூறித் தனிப்பெயர் ஆக்கலூம்'' என்கிறார் ஆசிரியர் (18).

நூல் தோன்றுதற் காரணத்தையும் ஆசிரியரே கூறுகிறார்:

''இலக்கண நூல் தொடர் பிடையீட்டாலும், பாடத் திட்டங்குறித்த வகுப்பிலக்கண நூல்களின் பிழைபாட்டாலும், எழுத்துச் சீர்திருத்தம், பொருள்தரா உறுப்புக் கூறு, தொகையின் சேனாவரையத் தகைமை, செய்தித் தாள்களின் மொழிக் கொலை, புதுப் பொதுச் செய்திகள், தவிரத்தக்கன தழுவத்தக்கன, தொடர்ப்பாடு ஆகியவற்றின் புதுக்கம் நோக்கி எழுந்தது நூற்காரணம் என்க'' என்பது அது (19).

வரிவடிவ மாற்றம் (37-43), சொற்றிரிபு (320-335), வழுவமைதி (336-342), தொடரமைதி (382-414), நிறுத்தக் குறிகள் (415-433) என்பவை இக்கால இலக்கண மொழிப் பயிற்சி உரைநடை நூல்களிலன்றிப் பழைய இலக்கணங்களில் காணப்படாதவை. தொன்னூல் விளக்கம், அறுவகை இலக்கணம் என்பவை சில பல புதுநெறிகளைக் கொண்டிருப்பினும் அவற்றிற் காணாத பின் வளர்ச்சி காட்டுவன இவை.

வரிவடிவ மாற்றம் பற்றியும், வடமொழியெழுத்துத் திரிபு பற்றியும் கருத்து வேற்றுமைக்கு இடமுண்டு. பாவாணர் முகவுரையும், வ. சுப. மாணிக்கனாரின் இலக்கணப் படைப்புகள் என்னும் கட்டுரையும் இதற்குச் சான்று.

செய்யுளிலேயே வடவெழுத்துப் புகாச்சால்பு, முற்ற முற்ற வடசொற்களைப் புகுத்தியவர் மாட்டும் 19ஆம் நூற்றாண்டு வரை போற்றப்பட்டது. அவர்கள் இயற்

றிய இலக்கணத்தும் எழுத்துப் புகுதலைப் போற்றினர் அல்லர். அவ்வாறாகவும் வடவெழுத்து ஆங்கில எழுத்துப் புக நூற்பா நூற்றல் முரண்முறை: அரண்முறையன்றாம். அன்றியும் தமிழனாரிடமிருந்து எதிர்பார்க்கக் கூடாத முறை.

உரை கண்டாரும் நூலாசிரியரே.

அன்மை இன்மை வேறுபாட்டை எளிமையாக விளக்குகிறார்:

**நூ:** **'' இரண்டிலொன் றன்மையைக் குறிப்ப தன்மை ஒன்றுமில் லாமையை உணர்த்தும் இன்மை'' (334)**

பொ: இரண்டு பொருளில் ஒன்று **இன்றி** மற்றதைக் குறிக்கும் அன்மைச்சொல். ஒன்றுமே இல்லாதமையை இன்னாச்சொல் உணர்த்தும்.

நு: இரு மறைச்சொற்களின் பொருள் வேறுபாட்டு நுணுக்கம் கூறுகிறது. பண்பளவாய்க் கூறிய இன்மை, இன்று இல்லை என்றும் வரும். **அன்மை**யும் அவ்வாறே.

சா: **'' நினக்கு நல்லையும் அல்லை.''**

**'' நதியின் பிழையன்று''**

**'' வண்மை இல்லை ஓர் வறுமை இன்மையால்''**

என்பன பா.

''என்னிடம் இருப்**பது** ஐந்த**ன்று**; இரண்டு.'' என்பது செம்மை. ஐந்தில்லை இரண்டுணடு என மாறிவருதல் வழுவமைதியாகக் கொள்க. முன்னை நூல்கட்குத் துணை செய்யும் இக்குறிப்பில் இரண்டு என்று பல வற்றைக் குறிப்பதாயினும் அவ்வாறு கூறாதது தெளிந் துணர்தற் பொருட்டு.''

—நூற்பாவிலுள்ள செம்மை உரையில் போற்றப்பட வில்லை என்பதை இவ்வுரைப் பகுதியால் கண்டு கொள்க. (தடிப்பெழுத்துப் பகுதி).

**'' திருமணச் செய்தியில் நங்கையை நம்பிக்குத்
தருவதாய்க் கூறலே தமிழ்மர பாகும்''** (337)

நூற்பாச்செய்தி 'நம்பிக்குத் தருவது'; உரையில் 'மண மகனுக்குக் **கொடுவினை'** யாகிவிடுதல் அத்தகையதே. **கொடைவினை**யாதல் மரபு.

நூலும் உரையும் உவமை நயமும் எதுகை மோனை நடை நயமும் கொண்டு விளங்குவதும் புதிய புதிய எடுத்துக் காட்டுகளுடன் மிளிர்வதும் இன்பம் செய்வன.

**'' வளிப்புக உப்பும் உறையென வரியோ
டொலிப்பட உருப்பெறும்''**

வரிவடிவு ஒலி வடிவாதலை உவமைப் படுத்துகிறார். ''தமிழ் எழுத்துகள் தொய்வைத் தலையணை, மிதிவண்டி உட்குழல் போன்ற உறைகள் காற்றூட்டப்பட்டுச் செயற் காதல் போல வரிவடிவங்கள் குறிவடிவங்களாக ஒலித் துரைக்கப்பட்டு இயலும்'' என்கிறார்.

நொடியளவுக்கு, 'மணிப்பொறியின் நொடி ஓரளபு' என்பது இந்நாள் வளம். அவ்வாறே ஒரு மாத்திரை இரு மாத்திரையுடைய உயிர்க் குறில் நெடில் எழுத்துகள் அரை மாத்திரையுடைய மெய்யின் மேல் ஏறியும் 1½, 2½ மாத்திரை ஆகாமையைச் 'சூலுற்ற மகளிரை ஒருமகளாய் எண்ணுதற்கு ஒப்பிட்டுக் காட்டுதல் புதுப்பார்வை. இவ் விடத்தே முந்தையோர் குறித்த 'அப்பொடு புணர்ந்த உப்பே போலும்' என்பதையும் சுட்டுகிறார்.

தனித்தமிழ் உணர்வாளர்—சிறந்த திறனாய்வாளர்—பற்பலரைப் பற்பல வகையான் பயிற்றக வழியே ஊக்கி உயர்த்தித் தமிழ் புரப்பவர் என்னும் செயன்மையர் வடித்த நூல் ஈதென்னும் பெருமை இதற்குண்டு. அடுத்து வருவதும் இவர் யாத்த யாப்பு நூலே.

# 47. யாப்பு நூல்

இலக்கணப் புலவர், த. சரவணத் தமிழனாரால் ஆக்கப்பட்டநூல் இது. இதுவும் நூற்பா யாப்பிலேயே அமைந்தது. தமிழன் பதிப்பக வழியே முதற்பதிப்பு 1981 இல் வெளிவந்தது. 1986 இல் இரண்டாம் பதிப்புக் கண்டது.

யாப்புநூல் முதற்கண் உறுப்பியலும் பின்னர்ப் பாவியலுமாக இயலுகின்றது. பின்னர் வார்ப்பியல் தனியே அமைகின்றது. முன்னதில் 154 நூற்பாக்களும் பின்னதில் 39 நூற்பாக்களும் ஆக 193 நூற்பாக்கள் உள. நூலாசிரியரே உரையும் வரைந்துளார். எடுத்துக் காட்டுகள் பல திறத்தானும் மிகப் பலவாக இடம் பெற்றுள.

**'' யாப்பெனப் படுவது பாட்டிலக் கணமே''**

என்பது நூற்றொடக்க நூற்பா (2).

எதுகை, மோனை, இயைபு, இரட்டை, செந்தொடை என்னும் ஐந்தொடைகளையே கொள்கிறார் (34).

நாற்சீரடிக்கே இணை பொழிப்பு என்னும் வகையில் மோனை எதுகை வகைகளைக் கூறுதல் பழமுறை. ஆனால் நாற்சீரடிக்கு மேலுள்ளவற்றையும் கூறமுயன்று மறியடி, மறியிணை, மறிபொழிப்பு, மறியொரூஉ, மிகவு என்பவற்றைப் புதிது படைத்துக் காட்டுகிறார். (47).

இயைபையும் எதுகை தானே பின்னுறலாக் கொள்கிறார். முரணும் அளபும் பழைமை சிறப்பில எனத் தள்ளுகிறார் (48).

" சந்தம் சிந்தென ஒலிப்பா இருபா"

என வண்ணப் பாக்களை வகுக்கிறார் (131).

தொல்காப்பியர் கூறும் 20 வண்ணங்களில் 'இன்று வருவது ஆறே' என எண்ணுகிறார் (132). அவை வல்லிசை, மெல்லிசை, இயைபு, நெடுஞ்சீர், குறுஞ்சீர், சித்திரவண்ணம் என்பன.

" விரும்பும் வீச்சில் சொல்லத் தடுத்தலின்
அரும்பும் பாவலர் அமைத்தது புதுப்பா"

எனப் புதுப்பாவின் தோற்ற முரைக்கிறார். அதன் சிறப்பும், அதற்குத் தேவையும் சுட்டப் பெற்றுள்ளன ((140—141).

இசைப்பா (142), திரைப்பா (143—147), மகப்பா (148—151) என்பன நூற்பா எண்ணிக்கை சுருங்கினும் விரிவான ஆய்வுடையன. மேற்கோள்களும் மிகவுடையன.

வார்ப்பியலில் சில நூல்களின் இலக்கணம் கூறப் படுகின்றன.

அடைவு என்னும் பகுதியில் சிலப்பதிகாரம், தாயுமானவர் பாடல், பரிபாடல், கலித்தொகை, திருக் காவலூரர்க் கலம்பகம், ஆகியவற்றின் யாப்பியன் முறைப் பட்டியல் உள்ளது.

ஆள் அடைவு என்னும் தலைப்பில் 9 நூற்பாக்கள் உள. பழங்காலப் புலவர்களொடு இக்காலப் புலவர்களை ஒப்பிட்டு இவர் சாயல் இவரென்பது கூறப்படுகின்றது.

புதுவகையில் விரிவான யாப்பியல் நூல் செய்தற்குரிய முன்னோடி நூல் ஈதென்பது தகும். நூலாசிரியர் கடிய முயற்சி நூலில் தெளிவாகின்றது.

# 48. திருக்கோவைக் கிளவிக் கொத்து

திருக்கோவையார் 400 துறைகளையுடையது. அத் துறைகளைப் பற்றி அடைவு செய்து கூறும் நூற்பா கிளவிக் கொத்து என வழங்குகின்றது. கோவை நூலை 25 பகுதிகளாக்கி முதல் நூற்பா கூறுகின்றது.

**'' இயற்கை பாங்கன் இடந்தலை மதியுடன்...**
**இவையென மொழிப'',**

என்பது நூற்பகுதியடைவு.

இயற்கைப் புணர்ச்சி, பாங்கற் கூட்டம், இடந்தலைப் பாடு, மதியுடம் படுத்தல் என்னும் பகுதிகள் இருபத் தைந்தையும் அந்நூற்பா முறையே கூறுகின்றது.

பின்னர் இயற்கைப் புணர்ச்சியாம் முதற்பகுதி,

**'' காட்சி ஐயம் தெளிதல் நயப்பே**
**உட்கோள் தெய்வம் துணிதல்கைக் கிளையொடு''**

எனவிரிந்து பதினெட்டுக் கிளவிகளை அல்லது துறை களைக் கொண்டுளது. இவ்வாறே பகுதிகள் இருபத்தை யும், இவற்றின் கிளவிகளையும் தனியே பெயர்த் தெழுதின் அகப்பொருள் நூல் ஒன்று அமைதல் தெளிவாகும்.

நானூறு துறைகளைக் கொண்ட கோவையே பழமை யானது. பின்னே வந்தவை மேலே விரித்துக் கொண்டன. ஆதலால் கோவை முறைக்கு இலக்கணமாகச் சொல்லத்

தக்க நூல் திருக்கோவைக்கு அமைந்த கிளவிக் கொத்து' என்பது தகும்.

பேராசிரியர் உரையும் இக்கிளவிக் கொத்துக்கு இருப்பதால் அதன் பழமை புலப்படும். நூலாசிரியராம் மாணிக்கவாசகர் இயற்றியது அன்று என்பதும் ஆய்ந்தோர் முடிபு. அவ்வாறே பேராசிரியர் இயற்றியதும் அன்று என்பதும் அவர்கள் முடிபு. ஆகலின் மாணிக்கவாசகர் நூல் செய்துள்ள அடைவை நோக்க அவர்க்கு முன்னரே இக்கிளவிக் கொத்து நூலாகி நடையிட்டிருக்க வேண்டும் எனக் கொள்ளலாம். இல்லையேல் மாணிக்கவாசகர் திருக்கோவையை இயற்றிய பின்னர் இலக்கியம் கண்டதற்கு இலக்கணம் இயம்பலென இக்கிளவிக் கொத்து ஒருவரால் இயற்றப்பட்டிருக்க வேண்டும்.

**'ஈரொன்பான் நீங்கா இயற்கை'**

என இயற்கைப் புணர்ச்சி 18 துறைகளையுடையதென்றும்,

**"ஆறைந்தும் துன்று பாங்கற் றுறை"**

எனப் பாங்கற் கூட்டம் 30 துறைகளை யுடையதென்றும் இவைபோல அறுதியிட்டுக் கூறுதல் இதன் வரம்புச் சிறப்பைக் காட்டும். உரையிடைக் கண்ட நூலாகலின் காலங்கருதாது, உரைநடை இலக்கணப் பகுதிக்கு முன் வைக்கப்பட்டது. திருக்கோவைக் கொளுவும் இவ்வாறே.

# 49. திருக்கோவைக் கொளு

திருக்கோவையார் 400 துறைகளுக்கும் 400 கொளுக்கள் உண்டு. அக்கொளுக்கள் புறப்பொருள் வெண்பா மாலையின் வெண்பாவில் கூறப்படும் இலக்கியப் பொருளுக்கு வாய்த்த இலக்கணமாக அமைந்துளது. திணைப் பாடல்களும், அத்திணையின் துறைகளை விளக்கும் கொளுக்களும், அக்கொளுக் கூறும் இலக்கணத் திற்கு இலக்கியமாகும் வெண்பாவும் என அந்நூல் இயலும் மரபில் திருக்கோவையாரும் இயல்கின்றது.

கிளவிக் கொத்தும், கொளுவும் கோவைப் பாடலு மென அமைகின்றன. திருக்கோவையார் பழைய உரையில் கொளு முற்படவும் கோவைப் பாடல் பிற் படவும் அமைந்து நடத்தல் புறப்பொருள் வெண்பா முறைக்குச் சான்றாகும். பழைய உரைக்குப் பிற்பட உரை வரைந்த பேராசிரியர் அக் கொளுவைக் கோவைப் பாவுக்குப் பின்னர் வைத்தார். வைப்பு முறையில் வேறு படலன்றிக் கொளுவில் வேறுபட்டிலர். இக்கொளுவை மணிவாசகரே இயற்றினார் என்பது ஆய்வாளர் முடிபு. அவ்வாறாயின் கோவை இலக்கியம் படைத்ததை அன்றி அகப்பொருள் இலக்கணம் ஒன்றும் அடிகள் படைத்தா ராதல் வேண்டும். அக்கருத்து முந்தையோர்க்கு இருந் திருக்குமெனின் அவ்விலக்கணக் கொடையைக் குறிப்பிடத் தவறார் என்றே கொள்ள வேண்டியுள்ளது. எவ்வாறா

யினும் இக் கொளுக்கள் நானூற்றையும் ஒருங்கடைவு செய்தால் கோவை நூல் கிளவிகளின் 'கொளுவடைவு' நூல் ஒன்று வாய்த்தல் உண்மையாம்.

1. *காட்சி :* '' **மதிவாணுதல் வளர்வஞ்சியைக்**
**கதிர்வேலவன் கண்ணுற்றது.''**

2. *ஐயம் :* '' **தெரிவரியதோர் தெய்வமென்ன**
**அருவரைநாடன் ஐயுற்றது.''**

3. *தெளிதல் :* '' **அணங்கல்லளென் றயில்வேலவன்**
**குணங்களைநோக்கிக்**
**குறித்துரைத்தது.''**

400. *ஊதியம் எடுத்துரைத்து ஊடல் தீர்த்தல் :*

'' **இரும்பரிசில் ஏற்றவர்க்கருளி**
**விரும்பினர்மகிழ மேவுதலுரைத்தது.''**

*கொளு வஞ்சிநடை பயிலுதல் அறியத்தக்கது. எதுகை மோனை இயைந்து நடத்தலும் எண்ணத்தக்கது.*

*பழைய உரையும், பேராசிரியர் உரையும் கொளுக்களுக்கும் உண்டு.*

# 50. உரைநடையிலமைந்த சில இலக்கண நூல்கள்

**கால்டுவெல் ஒப்பிலக்கணம் (1814—1891)**

தமிழ்மொழி தனிமொழி என்னும் உண்மையை முதற்கண் நிலைநாட்டியவர் இவர். பன்மொழிப் புலமை வாய்ந்த இவர் ஒப்பிலக்கண நூலைச் செய்து தமிழின் தனித்தன்மையை நிலைநாட்டினார். வடமொழியின் தொடர்பு நீங்க நீங்கத் தமிழ் நயமிகுதலை எடுத்துக் காட்டினார். தமிழின் பண்டை நிலையை அடைதற்குக் கால்கோள் செய்தவருள் தலைவர் இவரே. இவரைப் பின்பற்றியே பரிதிமாற்கலைஞர், மறைமலையடிகள், தேவநேயப் பாவாணர் ஆகியோர் பாடுபட்டுத் தனித் தமிழ் இயக்கமாக்கி வளர்க்கலாயினர்.

1856இல் கால்டுவெல் ஒப்பிலக்கண முதற்பதிப்பு (ஆங்கிலம்) வெளிவந்தது. இரண்டாம் பதிப்பு 1875இல் வெளிவந்தது. அவ்விலக்கணம் கழகத்தின் வழியே தமிழாக்கம் செய்யப்பட்டு வெளிவந்தது (1941).

**விசாகப் பெருமாளையர் அணியிலக்கணம் (19ஆம் நூற்றாண்டு நடுப்பகுதி)**

உரைநடையில் இலக்கணமும் பாடல் எடுத்துக்காட்டு மாக அமைந்த நூல் இது. பொருளணிகள் 100 காட்டு கின்றது. சொல்லணி, 'பொருளணிபோல் பெரும்

பயனுடையது அன்மையால்' கூறாமை குறிக்கிறார். சேர்வையணி, கலவையணி என்பவற்றை எடுத்துக் காட்டுடன் விளக்குகிறார்.

இது 1828இல் இலக்கண விளக்கச் சுருக்க வினா விடையின் பகுதியாக அமைந்து வெளிவந்தது. கழகப் பதிப்பாக 1937இல் வெளிவந்தது.

**இலக்கணச் சந்திரிகை**

இது வடமொழிச் சொற்கள் தமிழில் வழங்கும் முறை குறித்து எழுதப்பட்டதொரு நூல். இருமொழிப் புலமை வாய்ந்த சுன்னாகம் அ. குமாரசாமிப் பிள்ளையால் எழுதப்பட்டது. எழுத்தொருப்பாடு, உபசருக்கக் கூறுபாடு, இடைச்சொற் கூறுபாடு, தத்திதாந்தப் பாகுபாடு, பெயர்ச்சொற் பாகுபாடு, வினைச்சொற் பாகுபாடு, உரிச்சொற் பாகுபாடு முதலிய பகுதிகளை யுடையது. இது 1987இல் நூலுருக் கொண்டது.

**செய்யுள் இலக்கணம்**

அட்டாவதானம் கலியாணசுந்தர யதீந்திரரால் இயற்றப்பட்ட நூல். 1893இல் முதற்பதிப்பு வெளிவந்தது. உறுப்பியல் செய்யுளியல் ஒழிபியல் என்னும் மூவியல்களில் யாப்பிலக்கணத்தை உரைநடையில் தக்க எடுத்துக்காட்டு களுடன் கூறுகின்றது. யாப்பு நூல்கள் காட்டாத பல எடுத்துக்காட்டுகளைப் புதியதாகக் காட்டுகின்றது.

**சித்திர கவி விளக்கம்**

இதனை இயற்றியவர் சூரிய நாராயண சாத்திரியார் (1870—1903). தண்டியலங்காரத்திலுள்ள சித்திரகவி களின் வகையை மாணவர் எளிதில் கற்குமாறு விளக்கமும் உரையும் எடுத்துக்காட்டும் படமுமாகச் செய்யப்பட்ட தொரு நூல். இது 1898இல் முதற்பதிப்பாக வந்தது.

பின்னர் 1939இல் ஆசிரியர் மைந்தரால் பதிப்பிக்கப் பட்டது.

'' கோமூத் திரியே கூட சதுர்த்தம் ''

என்னும் நூற்பாவுக்கு உரிய சித்திர கவிகளையும் வேறு பலவற்றையும் சேர்த்து (23 வகை) வெளியிடப்பட்ட நூல்.

**பஞ்ச லட்சணம்**

ஐந்திலக்கணங்களையும் உரைநடையில் கூறும் இந் நூல் ஒரு நூலுக்கு உரை என்னும் போக்கில் இல்லாமல் எடுத்துக் கூறும் இலக்கணத்துக்கு ஏற்ற நூற்பாக்களையும், உரைவிளக்கங்களையும் எடுத்துக்காட்டுகளையும் கொண் டுளது. (இவ்வகையிலும், சுருக்க வகையிலும், வினா விடை வகையிலும் வெளிவந்த நூல்கள் பல. அவற்றை விரிவஞ்சி விடுத்தாம்.)

1903இல் இது சுருக்க நூலாகவும் 1918இல் பெருக்க நூலாகவும் வெளிவந்துளது.

# அறிய வரும் பிற இலக்கண நூல்கள்

| | | |
|---|---|---|
| அகத்தியர் பாட்டியல் | — | சிதம்பரப் பாட்டியலுரை. |
| அடி நூல் | — | நக்கீரர்; யாப்பருங்கல விருத்தியுரை. |
| அணியியல் | — | யா. வி. |
| அவிநயனார் கலாவியல் | — | நவநீதப் பாட்டியலுரை |
| ஆனந்த வோத்து | — | ,, ,, |
| இலக்கணக் களஞ்சியம் | — | வேதகிரி முதலியார். |
| இலக்கணக் கோவை | — | காமக்கூர் சுந்தர முதலியார் |
| இலக்கணச் சந்திரிகை | — | அ. குமாரசாமிப்பிள்ளை |
| இலக்கணச் சுருக்கம் | — | வாசுதேவ முதலியார் |
| இலக்கண சாரம் | — | வேலாயுத முதலியார் |
| இலக்கண சிந்தாமணி | — | சகராவ் முதலியார்; 1880 |
| இலக்கண சூடாமணி | — | கிருட்டிணபிள்ளை; 1883 |
| இலக்கணத் திரட்டு | — | வேதகிரி முதலியார் |
| இலக்கண தீபம் | — | கையெழுத்து நூலகம் |
| இலக்கண நூலாதாரம் | — | புதுச்சேரி; 1849 |
| இலக்கணம் | — | சௌந்திரராச ஐயங்கார் |
| இலக்கண விளக்கப் பதிப்புரை மறுப்பு | — | சபாபதி நாவலர் |
| இலக்கண வினாவிடை | — | ஆறுமுக நாவலர் |
| ,, | — | தாண்டவராய முதலியார் |
| ,, | — | போப்பையர் |

இளந்திரையம் — மயிலை நாதருரை
இன்மணியாரம் — நவநீதப் பாட்டியலுரை
ஊசிமுறி — இடைக் காடனார்
எழுத்து என்னும் சொல்லுக்கு இட்டவயிரக் குப்பாயம் — சிவஞான முனிவர்
கடிய நன்னியார் கைக்கிளைச் சூத்திரம் — யா. வி.
கவிசாகரம் — வேதகிரி முதலியார்
கவிமயக் கறை — யா. வி.
கிரணியம் — ,,
குமரம் — இலக்கிய அகராதி
குறுவேட்டுவச் செய்யுள் — யா. வி.
கையனார் யாப்பியல் — ,,
கொடுந்தமிழ் — வீரமா முனிவர்
கோவை சாரம் — கையெழுத்து நூலகம்
சயந்தம் — அடியார்க்கு நல்லாருரை
சாதவாகனம் — மயிலை நாதருரை
சித்திர கவி-உரையுடன் — கையெழுத்து நூலகம்
சித்திர கவி விளக்கம் — பரிதிமாற் கலைஞர்
சிற்றட்டகம் — யா. வி.
சிற்றிசை — இலக்கிய அகராதி
செந்தமிழ் — வீரமாமுனிவர்
செய்யுளியல் — யா. வி.
செய்யுள் வகைமை — நவநீதப் பாட்டியல்
செயிற்றியம் — யா. வி.
தக்காணியம் — ,,
தத்தாத்திரேயப் பாட்டியல் — சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும்
தமிழ் இலக்கண சிந்தாமணி — இலக்கிய அகராதி
தமிழ் இலக்கணச் சுருக்கம் — ,,

| | | |
|---|---|---|
| தமிழ் இலக்கண தீபிகை | — | இலக்கிய அகராதி |
| தமிழ் இலக்கண நூற் சுருக்க வினாவிடை | — | |
| திணை நூல் | — | யா. வி. |
| திருப்பிரவாசிரியர் தூக்கியல் | — | நவநீதப் பாட்டியலுரை |
| தொனி விளக்கு | — | பி. சுப்பிரமணிய சாத்திரி |
| நக்கீரர் நாலடி | — | யா. வி. |
| நல்லாறன் மொழிவரி | — | ,, |
| நன்னூல்-இலகுபோதம் | — | ஆ. முத்துத் தம்பிப் பிள்ளை |
| பரிப்பெருமாள் இலக்கண நூல் | — | திருக்குறள் உரைப்பாயிரம் |
| பரிமாணனார் யாப்பிலக்கணம் | — | யா. வி. |
| பருணர் பாட்டியல் | — | நவநீதப் பாட்டியலுரை |
| பல்காப்பியம் | — | யா. வி. |
| பல்காப்பியப் புறனடை | — | ,, |
| பனம்பாரம் | — | ,, |
| பாட்டியல் மரபு | — | ,, |
| பாடலம் | — | ,, |
| பிரபந்த மரபியல் | — | இலக்கிய அகராதி |
| புணர்ப்பாவை | — | யா. வி. |
| புறப்பொருள் விளக்க வசனம் | — | ந. சி. கந்தையா |
| பூத புராணம் | — | நச்சினார்க்கினியருரை; இறையனார்களவியலுரை. |
| பெரிய முப்பழம் | — | யா. வி. |
| பெரும் பொருள் விளக்கம் | — | நச்சினார்க்கினியருரை |
| பெருவள நல்லூர் பாசண்டம் | — | யா. வி. |
| பொய்கையார் கலாவியல் | — | ந. பா. |
| ,, பாட்டியல் | — | ,, |

| | | |
|---|---|---|
| போக்கியம் | — | யா. வி. |
| போப்பையர் இலக்கணம் | — | இலக்கிய அகராதி |
| மாபுராணம் | — | இறையனார் களவியலுரை |
| முதலிலக்கணம் | — | 1897 |
| முள்ளியார் கவித்தொகை | — | ந. பா. |
| யாப்பியல் | — | யா. வி. |
| யாப்பிலக்கணச் சுருக்கம் | — | முத்தி சிதம்பரம்பிள்ளை |
| யாப்பிலக்கண சூசனம் | — | ,, |
| யாப்பிலக்கணம் | — | சரவணப்பெருமாளையர் |
| லோக விலாசனி | — | யா. வி. |
| வண்ணத்தியல்பும் வண்ணமும் | — | வண்ணச்சரபம் |
| வாருணப் பாட்டியல் | — | சங்கத்தமிழும் பிற்காலத் தமிழும் |
| வினைச் சொல் விளக்கம் | — | 1887 வேங்கடசாமி ஐயர் |
| வினைமர விளக்கம் | — | 1880 |
| வினையுருவ விளக்கம் | — | 1885 சீனிவாசாசாரி |

# மணிவாசகர் பதிப்பகத்தின்

## சிறப்பு வெளியீடுகள்

உரையாசிரியர்கள்

தொல்காப்பியக் கடல்

வள்ளுவரின் மெய்யியல்

மறைந்து போன தமிழ் நூல்கள்

நாட்டுப் புறப்பாடல்கள் காட்டும் தமிழர் வாழ்வியல்

இலக்கிய வகை அகராதி

வண்ணங்கள் வடிவங்கள்

தமிழகக் கலை வரலாறு

காப்பியத் திறன்

திரு.வி.க. ஓர் இலக்கியம்

திருமுறைப் பெருமை

சித்தர் பாடல்கள்

Wrapper Printed at Karpakam Achakam, Madras-600 002.